# நன்னூல் உரை வளம்

13

## பொதுவியல்-I

இரா. கண்ணன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies

# நன்னூல் உரைவளம் (தொகுதி-13)

## சொல்லதிகாரம்

# பொதுவியல் - 1

பதிப்பாசிரியர்

முனைவர் இரா. கண்ணன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்

இரண்டாம் முதன்மைச் சாலை,

தரமணி, சென்னை-600 113

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the Book | : | **Nannūl uraivalam (Vol. 13)**<br>**Collatikāram**<br>**Potuviyal - 1** |
| Author | : | Dr. R. Kannan<br>Associate Professor<br>Dept. of Tamil Language<br>Presidency College, Chennai - 5 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus, Tharamani<br>Chennai-600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 701 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2010 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 11 Point |
| No. of Pages | : | 320 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 140/- (Rupees One hundred and forty only) |
| Printed by | : | Sri Venkateswara Offset<br>New No. 47, Rajanga Mathya Street<br>Vadapalani, Chennai - 600 026.<br>Phone : 23621409 |
| Subject | : | Tamil Grammar |

முனைவர் கரு.அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை – 113

# அணிந்துரை

வாழ்வை இலகுவாக்க மனிதன் படைத்துக் கொண்ட கருவிகள் பற்பல. அவற்றுள் மொழியும் ஒன்று. ஆயினும் பிற கருவிகள் யாவற்றுள்ளும் தலையாயதும் தனிச் சிறப்புடையதும் மொழியே. மொழி இன்றேல் வேறு எக்கருவியும் தோன்றி யிராது. மொழி, மனத்தின் உயிர்; பிறபிற கலைகளுக்கும் கருவிகளுக்கும் தாய். மாந்தரின வாழ்விற்கு இத்துணை இன்றியமையாக் கருவியாய்த் திகழும் மொழி, உலகம் யாண்டும் பரவிக் கிடக்கும் மக்களினக் குழுக்களிடையே பலவாகக் காணக் கிடக்கிறது. அம் மொழிக்கூட்டத்திடையே பன்மீன் நாப்பண் விளங்கு பால்மதி போல் இலங்குவது தமிழ்.வரலாற்றுக்காலந் தொடங்கி இன்றளவும் தன்னேரிலாத் தகைசால் சீர்மை யுடன் திகழும் இத் தமிழ்மொழியின் இலக்கிய இலக்கணப் பரப்பு அளந்திட்டுக் கூற ஒண்ணா விரிவினை உடையது. காலமும் கடும்புனலும் கொண்டது போக எஞ்சியன சிலவே யாயினும், மறைந்து போனவற்றிற்கு மாற்றாகக் காலந் தோறும் தோன்றிய பனுவல்களோ பற்பல. அழகு தமிழில் அமைந்த அந்நூல்களின் பொதிபொருளைப் பழகு தமிழில் விளக்க எழுந்த உரைகளும் மிகப் பல.

ஓல்காப் புகழுடைய தொல்காப்பியத்திற்குப் பின் ஏறத்தாழ பன்னிரண்டு நூற்றாண்டுகள் கழித்துத் தோன்றி இன்றளவும் தனிச் சிறப்புடன் வாழ்வது நன்னூல். பெயருக்கு ஒப்பவே தமிழின் இலக்கணத்தை நலம்படவும் நயம்படவும் இயம்பும் இந்நூலிற்கு உரைவிளக்கம் கண்டோர் பலர். அவ்வுரைகளுள் பல, தம் பெயரை மட்டுமே நிறுத்தி தாம் மாய்ந்தன. வேறுபலவோ, அச்சேறியபோதும் இன்று காணுதற்கும் அரியனவாய் உள்ளன. இவ்வாறு காலச் செலவால் அருகி உள்ள உரைகளை அரிதின் முயன்று திரட்டி இருபத்திரண்டு தொகுதிகளாக உருவாக்கப் பெற்றுள்ள இவ்வுரை வளத்தினைஎம் நிறுவனத்தின் வழி வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறோம்.

மயிலை நாதர், சங்கர நமச்சிவாயர், சிவஞான முனிவர், கூழங்கைத் தம்பிரான், விசாகப் பெருமாளையர், ஆ.முத்துத் தம்பிப்பிள்ளை, இராமானுச கவிராயர், கா.கோபாலா சாரியார், தி.கோ.ரங்காசாரியார், ஆறுமுக நாவலர், வ.குமார சாமிப் புலவர், வை.மு.சடகோபராமானுசாசாரியார், சே.கிருட்டிணமாசாரியார், பவானந்தம் பிள்ளை, கொ.இராமலிங்கத் தம்பிரான், கா.நமச்சிவாய முதலியார், மோசசு பொன்னையா ஆகியோரின் உரைகளும், என்றி பவார் செய்த பாயிரப் பகுதிக்கான ஆங்கில மொழி பெயர்ப்பும், இலாசரசு செய்த எழுத்ததிகாரம் மற்றும் சொல் லதிகாரத்திற்கான ஆங்கில மொழிபெயர்ப்பும் இவ்வுரை வளத்தில் திரட்டப் பெற்றுள்ளன. நன்னூலைத் தழுவி இயற்றப் பெற்று ஒரு நூற்றாண்டு காலத்திற்கும் மேல் மீள்பதிப்புக் காணாத திருப்பாற்கடல்நாதன் கவிராயரின் தமிழிலக்கணம், சி.அருணாசலம் பிள்ளையின் TAMIL GRAMMAR, இ.சாமுவேல் பிள்ளையின் தொல்காப்பிய நன்னூல், G.U.போப்பின் காண்டிகையுரை, ஆ.முத்துத் தம்பிப்பிள்ளையின் நன்னூல் இலகுபோதம் ஆகியன இவ்வுரைவளத் திரட்டில் தனித்தனி நூல்களாக வெளியிடப் பெற்றுள்ளன. இவ்வுரைவளம் தமிழன்னைக்கு அணி சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

நன்னூல் உரைவளத்தின் பதிப்பாசிரியரான முனைவர் **இரா.கண்ணன்**, சென்னை மாநிலக்கல்லூரித் தமிழ்த் துறையில் இணைப்பேராசிரியராகப் பணியாற்றுகிறார். இவர் அறுபதிற்கும் மேற்பட்ட நூல்களின் ஆசிரியர். இவ்வுரைவளத்தின் பதிப்புப் பணியோடு எழுத்துக் கோர்த்தல், மெய்ப்புத் திருத்தல், வடிவமைத்தல் உள்ளிட்ட அனைத்துப் பணிகளையும் தனியொருவ ராக இருந்து சிறப்புடன் செய்துள்ள இப்பதிப்பாசிரியரை மனதார வாழ்த்துவதுடன் நன்றி நவிலுங் கடப்பாடுமுடையேன்.

நிறுவனப் பணிகளில் எம்முடன் இணைந்து பணியாற்றும் துணை இயக்குநர், பேராசிரியப் பெருமக்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் ஆகிய அனைவர்க்கும் எம் நன்றி உரித்தாகுக.

**கரு.அழ.குணசேகரன்**

சென்னை – 113.

12.10.2010.

# முன்னுரை

தமிழிலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐம்பெரும் பிரிவுகளை உடையது என்பர். இது பொது வழக்கே யாயினும் பிற்காலத்தில் பாட்டியல் அனைய புதுப்புது இலக்கணப் பிரிவுகள் தமிழில் தோன்றி நன்கு செழித்து வளர்ந்துள்ளன. அவ்வாறே எழுத்து, சொல் முதலான ஒவ்வொரு பிரிவினிலும் தோன்றிய இலக்கண நூல்களும் பல உள. தொல்காப்பியம், எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களை உடையதாதலான் அது மூன்றிலக்கணம் கூறும் நூல் என்பது போதரும். ஆயினும் பொருளதிகாரத்துள் அமைந்து கிடக்கும் உவமவியலும், செய்யுளியலும் முறையே அணியிலக்கணத்தையும், யாப்பிலக்கணத்தையும் வேண்டுமளவிற்கு விளக்கிக் கூறுதலான், அந்நூல் ஐந்திலக்கண நூலுமாம். தொல்காப்பியத்திற்குப் பின் பல்வேறு இலக்கண நூல்கள் எழுந்தன.பழங்காலத்தில் பெருவழக்காய் வழங்கிய அவ்விலக் கண நூல்கள் இன்று வீழ்ந்து போயின. இன்று வழங்கப் பெறும் இலக்கண நூல்களுள் வீரசோழியம், தொல்காப்பியத்திற்குப் பின் எழுந்த முதல் ஐந்திலக்கண நூலாகும். ஆயினும் அந்நூல் வடமொழி சார்பினைப் பெரும்பான்மை தழுவிச் செல்வதால் அது அவ்வளவாகப் போற்றப் படுவதில்லை. வீரசோழியத்திற்குப் பின் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண் டளவில் பவணந்தி முனிவரால் நன்னூல் இயற்றப்பட்டது. நன்னூல் ஐந்திலக்கணம் கூறிய நூல் என்றும், இன்று எழுத்து மற்றும் சொல்லிலக் கணம் உரைக்கும் பகுதி மட்டுமே கிடைக்கப் பெறுகிறது என்றும் எஞ்சிய பகுதிகள் காலச் செலவால் அழிந்திருக்கக் கூடும் என்றும் கருதுவாரும் உண்டு. இன்று வழக்கில் உள்ள நன்னூலின் மொத்த நூற்பாத் தொகை நானூற்று அறுபத்திரண்டு. பாயிரம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என மூன்று பகுதிகளாய் அமைந்துள்ள இந்நூலின்கண் பாயிரம் 55 நூற்பாக்களையும், எழுத்ததிகாரம் 202 நூற்பாக்களையும் சொல்லதிகாரம் 205 நூற்பாக்களையும் பெற்றுள்ளன. பாயிரம், பவணந்தியால் இயற்றப்பட்டதன்று என்பர்.

நன்னூலிற்கு இன்றுகாறும் எழுந்துள்ள உரைகள் பல. ஆயினும் மயிலைநாதரின் உரையே முதலில் எழுந்த உரையாகும். மயிலைநாதர் நன்னூல் ஆசிரியர் பவணந்தியின் சம காலத்தவர். மயிலைநாதரின் உரை நன்னூலிற்கு இன்று வரை எழுந்துள்ள உரைகள் யாவற்றிலும் தலைமை யானது, தனிச் சிறப்புடையது. இவ்வுரைக்குப் பின் பல உரைகள் எழுந்தன. அவற்றுள் சில அச்சேறாமலேயே இறந்தன.வேறுசில அச்சேறிய பின்னும் இன்று அருகியுள்ளன.இவ்வாறு காலச்செலவான் அருகி வரும் உரைகளைக் காத்தற் பொருட்டும், தமிழாய்விற்குத் தக்க கருவி நூலாய் அமையும் திறம் நோக்கியும் இவ்வுரைவளம் உருவாக்கப் பெற்றுள்ளது.இதில் நன்னூலின் சிறந்த உரைகள் அனைத்தும் திரட்டப் பெற்றுள்ளன.

நூற்பா அதன்கீழ் சீர் பிரிக்கப் பெற்ற நிலையில் நூற்பா,ஆங்கில எழுத்துப் பெயர்ப்பு, இலாசரசு செய்த மூல நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு, தொல்காப்பியம் முதல் சுவாமிநாதம் வரையிலான இலக்கண நூல்களில் இருந்து தரப்பெற்றுள்ள ஒப்புமைப் பகுதி,நன்னூல் உரைகள் ஆகியன இவ்வுரைவளத்தில் நிரல்படுத்தப்பட்டுள்ளன. மூலநூலின் பாட வேறுபாடும், மயிலை நாதர் உரையின் பாடவேறுபாடும் காட்டப் பெற்றுள்ளன.

நன்னூலிற்கு விருத்த யாப்பில் எழுந்த ஆண்டிப்புலவர் உரை அழிந்து போனது. அச்சேறிய உரைகளுள் பல இன்று அருகி பெயரளவில் மட்டுமே அறியப் பெறுபவையாக உள்ளன. அச்சேறிய அரிய உரைகளை யேனும் காக்கும் வகையில் இவ்வுரைவளம் இருபத்திரண்டு தொகுதிகளாக வெளியிடப் பெறுகின்றது. தமிழ் உலகம் ஏற்றுப் போற்றும் என நம்புகிறேன்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர், பேராசிரியர் முனைவர் *கரு.அழ.குணசேகரன்* அவர்களும், துணை இயக்குநர் **திரு.க.ந.வீரபாகு சுப்பிரமணியன்** அவர்களும் நன்னூல் உரைவள நூல்கள் அனைத்தையும் விரைந்து வெளிக் கொணர்ந்தனர். அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

இவ்வுரைவளத் திரட்டுப் பணியின்போது பல்லாற்றான் உதவிய சென்னை இராணிமேரி கல்லூரிப் பேராசிரியை முனைவர் **ந.கலைவாணி** அவர்களுக்கும், உற்றுழி உதவிய அனைவர்க்கும் உளமார்ந்த நன்றியினை உரித்தாக்கிக் கொள்வதோடு, தோன்றாத் துணையாய் இருந்து எம்மை இயக்கி வரும் தில்லைக் கூத்தனின் பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பணிந்து அமைகிறேன்.

10.10.2010 இரா.கண்ணன்.

சென்னை–55

*நன்னூல் உரைவளம் – 13*

# சொல்லதிகாரம்

# *பொதுவியல் – 1*

# சுருக்க விளக்கம்

| | | |
|---|---|---|
| அவி | – | அவிநயம் |
| இடள் | – | இதன் பொருள் |
| இல, விள | – | இலக்கண விளக்கம் |
| உ–ம் | – | உதாரணம் |
| உணர்–ற்று | – | உணர்த்துதல் நுதலிற்று |
| எ–டு | – | எடுத்க்காட்டு |
| எ–று | – | என்றவாறு |
| எ–னின் | – | என் நுதலிற்றே எனின் |
| சுவாமி | – | சுவாமிநாதம் |
| சூ–ம் | – | சூத்திரம் |
| தொல், எழு | – | தொல்காப்பியம் எழுத்ததிகாரம் |
| தொல், சொல் | – | தொல்காப்பியம் சொல்லதிகாரம் |
| தொல், பொருள் | – | தொல்காப்பியம் பொருளதிகாரம் |
| தொன் | – | தொன்னூல் விளக்கம் |
| நச் | – | நச்சினார்க்கினியர் |
| ந.பா | – | நவநீதப் பாட்டியல் |
| நேமி | – | நேமிநாதம் |
| பா–டு | – | பாட வேறுபாடு |
| பொ–ரை | – | பொழிப்புரை |
| மா.அலங் | – | மாறனலங்காரம் |
| மு.வீ | – | முத்துவீரியம் |
| வீர | – | வீரசோழியம் |
| வெண், பாட் | – | வெண்பாப் பாட்டியல் |

அ, ஆ, இ; ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ ,ஒ, ஓ, ஔ, ஃ – இவ்வெழுத்துக்கள் முறையே

a , ā , i , ī ,u ,ū ,e, ē ,ai ,o, ō, au, <u>kh</u>

எனவும்,

க், ங் , ச், ஞ் , ட் ,ண், த், ந் , ப், ம், ய், ர் , ல் , வ், ழ், ள், ற் , ன் - வ்வெழுத்துக்கள் முறையே

k, ṅ , s, ñ , t , ṇ, ṭ , n , p , m , y , r , l , v ,ḷ ,<u>l</u>, ṛ , <u>n</u>, <u>kh</u>

எனவும் ஆங்கில எழுத்துப்பெயர்ப்பில் பயன்படுத்தப் பெற்றுள்ளன.

# நன்னூல் உரைவளம் – 13

## சொல்லதிகாரம்

## பொதுவியல் – 1

**351. இருதிணை யாண்பெணு ளொன்றனை**
**யொழிக்கும் பெயரும் வினையுங் குறிப்பி னானே.**

இரு திணை ஆண் பெண் உள் ஒன்றனை ஒழிக்கும்
பெயரும் வினையும் குறிப்பின் ஆன் ஏ.

iru tiṇai āṇ peṇ uḷ oṉṟaṉ ai oḻikkum
peyar um viṉai um kuṟippiṉ āṉ ē

### இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**chap iii. General rules**

**Denoting only one gender**

Nouns and verbs (of the common class and Gender) may by the context denote but one of the Masculine and Feminine Genders in the two classes

### மயிலை நாதர்

இவ்வோத்து 'என்னுதலியதோவெனின், ஒத்து நுதலியதூஉம் ஒத்தினது பெயருரைப்பவே விளங்கும். ஆயின், இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், பெயர் வினை இடை யுரி யென்னும் நான்கு சொல்லின் இயல்பும் உணர்த்திற றாதலாற் பொதுவிய லென்னும் பெயர்த்து; மேலோத்தினோடு இதற்கு இயைபு

---

பாடவேறுபாடு:–

1. என்னுதலியெடுத்துக் கொள்ளப்பட்டதோவெனின்

என்னையோவெனின், கீழ்ப்போன பெயரையும் வினையையும் மேல்வரும் இடையையும் உரியையும் நோக்கிநிற்றலிற் சிங்கநோக்கெனக் கொள்க.

இவ்வோத்தினுள், இத்தலைச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், பெயர்க்கும் வினைக்கும் உரியதோரிலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.:– இருதிணையிடத்தும் ஆண்மைப்பொருளினும் பெண்மைப் பொருளினும் ஒன்றனையொழிக்கும், அவ்விருபாற்கும் பொதுவான பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் குறிப்பினான், எ–று.

வ–று.:–

வடுகரசர் [1]ஆயிரவர் மக்களையுடையார், “மம்மர்கொண் மாந்தர்க் கணங்காகுந் தன்கைக்கோல், அம்மனைக்கோ லாகிய ஞான்று” எனவும், பெருந்தேவி [2]பொறையுயிர்த்த கட்டிற்கீழ் நால்வர் மக்களுளர், இது பத்து மானிடத்தின் முலைப்பால் எனவும் உயர்திணைப் பெண்ணொழிபெயரும் ஆணொழிபெயரும் வந்தவாறு. அரசர் ஆயிரவர் மக்களொடு தாவடி போயினார், இன்று இச்சேரியாரும் பொருப எனவும் இன்று இவ்வூரா ரெல்லாம் தைந்நீராடுப, அச்சேரியாரும் குறுங்கானம்போப எனவும் உயர்திணைப் பொண்ணொழி வினையும் ஆணொழி வினையும் வந்தவாறு. நம்மரசன் ஆயிரம் யானையுடையன் எனவும், நம்பி நூறு எருமையுடையன் எனவும் அஃறிணைப் பெண்ணொழி பெயரும் ஆணொழிபெயரும் வந்தவாறு. இன்று இவ்வூர்ப் பெற்றமெல்லாம் உழவொழிந்தன எனவும், இன்று இவ்வூர்ப்பெற்றமெல்லாம் அறத்திற்கே கறக்கும் எனவும் அஃறிணைப் பெண்ணொழி வினையும் ஆணொழி வினையும் வந்தவாறு.

## சங்கரநமச்சிவாயர்

எ–னின் ,முன் வந்த பெயர்க்கும் வினைக்கும்,பின் வரும் இடைக்கும் உரிக்கும்,பொதுவிலக்கணங்களைச் சிங்கநோக்காக இவ்வியலான் உணர்த்துவான் இடைநிறீஇக் கூறலின், இது பெயர்க்கும் வினைக்கும் உரியதோரிலக்கணம் உணர் – ற்று.

இ–ள்.:– உயர்திணை ஆண்பால், பெண்பால் என்னும் இருபாற்கும்

பாடவேறுபாடு.:–

1. ஆயிர மக்களையுடையர் இவண் மாட்டுங்காழிலா மம்மர்

2. புறையுயிர்த்த.

பொதுவான பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும்,அஃறிணையாண்பால் பெண்பால் என்னும் இருபாற்கும் பொதுவான பெயர்ச்சொல்லும் வினைச் சொல்லும் அவ்விருபாலுள்ஒருபாலை ஒழிக்கும் குறிப்பினான் எ– று.

வ–று:–

ஆயிரமக்கள் தாவடி போயினார் என்புழி,மக்கள் என்னும் உயர்திணை இருபாற்கும் பொதுப்பெயரும் போயினார் என்னும் உயர்திணைஇருபாற்கும் பொதுவினையும் தாவடி என்னும் குறிப்பினான் பெண்பாலை ஒழித்தன. பெருந்தேவி பொறை உயிர்த்த கட்டிற்கீழ் நால்வர் மக்கள் உளர் என்புழி,மக்கள் என்னும் பொதுப்பெயரும் உளர் என்னும் பொதுவினைக் குறிப்பும் பொறையுயிர்த்தல் என்னும் குறிப்பினான் உயர்திணை ஆண்பாலை ஒழித்தன. இப்பெற்றங்கள் உழவு ஒழிந்தன என்புழி, பெற்றங்கள் என்னும் அஃறிணை ஆண் பெண் இருபாற்கும் பொதுப்பெயரும் ஒழிந்தன என்னும் அஃறிணை ஆண் பெண் இருபாற்கும் பொதுவினையும் உழவு என்னும் குறிப்பினான் பெண்பாலை ஒழித்தன. இப்பெற்றங்கள் பால் சொரிந்தன என்புழி, பெற்றங்கள் என்னும் பொதுப்பெயரும் சொரிந்தன என்னும் பொது வினையும் பால் என்னும் குறிப்பினான் ஆண்பாலை ஒழித்தன. பிறவும் அன்ன.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், பொதுவாகிய பெயர்க்கும் பொதுவாகிய வினைக்கும் எய்திய தோர் இலக்கணம் கூறியது.

இ–ள்.:– **இரு திணை** – உயர்திணையிடத்தும் அஃறிணையிடத்தும், **ஆண் பெண்ணுள்** – ஆண்மைப் பொருளினும் பெண்மைப் பொருளினும், **ஒன்றனை யொழிக்கும்** – ஒன்றனையொன்று ஒழிந்து நிற்கும், **பெயரும் வினையும்** – அவ்விரு பாற்கும் பொதுவான பெயர்ச்சொல்லும் வினைச் சொல்லும், **குறிப்பினானே** – சொல்லுவான் குறிப்பினால், எ–று.

உ–ம்.:–

வடுகரசர் ஆயிரமக்களை உடையர் எனவும், இவை பத்து மானிடத்தின் முலைப்பால் எனவும், உயர்திணைப் பெண்ணொழி பொதுப்பெயரும் ஆணொழி பொதுப் பெயரும் வந்தன. அரசர் ஆயிரமக்களொடு தாவடி போயினார், இன்று இச்சேரியாரும் அச்சேரியாரும் பொருவார் எனவும் இவ்வூரார் எல்லாரும் தைந் நீராடின் ஆடுப எனவும் உயர்திணைப் பெண்ணொழி வினையும் ஆணொழி வினையும் வந்தன.

நம்மரசன் ஆயிரம் யானையை உடையன் எனவும், இவ்வூர் வணிகன் நூறு எருமை உடையன் எனவும் அஃறிணைப் பெண்மொழி பெயரும் ஆண்மொழி பெயரும் வந்தன. இவ்வூர்ப் பெற்றமெல்லாம் உழுதன, இவ்வூர்ப் பெற்றமெல்லாம் கறக்கும் என அஃறிணைப் பெண்மொழி வினையும் ஆண்மொழி வினையும் வந்தன.

## விசாகப் பெருமாளையர்

இது, முன் வந்த பெயர் வினைக்கும் பின்வரும் இடை உரிக்கும் பொதுவிலக்கணங்களைச் சிங்க நோக்காக இவ் இயலினாலே அறிவிக்கும்படி நடுவே வைத்துச் சொல்லுதலால் அப்பெயர்க்கும் வினைக்கும் உரியதோ ரிலக்கணம் உணர்த்துகின்றது.

**இ–ள்.:– இருதிணை–** இருதிணையிலும், **பெயரும் –** ஆண்பால் பெணபால்களுக்குப் பொதுவாகிய பெயர்ச்சொற்களும், **வினையும் –** அப்படிப்பட்டவினைச் சொற்களும், **ஆண் பெணுண் –** அவ்வாண்பால் பெண்பால்களுள், ஒன்றனை – ஒருமாலை, ஒழிக்கும் – நீக்கும், குறிப்பினான் – குறிப்பினால் – எ–று.

(வரலாறு)

ஆயிரமக்கள் போர்செய்தற்குப் போயினார் என்கிறவிடத்தே மக்களென்னும் உயர்திணை இருபாற்பொதுப் பெயரும் போயினார் என்னும் பொதுவினையும் போர்க்கு என்னுங் குறிப்பினாலே பெண்பாலை யொழித்தன. "பெருந்தேவி பொறையுயிர்த்த கட்டிற்கீழ், நால்வர் மக்களுர்1" என்கிற விடத்தே மக்களென்னும் பொதுப்பெயரும் உளரென்னும் பொதுவினைக் குறிப்பும் பொறையுயிர்த்தலென்னுங் குறிப்பினால் உயர்திணை யாண்பாலை யொழித்தன. அஃறிணையிலு மிப்படி வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

இவ்வியல் பொதுவியலெனப்பட்டது யாது பற்றி?

முன்வந்த பெயரியல் வினையியல்களுக்கும் பின்வரும் இடையியல் உரியியல்களுக்கும் பொதுவாகிய இலக்கணங்களைத் தொகுத்தொருங் குணர்த்தலின் இவ்வியல் பொதுவிய லெனப்பட்டது.

ஆண்பால் பெண்பால்களுள் ஒரு பாலைக் குறித்த ஆண்பால் பெண்பால் இரண்டுக்கும் பொதுவாகிய வாக்கியத்திலே, அப்பாலை இதனாற் றுணிகவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

இருதிணை யாண்பெணு ளொன்றனை யொழிக்கும்
பெயரும் வினையுங் குறிப்பி னானே.

(இருதிணை ஆண் பெணுள் ஒன்றனை ஒழிக்கும் பெயரும் வினையும் குறிப்பினான்ஏ.)

இ–ள்.: இருதிணையிலும் ஆண்பால் பெண்பால்களுக்குப் பெதுவாகிய பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும் அவ்வாண்பால் பெண்பால்களுள் ஒருபாலை நீக்குங் குறிப்பினால், எ–று.

வ–று.:–

(1) 'ஆயிரமக்கள் போர் செய்யப் போயினார்' என்புழி, மக்களென்னும் உயர்திணை யாண் பெணிருபாற்கும் பொதுப்பெயரும், போயினா ரென்னும் உயர்திணை யாண் பெணிருபாற்கும் பொதுவினையும், போர் செய வென்னுங் குறிப்பினாற் பெண்பாலை யொழித்தன. ஆதலின் மக்களென்பது இங்கே ஆண் பாலைக் குறித்து நின்றதெனத் துணிக. 'பெருந்தேவி பிரசவிக்கும்போது பக்கத்தே நால்வர் மக்களிருந்தார்' என்புழி, மக்களென்னும் பொதுப்பெயரும் உளரென்னும் பொதுவினைக்குறிப்பும், பிரசவித்தலென்னுங் குறிப்பினால் ஆண்பாலை யொழித்தன. (பிரசவகாலத்தில் அவ்வறையிற் பெண்களே யிருத்தற் குரியராதலின்.)

(2) இப்பெற்றங்கள் உழவொழிந்தன என்புழிப், பெற்றங்க ளென்னும் அஃறிணையாண் பெணிருபாற்கும் பொதுப் பெயரும், ஒழிந்தனவென்னும் அஃறிணை யாண் பெணிரு பாற்கும் பொதுவினையும், உழவென்னுங் குறிப்பினால் உழவு பசுக்களுக் குரியதன்றாதலின் பெண்பாலை யொழித்தன. இப் பெற்றங்கள் பால் சொரிந்தன என்புழிப், பெற்றங்களென்னும் பொதுப்பெயரும், சொரிந்தன வென்னும் பொதுவினையும், பாலென்னுங் குறிப்பினால் ஆண்பாலை யொழித்தன.

## முகவை இராமானுச கவிராயர்

இது, பெயர் வினை யிடை யுரி யென்னும் நால்வகைச் சொற்கும் பொதுஇலக்கணம் உணர்த்தலால், இது, பொதுவியலெனப்பட்டது. (இதனுள், இச்சூத்திரம் பெயர்க்கும் வினைக்கும் உரியதோ ரிலக்கணமுணர்த்திற்று.

இ–ள்.:– இருதிணையாண்பெணுள் – உயர் திணை யாண்பால் பெண்பால்களுக்கு அஃறிணை யாண்பால் பெண்பால்களுக்கும் பொதுவாகிய சொற்களுள், **ஒன்றனையொழிக்கும்** – ஒரு பாலை யொழித்து ஒரு பாலை விளக்கும், பெயரும் வினையும் (அந்த இருதிணை யைம் பாலுக்கும் பொதுவான)

பெயர்ச் சொற்களும் வினைச் சொற்களும், குறிப்பினான் – சிறிது பொழுது நிகழும் குறிப்பினாலென்றவாறு.

வ–று.:–

ஆயிரமக்கள் தாவடிபோயினார் எனின், மக்கள் என்னும் உயர்திணையாண் பெண் என்னும் இருபாற்கும் பொதுப் பெயரும் போயினார் என்னும் அவ்விருபாற்கும் பொது வினையும் தாவடி என்னுங் குறிப்பினாலே பெண்பாலை யொழிந்தன (தாவடி போர்க்குப் பிரயாணம்). பெருந்தேவி பொறையுயிர்த்த கட்டிற்கீழ் நால்வர் மக்களுளர், எனின் மக்களென்னும் பொதுப்பெயரும், ஊர் என்னும் பொது வினையும், பொறையுயிர்த்தல் – என்னுங் குறிப்பினாலே – ஆண்பாலை யொழித்தன, (பொறையுயிர்த்தல் – பிரசவித்தல்,) இப்பெற்றங்கள் உழவொழிந்தன எனின், பெற்றங்கள் என்னும் அஃறிணை யிருபாற்கும் பொதுப்பெயரும், ஒழிந்தன என்னும் பொதுவினையும், உழவு என்னுங் குறிப்பினாலே பெண்பாலை யொழித்தன. இப்பெற்றங்கள் கறக்கும் எனின் அப் பொதுப்பெயரும், கறக்கும் என்னும் பொதுவினையும், கறத்தல் என்னுங்குறிப்பினாலே ஆண்பாலையொழித்தன. கறக்கும் என்பது விகுதி மாத்திரையிற் பொதுவிணையாயிற்று. (பெற்றம்–பசு, காளை என்னும் இரண்டிற்கும் பொது) பிறவுமன்ன, பெயரும் வினையும் ஒழிக்கும் என முடித்துக் கொள்க.

## கா. கோபாலாசாரியர்
## தி.கோ. ரங்காசாரியர்

**உரை :– இருதிணை** – இரண்டு திணைகளிலும், **பெயரும்** – (ஆண் பெண் பால்களுக்குப் பொதுவாகிய) பெயர்ச்சொற்களும், **வினையும்**– (அவ்விருபால்களுக்கும் பொதுவாகிய) வினைச்சொற்களும், **ஆண் பெணுள்** – அவ்வாண்பால் பெண்பால்களுள், **ஒன்றனை** – ஒருபாலை, **குறிப்பினான்** – குறிப்பினால், **ஒழிக்கும்** – நீக்கி மற்றொருபாலை விளங்கும்.

### உதாரணம்

1. (அ) **ஆயிரம் மக்கள் போர் செய்தார்கள்** – இதில் 'மக்கள்' என்னும் உயர்திணை ஆண்பெண் இருபாற்கும் பொதுப்பெயரும், 'செய்தார்கள்' என்னும் பொதுவினையும் 'போர்' என்னுங் குறிப்பினால் பெண்பாலை ஒழித்து ஆண்பாலைக் காட்டின.

(ஆ) **பெருந்தேவி பொறையுயிர்த்தக் கட்டிற்கீழ் நால்வர் மக்கள் உளர்** இதில் 'மக்கள்' என்னும் பொதுப் பெயரும் 'உளர்'

என்னும் பொது வினையும் 'பொறையுயிர்த்த' என்னுங் குறிப்பினால் உயர்திணை ஆண்பாலை ஒழித்துப் பெண்பாலைக் காட்டின. (பொறையுயிர்த்தல் – பிரசவித்தல்)

2. (அ) இப் பெற்றங்கள் உழவு ஒழிந்தன – இதில் 'பெற்றங்கள்' என்னும் அஃறிணை ஆண் பெண் இருபாற்கும் பொதுப்பெயரும், 'ஒழிந்தன' என்னும் பொதுவினையும் 'உழவு' என்னுங் குறிப்பினால் ஆண்பாலை ஒழித்துப் பெண்பாலைக் காட்டின. (பெற்றம்–மாடு.)

(ஆ) இப் பெற்றங்கள் பால் சொரிந்தன – இதில் 'பெற்றங்கள்' என்னும் பொதுப்பெயரும் 'சொரிந்தன' என்னும் பொதுவினையும் 'பால்' என்னுங் குறிப்பினால் ஆண்பாலை ஒழித்துப் பெண்பாலைக் காட்டின.

## ஆறுமுக நாவலர்

இது, முன் வந்த பெயருக்கும் வினைக்கும் பின் வரும் இடைக்கும் உரிக்கும் பொதுவிலக்கங்களைச் சிங்கநோக்காக அறிவிக்கும் பொருட்டு நடுவே வைக்கப்பட்டது.

இ – ள்.:– இருதிணைப் பெயரும் வினையும் – இருதினையிலும் ஆண்பால் பெண்பால்களுக்குப் பொதுவாகிய பெயர்ச்சொற்களும் அப்படிப்பட்ட வினைச்சொற்களும், ஆண் பெணுள் ஒன்றனை ஒழிக்கும் குறிப்பினான் – அவ்வாண்பால் பெண்பால்களுள் ஒரு பாலை நீக்குங் குறிப்பினால், எ– று.

வ–று.:–

(1) ஆயிரமக்கள் போர் செய்யப்போயினார் என்புழி, மக்களென்னும் உயர்திணை யாண்பெணிருபாற்கும் பொதுப்பெயரும், போயினாரென்னும் உயர்திணை யாண்பெணிருபாற்கும் பொதுவினையும், போர்செயலென்னுங் குறிப்பினாற் பெண்பாலை யொழித்தன. பெருந்தேவி பொறையுயிர்த்த கட்டிற்கீழ் நால்வர் மக்களுளர் என்புழி, மக்களென்னும் பொதுப்பெயரும், உளரென்னும் பொதுவினைக் குறிப்பும், பொறையுயிர்த்தலென்னுங் குறிப்பினால் ஆண்பாலை யொழித்தன. (பொறையுயிர்த்தல் – பிரசவித்தல்)

(2)இப்பெற்றங்களுழ வொழிந்தன என்புழிப், பெற்றங் களென்னும் அஃறிணை யாண்பெணிருபாற்கும் பொதுப் பெயரும், ஒழிந்தனவென்னும் அஃறிணை யாண்பெணிரு பாற்கும் பொதுவினையும், உழவென்னுங் குறிப்பினாற் பெண்பாலை யொழித்தன. இப்பெற்றங்கள் பால் சொரிந்தன என்புழிப் பெற்றங்களென்னும் பொதுப்பெயரும், சொரிந்தன

வென்னும் பொதுவினையும், பாலென்னுங் குறிப்பினால் ஆண்பாலை யொழித்தன.

## வ. குமாரசாமிப் புலவர்

(இது முன் வந்த பெயருக்கும் வினைக்கும் பின் வரும் இடைக்கும் உரிக்கும் பொதுவிலக்கணங்களைச் சிங்கநோக்காக அறிவிக்கம் பொருட்டு நடுவே வைக்கப்பட்டது)

**இ-ள். இருதிணைப் பெயரும் வினையும்** - இருதிணையிலும் ஆண்பால் பெண்பால்களுக்குப் பொதுவாகிய பெயர்ச்சொற்களும் அப்படிப்பட்ட வினைச் சொற்களும், **ஆண் பெணுள் ஒன்றனை ஒழிக்கும் குறிப்பினான்** - அவ்வாண்பால் பெண்பால்களுள் ஒருபாலை நீக்குங் குறிப்பினால். எ-று.

வ-று.:-

(1)அயிரமக்கள் போர் செய்யப் போயினர் என்புழி, மக்களென்னும் உயர்திணையாண்பெ ணிருபாற்கும் பொதுப் பெயரும், போயினாரென்னும் உயர்திணையாண் பெணிரு பாற்கும் பொதுவினையும், போர் செய்யவென்னுங் குறிப்பினாற் பெண்பாலை யொழித்தன. பெருந்தேவி பொறையுயிர்த் காட்டிற் கீழ் நால்வர் மக்களுர் என்புழி, மக்க ளென்னும் பொதுப்பெயரும் உளரென்னும் பொதுவினைக் குறிப்பும், பொறையுயிர்த்தலென்னுங் குறிப்பினான் ஆண்பாலை யொழித்தன. (பொறையுயிர்த்தல் - பிரசவித்தல்)

(2)இப்பெற்றங்களுழ வொழிந்தன என்புழிப், பெற்றங் களென்னும் அஃறிணையாண்பெணிரு பாற்கும் பொதுப் பெயரும், ஒழிந்தனவென்னும் அஃறிணையாண் பெணிரு பாற்கும் பொதுவினையும், உழவென்னுங் குறிப்பினாற் பெண்பாலையொழித்தன. இப்பெற்றங்கள் பால்சொரிந்தன என்புழிப், பெற்றங் களென்னும் பொதுப்பெயரும், சொரிந்தன வென்னும் பொதுவினையும், பாலென்னுங் குறிப்பினால் ஆண்பாலை யொழித்தன. பெற்றம் - பசு, காளை இரண்டற்கும் பொது.

## வை. மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ-ள்.: திணையே** - இருதிணையும், **பால்** - ஐம்பாலும், **இடம்**- மூவிடமும், **பொழுது** - முக்காலமும், **வினா**-வினாவும், **இறை** - விடையும், **மரபு** - (பலவகை) மரபுகளும், **ஆம்** - ஆகிய, **ஏழும்** -, **மயங்கின்** - தம் தம் முறை தவறி வந்தால், **வழு ஆம்** - வழுவாகும்; எ-று.

ஆகையால், இவ்வாறே எழுவகை வழுக்களையும் அறிந்து, வழக்கிடத்தும் செய்யுளிடத்தும் அவை வராமல் நீக்குக.

> திணை முதலிய ஆறும் மரபாமானாலும், இங்கே எடுக்காதொழிந்தவற்றையே மரபென்று கொள்க வென்பார், அதனை இறுதியிற் கூறுனார். (மரபு – தொன்றுதொட்டு வழங்கும் முறைமை; இறை – எதிர்மொழி, விடை.)
>
> சொற்கள் தொடருமிடத்து, முடிக்கப்படும் சொற்களோடு முடிக்கும் சொற்கள் திணை பால் இடம் காலம் வினா விடை மரபு என்னும் இவ்வேழிலும் மாறுபடாமல் தொடர்ந்து நிற்பது, முறைமையாம்; அவ்வாறு தொடர்ந்து நிற்பன, 'வழாநிலை' எனப்படும்; வழாநிலையாவது – இலக்கணக் குற்றமில்லாதது. அத்திணை பால் முதலியவற்றில் மாறி நிற்பன, 'வழு' வாம்; வழுவாவது – இலக்கணக் குற்ற முள்ளது. அவற்றில் மாறி நின்று இலக்கணக் குற்ற முள்ளதாகக் காணப்பட்டாலும், முன்னோரால் இருக்கலாமென்று ஏற்றுக்கொண்டு அமைக்கப்பட்டன, 'வழுவமைதி' யாம். இம்மூன்றனுள், வழு நீக்கப்படும்; மற்றை இரண்டும் கொள்ளப்படும்.

உ – ம்.:–

(1) அவன் வந்தது – திணை வழு,

(2) அவன் வந்தாள் – பால் வழு,

(3) யான் வந்தான் – இட வழு,

(4) நாளை வந்தான் – கால வழு,

(5) கறக்கிற எருமை பாலோ சினையோ? – வினா வழு,

(6) பட்டுக்கோட்டைக்கு வழி எது? என்றால் காட்டைப்பாக்கு எட்டுப்பணம் என்பது. விடைவழு,

(7) யானை செலுத்துபவனை இடையனென்பது – மரபுவழு.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– இருதிணை யாண்பெணுள் – இருதிணையிலும் ஆண்பால் பெண்பால்களுக்குப் பொதுவாகிய சொற்களுள், பெயரும் வினையும் – (அந்த இருதிணை ஐம்பாலுக்கும் பொதுவான) பெயர்ச் சொற்களும் வினைச்சொற்களும், குறிப்பினால் – குறிப்பினால், ஒன்றனை ஒழிக்கும் – அவ்வாண்பால் பெண்பால்களுள் ஒருபாலை நீக்கும். எ–று.

(உ–ம்.)

(1) ஆயிரமக்கள் போர் செய்யப் போயினார் (மக்க ளென்னும் உயர்திணை யாண்பெ ணிருபாற்கும் பொதுப்

பெயரும், போயினாரென்னும் உயிர்திணை யாண்பெணிரு பாற்கும் பொதுவினையும், போர் செயலென்னுங் குறிப்பினாற் பொண்பாலை யொழித்தன.)

பெருந்தேவி பொறையுயிர்த்த கட்டிற்கீழ் நால்வர் மக்கள் உளர் (இதில் மக்களென்னும் பொதுப்பெயரும், உளரென்னும் பொது வினைக்குறிப்பும், பொறையுயிர்த்தலென்னுங் குறிப்பினால் ஆண் பாலையொழித்தன.) (பொறையுயிர்த்தல் – பிரசவித்தல்.)

(2) இப்பெற்றங்கள் உழ வொழிந்தன் - (இதில் பெற்றங்களென்னும் அஃறிணை யாண்பெ ணிருபாற்கும் பொதுப்பெயரும், ஒழிந்தனவென்னும் அஃறிணை யாண்பெ ணிருபாற்கும் பொதுவினையும் உழவென்னுங் குறிப்பினாற் பெண்பாலை யொழித்தன). இப் பெற்றங்கள் பால் சொரிந்தன. (இதில் பெற்றங்களென்னும் பொதுப் பெயரும், சொரிந்தனவென்னும் பொதுவினையும், பாலென்னுங் குறிப்பினால் ஆண்பாலை யொழித்தன). பெற்றறம் - பசு காளை என்னும் இரண்டிற்கும் பொது.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ–ள்.:– இருதிணை - இருதிணையிலும், பெயரும் வினையும் - (ஆண்பால் பெண்பால்களுக்குப் பொதுவாகிய) பெயர்ச் சொற்களும் வினைச்சொற்களும், ஆண் பெணுள் ஒன்றனை - அவ்வாண்பால் பெண்பால்களுள் ஒருபாலை, குறிப்பினான் ஒழிக்கும் - குறிப்பினால் நீக்கும். (எ–று) (ஏ - அசை)

(பொ–ரை.) இருதிணையிலும் (ஆண்பால் பெண்பால்களுக்குப் பொதுவாகிய) பெயர்ச்சொற்களும், வினைச் சொற்களும், அவ்வாண்பால் பெண்பால்களுள் ஒருபாலைக் குறிப்பினால் நீக்கும்.

(உ– ம்.)

ஆயிரமக்கள் போர் செய்தற்குப் போயினார்:– இதில் மக்கள் என்னும் உயர்திணை இருபாற் பொதுப்பெயரும், போயினார் என்னும் பொதுவினையும், போர்க்கு என்னும் குறிப்பினாலே பெண்பாலை ஒழித்தன.

பெருந்தேவி பொறையுயிர்த்த கட்டிற்கீழ் நால்வர் மக்கள் உளர்:– இதில் மக்கள் என்னும் பொதுப்பெயரும், உளர் என்னும் பொதுவினைக் குறிப்பும், பொறை யுயிர்த்தல் என்னும் குறிப்புனால் உயர்திணை ஆண்பாலை ஒழிந்தன. (பெருந்தேவி – அரசிபொறையுயிர்த்தல் – பிரசவித்தல்.)

இப் பெற்றங்கள் உழபொழிந்தன:– இதில் பெற்றங்கள்

என்னும் அஃறிணை இருபாற் பொதுப் பெயரும்; ஒழிந்தன என்னும் பொது வினையும், உழவு என்னும் குறிப்பினால் பெண்பாலை ஒழித்தன.

இப் பெற்றங்கள் பால் சொரிந்தன:– இதில் பெற்றங்கள் என்னும் பொதுப் பெயரும், சொரிந்தன என்னும் பொதுவினையும், பால் என்னும் குறிப்பினால் ஆண்பாலை ஒழித்தன.

(செய்யுளிடத்துச் சில பெயர் வினையின் ஈற்றயல் ஆ, ஓ ஆகத்திரிதல்.)

## கா. நமச்சிவாய முதலியார்

**இருதிணை** – இரு திணையிலும், **பெயரும்** – (ஆண்பால் பெண்பால்களுக்குப் பொதுவாகிய) பெயர்ச்சொற்களும், **வினையும்** – (அப்படிப்பட்ட) வினைச்சொற்களும், **ஆண் பெண்ணுள்** – ஆண்பால் பெண்பால்களுள், **ஒன்றனை** – ஒரு பாலை, **குறிப்பினான்** – குறிப்பினால், **ஒழிக்கும்** – நீக்கும்.

உதாரணம்

ஆயிரம் மக்கள் போர்செய்தற்குப் போயினார் – இதில், மக்கள் என்னும் உயர்திணை இருபாற் பொதுப்பெயரும், போயினார் என்னும் பொதுவினையும், போர் என்னுங் குறிப்பினால் உயர்திணைப் பெண்பாலை ஒழித்தன.

பெருந்தேவி பொறை யுயிர்த்த கட்டிற்கீழ் நால்வர் மக்கள் உளர் – இதில், மக்கள் என்னும் பொதுப்பெயரும், உளர் என்னும் பொது வினைக்குறிப்பும், பொறையுயிர்த்த என்னுங் குறிப்பினால், உயர்திணை ஆண்பாலை ஒழித்தன.

(பொறையுயிர்த்தல் = பிரசவித்தல்)

இப்பெற்றங்கள் உழவொழிந்தன – இதில், பெற்றங்கள் என்னும் அஃறிணை இருபாற் பொதுப்பெயரும், ஒழிந்தன என்னும் பொதுவினையும் உழவு என்னும் குறிப்பினால் அஃறிணைப் பெண்பாலை ஒழித்தன.

இப்பெற்றங்கள் பால்சொரிந்தன – இதில் பெற்றங்கள் என்னும் பொதுப்பெயரும், சொரிந்தன என்னும் பொதுவினையும், பால் என்னுங் குறிப்பினால் அஃறிணை ஆண்பாலை ஒழித்தன.

## மோசசு பொன்னையா

முன்னர்ச் சொல்லப்பட்ட பெயர், வினைகட்கும் பின்னர்ச் சொல்லப்படும் இடை, உரிகட்கும் பொதுவான இலக்கணம் உணர்த்தி, அவற்றின் சிறப்பிலக்கணம் உணர்த்தும் இயல்களுக்கு இடையே சிங்கநோக்காக இவ்வியல் அமைந்துள்ளது.

1. தொடர்–பொது

உயர்திணை அஃறிணை, ஆண் பெண் பால்களுக்குப் பொதுவான பெயர்ச்சொற்களும், வினைச்சொற்களும் அவ்விரு பால்களுள் ஒன்றைக் குறிப்பால் நீக்கும் எ–று.

எ–டு.

1. ஐயப்பன் பக்தர் தாடி வளர்த்தனர்.
2. ஆடியவர்களில் இருவர் தாலிக் கழுத்தினர்
3. கண்ணைத்துடைத்துக் கொண்டு எழுந்தேன், கோழிகள் கூவின.
4. இத்தொழுப் பெற்றங்கள் கறப்பன

பெயர், வினைச்சொற்கள் இருதிணைகளுள்ளும் ஆண், பெண் பால்களுள் ஒன்றைக் குறிப்பால் ஒழித்தன.

முன்னர்க் குறிப்புச் சொற்களைத் தொகுத்தோதுங்கால்
உடன்வைத் தெண்ணப்பட்ட1 ஒன்றொழி
பொதுச்சொல்லுக்கு இந்நூற்பாவால் விளக்கந்தந்தார்.

(1)

## 352. பெயர்வினை யிடத்து னளரய வீற்றயல், ஆவோ [1]வாகலுஞ் செய்யுளு ளுரித்தே.

**பெயர் வினை இடத்து ன ள ர ய ஈற்று அயல்**
**ஆ ஓ ஆகலும் செய்யுள் உள் உரித்தே.**

---

பாடவேறுபாடு.:–

1. வாதலும்

peyar vinai itattu na la ra ya iūūu ayal
ā ō ākal um seyyul ul urittu ē

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Change in the penultimates

In poetry, it is usual to change into ô the penultimate â of Nouns and Verbs ending in n,l,r and y.

## ஒப்புமைப் பகுதி

பாலறி மரபின் அம்மூ ஈற்றும்
ஆஓ ஆகுஞ் செய்யு ளுள்ளே

(தொல். சொல்.: 211)

ஆயென் கிளவியும் அவற்றொடு கொள்ளும்

(தொல். சொல்.: 212)

அன்றிஆ ஓவாகி ஆய்ஓய் – நின்றனவும்

(நேமி.: 73:2)

ஆன்ஆள் ஆர்முத லாவோ வாகும்

(மு.வீ.: 608)

ஆயென் கிளவியு மவற்றோ ரற்றே

(மு.வீ.: 609)

## மயிலை நாதர்

எ– ன், செய்யுட்காவதோர் [1]முறைமை யுணர்த்துதல் நுதலிற்று.

இ –ள்.: பெயர் வினைகளின் ஈற்றில் நின்ற ன ள ர ய க்களின் அயலிலுள்ள ஆகாரம் ஓகாரமாகவும் பெறும், செய்யுளுள், எ–று.

உம்மையால், ஆகாமலும் உரித்தென்றவாறு.

வ–று.:

"வில்லோன் காலன கழலே தொடியோள், மெல்லடி மேலவுஞ் சிலம்பே நல்லோர், யார்கொ லளியர் தாமே", "பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்" எனவும்; "படைத்தோன் மன்றவப் பண்பி லாளன்", [2]"நல்லை மன்னென நகூப்

பாடவேறுபாடு.:–

1. இலக்கணம் உணர்த்துதல்,நுதலிற்று
2. (1) நல்லண்மன்றங்கூய்ப்பெயர்ந்தோளே;
   (2) நல்லோண்மன்ற

பெயர்ந்தோளே", "சொன்றே ரன்பிலர் தோழி", "வந்தோய் மன்ற தண்கடற் சேர்ப்ப" எனவும் பெயர்க்கண்ணும் வினைக் கண்ணும் வந்தவாறு.

## சங்கர நமச்சிவாயர்

எ–னின், பெயர்க்கும் வினைக்கும் செய்யுட்கண் ஆவதோர் இலக்கணம் உணர்–ற்று.

**இ–ள்.:–** பெயர்க்கண்ணும் வினைக்கண்ணும் னகார ளகார ரகார யகாரவீற்று அயல்நின்ற விகுதிமுதல் ஆகாரம் ஒகார மாதலும் செய்யுளிடத்து உரித்தாம் எ–று.

வ–று.:–

"வில்லோன் காலன கழலே தொடியோள், மெல்லடி மேலவுஞ் சிலம்பே நல்லோர், யார்கொல் அளியர் தாமே" "பெருஞ் சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்" எனவும் "படைத்தோன் மன்றஅப் பண்பிலாளன்" "நல்லோண் மன்ற நகூஉப்பெயர்ந்தோளே" "சென்றோர் அன்பிலர் தோழி" "வந்தோய் மன்ற தண்கடற் சேர்ப்ப" எனவும் பெயர்க் கண்ணும் வினைக்கண்ணும் வந்தது. வினையாலணையும் பெயர்க்கண் அன்றி வினைக்கண்ணும் ஒரோவழி ஆ ஓ ஆதலின், அதனையும் உடன் கூறினார்.

உம்மையை எதிர்மறை உம்மை ஆக்கி வில்லோன் வில்லான் என ஒன்றே ஆதலும் ஆகாமையும், இன்னும் அவ்வும்மை யானே செக்கான் வண்ணான் என மற்றொன்று ஆகாமையும், அதனை ஆக்கவும்மையாக்கி, "பழமுதிர்சோலை மலைகிழ வோனே" என ஆகாரமே யன்றி அகரமும் ஒகாரமாதலும் கொள்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், பெயர்ப் பகுபதமும் வினைப் பகுபதமும் செய்யுளிடத்து வந்தால் இவ்விகுதி பெறுமெனக் கூறுகின்றது.

**இ–ள்.:** பெயர்வினையிடத்து – பெயர்ப் பகுபதத்தின்கண்ணும் வினைப் பகுபதத்தின் கண்ணும், ன ள ர ய வீற்றயல் ஆ– ஈற்றினின்ற ன ள ர யக்கள் ஈற்றயலினின்ற ஆகாரம், ஓ வாகலுஞ் செய்யுளு ளுரித்தே – ஒகாரமாகலும் செய்யுட்கண் உரித்தாம், எ–று.

உ–ம்.:–

வெண்குழையோன், இளையோன், தொழுகுலத்தோர்,

குழையோய், கூற்றை யுதைத்தோன், மயிலிடர் செற்றோன், உயர்ந்தோர், உயர்ந்தோய் எனப் பெயர்க்கண்ணும் வினைக்கண்ணும் வந்தன.

## விசாகப் பெருமாளையர்

இது, பெயர்வினைகளுக்குச் செய்யுளிலாவதோ ரிலக்கண முணர்த்துகின்றது.

இ–ள்.: **பெயர்வினையிடத்து** – பெயரிடத்தும் வினையிடத்தும், **னளரய வீற்று** – னகர ளகர ரகர யகர வீற்றிற்கு, **அயல்** – அயலிலுள்ள, **ஆ**–இறுதிமுதல் ஆகாரம், **ஓவாகலும்**– ஓகாரமாதலும், **செய்யுளுள்** – செய்யுளிடத்து, **உரித்து** – உரித்தாம், எ–று.

வ–று.:–

வில்லோன்காலனகழலே, தொடியோண் மெல்லடி மேலனசிலம்பே, நல்லோர்யார்கொல், வரையாது கொடுத்தோய் எனவும், படைத்தோன் மன்றவப் பண்பிலாளன், நல்லோண்மன்ற கூப்பெயர்த்தோளே, சென்றோரன்பிலர்தோழி, வந்தோய்மன்ற தெண் கடற்சேர்ப்ப எனவும் பெயரிடத்தும் வினையிடத்தும் வந்தது வினையாலணையும் பெயரிடத்தல்லாமல் வினையிடத்தும் வந்தது. வினையாலணையும் பெயரிடத்து அல்லாமல் வினையிடத்தும் ஒரோவிடத்து ஆவோவாய்த் திரிந்து/வருதலின் அதனையுமுடன் கூறினார்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

செய்யுளிலே பெயர்வினைகளின்கண் இவ்வெழுத்து இவ்வெழுத்தாகத் திரியவும் பெறுமெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

பெயர்வினை யிடத்து ன ள ர ய வீற்றயல்
ஆவோ வாகலுஞ் செய்யுளு ளுரித்தே.

(பெயர் வினையிடத்து ன ள ர ய ஈற்று அயல்
ஆ ஓ ஆகலும் செய்யுளுள் உரித்தே.)

இ–ள்.:– பெயரிடத்தும் வினையிடத்தும் னகர ளகர ரகர யகர வீற்றிற்கு அயலிலுள்ள விகுதி முதல் ஆகாரம் ஓகாரமாதலும் செய்யுளிடத்துரித்தாம், எ–று.

வ–று.:–

(1) "வில்லோன் காலன கழலே;" "தொடியோண் மெல்லடி மேலனசிலம்பே;" "நல்லோர் யார்கொல்;" "வரையாது கொடுத்தோய்" எனப் பெயரிடத்து ஆகாரம் ஓகாரமாயிற்று.

(2) "படைத்தோன் மன்றவப் பண்பிலாளன்;" "நல்லோண்

மன்றகூப்பெயர்த்தோளே;" "சென்றோ ரன்பிலர் தோழி," "வந்தோய் மன்ற தெண்கடற் சேர்ப்ப" என வினையிடத்து ஆகாரம் ஒகாரமாயிற்று.

வினையாலணையும் பெயரிடத்தன்றி வினையிடத்தும் ஒரோவழி ஆவோவாகத் திரிந்து வருதலின், அதனையு முடன்கூறினார்.

ஏற்புழிக்கோடலால், சேரமான் வண்ணான் உண்ணான் உறங்கான் முதலியன திரியாவெனவும், ஆவீறு திரிதல் பெரும்பான்மையும் உயர்திணைக்கண்ணே யாமெனவுங் கொள்க.

இனி ஒன்றென முடித்தலால், "பழமுதிர் சோலை மலைகிழவோனே" என ஒரோவழி அகரம் ஒகாரமாதலுங் கொள்க.

## முகவை இராமானுச கவிராயர்

இது, பெயர்வினைகளுக்குச் செய்யுளிடத்தாவ தோரிலக்கண முணர்த்திற்று.

**இ–ள்.: பெயர் வினையிடத்து** – பெயரினிடத்தும் வினையினிடத்தும், **ன ள ர ய வீற்றயல்** – ன ள ர ய என்னும் இந்த நான்கு ஒற்று ஈற்றுக்கும் அயலிலே நின்ற, **ஆவோவாகலும்** – ஆகாரம் ஒகாரமாகத் திரிதலும், **செய்யுளுள்ளுரித்து** – செய்யுளிடத்து உரிமையாம், எ–று.

வ–று.:–

வில்லான் – வில்லோன், தொடியாள் – தொடியோள், நல்லார் – நல்லோர், நல்லாய் – நல்லோய், எனப் பெயரிடத்தும் படைத்தான் – படைத்தோன், பெயர்ந்தாள் – பெயர்ந்தோள், சென்றார்– சென்றோர், வந்தாய் – வந்தோய் என வினையிடத்தும் ஆ ஒ வாயினவாறு காண்க. வினையாலணையும் பெயரிடத்தல்லது வினையிடத்து ஆ ஒவதால் சிறுபான்மை யெனக் கொள்க, ஆவோவாதலு மென்ற உம்மையை ஆக்கவும்மையாகக் கொண்டு கிழவன் – மலைக்கிழவோனே என அகரம் ஒகாரமாகி ஒரோரிடத்து வருதலும் செய்யுளுள்ளுரித்தெனவே, வழக்கிடத் துரிமை யின்றியும் சிறியோர் பெரியோர் நல்லோர் தீயோர் எனச் சிறுபான்மை வருதலுங் கொள்க. ஆவோவாகலும் உரித்து என முடிக்க.

பாலறி மரபினம் மூவீற்று

மாவோவாகுஞ் செய்யுளுள்ளே – ஆயென்

கிளவி யுமவற்றொடு கொள்ளும்

என்றார் ஆசிரியர் தொல்காப்பியனரு மெனக் காண்க.

## கா. கோபாலாசாரியர்
## தி.கோ. ரங்காசாரியர்

உரை :– பெயர் வினை இடத்து – பெயரிடத்தும் வினையிடத்தும், னளரய ஈற்று ஆ – னகர ளகர ரகர யகர ஈற்றுக்கு அயலிலுள்ள விகுதி முதல் ஆகாரம், ஒ ஆகலும் – ஒகாரமாகத் திரிதலும், செய்யுளுள் – செய்யுளிடத்து, உரித்து – உரியதாம்.

உதாரணம்

| பெயர் | | வினை | |
|---|---|---|---|
| "வில்லான்" | – "வில்லோன்" | "படைத்தான்" | – "படைத்தோன்" |
| "தொடியாள்" | – "தொடியோள்" | "பெயர்த்தாள்" | – "பெயர்த்தோள்" |
| "நல்லார்" | – "நல்லோர்" | "சென்றார்" | – "சென்றோர்" |
| "பெரியாய்" | – "பெரியோய்" | "வந்தாய்" | – "வந்தோய்" |

குறிப்பு :–

வினையாலணையும் பெயரிடத்தல்லது வினையிடத்தும் சிறுபான்மை ஆ ஓவாகத் திரிந்துவருதலால் அதனையும் உடன் கூறினார். 'ஆகலும்' என்ற எதிர்மறை உம்மையால், 'செக்கான்', 'வண்ணான்' என்பன ஆ ஓ, ஆகாமையும், இன்னும் அதனை ஆக்கவும்மையாகக் கொண்டு, 'கிழவன்', 'கிழவோன்', 'இருவர்', 'இருவோர்' எனச் சில விடத்து அ ஓ ஆதலும் கொள்க. (இங்ஙனம் ஆ ஒ ஆதல் உயர்திணையிடத் தென்க.)

## ஆறுமுக நாவலர்

இ–ள்.:– *பெயர் வினையிடத்து*– பெயரிடத்தும் வினையிடத்தும், ன ள ர ய ஈற்று அயல் ஆ ஓ ஆகலும் – னகர ளகர ரகர யகர வீற்றிற்கு அயலிலுள்ள விகுதிமுதல் ஆகாரம் ஒகாரமாதலும், செய்யுளுள் உரித்து – செய்யுளிடத்துரித்தாம், எ–று.

வ–று.:–

(1) "வில்லோன் காலன கழலே" "தொடியோள் மெல்லடி, மேலன சிலம்பே" "நல்லோர் யார்கொல்" "வரையாது கொடுத்தோய்" எனப் பெயரிடத்து ஆகாரம் ஒகாரமாயிற்று.

(2) "படைத்தோன் மன்றவப்பண்பிலாளன்" "நல்லோண்

மன்றகூப் பெயர்த்தோளே" "சென்றோரன்பிலர் தோழி" "வந்தோய் மன்ற தெண்கடற் சேர்ப்ப" என வினையிடத்து ஆகாரம் ஒகாரமாயிற்று.

வினையாலணையும் பெயரிடத்தன்றி வினையிடத்தும் ஒரோவழி ஆவோவாகத் திரிந்து வருதலின், அதனையுமுடன் கூறினார்.ஆவோவாகலுமென்றவும்மையை ஆக்கவும்மை யாகக் கொண்டு "பழமுதிர் சோலை மலைகிழ வோனே" என ஒரோவழி அகரம் ஒகாரமாதலுங் கொள்க.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். பெயர் வினையிடத்து** – பெயரிடத்தும் வினையிடத்தும், **னளரய ஈற்று அயல் ஆ ஓ ஆகலும்** – ளகர னகர ரகர யகர ஒற்றீற்றிற்கு அயலிலுள்ள விகுதிமுதல் ஆகாரம் ஓகாரமாதலும், – **செய்யுளுள் உரித்து** – செய்யுளிடத்துரித்தாம். எ–று.

வ–று

(1)"வில்லோன் காலன கழலே", "தொடியோண் மெல்லடி மேலன சிலம்பே", "நல்லோர் யார் கொல்", "லரையாது கொடுத்தோய்" எனப் பெயரிடத்து ஆகாரம் ஓகாரமாயிற்று.

(2)"படைத்தோன் மன்றவப் பண்பிலாளன்; "நல்லோண் மன்ற கூப்பெயர்த்தோளே" "சென்றோ ரன்பிலர் தோழி" "வந்தோய் மன்ற தெண்கடற் சேர்ப்ப" என வினையிடத்து ஆகாரம் ஓகாரமாயிற்று.

வினையாலணையும் பெயரிடத்தன்றி வினையிடத்தும் ஒரோவழி ஆவோவாகத் திரிந்து வருதலின், அதனையு முடன் கூறினார்.

ஆவோவாகலு மென்றவும்மையை ஆக்கவும்மையாகக் கொண்டு "பழமுதிர் சோலை மலைகிழ வோனே" என ஒரோவழி அகரம் ஒகார மாதலுங் கொள்க. பெரியோர், தீயோர், நல்லோர், மேலோர் எனச் சிறுபான்மை வழக்கினிடத்தும் ஆவோவாதலுண்மையால், செய்யுளுளுரித்தேயென்றது பெரும்பான்மைபற்றியென்றறிக. (கு) "பாலறிமரபினம் மூவிற்று, மாவோவாகுஞ்செய்யுளுள்ளே, ஆயென் கிளவியுமவற்றொடு கொள்ளும்", என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாரும்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: பெயர் வினை இடத்து – பெயரிடத்தும் வினையிடத்தும், ன ள ர ய ஈறு அயல் ஆ – னகர ளகர ரகர யகர வீற்றிற்கு அயலில் உள்ள விகுதி முதல் ஆகாரம், ஓ ஆகலும்– ஓகாரமாகத் திரிதலும், செய்யுளுள் – செய்யுளிடத்து, உரித்து – உரியதாம்; எ–று.

பெயர்:– (உ – ம்) வினை:–

வில்லான் = "வில்லோன்" படைத்தான் = "படைத்தோன்"

தொடியாள் = "தொடியோள்" பெயர்த்தாள் = "பெயர்த்தோள்"

நல்லார் = "நல்லோர்" சென்றார் = "சென்றோர்"

பெரியாய் = "பெரியோய்" வந்தாய் = "வந்தோய்"

வினையாலணையும் பெயரிடத்தல்லது வினையிடத்தும் ஒரோவிடத்து ஆ ஓ வாகத் திரிந்து வருதலால், அதனையும் உடன் கூறினார். 'ஆகலும்' என்ற எதிர்மறை உம்மையால், செக்கான் வண்ணான் என ஆ ஓ ஆகாமையும் கொள்க. இன்னும் 'ஆ ஓவாகலும்' என்ற உம்மையை ஆக்கவும்மை யாகக் கொண்டு, கிழவன் – கிழவோன், இருவர்– இருவோர், புலவர் – புலவோர், சிலர் – சிலோர், பலர் – பல்லோர் எனச் சிலவிடத்து அகரம் ஓகாரமாதலையும் அமைத்துக்கொள்க.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– பெயர் வினையிடத்து – பெயரிடத்தும்வினையிடத்தும், ன ள ர ய ஈற்று அயல் ஆ ஓ ஆகலும் – னகர ளகர ரகர யகரவீற்றிற்கு அயலிலுள்ள விகுதிமுதல் ஆகாரம் ஓகாரமாதலும், செய்யுளுள் உரித்து – செய்யுளிடத் துரித்தாம். எ–று.

(உ–ம்.)

(1) "வில்லோன் காலன கழலே" "தொடியோண் மெல்லடி மேலன சிலம்பே" "நல்லோர் யார்கொல்" "வரையாது கொடுத்தோய்" – எனப் பெயரிடத்து ஆகாரம் ஓகாரமாயிற்று.

(2) "படைத்தோன் மன்றவப் பண்பி லாளன்" "நல்லோண் மன்றகூப் பெயர்த்தோளே" "சென்றோ ரன்பிலர்தோழி" "வந்தோய் மன்ற தெண்கடற் சேர்ப்ப" – என வினையிடத்து ஆகாரம் ஓகாரமாயிற்று.

வினையாலணையும் பெயரிடத்தன்றி வினையிடத்தும்

ஒரோவழி ஆ ஓவாகத் திரிந்து வருதலின், அதனையு முடன்கூறினார்.

ஆவோவாகலு மென்ற வும்மையை ஆக்கவும்மையாகக் கொண்டு, "பழமுதிர் சோலை மலைகிழ வோனே" – என ஒரோவழி அகரம் ஒகாரமாதலும் செய்யுளுள் உரித்து எனவே வழக்கிடத்து உரிமையின்றியும் சிறியோர் பெரியோர் நல்லோர் தீயோர் எனச் சிறுபான்மை வருதலுங் கொள்க.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) பெயர் வினை இடத்து – பெயரிடத்தும் வினையிடத்தும், ன ள ர ய ஈறு – னகர ளகர ரகர யகர ஈற்றிற்கு, அயல் ஆ – அயலிலுள்ள ஆகாரம், ஓ ஆகலும் – ஓகாரமாதலும், செய்யுளுள் உரித்து – செய்யுளிடத்து உரித்தாம். (எ–று)

(பொ–ரை.) பெயரிடத்தும் வினையிடத்தும் னகர ளகர ரகர யகர ஈற்றயல் நின்ற (விகுதிமுதல்) ஆகாரம் ஓகாரமாதலும் செய்யுளிடத்துரித்தாம்.

(உ–ம்.)

வில்லான் – "வில்லோன் காலன கழலே"

தொடியாள் – "தொடியோண் மெல்லடி மேலன சிலம்பே"

நல்லார் – "நல்லோர் யார் கொல்"

கொடுத்தாய் – "வரையாது கொடுத்தோய்"

கொடுத்தாய் – "படைத்தோன் மன்றவப் பண்பிலாளன்"

பெயர்.

பெயர்த்தாள் – "நல்லோண் மன்ற கூப்பெயர்த் தோளே"

சென்றார் – "சென்றோ ரன்பிலர் தோழி"

வந்தாய் – "வந்தோய் மன்ற தெண்கடற் சேர்ப்ப"

வினை

வினையாலணையும் பெயரிடத் தல்லாமல் வினையிடத்தும் ஒரோவிடத்து ஆ ஓ வாய்த் திரிந்து வருதலின் அதனையு முடன்கூறினார். "ஆவோவாலும்" என்ற உம்மையை ஆக்க வும்மையாகக் கொண்டு "மலைகிழவோனே" என அகரம் ஒரோவிடத்து ஒகாரமாகி வரும்.

புலவர் புலவோர், சிலர் – சில்லோர், பலர் – பல்லோர், இருவர் – இருவோர் என வருதலும் அது.

இன்னும் அவ்வும்மையை எதிர்மறையாக்கி, வில்லோன் வில்லான் என ஒன்றே ஆதலுமாகாமையும், செக்கான், வண்ணான் என ஆகாமையும் கொள்க.

## கா. நமச்சிவாய முதலியார்

**பெயர்வினை இடத்து** – பெயரிடத்தும் வினையிடத்தும், **னளரயஈறு** – னகர ளகர ரகர யகர ஈற்றிற்கு, **அயல்** – அயலிலுள்ள, **ஆ** – (விகுதிமுதல்) ஆகாரம், **ஓ ஆகலும்** – ஓகாரம் ஆதலும், **செய்யுளுள்** – செய்யுளிடத்து, **உரித்து** – உரித்தாகும்.

உதாரணம்

| | | | |
|---|---|---|---|
| வில்லான் | – | 'வில்லோன் காலன கழலே' | பெயர் |
| தொடியாள் | – | 'தொடியோள் மெல்லடி மேலவும் சிலம்பே' | |
| நல்லார் | – | 'நல்லோர் யார்கொல்' | |
| கொடுத்தாய் | – | 'வரையாது கொடுத்தோய்' | |
| படைத்தான் | – | 'படைத்தோன் மன்றவப் பண்பி லாளன்' | வினை |
| பெயர்ந்தாள் | – | 'நகூஉப் பெயர்ந்தோளே' | |
| சென்றார் | – | 'சென்றோர் அன்பிலர் தோழி' | |
| வந்தாய் | – | 'வந்தோய் மன்ற தெண்கடற் சேர்ப்ப' | |

வினையாலணையும் பெயரிடத்தல்லாது, வினையிடத்து ஆ, ஒ, வாய்த் திரிந்து வருதல் சிறுபான்மை எனக் கொள்க. 'ஆவோவாகலும்' என்ற உம்மையை ஆக்க உம்மை யாகக் கொண்டு, 'மலைகிழவோனே' என அகரம் (கிழவன்) ஒரோவிடத்து ஓகாரமாகி வருதலுங் கொள்க. வழக்கிடத்தும் சிறியோர், பெரியோர், நல்லோர், தீயோர் எனச் சிறுபான்மை வரும்.

## மோசசு பொன்னையா

பெயர், வினைச் சொற்களின் ஈற்றயல் ஆகாரம் செய்யுளின் கண் ஓகாரமாகத் திரிதலும் உரித்தாகும் எ–று.

எனவே இயற்சொல் வடிவின்கண்ணது ஆகாரமே என்றார்.

எ–டு.

**1. வில்லோன் காலன கழலே தொடியோள்**
**மெல்லடி மேலன சிலம்பே நல்லோர்**
**யார்கொ லளியர் தாமே.**

–செய்யுளியல் பெயரிடத்து ஆஓவாயிற்று.

1.பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்.

2.படைத்தோன் மன்றப் பண்பி லாளன்,

3.சென்றோ ரன்பிலர் தோழி.

–செய்யுளில் வினையிடத்து ஆஓவாயிற்று.

எதிர்மறை உம்மையால், வில்லான், வில்லோன் என ஆகாரம் ஓகாரமாகாமலும், ஆகியும்; செக்கான், வண்ணான் என ஆகாரம் ஓகாரமாகாமலேயும் வருதலைக் கொள்க. 'பழமுதிர் சோலை மலைகிழ வோனே'6 என அகரம் ஓகாரமாதலையும் அதனாலே அமைக்க.

தொல்காப்பியர்

**பாலறி மரபி னம்மூ வீற்றும்**
***ஆவோ வாகுஞ் செய்யு ளுள்ளே***

எனவும்,

**ஆயென் கிளவியு மவற்றொடு கொள்ளும்7**

எனவும் இரு நூற்பாக்களால் விதித்தவற்றை இவ்வாசிரியர் இந்த ஒரு நூற்பாவில் அடக்கிக் கூறினார்.

(2)

**353. உருபும் வினையு மெதிர்மறுத் துரைப்பினும்,**
**திரியா தத்த மீற் றுருபி னென்ப.**

உருபும் வினையும் எதிர் மறுத்து உரைப்பினும்,
திரியா தத்தம் ஈற்று உருபின் என்ப.

urupum viṉaium eṭirmaũuṭṭu uraippiṉum
ṭiriyā ṭaṭṭam īũũu urupu iṉ eṉpa

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Case-endings remain unchanged**

The learned say that the case-endings (of Nouns) and (the terminations of) Verbs remain unchanged even when they assume the Negative form.

## ஒப்புமைப் பகுதி

பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும்
எதிர்மறுத்து மொழியினும் பொருணிலை திரியா
(தொல். சொல்.: 236)

**பெயரும் வினையும் எதிர்மறுத் துரைப்பினும்**
**பொருணிலை திரியா தெச்சக் கிளவி**

**(தொல். சொல்.: 631)**

## மயிலை நாதர்

எ-ன், வேற்றுமை யுருபுகட்கும் வினைச்சொற்கட்கும் ஆவதோர் விதியுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்.: எண் வகை வேற்றுமை உருபுகளும் மூவகை வினைச் சொற்களும் எதிர்மறுத்துச் சொல்லுமிடத்தும் தத்தம் ஈற்றுருபுகளின் வேறுபடா, எ-று.

வ-று.:-

ஆவாராது, மரத்தைக் குறையான், சாத்தனொடு சேரான், தேவர்க்குச் சிறப்பெடான், மலையின் இழியான், சாத்தனது அன்று, ஊர்க்கண் இரான், சாத்தா சாயல் (சாயாதே) என எட்டு வேற்றுமை யுருபும் திரியாது வந்தன. உண்ணான் சாத்தன், 2 (கொடான், கொடாள், கொடார், கொடாது, கொடா, கொடேன், கொடேம், கொடுக்கிலை, கொடுக்கிலீர்) + (சாத்தற்கு) என முற்றுவினை திரியாது வந்தன. (உண்ணாத, தின்னாத) + (அவன், அவள், அவர், அது, அவை, யான், யாம், நீ, நீயிர்) எனப் பெயரெச்சம் திரியாது வந்தன.

இவை, உண்ணா, தின்னாவெனத் திரிவ வன்றோவெனின், அவை, உண்ணாத, தின்னாதவென்பனவற்றைக் குறைத்து வழங்குகின்றாரென்க. இதற்கு முக்காலத்திற்கும் ஒன்றே எதிர்மறையென்க. (செய்யாது) + (வந்தான், வந்தாள், வந்தார், வந்தது, வந்தன, வந்தேன், வந்தேம், வந்தாய், வந்தீர்) என வினையெச்சம் திரியாது வந்தது.

## சங்கர நமச்சிவாயர்

எ-னின், வேற்றுமை உருபுகட்கும் வினைச் சொற்கட்கும் ஆவதோர் இலக்கணம் உணர்-ற்று.

இ-ள்.:- எட்டு வேற்றுமையுருபுகளும் மூவகை வினைச் சொற்களும்

---

பாடவேறுபாடு.:-

1. மீற்றுருபென்ப
2 முற்றுவினைதிரியாது வந்தன
3 கொடாதவை
4 ஏனைவினையெச்சங்களுக்கும் எதிர்மறையுரியவுளவேற் காண்க.

எதிர்மறுத்துச் சொல்லுமிடத்தும் தத்தம் ஈற்றினின்றும் அவ்வவ் வுருபினின்றும் வேறுபடா என்று சொல்லுவர் புலவர், எ– று.

இன்னுருபை ஈறு என்பதன்கண்ணும் கூட்டி எதிர் நிரனிறையாகப் பொருள் கொள்க. உருபின்கண் எதிர்மறுத்தல் அவற்றின் பயனிலைகளை என்க.

**வ–று.:–**

சாத்தன் வாரான், குடத்தை வனையான், வாளால் எறியான், புல்லர்க்கு நல்கான், நிலையின் இழியான், பொருளினது இன்மை, தீயர்கண் சாரான், சாத்தா சாயல் எனவும்; நடவான், நடவாத நடவாது எனவும் வரும்.

'**சொற்றொறும் இற்றிதன்பெற்றி**' (461) என்னும் சூத்திரத் தானே உண்மைக்கு மறையாகிய இன்மை என்னும் பெயர்க்கண்ணும் ஈடு திரியாமை காண்க. நடத்தல், நடவாமை என்றற்றொடக்கத்தன ஈறு திரிந்தன அன்றோ எனின்:– அவை தொழிற்பெயராதலின் திரிந்தன என்க. ஓடாக்குதிரை "ஆனா அறிவு" என்றற்றொடக்கத்தன, ஓடாத ஆனாத என்பனவற்றைக் குறைத்து வழங்கினவன்றி, ஈறு வேறுபட்டன அல்ல என்க.

ஒருவினை நிகழ்வழி அவ்வினைக்குக் கருத்தாவும் செயப்படு பொருளும் முதலியவாகப் பெயர்ப்பொருளை வேற்றுமை செய்து நின்ற உருபுகள் அவ்வினை நிகழாவழியும் அவ்வாறு நிற்றலானும், வினைவிகுதிகளும் அவ்வினை நிகழ்வழி முற்றின்கண் கருத்தாவையும் எச்சங்களின் பெயரொழிபையும் வினையொழிபையும் தந்து நின்றாற்போல் வினை நிகழாவழியும் நிற்றலானும் இங்ஙனம் கூறப்பட்டது என்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், வேற்றுமை உருபுகட்கும் வினைச்சொற்கும் உரியதோர் இயல்பு கூறுகின்றது.

**இ–ள்.:–** **உருபும் வினையும்** – எண் வகை வேற்றுமை உருபுகளும் மூவகை வினைச் சொற்களும், **எதிர்மறுத்து உரைப்பினும்** – எதிர்மறுத்துச் சொல்லுமிடத்தும், **திரியா தத்த மீற்றுருபினென்ப** – தத்தம் ஈற்றுருபுகளின் வேறுபடாவென்று சொல்லுவர் புலவர், எ–று.

**உ–ம்.:–**

ஆ வாராது, மரத்தை வெட்டான், சாத்தனொடு வாரான், சாத்தற்குச் சிறப்பெடான், மலையின் இழியான், சாத்தனது இல்லாமை, ஊரின்கண் வாரான், சாத்தா வாளாவிரு என

வேற்றுமை உருபு திரியாது வந்தன. உண்ணான் சாத்தான், உண்ணாள் சாத்தி, உண்ணார் சாத்தர், கூவாது குயில்கள், பேசா கிளிகள், உண்ணேன் யான், உண்ணேம் யாம், உண்ணாய் நீ, உண்ணீர் நீர் என முற்றுவினை திரியாது வந்தன. உண்ணாத அவன், உண்ணாத அவள், அவர், அது, அவை, யான், யாம், நீ, நீர் எனப் பெயரெச்சம் திரியாது வந்தன. உண்ணாது வந்தான், வந்தாள், வந்தார், வந்தது, வந்தன, வந்தேன், வந்தேம், வந்தாய், வந்தீர் என வினையெச்சம் திரியாது வந்தன.ஒழிந்த குறிப்பு வினைப் பெயரெச்சம் குறிப்பு வினையெச்சங்களுக்கும் எதிர்மறுத்துச் சொல்லுதலும் உரியவுளவேற் காண்க.

உண்ணாத தின்னாத என்னும் பெயரெச்சம் சிறுபான்மை உண்ணா, தின்னா என வரும்.

## விசாகப் பெருமாளையர்

இது, வேற்றுமை யுருபுகளுக்கும் வினைச் சொற்களுக்கும் ஆவதோர் இலக்கண முணர்த்துகின்றது.

**இ–ள்.:– உருபும்** – எட்டு வேற்றுமை யுருபுகளும், **வினையும்** – மூவகை வினைச் சொற்களும், **எதிர்மறுத்து** – எதிர்மறுத்தல் செய்து, **உரைப்பினும்**– சொல்லுமிடத்தும், **தத்தமீற் (றின்)** – தத்தமீற்றினின்றும், **உருபின்** – அவ்வுருபினின்றும், **திரியா** – வேறுபடா, **என்ப** – என்று சொல்லுவர் புலவர், எ–று. (உருபு உருபினின்றும் வினை ஈற்றினின்றும் என எதிர்நிரனிறையாகப் பொருள் கொள்க)

வ–று.:–

சாத்தன் வாரான், குடத்தை வனையான், வாளாலெறியான், புல்லர்க்குக் கொடான், நிலையினீங்கான், பொருளின தின்மை, தீயர்கட்சேரான், சாத்தா போகேல் – எனவும் நடவான் நடவாத நடவாது எனவும் வரும். ஒடாக்குதிரை, இதில் ஒடாதவென்னும் பெயரெச்ச வீறு கெட்டது. உரையிற் கோடலால், நடந்து, நடவாமல், நடவாமை, நடவாமே, என வருகிற வினையெச்சமும், நடத்தல், நடவாமை எனத் தொழிற்பெயரும், உண்ணு, உண்ணேல், உண்ணாதே என வொருமையேவலும் ஈறுதிரிந்தும் வருமெனக் கொள்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

எதிர்மறைக்கண்ணும் வேற்றுமைப்பெயரும் வினையும் பொருணிலை திரியாவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

உருபும் வினையு மெதிர்மறுத் துரைப்பினுந்

திரியா தத்தம் பொருணிலை யென்ப.

(உருபும் வினையும் எதிர்மறுத்து உரைப்பினும்

திரியா தத்தம் பொருள்நிலை என்ப.)

இ–ள்.:– எட்டு வேற்றுமையுருபுகளும் மூவகை வினைச்சொற்களும் எதிர்மறுத்துச் சொல்லுமிடத்தும் தத்தம் பொருணிலை வேறுபடா என்று சொல்லுவர் புலவர், எ–று.

வ–று.:–

சாத்தன் வாரான்; குடத்தை வனையான்; வாளா லெறியான்; புல்லர்க்குக் கொடான்; நிலையினீங்கான்; பொருளின தின்மை; தீயர்கட் சேரான்; சாத்தா போகேல் எனவும், நடவான், நடவாத, நடவாது எனவும் வரும். ஓடாக்குதிரை, இதில் ஓடாதவென்னும் பெயரெச்சவீறு கெட்டது.

பொருணிலைதிரியா வென்றமையால் வினையினீறு திரியவும் பெறும் என்றாராதலின், செய–செய்யாமல், செய்யாமே, செய்யாமல், செய்யாமே, செய்யாமை என வரும் வினையெச்சமும், நடத்தல்–நடவாமை எனத் தொழிற்பெயரும், உண்ணாய்–உண்ணேல்–உண்ணாதே என ஒருமையேவலும், ஈறு திரியினும் பொருணிலை திரியாதே வருமெனக் கொள்க.

"உருபும் வினையு மெதிர்மறுத் துரைப்பினுந் திரியா தத்தமீற்றுருபி னென்ப" எனப் பாடபேதங்கொண்டு "தத்தம் ஈற்றினின்றும் அவ்வவ் வுருபினின்றும் வேறுபடா என்று சொல்லுவர் புலவர்" எனப் பொருள் கூறவாருமுளர். அது பொருந்தாதென்க.

இச்சூத்திரக் கருத்துத்தான் யாது?

இச் சூத்திரக் கருத்து யாதெனின், குடத்தை வனையான், வாளால் எறியான் என்றவழி அவ்வினைகள் நிகழாமையின் குடமும் வாளும் முறையே செயப்படுபொருளுங் கருவியு மாகாவாயினும், எதிர்மறைவினையும் விதி வினையோ டொப்புமை யுடையதாதலின் ஆண்டுவந்த உருபுகளும் செயப்படுபொருள் முதலியவற்றின் மேல்வந்தனவாகவே கொள்ளப்படல் வேண்டுமென வழுவமைத்தவாறும், "செய்த செய்கின்ற" எனவும் "செய்து செய்பு" எனவும் விதிவாய்பாடு பற்றி யன்றிச் செய்யாத, செய்யாது என எதிர்மறை வாய்ப்பாடு பற்றியுங் கூறாமையான் அவையும் அவ்வெச்சப் பொருண்மையிற் றிரியாது பெயரும் வினையுங் கொள்ளுமென முற்கூறாதொழிந்ததைக் ஈண்டுக் கூறியவாறுமாமென்க.

## முக்வை இராமானுச கவிராயர்

இது, வேற்றுமை யுருபுகளுக்கும் வினைகளுக்கும் மாவதோரி லக்கண முணர்த்திற்று.

**இ—ள்.:** **உருபும்வினையும்** – எட்டு வேற்றுமை யுருபுகளும் மூவகை வினைச் சொற்களும், **எதிர்மறுத்துரைப்பினும்** – எதிர் மறுத்துச் சொல்லினும், **தத்த மீற்றுருபின்** – தத்தம் ஈற்றிலே நின்றுவினையும் – அந்தந்த உருபிலே நின்று உருபும், **திரியாவென்ப** – வேறுபடாவென்று சொல்லுவர் புலவர், எ—று.

இன்உருபை; ஈற்று என்ற இடத்துங் கூட்டுக. உருபும் வினையுமென நிறுத்தியபடியே, தத்தம் முருபின் உருபும் ஈற்றின் வினையுந் திரியா எனின் முறைநிரனிறைப் பெருள்கோள். தத்தம் மீற்றினுருபின் என மாறிக் கூறலால் இது எதிர் நிரனிறைப் பொருள்கோள், உருபின்கண் எதிர்மறுத்தல் அவற்றின் பயனிலைகளையெனக் காண்க.

வ—று.:–

சாத்தன் வாரான்– குடத்தை வனையான், வாளால் எறியான், புலவர்க்கு நல்கான், நிலையின் இழியான், பொருளினது இன்மை, தீயர்கட் சாரான், சாத்தா சாயாதை எனவும், நடவான், நடவாத, நடவாது எனவும் வரும். ஓடாக்குதிரை, ஆனாவறிவு என்றாற் போல்வன, ஓடாத – ஆனாத, என்பவற்றைக் குறைத்து வழங்கின அன்றி ஈறு திரிந்தன வல்லவென்க.

நடவான் என்பது நடந்தான் நடக்கின்றான் நடப்பான் என்பனவற்றிற்கும், நடவாத என்பது நடந்த நடக்கின்ற என்பவற்றிற்கும், நடவா என்பது நடக்கும் என்பதற்கும், நடவாது – என்பது நடந்து– நடவூ, நடவா – நடக்குபு என்பன வற்றிற்கும், செய்யாது செய்யாமல் செய்யாமை என்பன செய்தென என்பதற்கும், செய்யாமல், செய்யாமை என்பன செய என்பதற்கும், செய்யாமைக்கு என்பது செய்யியர்– செய்யிய செயற்கு செய என்பனவற்றிற்கும். செய்யாவிடின் என்பது செயின் என்பதற்கும், மறையெனவும், செய்யாதபின், செய்யாதமுன், செய்யாக்கால் செய்யாக்கடை செய்யாவழி, செய்யாவிடத்து எனப்பின் முதலியவற்றிற்கும் செய்வான், செய்பான், செய்பாக்கு என்பனவற்றிற்கு செய்தாதொழிவான் என்பது மறை எனவும், நல்ல சாத்தன் என்னும் குறிப்புப் பெயரெச்சத்திற்குப் பொல்லாச் சாத்தன் என்பது மறை எனவுங் காண்க. இனி, செய்யும் என்னும் முற்றிற்குச் செய்யானவன், செய்யாதது என மறை வருதலுங் கொள்க.

பிறவுமன்ன. ஓர்வினை நிகழும்போது அதற்குக் கருத்தாவுஞ் செயப்படுபொருளும் முதலியவாகப் பெயர் பொருளை வேற்றுமை செய்து நின்ற உருபுகள் வினை நிகழாத போதுமவ்வாறு நிற்றலாலும் வினை விகுதிகளும் வினை நிகழும்போது முற்றின்கட் கருத்தாவையும் எச்சங்களிற் பெயர்க் குறையையும் வினைக் குறையையும் தந்து நிற்றல் போல வினை நிகழாத போதுந் தந்து நிற்றலாலும் இவ்வாறு சொல்லப்பட்டன என்க. இதனுட் பயனிலை குறைந்து நின்றது.

"எதிர்மறுத்து மொழியினுந் தத்த மரபிற்ற
பொருணிலை திரியா வேற்றுமைச் சொல்லே"

எனவும்,

"பெரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும்
எதிர்மறுத்து மொழியினும் பொருணிலை திரியா"

எனவும் ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியதுங் காண்க. முற்றுச் சொற்கு மறை இலேசினால் தழுவினார்.

## கா. கோபாலாசாரியர்
## தி.கோ. ரங்காசாரியர்

**உரை :–** **உருபும்** – எட்டுவேற்றுமை உருபுகளும், **வினையும்** – மூவகை வினைச்சொற்களும், **எதிர்மறுத்து உரைப்பினும்** – எதிர்மறையாகச் சொல்லுமிடத்தும், **தத்தம் ஈறு உருபின்** – தந்தமது விகுதியினின்றும் தந்தமது உருபினின்றும், **திரியா** – வேறுபடா, **என்ப** – என்று சொல்லுவர் (புலவர்)

**குறிப்பு :–**

உருபு உருபினின்றுத் திரியாவெனவும், வினை ஈற்றினின்றுந் திரியாவெனவும் எதிர் நிரனிறையாகப் பொருள் கொள்க. உருபில் எதிர்மறுத்தல் அவற்றின் பயனிலைகள் என்றறிக.

**உதாரணம்**

| பெயர் | | வினை |
|---|---|---|
| 1. இராமன் வாரான் | 5. நிலையின் நீங்கான் | 1. நடவான் |
| 2. குடத்தைவனையான் | 6. பொருளினது இன்மை | 2. நடவாத |
| 3. வாளால்எறியான் | 7. தீயர்கண்சேரன் | 3. நடவாக்கால். |
| 4. தீயோர்க்குக்கொடான் | 8. இராமாபோகேல். | |

(என எட்டு வேற்றுமை யுருபுகளும் மூவகை வினைச்சொற்களின் விகுதிகளும் எதிர்மறையிலும் திரியாவாயின)

'ஓடாக்குதிரை' என்றாற்போல்வன 'ஓடாத' என்பது ஈறுகெட்டு வழங்கினவன்றி ஈறு திரிந்தன அன்றென்க.

உரையிற்கோடல் என்னும் உத்தியால் செய்ய – செய்யாமல், செய்யாது, செய்யாமே, செய்யாமை என வினையெச்சமும்; உண்ணாய் – உண்ணேல், உண்ணாதே என ஒருமை யேவலும் மற்றுஞ் சிலவும் ஈறுதிரிந்தும் வருமெனக்கொள்க.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.: **உருபும் வினையும்** – எட்டு வேற்றமை யுருபுகளும் மூவகை வினைச் சொற்களும், **எதிர்மறுத்து உரைப்பினும்** – எதிர் மறுத்துச் சொல்லுமிடத்தும், **தத்தம் ஈற் (றின்) உருபின் திரியா என்ப**–தத்த மீற்றினின்றும் அவ்வவ்வுருபினின்றும் வேறுபடா என்று சொல்லுவர் புலவர், எ–று.

உருபு உருபினின்றும், வினை ஈற்றினின்றும் என எதிர் நிரனிறையாகப் பொருள் கொள்க. உருபின்கண் எதிர்மறுத்தல் அவைகளின் பயனிலைகளை யெனக் காண்க.

வ–று.:–

சாத்தன் வாரான்; குடத்தை வனையான்; வாளா லெறியான்; புல்லர்க்குக் கொடான்; நிலையினீங்கான்; பொருளின தின்மை; தீயர்கட் சேரான்; சாத்தா போகேல்; எனவும், நடவான் நடவாத, நடாவது எனவும் வரும். ஒடாக்குதிரை. இதில், ஓடாதவென்னும் பெயரெச்சவீறு கெட்டது.

உரையிற் கோடலால், செய – செய்யாமல், செய்யாமே, செய்யாமை எனவரும் வினையெச்சமும், நடத்தல் – நடவாமை எனத் தொழிற்பெயரும், உண்ணாய் – உண்ணேல், உண்ணாதே என ஒருமையேவலும், ஈறு திரிந்தும் வருமெனக் கொள்க.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். **உருபும் வினையும்** – எட்டு வேற்றுமையுருபுகளும் மூவகை வினைச் சொற்களும், – **எதிர்மறுத்து உரைப்பினும்** – எதிர்மறுத்துச் சொல்லுமிடத்தும், **தத்தம்ஈற் (றின்) உருபின் திரியா என்ப** – தத்தமீற்றினின்றும் அவ்வவ்வுருபினின்றும் வேறுபடா என்று சொல்லுவர் புலவர். எ–று.

உருபு உருபினின்றும், வினை ஈற்றினின்றும் என எதிர் நிரனிறையாகப் பொருள் கொள்க.

உருபின்கண் எதிர்மறுத்தல் அவைகளின் பயனிலைகளை யெனக் காண்க.

வ–று.:–

சாத்தன் வாரான்; குடத்தை வனையான்; வாளாலெறியான்; புல்லர்க்குக் கொடான்; நிலையினீங்கான்; பொருளினதின்மை தீயர்கட்சேரான்; சாத்தா போகேல் எ–ம். நடவான், நடவாத, நடவாது, எ–ம். வரும், ஓடாக்குதிரை, இதில் ஓடாதவென்னும் பெயரெச்சவீறு கெட்டது.

உரையிற்கோடலால், செய் – செய்யாமல், செய்யாமே, செய்யாமை என வரும் வினையெச்சமும், நடத்தல் – நடவாமை எனத் தொழிற்பெயரும்; உண்ணாய் – உண்ணேல், உண்ணாதே என ஒருமையேவலும் ஈறு திரிந்தும் வருமெனக் கொள்க. (சூத்) எதிர்மறுத்து மொழியினுந் தந்தமரபிற், பொருணிலைதிரியா வேற்றுமைச் சொல்லே. எ–ம். பெயரெஞ்சுகிளவியும் வினையெஞ்சுகிளவியு மெதிர்மறுத்து மொழியினும் பொருணிலைதிரியா. எ–ம். ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியதுங் காண்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: உருபும் – எட்டு வேற்றுமை யுருபுகளும், **வினையும்** – மூவகை வினைச் சொற்களும், **எதிர் மறுத்து உரைப்பினும்** – எதிர்மறையாகச் சொல்லுமிடத்தும், **தம்தம் ஈறு உருபின்** – தத்தமது விகுதியினின்றும் தம் தமது உருபினின்றும், **திரியா** – வேறுபடா, **என்ப** என்று சொல்வர், புலவர், எ–று.

உருபு உருபினின்றும் தியாவென்றும், வினை ஈற்றினின்றும் திரியா வென்றும் எதிர்நிரனிறையாகப் பொருள் கொள்க. உருபில் எதிர்மறுத்தல், அவற்றின் பயனிலைகளிலெனக் காண்க.

உ–ம்.:–

சாத்தன் வாரான், குடத்தை வனையான், வாளால் எறியான், புல்லர்க்குக் கொடான், நிலையின் நீங்கான், பொருளினது இன்மை, தீயர் கண் சேரான், சாத்தா போகேல் என முறையே எட்டு வேற்றுமையுருபுகளும் எதிர்மறையிலும் தம்தம் உருபு மாறுபடாவாயின. நடவான், நடவாத, நடவாக்கால் என முறையே மூவகை வினைச் சொற்களும் எதிர்மறையிலும் தம் தம் விகுதி மாறுபடலாயின.

**உரையிற்கோடலால்,** செய்ய – செய்யாமல், செய்யாது, செய்யாமே, செய்யாமை என வினையெச்சமும்; நடத்தல் – நடவாமை என தொழிற் பெயரும்; உண்ணாய், – உண்ணேல், உண்ணாதே என ஒருமையேவலும்; மற்றும் சிலவும் ஈறு திரிந்தும் வருமெனக் கொள்க.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– உருபும் வினையும் – எட்டு வேற்றுமையுருபுகளும் மூவகை வினைச்சொற்களும், எதிர்மறுத்து உரைப்பினும் – எதிர்மறுத்துச் சொல்லுமிடத்தும் – தத்தம் ஈற் (றின்) உருபின் – தத்தம் ஈற்றிலே நின்று (வினையும்) அவ்வவ்வுருபிலே நின்று (உருபும்), திரியா என்பவேறுபடா என்று சொல்லுவர் புலவர். எ–று.

உருபு உருபினின்றும், வினை ஈற்றினின்றும் திரியா என் எதிர் நிரனிறையாகப் பொருள் கொள்க.

'எண்வகை வேற்றுமை யுருபுகளும் மூவகை வினைச்சொற்களும் எதிர்மறுத்துச் சொல்லுமிடத்தும் தத்தம் ஈற்றுருபுகளின் வேறுபடா' என ஆற்றொழுக்காகப் பொருள்கொண்டார் மயிலைநாதர். ஈண்டு ஈற்றுருபு என்றது ஈற்றுருவம் என்னும் பொதுப்பொருளில். 'வினையுருபு' என வழங்கலும் காண்க.

உருபின்கண் எதிர்மறுத்தல் அவைகளின் பயனிலைகளை யெனக் காண்க.

(உ–ம்.)

சாத்தன் வாரான்; குடந்தை வனையான்; வாளா லெறியான்; புல்லலர்க்குக் கொடான்; நிலையினீங்கான்; பொருளின தின்மை; தீயர்கட் சேரான்; சாத்தா போகேல் – என முறையே எட்டு வேற்றுமை யுருபுகளும் எதிர்மறையிலும் தத்தம் உருபு வேறுபடாவாயின.

நடவான், நடவாத, நடவாது – என முறையே மூவகை வினைச்சொற்களும் எதிர்மறையிலும் தத்தம் விகுதி வேறுபடாவாயின.

ஓடாக்குதிரை ஆனா அறிவு – என்னாற் போல்வன, ஓடாத ஆனாத என்பவை ஈறுகெட்டு வழங்குவன வன்றி ஈறுதிரிந்தன அல்ல என்பதறிக.

உரையிடற் கோடலால், செய – செய்யாமல், செய்யாமே, செய்யாமை எனவரும் வினையெச்சமும், நடத்தல் – நடவாமை எனத் தொழிற்பெயரும், உண்ணாய் – உண்ணேல், உண்ணாதே என ஒருமையேவலும், வேறு சிலவும் ஈறு திரிந்தும் வருமெனக்கொள்க.

## கா. நமச்சிவாய முதலியார்

உருபும் – (எட்டு வேற்றுமை) உருபுகளும், **வினையும்** – (வினைமுற்று,

வினையெச்சம், பெயரெச்சம் ஆகிய மூவகை) வினைச்சொற்களும், எதிர்மறுத்து – எதிர்மறுத்தல் செய்து, உரைப்பினும் – சொல்லுமிடத்தும், தத்தம் ஈற்றின் – தத்தம் ஈற்றினின்றும், உருபின் – அவ்வுருபினின்றும், திரியா – வேறுபடா, என்ப – என்று சொல்லுவர் புலவர்.

உருபு உருபினின்றும், வினை ஈற்றினின்றும் என எதிர் நிரனிறையாகப் பொருள் கொள்க. உருபின்கண் எதிர்மறுத்தல் அவைகளின் பயனிலைகளை எனக் கொள்க.

**உதாரணம்**

உருபு எதிர்மறுத்தல் :

| | |
|---|---|
| சாத்தன் வாரான் | நிலையினீங்கான் |
| குடத்தை வனையான் | பொருளினதின்மை |
| வாளால் எறியான் | தீயர்கட் சேரான் |
| புல்லர்க்குக் கொடான் | சாத்தா போகேல் |

வினை எதிர்மறுத்தல் :

நடவான், நடவாது, நடவாத. உடன்பாட்டுச் சொற்களில் உள்ளவாறே ஈறுதிரியாதிருத்தல் காண்க.

ஓடாக் குதிரை – இதில் ஓடாத என்னும் பெயரெச்ச ஈறு கெட்டது.

**உரையிற் கோடலால்,** நடந்து – நடவாமல், நடவாமை, நடவாமே என வினையெச்சமும், நடத்தல் – நடவாமை எனத் தொழிற் பெயரும், எண்ணாய் – எண்ணேல், எண்ணாதே என ஒருமை யேவலும் ஈறு திரிந்தும் வரும் எனக் கொள்க.

## மோசசு பொன்னையா

வேற்றுமை உருபுகளும், வினைச் சொற்களும் எதிர்மறுத்துச் சொல்லப்படு மிடத்தும் முறையே தத்தம் உருபினின்றும், ஈற்றினின்றும் வேறுபடா, எ–று.

இஃது எதிர்நிரனிறை . உருபு உருபினின்றும், வினை ஈற்றினின்றும் திரியா என முடிக்க உருபின்கண் எதிர் மறுத்தல் அவ்வவற்றின் பயனிலைகளில் அமையும் என்க.

எ–டு.

1. சாத்தன் வாரான்; குடத்தை வனையான்; வாளால் எறியான்; இல்லார்க்குக் கொடான்; நெறியின் நீங்கான்;

பொருளது இன்மை; வீட்டின்கண் இரான்; சாத்தா வாரால்.

– உருபுகள் எதிர்மறுத்துச் சொல்லப்பட்டன.

2. நடவான்; நடவாத; நடவாக்கால்.

–வினைகள் எதிர்மறுத்துச் சொல்லப்பட்டன.

உரையிற் கோடலால், செய்யாமல், செய்யாமே, செய்யாமை என எதிர்மறுத்துச் சொல்லப்படும் செயவென் வினையெச்சங் களையும், உண்ணேல், உண்ணாதே என இவ்வாறு எதிர்மறையில் ஈறு திரிந்து வருவனவற்றையும் அமைக்க.

வினைநிகழ்ச்சியின்கண் பொருள்களை வினைமுதல், செயப்படு பொருள் முதலியனவாக வேற்றுமை செய்யும் உருபுகள், வினைநிகழாவிடத்தும் அவ்வாறே நிற்பதையும்; வினைநிகழ்ச்சியின்கண் வினைகள் முற்றாயின் வினை முதலையும், எச்சங்களாயின் முடிக்கும் பெயர், வினைச் சொற்களையும் தந்து நிற்பதேபோல், வினை நிகழாவிடத்தும் தந்து நிற்பதையும் இந்நூற்பாவால் அமைத்தார் எனக் கொள்க.

தொல்காப்பியர்,

எதிர்மறுத்து மொழியினுந் தத்த மரபிற்
பொருணிலை திரியா வேற்றுமைச் சொல்லே

என வேற்றுமை மயங்கியலிலும்,

பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும்
எதிர்மறுத்து மொழியினும் பொருணிலை திரியா

என வினையியலிலும் அமைத்துக் கூறியுள்ளவற்றை இந்த நூற்பாவால் இவ்வாசிரியர் தொகுத்துரைத்தார்.

(3)

**354. உருபுபல வடுக்கினும் வினைவே றடுக்கினும்,
ஒருதம் மெச்ச மீறுற முடியும்.**

உருபு பல அடுக்கினும் வினை வேறு அடுக்கினும்
ஒருதம் எச்சம் ஈறு உற முடியும்.

urupu pala atukkin um vinai vēūu atukkin um
oru ṭam essam īūu uūa mutiyum

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Several cases or verbs**

Though there may be several Cases or Verbs (in the same sentence), there can but one governing (or supplementing) word.

## ஒப்புமைப் பகுதி

பன்முறை யானும் வினைஎஞ்சு கிளவி
சொன்முறை முடியாது அடுக்குந வரினும்
முன்னது முடிய முடியுமன் பொருளே

(தொல். சொல்.: 233)

## மயிலை நாதர்

இதுவுமது.

இ-ள்.: உருபொன்றே அடுக்கியும் பல மயங்கி யடுக்கியும் வினைச் சொற்கள் மூன்றும் தம்முள் விரவாது வேறுவேறடுக்கியும் வந்தாலும், தத்தமெச்சம்[1] இறுதியிலே யொன்றுவர அதனோடு அனைத்தும் முடிவனவாம், எ- று.

'வினைவேறடுக்கினும்' எனவே உருபுகள் தம்முள் மயங்கியுமடுக்கு மென்க.

வ-று.:

"கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவாள்
உட்குடையா[1] ளூரா ணியல்பினாள் - உட்கி
இடனறிந் தூடி யினிதி னுணரு
மடமொழி மாதராள் பெண்"

பாடவேறுபாடு.:-

1. இறுதியிலே வரின் அதனோடாதியினடுக்கின வுருபுகளும் வினைகளுந் தமக்கு ஏற்ற பெயரும் வினையும் கொண்டு முடிவனவாமென்றவாறு

"காலார் கழலார் கடுஞ்சிலையார் கைக்கொண்ட
வேலார் [2] வெருவந்த தோற்றத்தார் – காலன்
கிளர்ந்தாலும் போல்வார் கிணைப்பூசல் கேட்டே
உளர்ந்தார் நிரைப்பெயர்வு முண்டு"

என [3] இவை ஒருருபு அடுக்கித் தமக்கேற்ற ஒருபெயரும் ஒரு வினையும் இறுதிவர முடிந்தன. [4] யானையது கோட்டை நுனிக்கட்பொருட்கு வாளாற் குறைத்தானென இது [5] பலவும் மயங்கி யடுக்கி இறுதி ஒருவினை கொண்டு முடிந்தது. பிறவுமன்ன.

(உண்டான் தின்றான் ஓடினான் பாடினான்) + (சாத்தன்)

"வருதி பெயர்தி வருந்துதி துஞ்சாய்
பொருதி புலம்புதி நீயுங்–கருதுங்காற்"

"[6]பண்டினை யல்லையாற் பாழித்தோட் கோதையைக்
கண்டனையோ வாழி கடல்"

எனவும்,

"இளையண் மெல்லியண் மடந்தை, அரிய சேய பெருங்கான் யாறே" ("எம்மூரல்லது" என்னும் செய்யுள்) எனவும் வினை வினைக்குறிப்பு முற்று விரவாது அடுக்கி ஒரு பெயரொடு முடிந்தன.

"நெல்லரியு மிருந்தொழுவர், செஞ்ஞாயிற்று வெயின் முனையிற், றெண்கடற்றிரை மிசைப்பாயுந்து, திண்டிமில் வன்பரதவர், வெப்புடைய மட்டுண்டு, தண் குரவைச் சீர்தூங்குந்து, தூவற் கலித்த தேம்பாய் புன்னை, மெல்லிணர்க்கண்ணி மிலைந்த மைந்தர், எல்வளை மகளிர் தலைக்கை தருஉந்து, வண்டுபட மலர்ந்த தண்

பாட வேறுபாடு:-

1. (1) ளூர்காணியல்பு, (2) ளூர்நாணியல்பு

2. வெருவருதோற்றத்தார்

3.இவை மாதராள் பெண்ணென்றும், வெருவெரு தோற்றத்தார் உளர்ந்தாரென்றும் எழுவாயுருபு பலவடுக்கித்

4.கிணைப்பூசல்– பறைமுழக்கம். யானையது

5.பலமயங்கி

6.(1) பண்டையை, (2) பண்டின்னை

ணறுங் கானல், முண்டகக் கோதை யொண்டொடி மகளிர், இரும்பனையின் குரும்பை நீரும், பூங்கரும்பின் றீஞ்சாறும்; ஓங்குமணற் குவவுத் தாழைத், தீநீரோ டுடன்விராய், முந் நீருண்டு முந்நீர் பாயும், தாங்கா விளையுணல்லூர் கெழீஇய"

எனவும்,

"சிறிய பெரிய நிகர்மலர்க் கோதைதன்", 'சீறடிப்பேரகல்'

[1]எனவும் பெயரெச்ச வினையும் குறிப்பும் அடுக்கிவந்து ஒரு பெயர்கொண்டன.

"சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் றேற்றம்போல்
மெல்லவே கருவிருந்தீன்று மேலலார்
செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூற்
கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே"

"நாளன்று போகிப் புள்ளிடைதட்பப்
பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்
வறிது [2] பெயர் குவ ரல்லர்"

எனவும் வினையெச்சவினையும் குறிப்பு மடுக்கி ஒருவினை கொண்டன.[3]

[1]"எனைத்துமுற் றடுக்கினு மனைத்துமொரு பெயர்மேல்
நினைத்துக்கொள நிகழு நிகழ்த்திய முற்றே
வினையெஞ்சு கிளவியும் பெயரெஞ்சு கிளவியும்
பலபல வடுக்கினு முற்று [2] மொழிப்படிய"

என்பது அகத்தியம்.

---

பாட வேறுபாடு:–

1.எனவும் படர்க்கை வினைமுற்றும் முன்னிலை வினைமுற்றும் வினைக்குறிப்பு முற்றும் விரவா தடுக்கி, 'சாத்தன், கடல், மடந்தை' எனத் தமக்கேற்ற பெயர்கொண்டு முடிந்தன.

2. எனவும் 'பாயுந்து........ பாயுந்து' செய்யுமென்ற பெயரெச்சம் விளையுளென்ற பெயர்கொண்டும், சிறிய பெரிய என்ற பெயரெச்ச வினைக்குறிப்பு

3. போகுவரல்லர் எனவும் 'மெல்லவே கருவிருந்து' என்னும் செய்தென்ற வினையெச்சமும், நாளன்றென்ற நாளன்றி என்ற வினையெச்சக் குறிப்பும் அடுக்கிவந்து ஒருவினை கொண்டன. வினையாவது 'காய்த்த' என்றதும் 'போகுவரல்லர்' என்றதுமாம். சொல் – நெல், தட்ப – தடுப்ப.

1.“ஏனை முற்றடுக்கினும்......

2.மொழிப்படியே” என்பது அகத்தியம்.

## சங்கர நமச்சிவாயர் சிவஞான முனிவர்

எ–னின், இதுவும் அது.

இ–ள்.: வேற்றமையுருபுகள் விரிந்தும் தொக்கும் தம்முள் விரவிப் பல அடுக்கிவரினும், வெவ்வேறு பல அடுக்கிவரினும், மூவகை வினைச் சொற்களும் தம்முள் விரவி அடுக்குந் தன்மைய அன்றி வெவ்வேறு பல அடுக்கிவரினும், தத்தம் எச்சம் இறுதியில் ஒன்று வர அதனோடு அனைத்தும் முடிவனவாம், எ–று.

பல என்பதனை வேறு என்பனோடும் கூட்டுக.

இவ்விருவகை அடுக்கும் படைபடை என்றாற்போல அடுக்கிய அல்ல என்பார், பல அடுக்கினும் என்றார். வினை வேறுபல அடுக்கினும் என விதந்தாற்போல உருபிற்கு விதவாமையின் அவை விரவியும் வெவ்வேறு பல அடுக்கும் என்பது பெற்றாம்.

வ–று.:–

‘சாத்தன் யானைபது கோட்டை நுனிக்கண் பொருட்கு வாளால் குறைத்தான்’ என்பன உருபுகள் விரவிப் பல அடுக்கிக் குறைத்தான் என்னும் ஒருவினை கொண்டன. இவற்றுள் ஆறனுருபு அடுக்கன்று; வினை அதற்கு எச்சமன்று ஆதலானும் கோடு என்னும் பெயர்கொண்டமையானும் என்க. சாத்தன் என்னும் பெயர்வேற்றுமை குறைத்தற்கு வினை முதலைக் காட்டவந்தது; அன்றி அடுக்கு என்று கோடலும் ஒன்று. சாத்தனையும் கொற்றனையும் தேவனையும் பூதனையும் வாழ்த்தினான் எனவும், சாத்தனுக்கும் கொற்றனுக்கும் தேவனுக்கும் பூதனுக்கும் தந்தை எனவும் இரண்டாம் உருபும் நான்காம் உருபும் வேறுபல அடுக்கி வாழ்த்தினான் என்னும் ஒரு வினையும், தந்தை என்னும் ஒரு பெயரும் முறையே கொண்டன. வாள் கைக்கொண்டான் எனவும், அருள் அறம் உடையான் எனவும் உருபு தொக்கு அவ்வாறு வந்தன. உண்டான் தின்றான் ஓடினான் பாடினான் சாத்தன்,

“வருதி பெயர்தி வருந்துதி துஞ்சாய்
பொருதி புலம்பதி நீயும் – கருதுங்கால்
பண்டினை யல்லையாற் பாழித்தோட் கோதையைக்
கண்டனையோ வாழி கடல்”

எனவும்,

"இளையள் மெல்லியல் மடந்தை"

"அரிய சேய பெருங்கான் யாறே"

எனவும் வினைமுற்றும் குறிப்புமுற்றும் பெயரெச்சங்களோடு விரவாது வேறுபல அடுக்கி, சாத்தன் நீ மடந்தை யாறு என்னும் ஒரு பெயர் முறையே கொண்டன. கற்ற கேட்ட பெரியோர் எனவும்,

"சிறிய பெரிய நிகர்மலர்க் கோதை"

எனவும் பெயரெச்சவினையும் குறிப்பும் வினை வினைக்குறிப்பு முற்றோடு விரவாது வேறுபல அடுக்கிப் பெரியோர், மலர்க்கோதை என்னும் ஒரு பெயர் முறையே கொண்டன. கற்றுக்கேட்டு அறிந்தார் எனவும், விருப்பின்றி வெறுப்பின்றி இருந்தார் எனவும் வினையெச்சவினையும் குறிப்பும் வினையோடு முடியும் என விதந்த வினைமுற்றுக்களோடு விரவாது வேறு பல அடுக்கி அறிந்தார் இருந்தார் என்னும் ஒருவினை முறையே கொண்டன. பிறவும் அன்ன.

"சொல்லரும் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே"

என்னும் வினையெச்சங்கள் *ம்கருவிருந்து ஈன்று என்பதன்றிக் கருவிருந்து தலைநிறுவி என முடியாது ஆகலான் அவற்றள்ம்* ஒன்றற்கொன்று முடிபாய்த் தொடர்தலானும்,

"நாளன்று போகிப் புள்ளிடை தட்பப்
பதனன்று புக்குத் திறன்று மொழியினும்
வறிது பெயர்குநர் அல்லர் நெறிகொள"

என்னும் வினையெச்சக் குறிப்புகள் ஆங்காங்கு முடிதலானும் இவை அடுக்காகா என்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், இதுவும் எண் வகை வேற்றுமை உருபுகட்கும் வினைச் சொற்குமுரியதோர் இயல்பு கூறுகின்றது.

இ–ள்:– உருபுபல வடுக்கினும்... ... வினைச்சொற்கள் மூன்றும் தம்முள்

விரவாது வேறு வேறடுக்கி வந்தாலும், **ஒருதம் மெச்சம்** – தத்த மெச்சமாகிய பெயர் வினைகளினொன்று, ஈறுற முடியும் – இறுதியிலே வர அதனோடு அனைத்தும் முடிவனவாம், **எ–று.**

**உ–ம்.:–**

கட்கினியாள் காதலாள் ஊராள் பெண், காலார் கழலார் வேலார் சேர்ந்தார், வேலால் வாளால் தேரால் குதிரையால் வென்றார் என இவை உருபொன்றே அடுக்கி இறுதி பெயரொடும் வினையொடும் முடிந்தன. யானையது கோட்டை வாளாற் குறைத்தான், கொற்றியர் நல்லூரிற் சாத்தரது மகற்குப் பிள்ளையைக் கொடுத்தார், கொற்றி நல்லூரிற் பூதருடைய மகற்குச் சாத்தி முறை மருமகள் என உருபு பல அடுக்கி இறுதி ஒரு வினை பெயர் கொண்டு முடிந்தன.

உண்டான் தின்றான் ஓடினான் பாடினான்; வருதி பொருதி வருந்துதி பொருந்துதி புலம்புதி நீ; இளையள் மெல்லியள் சிறியள் மடந்தை; அரிய செய்ய தண்ணிய புதிய பெருங்கான் யாறு என வினை வினைக்குறிப்பு முற்று விரவாது அடுக்கி ஒருமைப் பெயர் கொண்டன. வந்த உயர்ந்த துறந்த பெரியோர்; "சிறிய பெரிய நிகர் மலர்க்கோதை" ("சீறடிப் பேரகலெ"னத் தொடங்கும் பாடல்) எனத் தெரிநிலைப் பெயரெச்சமும் குறிப்பு வினைப் பெயரெச்சமும் அடுக்கி ஒரு பெயர் கொண்டன. பிறந்து தவழ்ந்து நடந்து வளர்ந்து தளர்ந்து பெரியோர் ஆயினார்; அவனன்றி இவனன்றி வாரான்.

## விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

**இ–ள்.:** உருபு – வேற்றுமையுருபுகள், **பலவடுக்கினும்–** விரிந்துந் தொக்குந் தம்முள் விரவிப் பல வடுக்கி வரினும், வெவ்வேறு – பல வடுக்கிவரினும், **வினை** – மூவகை வினைச் சொற்களும், **வேறு (பல) வடுக்கினும்** – வெவ்வேறு பல வடுக்கி வரினும், **ஒருதம் மெச்சம்** – தத்தமெச்சமொன்று, ஈறு–இறுதியில், உற–வர, **முடியும்**–அதனோடனைத்து முடியும், **எ–று.**

**வ–று.:–**

அரசனானவன் பகைவனை வாளால் வெட்டினான் என உருபுகள் பலவடுக்கி யொருவினை கொண்டன. சாத்தனையுங் கொற்றனையும் வாழ்த்தினான், சாத்தனுக்குங் கொற்றனுக்குந்

தந்தை, என ஐயுருபுங் குவ்வுருபும் வேறுபல வடுக்கி முறையே யொருவினையும் ஒரு பெயரும் கொண்டன. வாள்கைக் கொண்டான், அருளறமுடையான், என உருபுதொக்கு அவ்வாறு வந்தன. ஆடினான் பாடினான் சாத்தன், இளையண் மெல்லியண் மடந்தை, என வினைமுற்றுங் குறிப்புமுற்றும் வேறுபல வடுக்கி முறையே யொவ்வொருபெயர் கொண்டன. கற்றகேட்ட பெரியோர், கற்றுக் கேட்டறிந்தோர் எனப் பெயரெச்சமும் வினையெச்சமும் வேறுபல வடுக்கி முறையே ஒரு பெயரும் ஒருவினையுங் கொண்டன.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

ஆடுக்கி வரும் உருபுகளும் வினைகளும் எவ்வாறு முடியும்?

உருபுபல வடுக்கினும் வினைவே றடுக்கினும்

ஒருதம் மெச்ச மீறுற முடியும்.

(உருபு பல அடுக்கினும் வினை வேறு அடுக்கினும்

ஒருதம் எச்சம் ஈறு உற முடியும்.)

இ–ள்.:– வேற்றுமையுருபுகள் விரிந்துந் தொக்குந் தம்முள் விரவிப் பலவடுக்கி வரினும் வெவ்வேறு பலவடுக்கி வரினும் மூவகை வினைச்சொற்களும் வெவ்வேறு பலவடுக்கி வரினும் தத்தமெச்ச மொன்று இறுதியில் வர அதனோடனைத்தும் முடியும், எ–று.

இங்கே எச்சமென்றது எதனை?

முடிக்குஞ்சொல்லை.

வ–று.:–

(1) அரசனானவன் பகைவனை வாளால் வெட்டினான் என உருபுகள், விரிந்து, தம்முள் விரவிப் பலவடுக்கி, வெட்டினாரென்னும் ஒருவினை கொண்டன. வாள் கைக்கொண்டான் என உருபு தொக்கு அவ்வாறு வந்தன.

(2) சாத்தனையுங் கொற்றனையும் வாழ்த்தினான் எனவும், சாத்தனுக்குங் கொற்றனுக்குந் தந்தை எனவும், ஐயுருபுங் குவ்வுருபும், விரிந்து, வேறுபலவடுக்கி, வாழ்த்தினா னென்னும் ஒருவினையும் தந்தை யென்னும் ஒருபெயரும் முறையே கொண்டன. அருளறமுடையான் என உருபு தொக்கு, அவ்வாறு வந்தன.

(3) ஆடினான் பாடினான் சாத்தன். எனவும், இளையண் மெல்லியண் மடந்தை. எனவும், வினைமுற்றுங் குறிப்புமுற்றும்,

வேறு பலவடுக்கிச், சாத்தன் மடந்தை என்னும் ஒரு பெயரும் முறையே கொண்டன.

(4) கற்ற கேட்ட பெரியோர் எனவும், நெடிய பெரிய மனிதன். எனவும், தெரிநிலைவினைப்பெயரெச்சமுங் குறிப்புவினைப் பெயரெச்சமும், வேறு பலவடுக்கிப், பெரியோர் மனிதன் என்னும் ஒருபெயர் முறையே கொண்டன.

(5) கற்றுக் கேட்டறிந்தார் எனவும், விருப்பின்றி வெறுப்பின் றியிருந்தார் எனவும், தெரிநிலை வினையெச்சமுங் குறிப்புவினையெச்சமும், வேறு பலவடுக்கி, அறிந்தார் இருந்தார் என்னும் ஒருவினை முறையே கொண்டன.

97. வேற்றுமைச் சொல்லும் முற்றும் எச்சமும் பெயரையும் வினையையுங் கொண்டு முடியுமென்பது முந்திய வியல்களிலே கூறப்பட்டதாகவும் மீளவும் அவற்றிற்கு முடிபு கூறிய தென்னை?

முடிக்குஞ் சொல்லாகிய ஒரு பெயரோடாயினும் வினையோடாயினும் வேற்றுமைச்சொல்லும் வினைச் சொல்லும் தனித்தனி ஒவ்வொன்றே சென்று முடிதல்வேண்டு மென்னும் நியதியின்றிப் பலசென்று முடிதலும் வழுவாகா தென்பது இச்சூத்திரக் கருத்தாம்.

## முகவை இராமானுச கவிராயர்

இதுவுமது.

**இ-ள்.:- உருபு பல அடுக்கினும்** - வேற்றுமை யுருபுகள் விரிந்தாயினுந் தொக்காயினுந் தம்முள் விரவிப்பல அடுக்கிவரினும் வேறு வேறு பல அடுக்கி வரினும், **வினைவேறு அடுக்கினும்** - மூவகை வினைச் சொற்களுந் தம்முள் விரவியடுக்குந் தன்மையவன்றி வேறுவேறுபல அடுக்கிவரினும், (விரவுதல் - கலத்தல்) **ஒருதம் மெச்ச மீறுற முடியும்** - அவற்றவற்றின் எச்சம் இறுதியில் ஒன்று வர அதனோடு அனைத்தும் முடியும், எ-று.

பல என்பதை வேறு என்பதனோடுங் கூட்டுக. வினைவேறு பலவடுக்கினும் எனக் கூறியது போல உருபிற்குக் கூறாத தினாலே, அவை விரவியும் வேறுவேறு பல அடுக்கியும் வருமெனக் கொள்க.

வ-று.:-

'சாத்தன் யானையது கோட்டை நுனிக்கட் பொருட்கு வாளாற் குறைத்தான்' என உருபுகள் விரவிப்பல அடுக்கிக், குறைத்

தான் என்னும் ஒருவினை கொண்டன. இவற்றுள், அது உருபு அடுக்கி நின்றதன்று. 'சாத்தனையுங் கொற்றனையுந் தேவனையும் பூதனையும் வாழ்த்தினான்', 'சாத்தனுக்குங் கொற்றனுக்குந் தேவனுக்கும் பூதனுக்குந் தந்தை' என இரண்டனுருபும் நான்கனுருபும் வேறுபல அடுக்கி, வாழ்த்தினான் என்னும் ஓர் வினையும், தந்தை என்னும் ஓர் பெயரும் முறையே கொண்டன. வாள்கைக்கொண்டான், அருளறமுடையான் என உருபு தொக்கு அவ்வாறு வந்தன. உண்டான் தின்றான் ஓடினான் பாடினான் – சாத்தன் எனவும், வருதி பெயர்தி வருந்துதி துஞ்சாய், பொருதி புலம்புதி நீயுங் – கருதுங்காற், பண்டினை யல்லையாற் பாழித்தோட் கோதையைக், கண்டனை யோவாழி கடல் எனவும், 'இளையன் மெல்லியண் மடந்தை அரிய சேய பெருங்கான் யாறே' எனவும் தெரிநிலைமுற்றுங், குறிப்புமுற்றும் விரவாது வேறுபல வடுக்கிச் சாத்தன், நீ, மடந்தை, யாறு என்னும் பெயர் முறையே கொண்டன. 'கற்றகேட்ட பெரியோர்' எனவும் 'சிறிய பெரியநிகர் மலர்க்கோதை' எனவும் தெரிநிலைப் பெயரெச்சமுங் குறிப்புப் பெயரெச்சமும் விரவாது வேறு பலவடுக்கிப், பெரியோர் மலர்க்கோதை என்னுமோர் பெயர் கொண்டன. 'கற்றுக் கேட்டறிந்தான்' எனவும் 'விருப்பின்றி வெறுப்பின்றி யிருந்தா' எனவுந் தெரிநிலை வினையெச்சமுங் குறிப்பு வினையெச்சமும் விரவாதுவேறு பல அடுக்கி, அறிந்தான் இருந்தான் என்னுமோர் வினைமுறையே கொண்டன.

**வெண்பா.:**

**"கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவா**
**ளுட்குடையா ளூர்நாணியல்பினா – ளுட்கி**
**யிடனறிந் தூடி – யினிதி னுணரு**
**மடமொழி மாதராள் பெண்"**

எனவும் ,

**"காலார் கழலார்கடுஞ்சிலையார் கைக்கொண்ட**
**வேலார் வெருவந்த தோற்றத்தார் – காலன்**
**கிளர்ந்தாரும் போல்வார் கிணைப்பூசல் கேட்டே**
**யுளர்ந்தார் நிரைபெயர்வு முண்டு"**

எனவும், வருமிவற்றை ஒரெழுவாயுருபடுக்கித் தமக்கேற்ற ஒருபெயர்ப்பயனிலையும் வினைப்பயனிலையும் இறுதியில் வர முடிந்தனவென்பாரு முளர், அவை முறையே வினைமுற்று வினையெச்சங்கள் அடுக்கி, 'உணருமடமொழிமா தராள்' எனவும் 'உளர்ந்தார்' எனவும், வரும் முடிக்குஞ்சொல்லுக்கு

அடையாய் நிற்றலால் உருபடுக்கிய வன்றென மறுக்க.
"உருபுதொடர்ந்த டுக்கியவேற்றமைக் கிளவி -
யொருசொன் னடைய பொருள்சென் மருங்கே"

எனவும்,
"அவை தாம்
தத்தங் கிளவி யடுக்குந வரினு
மெத்திறத் தானும் பெயர் முடிபினவே"

எனவும்,
"பன்முறை யானும் வினையெஞ்சு கிளவி
சொன்முறை முடியா தடுக்கு ந வரினு
முன்னது முடியமுடியுமன்பொருளே"

எனவுங் கூறிப் பெயரெச்ச வடுக்கை யிலேசினாற்றழுவினார் ஆசிரியர் தொல்காப்பியனாரெனக் காண்க. (சூத்)
"உருபு தொடர்ந் தடுக்கிய வேற்றுமைக் கிளவி
பொருள் சென் மருங்கி னொரு சொல்லான் முடிதலு
முற்றியன்மொழியும் பெயரெஞ்சுகிளவியுந்
தத்தங்கிளவி யடுக்குநவரினும் -
பன்முறையானும் வினை யெஞ்சுகிளவி
சொன்முறை முடியாத தடுக்குநவரினு
முன்னது முடிய முடிதலு மரபே"

எனப் பிறருங் கூறினாரெனக் காண்க. உருபும் வினையும் முடியுமென முடிக்க.

## கா. கோபாலாசாரியர்

## தி.கோ. ரங்காசாரியர்

உரை :- உருபும் - எட்டுவேற்றுமை உருபுகளும், பல அடுக்கினும் - (விரிந்தும் தொக்கும் தம்முள் விரவியாயினும் வெவ்வேறாக வாயினும்) பல அடுக்கி வந்தாலும், வினை-மூவகை வினைச்சொற்களும், வேறு அடுக்கினும் - வெவ்வேறு பல அடுக்கி வந்தாலும், ஒரு தம் எச்சம் - தாம்தாம் கொண்டு முடியும் சொல் ஒன்று, ஈறு உற -இறுதியில்வர, முடியும் - (எல்லாம் அதனோடு) முடியும்.

உதாரணம்

| | |
|---|---|
| அரசனானவன் பகைவரை வாளால் வெட்டினான் | உருபுகள் விரிந்து விரவிப் பல அடுக்கி ஒருவினை கொண்டன. |
| வாள் கைக்கொண்டான் | - உருபுகள் தொக்கு அவ்வாறு வந்தன. |
| இராமனையும் இலக்குமனையும் | ஐ உருபும் குவ்வுருபும் விரிந்து வேறு |

| | |
|---|---|
| வாழ்த்தினான்<br>இராமனுக்கும் இலக்குமனுக்குந் தந்தை. | பல அடுக்கி முறையே ஒரு வினையும் ஒரு பெயருங் கொண்டன. |
| அருளறமுடையான் | – உருபுகள் தொக்கு அவ்வாறு வந்தன. |
| ஆடினான் பாடினான் இராமன்<br>இளையள் மெல்லியள் மடந்தை | வினைமுற்றும் குறிப்பு முற்றும் வேறு பல அடுக்கி முறையே ஒவ்வொரு பெயர் கொண்டன. |
| கற்ற கேட்ட பெரியோர்<br>நெடிய பெரிய மனிதன் | தெரிநிலைப் பெயரெச்சமும் குறிப்புப் பெயரெச்சமும் வேறு பல அடுக்கி முறையே ஒவ்வொரு பெயர்கொண்டன. |
| கற்றுக்கேட்டு அறிந்தான்.<br>விருப்பின்றி வெறுப்பின்றி இருந்தான். | தெரிநிலை வினையெச்சமும்குறிப்புப் பெயரெச்சமும் வேறு பல அடுக்கி முறையே ஒவ்வொரு பெயர்கொண்டன. |

## ஆறுமுக நாவலர்

**இ-ள்.: உருபு பல அடுக்கினும்** – வேற்றுமையுருபுகள் விரிந்துந் தொக்குந் தம்முள் விரவிப் பலவடுக்கி வரினும் வெவ்வேறு பலவடுக்கி வரினும், **வினை வேறு (பல) அடுக்கினும்** – மூவகை வினைச் சொற்களும் வெவ்வேறு பலவடுக்கி வரினும், **ஒரு தம்மெச்சம் ஈறு உற முடியும்** – தத்தமெச்சமொன்று இறுதியில் வர அதனோடனைத்து முடியும், எ–று.

**வ–று.:–**

(1) அரசனானவன் பகைவனை வாளால் வெட்டினான் என உருபுகள், விரிந்து தம்முள் விரவிப் பலவடுக்கி, வெட்டினானென்னும் ஒருவினை கொண்டன. வாள் கைக்கொண்டான் என உருபு தொக்கு அவ்வாறு வந்தன.

(2) 'சாத்தனையுங் கொற்றனையும் வாழ்த்தினான்' எனவும், 'சாத்தனுக்குங் கொற்றனுக்குந் தந்தை' எனவும், ஐயுருபுங் குவ்வுருபும், விரிந்து வேறுபலவடுக்கி, வாழ்த்தினானென்னும் ஒருவினையும் தந்தை யென்னும் ஒரு பெயரும் முறையே கொண்டன. அருளறமுடையான் என உருபு தொக்கு, அவ்வாறு வந்தன.

(3) 'ஆடினான் பாடினான் சாத்தன்' எனவும், 'இளையண் மெல்லியண் மடந்தை' எனவும் வினைமுற்றுங் குறிப்புமுற்றும், வேறு பலவடுக்கிச், சாத்தன் மடந்தை என்னும் ஒரு பெயர் முறையே கொண்டன.

(4) 'கற்ற கேட்ட பெரியோர்' எனவும், 'நெடிய பெரிய மனிதன்' எனவும் தெரிநிலைவினைப் பெயரெச்சமுங் குறிப்பு வினைப் பெயரெச்சமும், வேறுபல வடுக்கிப் பெரியோர் மனிதன் என்னும் ஒரு பெயர் முறையே கொண்டன.

(5) 'கற்றுக்கேட்டறிந்தோர்' எனவும் 'விருப்பின்றி வெறுப்பின்றி யிருந்தார்' எனவும், தெரிநிலை வினை யெச்சமும் குறிப்பு வினையெச்சமும், வேறுபல வடுக்கி, அறிந்தார் இருந்தார் என்னும் ஒருவினை முறையே கொண்டன.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். உருபு பல அடுக்கினும் – வேற்றுமையுருபுகள் விரிந்துந் தொக்குந் தம்முள்விரவிப் பலவடுக்கிவரினும் வெவ்வேறு பலவடுக்கிவரினும், – வினை வேறு (பல) அடுக்கினும் – மூவகைவினைச் சொற்களும் வெவ்வேறு பலவடுக்கிவரினும் – ஒருதம்மெச்சம் ஈறு உற முடியும் – தத்தமெச்சமொன்று இறுதியில் வர அதனோடனைத்து முடியும். எ–று.

வ–று.:–

(1) அரசனானவன் பகைவனை வாளால் வெட்டினான் என உருபுகள், விரிந்து, தம்முள் விரவிப் பலவடுக்கி, வெட்டினா னென்னும் ஒருவினை கொ்ண்டன. வாள்கைக் கொண்டான் என உருபு தொக்கு அவ்வாறு வந்தன.

(2) சாத்தனையுங் கொற்றனையும் வாழ்த்தினான். எ–ம். சாத்தனுக்குங் கொற்றவனுக்குந் தந்தை. எ–ம். ஐயுருபுங் குவ்வுருபும், விரிந்து, வேறுபலவடுக்கி, வாழ்த்தினா னென்னும், ஒரு வினையும் தந்தையென்னும் ஒருபெயரும் முறையே கொண்டன. அருளறமுடையான் என உருபு தொக்கு, அவ்வாறு வந்தன.

(3) ஆடினான் பாடினான் சாத்தன் எ–ம். இளையண் மெல்லியன் மடந்தை. எ–ம். வினைமுற்றுங் குறிப்புமுற்றும், வேறுபல வடுக்கிச், சாத்தன், மடந்தை என்னும் ஒருபெயர் முறையே கொண்டன.

(4) கற்ற கேட்ட பெரியோர், எ–ம். நெடிய பெரிய மனிதன், எ–ம். தெரிநிலைவினைப்பெயரெச்சமுங் குறிப்புவினைப் பெயரெச்சமும் வேறு பல வடுக்கிப் பெரியோர், மனிதன் என்னும் ஒருபெயர் முறையே கொண்டன.

(5) கற்றக் கேட்டறிந்தார், எ–ம். விருப்பின்றி வெறுப்பின்றி யிருந்தார். எ–ம். தெரிநிலை வினையெச்சமுங்

குறிப்புவினையெச்சமும், வேறு பலவடுக்கி, அறிந்தார், இருந்தார் என்னும் ஒருவினை முறையே கொண்டன.

உருபு தொடர்ந்தடுக்கிய வேற்றுமைக்கிளவி, யொரு சொன்னடைய பொருள்சென் மருங்கே. எ–ம். அவைதாம், தத்தங்கிளவியடுக்குநவரினு, மெத்திறத்தானும் பெயர் முடிபினவே. எ–ம். பன்முறையானும் வினையெஞ்சுகிளவி, சொன்முறைமுடியாதடுக்குநவரினு, முன்னது முடிய முடியுமன் பொருளே எனவுங் கூறிப் பெயரெச்சவடுக்கை இலேசினாற்றழுவினார் ஆசிரியர் தொல்காப்பியனாரெனக் காண்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.:–** உருபு – எட்டு வேற்றுமை யுருபுகளும், பல **அடுக்கினும்** – (விரிந்தும் தொக்கும் தம்முள் விரவியாயினும் வெவ்வேறாக வாயினும்) பல அடுக்கி வந்தாலும், **வினை** – (மூவகை) வினைச் சொற்களும், வேறு **அடுக்கினும்** – வெவ்வேறு பல அடுக்கி வந்தாலும், **ஒரு தம் எச்சம்**– தாம் தாம் கொண்டு முடியும் சொல் ஒன்று, **ஈறு உற** – இறுதியில் வர, **முடியும்** (எல்லாம் அதனோடு) முடியும்; எ–று.

**உ–ம்.:–**

(1) 'அரசன் பகைவனை வாளால் வெட்டினான்' – உருபுகள் விரிந்து விரவிப் பல அடுக்கி ஒருவினை கொண்டன. வாள் கைக் கொண்டான் – உருபு தொக்கு அவ்வாறு வந்தன.

(2) 'சாத்தனையும் கொற்றனையும் வாழ்த்தினான்', 'சாத்தனுக்கும் கொற்றனுக்கும் தந்தை'–ஐ உருபும்; கு உருபும், விரிந்து வேறு பல அடுக்கி முறையே ஒரு வினையும், ஒரு பெயரும் கொண்டன. அருளற ழுடையான்– உருபுதொக்கு அவ்வாறு வந்தன.

(3) 'ஆடினான் பாடினான் சாத்தன்', 'இளையள் மெல்லியள் மடந்தை' – தெரிநிலை வினைமுற்றும், குறிப்பு முற்றும் வேறுபல அடுக்கி முறையே ஒவ்வொரு பெயர் கொண்டன.

(4) 'கற்ற கேட்ட பெரியோர்', 'நெடிய பெரிய மனிதன்' – தெரிநிலைப் பெயரெச்சமும், குறிப்புப் பெயரெச்சமும் – வேறுபல அடுக்கி முறையே ஒவ்வொரு பெயர் கொண்டன.

(5) 'கற்றுக் கேட்ட அறிந்தார்', 'விருப்பின்றி வெறுப்பின்றி இருந்தார்' – தெரிநிலைவினையெச்சமும், குறிப்புவினையெச்சமும், வேறுபல அடுக்கி முறையே ஒவ்வொரு வினை கொண்டன.

## பவானந்தம் பிள்ளை

இ—ள்.:— உருபு — வேற்றுமையுருபுகள், பல அடுக்கினும் — (விரிந்துந் தொக்குந் தம்முள் விரவியேனும் வெவ்றோகவேனும்) பல அடுக்கி வரினும், வினை — மூவகை வினைச்சொற்களும், வேறு (பல) அடுக்கினும் — வெவ்வேறு பல அடுக்கிவரினும், ஒரு தம்மெச்சம் — தாம் தாம்கொண்டு முடியும் சொல் ஒன்று, ஈறு உற — இறுதியில் வர, முடியும் — அதனோடு அனைத்தும் முடியும். எ—று.

உ—ம்.:—

(1) அரசனானவன் பகைவனை வாளால் வெட்டினான் — உருபுகள் விரிந்து தம்முள் விரவிப் பலவடுக்கி, வெட்டினா னென்னும் ஒரு வினை கொண்டன.

வாள்கைக்கொண்டான் — உருபு தொக்கு அவ்வாறு வந்தன.

(2) சாத்தனையும் கொற்றனையும் வாழ்த்தினான். சாத்தனுக்குங் கொற்றனுக்குந் தந்தை . — ஐயருபுங் குவ்வுருபும் விரிந்து வேறுபல வடுக்கி, வாழ்மத்தினானென்னும் ஒருவினையும் தந்தை யென்னும் ஒரு பெயரும் முறையே கொண்டன.

அருளற முடையான் என உருபு தொக்கு, அவ்வாறு வந்தன.

(3) ஆடினான் பாடினான் சாத்தன். இளையண் மெல்லியண் மடந்தை — வினைமுற்றுங் குறிப்புமுற்றும், வேறு பலவடுக்கிச், சாத்தன் மடந்தை என்னும் ஒரு பெயர் முறையே கொண்டன.

(4) கற்ற கேட்ட பெரியோர். நெடிய பெரிய மனிதன் — தெரிநிலை வினைப் பெயரெச்சமுங் குறிப்புவினைப் பெயரெச்சமும், வேறு பல வடுக்கிப் பெரியோர் மனிதன் என்னும் ஒரு பெயர் முறையே கொண்டன.

(5) கற்றுக் கேட்டறிந்தார். விருப்பின்றி வெறுப்பின்றி யிருந்தார் — தெரிநிலை வினையெச்சமுங் குறிப்பு வினையெச்சமும், வேறுபலவடுக்கி, அறிந்தார் இருந்தார் என்னும் ஒருவினை முறையே கொண்டன.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ — ள்.:— உருபு பல அடுக்கினும் — (வேற்றுமை) உருபுகள் (விரிந்துந் தொக்குந் தம்முள் விரவியேனும் வெவ்வேறாகவேனும்) பல அடுக்கிவரினும், வினை வேறு (பல) அடுக்கினும் — (மூவகை) வினைச்சொற்களும் வெவ்வேறு பல அடுக்கிவரினும், ஒருதம் எச்சம் ஈறு உற — தத்தம் எச்சமொன்று இறுதியில்வர, முடியும் — அதனோடனைத்து முடியும். எ — று.

பொ—ரை.:-

(வேற்றுமை) உருபுகள், (விரிந்தும் தொக்கும் தம்முள் விரவியேனும் வெவ்வேறாகவேனும்) பல அடுக்கிவரினும், (மூவகை) வினைச்சொற்களும் வெவ்வேறு (பல) அடுக்கிவரினும், தத்தம் எச்சமொன்று இறுதியில் வர அதனோடனைத்தும் முடிவனவாம்.

அரசனானவன் பகைவனை வாளால் வெட்டினான்.

உருபு பல அடுக்கி ஒருவினை கொண்டன

சாத்தானையும் கொற்றினையும் வாழ்த்தினான்.

சாத்தனுக்கும் கொற்றனுக்கும் தந்தை.ஓ

ஐயுருபும் குவ்வுருபும் வேறு பல அடுக்கி முறையே ஒரு வினையும் ஒரு பெயரும் கொண்டன.

வரிள் கைக்கொண்டான்.

அருளற முடையான்.

உருபுதொக்கு முறையே அவ்வாறு வந்தன.

ஆடினான் பாடினான் சாத்தன். இளையள் மெல்லியள் மடந்தை.

வினைமுற்றும் குறிப்புமுற்றும் வேறு பல அடுக்கி முறையே ஒவவொரு பெயர் கொண்டன.

கற்ற கேட்ட பெரியோர்.

கற்றுக் கேட்டறிந்தார்.

பெயரெச்சமும் வினையெச்சமும் வேறுபல அடுக்கி முறையே ஒரு பெயரும் ஒருவினையும் கொண்டன.

மூவினையென்றது தெரிநிலைகுறிப்பு என்னுமுற்று, பெயரெச்சம், வினையெச்சங்கள்.

(பல அடுக்குதல் எழுவாயுருபு முதலாகப் பல அடுத்ஷக்கி வருதல். வேறு பல அடுக்குதல் ஒருருபே பலதரம் அடுக்கி வருதல். முற்றுமுதலிய வேறுபல அடுக்குதலும் அவ்வாறே)

## கா. நமச்சிவாய முதலியார்

உருபு – (வேற்றுமை) உருபுகள், பல **அடுக்கினும்** – விரிந்தும் தொக்கும் தம்முள் விரவிப் பல அடுக்கி வரினும் விரவாமல் பல அடுக்கிவரினும், **வினை** – (மூவகை) வினைச் சொற்களும், வேறு (பல) அடுக்கினும் – விரவாமல் பல அடுக்கி வரினும், **ஒரு தம் எச்சம்** – தத்தமெச்சம்-ஒன்று, ஈறு உற – இறுதியில் வர, **முடியும்** – அதனோடு அவை எல்லாம் முடியும்.

உதாரணம்

அரசன் பகைவனை
வாளால் வெட்டினான்

உருபு விரவிப் பலவடுக்கி ஒரு
வினை கொண்டன.

சாத்தனையும் கொற்றனையும்
வாழ்த்தினான்.
சாத்தனுக்கும் கொற்றனுக்குந்
தந்தை

ஐயுருபும் குவ்வுருபும் விரவாமல்
பலவடுக்கி, முறையே ஒரு வினை
யும் ஒரு பெயருங் கொண்டன.

வாள் கைக்கொண்டான்.
அருள் அறம் உடையான்.

விரவியும் விரவாமலும் உருபு
தொக்கு ஒருவினை கொண்டன.

ஆடினான் பாடினான் சாத்தன்
இளையன் மெல்லியள் மடந்தை

தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு
முற்றும் விரவாமல் பலவடுக்கி
முறையே ஒரு பெயர் கொண்டன.

கற்ற கேட்ட பெரியோர்.
கற்றுக் கேட்டு அறிந்தார்.

பெயரெச்சமும் வினையெச்சமும்
விரவாமல் பலவடுக்கி முறையே
ஒரு பெயரும் ஒரு வினையுங்
கொண்டன.

## மோசசு பொன்னையா

வேற்றுமை உருபுகள் விரிந்தும் தொக்கும் தம்முள் விரவியோ, வெவ்வேறான பல அடுக்கியோ வரினும், வினைச்சொற்கள் வெவ்வேறு பல அடுக்கிவரினும் தாந்தாம் கொண்டு முடியும் ஒரு சொல் இறுதியில் வர அதனோடு அனைத்தும் முடியும் எ–று.

இவ்விரு வகை யடுக்கும் ஒரு சொல்லடுக்கல்ல என்பது பல, வேறு என்ற சொற்களால் குறிக்கப்பட்டது. வேறு பல உருபுக்கும் கூட்டப்பட்டது.

எ–டு.:–

1. அரசன் பகைவனை வாளால் வெட்டினான்

அரசன் வாள் கைக்கொண்டான்

–உருபுகள் விரிந்தும் தொக்கும் தம்முள் விரவிப் பல அடுக்கி ஒருவினை கொண்டன.

2. சாத்தனையுங் கொற்றனையும் வாழ்த்தினான்

சாத்தனுக்குங் கொற்றனுக்குந் தந்தை

–ஐயுருபும், குவ்வுருபும் விரிந்து வேறு பல அடுக்கி முறையே வாழ்த்தினான் என ஒரு வினையையும், தந்தை என ஒரு பெயரையுங் கொண்டு முடிந்தன.

3. அருளற முடையான்

–ஐ என்னும் ஒருருபு தொக்கு வேறுபல அடுக்கி ஒருவினை கொண்டு முடிந்தது.

4. ஆடினாள் பாடினாள் பேதை

இளையள் மெல்லியள் மடந்தை

–தொழில், குறிப்பு வினைமுற்றுக்கள் வேறு பல அடுக்கி ஒரு பெயர் கொண்டன.

5. கற்ற கேட்ட பெரியோர்

நெடிய பெரிய மனிதன்

–தொழில், குறிப்புப் பெயரெச்சங்கள் வேறு பல அடுக்கி ஒரு பெயர் கொண்டன.

6. கற்றுக் கேட்டு அறிந்தார்

விருப்பின்றி வெறுப்பின்றி இருந்தார்

–தொழில், குறிப்பு வினையெச்சங்கள் வேறு பல அடுக்கி ஒரு பெயர் கொண்டன.

தொல்காப்பியர்,

உருபுதொடர்ந் தடுக்கிய வேற்றுமைக் கிளவி
ஒருசொன் னடைய பொருள்சென் மருங்கே,

என வேற்றுமை மயங்கியலிலும்,

அவைதாம்
தத்தங் கிளவி யடுக்குந வரினு
மெத்திறத் தானும் பெயர்முடி பினவே,

என எச்சவியலிலும்,

பன்முறை யானும் வினையெஞ்சு கிளவி
சொன்முறை முடியா தடுக்குந வரினு
முன்னதுமுடிய முடியுமன் பொருளே,

என வினையியலிலும் கூறியுள்ளவற்றோடு, உரையாசிரியர்கள் இலேசினாற் கொண்டு கூறிய பெயரெச்சத்தையும் அடக்கி இந்நூற்பாவை இவ்வாசிரியர் யாத்தார்.

(4)

**355. உருபு முற்றீ ரெச்சங் கொள்ளும்,
பெயர்வினையிடைப்பிற வரலுமா மேற்பன.**

உருபு முற்று ஈர் எச்சம் கொள்ளும்

பெயர் வினை இடைப்பிறவரலும் ஆம் ஏற்பன.

urupu muūūu īr essam ko<u>l</u><u>l</u>um
peyar vi<u>n</u>ai itai piūa varal um ām ēūpa<u>n</u>a

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Interposing

Even adjuncts may be appropriately interposed between inflected Nouns, finite Verbs, or the two participles, and the nouns or verbs that govern them.

## ஒப்புமைப் பகுதி

தத்தம் எச்சமொடு சிவணுங் குறிப்பின்
எச்சொல் லாயினும் இடைநிலை வரையார்

(தொல். சொல்.: 237)

உருபு முற்றீ ரெச்சங் கொள்ளும்
பெயர்வினை யிடைப்பிற வரலுமா மேற்பன

(இ.வி.: 329)

தத்தம் குறைவாம் இருவகைப் பெயருடன்
இயையுங் குறிப்புடை எச்சொல் ஆயினும்
இடைநிலை வரையார் என்மனார் புலவர்

(மு.வீ.: 630)

## மயிலை நாதர்

இதுவுமது.

இ–ள்.: உருபுகளும் முற்றுவினைகளும் பெயரெச்ச வினையெச்சங்களும் தாம்தாம் கொள்ளும் பெயர்க்கும் வினைக்கும் நடுவே ஆண்டைக்கு ஏற்பனவான பிற சொற்கள் வரவும் பெறும், எ–று.

உம்மையான் 'வரப்பெறுதல் ஒருதலையல்ல வென்க.

வ–று.:–

சாத்தன் பகல் வயிறார வுண்டான், அறத்தை அழகு[1] பெருகச் செய்தான், வாளானே மருவாரை மாய வெட்டினான்,

பாட வேறுபாடு.:–1. (1) வருதலொருதலை; (2) வரவு ஒருதலை.

தேவர்க்குச் செல்வம் வேண்டிச் சிறப்பெடுத்தான், மலை யினின்று உருண்டு வீழ்ந்தான், சாத்தனது இத்தடக்கை யானை, ஊர்க்கணுயர்ந்த வொளிமாடம், சாத்தா கூத்தற்குக் கூறைகொடு எனவும், "பாடினான் றேவகீதம் பண்ணினுக் கரசன்" (சீவக.2052), "அழுதா டடமாக வணங்கிழையே" (சீவக 1523) எனவும், "கொன்றுருத்த கூர்வேலவர்க் குறுகி, "ஒட்டார், செவிபுதைக்குந் தீய கடுஞ்சொற் [2]கவியுடைத்தாய்" ('பல்யானை மன்னர்' என்னும் செய்யுள்) எனவும், "அளமரு குயிலின மழுங்கிப் பூம்பொழில், உளமெலி மகளிரி னொடுங்கு மென்பவே" (சீவக 49) "முரிந்துபோ தவிழ்ந்துகொங் குயிர்க்கு முல்லையின்" (சீவக.48) [3]எனவும் முறையே ஏற்பன இடைவந்தன. "உப்பின்று, புற்கை யுண்கமா கொற்கை யோனே" என வினையெச்சக் குறிப்பினும் இடைவந்தது. பிறவுமன்ன.

'ஏற்பன' எனவே ஏலாதன வரப்பெறாவென்பதாம். அவை வல்லமெறிந்த நல்லிளங் கோசர்தந்தை மல்லல்யானைப் பெருவழுதி [4]என்பதனுள், வல்லமெறிதல் பெருவழுதிமேற்றே யெனின் நல்லிளங்கோசர் தந்தை யென்பதனை இடை நிறுவின், ஏலாதாம்; வல்லமெறிந்த மல்லல்யானைப் பெருவழுதி நல்லிளங்கோசரது தந்தையெனின் ஏற்பதாம். பிறவுமன்ன.

## சங்கர நமச்சிவாயர்

எ–னின், இதுவும் அது.

பாடவேறுபாடு.:–

1. பெருக்கச் செய்தான்.
2. அவியுடைத்தாய்க் கற்றாரெனச் செய்தசெய்யுமென்னும் பெயரெச்சமும்
3. என, அழுங்கி, போதவிழ்ந்தென்ற வினையெச்சங்களும். உண்டான் பண்ணினுக்கரசன் அணங்கிழை வேலவர், சொற்கவி ஒடுங்கும்,
4. உயிர்க்குமென முறையே பெயரும் வினையுமேற்றவிடத்திடை
5. 'என்றால்' வல்ல மெறிதல்.

**இ-ள்.:-** வேற்றமையுருபுகளும் முற்றுக்களும் பெயரெச்சங்களும் வினையெச்சங்களும் கொண்டு முடியும் பெயர்க்கும் வினைக்கும் இடையே பிறசொற்கள் வருதலுமாம் ஆண்டைக்குப் பொருந்துவன, எ-று.

பிற எனப் பன்மை கூறினாரேனும் 'ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே' (358) என்பதனான் ஒருசொல் வருதலும் கொள்க. உம்மை உருபு முற்றீரெச்சங்களும் அவை கொள்ளும் பெயர் வினையுமாத்திரையாய் நிற்றலேயன்றி என இறந்தது தழீஇ நின்றது.

**வ-று.:-**

சாத்தன் வயிறார உண்டான், அறத்தை அழகு பெறச் செய்தான், வாளால் மருவாரை மாய வெட்டினான், தேவர்க்குச் செல்வம் வேண்டிச் சிறப்பு எடுத்தான், மலையினின்று உருண்டு வீழ்ந்தான், சாத்தனது இத்தடக்கை யானை, ஊர்க்கண் உயர்ந்த வொளிமாடம், சாத்தா விரைந்து ஓடிவா எனவும்; வந்தான் அவ்வூர்க்குப் போன சாத்தன், வந்த அவ்வூர்ச் சாத்தன், வந்து சாத்தன் இற்றைநாள் அவனூர்க்குப் போயினான் எனவும் வரும். குறிப்புவினை முதலிய பிறவும் அன்ன. வாளால் மருவாரை மாய வெட்டினான் என்பதனுள் மாய என்பது ஒன்றுமே இடை வந்தது; மருவாரை என்பது அற்றன்று, இவ்விரண்டனுருபும் வாளால் என்னும் மூன்றனுருபும் அடுக்காய் நிற்றலின்.

"கருதலர்ச் சீறிய கடுங்கொல் யானை" என்புழிச் சீறிய என்னும் பெயரெச்சத்திற்கும் அதுகொண்ட யானை என்னும் பெயர்க்கும் இடையே கொல் என்னும் வினைத்தொகைச் சொல் இடைப்பிறவரலாய் வந்ததன்று; வினைத்தொகை காலங்கரந்த பெயரெச்சம் ஆதலால் பெயரெச்சவினை இரண்டடுக்கி யானை என்னும் ஒரு பெயர் கொண்டனவாம் என்க. இவ்வாறே அடுக்காய் வந்தனவும், இடைப்பிற வந்தனவும் உய்த்துணர்ந்து கொள்க.

இனி ஏற்பன என்றமையான், "வல்ல மெறிந்த நல்லிளங் கோசர் தந்தை மல்லல் யானைப் பெருவழுதி" என்புழி, வல்ல மெறிதல் பெருவழுதிமேற்றே எனின், நல்லிளங்கோசர் தந்தை என்பதனை இடைநிறுவின் ஏலாதாம், வல்லமெறிதல் நல்லிளங் கோசர்மேற்றாகப் பொருள்படுமாதலின் என்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், எண் வகை வேற்றுமைப் புணர்ச்சித் தொடர்மொழிக்கும் வினை புணரும் புணர்ச்சித் தொடர்மொழிக்கும் ஆவதோர் இயல்பு கூறுகின்றது.

**இ–ள்.:–** **உருபு** – எண் வகை வேற்றமை உருபுகளும், **முற்று** – தெரிநிலை வினைமுற்றுக்களும் குறிப்பு வினைமுற்றுக்களும், **ஈரெச்சம்** – தெரிநிலை வினைப் பெயரெச்சங்களும் குறிப்பு வினையெச்சங்களும், **கொள்ளும் பெயர்வினை யிடை** – தாந்தாங் கொள்ளும் பெயர் வினைக்கு நடுவே, **பிற வரலுமா மேற்பன** – ஆண்டைக்கு ஏற்பனவான பிற சொற்களும் வரப்பெறும், எ–று.

**உ–ம்.:–**

சாத்தன் இன்று பகல் வயிறார உண்டான், அறத்தை அழகு பெறச் செய்தான், வாளான் மருவாரை மாய வெட்டினான், தேவர்க்குச் செல்வம் வேண்டிச் சிறப்பு எடுத்தான், மலையினின்று உருண்டு புரண்டு வீழ்ந்தான், சாத்தனது மத்தகக் களிற்று யானை, ஊர்க்கண் உயர்ந்த ஒளி மணி மாடம், சாத்தா கூத்தற்குக் கூறை எடுத்துக் கொடு என வரும். “பாடினான் தேவகீதம் பண்ணினுக் கரசன்” (சீவக.2052), “அழுதான் மனனொந் துணங்கிழையே” என வரும். “இரங்கின நன்மை யுள்ள வென்றோழி” என வரும். பெரிய வெங்க ளருந்தவ முனிவர் என வரும். பிறந்து வெகுநாட் பூமியிலே யிருந்தான், “உப்பின்றிப் புற்கை யுண்கமா கொற்கை யோனே” என வினைப்புணர்ச்சியினும் இடைப் பிறவரல் காண்க.

“ஏற்பன” எனவே, ஏலாதன வரப்பெறா என்பதாம். அவை வல்லமெறிந்த நல்லிளங் கோசர் தந்தை மல்லல் யானைப் பெருவழுதி என்பதனுள் வல்லமெறிதல் பெருவழுதி மேற்றே யெனில் நல்லிளங்கோசர் தந்தை என்பதனை இடை நிறுவின் ஏலாதாம். வல்லமெறிந்த மல்லல் யானைப் பெருவழுதி நல்லிளங் கோசர் தந்தையெனின் ஏற்பதாம். பிறவுமன்ன.

## விசாகப் பெருமாளையர்

இ–ள்.:– உருபு – வேற்றுமையுருபுகளும், முற்று – முற்றுகளும், ஈரெச்சம் – பெயரெச்ச வினையெச்சங்களும், கொள்ளும் – கொண்டு முடியும், பெயர் வினையிடை – பெயர்க்கும் வினைக்குமிடையே, பிற – பிறசொற்கள், வரலுமாம் – வருதலுமாம், ஏற்பன – அவ்விடத்திற்குப் பொருந்தவன, எ–று.

வரலாறு.:

சாத்தன் வயிறாரவுண்டான், அறத்தை யழகு பெறச் செய்தான், வாளான் மாயவெட்டினான், தேவர்க்குச் செல்வம் வேண்டிச் சிறப்பெடுத்தான், மலையினின் றுருண்டு வீழ்ந்தான், சாத்தனதித் தடக்கையானை, ஊர்க்கணுயர்ந்த வொளிமாடம், சாத்தா விரைந்தோடி வா – எனவும், வந்தா

னவ்வூர்க்குப் போன சாத்தன், வந்த வடகாசிமன்னன், வந்து சாத்தனின்றைக் கவனூர்க்குப் போயினான் எனவும் வரும். மற்றவைகளு மிப்படியே.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

வேற்றுமையுருபேற்ற சொற்களுக்கும் முற்றுக்களுக்கும் எச்சங்களுக்கும், அவை கொண்டு முடியவேண்டிய பெயருக்கும் வினைக்குமிடையே அவ்விடத்திற்கு ஏற்பனவாகிய பிறசொற்கள் வருதலும் பிழையாகாதெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

உருபு முற்றீ ரெச்சங் கொள்ளும்
பெயர்வினை யிடைப்பிற வரலுமா மேற்பன.
(உருபு முற்று ஈரெச்சம் கொள்ளும்
பெயர் வினையிடை பிற வரலும் ஆம் ஏற்பன.)

இ–ள்.: வேற்றுமையுருபுகளும் முற்றுக்களும் பெயரெச்சங்களும் வினை யெச்சங்களுந் தாந்தாங் கொண்டு முடியும் பெயர்ச்சொற்கும் வினைச்சொற்கு மிடையே பிறசொற்கள் வருதலுமாம் அவ்விடத்திற்குப் பொருந்துவன, எ–று.

இச்சூத்திரக் கருத்து யாது?

முடியவேண்டுஞ்சொல் முடிக்குஞ் சொல்லோடு ஒட்டி நிற்ற ற்குரியதாகலின் இடையே பிறசொல் வரப் பெறுதல் வழுவாமாயினும், இயைந்ததாயின் பிறிதொன்று இடையே வருதல் குற்றமாகாதென்பதே இச் சூத்திரக் கருத்தாம்.

(வரலாறு)

(1) சாத்தன் (வயிறார) உண்டான் வேற்றுமையுருபு

அறத்தை (அழகு பெறச்) செய்தான்.

வாளால் (மாய) வெட்டினான்.

தேவர்க்குச் (செல்வம் வேண்டிச்) சிறப்பெடுத்தான்.

மலையினின்று (உருண்டு) வீழ்ந்தான்.

சாத்தனது (இத்தடக்கை) யானை.

ஊர்க்கண் (உயர்ந்தவொளி) மாடம்.

சாத்தா (விரைந்து ஓடி) வா.

(3) வந்தான் (அவ்வூர்க்குப்போன) சாத்தன் .......... வினைமுற்று.

(4) வந்த (வடகாசி) மன்னன்......................... பெயரெச்சம்.

(5) வந்து (சாத்தனவ்வூர்க்குப்) போயினான் .......... வினையெச்சம்.

இனி ஏற்பன என்றதனால், எலாதன வரிற் பொருள் கவர்படுமாதலால், அவை இடையில் வரப்பெறாவென்பதாயிற்று. கவர்படுதல் இருபாற்பட்டுத் துணிவு தோன்றா வண்ண நிற்றல்.

வ–று.:–

உண்டு விருந்தோடு வந்தான் என்புழி, விருந்தோடு என்பது, வருதலை விசேடியாது, உண்டலை விசேடித்தும் பொருள்கவர்படுதலால், இதுபோல்வன இடையில் வரப்பெறா வென்றறிக.

வல்ல மெறிந்த நல்லிளங்கோசர் தந்தை மல்லல் யானைப் பெருவழுதி என்புழி, வல்லமெறிதல், வழுதிமேலாகாது, நல்லிளங்கோசர் மேலுமாகிப் பொருள் கவர்படுதலால், இதுபோல்வன இடையில் வரப்பெறாவென்றறிக.

## முகவை இராமானுச கவிராயர்

**இதுவுமது,**

இ–ள்.: உருபு – முற்றீறு எச்சங் கொள்ளும் பெயர்வினை இடை, வேற்றுமை யுருபுகளும் இருவகையெச்சங்களுங் கொண்டு முடியும் பெயர்க்கும் வினைக்கும் இடையிலே, ஏற்பன பிற வரலுமாம் – அவ்விடத்திற்குப் பொருந்துவனவாகிய பிறசொற்கள் வருதலுமாம், எ–று.

பிற எனப் பன்மை கூறினாராயினும், 'ஒரு மொழியொழிதன்னினம் கொளற்குரித்தே' என்பதனால் ஒரு சொல்வருதலுங்கொள்க.

வ–று.:–

சாத்தன் (வயிறார) வுண்டான், அறத்தை (யழகுபெறச்) செய்தான், வாளான் மருவாரை (மாய) வெட்டினான், தேவர்க்குச் (செல்வம் வேண்டிச்) சிறப்பெடுத்தான், மலையினின்று (உருண்டு) வீழ்ந்தான், சாத்தனது (இத்தடக்கை) யானை, ஊர்க்கண் (உயர்ந்தவொளி) மாடம், சாத்தா (விரைந்தோடி) வா எனவும் இவை யுருபுத் தொடர். வந்தான் (அவ்வூர்க்குப் போன) சாத்தன், பாடினான் (தேவகீதம் பண்ணினுக்கு) அரசன், அழுதாள் (தடமாக) அணங்கிழை எனவும், செவ்வியன் (சான்றோர்) மகன், நல்லன் (பெருந்தலைச்) சாத்தன் எனவும், எ இவையிருவகை முற்றுத் தொடர். கொன்ற (காட்டுள) யானை, கொல்லுங் (காட்டுள) யானை, கவளங்கொள்ளாக் (களித்த) யானை எனவும், உழுது (சாத்தன் ) வந்தான், வந்து (சாத்தன் இற்றைநாள் அவனூர்க்குப்) போயினான், கொன்று

(வாளொடு) வந்தான் எனவும், விருந்தின்றி (யொருபோதும்) உண்ணான் எனவும் வரும். இவை இருவகை யெச்சத்தொடர், பிறவுமன்ன.

இவற்றுள் காட்டுள, களித்த என்னும் பெயரெச்சங்களை அடுக்கென்பாருமுளர், அவையடுக்காயினும் இடைப்பிறவர லென்பதே ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்தென்பதை அவர் கூறிய,

**"தத்த மெச்சமொடு சிவணுங் குறிப்பின்**
**எச்சொல் லாயினுமிடைநிலை வரையார்"**

*இச்சூத்திரத்தாலுணர்க. இனி ஏற்பன எனவே ஏலாதன வரின்* பொருள் கவர்படுமாதலால் அவை வரக்கூடாதென்பதாம்.

அவையாவன: உண்டு விருந்தொடு வந்தான், வல்லமெறிந்த நல்லிளங் கோசர் தந்தை மல்லல் யானைப் பெருவழுதி என்றவழி, விருந்தோடுண்டு எனவும் வல்லமெறிதல் வழுதி மேலாகாது நல்லிளங் கோசர் மேலுமாகிப் பொருள் கவர்படுதலாம். (கவர்படுதல் – இருபாற்பட்டுத் துணிவு தோன்றாது நிற்றல்) பிறவரலுமாம் என முடிக்க.

## கா. கோபாலாசாரியர்
## தி.கோ. ரங்காசாரியர்

**உரை :–** உருபு – எட்டு வேற்றுமை யுருபுகளும், **முற்று** – வினை முற்றுக்களும், **ஈர் எச்சம்** – பெயரெச்சங்களும் வினையெச்சங்களும் (ஆகிய இவற்றுக்கும்), **கொள்ளும்** –இவை கொண்டு முடிகிற, **பெயர்வினை** – பெயர்ச்சொற்களுக்கும் வினைச் சொற்களுக்கும், **இடை**–நடுவில், **ஏற்பன** – (அவ்விடத்துக்குப்) பொருந்துவனவாகிய, **பிற**–வேறு சொற்கள், **வரலும்** – வருதலும், **ஆம்**–.

வேற்றுமையுருபு.

உ–ம் :– (1) சாத்தன் (வயிறுநிரம்ப) உண்டான்.
(2) அறத்தை (அழகுபெறச்) செய்தான்.
(3) வாளால்(மாய) வெட்டினான்.
(4) தேவர்க்குச் (செல்வம்வேண்டிச்) சிறப்பு எடுத்தான்.
(5) மலையினின்று (உருண்டு) வீழ்ந்தான்.
(6) இராமனது (பெருங்கை) யானை.
(7) ஊர்க்கண் (உயர்ந்த ஒளி) மாடம்.
(8) இராமா (விரைந்து ஓடி) வா.

வந்தான் (அவ்வூர்க்குப் போன) சாத்தான் – வினைமுற்று

(வந்த வடகாசி) மன்னன் - பெயரெச்சம்

வந்து (சாத்தன் அவ்வூர்க்குப்) போயினான் –வினையெச்சம்.

குறிப்பு :-

'ஏற்பனவரலுமாம்' என்றதனால், ஏலாதன இடையில் வரப்பெறாவாம். 'உண்டு விருந்தோடு வந்தான்' என்றவிடத்து 'விருந்தோடு உண்டு' என இயைந்து பொருள் கவர்படுதலின் இவைபோல்வன ஏலாதன என்க. (கவர்படுதலாவது - இருபாற்பட்டுத் துணிவு தோன்றாது நிற்றல்.)

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.:– உருபு முற்று ஈரெச்சம் கொள்ளும் பெயர் வினையிடை** – வேற்றுமை யுருபுகளும் முற்றுக்களும் பெயரெச்சங்களும் வினையெச்சங்களும் கொண்டு முடியும் பெயர்க்கும் வினைக்கு மிடையே, **பிற வரலும் ஆம் ஏற்பன**– *பிறசொற்கள் வருதலுமாம் அவ்விடத்திற்குப் பொருந்துவன, எ –று.*

வ–று.:–

(1) சாத்தான் (வயிறார) உண்டான்., அறத்தை (அழகுபெறச்) செய்தான். வாளான் (மாய) வெட்டினான். தேவர்க்குச் (செல்வம் வேண்டிச்) சிறப்பெடுத்தான். மலையினின்று (உருண்டு) வீழ்ந்தான். சாத்தனது (இத்தடக்கை) யானை. ஊர்க்கண் (உயர்ந்தவொளி) மாடம். சாத்தா (விரைந்து ஓடி) வா – வேற்றுமையுருபு

(2) வந்தான் (அவ்வூர்க்குப் போன) சாத்தன்....... வினைமுற்று.

(3) வந்து (வடகாசி) மன்னன் ........... பெயரெச்சம்

(4) வந்த (சாத்தனவ்வூர்க்குப்) போயினான் .... வினையெச்சம்.

இனி 'ஏற்பன' என்றதனால், ஏலாதன வரிற் பொருள் கவர்படுமாதலால், அவை இடையில் வரப்பெறாவென்பதாயிற்று. கவர்படுதல் இருபாற்பட்டுத் துணிவு தோன்றாவண்ணம் நிற்றல்.

வ–று.:–

உண்டு விருந்தோடு வந்தான் என்புழி, விருந்தோடு என்பது, வருதலை விசேடியாது, உண்டலை விசேடித்தும் பொருள்

கவர்படுதலால், இது போல்வன இடையில் வரப்பெறா வென்றறிக. வல்ல மெறிந்த நல்லிளங்கோசர் தந்தை, மல்லல் யானைப் பெருவழுதி என்புழி, வல்லமெறிதல் வழுதி மேலாகாது நல்லிளங்கோசர் மேலுமாகிப் பொருள் கவர்படுதலால், இது போல்வன இடையில் வரப்பெறா வென்றறிக.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள்.:– உருபு முற்ற ஈரெச்சம் கொள்ளும் பெயர் வினையிடை** – வேற்றுமையுருபுகளும் முற்றுக்களும் பெயரெச்சங்களும் வினையெச்சங்களும் கொண்டு முடியும் பெயர்க்கும் வினைக்குமிடையே – **பிற வரலும் ஆம் ஏற்பன** – பிறசொற்கள் வருதலுமாம் அவ்விடத்திற்குப் பொருந்துவன. **எ–று.**

(வரலாறு)

(1) சாத்தன் (வயிறர)உண்டான்.அறத்தை (அழகு பெறச்) செய்தான்வாளான் (மாய) வெட்டினான் தேவர்க்குக் (செல்வம் வேண்டிச்) சிறப்பெடுத்தான். மலையினின்று(உருண்டு)வீழ்ந்தான்.சாத்தனது (இத்தடக்கை) யானை ஊர்க்கண் (உயர்ந்தவொளி) மாடம் சாத்தா (விரைந்துஓடி) வா.

(2)வந்தான் (அவ்வூர்க்குப் போன) சாத்தன் ................ வினைமுற்று

(3) வந்த (வடகாசி) மன்னன் .............. பெயரெச்சம்

(4) வந்து (சாத்தனவ்வூர்க்குப்) போயினான் ........... வினையெச்சம்.

இனி ஏற்பன என்றதனால், ஏலாதனவரிற் பொருள் கவர்படுமாதலால், அவை இடையில் வரப்பெறாவென்ப தாயிற்று. கவர்படுதல் இருபாற்பட்டுத் துணிவு தோன்றா வண்ண நிற்றல். வ–று: உண்டு விருந்தோடு வந்தான் என்புழி, விருந்தோடு என்பது பொருள் கவர்படுதலால் இது போல்வன இடையில் வரப்பெறா வென்றறிக. (விருந்தோடு உண்டு என்றும், விருந்தொடு வந்தான் என்றும் இரு திறப்பொருள்படுதலறிக).

வல்ல மெறிந்த நல்லிளங்கோசர் தந்தை மல்லல் யானைப் பெருவழுதி என்புழி, வல்லமெறிதல், வழுதிமேலாகாது, நல்லிளங்கோசர் மேலுமாகிப் பொருள் கவர்படுதலால், இது போல்வன இடையில் வரப்பெறாவென்றறிக. (வல்லமெறிந்த வழுதி என்பதே ஈண்டுப் பொருளந்வயம்).

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ-ள்.:-** **உருபு** - எட்டு வேற்றுமை யுருபுகளும், **முற்று** - வினை முற்றுக்களும், **ஈர் எச்சம்** - பெயரெச்சங்களும் வினையெச்சங்களும் ஆகிய இவற்றுக்கும், **கொள்ளும்** - இவை கொண்டு முடிகிற, **பெயர் வினை** - பெயர்ச்சொற்களுக்கும் வினைச்சொற்களுக்கும், **இடை** - நடுவில், **ஏற்பன** - (அவ்விடத்துக்குப்) பொருந்துவனவாகிய, **பிற** - வேறு சொற்கள், **வரலும்** - வருதலும், **ஆம்** - ஆகும்; எ-று.

**உ-ம்.:-**

(1) சாத்தன் **(வயிறு நிரம்ப)** உண்டான். அறத்தை **(அழகு பெற)**ச் செய்தான். வாளால் **(மாய)** வெட்டினான்.

தேவர்க்கு **(செல்வம் வேண்டிச்)** சிறப்பு எடுத்தான். மலையினின்று **(உருண்டு)** வீழ்ந்தான். சாத்தனது **(பருங்கை)** யானை. ஊர்க்கண் **(உயர்ந்த ஒளி)** மாடம். இராமா **(விரைந்து ஓடி)** வா.

(2) வந்தான் **(அவ்வூர்க்குப் போன)** சாத்தன் -- வினைமுற்று

(3) வந்த **(வடகாசி)** மன்னன் - - பெயரெச்சம்

(4) வந்து **(சாத்தன் அவ்வூர்க்குப்)** போயினான் - வினையெச்சம்

'ஏற்பன வரலுமாம்' என்றதனால் ஏலாதன இடையில் வரப் பெறாவாம்.

## பவானந்தம் பிள்ளை

**இ-ள்.:** உருபு - வேற்றுமையுருபுகளும், முற்று - முற்றுக்களும், ஈரெச்சம் - பெயரெச்சங்களும் வினையெச்சங்களும் (ஆகிய இவற்றுக்கும்), கொள்ளும் பெயர் வினையிடை - இவைகொண்டு முடியும் பெயர்க்கும் வினைக்கு மிடையே, ஏற்பன - அவ்விடத்திற்குப் பொருந்துவன, பிற வரலும் ஆம் - பிறசொற்கள் வருதலுமாம். எ-று.

'பிற' எனப் பன்மை கூறினாராயினும், "ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே" (சூ- 399) என்பதனால் ஒரு சொல் வருதலுங் கொள்க.

**உ-ம். :-**

1(1) சாத்தான் (வயிறார) உண்டான்.

அறத்தை (அழகுபெறச் செய்தான்.

வாளான் (மாய) வெட்டினான்.

தேவர்க்குச் (செல்வம் வேண்டிச்) சிறப்பெடுத்தான்.

மலையினின்று (உருண்டு) வீழ்ந்தான்.

சாத்தனது (இத்தடக்கை) யானை.

ஊர்க்கண் (உயர்ந்தவொளி) மாடம்.

சாத்தா (விரைந்து ஓடி) வா.

(2) வந்தான் (அவ்வூர்க்குப் போன) சாத்தான்........ வினைமுற்று.

(3) வந்த (வடகாசி) மன்னன்............... பெயரெச்சம்.

(4) வந்து (சாத்தனவ்வூர்க்குப்) போயினான் ............. வினையெச்சம்.

இனி 'எற்பன' என்றதனால், ஏலாதன வரிற் பொருள் கவர்படுமாதலால், அவை இடையில் வரப்பெறா வென்பதாயிற்று. கவர்படுதல் – இருபாற்பட்டுத் துணிவு தோன்றாவண்ணம் நிற்றல்.

(உ–ம்.) உண்டு விருந்தோடு வந்தான் – இதில், விருந்தோடு என்பது, வருதலை விசேடியாது, விருந்தோடு உண்டு என உண்டலை விசேடித்தும் பொருள் கவர்படுதலால், இது போல்வன இடையில் வரப்பெறாவென்றறிக.

வல்ல மெறிந்த நல்லிளங்கோசர் தந்தை மல்லல் யானைப்பெருவழுதி – இதில் வல்லமெறிதல், வழுதிமேலாகாது நல்லிளங்கோசர் மேலுமாகிப் பொருள் கவர்படுதலால், இது போல்வன இடையில் வரப்பெறாவென்றறிக.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) உருபு – வேற்றுமை உருபுகளும், முற்று – முற்றுக்களும், ஈர் எச்சம் – பெயரெச்ச வினையெச்சங்களும், கொள்ளும் – கொண்டுமுடியும், பெயர் வினை இடை – பெயர்க்கும் வினைக்கும் நடுவே, ஏற்பனபிற – பொருந்துவனவாகிய பிறசொற்கள், வரலும் ஆம் – வருதலுமாம். (எ–று)

(பொ–ரை.) வேற்றுமை உருபுகளும், முற்றுக்களும், பெயரெச்சங்களும், வினையெச்சங்களும் கொண்டு முடியும் பெயர்க்கும், வினைக்கும் இடையே பொருந்துவனவாய பிற சொற்கள் வருதலுமாம்.

(உ–ம்.) சாத்தன் (வயிறார) உண்டான்.

அறத்தை (அழகுபெற)ச் செய்தான்.

வாளான் (மாய) வெட்டினான்.

தேவர்க்குச் (செல்வம் வேண்டிச்) சிறப்பெடுத்

மலையினின்று (உருண்டு) விழ்ந்தான்.

சாத்தனது (இத்தடக்கை) யானை.

ஊர்க்கண் (உயர்ந்தவொளி) மாடம்.

சாத்தா (விரைந்தோடி) வா.

வந்தான் (அவ்வூர்க்குப்போன) சாத்தன்.

வந்த (வடகாசி) மன்னன்.

வந்து (சாத்தன் இன்றைக் கவனூர்க்குப்) போயினரான்.

முற்று, பெயரெச்சம், வினையெச்சம்.

இடைப்பிறவரல் என்றது உருபும் வினையும் கொண்டு முடியும் பயனிலைகளுக்கு இடையே பிற சொற்கள் வருதலை. ஏற்பன எனவே ஏலாதனவும் சிலவுண்டு. அவை இடையில் வரப்பெறவாம்;

உண்டு விருந்தொடு வந்தான் - விருந்தொடு உண்டு என வினையெச்சத்தோடு முடிதலால் பொருள் கவர்கடுதலும், 'வல்ல மெறிந்த நல் லிளங் கோசர்தந்தை மல்லல்யானைப் பெருவழுதி' என்றவழி வல்லம் எறிதல் வழுதிமேற் சென்று பொருள் கவர் படுதலும் உண்மையால்.

## கா. நமச்சிவாய முதலியார்

உருபு - வேற்றுமை உருபுகளும், முற்று - முற்றுக்களும், ஈர் எச்சம் - பெயரெச்ச வினையெச்சங்களும், கொள்ளும் - கொண்டுமுடியும், பெயர் வினையிடை - பெயர்க்கும் வினைக்கும் இடையே, ஏற்பன - பொருந்துவனவாகிய, பிற - பிற சொற்கள், வரலும் ஆம் - வருதலுமாம்.

உதாரணம்

சாத்தன் வயிறார உண்டான்
அறத்தை அழகுபெறச் செய்தான்
வாளால் மாய வெட்டினான்.
தேவர்க்குச் செல்வம் வேண்டிச் சிறப்பெடுத்தான்.
மலையினின்று உருண்டு வீழ்ந்தான். வேற்றுமை உருபு
சாத்தனது தடக்கை யானை.
ஊர்க்கண் உயர்ந்த வொளி மாடம்
சாத்தா விரைந்தோடி வா.
வந்தான் அவ்வூர்க்குப்போன சாத்தன் - வினைமுற்று

வந்த வடகாசி மன்னன். – பெயரெச்சம்
வந்து இன்று ஊர்க்குப் போயினான் – வினையெச்சம்

## மோசசு பொன்னையா

வேற்றுமை உருபுகள்; தொழில், குறிப்பு வினைமுற்றுக்கள்; பெயர், வினையெச்சங்கள் ஆகியவற்றிற்கும் அவை கொண்டு முடியும் பெயர் வினைகட்கும் இடையே ஏற்புடைப் பிற சொற்கள் வருதலும் பொருந்துவனவாம் எ—று.

பிறவரலும் என்றதன்கண் உள்ள உம்மை முன்னர்க் கூறப்பட்ட 'ஒருதம் எச்சம் ஈறுறமுடியும்' என்றதைத் தழுவி இறந்தது தழீஇய எச்ச உம்மையாய் நின்றது என்க. ஒருமையைப் பன்மையுள் அடக்கிப் பிற எனப் பன்மையாற் குறிப்பிட்டார் எனக் கொள்க.

எ—டு.:–

1. சாத்தன் வயிறார உண்டான்
அறத்தை அழகுறச் செய்தான்
வாளால் மாய வெட்டினான்
தேவர்க்குப் புகழ்வேண்டிப் பூசனை செய்தான்
மலையினின்று உருண்டுவிழுந்தான்
சாத்தனது பள்ளக்கால் வயல்
ஊர்க்கண் உயர்நிலை மாடம்
சாத்தா விரைந்து ஓடி வா
—வேற்றுமை உருபுகளுக்கும் முடிக்குஞ் சொற்களுக்கு மிடையே பிறவந்தன.

2. வந்தான் கோபத்தில் பிரிந்து சென்ற சாத்தன் பெரியன விற்றுப்போன மாடுகள்
—தொழில் குறிப்பு முற்றுக்களுக்கும் முடிக்குஞ் சொற்களுக்கும் இடையே பிறவந்தன.

3. சென்ற எம் தந்தை
வந்து மீண்டும் சென்றான்
—பெயர், வினையெச்சங்களுக்கும் முடிக்குஞ் சொற்களுக்கும் இடையே பிறவந்தன.

ஏற்பன என்றதனால் பொருள் கவர்படுமாறு இடைப்பிறவரல் ஏலா என்க.

ஆசிரியர் தொல்காப்பியரும்

**தத்த மெச்சமொடு சிவணுங் குறிப்பின்**

**எச்சொல் லாயினு மிடைநிலை வரையார்,**

என்றே ஆணை விதித்தார். சேனாவரையர், 'உண்டு விருந்தொடு வந்தான் வல்ல மெறிந்த நல்லிளங்கோசர் தந்தை மல்லல்யானைப் பெருவழுதி என்றவழி, விருந்தொடுண்டென வினையெச்சத்தோடு மியைதலிற் பொருள் கவர்க்கும்; வல்லமெறிதல் நல்லிளங்கோசர்க்கும் ஏற்குமாகலின் ஆண்டும் பொருள்கவர்க்கும்; அன்ன சிவணாக் குறிப்பினவாம்' என உரை வகுத்துள்ளமை காண்க.

(5)

## 356. எச்சப் பெயர்வினை யெய்து மீற்றினும்.

**எச்சம் பெயர் வினை எய்தும் ஈற்றினும்.**

essa peyar viṉai eyṭum īṟṟiṉ um

### இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Words they complete**

Supplementing Nouns and Verbs may also follow the words whose meanings they complete.

### மயிலை நாதர்

இதுவுமது,

இ-ள்.:- உருபு முற்று [1]பெயரெச்ச வினையெச்சங்க ளென்பனவற்றிற்கு எச்சமாய்வரும் பெயரும் வினையும் அவற்றின் ஈற்றின் கண்ணேயும் வந்து நிற்கும், எ-று. [2]உம்மையால், முதற்கணிற்கவும் பெறுமென்க.

வ-று.:-

---

பாட வேறுபாடு.:-

1.பெயரெச்சம் வினையெச்சமென்பனவற்றிற்கு

2.உம்மையான் முதற்கணிவ்வாறு பெயரும்வினையு நிற்குமென்பதற்கு இச்சூத்திரஞ் செய்தாரென்க.

சாத்தன் வந்தான், மரத்தைக் குறைத்தான், சாத்தனொடு வந்தான், சாத்தற்குக் கொடுத்தான், சாத்தனினீங்கினான், சாத்தனது ஆடை, சாத்தன்கட் சென்றான், சாத்தா வா என ஈற்றின்கண் வந்தன; வந்தான் சாத்தன், குறைத்தான் மரத்தை, வந்தான் சாத்தனொடு என (ஏனையவற்றோடும்) முதலின் கண்ணே வருவித்துக் காண்க. உண்டான் சாத்தன். உண்டாள் சாத்தி, உண்டார் சாத்தர், உண்டது அது, உண்டன அவை, உண்டேன் யான், உண்டேம் யாம், உண்டாய் நீ, உண்டீர் நீயிரென ஈற்றின்கண் வந்தன; சாத்தனுண்டான், சாத்தி யுண்டாள், சாத்தருண்டாரென (ஏனையவற்றோடும்) முதலிலே வருவித்துக் காண்க.[1] உண்டுவந்தான், உண்டு வந்தாள், உண்டு வந்தார் எனவும், வந்தானுண்டு, வந்தாளுண்டு, வந்தாருண்டு எனவும் (இவ்வாறு ஏனைப் பாலிடங்கடோறு மொட்டி) வினையெச்சம் இருவழியும் வந்தவாறு காண்க. உண்டசாத்தன், உண்டசாத்தி, உண்டசாத்தரென (இவ்வாறு ஏனைப் பாலிடங்கடோறு மொட்டிப்) பெயரெச்சத் திறுதி வந்தவாறு காண்க. பெயரெச்சத்தின் முதற்கட் பெயர் வாராது; ஏனெனின், அது, சாத்தனுண்டவென அஃறிணை வாய்பாடாக முடியுமாதலா லெனக் கடாவிடை காட்டி மறுக்க.

## சங்கர நமச்சிவாயர்

எ—னின், இதுவும் அது.

**இ—ள்.:** உருபுகளும் முற்றுக்களும் பெயரெச்சங்களும் வினையெச்சங்களும் கொண்டு முடியும் எச்சமாகிய பெயரும் வினையும் அவற்றிற்கு ஈற்றினும் வரும், எ—று. ஈற்றினும் என்னும் உம்மையான் முதலினும் வருதல் கொள்க.

வ—று.:—

சாத்தன் வந்தான், மரத்தைக் குறைத்தான், சாத்தனால் வந்தான், சாத்தற்குக் கொடுத்தான், சாத்தனின் நீங்கினான், சாத்தனது ஆடை, சாத்தன்கண் சென்றான், சாத்தா வா எனவும்; வந்தான் சாத்தன், வந்த சாத்தன், வந்து போயினான் எனவும் இறுதிக்கண் வந்தன. வந்தான் சாத்தன், குறைத்தான் மரத்தை, வந்தான் சாத்தனால், கொடுத்தான் சாத்தற்கு,

---

பாடவேறுபாடு.:—

1. உண்டசாத்தன், உண்கின்ற சாத்தன், உண்ணுஞ் சாத்தன் எனப் பெயரெச்சத்திறுதி வந்தவாறு காண்க. உண்டு வந்தான்.

நீங்கினான் சாத்தனின், சென்றான் சாத்தன்கண், வா சாத்தா எனவும்; சாத்தன் வந்தான், போயினான் வந்து எனவும் முதற்கண் வந்தன.

எய்துமீற்றின் என்றாற்போல முதற்கண் வருதலை எடுத்தோதாது உம்மையால் தழீஇக் கொண்டார். ஆறனுருபின் எச்சமும் ஏழனுருபின் எச்சப்பெயரும் பெயரெச்சத்தின் எச்சமும் முதற்கண் வாரா என்பதூஉம், ஏனைய வரினும் இறுதிக்கண் வருதல்போல் சிறப்பின அல்ல என்பதூஉம் தோன்றுதற்கு என்க.

எழுவாயுருபு வினைமுற்றுப் பயனிலையை இறுதிக்கண் கொண்டதூஉம், வினைமுற்று பெயர்ப்பயனிலையை முதற்கண் கொண்டதூஉம், சாத்தன் வந்தான் என வரும். தம்முள் வேற்றுமை யாதோ எனின்:- கேட்போர்க்குச் சாத்தன் இது செய்தான் என வினையை உணர்த்துவதூஉம், இது செய்தான் சாத்தன் என வினைமுதலை உணர்த்துவதூஉம் என்க. வந்தான் சாத்தன் என வருவனவும் அன்ன.

## கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், உருபும் வினையும் கொண்டு முடியும் பெயரும் வினையும் நிற்கும் இடம் கூறுகின்றது.

**இ-ள்.:- எச்சப் பெயர்வினை** - உருபு, முற்று, பெயரெச்சம், வினையெச்சம் என்பனவற்றிற்கு எச்சமாய் வரும் பெயரும் வினையும், **எய்தும் ஈற்றினும்** - அவற்றின் ஈற்றின்கண்ணே வந்து நிற்கும், எ-று.

உம்மையால் முதலினுறழ வருமென்க.

உ-ம்.:-

சாத்தன் வந்தான், மரத்தைக் குறைத்தான், சாத்தனோடு வந்தான், சாத்தற்குக் கொடுத்தான், சாத்தனின் நீங்கினான், சாத்தனது ஆடை, சாத்தற்கட் சென்றான், சாத்தா வா என உருபு கொள்ளும் பெயர் வினைகள் ஈற்றில் வந்தன. வந்தான் சாத்தன், குறைத்தான் மரத்தை, வந்தான் சாத்தனோடு, கொடுத்தான் சாத்தற்கு, நீங்கினான் சாத்தனின், ஆடை சாத்தனது, சென்றான் சாத்தன்கண், வா சாத்தா என முதலினும் வந்தன. உண்டான் சாத்தன், உண்டாள் சாத்தி, சாத்தன் உண்டான், சாத்தி உண்டாள் என முதலினும் ஈற்றினும் முற்று வந்தது என்க. உண்டு வந்தான், உண்டு வந்தாள், வந்தான் உண்டு, வந்தாள் உண்டு என

வினையெச்சம் முதலினும் ஈற்றினும் வந்தன. பெயரெச்சம் ஈற்றிலன்றி முதலின் வாராவெனக் கடாவிடை காட்டி மறுக்க.

## விசாகப் பெருமாளையர்

**இதுவுமது.**

இ-ள்.:- எச்சம்- (உருபுகளுமுற்றுகளும் பெயரெச்சங்களும் வினையெச்சங்களுங் கொண்டுமுடியு) மெச்சமாகிய, **பெயர்வினை**-பெயரும் வினையும், **ஈற்றினும்**-அவற்றிற்கீற்றிலும், **எய்தும்**-வரும், **எ-று.** (ஈற்றினுமென்ற வும்மையால் முதலினும் வருதல் கொள்க.)

வ-று.:-

| (ஈறு) | (முதல்) |
|---|---|
| சாத்தன் வந்தான் | வந்தான் சாத்தன் |
| மரத்தைக் குறைத்தான் | குறைத்தான் மாத்தை |
| சாத்தனால் வந்தான் | வந்தான் சாத்தனால் |
| உருபு களினெச்சங்கள் | ஈரிடத்தும் வந்தன |
| சாத்தனுக்குக் கொடுத்தான் | கொடுத்தான் சாத்தனுக்கு |
| சாத்தனினீங்கினான் | நீங்கினான்சாத்தனின் |
| சாத்தனதாடை | சாத்தன்கட் சென்றான் |
| சென்றான் சாத்தன்கண் | சாத்தாவா வாசாத்தா |
| வந்தான்சாத்தன் | சாத்தன்வந்தான் |

முற்றெச்சங்கள் ஈரிடத்தும் வந்தன.

வந்த சாத்தன்

| | |
|---|---|
| வந்துபோயினான் | போயினான் வந்து |

முதற்கண்வருதலை உம்மையாற் றழுவிக்கொள்ளுதலால் ஆறனுருபினெச்சமும் ஏழனுருபினெச்சப் பெயரும் பெயரெச்சத்தினெச்சமும் முதற்கண் வாராவாம்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

முடிக்குஞ்சொல் முதலிலே யன்றி யீற்றில் வருதலும் பிழையாக தென்று கூறுஞ் சூத்திரம் யாது?

எச்சப்பெயர்வினை யெய்து மீற்றினும்.

(எச்சப் பெயர்வினை எய்தும் ஈற்றினும்.)

இ–ள்.:– உருபுகளும் முற்றுக்களும் பெயரெச்சங்களும் வினையெச்சங்களுங் கொண்டு முடியுமெச்சமாகிய பெயரும் வினையும் அவற்றிற்கீற்றிலும் வரும், எ–று.

இச்சூத்திரக் கருத்தென்னை?

ஒன்றனது அவாய் நிலையை முடித்தற்கு வருஞ் சொல் பின்வருதல் மரபாகலின் வழுவற்க என்பதும், முன் வருதல் மரபாகாமையின் வழுவேயாயினும், முடித்தற்குரியனவாயின் முன் வருதலுங் கொள்க என்பதும் இச்சூத்திரக் கருத்தாம்.

ஈற்றினுமென்ற உம்மையால், முதலினும் வருதல் கொள்க.

(வரலாறு)

| ஈறு | முதல் |
|---|---|
| சாத்தன் வந்தான் | வந்தான் சாத்தன் |

உருபுகளினெச்சங்கள் ஈரிடத்தும் வந்தன.

| | |
|---|---|
| மரத்தைக் குறைத்தான் | குறைத்தான் மரத்தை |
| சாத்தனால் வந்தான் | வந்தான் சாத்தனால் |
| சாத்தனுக்குக் கொடுத்தான் | கொடுத்தான் சாத்தனுக்கு |
| சாத்தனி னீங்கினான் | நீங்கினான் சாத்தனின் |
| சாத்தன தாடை | |
| சாத்தன்கட் சென்றான் | சென்றான் சாத்தன்கண் |
| குன்றத்துக்கட் கூகை | |
| சாத்த வா | வா சாத்தா |
| வந்தான் சாத்தன் | சாத்தன் வந்தான் |

முற்றெச்சங்களினெச்சங்கள் ஈரிடத்தும் வந்தன.

| | |
|---|---|
| வந்த சாத்தன் | |
| வந்து போயினான் | போயினான் வந்து |

எய்துமீற்றின் என்றாற்போல முதற்கண் வருதலை யெடுத்தோதாது உம்மையாற் றழுவிக்கொண்டார், ஆறனுருபினெச்சமும் ஏழனுருபினெச்சப் பெயரும் பெயரெச்சத்தினெச்சமும் முதற்கண் வாரா என்பதும், ஒழிந்தன முதற்கண் வரினும் இறுதிக்கண் வருதல்போற் சிறப்பினவல்ல என்பதுந் தோன்றுதற்கென்க.

எழுவாயுருபு வினைமுற்றுப்பயனிலையை இறுதியிலே கொண்டதும்,

வினைமுற்றுப் பெயர்ப்பயனிலையை முதலிலே கொண்டதும், சாத்தன்வந்தான் என வரும். தம்முள் வேற்றுமை யாதோவெனின், கேட்போர்க்குச் சாத்தன் இதுசெய்தான் என வினையை யுணர்த்தும் போது, சாத்தனென்னு மெழுவாய்க்கு வந்தானென்னு முற்றுவினை பயனிலையாகக் கொள்ளப்படும்; இது செய்தோன் சாத்தன் என வினைமுதலை யுணர்த்தும்போது, வந்தானென்னு முற்று வினைக்குச் சாத்தனென்னும் பெயர் பயனிலையாகக் கொள்ளப்படும். வந்தான் சாத்தன் என்னு முற்றுத்தொடருக்கும் இவ்வாறறிக.

## முகவை இராமானுச கவிராயர்

இதுவுமது,

இ—ள்.: —எச்சப் பெயர்வினை— (உருபுகளும் மூவகைவினைச் சொற்களுங் கொண்டு முடியும்) குறைச்சொல்லாகிய பெயரும் வினையும், எய்து மீற்றினும் — அவற்றினிறுதியிலும் வரும், எ—று.

ஈற்றினுமென்றதினாலே அவற்றின் முதலிலும் வருதல்கொள்க.

வ—று.:—

சாத்தன் வந்தான், மரத்தைக் குறைத்தான், சாத்தனால் வந்தான், சாத்தனுக்குக் கொடுத்தான், சாத்தனினீங்கினான், சாத்தனதாடை, சாத்தன்கட் சென்றான், சாத்தா வா எனவும், வந்தான் வழுதி, கரியன் மால் எனவும், உண்ட சாத்தன், கரியசாத்தன் எனவும் உண்டுவந்தான், விருந்தின்றி யுண்டான் எனவும் இறுதியில் வந்தன. வந்தான் சாத்தன், குறைத்தான் மரத்தை, வந்தான்சாத்தனால், கொடுத்தான்சாத்தனுக்கு, நீங்கினான் சாத்தனில், சென்றான் சாத்தன்கண், வா சாத்தா எனவும், வழுதிவந்தான், மால்கரியன் எனவும் வந்தானுண்டு, உண்டான்விருந்தின்றி எனவும் முதலில் வந்தன.

முன்னத்தினே தமயபடுபாக்கறித்து—உழுவாருலகத்தார்க் காணியஃதாற்றா ரெனில், பேதைமை நோதக்க நட்டார்சேயின் எனவும் இனிததுாமீதலியையாக்கடை, பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை செய்தாங்கமையாங்கடை எனவும், களையுநர்கை கொல்லுங் காழத்தவிடத்து—எனவுஞ் செய்யுளகத்து வருதலுங் காண்க.

எய்து மீற்றினென்றாற்போல முதற்கண் வருதலை யெடுத்துச் சொல்லாமல் உம்மையால் தழுவியதென்னெனின், ஆறனுருபி னெச்சமும்—ஏழனுருபின்எச்சப் பெயரும் பெயரெச்சத்தி னெச்சமும், முதற்கண் வாராமையும்; ஒழிந்தன, முதற்கண் வரினும் இறுதியில் வருவனபோற் சிறப்பின அல்லவென்பதுந் தோன்றுதற்கென்க, சாந்தனதாடை என்பது ஆடை

சாத்தனது என மாறி நின்றபோது, அது என்பது உருபாகாது, துவ்விகுதியீற்றுவினைக் குறிப்பாமெனக்கொள்க. எழுவாயுருபு வினைமுற்றுப்பயனிலையை யிறுதியிலே கொண்டதும், வினைமுற்றுப் பயனிலையை முதலிலே கொண்டதும் சாத்தன் வந்தான் என நிற்கும், தம்முள் வேற்றுமை யாதோ எனின், கேட்போர்க்குச் சாத்தனிது இது செய்தான் என வினையை உணர்த்துவது எழுவாய்ப் பயனிலையும், இது செய்தான் சாத்தன் என வினைமுதலை உணர்த்துவது முற்றுப் பயனிலையுமாம் என்க. வந்தான் சாத்தன் என்னும் முற்றுப் பயனிலை மாறி நிற்பினும் இதுவாம் என்க.

## கா. கோபாலாசாரியர்
## தி.கோ. ரங்காசாரியர்

**உரை :– எச்சம்** – (வேற்றுமை உருபுகளும் வினைமுற்றுக்களும் பெயரெச்சங்களும் வினையெச்சங்களும்) கொண்டுமுடியுஞ் சொல்லாகிய, **பெயர்வினை** –பெயர்ச்சொல்லும் வினைச் சொல்லும், **ஈற்றினும்** – (அவ்வுருபு முதலியவற்றிற்கு) இறுதியிலும், **எய்தும்** – வரும்.

குறிப்பு :–

'ஈற்றினும் எய்தும்' என்ற எச்ச உம்மையால் முதலிலும் வருதல் கொள்க.

உதாரணம்

| ஈறு | | முதல் |
|---|---|---|
| 1. இராமன் வந்தான் | – | வந்தான் இராமன். |
| 2. பொன்னைக் கொடுத்தான் | – | கொடுத்தான் பொன்னை. |
| 3. பொன்னால் அமைத்தான் | – | அமைத்தான் பொன்னால். |
| 4. இராமனுக்கு கொடுத்தான் | – | கொடுத்தான் இராமனுக்கு. |
| 5. ஊரின் நீங்கினான் | – | நீங்கினான் ஊரின் |
| 6. இராமனது வீடு | – | . . . |
| 7. இராமன்கண் சென்றான் | – | சென்றான் இராமன்கண் |
| மணியில் ஒளி | – | . . . |
| 8. இராமா வா | – | வா இராமா |

(உருபுகள் கொண்டு முடியுஞ் சொற்கள் ஈரிடத்தும் வந்தன)

| | | |
|---|---|---|
| வந்தான் இராமன் | – | இராமன் வந்தான் |
| வந்த இராமன் | – | . . . |
| வந்து போனான் | – | போனான் வந்து. |

(உருபுகள் கொண்டு முடியுஞ் சொற்கள் ஈரிடத்தும் வந்தன)

'ஈற்றினும்' என்றதனால் முதலில் வருதலையும் தழுவிக்கொண்ட மையின். ஆறாம்வேற்றுமை யுருபும் ஏழாம்வேற்றுமை யுருபும் பெயரெச்சமும் தொண்டுமுடிகிற பெயர்ச்சொற்கள் அவற்றிற்கு இறுதியில் மாத்திரமே வருதலல்லாமல், முதலில் வாரா என்பதும், மற்றவை முதலில் வந்தாலும் இறுதியில் வருவனபோலச் சிறப்புடையன அல்ல என்பதும் தோன்றுமாறு அறிக. 'இராமனதுவீடு' என்னும் ஆறாம்வேற்றுமை 'வீடு இராமனது' என மாறினால் 'இராமனது' என்பது ஆறாம் வேற்றுமை ஆகாது குறிப்பு வினைமுற்றாம்.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.:– எச்சப் பெயர் வினை–உருபுகளும் முற்றுக்களும் பெயரெச்சங்களும் வினையெச்சங்களும் கொண்டுமுடியு மெச்சமாகிய பெயரும் வினையும், ஈற்றினும் எய்தும் – அவற்றிற்கீற்றிலும் வரும். எ–று.

'ஈற்றினு'மென்ற உம்மையால், முதலினும் வருதல் கொள்க.

வ–று.:

| | |
|---|---|
| ஈறு | முதல் |
| சாத்தன் வந்தான் | வந்தான்சாத்தன் |
| மரத்தைக் குறைத்தான் | குறைத்தான் மரத்தை |
| சாத்தனால் வந்தான் | வந்தான்சாத்தனால் |

உருபுகளினெச்சங்கள் ஈரிடத்தும் வந்தன.

| | |
|---|---|
| சாத்தனுக்குக் கொடுத்தான் | கொடுத்தான்சாத்தனுக்கு |
| சாத்தனி னீங்கினான் | நீங்கினான்சாத்தனின் |
| சாத்தனதாடை | |
| சாத்தன்கட் சென்றான் | சென்றான் சாத்தன்கண் |
| சாத்தா வா | வா சாத்தா |
| வந்தான் சாத்தன் | சாத்தன்வந்தான் |

முற்றெச்சங்களினெச்சங்கள்

ஈரிடத்தும் வந்தன.

| | |
|---|---|
| வந்த சாத்தன் | |
| வந்துபோயினான் | போயினான்வந்து |

'எய்துமீற்றின்' என்றாற்போல, முதற்கண் வருதலை யெடுத்தோதாது உம்மையாற் றழுவிக்கொண்டார். ஆறனுருபி னெச்சமும் ஏழனுருபினெச்சப்பெயரும் பெயரெச்சத்தி னெச்சமும் முதற்கண்வாரா என்பதும், ஒழிந்தன முதற்கண் வரினும் இறுதிக்கண் வருதல்போற் சிறப்பினவல்ல என்பதுந் தோன்றுதற்கென்க.

எழுவாயுருபு வினைமுற்றுப்பயனிலையை இறுதியிலே கொண்டதும், வினைமுற்றுப் பெயர்ப்பயனிலையை முதலிலே கொண்டதும், சாத்தன் வந்தான் என வரும். தம்முள் வேற்றுமை யாதோவெனின், கேட்போர்க்குச் சாத்தனிது செய்தான் என வினையை யுணர்த்தும்போது, சாத்தனென்னு மெழுவாய்க்கு வந்தானென்னு முற்றுவினை பயனிலையாகக் கொள்ளப்படும்; இது செய்தான் சாத்தன் என வினைமுதலை யுணர்த்தும் போது, வந்தானென்னு முற்றுவினைக்குச் சாத்தனென்னும் பெயர் பயனிலையாகக் கொள்ளப்படும். வந்தான் சாத்தன் என்னுமுற்றுத் தொடருக்கும் இவ்வாறறிக.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். எச்சப் பெயர்வினை** – உருபுகளும் முற்றுக்களும் பெயரெச்சங்களும் வினையெச்சங்களுங் கொண்டு முடியுமெச்சமாகிய பெயரும் வினையும், – **ஈற்றினும் எய்தும்** – அவற்றிற்கீற்றிலும் வரும். எ–று.

ஈற்றினுமென்ற உம்மையால், முதலினும் வருதல் கொள்க.

(வரலாறு)

| ஈற்றில். | முதலில் | |
|---|---|---|
| சாத்தன் வந்தான் | வந்தான் சாத்தன் | |
| மரத்தைக் குறைத்தான் | குறைத்தான் மரத்தை | |
| சாத்தனால் உய்ந்தான் | உய்ந்தான் சாத்தனால் | உருபுக |
| சாத்தனுக்குக் கொடுத்தான் | கொடுத்தான் சாத்தனுக்கு | ளினெச் |
| சாத்தனி னீங்கினான் | நீங்கினான் சாத்தனின் | சங்கள்ஈ |
| சாத்தனதாடை | ——————— | ரிடத்தும் |
| சாத்தன்கட் சென்றான் | சென்றான் சாத்தன்கண் | வந்தன. |
| சாத்தா வா | வா சாத்தா | |
| வந்தான் சாத்தன் | சாத்தன் வந்தான் | முற்றெச்சங்களினெ |
| வந்த சாத்தன் | —————— | ச்சங்கள் ஈரிடத்தும் |
| வந்து போயினான் | போயினான் வந்து | வந்தன. |

எய்துமீற்றின் என்றாற்போல முதற்கண் வருதலை

யெடுத்தோதாது உம்மையாற் றழுவிக்கொண்டார், ஆறனுருபி னெச்சமும், ஏழனுருபினெச் சப்பெயரும், பெயரெச்சத்தி னெச்சமும் முதற்கண் வாரா என்பதும், ஒழிந்தன முதற்கணிவரினும் இறுதிக்கண் வருதல்போற் சிறப்பினவல்ல என்பதுந் தோன்றுதற்கென்க.

எழுவாயுருபு வினைமுற்றுப் பயனிலையை இறுதியிலே கொண்டதும், வினைமுற்று பெயர்ப்பயனிலையை முதலிலே கொண்டதும், சாத்தன் வந்தான் என வரும். தம்முள் வேற்றுமை யாதோவெனின், கேட்போர்க்குச் சாத்தனிது செய்தான் என வினையை யுணர்த்தும்போது, சாத்தனென்னுமெழுவாய்க்கு வந்தானென்னு முற்றுவினை பயனிலையாகக் கொள்ளப்படும்; இதுசெய்தான் சாத்தன் என வினைமுதலை யுணர்த்தும்போது, வந்தானென்னு முற்றுவினைக்குச் சாத்தனென்னும் பெயர் பயனிலையாகக் கொள்ளப்படும். வந்தான் சாத்தன் என்னு முற்றுத் தொடருக்கும் இவ்வாறறிக.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ—ள்.: எச்சம்—(வேற்றுமையுருபுகளும் வினைமுற்றுக்களும் பெயரெச்சங்களும் வினையெச்சங்களும்) கொண்டு முடியுஞ் சொல்லாகிய, **பெயர்வினை**— பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும், **ஈற்றினும்** – (அவ்வுருபு முதலியவற்றிற்கு) இறுதியிலும், **எய்தும்**—வரும்; எ—று.

**'ஈற்றினும்'** என்ற எச்ச உம்மையால் முதலிலும், வருதல்கொள்க.

| ஈறு | முதல் |
|---|---|
| சாத்தன் வந்தான் | வந்தான் சாத்தன் |
| மரத்தைக் குறைத்தான் | குறைத்தான் மரத்தை |
| சாத்தனால் வந்தான் | வந்தான் சாத்தனால் |
| உருபுகளின் கொண்டு முடியும் சொற்கள் | |
| இரண்டிடத்தும் வந்தன. | |
| சாத்தனுக்குக் கொடுத்தான் | கொடுத்தான் சாத்தனுக்கு |
| சாத்தனின் நீங்கினான் | நீங்கினான் சாத்தனின் |
| சாத்தனது ஆடை | |
| சாத்தன்கண் சென்றான் | சென்றான் சாத்தன்கண் |
| மணியில் ஒளி | |

| | |
|---|---|
| சாத்தா வா | வா சாத்தா |
| வந்தான் சாத்தன் | சாத்தன்வந்தான் |

முற்றெச்சங்கள் கொண்டு முடியும் சொற்கள்

இரண்டிடத்தும் வந்தன.

வந்த சாத்தன்

| | |
|---|---|
| வந்துபோயினான் | போயினான் வந்து |

'எய்து மீற்றின்' என்றாற்போல முதலில் வருதலை எடுத்துச் சொல்லாமல் 'ஈற்றினும்' என்றதால் தழுவிக்கொண்டதனால், ஆறாம் வேற்றுமை யுருபும் ஏழாம் வேற்றுமையுருபும் பெயரெச்சமும் கொண்டு முடிகிற பெயர்ச்சொற்கள் அவற்றிற்கு இறுதியில் மாத்திரம் வருமேயல்லாமல் முதலில் வாரா என்பதும், மற்றவை முதலில் வந்தாலும், இறுதியில் வருவனபோலச் சிறப்புடையனவல்ல என்பதும் தோன்றுமாறு அறிக.

(சாத்தனது ஆடை என்பது–ஆடை சாத்தனது என மாறினால், சாத்தனது என்பது–ஆறாம் வேற்றுமையாகாது, குறிப்புவினைமுற்றாம்.)

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– எச்சம் – (உருபுகளும் முற்றுக்களும் பெயரெச்சங்களும் வினையெச்சங்களும் கொண்டு முடியும்) எச்சமாகிய, பெயர் வினை – பெயரும் வினையும், ஈற்றினும் எய்தும் – (அவ்வுருவு முதலியவற்றிற்கு இறுதியிலும் வரும். எ–று.

ஈற்றினு வென்ற உம்மையால், முதலினும் வருதல் கொள்க.

| (உ–ம்.) ஈறு. | முதல். |
|---|---|
| சத்தான் வந்தான் | வந்தான் சாத்தன் |
| மரத்தைக் குறைத்தான் | குறைத்தான் மரத்தை |
| சாத்தனால் வந்தான் | வந்தான் சாத்தனால் |
| சாத்தனுக்குக் கொடுத்தான் | கொடுத்தான் சாத்தனுக்கு |
| சாத்தனி னீங்கினான் | நீங்கினான் சாத்தனின் |
| சாத்தன தாடை | ———————————— |
| சாத்தன்கட் சென்றான் | சென்றான் சாத்தன்கண் |

சாத்தா வா வா சாத்தா

வந்தான் சாத்தன்　சாத்தன் வந்தான்

வந்த சாத்தன்　----------------

வந்து போயினான்　போயினான் வந்து.

முற்றெச்சங்களினெச்சங்கள் ஈரிடத்தும் வந்தன.

'எய்துமீற்றின்' என்றாற்போல முதற்கண் வருதலை யெடுத்தோ தாது உம்மையாற் றழுவிக்கொண்டார்; ஆறனுருபினெச்சமும் ஏழனுருபினெச்சப்பெயரும் பெயரெச்சத்தினெச்சமும் மூதற்கண் வாரா என்பதும், ஒழிந்தன முதற்கண் வரினும் இறுதிக்கண் வருதல்போற் சிறப்பினவல்ல என்பதுந் தோன்று வதற்கு.

'சாத்தனது ஆடை' என்பது 'ஆடை சாத்தனது' என மாறி நின்றால் அது என்பது ஆறாம் வேற்றுமை யுருபாகாது துவ்விகுதி யீற்றுக் குறிப்புவினையாம் என்பதறிக.

## கா. நமச்சிவாய முதலியார்

எச்சம் – (உருபுகளும் முற்றுக்களும் பெயரெச்சங்களும் வினையெச்சங்களும் கொண்டு முடியும்) எச்சமாகிய, *பெயர் வினை* – பெயரும் வினையும், ஈற்றினும் – (அவற்றிற்கு) ஈற்றினும், எய்தும் – வரும்.

'ஈற்றினும்' என்ற உம்மையால் முதலினும் வருதல் கொள்க.

| (ஈறு) | (முதல்) |
|---|---|
| சாத்தன் வந்தான் | வந்தான் சாத்தன் |
| மரத்தைக் குறைத்தான் | குறைத்தான் மரத்தை |
| சாத்தனால் வந்தான் | வந்தான் சாத்தனால் |
| சாத்தனுக்குக் கொடுத்தான் | கொடுத்தான் சாத்தனுக்கு |
| சாத்தனின் நீங்கினான் | நீங்கினான் சாத்தனின் |
| சாத்தன தாடை | ------ |
| சாத்தன்கட் சென்றான் | சென்றான் சாத்தன்கண் |
| மணியின்கண் ஒளி | ------ |
| சாத்தா வா | வா சாத்தா |

உருபுகளின் எச்சங்கள் ஈரிடத்தும் வந்தன.

| | |
|---|---|
| வந்தான் சாத்தன் | சாத்தன் வந்தான் |
| வந்த சாத்தன் | ------ |
| வந்து போயினான் | போயினான் வந்து |

முற்று, எச்சம் இவைகளின் எச்சங்கள் ஈரிடத்தும் வந்தன.

முதற்கண் வருதலை உம்மையால் தழுவிக்கொள்ளுதலால், ஆறனுருபின் எச்சமும் ஏழனுருபின் எச்சப்பெயரும் பெயரெச்சத்தின் எச்சமும் முதற்கண் வாரா என்பதும், ஒழிந்தவை முதற்கண் வரினும் இறுதியில் வருதல்போல் சிறப்பின அல்ல என்பதும் தோன்றுதல் அறிக.

## மோசசு பொன்னையா

வேற்றுமையுருபுகள்; தொழில், குறிப்புவினை முற்றுக்கள்; பெயர், வினையெச்சங்கள் ஆகியவற்றின் முடிக்குஞ்சொற்களாக வரும் பெயர் வினைகள் அவற்றின் முன்னேரேயன்றிப் பின்னரும் வரும் எ–று.

உம்மையால், ஈற்றில் வருதலோடு முதலில் வருதலும் வழக்கு என்பது போதரும்.

எ–டு.

| ஈற்றில் முடிக்குஞ்சொல் வந்தன | முதலில் முடிக்குஞ்சொல் வந்தன |
|---|---|
| 1. சாத்தன் வந்தான் | –வந்தான்சாத்தன் |
| மரத்தைக் குறைத்தான் | –குறைத்தான் மரத்தை |
| சாத்தனால் வந்தான் | –வந்தான் சாத்தனால் |
| சாத்தனுக்குக் கொடுத்தான் | –கொடுத்தான் சாத்தனுக்கு |
| சாத்தனின் நீங்கினான் | –நீங்கினான் சாத்தனின் |
| சாத்தனது ஆடை | –ஆடை சாத்தனது |
| சாத்தன்கண் சென்றான் | – சென்றான் சாத்தன்கண் |
| மணியில் ஒலி | –ஒலி மணியில் |
| சாத்தா வா | –வா சாத்தா |

–முடிக்குஞ் சொற்களாகப் பெயர்களே வரற்குரிய ஆறன், ஏழன் உருபுகளல்லா அனைத்துருபுகளும் ஈரிடத்தும் முடிக்குஞ் சொற்களைப் பெற்று வந்தன.

| | |
|---|---|
| 2. வந்தான் சாத்தன் | –சாத்தன் வந்தான் |
| வந்த சாத்தன் | –சாத்தன் வந்த |
| வந்து போனான் | –போனான் வந்து |

–பெயரையே முடிக்குஞ் சொல்லாகக் கொள்ளும் பெயரெச்சவினையல்லா வினைகளின் முடிக்குஞ் சொற்கள் ஈரிடத்தும் வந்தன.

முதலாம் வேற்றுமைஉருபு ஈற்றில் முடிக்குச்சொல்லைப் பெறுங்கால் வினையையும், முதலில் முடிக்குஞ் சொல்லைப் பெறுங்கால் வினைமுதலையும் உணர்த்தி நிற்கும் வேறுபாடறிக.

முதற்கண் வருதலை உம்மையால் தழுவியதால், ஆறனுருபின் எச்சமும், ஏழன் உருபின் எச்சப்பெயரும், பெயரெச்சத்தின்

எச்சமும் முதற்கண் வருதலில்லை எனவும், ஒழிந்தன முதற்கண்வரினும் இறுதிக்கண் வருவனபோற் சிறப்புடையனவல்ல எனவும் கொள்க.

இவ்வியலில் இதுகாறும் இவ்வாசிரியர் தங்கால வாக்கிய அமைப்பின் பொதுத் தன்மையை ஒருவாறு தெளிவுறுத்தினார் என அறிக.

(6)

## 357. ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே.

ஒரு மொழி ஒழி தன் இனம் கொளற்கு உரித்தே.

oru moḷi oḷi taṉ iṉam koḷal ku uriṭṭu ē

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Inclusion of omitted words**

It is natural for one word to include (any) other omitted words that are kindred to it.

## மயிலை நாதர்

எ–ன், பெயர்ச்சொல் வினைச்சொற்கட்கு எய்தியதோர் விதியுணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் [1]ஒன்றேநின்று ஒழிந்த தன்னினங்களையும் தழுவுதற்கு உரித்தாம், எ–று.

"தக்கோலந் தின்று தலைநிறையப் பூச்சூடி" (நாலடி.43) எனவும், நஞ்சுண்டான்சாம், பார்ப்பான்கள்ளுண்ணான் எனவும், நின்ற ஒருமொழிகள் தமக்கு இனமான, 'தீம்பூ, இலவங்கம்' சாதி முதலானவுந் தின்று எனவும், நஞ்சுண்டாள்சாம், நஞ்சுண்டார்சாவர், நஞ்சுண்டது சாம், நஞ்சுண்டவை சாம்

பாட வேறுபாடு.:-

1.ஒன்றெனினும் ஒழிந்த

எனவும், பார்ப்பனியும் கள்ளுண்ணாள், பார்ப்பாரும் கள்ளுண்ணார் [1]எனவும் தமக்கினமானவற்றையும் தழுவி நின்றவாறு காண்க. பிறவுமன்ன.

[2]"ஒருபாற் கிளவி யெனைப்பாற் கண்ணும், வருவகை தானே வழக்கென மொழிப" (பொருளியல், சூ.28) என்றார், மெய்ந்நூலார் தொல்காப்பியனார்.

## சங்கர நமச்சிவாயர்

எ–னின், நால்வகைச்சொற்கும் ஆவதோர் இலக்கணம் உணர்–ற்று.

இ–ள்.: பெயர் வினை இடை உரி என்னும் நால்வகைச் சொற்களுள், ஒவ்வொன்று எஞ்சி நின்ற தன்தன் இனங்களைக் கொள்ளுதற்கு உரித்தாம், எ–று.

மொழியெனப் பொதுப்படக் கூறினமையின் நால்வகைச் சொற்கும் என்பது பெற்றாம்.

வ–று.:–

> சோற்றை நனி உண்டான் என்றவழிக் கறியை நனி தின்றான் என்றற்றொடக்கத்தனவும், பாக்கை நனிதின்றான் என்றவழி வெற்றிலையை நனிதின்றான், சுண்ணாம்பை நனிதின்றான் என்பனவும், நஞ்சுண்டான் சாவான் என்றவழி நஞ்சுண்டாள் சாவாள், நஞ்சுண்டது சாம் என்பனவும், பார்ப்பான் கள் ளுண்ணான் என்றவழிப் பார்ப்பனி கள்ளுண்ணாள் என்பனவும் கூறாதே அமைந்து கிடத்தலின் இனங்களாய் எஞ்சி நின்றன. இவற்றுள், சோற்றை என்னும் பெயர்ச் சொல்லும் உருபிடைச்சொல்லும் கறியை என்னும் பெயர்ச் சொல்லையும் உருபிடைச்சொல்லையும், நனி உண்டான் என்னும் உரிச்சொல்லும் வினைச்சொல்லும் நனிதின்றான் என்னும் உரிச்சொல்லையும் வினைச் சொல்லையும் கொள்ளுதற்கு உரியவாய் நிற்றல் காண்க. பிறவும் அன்ன.

---

பா–டு.:

1 எனவும், பெயராகும் தக்கோலமும் வினையாகும் உண்டானென்பதும் பார்ப்பானென்பதும் முதலினின்று ஒழிந்தவை யெல்லாந் தழுவி நின்றவை காண்க.

2. "ஒருபாற்கிளவியேனப்பாற் கண்ணும் வருவனதாமே வழக்கெனப்படுமே" என்றார் முன்னூலார் தொல்காப்பியனாரு மென்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், பெயர்ச்சொல் வினைச்சொற்கட்கு எய்தியதோர் இயல்பு கூறுகின்றது.

இ-ள்.:- ஒருமொழி - ஒரு பெயர்ச்சொல்லும் ஒரு வினைச்சொல்லும் நின்றே, ஒழிதன் இனம் - ஒழிந்த தன்னினங்களையும், கொளற்குரித்தே - தழுவுதற்கு உரித்தாம், எ-று.

உ-ம்.:-

"தக்கோலந் தின்று தலைநிறையப் பூச்சூடி" (நாலடி. 43), நஞ்சுண்டான் சாவான், பார்ப்பான் கள்ளுண்ணான் என நின்ற ஒரு மொழிக்கு இனமான தீம்பூ, இலவங்கம், சாதி முதலானவும் தின்று எனவும் நஞ்சுண்டாள் சாவாள், பார்ப்பனி கள்ளுண்ணாள் எனவும் ஒழிந்த பாலினும் வந்து தமக்கு இனமானவற்றையும் தழுவின.

## விசாகப் பெருமாளையர்

இது, நால்வகைச் சொற்களுக்கு மாவதோரிலக்கண முணர்த்துகின்றது,

இ-ள்.: ஒருமொழி-பெயர்வினையிடையுரிகளுள் ஒருசொல், ஒழி-ஒழிந்துநின்ற, தன்-தன்னுடைய, இனம்-இனங்களை, கொளற்கு - கொண்டு முடிதற்கு, உரித்து-உரித்தாகும், எ-று.

வ-று.:-

'சோற்றை நனியுண்டான்' என்றவிடத்தே கறியை நனிதின்றான் எனவும், நஞ்சுண்டவன் சாவான், என்றவிடத்தே நஞ்சுண்டவள் சாவாள், நஞ்சுண்டவர் சாவார், நஞ்சுண்டது சாம், நஞ்சுண்டவை சாம்-எனவும், கூறாதே யமைதலின் இனங்களாயெஞ்சி நின்றன, இவற்றுள், சோற்றை என்கிற பெயர்ச்சொல்லும், உருபிடைச்சொல்லும், கறியை என்கிற பெயர்ச்சொல்லையும், உருபிடைச்சொல்லையும், நனியுண்டான் என்கிற உரிச்சொல்லும், வினைச்சொல்லும், நனிதின்றான் என்கிற உரிச்சொல்லையும், வினைச்சொல்லையும், கொள்ளுதற்குரியவாய் நிற்றல் காண்க. மற்றவைகளு மிப்படியே வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

ஒரு சொல்லால் அதன் இனமுங் கொள்ளப்படுமெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே.

(ஒருமொழி ஒழி தன் இனம் கொளற்கு உரித்தே.)

இ–ள்.:– ஒரு சொல்லானது பொருளாற்றலால் ஒழிந்துநின்ற தன்னினத்தைத் தழுவிக்கொள்ளுதற்குரியதாம், எ–று.

வரலாறு.

சோற்றை நனியுண்டான் என்றவழிக், கறியை நனிதின்றான் என்றற்றொடக்கத்தனவும், பாக்கை நனிதின்றான் என்றவழி, வெற்றிலையை நனிதின்றான், சுண்ணாம்பை நனிதின்றான் என்பனவும், நஞ்சுண்டவன் சாவான் என்றவழி, நஞ்சுண்டவள் சாவாள், நஞ்சுண்டவர் சாவார், நஞ்சுண்டது சாம், நஞ்சுண்டவை சாம் என்பனவுங் கூறாதே யமைதலின், இனங்களா யெஞ்சிநின்றன.

## முகவை இராமானுச கவிராயர்

இது, நால்வகைச் சொற்கு மாவதோரிலக்கண முணர்த்திற்று.

இ–ள்.: ஒருமொழி – பெயர் வினை இடை உரி என்னும் நால்வகைச் சொற்களுள் ஒவ்வொன்று, ஒழிதன்னிங் கொளற்குரித்து – ஒழிந்து நின்ற தன்தன் இனங்களைக் கொள்ளுதற்கு உரித்தாம், எ–று.

வ–று.:–

சோற்றைநனியுண்டான் என்றால், கறியை தின்றான், எனவும் பாக்கைநனிதின்றான் எனின் வெற்றிலையை நனிதின்றான், சுண்ணாம்பை நனி தின்றான் எனவும், நஞ்சுண்டான் சாவான் எனின், நஞ்சுண்டாள் சாவாள், நஞ்சுண்டார் சாவார், நஞ்சுண்டது சாம், நஞ்சுண்டவை சாம் எனவும் பார்ப்பான் கள்ளுண்ணான் எனின், பார்ப்பனி கள்ளுண்ணாள், பார்ப்பார் கள்ளுண்ணார் எனவும் கூறாதே அமைதலால் இவை இனங்களாய் ஒழிந்து நின்றன. இவற்றுள் சோற்றை என்னும் பெயர்ச்சொல்லும் உருபிடைச் சொல்லும் கறியை என்னும் பெயர்ச் சொல்லையும் உருபிடைச் சொல்லையும் நனியுண்டான் என்னும் உரிச்சொல்லும் வினைச்சொல்லும் நனிதின்றான் என்னும் உரிச்சொல்லையும் வினைச்சொல்லையும் கொள்ளுதற்கு உரிமையவாய் நிற்றல் காண்க. பார்ப்பான் கள்ளுண்ணான் என்பது சாதி பற்றி வருதலால் பிற சாதியார்க்கும் அஃறிணைக்கும் செல்லாதென உணர்க. பிறவுமன்ன. ஒருமொழி கொளற்குரித்து என முடிக்க.

## கா. கோபாலாசாரியர்
## தி.கோ. ரங்காசாரியர்

உரை :– ஒருமொழி – (நால்வகைச் சொற்களுள்) ஒரு சொல், (தன்னை யுணர்துவதோடு), ஒழி – நீங்கிநின்ற, தன் இனம்–தன் இனங்களையும், கொளற்கு – தழுவிக்கொள்ளுதற்கு, உரித்து– உரியதாம்.

உதாரணம்

சோற்றை உண்டான் – 'சோறு' என்னும் பெயர் 'கறி' முதலிய தன் இனத்தையும், 'உண்டான்' என்னும் வினை 'தின்றான்' முதலிய தன் இனத்தையும் குறித்தன.

நஞ்சுண்டவன் சாவான்– இவ்வாண்பாற் பெயர்வினைகள் 'நஞ்சுண்டவள் முதலிய தன் இனமான மற்றைப் பாற் பெயர்வினைகளையும் குறித்தன.

குறிப்பு :– இதனை "உபலக்ஷணம்" என்பர் வடநூலார். (பிறவும் இவ்வாறே வருதல் காண்க.)

## ஆறுமுக நாவலர்

இ–ள்.: ஒருமொழி–பெயர் வினை யிடை யுரியென்னு நால்வகைச் சொற்களுள் ஒவ்வொன்று, ஒழி தன் இனம் கொளற்கு உரித்து–ஒழிந்து நின்ற தன்றனினங்களைக் கொண்டு முடிதற்குரித்தாகும். எ–று.

வ–று.:–

சோற்றை நனி யுண்டான் என்றவழிக் கறியை நனி தின்றான் என்றற் றொடக்கத்தனவும், பாக்கை நனி தின்றான் என்றவழி, வெற்றிலையை நனி தின்றான், சுண்ணாம்பை நனி தின்றான் என்பனவும், நஞ்சுண்டவன் சாவான் என்றவழி, நஞ்சுண்டவள் சாவாள், நஞ்சுண்டவர் சாவார், நஞ்சுண்டது சாம், நஞ்சுண்டவை சாம், என்பனவுங் கூறாதே யமைதலின், இனங்களாயெஞ்சி நின்றன. இவற்றுள், சோற்றை யென்னும் பெயர்ச்சொல்லும் உருபிடைச் சொல்லும், கறியையென்னும் பெயர்ச்சொல்லையும் உருபிடைச்சொல்லையும், நனியுண்டா னென்னு முரிச்சொல்லும் வினைச்சொல்லும், நனிதின்றா னென்னு முரிச்சொல்லையும் வினைச்சொல்லையுங் கொள்ளுதற்குரியவாய் நிற்றல் காண்க. பிறவுமன்ன.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். ஒருமொழி** – பெயர் வினை யிடையுரி யென்னு நால்வகைச் சொற்களுள் ஒவ்வொன்று, – **ஒழி தன் இனம் கொளற்கு உரித்து** – ஒழிந்து நின்ற தன்ற னினங்களைக்கொண்டு முடிதற்குரித்தாகும் எ– று.

**வ–று.:–**

சோற்றை நனி யுண்டான் என்றவழிக், கறியை நனி தின்றான் என்றற்றொடக்கத்தனவும், பாக்கை நனி தின்றான் என்றவழி, வெற்றிலையை நனி தின்றான், சுண்ணாம்பை நனி தின்றான் என்பனவும், நஞ்சுண்டவன் சாவான் என்றவழி நஞ்சுண்டவள் சாவாள், நஞ்சுண்டது சாம் என்பனவுங் கூறாதே யமைதலின், இனங்களாயெஞ்சிநின்றன. இவற்றுள், சோற்றையென்னும் பெயர்ச்சொல்லு கறியையென்னும் பெயர்ச்சொல்லையும் உண்டானென்னும் வினைச்சொல்லு தின்றானென்னும் வினைச்சொல்லையுங் கொள்ளுதற்குரியவாய் நிற்றல் காண்க. பார்ப்பான் கள்ளுண்ணான். எ–ம். என்றவழி பார்ப்பனி கள்ளுண்ணாள் எனவும் வாழ்க அந்தணர் என்றவழி மற்றைச் சாதியாரும் வாழ்க. எ–ம். வருதல் கொள்க. இவைபோல்வன பிறவு மிவ்வாறேயாம். இவ்வாறு பொருள்படநிற்பதனை வடநூலார் உபலக்ஷணமென்பர்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.: ஒருமொழி**– (நால்வகைச் சொற்களுள்) ஒருசொல், (தன்னை உணர்த்துவதோடு), **ஒழி**–ஒழிந்துநின்ற, **தன் இனம்**–தன் இனங்களையும், **கொளற்கு**–தழுவிக்கொள்ளுதற்கு, **உரித்து**–உரியதாம்; எ–று.

உ–ம்.:–

'சோற்றை உண்டான்' என்றால், அதனோடு கறியைத் தின்றான் என்பது முதலியனவும், 'வெற்றிலை தின்றான்' என்றால், அதனோடு பாக்குச் சுண்ணாம்புகளைத் தின்றான் என்பதும், 'நஞ்சு உண்டவன் சாவான்' என்றால், நஞ்சுண்டவள் சாவாள், நஞ்சுண்டவர் சாவார், நஞ்சுண்டது சாம், நஞ்சுண்டவை சாம் என்பனவும் கூறாமலே அமையும். இவற்றுள் 'சோறு' என்னும் பெயர்ச்சொல்–ஒழிந்த கறி முதலிய தன் இனங்களையும், 'உண்டான்' என்னும் வினைச்சொல்–தின்றான் முதலிய தன் இனங்களையும், 'வெற்றிலை' என்னும் பெயர்ச்சொல்–மற்றைப் பாக்குச் சுண்ணாம்புகளையும், 'உண்டவன் சாவான்' என்னும் ஆண்பாற் பெயர் வினைகள்–

மற்றை நான்குபாற் பெயர்வினைகளையும் கொள்ளுதற்கு உரியனவாக நின்றமை காண்க.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– ஒருமொழி – (பெயர்வினை யிடையுரியென்னு நால்வகைச் சொற்களுள்) ஒருசொல், ஒழி–ஒழிந்து நின்ற, தன் இனம் கொளற்கு உரித்து – தன்தனினங்களைக் கொண்டுமுடிதற் குரித்தாகும். எ–று.

(உ–ம்.)

சோற்றை நனி யுண்டான் – என்புழிக் கறியை நனிதின்றான் என்றற் றொடக்கத்தனவும்; பாக்கை நனி தின்றான் – என்புழி, வெற்றிலையை நனி தின்றான், சுண்ணாம்பை நனி தன்றான் என்பனவும்; நஞ்சண்டவன் சாவான் – என்புழி, நஞ்சுண்டவள் சாவாள், நஞ்சுண்டவர் சாவார், நஞ்சுண்டது சாம் என்பனவுங் கூறாதே யமைதலின், இவை இனங்களா யெஞ்சிநின்றன. இவற்றுள், சோற்றை யென்னும் பெயர்ச்சொல்லும் உருபிடைச் சொல்லும், கறியையென்னும் பெயர்ச்சொல்லையும் உருபிடைச் சொல்லையும்; நனியுண்டான் என்னு முரிச்சொல்லும் வினைச்சொல்லும் நனி தின்றனென்னும் முரிச்சொல்லையும் வினைச்சொல்லையுங் கொள்ளுதற் குரியவாய் நிற்றல் காண்க. பிறவுமன்ன.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) ஒரு மொழி – (பெயர் வினை இடை உரிகளுள்) ஒரு சொல், ஒழி – ஒழிந்து நின்ற, தன் இனம் – தன்னுடைய இனங்களை, கொளற்கு–கொண்டு முடிதற்கு, உரித்து–உரித்தாகும். (எ–று)

(பொ–ரை.) பெயர் வினை இடை உரி என்னும் நால்வகைச் சொற்களுள் ஒவ்வொன்று, எஞ்சி சின்ற தன் தன் இனங்களைக் கொள்ளுதற்கு உரித்தாம்.

(உ–ம்)

சோற்றை நனி உண்டான் என்பதில் கறியை நனிதின்றான்.

பாக்கு நனி தின்றான் என்பதில் வெற்றிலையை நனி தின்றான், சுண்ணாம்பை நனி தின்றான். நஞ்சுண்டவன் சாவான் என்பதில், நஞ்சுண்டுவள் சாவாள், நஞ்சுண்டவர் சாவார், நஞ்சுண்டது சாம், நஞ்குண்டவை சாம்.

எனவும் கூறாதே யமைதலின் இனங்களாய் எஞ்சி நின்றன.

இவற்றுள், சோற்றை என்கிற பெயர்ச் சொல்லும் உருபிடைச் சொல்லும், தறியை என்கிற பெயர்ச் சொல்லையும் உருபுடைச் சொல்லையும்; நனி உண்டான் என்கிற உரிச் சொல்லும்

வினைச்சொல்லும், நனிதின்றான் என்கிற உரிச்சொல்லையும் வினைச் சொல்லையும் கொள்ளுதற்கு உரியவாய் நிற்றல் காண்க. மற்றவை களுமிப்படியேவரும். இதனால் ஒரு சொல் எஞ்சிநின்று அதன் இனத்தைக் கொள்ளுமென்பதாம்.

## கா. நமச்சிவாய முதலியார்

ஒருமொழி – ஒரு சொல், ஒழி – ஒழிந்து நின்ற, தன் இனம் - தன்னுடைய இனங்களை, கொளற்கு – கொண்டு முடிதற்கு, உரித்து – உரித்தாகும்.

ஒருமொழி என்றது, ஓரினத்திற் சிறந்த பொருளைக் குறிக்கும் சொல்.

**உதாரணம்**

| | |
|---|---|
| சோற்றை யுண்டான் என்றால் – | கறியைத் தின்றான் எனவும், |
| வெற்றிலை தின்றான் என்றால் | பாக்கு தின்றான்<br>சுண்ணாம்பு தின்றான் எனவும், |
| நஞ்சுண்டவன் சாவான் என்றால் | நஞ்சுண்டவள் சாவாள்<br>நஞ்சுண்டவர் சாவார்<br>நஞ்சுண்டது சாம்<br>நஞ்சுண்டவை சாம் |

எனவும் கூறாதே அமைதலின், இனங்களாய் எஞ்சி நின்றன.

இவற்றுள், சோறு என்னும் பெயர்ச்சொல், கறி என்னும் பெயர்ச்சொல்லையும் உண்டான் என்னும் வினைச்சொல் தின்றான் என்னும் வினைச்சொல்லையும் கொள்ளுதற்கு உரியவாய் நிற்றல் காண்க.

## மோசசு பொன்னையா

பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகைச் சொற்களுள் ஒவ்வொன்றும் ஒழிந்துநின்ற தன் இனங்களைக் கொள்ளுதற்கு உரியதாம் எ–று.

இனங்கொள்ளற் குரிய சொற்களே இனங்களைத் தழுவிக் கொள்வதற்குரியன எனக்கொள்க.
எ–டு.

1. சோற்றை நனி உண்டான்
2. வெற்றிலையை நனி தின்றான்
3. நஞ்சுண்டான் சாவான்
4. பார்ப்பான் கள்ளுண்ணான்

சோற்றை நனி உண்டான் என்றவழி, கறியை நனி தின்றான் என்பதும்; வெற்றிலையை நனி தின்றான் என்ற வழி, பாக்கை சுண்ணாம்பை நனி தின்றான் என்பனவும்; நஞ்சுண்டான் சாவான் என்றவழி, நஞ்சுண்டாள் சாவாள், நஞ்சுண்டார் சாவார், நஞ்சுண்டது சாம், நஞ்சுண்டன சாம் என்பனவும்; பார்ப்பான் கள்ளுண்ணான் என்றவழி பார்ப்பனி கள்ளுண்ணாள் என்பதும் குறிப்பாக அமைந்து கிடப்பன ஆதலின் தழுவப்பட்டனவாம்.

இவற்றுள் சோற்றை என்றவிடத்துப் பெயர்ச்சொல்லும் இடைச்சொல்லும், கறியை எனப் பெயர்ச்சொல்லையும் இடைச்சொல்லையும் தழுவின. நனி உண்டான் என்றவழி உரிச்சொல்லும் வினைச்சொல்லும், நனி தின்றான் என உரிச்சொல்லையும் வினைச்சொல்லையும் தழுவின. இவ்வாறே ஏனையவற்றிற்கும் கூறிக்கொள்க.

(7)

## 358. பொதுப்பெயர் வினைகளின் பொதுமை நீக்கும் மேல்வருஞ் சிறப்புப் பெயர்வினை தாமே.

பொதுப்பெயர் வினைகளின் பொதுமை நீக்கும்
மேல் வரும் சிறப்புப்பெயர் வினை தாமே.

poṭu peyar viṉaikaḻiṉ poṭumai nīkkum
mēl varum siūappu peyar viṉai ṭām ē

### இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Gender of the common-class**

The Gender of Nouns and Verbs of the common-class (in every particular instance) is determined by (that of) the Particular Nouns and Verbs which govern them.

### மயிலை நாதர்

இதுவுமது.

இ—ள்.: திணை பாலிடங்கட்குப் பொதுவாய் நின்ற பெயர்

வினைகளுடைய பொதுமையை நீக்கி ஒன்றற்கு உரித்தாக்கும், அவற்றின் மேல் வரும் பொதுவல்லாப் பெயரும் வினையும், எ–று.

எனவே பொதுவான [1]பெயர்வினைகள்வந்தால், விளங்கா வென்றவாறு.

வ–று.:–

சாத்தன், முடவன், முடக்கொற்றன், தந்தை என்பன [2]இருதிணைக்கும் பொதுவான பெயர்; இவற்றைச் சாத்தன் இவன்மகன், சாத்தன் இதன்மகன், முடவன் இவன் மகன், முடவன் இதன் மகன், முடக்கொற்றன் இவன்மகன்; முடக்கொற்றன் இதன்மகன்; சாத்தன்தந்தை இவன், சாத்தன்றந்தை இது எனச் சிறப்புப்பெயர் ஒருதிணைக்கு உரிமை செய்தன. (சாத்தன்)+(வந்தான், வந்தது) (முடவன்) + (வந்தான், வந்தது) (முடக்கொற்றன்) + (வந்தான், வந்தது) (தந்தை) + (வந்தான், வந்தது) [3]எனச் சிறப்புவினை ஒருதிணைக்கு உரிமை செய்தன. சாத்தி முதற் [4]பெயர் முதலானவற்றிற்கும் இவ்வாறே கொள்க. யான், யாம் எனவும், நீ, நீயிர் எனவும் வரும் தன்மை முன்னிலைப்பெயர்கள் சிறப்புப் பெயராலன்றி வினையால் திணையும் பாலும் விளங்கா; அவை: யான்பாணன், யான்பாடினி; யான் கடுவன், யான் பேடை; (யாம்) + (அரசர், அரிவையர், சேவல்கள், பேடைகள்) எனவும், (நீ) + (நம்பி, நங்கை, சேவல், பேடை); (நீயிர்) + (புலவிர், விறலியிர், சேவலிர், பேடையிர்) எனச் சிறப்புப்பெயரால் திணை பால் விளங்கின. உண்ணும், வாழ்க, வேறு, இல்லை, உண்டு என்பன திணைபாற்குப் பொதுவான முற்றுவினை. இவற்றை, (உண்ணும்) + (நம்பி, நங்கை, போத்து, நாகு நாடு, நல்லன) எனவும், (வாழ்க) + (நம்பி, நங்கை, நல்லோர், போத்து, நாகு, நாடு, நல்லன, யான், யாம், நீ, நீயிர்) எனவும், (வேறு) + (நம்பி, நங்கை, நல்லோர், போத்து, நாகு, நாடு, நல்லன, யான், யாம், நீ, நீயிர்) எனவும், (இல்லை) + (நம்பி, நங்கை, நல்லோர்,

---

பாட வேறுபாடு.:–

1. பெயரும் வினையும் வந்து புணர்ந்தால் சிறப்புப்பெயர் விளங்காவெனக் கொள்க.

2. பொதுவாகிய முதற்பெயரும் சினைப்பெயரும் சினைமுதற் பெயரும் முறைப்பெயரும் ஆம்; இவற்றைச் சாத்தனிவன்

3. என வினை

4. முதற்பெயர்க்கும் இன்னன ஒட்டிக்கொள்க. இனியான்.

போத்து, நாகு, நாடு நல்லன, யான் யாம், நீ, நீயிர்) எனவும், (உண்டு) + (நம்பி,....நீயிர்) எனவும் பெயர் ஒன்றற்கு உரிமைசெய்தன. பெயரெச்சவினை: உண்ட, உண்ணா நின்ற, உண்ணுமென்பன. இவற்றை, (உண்ட) + (நம்பி, நங்கை, நல்லோர், போத்து, நாகு, நாடு, நல்லன, யான், யாம், நீ, நீயிர்) எனப் பெயர் ஒன்றற்கு உரிமைசெய்தன. ஒழிந்தனவிரண்டும் இன்ன. உண்டெடன்பது வினையெச்சப் பொது. இதனை (உண்டு) + (வந்தான், வந்தாள், வந்தார், வந்தது, வந்தன, வந்தேன், வந்தேம், வந்தாய், வந்தீர்) என வினை ஒன்றற்குரிமை செய்தன. பிறவுமன்ன.

இனி, வருவன்யான், வருதும்யாம்; வருதிநீ, வருதிர் நீயிர் எனவும், யான்வந்தேன், யாம்வந்தேம், நீ வந்தாய், நீயிர்வந்தீர் எனவும் இவ்வாறு வரும் பெயர்வினைகளான் விளங்காதவாறு காண்க.

## சங்கர நமச்சிவாயர்

எனின், பெயர் வினைகட்கு ஆவதோர் இலக்கணம் உணர்–ற்று.

இ–ள்.: திணை பால் இடம் காலங்கட்குப் பொதுவாகிய பெயர் வினைகளினுடைய பொதுத்தன்மையினை நீக்கி, ஒன்றற்கு உரிமை செய்யும் மேல்வரும் சிறப்புப்பெயர் வினைகள் தாமே, எ–று.

ஒன்றற்கு இருமருங்கினையும் மேல் என்ப ஆகலின் சிறப்புப் பெயர் வினை யாண்டு வரினும் கொள்க.

தாமே என்னும் பிரிநிலை ஏகாரம், குறிப்பினான் உற்று உணர்ந்து இடர்ப்பட வேண்டா என்னும் பொருள் தந்து நின்றது.

வ–று.:–

சாத்தன் இவன், சாத்தன் இது எனவும்; சாத்தன் வந்தான், சாத்தன் வந்தது எனவும் பெயர்த்திணைப் பொதுமையினைச் சிறப்புப்பெயரும் வினையும் வந்து நீக்கின. ஒருவர் என் ஐயர், ஒருவர் என் தாயர் எனவும்; மரம் வளர்ந்தது, மரம் வளர்ந்தன எனவும் பெயர்ப்பால் பொதுமையினைச் சிறப்புப்பெயரும் வினையும் வந்து நீக்கின. அவரெல்லாம் இருந்தார், யாமெல்லாம் வருவம் நீவிரெல்லாம் போமின் எனப் பெயரிடப் பொதுமையினைச் சிறப்புப் பெபரும் வினையும் வந்து நீக்கின. வாழ்க அவன், அவள், அவர், அது, அவை, யான், யாம், நீ, நீர் எனவும்; உண்டு வந்தான், வந்தாள், வந்தார், வந்தது, வந்தன, வந்தேன், வந்தேம், வந்தாய், வந்தீர், வருகின்றான், வருவான் எனவும் வினைத் திணை பால் இடம் காலப் பொதுமையினைச்

சிறப்புப்பெயரும் வினையும் வந்து நீக்கின. பிறவும் அன்ன.

உண்டு என்பது இறந்தகால வினையெச்சமாயினும், முக்கால வினைகளையும் கொண்டு முடிதற்கு உரிய பொதுமையினை உடைத்தாதலின் அதனை மேல்வரும் சிறப்புவினை நீக்கின.

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், பொதுப்பெயர்க்கும் பொதுவினைக்கும் ஆவதோர் இயல்பு கூறுகின்றது.

**இ—ள்.: பொதுப்பெயர் வினைகளின்** – திணை பால் இடங்கட்குப் பொதுவாய் நின்ற பெயர் வினைகளுடைய, **பொதுமை நீக்கும்**—பொதுமையை நீக்கி ஒன்றற்கு உரித்தாக்கும், **மேல்வருஞ் சிறப்புப் பெயர்வினை தாமே**— அவற்றின்மேல் வரும் பொதுவல்லாத சிறப்புப் பெயரும் சிறப்பு வினையும், எ—று.

**உ—ம்.:—**

சாத்தன் இவன் மகன், சாத்தன் இதன் மகன்; முடவன் இவன் மகன், முடவன் இதன் மகன்; முடக்கொற்றன் இவன் மகன், முடக்கொற்றன் இதன் மகன்; தந்தை இவன், தந்தை இது எனச் சிறப்புப் பெயர் ஒரு திணைக்கு உரிமை செய்தன. யான் யாம் நீ நீர் முதலான இரு திணைப் பொதுப் பெயர். அவற்றை யான் பாணன், யான் பாடினி, யான் கடுவன், யான் பேடை எனச் சிறப்புப் பெயர் ஒன்றற்கு உரிமை செய்தன. இவ்வகை ஒழிந்த பொதுப் பெயர்க்கும் கொள்க. வந்த, வருகின்ற, வரும் என்பன இரு திணைக்கும் பொதுவான வினை.

இவற்றை வந்த அவன், வந்த அவள், அது, அவை எனச் சிறப்புப் பெயர் ஒரு திணைக்கு உரித்தாக்கின. சிறிய பெரிய என்பன இரு திணைப் பொதுவான வினை. இவற்றைச் சிறிய நம்பி, சிறிய நங்கை, சிறிய மயில், சிறிய மயில்கள் எனச் சிறப்புப் பெயர் ஒரு திணைக்கு வருவாள், வருவார், வருவது, வருவன, வருவேன், வருவேம், வருவாய், வருவர் எனவும் வருகின்றாள், வருகின்றார், வருகின்றது, வருகின்றன, வருகின்றேன், வருகின்றேம், வருகின்றாய், வருகின்றீர் எனவும், உரித்தாக்கின. வந்து, பயிற்றி, நடத்தி என்பன இரு திணைப் பொதுவினை. இவற்றை வந்து போனான், போனாள் எனச் சிறப்பு வினை ஒரு திணைக்கு உரித்தாக்கின. பிறவுமன்ன: இவ்வாறன்றி யான் வருவேன், யாம் வருவேம், நீ வருவாய், நீர் வருவீர் எனப் பொதுப்பெயர் பொது வினைகளான் விளங்கா என்க.

## விசாகப் பெருமாளையர்

இது, பெயர் வினைகளுக்காவதோ ரிலக்கண முணர்த்துகின்றது.

**இ-ள்.:-** **பொது**-திணை பாலிடங் காலங்களுக்குப் பொதுவாகிய, **பெயர்வினைகளின்**-பெயர்வினைகளுடைய, **பொதுமை**-பொதுத்தன்மையை, **நீக்கும்**-நீக்கியொன்றற் குரிமைசெய்யும், **மேல்**-மேலே, **வரும்**-வருகிற, **சிறப்புப்பெயர்வினை** - சிறப்பாகிய பெயர்வினைகள், **தாமே**-தாமே, எ-று.

வ-று.:-

சாத்தனிவன், சாத்தனிது எனவும், சாத்தன் வந்தான், சாத்தன் வந்தது எனவும், பெயர்த்திணைப் பொதுமையினைச் சிறப்புப்பெயரும் வினையும் வந்தது நீக்கின. ஒருவ ரென்றந்தையர், ஒருவரென்றாயார் எனவும், மரம் வளர்ந்தது, மரம் வளர்ந்தன எனவும், பெயர்ப்பாற் பொதுமையினைச் சிறப்புப்பெயரும் வினையும் வந்து நீக்கின. அவரெல்லா மிருந்தார், யாமெல்லாம் வருவம். நீவிரெல்லாம் போமின், எனப் பெயரிடப் பொதுமையினைச் சிறப்புப்பெயரும் வினையும் வந்து நீக்கின. வாழ்க, அவன், அவள், அவர், அது, அவை, யான், யாம், நீ, நீர், என வினைத்திணை பாலிடப் பொதுமையினைச் சிறப்புப்பெயர்கள் வந்து நீக்கின, மற்றவைகளுமிப்படியே வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

பெயர்வினைகளின் பொதுமையை நீக்குவது இதுவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

பொதுப்பெயர் வினைகளின் பொதுமை நீக்கும்
மேல்வருஞ் சிறப்புப் பெயர்வினை தாமே.

(பொதுப் பெயர் வினைகளின் பொதுமை நீக்கும்
மேல் வரும் சிறப்புப் பெயர்வினை தாமே.)

**இ-ள்.:-** திணைபாலிடங்கட்குப் பொதுவாகிய பெயர் வினைகளுடைய பொதுத்தன்மையை நீக்கி ஒன்றற்குரிமை செய்யும் மேலே வருஞ் சிறப்பாகிய பெயர்வினைகள்தாமே, எ-று.

ஒன்றற்கு முன்பின் என்னும் இருமருங்கும் மேலெனப்படுதலாற், சிறப்புப்பெயர் வினை யெவ்விடத்துவரினுங் கொள்க.

இச்சூத்திரம் முன்னியல்களிலே கூறப்பட்ட எவ்வெச் சூத்திரங்களால் முடிந்தவற்றுக்கு ஒழிபு கூறுகின்றது?

பெயரியலிலே 25 முதல் 32 இறுதியாகவுள்ள சூத்திரங்களாலும் வினையியலிலே 11ம் சூத்திரத்தாலு முடிந்தவற்றுக்கு ஒழிபு கூறுகின்றது

வ—று. :-

(1) சாத்தனிவன்; சாத்தனிது எனவும், சாத்தன்வந்தான்; சாத்தன் வந்தது எனவும், பெயர்த்திணைப் பொதுமையைப், பின்வந்த சிறப்புப்பெயரும் வினையும், நீக்கி ஒருதிணையை யுணர்த்தின.

(2) ஒருவரென்னையர்; ஒருவரென்றாயர். எனவும், மரம் வளர்ந்தது; மரம்வளர்ந்தன. எனவும், பெயர்ப்பாற் பொதுமையைப், பின்வந்த சிறப்புப்பெயரும் வினையும், நீக்கி ஒருதிணையையுணர்த்தின.

(3) யாமெல்லாம் வருவம்; நீயிரெல்லாம் போமின் அவரெல்லாமிருந்தார் எனப் பெயரிடப்பொதுமையை, முன் வந்த சிறப்புப்பெயரும், பின்வந்த சிறப்புவினையும், நீக்கி ஒவ்வோரிடத்தை யுணர்த்தின.

(4) வாழ்க அவன், அவள், அவர், அது, அவை, யான், யாம், நீ, நீர் என வினைத்திணை பாலிடப்பொதுமையைப், பின்வந்த சிறப்புப்பெயர்கள், நீக்கி ஒரு திணையையும் பாலையும் இடத்தையும் உணர்த்தின. பிறவு மன்ன.

## முகவை இராமானுச கவிராயர்

இது, பெயர் வினைகளுக்கு ஆவதோரிலக்கண முணர்த்திற்று.

இ—ள்.: **பொதுப்பெயர்வினைகளின்** - (திணை பால் இடம் காலங்களுக்குப்) பொதுவாகிய பெயர் வினைகளினுடைய, **பொதுமைநீங்கும்**- பொதுத்தன்மையை நீக்கி ஒன்றிற்கு உரிமையாக்கும், **மேல்வருஞ் சிறப்புப் பெயர்வினை தாமே** - மேல் வருகின்ற சிறப்புப்பெயரும் வினைகளுந்தாமே, எ—று.

ஒன்றிற்கு முன் பின் என்னும் இருமருங்கையும்மேலென்று சொல்லப்படுதலால், சிறப்புப் பெயர் வினைகள் முன்வரினும் பின்வரினும் மேலெனக் கொள்க. பொதுச் சிறப்பென்னு மிரண்டினுள் பொதுமையைத் தாமேநீக்கும் என நிற்றலால் காரம் ஏ பிரிநிலைப் பொருள்பட நின்றது.

வ—று.:-

சாத்தன் இவன், சாத்தனிது எனவும்; சாத்தன் வந்தான், வந்தது எனவும்; பெயர்த்திணைப் பொதுமையைச் சிறப்புப் பெயரும் வினையும் வந்து நீக்கின. ஒருவர் என்னையர், ஒருவர் என் தாயர் எனவும் மரம் வளர்ந்தது, மரம் வளர்ந்தன எனவும் பெயரின் பாற்பொதுமையைச் சிறப்புப்பெயரும் வினையும் வந்து நீக்கின. அவரெல்லாமிருந்தார், யாமெல்லாம்வருவோம்,

நீயிரெல்லாம்போமின் எனப் பெயரின் இடப்பொதுமையினைச் சிறப்புப்பெயரும் வினையும் வந்து நீக்கின. வாழ்க அவன், அவள், அவர், அது, அவை, யான், யாம், நீ, நீர் எனவும் உண்டு வருகின்றான், உண்டு வந்தாள். வந்தாள், வந்தார், வந்தது, வந்தன, வந்தேன், வந்தேம், வந்தாய், வந்தீர் எனவும்; உண்டு வருவான் வினையின் திணை, பால், இடம், காலப் பொதுமையைச் சிறப்புப்பெயரும் வினையும் வந்து முறையே நீக்கின பிறவுமன்ன. உண்டு என்பது இறந்தகால வினை யெச்சமாயினும் முக்கால வினைகளைக் கொண்டு முடிதற்கு உரிய பொதுமையையுடையது. ஆதலால் அதை மேல்வருஞ் சிறப்பு வினைகள் நீக்கின. இனி, உண்டு வந்து சென்று என்பன முற்றிற்கும் எச்சத்திற்கும் பொதுமையினின்றன. ஆதலால், உண்டுயான் எனப் பெயர்ப்பயனிலை முடிக்கப்படுஞ் சொற்குப்பின் வந்து மற்றுச் சொன்னோக்காது முற்றி நின்று பொதுமையை நீக்கலும், உண்டுவந்தேன்யான் எனப் பெயர்ப்பயனிலை முடிக்குஞ் சொற்குப்பின் வந்து பொதுமையை நீக்கலுமுய்த்துணர்க. மொழியாததனையு முட்டின்றி முடித்தலென்னும் உத்தியால், நீ வருதலால் ஆசாரம் பெற்றேன், யான் வருதலாற் கல்லாதனவெல்லாங் கற்றுணர்ந்தாய் எனின், நீயென்பதும் யான் என்பதும் உயர்திணை யான்பால் எனவும், நீ வருதலாற் குழவியழா தாயிற்று, யான் வருதலாற் குழவியழாதாயிற்று எனின், நீயென்பதும் யான் என்பதும் உயர்திணைப் பெண்பால் எனவும் நீவருதலால் முல்லைபரும்பிற்று எனின், கார்கால மென்பதும் குறிப்பினாலே தோன்றுதலால், சொல்லோடு கூடிய, குறிப்பும் பொதுமையை நீக்குமெனக் கொள்க. சிறப்புப் பெயர் வினைதாமே நீக்குமென முடிக்க.

## கா. கோபாலாசாரியர்

## தி.கோ. ரங்காசாரியர்

உரை :- பொது – (திணைபாலிடங்காலங்களுக்குப்) பொதுவாகிய, **பெயர் வினைகளின்** – பெயர்ச்சொற்கள் வினைச்சொற்களினுடைய, **பொது மை** – பொதுவாயிருக்குந் தன்மையை, **மேல்வரும்** –மேல்வருகின்ற, **சிறப்பு** – (ஒரு திணைபால் இடம் காலத்துக்கே) சிறப்பாகிய, **பெயர் வினை தாமே** – பெயர்ச்சொற்களும் வினைச் சொற்களுமே, **நீக்கும்** – நீக்கி, ஒரு திணை பால் இடம் காலத்துக்கே உரிமை செய்யும்.

குறிப்பு :-

ஒன்றற்கு முன் பின் என்னும் மிரண்டு இடமும் 'மேல்' எனப்படுமாதலால் சிறப்புப் பெயர்வினை எவ்விடத்து வந்தாலுங் கொள்க.

உதாரணம்

1. பெயர்ப்பொது.

| | |
|---|---|
| சாத்தன் இவன்.<br>சாத்தன் இது | திணைப்பொதுமையைச் சிறப்புப் பெயர் நீக்கிற்று. |
| சாத்தன் வந்தான்<br>சாத்தன் வந்தது. | திணைப்பொதுமையைச் சிறப்பு வினை நீக்கிற்று. |
| ஒருவர் என் தாயார்<br>ஒருவர் என் தகப்பனார் | பாற்பொதுமையைச் சிறப்புப்பெயர் நீக்கிற்று. |
| மரம் வளர்ந்தது<br>மரம் வளர்ந்தன | பாற்பொதுமையைச் சிறப்புவினை நீக்கிற்று. |
| யாம் எல்லாம் வருவோம்<br>நீர் எல்லாம் வருவீர்<br>அவர் எல்லாம் வருவார் | இடப்பொதுமையை முன்னும் பின்னும் வந்த சிறப்புப் பெயரும் வினையும் நீக்கின. |

2. வினைப்பொது.

வாழ்க – அவன், அவள், அவர், அது, அவை, நான், நாம், நீ, நீர்.

(திணைபாலிடப் பொதுமையைச் சிறப்புப் பெயர்கள் நீக்கின)

உண்டு – வந்தான், வந்தாள், வந்தார், வந்தது, வந்தன, வந்தேன், வந்தோம், வந்தாய், வந்தீர்.

(திணைபாலிடப் பொதுமையைச் சிறப்புவினைகள் நீக்கின.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.: பொதுப் பெயர் வினைகளின் பெயர் பொதுமை நீக்கும் – திணை பாலிடங்கட்குப் பொதுவாகிய வினைகளுடைய பொதுத் தன்மையை நீக்கி ஒன்றற்குரிமை செய்யும், மேல் வரும் சிறப்புப் பெயர்வினைதாமே – மேலே வருஞ் சிறப்பாகிய பெயர் வினைகடாமே, எ–று.

ஒன்றற்கு முன் பின் என்னும் இருமருங்கும் மேலெனப்படுதலாற், சிறப்புப்பெயர் வினை யெவ்விடத்து வரினுங் கொள்க.

வ–று.:–

(1) சாத்தனிவன்; சாத்தனிது எனவும், சாத்தன் வந்தான்; சாத்தன் வந்தது எனவும், பெயர்த்திணைப் பொதுமையைப் பின் வந்த சிறப்புப்பெயரும் வினையும் நீக்கி ஒருதிணையை யுணர்த்தின.

(2) ஒருவரென்னையர்; ஒருவரென்றாயர் எனவும்; மரம் வளர்ந்தது; மரம் வளர்ந்தன எனவும்; பெயர்ப்பாற் பொதுமையைப், பின் வந்த சிறப்புப்பெயரும் வினையும், நீக்கி யொருபாலை யுணர்த்தின.

(3) யாமெல்லாம் வருவம்; நீயிரெல்லாம் போமின்; அவரெல்லா மிருந்தார் எனப் பெயரிடைப் பொதுமையை, முன் வந்த சிறப்புப் பெயரும், பின் வந்த சிறப்பு வினையும் நீக்கி ஒவ்வோரிடத்தை யுணர்த்தின.

(4) வாழ்க அவன், அவள், அவர், அது, அவை, யான், யாம், நீ, நீர் என வினைத் திணை பாலிடப் பொதுமையைப், பின் வந்த சிறப்புப்பெயர்கள், நீக்கி ஒருதிணையையும் பாலையும் இடத்தையும் உணர்த்தின. பிறவுமன்ன.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். பொதுப்பெயர் வினைகளின் பொதுமை நீக்கும் – திணைபாலிடங்கட்குப் பொதுவாகிய பெயர்வினைகளுடைய பொதுத்தன்மையை நீக்கி ஒன்றற்குரிமை செய்யும், – **மேல் வரும் சிறப்புப் பெயர்வினை** தாமே – மேலேவருஞ் சிறப்பாகிய பெயர்வினைகடாமே. எ – று.

ஒன்றற்கு முன் பின் என்னும் இருமருங்கும் மேலெனப்படுதலாற், சிறப்புப் பெயர்வினை யெவ்விடத்து வரினுங் கொள்க.

வ–று.:–

(1.) *சாத்தனிவன்; சாத்தனிது.* எ–ம். சாத்தன் வந்தான்; சாத்தன் வந்தது, எ–ம். பெயர்த்திணைப் பொதுமையைப், பின்வந்த சிறப்புப் பெயரும் வினையும், நீக்கி ஒருதிணையை யுணர்த்தின.

(2) ஒருவரென்னையர்; ஒருவரென்றாயர். எ–ம். மரம் வளர்ந்தது; மரம் வளர்ந்தன. எ–ம். பெயர்ப்பாற் பொதுமையைப் பின்வந்த சிறப்புப் பெயரும் வினையும், நீக்கி ஒருபாலையுணர்த்தின.

(3.) யாமெல்லாம் வருவம்; நீயிரெல்லாம் போமின்; அவரெல்லாமிருந்தார் எனப் பெயரிடப் பொதுமையை, முன் வந்த சிறப்புப்பெயரும், பின்வந்த சிறப்புவினையும், நீக்கி ஒவ்வோரிடத்தை யுணர்த்தின.

(4). வாழ்க அவன், அவள், அவர், அது, அவை, யான், யாம், நீ, நீர் என வினைத்திணைபாலிடப் பொதுமையைப், பின்வந்த சிறப்புப் பெயர்கள், நீக்கி ஒருதிணையையும் பாலையும் இடத்தையும் உணர்தின. பிறவுமன்ன.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ–ள்.:–** **பொது–** (திணை பால் இடம் காலங்களுக்குப்) பொதுவாகிய, **பெயர் வினைகளின் –** பெயர்ச்சொற்கள் வினைச்சொற்கள் என்பவற்றினுடைய, **பொதுமை–** (அத்திணை முதலியவற்றிற்குப்) பொதுவாயிருக்குந் தன்மையை, **மேல் வரும்–**மேலே வருகிற, **சிறப்பு –** (ஒரு திணை பால் இடம் காலத்துக்கே) சிறப்பாகிய, **பெயர் வினைதாமே–**பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும், **நீக்கும்–**நீக்கி ஒரு திணை பால் இடம் காலத்துக்கே உரிமைசெய்யும், எ–று.

ஒன்றற்கு முன் பின் என்னும் இரண்டு இடமும் 'மேல்' எனப்படுதலால், சிறப்புப்பெயர் வினை எவ்விடத்து வந்தாலும் கொள்க.

பொதுப்பெயர்:–

சாத்தன் இவன், சாத்தன் இது – பெயர்த்திணைப் பொதுமையைப் பின்வந்த சிறப்புப்பெயர் நீக்கி ஒருதிணைக்கு உரிமை செய்தது.

சாத்தன் வந்தான், சாத்தன் வந்தது – பெயர்த் திணைப் பொதுமையைப் பின்வந்த சிறப்புவினை நீக்கி ஒருபாலுக்கு உரிமை செய்தது.

ஒருவர் என்தாயார், ஒருவர் என்தகப்பனார் – பெயர்ப்பாற் பொதுமையைப் பின்வந்த சிறப்புப்பெயர் நீக்கி ஒருபாலுக்கு உரிமை செய்தது.

மரம் வளர்ந்தது, மரம் வளர்ந்தன – பெயர்ப்பாற் பொதுமையைப் பின்வந்த சிறப்புவினை நீக்கி ஒருபாலுக்கு உரிமைசெய்தது.

யாமெல்லாம் வருவோம், நீரெல்லாம் வருவீர், அவரெல்லாம் வருவார்– பெயரிடப் பொதுமையை முன்வந்த சிறப்புப்பெயரும், பின்வந்த சிறப்புவினையும் நீக்கி ஓரிடத்துக்கு உரிமைசெய்தன.

**பொதுவினை:–** 'வாழ்க–அவன், அவள், அவர், அது, அவை, நான், நாம், நீ, நீர்.' – வினைத் திணை பாலிடப் பொதுமையைப் பின்வந்த சிறப்புப்பெயர்கள் நீக்கி ஒருதிணை பால் இடத்துக்கு உரிமை செய்தன.

**'உண்டு–வந்தான், வந்தாள், வந்தார், வந்தது, வந்தன, வந்தேன், வந்தோம், வந்தாய், வந்தீர்'** வினைத் திணை பாலிடப் பொதுமையைப் பின்வந்த சிறப்புவினைகள் நீக்கி ஒன்றுக்கு உரிமை செய்தன.

## பவானந்தம் பிள்ளை

இ—ள்.:- பொதுப் பெயர் வினைகளின் – திணைபாலிடங்கட்குப் பொதுவாகிய பெயர் வினைகளுடைய, பொதுமை நீக்கும் – பொதுத் தன்மையை நீக்கி ஒன்றற்குரிமை செய்யும், மேல் வரும் – மேலேவரும், சிறப்புப் பெயர்வினைதாமே – சிறப்பாகிய பெயர்வினைகடாமே. எ—று.

ஒன்றற்கு முன் பின் என்னும் இருமருங்கும் மேலேனப்படுதலாற், சிறப்புப் பெயர் வினை யெவ்விடத்து வரினுங் கொள்க.

உ—ம்..:-

(1) சாத்தன் இவன், சாத்தன் இது. சாத்தன் வந்தான்; சாத்தன் வந்தது. பெயர்த்திவணைப்பொதுமையைப், பின் வந்தம சிறப்புப்பெயரும் வினையும் நீக்கி ஒருதிணையை யுணர்த்தின.

(2) ஒருவரென் ஐயர், ஒருவரென் தாயர். மரம் வளர்ந்தது; மரம் வளர்ந்தன. பெயர்ப்பாற் பொதுமையைப், பின் வந்த சிறப்புப்பெயரும்வினையும் நீக்கி, ஒருபாலை யுணர்த்தின.

(3) யாம் எல்லாம் வருவம்; நீயிர் எல்லாம் போமின்; அவர் எல்லா மிருந்தார் – எனப் பெயரிடப் பொதுமையை, முன் வந்தசிறப்புப்பெயரும், பின் வந்த் சிறப்புவினையும் நீக்கி, ஒவ்வோரிடத்தை யுணர்த்தின.

(4) வாழ்க அவன், அவள், அவர், அது, அவை, யான், யாம், நீ, நீர் – என வினைத்திவணபாலிடப் பொதுமையைப், பின் வந்த சிறப்புப்பெயர்கள் நீக்கி, ஒருதிணையையும் பாலையும் இடத்தையும் உணர்த்தின. பிறவுமன்ன.

## கா. நமச்சிவாய முதலியார்

பொது – (திணை பால் இடம் காலங்களுக்குப் பொதுவாகிய, பெயர் வினைகளின் – பெயர் வினைகளுடைய, பொதுமை – பொதுத்தன்மையை, மேல்வரும் – மேலே வருகின்ற, சிறப்பு பெயர் வினைதாம் – சிறப்பாகிய பெயர்களும் வினைகளுமே, நீக்கும் – நீக்கி ஒன்றற்கு உரிமை செய்யும்.

உதாரணம்

| | | |
|---|---|---|
| சாத்தன் அவன்<br>சாத்தன் அது | சிறப்புப் பெயர் | பெயரின் திணைப் பொதுமைய நீக்கின. |
| சாத்தன் வந்தது<br>சாத்தன் வந்தான் | சிறப்புவினை | |
| ஒருவர் என் தந்தையார்<br>ஒருவர் என் தாயார் | சிறப்புப் பெயர் | பெயரின் பாற் |

| | | |
|---|---|---|
| மரம் வளர்ந்தது<br>மரம் வளர்ந்தன | சிறப்பு வினை | பொதுமையை<br>நீக்கின. |
| யாமெல்லாம் வந்தோம்<br>நீவிரெல்லாம் போமின்<br>அவரெல்லாம் வருவார் | சிறப்புப் பெயர்<br>வினைகள் | பெயரின் இடப்<br>பொதுமையை நீக்கின |
| வாழ்க அவன்<br>வாழ்க அவள்<br>வாழ்க அவர்<br>வாழ்க அது<br>வாழ்க அவை<br>வாழ்க யான்<br>வாழ்க யாம்<br>வாழ்க நீ<br>வாழ்க நீவிர் | சிறப்புப்<br>பெயர் | வினையின் திணை பால் இடப்<br>பொதுமையை நீக்கின. |
| உண்டு வந்தான்<br>உண்டு வந்தாள்<br>உண்டு வந்தார்<br>உண்டு வந்தது<br>உண்டு வந்தன<br>உண்டு வந்தேன்<br>உண்டு வந்தோம்<br>உண்டு வந்தாய்<br>உண்டு வந்தீர் | சிறப்பு<br>வினை | வினையின் திணை பால் இடப்<br>பொதுமையை நீக்கின. |

## மோசசு பொன்னையா

திணை, பால், இடங்களுக்குப் பொதுவாகிய பெயர் வினைகளின் பொதுத்தன்மையை அவற்றின் முன்னரும் பின்னரும் வரும் சிறப்புப்பெயர்கள் நீக்கும் எ–று.

மேல் என்பது முன்னர் பின்னர் என்னும் இருமருங்கையுங் குறித்து நின்றது.

எ–டு.:–

பொதுப்பெயர்

சாத்தான் இவன் பெயரின் திணைப்பொதுமை பின்னர் வந்து சிறப்புப் பெயரால் நீக்கப்பட்டது.

சாத்தான் இது

சாத்தான் வந்தான் பெயரின் திணைப்பொதுமை பின்னர் வந்த சிறப்பு வினையால் நீக்கப்பட்டது.

சாத்தன் வந்தது

அவர் என் தந்தையார் பெயரின் பாற்பொதுமை பின்னர் வந்த சிறப்புப் பெயரால் நீக்கப்பட்டது

அவர் என் தாயார்

மரம் வளர்ந்தது பெயரின் பாற்பொதுமை பின்னர் வந்த சிறப்பு வினையால் நீக்கப்பட்டது

மரம் வளர்ந்தன

யாம் எல்லாம் வருவோம் பெயரின் இடப்பொதுமை முன்னரும் பின்னரும் வந்த பெயர் வினைகளால் நீக்கப்பட்டது

நீவிர் எல்லாம் வருவீர்

அவர் எல்லாம் வருவார்

பொதுவினை

வாழ்க–அவன், அவள், அவர், அது, அவை, நாம், தாம், நீ, நீர் வினையின் திணை, பால், இடப்பொதுமை பின்னர் வந்த சிறப்புப் பெயர்களால் நீக்கப்பட்டன.

உண்டு–வந்தான், வந்தாள், வந்தார், வந்தது, வந்தன, வந்தேன், வந்தோம், வந்தாய், வந்தீர் வினையின் திணை, பால், இடப்பொதுமை பின்னர் வந்த சிறப்புவினைகளால் நீக்கப்பட்டன.

(8)

## 359. பெயர்வினை யும்மைசொற் பிரிப்பென வொழியிசை எதிர்மறை யிசையெனுஞ் [1]சொல்லொழி பொன்பதும்

## குறிப்புந் தத்த மெச்சங் கொள்ளும்.

---

பாட வேறுபாடு:–

1.சொல்லொழி யொன்பதும்

பெயர் வினை உம்மைசொல் பிரிப்பு என ஒழியிசை
எதிர்மறை இசை எனும் சொல் ஒழி ஒன்பதும்
குறிப்பும் தத்தம் எச்சம் கொள்ளும்.

peyar viṉai ummai sol pirippu eṉa oḻiyisai
eṭirmaṟai isai eṉum sol oḻipu oṉpaṭu um
kuṟippu um taṭṭam essam koḷḷum

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Elliptical forms**

The nine elliptical forms, viz, relative participles, verbal participles; Ellipses of (the particle) 'um' of words of saying—by isolation, by (the particle) ena of counterpart by negation and of necessary words—and all other elliptical words require each its appropriate word or words (to make their meanings complete).

## ஒப்புமைப் பகுதி

பிரிநிலை வினையே பெயரே ஒழியிசை
எதிர்மறை உம்மை எனவே சொல்லே
குறிப்பே இசையே ஆயீ ரைந்தும்
நெறிப்படத் தோன்றும் எஞ்சுபொருட் கிளவி

(தொல். சொல்.: 430)

பெயர்வினை யெதிர்மறை பிரிப்பொழி யும்மை
யெனவெனுஞ் சொல்லொழி போமொடுஞ் சொல்லிசை
குறிப்பெனுங் குறிப்பொழி புளப்படத் தொகைஇ
யெஞ்சுபொருட் கிளவி யீரைந் தாகும்

(இ.வி.: 348)

பிரிநிலை வினையே பெயரே ஒழியிசை
எதிர்மறை யும்மை எனவே சொல்லே
குறிப்பே யிசையே யாயீ ரைந்தும்
நெறிப்படத் தோன்று மெச்சச் சொல்லே

(மு.வீ.: 750)

தத்தமெச் சத்தொடு சார்ந்துநின் றியலும்

(மு.வீ.: 751)

## மயிலை நாதர்

எ-ன், எச்சங்களின் வகையும் முடிபும் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்.:- சொல்லெச்சமும் குறிப்பெச்சமுமென எச்சம் இரண்டாம்; அவற்றுட் பெயர்முதலாக இசையீறாகச் சொல்லப்பட்ட சொல்லெச்ச மொன்பதாம்; குறிப்பெச்சமொன்றாம்; இப்பத்தெச்சமும் தத்தம் எச்சங்களைக் கொண்டு முடியும், எ-று.

இன்னதற்கு இன்னது எச்சமென்று மொழிந்திலாதார் தத்தமெச்சமென்று குறித்துரைத்தவாறு என்னையோ வெனின், அஃதே; நன்று சொன்னாய்; அவற்றைப் பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாகக் கொள்ளத் தாமே விளங்குதலின், அவ்வாறே சொன்னாரென்க. அஃதாவது, பெயராகிய எச்சத்தையுடையது யாது அது பெயரெச்சமென்பது. பிறவுமன்ன.

பெயரெச்சமும் வினையெச்சமும் மேலே சொல்லப்பட்டன; ஏனைய இடையியலிற் [1]சொல்லப்படும்; ஈண்டு அவற்றையே வேறெடுத்தோதுவது என்னையோவெனின், அக்குறியான் ஒத்தனவேனும் இலக்கணத்தான் வேறுபாடுடையன வென்க. அவ்வேறுபாடு அவ்வவற்றிற்குக் காட்டும் இலக்கியங்களுட்காண்க.

வ-று.:-

"இணரெரி தோய்வன்ன வின்னா செயினும், புணரின் வெகுளாமை நன்று" (குறள்.308), "எண்ணென்பவேனை யெழுத்தென்ப விவ்விரண்டும், கண்ணெனன்ப வாழு முயிர்க்கு" (குறள்.392), "யாதனின் யாதனி னீங்கியா னோதல், அதனி னதனி னிலன்" (குறள்.341) எனவரும். இவை முறையானே பிறர் இன்னாசெயினும் தான் வெகுளாமை நன்றெனவும், எண்ணென்ப ஏனை எழுத்தென்ப உலகத்து வாழும் உயிர்க்கெல்லாம் கண்ணென்ப கற்றாரெனவும், யாதனின் யாதனின் நீங்கியான் ஒருவன் நோதல் அதனின் அதனின் இலனெனவும் இவ்வாறு எஞ்சிய பெயர் கொண்டு முடிதலிற் பெயரெச்சமாயின.

---

பாடவேறுபாடு.:-

1. பெறப்பாடுஞ் சொல்லப்பட்டன

"காலங் கருதி யிருப்பர் கலங்காது, ஞாலங் கருது பவர்" (குறள்.485), "வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபின், ஈண்டுயற் பால பல" (குறள்.342), "நுண்மா ணுழைபுல மில்லா னெழினல, மண்மாண் புனைபாவை யற்று" (குறள்.407) எனவரும். இவை முறையானே கொள்ளுங்காலம் குறித்துக் கலங்காதிருப்பர் ஞாலங் கருதுபவரெனவும், உய்யவேண்டிற் காலமுண்டாகத் துறக்க, துறந்தபின் இப்பிறப்பில் உய்யற் பாலன பலவெனவும், நுண்ணறிவில்லாதான் எழில் நலம் மண்புனை மாண்பாவை எழில் நலம் எற்று அற்றெனவும் வினையும் வினையுளடங்கும் வினைக்குறிப்புங் கொண்டு முடிதலின், வினையெச்சமாயின. அஃதேல், "எள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத்தொன்றும், கள்ளாமை காக்கதன் னெஞ்சு" (குறள்.281) எனவும், "சிறுவரையே யாயினுஞ் செய்தநன் றல்லால், உறுபயனோ வில்லை யுயிர்க்கு" (நாலடி.130) எனவும் வரும் இவை தன்னை எள்ளாமை வேண்டுவானென்பான் கள்ளாமை காக்க தன் நெஞ்செனவும், தன்னாற் செய்யப்பட்ட நன்றல்லது உயிர்க்கு உறுபயனில்லை யெனவும் உருபுச்சொற்கள் எஞ்ச வந்தன, எப்பாற்படுமோ வெனின், உருபுச்சொற்களும் வினை வினைக் குறிப்பா யடங்குதலின், வினையெச்சத்தின்பாற்படு மென்க.

'**தன்னை**' என்றது, தானடக்கும் ஒழுங்கையெனவும், '**தன்னால்**' என்றது, தன் தொழிலினாலெனவும் வினை வினைக்குறிப்பினால் விளங்குதலால், எட்டுருபுமேற்ற சொற்களும் வினை வினைக்குறிப்பென்றறிக.

"இலங்குவா ளிரண்டினா லிருகைவீ சிப்பெயர்ந், தலங்கன் மாலைஇய விழ்ந் தாடவா டும்மிவள்", "கடுவன் முதுமகன் கல்லா மூலற்கு, வதுவை வந்த வன்பறழ்க் குமரி, இருதோ டோழர் பற்ற" எனவரும் இவை, இருகையும் வீசி யெனவும் இருதோளும் பற்றவெனவும் உம்மைகொண்டு முடிதலின், உம்மையெச்சமாயின.

"பூண்ட, மிடியென்னுங் காரணத்தின் மேன்முறைக் கண்ணே, கடியென்றார் கற்றறிந் தார்" (நாலடி.56), "செய்யீரோ வென்னானு மென்னுஞ்சொற் கின்னாதே, பையத்தாஞ் செல்லுநெறி" (நாலடி,309), "கைம்மாலை யிட்டுக் கலுழ்ந்தா டுணையில்லார்க், கிம்மாலை யென் [1]செய்வ தென்று"

பாடவேறுபாடு.:–

1. செயாதென்று

(நாலடி.393), [1]"இசையா வொருபொரு ளில்லென்றல் யார்க்கும், வசை யன்று" (நாலடி.111) எனவரும் இவை, கடியென்று சொன்னாரெனவும், செய்யீரோவென்னானு மென்றுசொல்லும் சொற்கெனவும், இம்மாலை என்செய்வதென்று சொல்லியெனவும், [2]இசையா வொருபொருளில்லென்று சொல்லுதலெனவும் சால்லென்பது கொண்டுமுடிதலின், சொல்லெச்சமாயின.

"அறிமி னறநெறி யஞ்சுமின் கூற்றம், பொறுமின் பிறர்கடுஞ்சொற் போற்றுமின் வஞ்சம், வெறுமின் வினைதீயார் கேண்மையெஞ் ஞான்றும், பெறுமின் பெரியோர்வாய்ச் சொல்" (நாலடி.172) என்னும் இதனுள், ஒருவழிநின்ற எஞ்ஞான்று மென்றதனைப் பிரித்துப் பிறவழியும் கூட்டி முடிக்க வேண்டுதலிற் பிரிநிலை எச்சமாயிற்று; [3]இதனை விளக்குமென்ப.

"எடுத்தலும் படுத்தலு மாயிரண் டல்லது, நலித லில்லை யென்மருமுளரே" "வீடுணர்ந் தோர்க்கும் வியப்பாமா லிந்நின்ற, வாடன் முதியாள் வயிற்றிடங்–கூடார், பெரும்படை வெள்ள நெரிதரவும் பேரா, இரும்புலி சேர்ந்த விடம்" (பு.வெ.3:19) எனவரும் இவை, எடுத்தலும் படுத்தலுமென அவ்விரண்டல்லதெனவும், இரும்புலி சேர்ந்த இடமென வியப்பாமாலெனவும் எனவென்பது கொண்டு முடிதலின், எனவெனெச்சமாயின.

"செறுநரைக் காணிற் சுமக்க விறுவரை, காணிற்; கிழக்காந் தலை" (குறள். 488), "இன்னா செயினு மினிய வொழி கென்று, தன்னையே தானோவி னல்லது – துன்னிக், கலந் தாரைக் கைவிடுதல் கானக நாட, விலங்கிற்கும் விள்ள லரிது" (நாலடி.76) எனவரும் இவை, கிழக்காந்தலை யென்பதன் துணிபு தோன்றுதற்கு ஒழிக்கப்பட்ட அவர் கெடுவ ரென்பதையும், கலந்தாரைக் கைவிடுதல் அருமை தோன்று தற்கு ஒழிக்கப்பட்ட மக்கட்கெளிதோ வென்பதையும் கொண்டு முடிதலின், ஒழியிசை யெச்சமாயின. இசையென்பது சொல்.

"பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தார், இறைவ னடிசேரா தார்" (குறள்.10), "கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்

பாடவேறுபாடு.:–

1.இசையாதொருபொருள்
2.இசையாதொருபொருள்
3.நடுநிலைத்தீபமுமென்ப

செல்வம், போக்கு மதுவிளிந் தற்று" (குறள்.332), "நேரல்லார் நீரல்ல சொல்லியக்கான் மற்றது, தாரித் திருத்த றகுதிமற்றோரும், புகழ்மையாக் கொள்ளாது பொங்குநீர் ஞாலம், [1]சமழ்மையாக் கொண்டு விடும்" (நாலடி.72) எனவரும் இவை, சேர்ந்தார் நீந்துவரெனவும், கூத்தாட்டவைக் குழாத்து வரவு எற்று அற்று அவர்பெற்ற பெருஞ்செல்வத்து வரவெனவும், தாரித்திராது வெகுடல் புகழ்மையாகக் கொள்ளாதெனவும் இவற்று எதிர்மறை கொண்டு முடிதலின், எதிர்மறை யெச்சமாயின.

இனி இசையெச்சமாவது, ஒன்றுசொல்ல அச்சொல்லானே வேறொரு பொருளிசைத்தல். அஃதாவது இரட்டுற மொழிதலென்றவாறு; "உஞ்சையரச னொருமகன்றோழன்றன், நெஞ்சிற் கினியா னெறித்துணை யாக்கொண்டு, [2]பந்தெறி பாணிய பாய்பரி மாவொடு, வந்தன னடிவலஞ் செய்வதற் கென்றான்", "வந்தவர வென்னையென வாட்கண்மட வாய்கேள், சிந்தைநலி கின்றதிரு நீர்க்குமரியாட, வந்திலதி னாயபய னென்னைமொழி கென்றாள், முந்தைநலி கின்றமுது மூப்பொழியு மென்றான்" (சீவக.2020) என வருமிவை, இச்சொன்ன பொருளொழிய வேறு இசைந்தபொருள் கொண்டு முடிதலின், இசையெச்சமாயின. இதைச் சிலேடையுமென்ப.

"பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டம், சால மிகுத்துப் பெயின்" (குறள்.475), "கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு, நாவாயு மோடா நிலத்து" (குற்.496), "மாவென மடலு மூர்ப பூவெனக், குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப, மறுகி னார்க்கவும் படுப, பிறிது மாகுப காமங்காழ் கொளினே" (குறுந்.17) எனுமிவை முறையே, மெலியரும் பலர் தொகின், வலியராகுப; இவ்விடம் இவர்க்குச்செல்லும், இவ்விடம் இவர்க்குச் செல்லாதென அவ்வவர்க்கேற்ற இடனறிந்து கருமம் கொள்க; யானும் அவ்வண்ணம் செய்வேனெனக் குறித்த பொருள்கொண்டு முடிதலிற் குறிப்பெச்சமாயின. இதனை நுவலாநுவற்சியுமென்ப. பிறவுமன்ன.

இந்தப் பத்தெச்சமும், புவிபுகழ் புலமை யவினய னூலுட்

பாடவேறுபாடு.:-

1. (1) சமண்மையா,
(2) சகண்மையா

2. பாணி யாய்பாய்பரி

டண்டலங் கிழவன் றகைவரு நேமி யெண்டிசை நிறைபெய ரிராச பவித்திரப் [1]பல்லவ தரையன் பகர்ச்சி யென் றறிக.

இனி, இவற்றை இவ்வாறன்றி வினையியலுள்ளும் இடைச்சொல்லியலுள்ளு மொழிந்தனவாக்கி, உண்டசாத்தன், உண்ணுஞ் சாத்தன்; உண்டவூண், உண்ணுமூணென்பன பெயரெச்சம்; தம்பெயர் கொண்டன. உழுதுவந்தான், மருந்துண்டு நல்லனாயினான், உழுது வருதலென்பன வினையெச்சம்; வினையும் குறிப்பும் வினைப்பெயரும் கொண்டன. சாத்தனும் வந்தானென்பது உம்மையெச்சம்; கொற்றனும் வந்தானெனத் தன்னெச்சங் கொண்டது. "பசித்தேன் பழஞ்சோறு தாவென்று நின்றாள், நுகப் போவுலகம் பெறும்" என்பது சொல்லெச்சம்; இது தாவென்று சொல்லி நின்றாளெனச் சொல்லி யென்பதனைக் கொண்டது. அவனோ கொண்டான்; அவனே கொண்டா னென்பன பிரிநிலையெச்சம்; இவை ஒரு குழுவிற் பிரிக்கப் பட்டானையே கொண்டன. கொள்ளெனக் கொண்டானென்பது எனவெ னெச்சம்; இது கொண்டானென்னும் வினை கொண்டது. கொள்ளென்பது முற்று; அது முற்றேலாமையின், இறுதி எனவென்பது முற்றுக்கொண்டது. ஒழியிசை யெச்சமாவது, மன்னும் தில்லும் ஒவுமெனு மூன்றும்; அவை: பண்டு கூரியதோர் வாண்மனென்பது இப்போது கோடிற்று, இற்றதென்பவற்றையும், "வருகதில் லம்ம" (அகநா.276) என்பது வந்தால் இன்னதொன்று செய்வலென்பதனையும், கொளலோ கொண்டானென்பது கொண்டுய்யப் போயினா னல்ல னென்பதனையும் கொண்டு முடிந்தன. எதிர்மறை யெச்சம் இரண்டு; ஓகார வெதிர்மறை, உம்மை யெதிர்மறை யென. யானோகொண்டேனென்பது யான் கொண்டில னென்பதையும், வரலுமுரியனென்பது வராமைக்கு முரிய னென்பதையும் கொண்டு முடிதலின் எதிர்மறை யெச்சம். ஒல்லென வொலித்ததென்பது ஒல்லென்ற அநுகரண ஓசையே இசைத்ததென்று முடிதலின், இசையெச்சம். விண்ணென விசைத்ததென்பது விண்ணென்றதே விசைத்ததென்று முடிதலிற் குறிப்பெச்சம்; "சலங்கொண்டநோயின் நோவு விண்ணெனத் தெறித்தல்செய்யும்" என்னுங் குறிப்பினான்,

பாடவேறுபாடு:-

1.இளம்பூரண ருரையெனத் தேறிய கவிஞர் கூறுபட வறிமின்.

விண்ணென்றது குறிப்பெச்சமாயிற்றென்று இவ்வாறு சொல்லுவர்.

இஃது ஒல்காப் புலமைத் தொல்காப்பித்துள் உளங்கூர்கேள்வி இளம்பூரணரெனு மேதமின் மாதவ ரோதிய வுரையென் றுணர்க.

## சங்கர நமச்சிவாயர்

எ–னின், நால்வகைச்சொற்கும் ஆவதோர் இலக்கணம் உணர்த்தும்வழிச் சிலவற்றிற்கு எய்தியதன்மேல் சிறப்புவிதியும் சிலவற்றிற்கு எய்தாதது எய்துவித்தலும் உணர்–ற்று.

இ–ள்.:– பெயரெச்சமும், வினையெச்சமும், உம்மையெச்சமும், சொல்லெச்சமும், பிரிநிலையெச்சமும், எனவெச்சமும், ஒழியிசை யெச்சமும், எதிர்மறையெச்சமும் இசையெச்சமும் ஆகிய சொல்லெச்சம் ஒன்பதும் குறிப்பெச்சம் ஒன்றும் தத்தம் எச்சங்களைக் கொள்ளும், எ–று.

சொல்லொழிபு என்பதனை முற்கூறிய ஒன்பதனோடும், அதனுள் ஒழிபு என்பதனைப் பிற்கூறிய குறிப்பினோடும் கூட்டுக. குறிப்புச்சொல்லொழிபு எனக் கூட்டி உரைத்தால் என்னை யெனின்:– அது பின்னர்க் கூறுதும். எனவே எச்சங்கள் சொல்லெச்சம் குறிப்பெச்சம் என இருவகை என்பதூஉம், சொல்லெச்சம் ஒன்பது எனத் தொகை கூறினார் வகையுள் ஒன்றனையும் சொல்லெச்சம் என்றமையான், அவ்வகையுள் ஒன்றாகிய சொல்லெச்சம் என்பது சொல் விகற்பங்களின்றிச் சொல் என்னும் சொல் எஞ்சி நிற்பது என்பதூஉம் பெற்றாம்.

**"சொல்லென் எச்சம் முன்னும் பின்னும்**
**சொல்லள வல்லை தெஞ்சுதல் இன்றே"**

என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார் என்க. இவ்வாசிரிய வசனத்திற்கு இப்பொருளன்றி வேறு பொருள் கூறுவாரும் உளர். அது நிற்க.

வ–று.:–

செய்த சாத்தன், செய்கின்ற சாத்தன், செய்யும் சாத்தன் எனவும்; நல்ல சாத்தன் எனவும் பெயரெச்சங்கள் தம் மெச்சமாகிய செய்பவனது பெயர் கொண்டன. ஏனைக் கருவி முதல் ஐந்தோடும் ஒட்டுக. வினைத்தொகைகளும் பெயரெச்சமாய் அடங்குதலின், அவையும் முற்றெச்சங்களும் அன்ன. செய்து வந்தான், செய்து நல்லனாயினான், செய்து நல்லன், செய்துவருதல் எனவும்; "விருந்திண்றி உண்ட பகல்"

எனவும் வினையெச்சங்கள் தம் எச்சமாகிய வினை வினைக் குறிப்பும் தொழிற்பெயரும் கொண்டன. காட்டா தொழிந்த வினையெச்சங்களும் முற்றெச்சங்களும் அன்ன. இவ்வெச் சத்திற்கு முடிபாகிய வினைக்குறிப்பு ஆக்கமொடு வருதலும் அது தொக வருதலும் 'ஆக்க வினைக்குறிப்பு' (347) என்னும் சூத்திரத்துள் அமைந்து கிடந்தன.

சாத்தனும் வந்தான் என்னும் உம்மையெச்சம் முன்னர்க் கொற்றன் வந்தான் எனத் தன்னெச்சம் கொண்டது.

"மிடியென்னும் காரணத்தின் மேன்முறைக் கண்ணே
கடிஎன்றார் கற்றறிந் தார்"
"இசையா ஒருபொருள் இல்லென்றல் யார்க்கும்
வசையன்று"

என்பன சொல்லெச்சம். கடி என்று சொன்னார், இல் என்று சொல்லுதல் எனச் சொல் என்னும் தம்மெச்சம் கொண்டன. இவை பெயரெச்சம் வினையெச்சம் என்றாற்போலச் சொல் என்னும் எச்சத்தையுடைய இடைச்சொல்லைச் சொல்லெச்சம் என்றலின் ஆகுபெயர். மேல் வரும் எனவெனெச்சம் ஒழிந்தனவும் அன்ன.

சாத்தனே கொண்டான், சாத்தனோ கொண்டான் என்பன பிரிநிலையெச்சம். இவை பிறர் கொண்டிலர் எனத் தம்மெச்சம் கொண்டன. கோடல் தொழிலால் சாத்தனினின்றும் பிரிக்கப்பட்டார் பிறராதலின் பிரிநிலை என்க.

கடல் ஒல்லென ஒலித்தது, நரம்பு விண்ணென இசைத்தது, தலை இடியென இடித்தது என்பன எனவெச்சம். இவை தம்மெச்சமாகிய வினை கொண்டன. மிகவும் ஒலித்தது மிகவும் இசைத்தது மிகவும் இடித்தது என்பன இவற்றிற்குப் பொருளா மாதலின், இவ்வெச்சம் மிகுதிப்பொருள் தருவதோர் இடைச்சொல்லாம் என்க.

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்பதனுள் என என்பது, பெய்யெனச் சொல்ல என வினைப்பொருள் தருதலின், இடைச்சொல்லடியாகப் பிறந்த செயுவெனெச்சமாய் முன்னர்ப் போந்த வினையெச்சத்துள் அடங்கும் என்க.

கூரியதோர் வாள்மன், "வருகதில் அம்ம" கொளலோ கொண்டான் என்பன ஒழியிசையெச்சம். இவை முறையே கோடிற்று, வந்தால் இன்னது செய்வல், கொண்டுய்யப் போயினானல்லன் எனத் தம்மெச்சம் கொண்டன.

வரலும் உரியன், யானோ செய்தேன் என்பன எதிர்மறையெச்சம். இவை முறையானே வாராமைக்கும் உரியன், யான் செய்கிலன் எனத் தம்மெச்சம் கொண்டன.

இதுகாறும் வினையியலின் ஒழிபாகிய பெயரெச்ச வினையெச்ச முடிபும் இடையியலின் ஒழிபாகிய ஏனை அறுவகை எச்ச முடிபும் எடுத்து விதந்தார். இவ்வாறு எடுத்து விதத்தற்கு வரையறைப்படாது வரும் சொல்லெச்சங்களை யெல்லாம் தொகுத்து இசையெச்சம் என இறுதிக்கண் கூறினார். இசை என்பது சொல். இசையெச்சம் எனப் பொதுப்படக் கூறினமையின் இவ்வெச்சமும் இது கொள்வதும் பெயர்வினை இடை உரி என்னும் நால்வகைச் சொல்லுள் ஒன்றும் பலவும் தனித்தும் தொடர்ந்தும் வரும் என்பது பெற்றாம். அவற்றுள் சில இசை எச்சங்கள் வருமாறு:

**“இணரெரி தோய்வன்ன இன்னா செயினும் புணரின் வெகுளாமை நன்று”**

என்புழிப் பிற உயிர்க்கு இன்னாசெயின் அவை பிழையாது தமக்கு வருதல் கருதித் தம்மாட்டு அன்பும், பிற உயிர்கண் மாட்டு அருளும், இன்னா செய்தலான் மேன்மேல் வளரும் பிறப்பு இறப்பின் அச்சமும் நம்மால் இன்னா செயப்பட்டாரை நாமடைந்து இரத்தல் கூடினுங்கூடும் அதனால் யார்மாட்டும் இன்னா செயக்கடவமல்லம் என்னும் வருங்கால உணர்ச்சியும் இலராய், ஒருவர் தன்னால் ஆற்றல் கூடாத இன்னாதனவற்றைத் தன்கண் செய்தாராயினும் அவர் தமக்கு வேண்டுவதோர் குறை முடித்தல் கருதி நாணாது தன்னை அடைந்தாராயின், அவர் செய்த இன்னாமை கருதி அவரை வெகுளாது அவற்றை மறந்து அவர் வேண்டும் குறை முடித்து முன் செய்த இன்னாமையால் அவர் கூசியொழுகுதல் தவிர்தற்குக் காரணமாகிய மெய்ப்பாடு முதலியன தன்கண் குறிப்பின்றி நிகழ, அவர்க்கு இனியனாகியிருத்தல் தன்சால்புக்கு நன்று என நால்வகைச் சொற்களுள் வேண்டுவன எல்லாம் தந்து அகலம் கூறவேண்டி நிற்பன இசையெச்சாமம் என்க. பிறவும் அன்ன.

இனிக் குறிப்பெச்சங்களாவன:– ‘**ஒன்றொழி பொதுச்சொல்**’ (269) முதலிய குறிப்புச்சொற்களாம், குறிப்பான் உணரப்படுவன முறையே எஞ்சி நிற்றலின். அவை அவ்வெச்சங் கொள்ளுமாறு:

பெருந்தேவி பொறை உயிர்த்த கட்டிற்கீழ் நால்வர் மக்கள் உளர் என்புழி மக்கள் என்னும் பொதுப்பெயர் பெண்மக்கள் எனப்

பெண் என்னும் சிறப்புப்பெயர் கொண்டது. "குறுத்தாள் பூதம்" என்புழித் தகர வல்லொற்று அதற்கு இனமாகிய மெல்லொற்றையும் "மரையிதழ் புரையும்" என்புழி மரை என்பது தா என்னும் முதலெழுத்தையும் கொண்டன. வாய்பூசி வருதும் என்பது எச்சில் கழித்து வருதும் என்பது கொண்டது. புளித்தின்றான் என்பது பழமாகிய புளி எனப் பழம் என்பது கொண்டது. பொற்றொடி என்பது பொற்றொடியை உடையாள் என இரண்டாமுருபும் அதன் பயனிலையும் கொண்டது. நல்லன் இவன் என்பது பெயர்ப்பொருள் கொள்ளாது வினைக்குறிப்புப் பொருளோடு நல்லனாயினான் இவன் என ஆக்கம் கொண்டது.

'அறத்தாறிதுவென வெள்ளைக்கிழிபு'

என்பது,

"அறத்தா றிதுவென வேண்டா சிவிகை பொறுத்தானோ
டூர்ந்தா னிடை"

என்பது கொண்டது. "அலங்குளைப் புரவி ஐவரொடு சினை இ" என்பது தருமன் வீமன் அருச்சுனன் நகுலன் சகாதேவன் என்பன கொண்டது.

"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்"

என்பதூஉம், உண்ணாநின்றான் கற்கறித்துழி அட்டோன் முகம் நோக்கி நன்கட்டாய் என்பதூஉம் மேலியராயினும் பலர் தொகின் வலியரையும் வெல்வர் என்பதனையும் நன்கட்டாயல்லை என்பதனையும் முறையே கொண்டன. பிறவும் அன்ன. இவை ஒன்றொழி பொதுச்சொல் முதலிய குறிப்பெச்சங்கள் தம்மெச்சம் கொண்டன. இதனைக் குறிப்புச் சொல்லெச்சம் என்னாது குறிப்பெச்சம் என்றார், சொல்லே அன்றிப் பொருள்மாத்திரையும் எழுத்தும் எஞ்ச வருவனவும் உளவாதலின் என்க.

இப்பத்தெச்சங்கட்கும் வேறு பொருள் கூறுவாரும் உளர். அவையெல்லாம் இசையெச்சமாயும் குறிப்பெச்சமாயும் அடங்குமாதலானும் பெயரெச்சம் வினையெச்சம் முதலியவற்றிற்கு ஆங்காங்கு முடிபு கூறாராயினார் ஈண்டு எச்சங்களையெல்லாம் தொகுத்துக் கூறும்வழி முடிபு கூறாராயின் குன்றக்கூறல் என்னும் குற்றமாமாதலானும் அது பொருந்தாது என்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், எச்சங்களின் வகையும் முடிபும் கூறுகின்றது.

இ–ள்.: பெயர்வினை யும்மை – பெயரெச்சமும் வினையெச்சமும் உம்மையெச்சமும், சொற் பிரிப்பென–சொல்லெச்சமும் பிரிநிலை யெச்சமும் எனவெனெச்சமும், ஒழியிசை எதிர்மறை யிசை–ஒழியிசையெச்சமும் எதிர்மறையெச்சமும் இசையெச்சமும், எனுஞ் சொல்லொழிபொன்பதும் – என்று சொல்லப்படும் அச்சொல்லெச்சம் ஒன்பதும், குறிப்பும்–குறிப்பெச்சம் ஒன்றும் ஆகப் பத்தெச்சமும், தத்த மெச்சங்கொள்ளும்–தத்தம் குறைபாடாகவுடைய எச்சங்களைக் கொண்டு முடியும், எ–று.

உ–ம்.:–

பிறர் "இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்" தான் "புணரின் வெகுளாமை நன்று" (குறள்.308), "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டும்" புலவர் "கண்ணென்ப" உலகத்தில் "வாழு முயிர்க்கு" (குறள்.392) இவற்றுள் எஞ்சிய பெயர் கொண்டு முடிதலின் பெயரெச்சமாயின.

கொள்ளும் "காலங் கருதி யிருப்பர் கலங்காது, ஞாலங் கருதுபவர்" (குறள்.485), "நுண்மா ணுழைபுல மில்லா னெழினலம், மண்மாண் புனைபாவை" எழில் நலம் ஏற்று "அற்று" (குறள். 407). இவ்வாறு வினைகொண்டு முடிதலின் வினையெச்சமாயின. மனனை "எள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத்தொன்றுங், கள்ளாமை காக்கதன் னெஞ்சு" (குறள்.281). இவ்வெச்சமாகிய உருபுச் சொல்லும் வினைக்குறிப்பாய் அடங்குதலின் வினையெச்சத்தின் பாற்படுமென்க.

இரு கை வீசி நடந்தான், இரு தோள் தோழர் பற்றினார். இவற்றை இரு கையும் வீசி எனவும் இரு தோளும் பற்ற எனவும் உம்மை கொண்டு முடிதலின் உம்மையெச்சம் ஆயின.

"கைம்மாலை யிட்டுக் கலுழ்ந்தாடுணையில்லார்க், கிம்மாலை யென்செய்வ தென்று" (நாலடி.393), "சுவையொளி யூறோசை நாற்றமென்று" சொல்லப்படும் ஐந்திணைத் "தெரிவான் கட்டேயுலகு" (குறள்.27). இவற்றுள் எஞ்சிய சொற்கொண்டு முடிதலிற் சொல்லெச்சம் ஆயின.

எஞ்ஞான்றும் "அறியி னறநெறி", எஞ்ஞான்றும் "அஞ்சுமின் கூற்றம்", எஞ்ஞான்றும் "பொறுமின் பிறர்கடுஞ்சொல்", எஞ்ஞான்றும் "போற்றுமின் வஞ்சம்", எஞ்ஞான்றும் "பெறுமின் வினை செய்யார் கேண்மை", எஞ்ஞான்றும்

"பெறுமின் பெரியார் வாய்ச்சொல்" (நாலடி.172). "எஞ்ஞான்றும்" என நின்றதனைப் பிரித்துப் பிறவழியும் கூட்டி முடிக்க வேண்டுதலிற் பிரிநிலையெச்சம் ஆயிற்று.

"எடுத்தலும் படுத்தலு மாயிரண் டல்லது
நலித லில்லை யென்பாரு முளரே"

என்பதில் எடுத்தலெனவும் படுத்தலெனவும் ஆயிரண்டல்லதெனவும் எனவென்பது கொண்டு முடிதலின் எனவெனெச்சமாயின.

"இன்னா செயினும் மினிய வொழிகென்று
தன்னையே தானோவி னல்லது துன்னிக்
கலந்தாரைக் கைவிடுதல் கானக நாட
விலங்கிற்கும் விள்ள லரிது"
(நாலடி.76)

என்பதின் மனிதர்க்குக் கைவிடுதல் அரிது என நின்றமையான் ஒழியிசையெச்சமாயிற்று.

"பிறவிப் பெருங்கட னீந்துவர்" இறைவனடி சேர்ந்தார். "நீந்தார், இறைவ னடிசேரா தார்" (குறள்.10) இதனுள் இறைவனடி சேர்ந்தார் என்பது கொண்டு முடிதலின் எதிர்மறையெச்சமாயிற்று.

இனி இசையெச்சமாவது ஒன்று சொல்ல வேறு பொருளை இசைத்தல். "பாய்பரி மாவோடும் வந்தன னடி... செய்வதற்கென்றான்", குமரியாட வந்தேன், யானையெய்ய வந்தேன், மயிலெய்ய வந்தேன் என ஒன்று சொல்ல வேறு பொருள் கொண்டு முடிதலின் இசையெச்சமாயின.

இங்ஙனம் கூடிய ஒன்பதும் சொல்லெச்சம் ஆகியவாறு காண்க. இனிக் குறிப்பெச்சம் வருமாறு சொல்லுவாம்.

குறிப்புப் பொருள் கொண்டு முடிவது:

"பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்"
(குறள்.475).

"கட லோடா கால்வ னெடுந்தேர் கடலோடு
நாவாயு மோடா நிலத்து"
(குறள்.476).

"மாவென மடலு மூர்ப பூவெனக்
குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப

மறுகி னார்க்கவும் படுப பிறிது
மாகுப காமங்காழ் கொளினே"

(குறு,17)

என இவை முறையே மெலியரும் பலர் தொகின் வலியராகுவர் எனவும் இவ்விடம் இவர்க்குச் செல்லும் இவ்விடம் இவர்க்குச் செல்லாது எனவும் யானும் அவ்வணணம் செய்வேன் எனவும் சொல்லுவான் குறித்த பொருள் கொண்டு முடிதலின் குறிப்பெச்சமாயின... நுவலா நுவற்சி என்பர்.

## விசாகப் பெருமாளையர்

இது, நால்வகைச் சொற்களுக்குமாவ தோரிலக்கண முணர்த்தும் வழிச் சிலவற்றிற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதியுஞ் சிலவற்றிற்கு எய்தாத தெய்துவித்தலும் உணர்த்துகின்றது.

இ–ள்.: பெயர்ச் (சொல்லொழிபு) – பெயரெச்சமும், வினைச் (சொல்லொழிபு) வினையெச்சமும், உம்மைச் (சொல்லொழிபு)– உம்மையெச்சமும், சொற் (சொல்லொழிபு) – சொல்லெச்சமும், பிரிப்புச் (சொல்லொழிபு) – பிரிநிலையெச்சமும், எனச் (சொல்லொழிபு)– எனவெச்சமும், ஒழியிசைச் (சொல்லொழிபு) – ஒழியிசையெச்சமும், எதிர்மறைச், (சொல்லொழிபு)–எதிர்மறையெச்சமும், இசைச் (சொல்லொழிபு) – இசையெச்சமும், எனும்–என்கிற, சொல்லொழிபு–சொல்லெச்சங்கள், ஒன்பதும்–ஒன்பதும், குறிப்பொழிபும்–குறிப்பெச்சமும், தத்தம் தம்முடைய– தம்முடைய, எச்சம்–எச்சங்களை, கொள்ளும்–கொண்டுமுடியும், எ–று. (எனவே எச்சங்கள் சொல்லெச்சங் குறிப்பெச்சம் என விருவகைப் படுமென்பதாயிற்று.)

வ–று.:–

செய்தசாத்தன், நல்லசாத்தன் எனப் பெயரெச்சங்கள், தம்மெச்சமாகிய செய்பவனது பெயர்கொண்டன. செய்துவந்தான் செய்து நல்லனாயினான் என வினையெச்சங் கள் தம்மெச்ச மாகியவினை முற்றுங் குறிப்பு முற்றுங் கொண்டன. சாத்தனும்வந்தான், என்கிற உம்மைஎச்சம் முன்னே கொற்றன்வந்தான் எனத் தன்னெச்சங் கொண்டது. நல்லவனென்றான் என்கிற சொல்லெச்சம் நல்லவனென்று சொன்னான் எனச் சொல்லென்னுந் தன்னெச்சங் கொண்டது. சாத்தனேகொண்டான், சாத்தனோ கொண்டான். என்பன பிரிநிலையெச்சம். இவை பிறர் கொண்டிலரெனத் தம்மெச்சங் கொண்டன. கடலொல்லெனவொலித்தது என்பது எனவெச்சம். இது தன்னெச்சமாகிய வினைகொண்டது, மிகவுமொலித்துதென்பது பொருள். கூரியதோர்வாண்மன்,

உண்ணுதற்கோ வந்தான் என்பன ஒழியிசையெச்சம். இவை முறையே கோடிற்று, கலகஞ்செய்ய வந்தான் எனத் தம்மெச்சங் கொண்டன. வரலுமுரியன், யானோ செய்தேன் என்பன எதிர்மறையெச்சங்கள். இவைமுறையே வாராமைக்கு முரியன், யான்செய்திலேன் எனத் தம்மெச்சங் கொண்டன.

இசையெச்சமாவது வாக்கியங்களிலே அவ்வவ் விடத்திற் கேற்ற ஒருசொல்லும் பலசொல்லுமாக வருவித்துரைக்கப்பட்டு வருவதாம்.

இசையென்பது சொல் கற்றதனாலாய பயனென். இதற்கு நூலைக் கற்றதனாலென வொருசொல்லும், அந்தாமரை யன்னமே நின்னையான கன்றாற்றுவனோ இதில் என்னு யிரினுஞ் சிறந்த நின்னையெனப் பலசொற்களும், வருவிக்கப் படுதல் காண்க. குறிப்பெச்சமாவது, பெயரியலிலே பன்னிரண்டாஞ் சூத்திரத்திலே "ஒன்றொழி பொதுச்சொல்" என்றது முதலாக, "இன்னபிறவும்" என்றது வரைக்குஞ் சொல்லப்பட்டவைகளாம். ஆயிரமக்கள் பொருதார் என்கிறவிடத்தே மக்களென்னும் பொதுப்பெயர் ஆடவ ரென்னுஞ் சிறப்புப்பெயர் கொண்டது, பிறவும் அச் சூத்திரவுரையிற் காண்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

எச்சமனைத்திற்கு முடிபுகூறுஞ் சூத்திரம் யாது?

பெயர்வினை யும்மைசொற் பிரிப்பென வொழியிசை
எதிர்மறை யிசையெனுஞ் சொல்லொழி பொன்பதுங்
குறிப்புந் தத்த மெச்சங் கொள்ளும்.

(பெயர் வினை உம்மை சொற் பிரிப்பு என ஒழியிசை
எதிர்மறை இசை எனும் சொல்லொழிபு ஒன்பதும்
குறிப்பும் தத்தம் எச்சம் கொள்ளும்.)

இ—ள்.:- பெயரெச்சமும் வினையெச்சமும் உம்மையெச்சமும் சொல்லெச்சமும் பிரிநிலையெச்சமும் என வெச்சமும் ஒழியிசையெச்சமும் எதிர்மறையெச்சமும் இசையெச்சமும் என்னுஞ் சொல்லெச்சங்கள் ஒன்பதும் குறிப்பெச்சமொன்றும் தத்தமெச்சங்களைக் கொண்டு முடியும், எ—று.

எனவே எச்சம் எத்தனை வகைப்படும்?

சொல்லெச்சங் குறிப்பெச்சமென இரண்டு.

அவற்றுள் சொல்லெச்ச மெத்தனை?

"பெயர்வினை யும்மைசொற் பிரிப்பென வொழியிசை எதிர்மறை யிசையெனுஞ் சொல்லொழி பொன்பது."

குறிப்பெச்சம் எத்தனை?

குறிப்பெச்சம் ஒன்று.

இப்பத்தனுள் எத்தனை எச்சச்சொற்கள் வெளிப்பட்டு நிற்கும்?

இப்பத்தெச்சங்களுள்ளும், பெயரெச்சம் வினையெச்சம் எனவெச்சமென்னும் மூன்றற்கும் எச்சச்சொற்கள் வாக்கியங்களில் வெளிப்பட்டு நிற்கும்; ஒழிந்தனவற்றிற்கு எச்சச்சொற்கள் வருவித்துரைக்கப்படும்.

(வரலாறு)

(1) செய்தசாத்தன், நல்லசாத்தன் எனப் பெயரெச்சங்கள் தம் மெச்சமாகிய செய்பவனது பெயர் கொண்டன.

(2)செய்துவந்தான், செய்துநல்லனாயினான் என வினையெச்சங்கள் தம்மெச்சமாகிய வினைமுற்றுங் குறிப்புமுற்றுங் கொண்டன.

(3) சாத்தனும்வந்தான் என்னும் உம்மையெச்சம் முன்னே கொற்றன்வந்தான் எனத் தன்னெச்சங் கொண்டது.

(4)நல்லவனென்றான் என்னுஞ் சொல்லெச்சம் நல்லவனென்று சொன்னான் எனச் சொல்லென்னுந் தன்னெச்சங் கொண்டது.

(5) சாத்தனேகொண்டான், சாத்தனோகொண்டான் என்பன பிரிநிலையெச்சம். இவை பிறர்கொண்டிலரெனத் தம்மெச்சங் கொண்டன. கோடற்றொழிலாற் சாத்தனினின்றும் பிரிக்கப்பட்டார் பிறராதலிற் பிரிநிலை யென்க.

(6) கடலொல்லென வொலித்தது, நரம்பு விண்ணென விசைத்தது, தலையிடியெனவிடித்தது என்பன எனவெச்சம். இவை தம்மெச்சமாகிய வினைகொண்டன. மிகவுமொலித்தது, மிகவுமிசைத்தது, மிகவுமிடித்தது என்பன இவற்றிற்குப் பொருளாமாதலின், இவ்வெனவெச்சம் மிகுதிப்பொருளைத் தருவதோரிடைச்சொல்லா மென்க.

(7) கூரியதோர் வாண்மன், உண்ணுதற்கோ வந்தான் என்பன ஒழியிசை யெச்சம். இவை, முறையே, திட்பமின்று, கலகஞ்செய்யவந்தான் எனத் தம்மெச்சங்கொண்டன.

(8) "மறப்பினு மோத்துக் கொளலாகும்" யானோ செய்தேன் என்பன எதிர்மறையெச்சங்கள். இவை, முறையே, மறக்கலாகாது, யான் செய்திலேன் எனத் தம்மெச்சங்கங் கொண்டன.

(9)இசையெச்சமாவது வாக்கியங்களில் அவ்வவ்விடத்திற் கேற்ப ஒருசொல்லும் பலசொல்லுமாக வருவித்துரைக்கப்பட்டு வருவதாம். இசையென்பது சொல். "கற்றதனா லாய பயனென்" என்புழி, நூலைக்கற்றதனால் என ஒருசொல்லும், "அந்தாமரையன்னமே நின்னை யானகன் றாற்றுவனோ" என்புழி, என்னுயிரினுஞ் சிறந்த நின்னை எனப் பலசொற்களும் வருவிக்கப்படுதல் காண்க.

(10) குறிப்பெச்சமாவது பெயரியலிலே பன்னிரண்டாஞ் சூத்திரத்திலே "ஒன்றொழி பொதுச்சொல்" என்பத முதலாக "இன்னபிறவும்" என்றதுவரைக்குஞ் சொல்லப்பட்டவை களாம். ஆயிரமக்கள் பொருதார் என்புழி, மக்களென்னும் பொதுப்பெயர் ஆடவரென்னுஞ் சிறப்புப்பெயர் கொண்டது. பிறவும் அச்சூத்திர வுரையிற் காண்க.

## முகவை இராமானுச கவிராயர்

இது, நால்வகைச் சொற்குமாவதோ ரிலக்கணம் உணர்த்தும் வழிச் சிலவற்றிற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதியுஞ் சிலவற்றிற்கு எய்தாதது எய்துவித்தலு முணர்த்திற்று.

இ—ள்.:- பெயர்வினை யும்மை சொற்பிரிப் பென வொழியிசை எதிர்மறை யிசையெனுஞ் சொல் லொழி பொன்பதும்—பெயரெச்சமும் வினையெச்சமும் உம்மையெச்சமும் சொல்லெச்சமும் பிரிநிலையெச்சமும் எனவெச்சமும் ஒழியிசையெச்சமும் எதிர்மறையெச்சமும் இசையெச்சமும் ஆகிய சொல்லெச்சம் ஒன்பதும், (ஒழிபு—எச்சம்,) குறிப்பும் —குறிப்பெச்சம் ஒன்றும், தத்தமெச்சங்கொள்ளும் – அவற்றவற்றெச் சங்களைக் கொண்டு முடியும். எ—று.

எச்சம் எச்சங்களைக் கொண்டு முடியுமென்ற தென்னெனின், முடிவனவும் முடிப்பனவுமாகிய இரண்டினுள் முடிவனவாகிய எச்சங்களுக்கு முடிப்பனவும் எச்சமாகவே நிற்குமாதலால் அவ்வாறு கூறப்பட்டதென்க, ஒழிபு என்பதைக் குறிப்பு என்றதனோடுங் கூட்டுக. எனவே, எச்சங்கள் சொல் லெச்சமுங் குறிப்பெச்சமுமென இருவகைப்படு மென்பதும், சொல்லெச்சம் ஒன்பதெனத் தொகை கூறினோர் அதன் வகையுள் ஒன்றையுஞ் சொல்லெச்ச மென்றதினால் அது சொல் விகற்பங்களின்றிச் சொல் என்பதே குறைந்து நிற்பதென்பதும் பெறப்பட்டன. பெயரெச்சம் பெயர்கொண்டு முடிதற்கும் வினையெச்சம் வினைகொண்டு முடிதற்கு முதாரணம் முன்னமே யமைந்துகிடந்தன.

வ—று.:—

சாத்தனும் வந்தான் என்னும் உம்மையெச்சம் முன்னர்க் கொற்றன் வந்தான் எனத் தன்னெச்சங் கொண்டது, 'கடியென்றார் கற்றறிந்தார்', 'இல்லென்றல் யார்க்கும் வசையன்று' என்பன சொல்லெச்சம்; இவை, கடியென்று சொன்னார், இல்லென்று சொல்லுதல், எனச்சொல் என்னுந் தம்மெச்சங் கொண்டன. இது பெயரெச்சம் வினையெச்ச மென்றாற் போலச் சொல் என்னுமெச்சத்தையுடைய இடைச்சொல்லைச் சொல்லெச்ச மென்றதினால் ஆகுபெயர். மேல்வரும் எனவென் எச்சம் ஒழிந்தனவும் அத் தன்மை யனவேயாம். சாத்தனே கொண்டான், சாத்தனோ கொண்டான் என்பன பிரிநிலையெச்சம். இவை பிறர் கொண்டிலர் எனத் தம்மெச்சங் கொண்டன. கொள்ளுதல் வினையாற் சாத்தனில் நின்றும் பிரிக்கப்பட்டார் பிறராதலாற் பிரிநிலையென்க. கடல்ஒல்லென ஒலித்தது, நரம்பு விண்ணென விசைத்தது என்பன என எச்சம். இது மிகுதிப் பொருளைத் தருவதோர் இடைச்சொல் ஆதலால் ஒல்லென ஒலித்ததென்பதற்கு மிகவுமொலித்த தென்பது பொருள். 'பெய்யெனப் பெய்யுமழை', இது பெய்யென்று சொல்ல என வினைப் பொருளைத் தருதலால் இடைச்சொல்லடியாகப் பிறந்த செயவென் எச்சமாய் வினையெச்சத்துள்ளடங்கு மென்க. 'கூரியதோர் வாள்மன்', 'வருகதில்லம்ம', 'கொளவோ வந்தான்' என்பன ஒழியிசையெச்சம், இவை முறையே; கோணிற்று, வந்தால் இன்னது செய்வேன், கொண்டு பிழைக்க வந்தவனல்லன் எனத் தம்மெச்சங் கொண்டன. 'வருதற்குமுரியன்' 'யானோ செய்தேன்' என்பன எதிர்மறையெச்சம். இவை முறையே, வாராமைக்குமுரியன், யான் செய்திலன் எனத் தம்மெச்சங் கொண்டன. இதுவரைக்கும் வினையியல் ஒழிபாகிய பெயரெச்ச வினையெச்ச முடிபும் இடைச்சொல்லியல் ஒழிபாகிய மற்ற அறுவகை யெச்சமுடிபும் எடுத்தோதினார்; இனி, இவ்வாறெடுத்து ஓதுதற்கு வரையறைப்படாது நின்ற சொல்லெச்சங்களை யெல்லாந் தொகுத்து இசையெச்சமென இறுதியிலே சொன்னார். இசையென்பது சொல், இசையெனப் பொதுப்படச் சொன்னதினாலே, இந்த எச்சமும், இது கொண்டு முடிவதும் பெயர் வினை யிடை யுரியென்னும் நால்வகைச் சொல்லுள் ஒன்றும் பலவும் தனித்துந் தொடர்ந்தும் வருமெனக் கொள்க,. அவற்றுள், சில இசையெச்சங்கள் வருமாறு:— இணரெரி தோய்வன்ன வின்னா செயினும்—புணரின் வெகுளாமை நன்று—என்னுங் குறளுக்கு— (பிறவுயிர்க்குத் தீங்குசெயின் அது தப்பாமலே

தமக்கு வருதலைக் குறித்துத் தம்மிடத்தில் அன்பும், பிறவுயிர்களிடத்து அருளும், தீங்கு செய்தலாலே மேன்மேல் வளரும் பிறப்பு இறப்பு என்னும் இரண்டின் அச்சமும் 'நம்மாலே தீங்கு செய்யப்பட்டாரை நாம் அடைந்து இரக்கவரினும் வரும்; அதனால் யாரிடத்துந் தீங்கு செய்யக் கடவோமல்லம்' என்னும் எதிர்கால உணர்ச்சியும் இரலாகி ஒருவர் இணரெரி தோய்வன்ன இன்னா செயினும் அக்கினிச் சுவாலைகளிலே மூழ்கின்ற யொத்த பொல்லாங்குகளைத் தன்னிடத்துச் செய்தாராயினும், புணரின் – (அவர் தமக்கு வேண்டுவதோர் குறை முடித்தலைக் குறித்து நாணாமலே தன்னை வந்து) அடைந்தாராயின், வெகுளாமைநன்று–அவர் செய்த பொல்லாங்குகளை நினைந்து அவர்மேற் சினைங் கொள்ளாமல் அவற்றை மறந்து அவர் வேண்டுவதை முடித்துக் கொடுத்துப் பண்டு செய்த பொல்லாங்குகளாலே அவர் கூசி நடத்தலொழிதற்குக் காரணமாகிய இனியமுகமும் இன்சொல்லும் முதலியவைதன்னிடத்து இயல்பாகவே உண்டாக அவர்க்கு இனியனாகியிருப்பதுதனது பெருந் தன்மைக்கு நன்று, என நால்வகைச் சொற்களுள் வேண்டுவன வெல்லாங்கொடுவந்து அகலவுரை கூறவேண்டி நிற்பதும், இப்பட்டுச்சீனம் என்றவழி–இப்பட்டுச் சீனத்துள்ளது என ஒரு சொற்கூட்டியுரைப்பதும் பிறவும் இசையெச்சமா மென்க. இனிக் குறிப்பெச்சமாவன, ஒன்றொழி பொதுச்சொல் முதலிய குறிப்புச்சொற்களாம்; அவற்றை, ஒன்றொழி பொதுச்சொல் விகாரந்தகுதி யென்னுஞ் சூத்திரம் நோக்கிக் காண்க. அவை தத்தமெச்சங் கொள்ளுமாறு–பெருந்தேவி பொறையுயிர்த்த கட்டிற்கீழ் நால்வர்மக்களுளர் எனின்;–மக்களென்னும் பொதுப்பெயர் பெண் மக்களெனப் பெண் என்னுஞ் சிறப்புப்பெயர் கொண்டது; குறுத்தாட்பூதம் எனின், தகர வல்லொற்று அதற்கு இனமாகிய நகரமெல்லொற்றைக் கொண்டது, இவ்வாறே ஒழிந்தன வற்றையுங்காண்க. சொல்லேயன்றிப் பொருளும் எழுத்தும் எஞ்ச வருவனவுமுளவாதலால் இதனைக் குறிப்புச்சொல்லெச்ச மென்னாற் குறிப்பெச்சமென்றார்.

## கா. கோபாலாசாரியர்

## தி.கோ. ரங்காசாரியர்

**உரை** :– **பெயர்** – பெயரெச்சமும், **வினை** – வினையெச்சமும், **உம்மை** – உம்மையெச்சமும், **சொல்** – சொல்லெச்சமும், **பிரிப்பு**–பிரிநிலை யெச்சமும், **என** – என வெச்சமும், **ஒழியிசை** – ஒழியிசையெச்சமும், **எதிர்மறை** – எதிர்மறை யெச்சமும், **இசை** – இசையெச்சமும், **எனும்** – என்கிற, **சொல் ஒழிபு**

ஒன்பதும் –சொல்லெச்சங்கள் ஒன்பதும், குறிப்பும் – குறிப்பெச்சமும், தத்தம் எச்சம் கொள்ளும் – தம்தமது எஞ்சிநின்ற சொற்களைக் கொண்டு முடியும்.

குறிப்பு :–

எனவே, எச்சங்கள் – 'சொல்லெச்சம்', 'குறிப்பெச்சம்' என இருவகைத்து . (எச்சம் – குறைவு) இப்பத்தெச்சங்களுள், பெயரெச்சம் வினையெச்சம் எனவெச்சம் மூன்றற்கும் எச்சச்சொற்கள் வாக்கியங்களில் வெளிப்பட்டு நிற்கும்; மற்றவற்றிற்கு எச்சச் சொற்கள் வருவித் துரைக்கப்படுமென்றறிக.

உதாரணம்

| | |
|---|---|
| 1. செய்த இராமன்<br>நல்ல இராமன் | பெயரெச்சங்கள் தம் எச்சமாகிய பெயரைக் கொண்டன. |
| 2. செய்து வந்தான்<br>மெல்ல வந்தான் | வினையெச்சங்கள் தம் எச்சமாகிய வினைகொண்டன. |
| 3. இராமனும் வந்தான் | – உம்மை முன்னே 'இலக்குமனும் வந்தான்' எனத் தன் எச்சங்கொண்டது. |
| 4. நல்லவன் என்றான் | – சொல்லெச்சம் 'என்றுசொன்னான்' எனத் தன் எச்சங் கொண்டது. |
| 5. இராமனேகொண்டான்<br>இராமனோ கொண்டான் | பிரிநிலையெச்சம் 'பிறர் கொண்டிலர்' எனத் தம் எச்சங்கொண்டன. |
| 6. கடல் ஒல்லென ஒலித்தது | எனவெச்சம் தன் எச்சமாகிய வினை கொண்டது. |

('மிகுதியும் ஒலித்தது' எனப் பொருள்படலால் இவ்வெனவெச்சம் மிகுதிப்பொருள் தருவதோர் இடைச்சொல்.)

ஒழியிசையெச்சங்கள் 'இப்பொழுது

| | |
|---|---|
| 7. கூரியதோர் வாள் மன்<br>உண்ணுதற்கோ வந்தான் | ஒடிந்தது', 'கலகஞ்செய்ய வந்தான்' எனத் தம் எச்சங்கள் கொண்டன. |
| 8. மறப்பினும் வேதம் கற்கலாம், யானோ செய்தேன் | எதிர்மறையெச்சங்கள் முறையே 'மறக்கலாகாது', 'யான் செய்திலேன்' எனத் தம் எச்சம் கொண்டன. |
| 9. அந்தாமரையன்னமேநின்னையான கன்றாற்றுவனோ | இதில் 'என் உயிரினுஞ்சிறந்த நின்னை' எனப் பலசொற்கள் வருவிக்கப்படுதலால் இவ்விசையெச்சம் தன் எச்சங் கொண்டது. |

(இசையெச்சமாவதுவாக்கியங்களில் அவ்வவ்விடத்திற் கேற்ப ஒருசொல்லும் பலசொல்லும் வருவித்துரைக்கப்படுவது).

| | |
|---|---|
| 10. குறிப்பெச்சமாவது | –கீழ், பெயரியலிற் பன்னிரண்டாஞ் சூத்திரத்துட்கூறிய "ஒன்றொழி பொதுச்சொல்" முதலாக "இன்னபிறவும்" வரையும் கூறப்பட்டனவாம். |
| ஆயிரமக்கள் பொருதார்" | – இதில் 'மக்கள்' என்னும் பொதுப் பெயர் 'ஆடவர்' என்னுஞ் சிறப்புப் பெயர் கொண்டது. பிறவும் அச்சூத்திர உரையிற் காண்க. |

குறிப்பெச்சம் ஒழிந்த ஒன்பதில், சொல்லெச்சம்– 'சொல்' என்கிற ஒன்றே குறைந்து நிற்பது' எனவும், இசையெச்சம் – பெயர்முதலிய சொற்களுள் 'ஒன்றாயினும் பலவாயினும் குறைந்துநிற்பது' எனவும் வேறுபாடறிக.

எச்சம் சில பெயர்ச்சொற்களும் வினைச் சொற்களும் இடைச் சொற்களுமாயிருத்தலின், இப்பத்தெச்சங்களையும் ஒருசேர அவ்வவ்வியலிற் கூற இயலாமைபற்றி அவற்றிற்குப் பொது விலக்கணங்கூறும் இவ்வியலிற் கூறினார் என்க.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.:– பெயர்ச் (சொல்லொழிபு) – பெயரெச்சமும், வினைச் (சொல்லொழிபு) – வினையெச்சமும், உம்மை (சொல்லொழிபு)– உம்மையெச்சமும், சொல் (சொல்லொழிபு) – சொல்லெச்சமும், பிரிப்புச் (சொல்லொழிபு) – பிரிநிலையெச்சமும், எனச் (சொல்லொழிபு)–எனவெச்சமும், ஒழியிசைச் (சொல்லொழிபு) – ஒழியிசையெச்சமும், எதிர்மறைச் (சொல்லொழிபு) – எதிர்மறையெச்சமும், இசைச் (சொல்லொழிபு) – இசையெச்சமும், எனும் சொல்லொழிபு ஒன்பதும்–என்னுஞ் சொல்லெச்சங்கள் ஒன்பதும், குறிப் (பொழிபும்)–குறிப்பெச்சமொன்றும், தத்தம் எச்சம் கொள்ளும் – தத்தமெச்சங் களைக் கொண்டு முடியும், எ–று.

எனவே, எச்சங்கள் சொல்லெச்சங் குறிப்பெச்சமென இருவகைப்படு மென்பதாயிற்று.

இப் பத்தெச்சங்களுள்ளும் பெயரெச்சம் வினையெச்சம் என வெச்சமென்னு மூன்றற்கும் எச்சச்சொற்கள் வாக்கியங்களில் வெளிப்பட்டு நிற்கும்; ஒழிந்தனவற்றிற்கு எச்சச்சொற்கள் வருவித்துரைக்கப்படும்.

வ–று.:–

(1) செய்த சாத்தன், நல்ல சாத்தன் எனப் பெயரெச்சங்கள் தம் மெச்சமாகிய செய்பவனது பெயர் கொண்டன.

(2) செய்து வந்தான், செய்து நல்லனாயினான் என வினையெச்சங்கள் தம்மெச்சமாகிய வினைமுற்றுங் குறிப்புமுற்றுங் கொண்டன.

(3) சாத்தனும் வந்தான் என்னும் உம்மையெச்சம் முன்னே கொற்றன் வந்தான் எனத் தன்னெச்சங்கொண்டது.

(4) நல்லவ னென்றான் என்னுஞ் சொல்லெச்சம் நல்லவனென்று சொன்னான் எனச் சொல்லென்னுந் தன்னெச்சங் கொண்டது.

(5) சாத்தனே கொண்டான், சாத்தனோ கொண்டான் என்பன பிரிநிலையெச்சம். இவை பிறர் கொண்டிலரெனத் தம்மெச்சங் கொண்டன. கோடற்றொழிலாற் சாத்தனினின்றும் பிரிக்கப்பட்டார் பிறராதலிற் பிரிநிலையென்க.

(6) கடலொல்லென வொலித்தது, நரம்பு விண்ணென விசைத்தது, தலை யிடியென விடித்தது என்பன எனவெச்சம். இவை தம்மெச்சமாகிய வினைகொண்டன. மிகவுமொலித்தது, மிகவுமிசைத்தது, மிகவுமிடித்தது என்பன இவற்றிற்குப் பொருளாமாதலின், இவ்வென வெச்சம் மிகுதிப்பொருளைத் தருவதோ ரிடைச்சொல்லா மென்க.

(7) கூரியதோர் வாண்மன், உண்ணுதற்கோ வந்தான் என்பன ஒழியிசையெச்சம். இவை முறையே, கோடிற்று, கலகஞ்செய்ய வந்தான் எனத் தம்மெச்சங் கொண்டன.

(8) "மறப்பினுமோத்துக்கொளலாகும்," யானோசெய்தேன் என்பன எதிர்மறையெச்சங்கள். இவை முறையே, மறக்கலாகாது, யான் செய்திலேன் எனத் தம்மெச்சங் கொண்டன.

(9)இசையெச்சமாவது வாக்கியங்களில் அவ்வவ்விடத்திற் கேற்ப ஒருசொல்லும் பலசொல்லுமாக வருவித்துரைக்கப்பட்டு வருவதாம். இசையென்பது சொல். "கற்றதனா லாய பயனென்" என்புழி நூலைக் கற்றதனால் என ஒரு சொல்லும் "அந்தா மரையன்ன மேநின்னை யானகன் றாற்றுவனோ" என்புழி, என்னுயிரினுஞ் சிறந்த நின்னை எனப் பல சொற்களும் வருவிக்கப்படுதல் காண்க.

(10) குறிப்பெச்சமாவது பெயரியலிலே பன்னிரண்டாஞ் சூத்திரத்திலே "ஒன்றொழி பொதுச்சொல்" என்பது முதலாக "இன்ன பிறவும்" என்றது வரைக்குஞ் சொல்லப்பட்டவை களாம். ஆயிரமக்கள் பொருதார் என்புழி, மக்களென்னும் பொதுப்பெயர் ஆடவரென்னுஞ் சிறப்புப்பெயர் கொண்டது. பிறவும் அச்சூத்திரவுரையிற் காண்க.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள்.;– பெயர்ச் (சொல்லொழிபு) – பெயரெச்சமும், – **வினைச்** (சொல்லொழிபு) – வினையெச்சமும், – **உம்மைச் (சொல்லொழிபு)** – உம்மையெச்சமும், – சொற் (சொல்லொழிபு) – சொல்லெச்சமும், – பிரிப்புச் (சொல்லொழிபு) – பிரிநிலையெச்சமும், – **எனச்** (சொல்லொழிபு) – எனவெச்சமும், – ஒழியிசைச் (சொல்லொழிபு) – ஒழியிசையெச்சமும், – எதிர்மறை (சொல்லொழிபு) – எதிர்மறையெச்சமும், – **இசைச்** (சொல்லொழிபு) – இசையெச்சமும், – **எனும் சொல்லொழிபு ஒன்பதும்** – என்னுஞ் சொல்லெச்சங்கள் ஒன்பதும், – குறிப் (பொழிபும்) – குறிப்பெச்சமொன்றும், – **தத்தம் எச்சம் கொள்ளும்** – தத்தமெச்சங்களைக் கொண்டு முடியும். எ – று.

எனவே, எச்சங்கள் சொல்லெச்சங் குறிப்பெச்சமென இருவகைப்படுமென்பதாயிற்று.

இப்பத்தெச்சங்களுள்ளும், பெயரெச்சம் வினையெச்சம் எனவெச்சமென்னு மூன்றற்கும் எச்சச் சொற்கள் வாக்கியங்களில் வெளிப்பட்டு நிற்கும்; ஒழிந்தனவற்றிற்கு எச்சச்சொற்கள் வருவித்துரைக்கப்படும்.

(வரலாறு)

(1) செய்த சாத்தன், நல்லசாத்தன் எனப் பெயரெச்சங்கள் தம்மெச்சமாகிய செய்பவனது பெயர் கொண்டன.

(2) செய்து வந்தான், செய்து நல்லனாயினான் என வினையெச்சங்கள் தம்மெச்சமாகிய வினைமுற்றுங் குறிப்புமுற்றுங் கொண்டன.

(3) சாத்தனும் வந்தான் என்னும் உம்மையெச்சம் முன்னே கொற்றன் வந்தான் எனத் தன்னெச்சங் கொண்டது.

(4) நல்லவனென்றான் என்னுஞ் சொல்லெச்சம் நல்லவனென்று சொன்னான் எனச் சொல்லென்னுந் தன்னெச்சங் கொண்டது.

(5) சாத்தனே கொண்டான், சாத்தனோ கொண்டான் என்பன பிரிநிலையெச்சம். இவை பிறர் கொண்டிலரெனத் தம்மெச்சங் கொண்டன. கோடற்றொழிலாற் சாத்தனினின்றும் பிரிக்கப்பட்டார் பிறராதலிற் பிரிநிலை யென்க.

(6) கடலொல்லென வொலித்தது, நரம்பு விண்ணென விசைத்தது, தலை யிடியென விடித்தது என்பன எனவெச்சம். இவை தம்மெச்சமாகிய வினைகொண்டன. மிகவுமொலித்தது, மிகவு மிசைத்தது, மிகவு மிடித்தது என்பன இவற்றிற்குப் பொருளாமாதலின், இவ்வெனவெச்சம் மிகுதிப்பொருளைத் தருவதோரிடைச் சொல்லாமென்க.

(7) கூரியதோர் வாண்மன், உண்ணுதற்கோ வந்தான் என்பன ஒழியிசை யெச்சம். இவை முறையே கோடிற்று, கலகஞ் செய்யவந்தான் எனத் தம்மெச்சங் கொண்டன.

(8) "மறப்பினு மோத்துக் கொளலாகும்" யானோ செய்தேன் என்பன எதிர்மறையெச்சங்கள். இவை, முறையே, மறக்கலாகாது, யான் செய்திலேன் எனத் தம்மெச்சங் கொண்டன.

(9.) இசையெச்சமாவது வாக்கியங்களில் அவ்வவ்விடத்திற் கேற்ப ஒருசொல்லும் பலசொல்லுமாக வருவித் துரைக்கப்பட்டு வருவதாம். இசையென்பது சொல். "கற்றதனா லாய பயனென்" என்புழி, நூலைக் கற்றதனால் என ஒருசொல்லும், "அந்தா மரையன்ன மேநின்னை யானகன் றாற்றுவனோ" என்புழி என்னுயிரினுஞ்சிறந்த நின்னை எனப் பலசொற்களும் வருவிக்கப்படுதல் காண்க.

(10) குறிப்பெச்சமாவது பெயரியலிலே பன்னிரண்டாஞ் சூத்திரத்திலே 'ஒன்றொழி பொதுச்சொல்" என்பது முதலாக 'இன்னபிறவும்' என்றது வரைக்குஞ் சொல்லப்பட்டவைகளாம், ஆயிரமக்கள் பொருதார் என்புழி, மக்களென்னும் பொதுப்பெயர் ஆடவரென்னுஞ் சிறப்புப்பெயர் கொண்டது. பிறவும் அச்சூத்திரவுரையிற் காண்க. இச்சூத்திரத்திற் கூறப்பட்டவைகளில் நாலாவதாகிய சொல்லெச்சத்தைப் பற்றி ஆசிரியர் தொல்காப்பியர் "சொல் லெனெச்சமுன்னும் பின்னுஞ், சொல்லளவல்லதெஞ்சுதலின்றே", என்றார். 'பிறவிப் பெருங்கடனீந்துவர்" என்பதில் சேர்ந்தார் என்பது சொல்லெச்சமாய் நின்றதென்று பரிமேலழகருரை செய்தது மறிக.

## வை.மு. சடகோபராமாநுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியர்

இ–ள்.: பெயர்–பெயரெச்சமும், வினை–வினையெச்சமும், உம்மை– உம்மையெச்சமும், சொல்–சொல்லெச்சமும், பிரிப்பு–பிரிநிலையெச்சமும், என– எனவெச்சமும், ஒழியிசை–ஒழியிசையெச்சமும், எதிர்மறை–எதிர்மறை யெச்சமும், இசை–இசையெச்சமும், எனும்–என்கிற, சொல் ஒழிபு ஒன்பதும்– சொல்லெச்சங்கள் ஒன்பதும், குறிப்பும்–குறிப்பெச்சமும், தத்தம் எச்சம் கொள்ளும் – தம்தமது எஞ்சிநின்ற சொற்களைக் கொண்டு முடியும்; எ–று. எஞ்சுதல்–குறைதல்.

எனவே, எச்சங்கள் சொல்லெச்சம், குறிப்பெச்சம் என இருவகைப்படும்.

இந்தப் பத்து எச்சங்களுள்ளும், பெயரெச்சம் வினையெச்சம் எனவெச்சம் என்னும் மூன்றற்கும் எச்சச்சொற்கள் வாக்கியங்களில் வெளிப்பட்டு நிற்கும்; மற்றவற்றிற்கு எச்சச்சொற்கள் வருவித்து உரைக்கப்படும்.

உ–ம்.:

(1) 'செய்த சாத்தன்', 'நல்ல சாத்தன்' எனப் பெயரெச்சங்கள் தம் எச்சமாகிய சாத்தன் என்னும் பெயரைக் கொண்டன.

(2) 'செய்து வந்தான்', 'மெல்ல வந்தான்' என வினையெச் சங்கள் தம் எச்சமாகிய வந்தான் என்னும் வினைமுற்றைக் கொண்டன.

(3) 'சாத்தனும் வந்தான்' என்னும் உம்மையெச்சம், 'முன்னே கொற்றனும் வந்தான்' எனத் தன் எச்சத்தைக் கொண்டது.

(4) 'நல்லவ னென்றான்' என்னும் சொல்லெச்சம், நல்லவ னென்று சொன்னான் எனச் சொல் என்னும் தன் எச்சத்தைக் கொண்டது.

(5) 'சாத்தனே கொண்டான்', 'சாத்தனோ கொண்டான்' என்னும் பிரிநிலை யெச்சங்கள், 'பிறர் கொண்டிலர்' எனத் தம் எச்சத்தைக் கொண்டன. கொள்ளுதலாற் சாத்தனினின்று பிறர் பிரிக்கப்பட்டாராதலின் பிரிநிலை.

(6) 'கடல் ஒல்லென ஒலித்தது', 'நரம்பு விண்ணென இசைத்தது' என்னும் எனவெச்சங்கள்–தம் எச்சமாகிய வினையைக் கொண்டன; மிகவும் ஒலித்தது, மிகவும் இசைத்தது என்பன இவற்றிற்குப் பொருளா மாதலால், இவ்வெனவெச்சம், விகுதிப்பொருளைத் தருவதோர் இடைச்சொல்லாம்.

(7) 'கூரியதோர் வாள் மன்', 'படித்தற்கோ வந்தான்' என்னும் ஒழியிசையெச்சங்கள் முறையே, 'இப்பொழுது ஒடிந்தது,' 'விளையாட வந்தான்' எனத் தம் எச்சத்தைக் கொண்டன.

(8) 'மறப்பினும் ஓதிக்கொளலாகும்', 'யானோ செய்தேன்' என்னும் எதிர்மறை யெச்சங்கள் – முறையே 'மறக்கலாகாது', 'யான் செய்திலேன்' எனத் தம் எச்சத்தைக் கொண்டன.

(9) "கற்றதனாலாய பயனென்" என்பதில், (நூலைக்) கற்றதனால் என ஒரு சொல்லும், "அந்தாமரையன்னமே நின்னை யானகன் றாற்றுவனோ?" என்பதில், (என் உயிரினும் சிறந்த) நின்னை யெனப் பல சொற்களும் வருவிக்கப் படுதலால், இவ்விசையெச்சங்கள் தம் எச்சங்களைக் கொண்டன. (இசையெச்சமாவது – வாக்கியங்களில்

அவ்விடத்திற்கு ஏற்ப ஒருசொல்லும் பலசொற்களும் வருவித்து உரைக்கப்படுதல்.)

(10) குறிப்பெச்சமாவது, பெயரியலிற் பன்னிரண்டாஞ் சூத்திரத்திலே "ஒன்றொழி பொதுச்சொல்" முதலாக "இன்ன பிறவும்', வரைக்கும் சொல்லப்பட்டவை; ஆயிரம் மக்கள் பொருதார் என்பதில், மக்கள் என்னும் பொதுப்பெயர், ஆடவர் என்னும் சிறப்புப் பெயரைக் கொண்டது. பிறவும் அச்சூத்திரவுரையிற் காண்க.

குறிப்பெச்சமொழிந்த ஒன்பதில், சொல்லெச்சம் – சொல் என்கிற சொல் ஒன்றே குறைந்து நிற்பது என்றும், இசையெச்சம்–பெயர் முதலிய சொற்களுள் ஒன்றாயினும் பலவாயினும் குறைந்து நிற்பது என்றும் வேறுபாடு அறிக.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– பெயர்ச் (சொல்லொழிபு) – பெயரெச்சமும், வினைச் (சொல்லொழிபு) – வினையெச்சமும், உம்மைச் (சொல்லொழிபு) – உம்மையெச்சமும், சொற் (சொல்லொழிபு) – சொல்லெச்சமும், பிரிப்புச் (சொல்லொழிபு) – பிரிநிலையெச்சமும், எனச் (சொல்லொழிபு) – எனவெச்சமும், ஒழியிசைச் (சொல்லொழிபு) – ஒழியிசையெச்சமும், எதிர்மறைச் (சொல்லொழிபு) – எதிர்மறையெச்சமும், இசைச் (சொல்லொழிபு) – இசையெச்சமும், எனும் சொல்லொழிபு ஒன்பதும் – என்னுஞ் சொல்லெச்சங்கள் ஒன்பதும், குறிப்(பொழிபும்) – குறிப்பெச்சமொன்றும், தத்தம் எச்சம் கொள்ளும் – தத்த மெச்சங்களைக் கொண்டு முடியும். எ–று.

எனவே, எச்சங்கள் சொல்லெச்சங் குறிப்பெச்சமென இருவகைப்படு மென்பதாயிற்று.

'இன்னதற்கு இன்னது எச்சமென்று மொழிந்திலாதார் தத்தமெச்சம் என்று குறித்துரைத்தவாறு என்னையோ வெனின், அஃதே? நன்று சொன்னாய்; அவற்றைப் பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகக் கொள்ளத் தாமே விளங்குதலின், அவ்வாறே சொன்னாரென்க. அஃதாவது, பெயராகிய எச்சத்தையுடையது யாது, அது பெயரெச்சம் என்பது. பிறவு மன்ன' என்றார் மயிலைநாதர்.

இப் பத்தெச்சங்களுள்ளும், பெயரெச்சம் வினையெச்சம் என வெச்சமென்னும் மூன்றற்கும் எச்சச்சொற்கள் வாக்கியங்களில் வெளிப்பட்டு நிற்கும்; ஒழிந்தனவற்றிற்கு எச்சச்சொற்கள் வருவித் துரைக்கப்படும்.

உ–ம்.(1) செய்த சாத்தான்; நல்ல சாத்தன் – எனப் பெயரெச்சங்கள் தம் மெச்சமாகிய சாத்தன் என்னும் பெயரைக் கொண்டன.

(2) செய்து வந்தான், செய்து நல்லவனாயினான் – என வினையெச்சங்கள் தம்மெச்சமாகிய வினைமுற்றுங் குறிப்புமுற்றுங் கொண்டன.

(3) சாத்தனும் வந்தான் – என்னும் உம்மையெச்சம் முன்னே கொற்றன் வந்தான் எனத் தன்னெச்சங் கொண்டது.

(4) நல்லவ னொன்றான் – என்னுஞ் சொல்லெச்சம் நல்லவனென்று சொன்னான் எனச் சொல்லென்னுந் தன்னெச்சங்கொண்டது.

(5) சாத்தானே கொண்டான், சாத்தனோ கொண்டான் – என்னும் பிரி நிலையெச்சங்கள் பிறர் கொண்டிலரெனத் தம்மெச்சங் கொண்டன. கொள்ளுதலாகிய தொழிலால் சாத்தனினின்றும் பிரிக்கப்பட்டார் பிறராதலிற் பிரிநிலை.

(6) கடல் ஒல்லென வொலித்தது, நரம்பு விண்ணென இசைத்தது, தலை யிடியென இடித்தது – என்னும் எனவெச்சங்கள் தம்மெச்சமாகிய வினைகொண்டன. மிகவுமொலித்தது, மிகவுமிசைத்தது, மிகவுமிடித்தது என்பன இவற்றிற்குப் பொருளாமாதலின், இவ் வெனவெச்சம் மிகுதிப்பொருளைத் தரவதோ ரிடைச்சொல்லாம். 'பெய்யெனப் பெய்யு மழை' என்பதில் என என்பது என்று சொல்ல என வினையெச்சப் பொருள்படுதலின் இடைச்சொல்லடியாகப் பிறந்த வினையெச்சமாய் வினையெச்சத்துள் அடங்கும்.

(7) கூரியதோர் வாண்மன், உண்ணுதற்கோ வந்தான் – என்னும் ஒழி யிசையெச்சங்கள், முறையே, கோணிற்று, கலகஞ்செய்யவந்தான் எனத் தம்மெச்சங் கொண்டன.

(8) மறப்பினும் வேதம் கொளலாகும், யானோ செய்தேன் – என்னும் எதிர்மறையெச்சங்கள், முறையே, மறக்கலாகாது, யான் செய்திலேன் எனத் தம்மெச்சங் கொண்டன.

(9) "கற்றதனா லாய பயனென்" என்புழி நூலைக் கற்றதனால் என ஒரு சொல்லும், "அந்தா மரையன்ன மேநின்வன யானகண் றற்றுவனோ" என்புழி, என்னுயிரினுஞ் சிறந்த நின்னை எனப் பல சொற்களும் வருவிக்கப்படுதலின் இவ் இசையெச்சங்கள் தம் எச்சங்களைக் கொண்டன.

இசையெச்சமாவது வாக்கியங்களில் அவ்வவ்டத்திற்கேற்ப ஒரு சொல்லும் பலசொல்லுமாக வருவித்துரைக்கப்பட்டு வருவதாம். இசையென்பது சொல்.

(10) குறிப்பெச்சமாவது பெயரியலிலே பன்னிரண்டாஞ் சூத்திரத்திலே "ஒன்றொழி பொதுச்சொல்" என்பது முதலாக "இன்ன பிறவும்" என்றது வரைக்குஞ் சொல்லப்

பட்டவைகளாம். ஆயிர மக்கள் பொருதார் – என்பதில், மக்களென்னும் பொதுப்பெயர் ஆண்மக்கள் என ஆண் என்னுஞ் சிறப்புப்பெயர் கொண்டது. பிறவும் அச் சூத்திரவுரையிற் காண்க.

## கா. நமச்சிவாய முதலியார்

**(1) பெயர்ச் (சொல்லொழிபு)** – பெயரெச்சமும், **(2) வினைச் (சொல்லொழிபு)** – வினையெச்சமும், **(3) உம்மைச் (சொல்லொழிபு)** – உம்மையெச்சமும், **(4) சொல் (சொல்லொழிபு)** – சொல்லெச்சமும், **(5) பிரிப்புச் (சொல்லொழிபு)** – பிரிநிலையெச்சமும், **(6) எனச் (சொல்லொழிபு)** – எனவெச்சமும், **(7) ஒழி இசைச் (சொல்லொழிபு)** – ஒழியிசையெச்சமும், **(8) எதிர்மறைச் (சொல்லொழிபு)** – எதிர்மறையெச்சமும், **(9) இசைச் (சொல்லொழிபு)** – இசையெச்சமும், **எனும்** – என்கின்ற, **சொல்லொழிபு** – சொல்லெச்சங்களும் ஒன்பதும்,

**2. குறிப் (பொழி)பும்** – குறிப்பெச்சமும், **தத்தம்** – தம் தம்முடைய, **எச்சம்** – எச்சங்களை, **கொள்ளும்** – கொண்டு முடியும்.

எனவே, எச்சம், **1. சொல்லெச்சம், 2.** குறிப்பெச்சம் என இருவகைப்படும் என்பதாயிற்று.

இப் பத்து எச்சங்களுள் பெயரெச்சம், வினையெச்சம், என வெச்சம் என்னும் மூன்றற்கும் எச்சச்சொற்கள் அவ்வவ் வாக்கியங்களில் வெளிப்பட்டு நிற்கும். மற்றவைகளில் எச்சச்சொற்கள் வருவித்துரைக்கப்படும்.

உதாரணம்

I. 1. வந்த சாத்தன்
நல்ல சாத்தன் — பெயரெச்சம், தம்மெச்சங்கள் ஆகிய செய்பவனது பெயரைக் கொண்டன.

2. செய்து வந்தான்
செய்து நல்லனாயினான் — வினையெச்சம், தம்மெச்சங்களாகிய தெரிநிலை வின்னமுற்றுக், குறிப்பு வினை முற்றுக்களைக் கொண்டன.

3. சாத்தனும் வந்தான்.
நளனும் போனான். — உம்மையெச்சம், முறையே, முன்னே கொற்றன் வந்தான். மற்றைத் தேவர்கள் போனார்கள் என்னும் தம் எச்சங்களைக் கொண்டன.

4. 'ணவ்வாகும் என்ப' — சொல்லெச்சம், இங்கு, ஆசிரியர் என ஒரு சொல்லைக் கொண்டது.

5. சாத்தனே கொண்டான் — பிரிநிலை யெச்சம், பிறர்கொண்டிலர்

| | |
|---|---|
| சாத்தனோ கொண்டான் | எனத் தம் எச்சங் கொண்டன. |
| 6. கடல் ஒல்லென ஒலித்தது கார் எனக் கறுத்தது. | எனவெச்சம், தம்மெச்சமாகிய வினையைக் கொண்டன. மிகவும் ஒலித்தது. மிகவும் கறுத்தது என்பன பொருள். |
| 7. கூரியதோர் வாள்மன் உண்ணுதற்கோ வந்தான் | ஒழியிசையெச்சம், முறையே கோடிற்று. கலகஞ் செய்ய வந்தான் எனத் தம் எச்சங் கொண்டன. |
| 8. வரலும் உரியன் யானோ செய்தேன் | எதிர்மறையெச்சம், முறையே வாராமைக்கும் உரியன யான் செய்திலேன் எனத் தம் எச்சங் கொண்டன. |
| 9. 'அந்தாமரையன்னமே நின் னையானகன் றாற்றுவனோ' | இசையெச்சம், 'என் உயிரினுஞ் சிறந்த உன்னை' எனப் பல சொற்களும் வருவித்து' உரைக்கப்படும். |

இசையெச்சமாவது, வாக்கியங்களில் அவ்வவ் விடங்களுக்கு ஏற்றபடி பல சொற்கள் வருவித்து உரைக்கப்படுவது.

(இசை = சொல்.)

குறிப்பெச்சமாவது பெயரியல் 12-ம் சூத்திரத்தில், 'ஒன்றொழி பொதுச்சொல்' முதலாக 'இன்னபிறவும்' என்பது வரைக்கும் சொல்லப் பட்டவைகளாம். 'ஆகிய மக்கள் போர்செய்தார்' என்னுமிடத்தே மக்கள் என்னும் பொதுப் பெயர் ஆடவர் என்னும் சிறப்புப் பெயர் கொண்டது.

## மோசகு பொன்னையா

பெயர் வினை, உம்மை, சொல் பிரிப்பு, ஒழியிசை, எதிர்மறை, இசை என்னும் ஒன்பது சொல்ஒழிபுகளும், குறிப்பு ஒழிபும் தத்தமக்குரிய எஞ்சு பொருட் கிளவிகளான் முற்றும், எ-று.

> எச்சம் என்றது ஈண்டு எஞ்சி நிற்கும் பொருளை முடித்து நிற்கும் சொல்லை அல்லது தொடரை எனக் கொள்க. தொல்காப்பியர், கிளவி என்ற சொலால் அவ்விருவகையின வற்றையும் முடி;க்கின்றார் ஆதலினாலும், இவ்வாசிரியர் அவர் எஞ்சு பொருட் கிளவி என்றும் ஓதியவற்றையே ஈண்டு எச்சம் என்றார். ஆதலாலும், தத்தமக்குரிய எஞ்சு பொருட் கிளவிகளால் முற்றும் என உரைக்கப்பட்டது. எனவே, இவ்வாசிரியர் சொல்லொழிபுகளின் எச்சப்பொருளை முடிப்பது

சொல் எனவும், குறிப்பொழிபின் எச்சப்பொருளை முடிப்பது தொடர் எனவும் கொண்டமையை வேறு பிரித்தோதிப் புலப்படுத்தினார் எனக் கொள்க.

எச்சக்கிளவிகளில், முன்னர், 'அறுபொருட் பெயரும் எஞ்ச நிற்பது பெயரெச்சம்மே' எனவும் 'வினை, ஒழிய நிற்பது வினையெச்சம்மே' எனவும், பின்னர் தெரிநிலை, எதிர்மறை, ஒழியிசை என இடையியலுள் அமைத்துக் கொள்ளும் தத்தம் பொருளவாம் இடைப் பொருளனவுமானவைகளின் பெயர்களோடு ஒத்த பெயர்களைக் கொண்டவை இவ்வெச்சக் கிளவிகளுள்ளுங் காணப்படுவதால், இவை அவற்றினும் வேறானவை என அறிவுறுத்தற்கு ஈண்டு இவற்றை ஒழிபுகள் எனக் குறியீட்டாண்டார் இவ்வாசிரியர் எனக் கொள்க.

தொல்காப்பியர்

**பிரிநிலை வினையே பெயரே யொழியிசை**
**யெதிர்மறை யும்மை யெனவே சொல்லே**
**குறிப்பே யிசையே யாயீ ரைந்து**
**நெறிப்படத் தோன்று மெஞ்சுபொருட் கிளவி**

என இவ்வெச்சக் கிளவிகளைத் தொகுத்துரைத்து, சொல், குறிப்பு, இசை என்னும் மூன்று எச்சக் கிளவிகளும் ஏனைய போல் 'தம்மை முடிக்கும் பிற சொல்லைத் தாம் அவாவி நில்லா' என்பதை,

**எஞ்சிய மூன்று மேல்வந்து முடிக்கும்**
**மெஞ்சுபொருட் கிளவி யிலவென மொழிப,**

எனப் பகுத்துங் காட்டினார்.

**பெயெரெச்ச ஒழிபு**

தொல்காப்பியர்,

**பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே**

என்றார். ஈண்டு ஆசிரியர் 'பெயரெஞ்சு கிளவி' என்றது பெயராகிய எச்சத்தை உடைய தொடரை எனக் கொளலே சாலும். தொல்காப்பியர் 'கிளவி' என்ற சொல்லை எழுத்து, சொல், தொடர் முதலிய பல்வேறு பொருட்களில் எடுத்தாளுகின்றார் என்பதை அறிந்தவர்கள், இவ்வாறு பொருள் கொள்வதை ஏற்பர். எனவே, உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே' என்பதனுள் என்மனார் யார்? என வினா எழுந்த விடத்து என்மனார் ஆசிரியர் என முடித்தல் வேண்டப்படுதலின், ஆசிரியர் என்னும் பெயர் முடிவாக அமைந்தவாற்றைக் கண்டு கொள்க.

அவ்வாறே,

**எண்ணென்ப வேனை யெழுத்தென்னப இவ்விரண்டும்**

**கண்ணென்ப வாழு முயிர்க்கு**

எனவும்,

**யாதனின் யாதனி னீங்கியா னோத**

**லதனி னதனி னிலன்**

எனவும் வரும் குறட்பாக்களுக்கு முறையே 'கற்றார்', 'ஒருவன்' என்னும் பெயர்ச்சொற்கள் முடிவாக அமைந்துள்ளன எனக் கொள்க.

இவ்வாறன்றி, செய்த சாத்தன், நல்ல சாத்தன் என எடுத்துக்காட்டின், தொல்காப்பியர், 'நெறிப்படத்தோன்று மெஞ்சுபொருட் கிளவி'1 எனத் தெளிவுறுத்தியது வேண்டாக் கூற்றாக முடியும் ஆதலானும், தெய்வச்சிலையார், நெறிப்படத் தோன்றுதல் என்பதற்கு, 'வாக்கியமாகிய தொடர்மொழிக்கண் முன்னும் பின்னும் நின்ற சொல்லை நெறிப்படுத்தற்கு ஆண்டுத் தோன்றுதல்' என்றும், எஞ்சுபொருட்கிளவி என்பதற்கு, 'சொல்லாதொழிந்த பொருளை இனிது விளக்குஞ்சொல்' என்றும் நல்லுரை கண்டுள்ளதை உணர்ந்த கற்றார் ஏற்கத் தயங்குவர் ஆதலாலும், அவை காட்டாகாமை அறிக.

வினையெச்ச ஒழிபு

தொல்காப்பியர்

**வினையெஞ்சு கிளவிக்கு வினையுங் குறிப்பு**

**நினையத் தோன்றிய முடிபாகும்மே**

**யாவயிற் குறிப்பே யாக்மொடு வருமே,**

என்றார். ஆசிரியர் 'நினையத்தோன்றும்' என்றாதனால் வினையியலுள் கூறிய வினையெச்சம் போலல்லாமல், இஃது ஆராயத் தோன்றும் என்பது புலனாகும். எனவே,

**வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபி**

**னீண்டுயற் பால பல,**

எனவும்,

**நுண்மா ணுழைபுல மில்லா னெழினல**

**மண்மாண் புனைபாவை யற்று,**

எனவும் வரும் குறட்பாக்களுக்கு முறையே 'உய்யவேண்டின்', 'ஆம்' என்னும் வினைச்சொற்கள் முடிவாக அமைந்துள்ளமை காண்க, அவ்வாறன்றி, செய்து வந்தான், மெள்ள வந்தான்

என்பன காட்டாகாவென்பது பெயரெச்ச ஒழிபுக்கு உரைத்தவாற்றானும், தொல்காப்பியர், 'நினையத் தோன்றும்' என்றதனோடு மாறுகொள்ளுதலானும் புலனாகும்.

**உம்மையெச்ச ஒழிபு**

தொல்காப்பியர்,

**உம்மை எச்சம் இருவீற் றானும்**
**தன்வினை ஒன்றிய முடிபா கும்மே,**

எனவும்,

**தன்மேற் செஞ்சொல் வரூஉங் காலை**
**நிகழுங் காலமொடு வாராக் காலமு**
**மிறந்த காலமொடு வாராக் காலமும்**
**மயங்குதல் வரையார் முறைநிலை யான,**

எனவும் விதித்துப் போந்தார். அவ்வாற்றால் உம்மை எச்ச ஒழிபு அமையும் வாக்கியங்கள் இருவேறு முடிவுகளைக் கொண்டன என்பதும், அவை இரண்டும் வினை ஒன்றிய முடிவு கொண்டனவாக வேண்டும் என்பதும், அவ்வொன்றுதல் நிகழுங்காலமும் வாராக் காலமுமாக அமையினும், அல்லது இறந்த காலமும் வாராக் காலமுமாக அமையினும் கொள்ளப் படும் என்பதும் தெளிவுறும் ஆதலின்,

**சாத்தன் வரா நின்றான், கொற்றன் வருவான்;**
**சாத்தன் வந்தான், கொற்றன் வருவான்;**

எனவும், சாத்தன் வந்தான், கொற்றன் வந்தான் எனவும் வருதலையே இந்நூற்பாக்கள் அமைக்கின்றன என்பதும் வெளிப்படை. இவ்வாறன்றி, சாத்தானும் வந்தான் என்பது முன்னே கொற்றனும் வந்தான் என்பதை எச்சமாகக் கொண்டது ஆதலின், அதுவே உம்மை எச்சக்கிளவிக்கு ஏற்ற எடுத்துக்காட்டு என்றும்,

**'இலங்குவா ளிரண்டினா லிருகைவீ சிப்பெயர்ந்**
***தலங்கன்மா லைஇயவிழ்ந்த தாடவா டும்மிவள்'***

என எடுத்துக்காட்டி 'இருகையும் வீசி' என வரற்பாலது உம்மை இன்றி வந்து உம்மையை எச்சமாகக் கொள்வதால் இதுவே ஏற்ற எடுத்துக்காட்டாகும் என்றும் கூறுவார்.

தொல்காப்பியரின்.

**உம்மை எச்சம் இருவீற் றானும்**
**தன்வினை ஒன்றிய முடிபா கும்மே,**

என்ற நூற்பாவினைக் கூர்ந்து நோக்கி மெய்ப்பொருள் காண்பாராக.

**சொல்லெச்ச ஒழிபு**

தொல்காப்பியர், எச்ச ஒழிபுகளைத் தொகுத்துரைத்த, 'பிரிநிலை வினையே' என்னும் நூற்பாவின் முதற்கண் கூறப்பட்ட பிரிநிலை, வினை, பெயர், ஒழியிசை, எதிர்மறை, உம்மை என என்னும் ஏழு எச்ச ஒழிபுகளுக்கும் இலக்கணங் கூறிய பின்னர்,

**எஞ்சிய மூன்றும் மேல்வந்து முடிக்கும்**
**எஞ்சுபொருட் கிளவி இலவென மொழிப,**

எனவும்,

**அவைதாம்**
**தத்தங் குறிப்பின் எச்சஞ் செப்பும்,**

எனவும் எஞ்சிய மூன்றிற்கும் பொது இலக்கணங் கூறி,

**சொல்லென் எச்சம் முன்னும் பின்னும்**
**சொல்லள வல்லது எஞ்சுதல் இன்றே,**

எனச் சொல் ஒழிபின் சிறப்பிலக்கணங் கூறினார். அவ்வாறே அடுத்துவரும் எட்டு நூற்பாக்களில் ஏனை இரண்டு எச்ச ஒழிபு கட்கும் இலக்கணம் வகுத்துள்ளார்.

இவற்றைக் கூர்ந்து நோக்குவாருக்குச் சொல்லெச்ச ஒழிபு எனப்படுவது, மேல் வந்து முடிக்கும் எச்சச்சொல்லோ தொடரோ இல்லாமல், தத்தம் குறிப்பினாலே எஞ்சிய பொருளை உணர்த்தி நிற்குமே யல்லாமல், தனக்கு முன்னோ பின்னோ மற்றொரு சொல் எஞ்சி நிற்ற லில்லாதது என்பதே போதரும். எனவே,

**நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்**
**நீங்கின் அதனைப் பிற;**
**காலாழ் களரின் நரியடுங் கண்ணஞ்சா**
**வேலாள் முகத்த களிறு,**

என்னும் குறட்பாக்கள் முன்னும் பின்னும் எஞ்சி நிற்கும் எத்தகைய சொல்லையும் வேண்டிநில்லாது அவற்றின் எச்சப் பொருளாகிய 'இடம் அறிக' என்பதனைக் குறிப்பால் உணர்த்தி நிற்பதைக் கண்டு இவ்வெச்ச ஒழிபின் தன்மையை யறிக.

இவ்வாறன்றி, சொல்லென்பது கொண்டு முடிதலின், சொல்லெச்சமாயிற்று என உரைத்து,

**மிடியென்னுங் காரணத்தின் மேன்முறைக் கண்ணே**
**கடியென்றார் கற்றறிந் தார்,**
**இசையா வொருபொரு ளில்லென்றல் யார்க்கும்**
**வசையன்று,**

என எடுத்துக்காட்டுக்கள் தருவாரும் உளர். 'என்' என்ற வினைச்சொல் தன் ஆற்றலை ஓரளவு இழந்து நின்றகாலை அதன் பொருள் விளக்கத்திற்காக, 'எனச் சொன்னான்' என்பதை 'என்றான்' என்பதன் இடத்தில் உரைநடையில் அமைத்து வழங்கும் வழக்கு உரையாசிரியர்களின் காலத்தில் புகுந்திருக்கலாமே யன்றித் தொல்காப்பியர் காலத்தில் இருந்திருத்தல் கூடாமையால், அவர் கருத்துப் பிழையுடைய தென்பது தானே போதரும், என்றேன், என்கிறேன், என்பேன், என்ப, எனல் ஆகிய இவை தத்தமக்குரிய பொருளைத் தாமே விளக்கி நிற்பன அல்ல என்பார் எழுந்தான், எழுகிறேன், எழுவேன், எழுப, எழல் என்பனவும் தத்தம் பொருளைத் தாமே விளக்கி நிற்பதை இழந்தன என்பாரோ என ஒரு கடா எழும். இக்காலத்தில் எழுந்திருந்தான், எழுந்திருக்கிறேன், எழுந்திருப்பேன், எழுந்திருப்பர், எழுந்திருத்தல் என்பனவே பெருவழக்காக உள்ளனவாதலின், 'இரு' என்னும் ஓர் எச்ச ஒழிபையும் அவர் வேண்டுவாரோ எனக் கேட்கவேண்டிய நிலை உண்டாதலையும் அறிக. ஈண்டுச் சொல்லென்றது.

**தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண்,**

என வள்ளுவர் பெண்டிர் காக்குமாறு ஆணைதந்த அறிவுரையாம் சொல்லை ஒத்த சொல்லையே எனக் கொள்க.

**பிரிநிலையெச்ச ஒழிபு**

தொல்காப்பியர்,

**அவற்றுள்**

**பிரிநிலை யெச்சம் பிரிநிலை முடிபின,**

என்றார். இடைச் சொற்களாகிய ஏகார, ஓகாரங்கள் பிரிநிலைப் பொருளில் வரும் இடத்தைக் காட்டி,

**அவனே கொண்டான்,**

**அவனோ கொண்டான்,**

என வரும் இவை பிரிநிலை எச்ச ஒழிபுகளுக்குக் காட்டுக்கள் என்றனர் பலர். இவற்றில் ஏகார, ஓகாரப் பொருள் தெற்றென விளங்கித் தோன்றலால், எச்ச ஒழிபாம் பொருள் யாண்டுள்ளது என எழுகின்றது ஒரு கடா. இவ்வாறன்றி,

இவன் கல்வியுடையன் – (அவையத்தாருள்)

இவட்குக் கண்ணழகிது (இவள் உறுப்புக்களுள்)

என இவ்வாறு வரும் வாக்கியங்களில் குறிப்பாகப் பிரிக்கப்பட்ட பொருளோடு தொடர்புடைய அவையத்தாருள், இவள் உறுப்புக்களுள் என்பவற்றோடு தொடர்ந்து முடிவுறுவதை நோக்கி அவையே பிரிநிலை எச்சங்களுக்கு ஏற்ற காட்டுக் களாம் எனக் கொள்க.

**எனவெனெச்ச ஒழிபு**

தொல்காப்பியர்,

***எனவெ னெச்சம் வினையொடு முடிமே***

எனக் கூறியுள்ளதால், இவ்வொழிபு பெயராலும், வினையாலும் இறும் தொடர் அமைப்பைப் பெற்று, என என்ற சொல் தொக்கு நிற்குமாறே வழங்கும் என்பது போதரும் .

**எடுத்தலும் படுத்தலு மாயிரண் டல்லது**

**நலித லில்லை யென்மரு முளரே,**

என வருமிடத்தில் எடுத்தலும் படுத்தலும் என ஆயிரண்டு எனவும்,

**வீடுணர்ந் தோர்க்கும் வியப்பாமா லிந்நின்ற**

**வாடன் முதியாள் வயிற்றிடங் – கூடார்**

**பெரும்படை வெள்ளம் நெரிதரவும் பேரா**

**இரும்புலி சேர்ந்த விடம்,**

என வருங்கால், இரும்புலி சேர்ந்த இடம் என வியப்பாம் எனவும் வருவன எனவென்னெச்ச வொழிபுக்குக் காட்டுக்கள் எனக் கொள்க.

**இவ்வாறன்றி**

**கொள்ளெனக் கொடுத்தான்**

**துண்ணெனத் துடித்தான்**

என எடுத்தக்காட்டி இவற்றில் எனவென் எச்சமுள்ளது என்பதும்,

**கடல் ஒல்லென ஒலித்தது**

**நரம்பு விண்ணென விசைத்தது**

என எடுத்துக்காட்டி; மிகவும் ஒலித்தது; மிகவும் இசைத்தது என்பன இவற்றிற்குப் பொருளாமாதலின், இவ்வெச்சம் மிகுதிப் பொருள் தருவதோர் இடைச் சொல்லாமென்க என்பதும் அயர்த்துக் கூறும் கூற்றாம் என்பதை ஆய்ந்து உணர்ந்து கொள்க.

**ஒழியிசையெச்ச ஒழிபு**

தொல்காப்பியர்,

**ஒழியிசை யெச்ச மொழியிசை முடிபின,**

எனக் கூறியுள்ளதால், ஒரியிசை எச்சஒழிபாவது உள்ள தொடரில் இல்லாச் சொல்லாற் பொருள் முடிபு கொள்ளுந் தன்மையது என்பது போதரும், எனவே,

இவர் கல்வியாற் குறைவிலர் - ஒழுக்கத்தால்?

அவன் ஒப்பனைக் கென்ன குறை? படிப்பு?

எனவரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும், இல்லாச் சொல்லாற் பொருள் முடியுமாறு கண்டு உணர்ந்து கொள்க. ஈண்டு இசை என்றது சொல்லை. இவ்வாறன்றி, மன், தில், ஒ என்னும் இடைச் சொற்களின் பொருளை விரிப்பாரை இஃது இடையியல் அன்றெனக் கூறி விடுக்க.

**எதிர்மறையெச்ச ஒழிபு**

தொல்காப்பியர்

**எதிர்மறை யெச்ச மெதிர்மறை முடிபின,**

எனக் கூறியுள்ளமையின் இவ்வெச்ச ஒழிபு எதிர்மறைப் பொருண் முடிவு பெறும் என்க. எனவே,

**இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனாக்**

**கண்ணிறை நீர்கொண் டனள்,**

என்றவழி மறுமையிற் பிரிவோம் என எதிர்மறைப் பொருள் முடிதலை இவ்வெச்ச ஒழிபிற்கு எடுத்துக்காட்டாகக் கொள்க. இதற்கு ஏகார, ஓகார, உம்மை இடைச்சொற் பொருள் விரிப்பார் கண்ட உரை இவ்வியலுக்கு ஏற்புடைத்தன்றென விடுக்க.

**இசையெச்ச ஒழிபு**

தொல்காப்பியரின் சொல், இசை, குறிப்பு ஆகிய மூன்று எச்சங்களின் பொது இலக்கணம் பற்றிய கொள்கை சொல்லெச்ச ஒழிபு விளக்க உரையிற் காட்டப்பட்டது. அதனால் அவை மூன்றும் 'மேல் வந்து முடிக்கும் சொல்லோ, தொடரோ இல்லாமல், தத்தம் குறிப்பினாலே எஞ்சிய பொருளை உணர்த்தி நிற்கும்' என அறிவோம். இசை எச்சத்தின் சிறப்பு நூற்பாவாக,

**பெயர்நிலைக் கிளவியின் ஆஅ குநவும்**
**திசைநிலைக் கிளவியின் ஆஅ குநவும்**
**தொன்னெறி மொழிவயின் ஆஅ குநவும்**
**மெய்ந்நிலை மயக்கின் ஆஅ குநவும்**
**அன்றி அனைத்தும் கடப்பா டிலவே,**

என்ற ஒன்றை மட்டும் தந்துள்ளார். அந்நூற்பாவழி நின்று விளக்கங்காணின், 'பெயர்நிலைச் சொற்களாலும், திசைநிலைச் சொற்களாலும், மரபு வழிப்பட்டு நடக்கும் தொடர்களாலும், பொருள் மயக்கி நடக்குந்தொடர்களாலும், மந்திரப் பொருளான் நடக்குந் தொடர்களாலும் ஆகும் கிளவிகள், இச்சொற்கு அல்லது இத்தொடருக்கு இம்முறை காண்பதே பொருண் முடிபு என்னும் நியமமில்லாது, இயற்பொருளின்று, எஞ்சி, உணரவல்லல தத்தம் குழுவினர் மட்டும் பொருள் காணற் கேற்ப இசைத்து நிற்பனவாம், என அமையும்.

**வந்தவர வென்னையென வாட்கண்மட வாய்கேள்**
**சிந்தைநலி கின்றதிரு நீர்க்குமரி யாட**
**வந்திலதி னாயபய னென்னைமொழி கென்றான்**
**முந்தைநலி கின்றமுது மூப்பொழியு மென்றான்,**

என்றவிடத்து, குமரி என்னும் பெயர், பெயர்நிலை இசை எச்ச ஒழிபாம். செந்தமிழ் நாட்டுச் சொல் தன் இயற்பொருளின் எஞ்சி, திசைகளில் வெவ்வேறு குழுவினர் வெவ்வேறு பொருள் காணுமாறு இசைந்து, தமிழ் 'காரை' கன்னடருக்கு விளித்தலை உணர்த்துமாறே போல் அமைவன திசைநிலை இசையெச்ச ஒழிபாம்.

மரபுவழிப்பட்ட தொடர்களால் பொருளியையில்லா ஒன்றைத் தத்தம் குழுவினர் மட்டும் பொருள் காணுமாறு இசைத்தல் தொன்னெறிமெழிவயின் இசையெச்ச ஒழிபாகும். ஊர்ப் புறத்தே ஆற்றங்கரையிற் செத்துக் கிடக்கும் எருமைகளை யீர்த்தற்கு ஆள் முன்வரா நிலையில், ஊர் அம்பலக் குறிப்பறிந்து கணக்கன்,

**யாற்றுட் செத்த வெருமை யீர்த்தல்**
**ஊர்க்குய வர்க்குக் கடன்,**

என இயைபில்லா ஒன்றை மரபுவழிப்பட்டு நடக்கும் ஒன்றே போல் அடங்கலிலிருந்து படித்துக்காட்டி இசைத்தலை இதற்கு எடுத்துக்காட்டுவர்.

பொருணிலை மயக்கே, மெய்நிலை மயக்க இசையெச்ச ஒழிபாம்

**குருகுகரு வுயிர்ப்ப**
***ஒருதனியோங்கிய திருமணிக் காஞ்சி,***

என்னும் அடிகளில் குருகு = மாதவி; காஞ்சி = மேகலை என்னும் பொருள் நிலைமயக்கால் மாதவி மகள் மணிமேகலை என்னும் பொருள் எஞ்சுமாறு இசைத்து மெய்ப்பொருண் மயக்கஞ் செய்யப்பட்டதாதலின், அது மெய்நிலை மயக்க இசையெச்ச ஒழிபெனக் கொள்க.

மந்திரப்பொருட்டு எனப்படுவது, இயல்பல்லாத பொருளை மந்திரமொழி என இசைத்து வழங்குவதாம் என்பர். இவ்வழக்கு வல்லார் வாய்க் கேட்டுரணரற்பாற்று.

**குறிப்பெச்ச ஒழிபு**

குறிப்பெச்ச ஒழிபின் பொது இலக்கணம் சொல், இசை எச்சங்களினதே யாதலின் முன்னர் உரைக்கப்பட்டது; சிறப்பு இலக்கணத்தைத் தொல்காப்பியர்,

**அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்,**
**மறைக்குங் காலை மரீஇயது ஒரால்,**
**ஈதா கொடுவெனக் கிளக்கும் மூன்றும்**
**இரவின் கிளவி யாகிட னுடைய,**
**அவற்றுள்**
**ஈயென் கிளவி இழித்தோன் கூற்றே,**
**தாவென் கிளவி ஒப்போன் கூற்றே**
**கொடுவென் கிளவி உயர்ந்தோன் கூற்றே,**
**கொடுவென் கிளவி படர்கை யாயினும்**
**தன்னைப் பிறன்பேல் கூறுங் குறிப்பில்**
**தன்னிடத் தியலும் என்மனார் புலவர்;3**

என்னும் ஏழு நூற்பாக்களில் கூறினார். அவற்றால் அவையிற் கூறலாகாது என்னுங் காரணத்தால் வேறுபடக் கூறப்படும் இடக்கரடக்கலும், இரவின் கூற்றா னாயவற்றின் உயர்வு, ஒப்பு, இழிபு, இடக்குறிப்பு ஆயவும் குறிப்பெச்ச ஒழிபுக்குக் காட்டுக் களாவனவாம்.

சொல்லெச்சம், இசையெச்சம் குறிப்பெச்சம் என்னும் மூன்றும் தமக்கென எஞ்சி நிற்கும் சொல்லோ, தொடரோ இல்லாதனவாய் அமையும் என்பதும், அவற்றுள் சொல்லெச்சம் தொடரின் ஆற்றற் பொருளோடு ஒன்றிவரும் சொல்லை (மெய்யுரையை) எச்சப் பொருளாகக் கொள்ளும் என்பதும்; இசையெச்சம் ஆற்றற் பொருளாற் குறிக்கப்படும் பொருளின் எஞ்சி, வேறு பொருள் மரபுவழி உணரற் பாலதாய் அமையும் என்பதும்; குறிப்பெச்சம் ஆற்றலாற் கொள்ளப்படும் பொருளின் வேறான பொருளையே எச்சப் பொருளாய்க் கொள்ளுமென்பதும் மனங்கொள்ளத் தக்கவை.

இவ்வாசிரியர் தொல்காப்பியர் கூறிய பத்தையும் முறை மாற்றிக் கூறியுள்ளதாலும், குறிப்பொன்றையே பிரித்துக் கூறியுள்ள தாலும், மூலத்தை விடுத்து உரையாசிரியர்கள் கண்ட உரைவழி

நின்றே: நூற்பா யாத்தார் எனல் சாலும். மயிலைநாதர் உரையால், நேமிபாரின் அபிநய நூலுக்கு உரைசெய்த இராச பவித்திரப் பல்லவதரையன் உரை இவ் வெச்ச ஒழிபுகளை விரித்துரைக்கின்றது என்பது தெரியவருகிறது. தெய்வச்சிலையார் உரை ஓரளவு மயிலை நாதர் காட்டும் எடுத்துக்காட்டுக்களுக்கேற்ப அமைதலால், அவர் இராசபவித்திர பல்லவதரையனைத் தழுவிய கொள்கையர் என்பது புலனாகின்றது. இவ்வெச்ச வொழிபுகள் சொல்லிலக்கணமோ, அணியிலக்கணமோ என மயங்குமாறு இரண்டிற்கும் சார்புடையனவாயும், இரண்டிலும் வேறுபட்டும் காணப்படுவனவாதலால், இவற்றைத் தொல்காப்பியர் எச்சவியலுள் ஓதினார்; அதனாலேயே இவ்வாசிரியரும் பொதுவியலுள் ஓதினார்.

(10)

**360. பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை**
**முதலிய பொருளி னவற்றி னுருபிடை**
**ஒழிய விரண்டு முதலாத் தொடர்ந்தொரு**
**மொழிபோ[1] னடப்பன தொகைநிலைத்**
**தொடர்மொழி.**

பெயர்ஒடு பெயரும் வினையும் வேற்றுமை
முதலிய பொருளின் அவற்றின் உருபு இடை
ஒழிய இரண்டு முதலாத் தொடர்ந்து ஒரு
மொழி போல் நடப்பன தொகைநிலைத் தொடர்மொழி.

peyar otu peyar um vinai um vēūūumai
mutaliya porulin avaūūin urupu itai
oliya irantu mutal ā totarntu oru
moli pōl natappana tokainilai totarssol

பாட வேறுபாடு:-

1.நடப்ப தொகைநிலைத் தொடர்ச்சொல்.

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Elliptical compounds

### Elliptical compounds defined

Elliptical compounds are those combinations of Nouns with (other) Nouns or Verbs, which occur in any of the (six) relations (specified below), such as the casual&c, and, without expressing the intervening Signs of those (Relations) have the force of a single word, while they (really) consist of two or more.

## மயிலை நாதர்

எ—ன், மேல் தொடர்மொழி யென்றார், அது தொகைநிலைத் தொடரும் தொகாநிலைத் தொடருமென இரண்டாம்; அவற்றுள், தொகைநிலைத் தொடர்மொழியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்.:– பெயருடனே பெயரும், பெயருடனே வினையும் தம்முட் புணருமிடத்து, வேற்றுமை முதலானவற்றின் பொருளிலே அவற்றின் உருபுகளை இடையிடையே யொழித்து, இரண்டுசொல் முதலாகத் தொடர்ந்து ஒரு பெயர்ச்சொற் போலவும் ஒரு வினைச்சொற் போலவும் வழங்குவன தொகைநிலைத் தொடர்மொழிகளாம், எ—று.

> ஒருமொழி போலாவது பல சொல்லேயெனினும் தொடர்ந்து ஒற்றுமைப்பட்டு ஒருபெயராய் எட்டுவேற்றுமைகளையும் வினைகளையும் ஏற்றலும், நிலைமொழி வருமொழிகளாய்ப் புணர்ச்சிவகை யேற்றலும், ஒருவினைச் சொல்லேயாய்ப் பெயரேற்றல் முதலான வினையிலக்கண மெல்லாமேற்றலு மென மூவகையாகக் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

எ—னின், பெயர்க்கும் வினைக்கும் ஆவதோர் விதி உணர்—ற்று.

இ—ள்.: பெயர்ச்சொல்லோடு பெயர்ச்சொல்லும் பெயர்ச் சொல்லோடு வினைச்சொல்லும் 'வேற்றுமை வினை பண்பு' எனப் பின்னர் வகுத்துக் கூறும் அறுவகைப் பொருட் புணர்ச்சிக்கண் அவற்றின் உருபுகள் இடையே தொக்குநிற்ப இரண்டு முதலிய பல சொற்கள் தொடர்ந்து ஒருமொழிபோல் நடப்பனயாவை அவை தொகைநிலைத்தொடர்ச் சொற்களாம், எ—று.

> தொகை என்னும் பலபொருளொருசொல் ஈண்டு உருபுமறைதலை உணர்த்தி நின்றது,
> **"ஐயும் கண்ணும் அல்லாப் பொருள்வயின் மெய்யுருபு தொகா இறுதி யான"** என்பவாகலின்.

வினையொடு வினை தொகைநிலைத் தொடராகாமையின் அதனை ஒழித்தும் நிலத்தைக் கடந்தான் நிலம் கடந்தான், என உருபு இடைவிரியின் பிளவுபட்டும் தொக்கதேல் பிளவு படாதும் தொடருமாதலின் ஒருமொழிபோல் என்றும் கூறினார்.

ஒருமொழிபோல் நடத்தலாவது, கொல்யானை வந்தது, நிலம் கடந்தான் சாத்தன் என இரண்டு முதலிய பலசொல் தொடர்ந்து ஒரு பெயராயும் வினையாயும் நின்று தம்முடிபேற்றல் எனப் பொருள் கூறின்:- அவ்வாறு தொகாநிலைத்தொடரும் கொன்றயானை வந்தது, நிலத்தைக் கடந்தான் சாத்தன் என நடக்குமாதலின் அது பொருந்தாது என்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், மேற்றொடர்மொழி என்றார்; அது தொகைநிலைத் தொடர் மொழியென்றும் தொகாநிலைத் தொடர்மொழியென்றும் இரண்டாம். அவற்றுள் தொகைநிலைத் தொடர்மொழியாமாறு கூறுகின்றது.

**இ-ள்.:- பெயரொடு பெயரும்** - பெயருடனே பெயர் புணருமிடத்தும், **வினையும்** - பெயருடனே வினை புணருமிடத்தும், **வேற்றுமை முதலிய பொருளின்** - வேற்றுமை முதலானவற்றின், **அவற்றினுருபிடை ஒழிய** - அவற்றின் உருபுகளை இடையே ஒழித்து, **இரண்டு முதலாத் தொடர்ந்து** - இரண்டு சொல் முதலாகத் தொடர்ந்து, **ஒரு மொழிபோ னடப்ப** - ஒருமொழி பெயர்ச்சொல் போலவும் ஒருவினைச்சொல் போலவும், **தொகைநிலைத் தொடர்ச்சொல்** - தொகைநிலைத் தொடர்மொழிகளாம், எ-று.

**அரும்பதவுரை:-**

ஒரு மொழி போலாவது பல சொல்லேனும் தொடர்ந்து ஒற்றுமைப்பட்டு ஒரு பெயர்ச்சொல்லாய் எட்டு வேற்றுமை களையும் ஏற்று நிலைமொழி வருமொழிகளாய்ப் புணர்ச்சி வகை ஏற்றலும் ஒரு வினைச் சொல்லாய்ப் பெயர் ஏற்பது முதலான வினை இலக்கணமெல்லாம் ஏற்பது எனக் கொள்க.

## விசாகப் பெருமாளையர்

இது, பெயர்க்கும் வினைக்குமாவதோ ரிலக்கண முணர்த்துகின்றது.

**இ-ள்.:** **பெயரொடு** - பெயர்ச்சொல்லோடு, **பெயரும்**-பெயர்ச்சொல்லும், (பெயரொடு) **வினையும்**-வினைச்சொல்லும், **வேற்றுமை முதலிய** - பின்சொல்லப்படும் வேற்றுமை முதலாகிய, **பொருளின்**-அறுவகைப் பொருட் புணர்ச்சிக்கண், **அவற்றின்** - அவற்றினுடைய, **உருபு**-உருபுகள், **இடை** - நடுவிலே, **ஒழிய** - தொக்கு நிற்ப, **இரண்டு முதலா**-இரண்டுசொற்கள் முதலாக, **தொடர்ந்து**-பலசொற்கள்தொடர்ந்து, **ஒருமொழிபோல்** - ஒருசொற்போல,

நடப்பன–நடப்பவை, தொகைநிலைத் தொடர் சொல் – தொகைநிலைத் தொடர்சொற்களாம், எ–று. (தொகை யென்பது இங்கே யுருபுமறைதல்.)

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

தொகைநிலைத் தொடர்ச்சொல்லுக்கு இலக்கணம் கூறுஞ் சூத்திரம் யாது?

பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை
முதலிய பொருளி னவற்றி னுருபிடை
ஒழிய விரண்டு முதலாத் தொடர்ந்தொரு
மொழிபோ னடப்பன தொகைநிலைத் தொடர்ச்சொல்.

(பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை
முதலிய பொருளின் அவற்றின் உருபு இடை
ஒழிய இரண்டு முதலாத் தொடர்ந்து ஒரு
மொழிபோல் நடப்பன தொகைநிலைத் தொடர்ச்சொல்.)

இ–ள்.: பெயர்ச்சொல்லோடு பெயர்ச்சொல்லும், பெயர்ச்சொல்லோடு வினைச்சொல்லும் பின்சொல்லப்படும் வேற்றுமை முதலாகிய அறுவகைப் பொருட்புணர்ச்சிக்கண் அவற்றினுருபுகள் நடுவிலே தொக்குநிற்ப இரண்டுசொற்கள் முதலாகப் பலசொற்கள் தொடர்ந்து ஒருசொற்போல நடப்பவை தொகைநிலைத் தொடர்ச்சொற்களாம், எ–று.

தொகையாவது யாது?

தொகையாவது இரண்டும் பலவுமாகிய சொற்கள் ஒருசொல்லாக ஒட்டிநிற்கும் ஒட்டு.

உ–ம். யானைக்கோடு–பெயரோடு பெயர்தொக்க இருமொழித் தொடர்.

நிலங்கடந்தான்–பெயரோடு பெயர்தொக்க இருமொழித் தொடர்.

கற்குனைக்குவளையிதழ்–பன்மொழித்தொடர்.

## முகவை இராமானுச கவிராயர்

இது, பெயர் வினைகளுக்குரியதோ ரிலக்கண முணர்த்திற்று.

இ–ள்.: **பெயரும் வினையும்** – பெயர்ச்சொல்லொடு பெயர்ச்சொல்லும் பெயர்ச்சொல்லொடு வினைச்சொல்லும், **வேற்றுமை முதலிய பொருளின்** – வேற்றுமை வினை பண்ணெப் பின்பு வகுத்துக் கூறப்படும் அறுவகைப் பொருட் புணர்ச்சியிலும், **அவற்றினுருபிடையொழி** – அவற்றினுருபுகள் இடையிலே

மறைந்து நிற்க, இரண்டு முதலாக தொடர்ந்து இரண்டு சொல் முதலாகப் பலசொற்கள் தொடர்ந்து, ஒரு மொழி போனடப்பன தொகைநிலைத் தொடர்ச்சொல் ஒருமொழிபோல - நடப்பன தொகைநிலைத் தொடர்ச் சொற்களாம், எ—று.

> வினையொடு வினை தொகைநிலை யாகாமையால் அதனை விலக்கியும், நிலத்தைக் கடந்தான் என வுருபு விரிந்தால், பிளவுபட்டும், நிலங்கடந்தான் என உருபு தொகின் பிளவுபடாதுந் தொடருமாதலால், பிளவுபடாது தொடர்நிலையே ஒருமொழிபோல் நடப்பன வென்றுங் கூறினார். இத்தொகை நிலைச் சொற்கள் இவ்வளவினை யுடையன வென வருஞ் சூத்திரத்தாற் கூறுவார்.

## கா. கோபாலாசாரியர்
## தி.கோ. ரங்காசாரியர்

உரை :— பெயரொடு – பெயர்ச்சொல்லோடு, பெயரும் – பெயர் சொல்லும், வினையும் –, வேற்றுமை முதலிய – (பின்சொல்லப்படும் வேற்றுமை முதலாகிய, பொருளின் – அறுவகைப் பொருட்புணர்ச்சியின் அவற்றின் உருபு – அவற்றினுடைய உருபுகள், இடை ஒழிய – நடு தொக்குநிற்க, இரண்டுமுதலா தொடர்ந்து – இரண்டு சொற்கள் முதலாக பலசொற்கள் தொடர்ந்து, ஒருமொழிபோல் நடப்பன – ஒரு சொற்போல் நடப்பவை, தொகைநிலைத் தொடர்சொல் –தொகைநிலைத் தொடர் சொற்களாம். (தொகை – இங்கு உருபுமறைதல்)

## ஆறுமுக நாவலர்

இ—ள்.: பெயரொடு பெயரும்–பெயர்ச்சொல்லோடு பெயர்ச்சொல்லும், (பெயரொடு) வினையும் – பெயர்ச்சொல்லோடு வினைச்சொல்லும், வேற்றுமை முதலிய பொருளின்–பின் சொல்லப்படும் வேற்றுமை முதலாகிய அறுவகைப் பொருட்புணர்ச்சிக் கண், அவற்றின் உருபு இடை ஒழிய – அவற்றினுருபுகள் நடுவிலே தொக்கு நிற்ப, இரண்டு முதலாத் தொடர்ந்து ஒருமொழிபோல் நடப்பன – இரண்டுசொற்கள் முதலாகப் பலசொற்கள் தொடர்ந்து ஒருசொற்போல நடப்பவை, தொகைநிலைத்தொடர்ச்சொல்–தொகைநிலைத் தொடர்ச்சொற்களாம், எ—று.

தொகையென்பது இங்கே யுருபு மறைதல்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ—ள். பெயரொடு பெயரும் – பெயர்ச்சொல்லோடு பெயர்ச்சொல்லும், – (பெயரொடு) வினையும் – பெயர்ச்சொல்லோடு வினைச்சொல்லும், – வேற்றுமை முதலிய பொருளின் – பின்சொல்லப்படும் வேற்றுமை முதலாகிய

அறுவகைப் பொருட்புணர்ச்சிக்கண், – அவற்றின் உருபு இடை ஒழிய – அவற்றினுருபுகள் நடுவிலே தொக்கு நிற்ப, – இரண்டு முதலாத் தொடர்ந்து ஒருமொழிபோல் நடப்பன – இரண்டு சொற்கள் முதலாகப் பலசொற்கள் தொடர்ந்து ஒருசொற்போல நடப்பவை, – தொகைநிலைத் தொடர்ச்சொல் – தொகைநிலைத் தொடர்ச்சொற்களாம். எ– று.

தொகைநிலையை வடநூலர் சமாசமென்பர்.

தொகையென்பது இங்கே யுருபு மறைதல். ஈண்டு உருபாவன : வேற்றுமைத் தொகையில் – வேற்றுமையுருபும், வினைத் தொகையில் இடைநிலை முதலாயினவும், பண்புத்தொகையில் பண்பை விளக்கும் (ஆகியவென்னுஞ்) சொல்லும், உவமைத்தொகையில் உவமவாசகமும், உம்மைத் தொகையில் உம் என்பதும், அன்மொழித் தொகையில் உடையான், உடையாள் முதலான சொல்லுமாம்.

பெயர்ச்சொல் நிலைமொழியாய் நிற்கப் பெயர்ச்சொல்லே வருமொழியாக வருதலும்; வினைச்சொல் வருமொழியாக வருதலுமின்றி; நிலைமொழியாக வினைச்சொன்னிற்ப வருமொழியாகப் பெயர்ச்சொல் வருந் தொகைநிலையு முண்டாதலின் அதனையுந் தழுவுதற்பொருட்டு நிலைமொழி வருமொழியென்று வரைந்தோதாது பெயரொடு பெயரும்வினையுமென்று பொதுப்படவோதினாரென்றறிக. இவ்வாறு பொருள்கொள்ளாவிடின் வினைத்தொகை யடங்காதவாறறிக.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: பெயரொடு–பெயர்ச்சொல்லோடு, பெயரும்–பெயர்ச்சொல்லும், வினையும்–வினைச்சொல்லும், வேற்றுமை முதலிய–(பின்சொல்லப்படும்) வேற்றுமை முதலாகிய, பொருளின்–அறுவகைப் பொருட்புணர்ச்சியில், அவற்றின் உருபு–அவற்றினுடைய உருபுகள், இடை ஒழிய – நடுவில் தொக்கு நிற்க, இரண்டு முதல் ஆ (க) தொடர்ந்து – இரண்டு சொற்கள் முதலாகப் பலசொற்கள் தொடர்ந்து, ஒரு மொழிபோல் நடப்பன – ஒருசொல்போல் நடப்பவை, தொகைநிலை தொடர்சொல்–தொகைநிலைத் தொடர்ச்சொற்களாம்; எ–று. தொகை–இங்கே, உருபு மறைதல்.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.: பெயரொடு – பெயர்ச்சொல்லோடு, பெயரும் – பெயர்ச்சொல்லும், வினையும் – வினைச்சொல்லும், வேற்றுமை முதலிய பொருளின் – பின் சொல்லப்படும் வேற்றுமை முதலாகிய அறுவகைப் பொருட்புணர்ச்சிக்கண்,

அவற்றின் உருபு – அவற்றினுருபுகள், இடை ஒழிய – நடுவிலே தொக்கு நிப், இரண்டு முதலாத் தொடர்ந்து – இரண்டுசொற்கள் முதலாகப் பலசொற்கள் தொடர்ந்து, ஒருமொழி போல் நடப்பன – ஒருசொற்போல நடப்பவை, தொகை நிலைத் தொடர்ச்சொல் – தொகைநிலைத் தொடர்ச்சொற்களாம். எ–று.

தொகையென்பது இங்கே உருபு மறைதல்.

## கா. நமச்சிவாய முதலியார்

பெயரொடு பெயரும் – பெயர்ச்சொல்லோடு பெயர்ச் சொல்லும், (பெபரோடு) **வினையும்** – பெயர்ச்சொல்லோடு வினைச்சொல்லும், **வேற்றுமை முதலிய** – (பின் சொல்லப்படும்) வேற்றுமை முதலாகிய, **பொருளின்** (அறுவகைப்) பொருட் புணர்ச்சிக்கண், **அவற்றின்** – அவற்றினுடைய, **உருபு** – உருபுகள், **இடை ஒழிய** – நடுவிலே தொக்குநிற்ப, **இரண்டுமுதலா தொடர்ந்து** – இரண்டு சொற்கள் முதலாகப் பல சொற்கள் தொடர்ந்து, **ஒருமொழிபோல்** – ஒரு சொற்போல, **நடப்பன** – நடப்பவை, **தொகைநிலைத் தொடர்ச் சொல்** – தொகைநிலைத் தொடர்ச்சொற்களாம்.

## மோசகு பொன்னையா

பெயர்ச்சொல்லோடு பெயர், வினைச் சொற்கள் வேற்றுமை முதலாகிய அறுவகைப் பொருட் புணர்ச்சிக்கண் அவற்றின் உருபுகள் இடையே தொக்குநிற்குமாறு இரண்டும் பலவுமாகிய சொற்கள் தொடர்ந்து ஒருசொல் நீர்மைத்தாய் நடப்பவை தொகைநிலைத் தொடர்சொற்களாம்; வேற்றுமைத் தொகையும், வினைத்தொகையும், பண்புத்தொகையும், உவமத் தொகையும், அன்மொழித்தொகையு மென அவை அறுவகைப் படும் எ–று.

> தொல்காப்பியர் தொகைகள் பற்றிக் கூறியுள்ள பொது நூற்பாவில்,
>
> **வேற்றுமைத் தொகையே யுவமத் தொகையே**
> **வினையின் றொகையே பண்பின் றொகையே**
> **யும்மைத் தொகையே யன்மொழித் தொகையென்**
> **றவ்வா றென்ப தொகைமொழி நிலையே,**
>
> என அவற்றின் பெயரையும் எண்ணையுங் குறிப்பிட்டாரே யன்றித், தொகையென்பதன் இலக்கணத்தைக் கூறினாரில்லை. அந்நூற்பாவிற்கு உரையெழுதிய இளம் பூரணரும் நச்சினார்க்கினியரும், பொருள் நிலைக்க 'உருபு தொக்கு நின்றது' தொகை என்ற கொள்கையர்; சேனாவரையர் 'வேற்றுமையுருபும் உவம உருபும் உம்மையும் வினைச்சொல்லீறும் பண்புச் சொல்லீறும் தொகுதலிற் றொகையாயின வென்பாரும், அவ்வப்பொருண் மேல் இரண்டும் பலவுமாகிய சொற்கள் பிளவுபடாது ஒற்றுமைப்படத் தம்முள்

இயைதலிற் தொகையாயின வென்பாருமென இருதிறத்தார் ஆசிரியர்' என்று கூறி, ............ 'அதனான் உருபு முதலாயின தொகுதல் எல்லாத் தொகையினுஞ் செல்லாமையான் எல்லாத் தொகைக்கண்ணுஞ் செல்லுமாறு ஒட்டியொரு சொல்லாதல் தொகை இலக்கணமாய் முடிதலின், இவ்வாசிரியருக்கு இதுவே துணிவெனப்படுமென்பது' என விளக்கினார். தெய்வச்சிலையார் 'தொகைச் சொல்லாவது பொருளுணர்த்துஞ் சொல்லாயினும் தொழிலுணர்த்துஞ் சொல்லாயினும் இரண்டு சொல் விட்டிசைத்து நில்லாது ஒட்டி நிற்பது. இஃது ஒட்டுப்பெயர் என்னுங் குறியும் பெறும்' என்றுரைத்தார். தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில்,

**பெயருந் தொழிலும் பிரிந்தொருங் கிசைப்ப**

**வேற்றுமை உருபு நிலைபெறு வழியும்,**

**என வேற்றுமைத் தொகாநிலைத் தொடரையும்,**

**பெயருந் தொழிலும் பிரிந்தொருங் கிசைப்ப**

**வேற்றுமை உருபு ..... ..... ..... ..... .....**

**தோற்றம் வேண்டாத தொகுதிக் கண்ணும்**

என வேற்றுமைத் தொகைநிலைத் தொடரையும் சுட்டிக் கூறியுள்ளதாலும், பின்னர்,

**எல்லாத் தொகையும் ஒரு சொன்னடைய3**

எனக் கூறியுள்ளார் ஆதலானும், சேனாவரையர் எடுத்துக் கூறியுள்ள இருதிறத்தார் ஆசிரியர் கூறும் விளக்கங்களும் ஒருங்கே அமைந்தக்காலே தொகாநிலைத் தொடருக்கு முழு விளக்கமாகும் எனல் தெளிவுறும். இவ்வாசிரியரும் அவ்விளக்கத்தை ஏற்றுத் தம் நூற்பாவுள் பொருள் நிலைத்தல், உருபிடை ஒழிதல், தொடர்ந்து ஒருமொழி போல் நடத்தல் என்பவற்றை இலக்கணமாகக் கூறிவைத்து மயக்கம் நீக்கினார். தெய்வச்சிலையார், தொகைநிலைத் தொடரை ஒட்டுப் பெயர் என்றே குறியிடுகின்றார். இவ்வாசியர் 'ஒருமொழி போல் நடப்பன' என்றதால் அவர் கருத்தினின்றும் மாறுபட்டவர் என்பது போதரும்.

தொடைநோக்கி உவமம் எனற்பாலது உவமை எனப்பட்டது.

**(11)**

**361. வேற்றுமை வினைபண் புவமை யும்மை**
**அன்மொழி யெனவத் தொகையா றாகும்.**

வேற்றுமை வினை பண்பு உவமை உம்மை
அன்மொழி என அத்தொகை ஆறு ஆகும்.

vēṟṟumai vinai paṇpu uvamai ummai
aṉmoḻi eṉa a tokai āṟu ākum

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Kinds of ellipsis**

These Elliptical Compounds are of six kinds, viz, the Casual, Verbal, Adjectival, Comparative, Cumulative, and Metonymical.

## ஒப்புமைப் பகுதி

வேற்றுமைத் தொகையே உவமத்தொகையே
வினையின் தொகையே பண்பின் தொகையே
உம்மைத் தொகையே அன்மொழித் தொகையென்று
அவ்வா றென்ப தொகைமொழி நிலையே

(தொல். சொல்.: 412)

வேற்றுமை உம்மை வினைபண் புவமையும்
தோற்றிய அன்மொழியும் தொக்கவிடத் – தேற்ற
இருசொல்லும் ஒன்றாம் இலக்கணத்தாற் பல்சொல்
ஒரு சொல்லாய்ச் சேறலு முண்டு

(நேமி.: 85)

வேற்றுமை யும்மை வினைபண் புவமையொ டன்மொழி
யென்று
ஆற்றுந் தொகைசெந் தமிழணர்க ளாறென்பர்....

*(வீர.: 50: 1–2)*

வேற்றுமைத் தொகையுவ மத்தொகை வினைத்தொகை
பண்புத் தொகையும் மைத்தொகை யன்மொழித்
தொகையெனக் கிளந்தவத் தொகையா றாகும்

(இ.வி.: 335)

தொகைநிலை வகைப்படின் தொகும் வேற்றுமைவினை
உவமை பண்பு உம்மையோடு அன்மொழி ஆறே

(தொ.வி.: 89)

வேற்றுமை வினைபண் புவமை யும்மை
யன்மொழி யெனத்தொகை யறுவகைப் படுமே

(மு.வீ.: 737)

முறைசொல் வேற்றுமை உவமை உம்மை வினைபண்பு அன்
மொழியென வாறாந் தொகை பின்படு தொகைவேறு
ஒன்றே

(சுவாமி.: 65:4)

## மயிலை நாதர்

எ—ன், தொகைநிலைத்தொடர்மொழியது பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்.: வேற்றுமை முதலான இவ்வாறு கூற்றதாம், மேற்சொன்ன தொகைநிலைத் தொடர்மொழியாவது, எ—று.

## சங்கர நமச்சிவாயர்

எ—னின், மேல் 'வேற்றுமை முதலிய' என்றார்; அவை இவை என்பது உணர்—ற்று.

இ—ள்.: வேற்றுமைத்தொகையும் வினைத்தொகையும் பண்புத்தொகையும் உவமைத்தொகையும் உம்மைத்தொகையும் அன்மொழித்தொகையும் என மேற்கூறிய தொகைநிலைத் தொடர்ச்சொல் அறுவகைப்படும், எ—று.

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், தொகைநிலைத் தொடர்மொழியது பெயரும் முறைமையும் தொகையும் கூறுகின்றது.

இ—ள்.: வேற்றுமை—வேற்றுமைத் தொகைநிலைத் தொடர் மொழியும், வினை—வினைத் தொகைநிலைத் தொடர்மொழியும், பண்பு—பண்புத் தொகைநிலைத் தொடர்மொழியும், உவமை—உவமைத் தொகை நிலைத் தொடர்மொழியும், உம்மை—உம்மைத் தொகை நிலைத் தொடர்மொழியும், அன்மொழி—அன்மொழித் தொகைநிலைத் தொடர்மொழியும், எனவத் தொகையாறாகும் – என்று சொல்லப்படும் தொகை நிலைத் தொடர்மொழிகள் ஆறாம், எ—று.

உ—ம்.: நிலம் கடந்தான், பொற்குடம், கருப்புவேலி, வரை வீழருவி,

சாத்தன்கை, குன்றக்கூகை, கொல்யானை, கருங்காக்கை, துடியிடை, இராப்பகல், பொற்றாலி எனத் தொகை நிலைத் தொடர்மொழி.

## விசாகப் பெருமாளையர்

இது, முன் வேற்றுமை முதலிய வென்றார் அவை இவை யென்பது உணர்த்துகின்றது.

இ-ள்.: **வேற்றுமைத்** (தொகை) - வேற்றுமைத்தொகையும், **வினைத்** (தொகை)-வினைத்தொகையும், **பண்புத்** (தொகை)-பண்புத்தொகையும், **உவமைத்** (தொகை)-உவமைத்தொகையும், **உம்மைத்** (தொகை)-உம்மைத்தொகையும், **அன்மொழித்** (தொகை)-அன்மொழித்தொகையும், **என**-என்று, **அத்தொகை**-முன்னேசொல்லப்பட்ட தொகைநிலைத் தொடர்மொழிகள், **ஆறாகும்**-ஆறு வகைப்படும், எ-று.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

தொகையாவது யாது?

தொகையாவது இரண்டும் பலவுமாகிய சொற்கள் ஒருசொல்லாக ஒட்டிநிற்கும் ஒட்டு.

உ-ம். யானைக்கோடு-பெயரோடு பெயர்தொக்க இருமொழித் தொடர்.

நிலங்கடந்தான்-பெயரோடு பெயர்தொக்க இருமொழித் தொடர்.

கற்சுனைக்குவளையிதழ்-பன்மொழித்தொடர்.

அத்தொகை எத்தனை வகைப்படும்?

வேற்றுமை வினைபண் புவமை யும்மை
அன்மொழி யெனவத் தொகையா றாகும்.
(வேற்றுமை வினை பண்பு உவமை உம்மை
அன்மொழி என அத்தொகை ஆறு ஆகும்.)

இ-ள்.: வேற்றுமைத்தெகையும் வினைத்தொகையும் பண்புத் தொகையும் உவமைத்தொகையும் உம்மைத்தொகையும் அன்மொழித்தொகையுமென முன்னே சொல்லப்பட்ட தொகைநிலைத் தொடர்மொழிகள் ஆறுவகைப்படும், எ-று.

## முகவை இராமானுச கவிராயர்

இது, அத்தொகை நிலைத்தொடர் இவ்வளவைத் தென்கின்றது.

இ-ள்.: வேற்றுமைத்தொகையும், வினைத்தொகையும், பண்புத் தொகையும், உவமைத்தொகையும், உம்மைத்தொகையும், அன்மொழித் தொகையும், என மேற்கூறிய அத் தொகைநிலைத் தொடர்ச்சொல் அறுவகைப்படும், எ-று.

இனி யிவற்றிற்கெல்லாம் பதப்பொருளோடு இலக்கணந் தோன்றத் தனித்தனி வகுத்துக் கூறுவார்.

## கா. கோபாலாசாரியர்
## தி.கோ. ரங்காசாரியர்

உரை :- வேற்றுமை - வேற்றுமைத் தொகையும், வினை- வினைத் தொகையும், பண்பு ---, உவமை ---, உம்மை ---, அன்மொழி -அன் மொழித்தொகையும், என -என்று, அ தொகை-முன்சொன்ன தொகை நிலைத் தொடர்மொழிகள், ஆறு ஆகும் - ஆறுவகைப்படும்.

## ஆறுமுக நாவலர்

இ-ள்.: வேற்றுமைத் (தொகை)- வேற்றுமைத்தொகையும், வினைத் (தொகை)-வினைத்தொகையும், பண்புத் (தொகை)-பண்புத்தொகையும், உவமைத் (தொகை) - உவமைத்தொகையும், உம்மைத் (தொகை) - உம்மைத்தொகையும், அன்மொழித் (தொகை) என - அன்மொழித் தொகையுமென, அத்தொகை ஆறு ஆகும்-முன்னே சொல்லப்பட்ட தொகைநிலைத் தொடர்மொழிகள் ஆறுவகைப்படும், எ-று.

## வ. குமாரசாமிப் புலவர்

இ-ள். வேற்றுமைத் (தொகை) - வேற்றுமைத் தொகையும், - வினைத் (தொகை) - வினைத்தொகையும், - பண்புத் (தொகை) - பண்புத் தொகையும், - உவமைத் (தொகை) - உம்மைத்தொகையும், - அன்மொழித் (தொகை), என - அன்மொழித் தொகையுமென, - அத்தொகை ஆறு ஆகும் - முன்னே சொல்லப்பட்ட தொகைநிலைத் தொடர்மொழிகள் ஆறுவகைப்படும்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ-ள்.: வேற்றுமை-வேற்றுமைத்தொகையும், வினை-வினைத் தொகையும், பண்பு-பண்புத்தொகையும், உவமை-உவமைத்தொகையும், உம்மை-உம்மைத்தொகையும், அன்மொழி-அன்மொழித் தொகையும், என- என்று, அ தொகை-முன்சொன்ன தொகைநிலைத் தொடர்மொழிகள், ஆறு ஆகும்-அறுவகைப்படும்; எ-று.

## பவானந்தம் பிள்ளை

இ-ள்.: வேற்றுமைத் (தொகை) - வேற்றுமைத்தொகையும், வினைத் (தொகை) - வினைத்தொகையும், பண்புத் (தொகை) - பண்புத் தொகையும், உவமைத் (தொகை) - உவமைத் தொகையும், உம்மைத் (தொகை) - உம்மைத்தொகையும், அன்மொழித் (தொகை) என - அன்மொழித்

தொகையுமென, அத் தொகை ஆறுஆகும் – முன்னே சொல்லப்பட்ட தொகைநிலைத் தொடர்மொழிகள் ஆறுவகைப்படும். எ—று.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ—ள்.) வேற்றுமைத் (தொகை) – வேற்றுமைத் தொகையும், வினைத் (தொகை)– வினைத்தொகையும், பண்புத் (தொகை) – பண்புத் தொகையும், உவமைத் (தொகை) – உவமைத் தொகையும், உம்மைத் (தொகை) – உம்மைக்தொகையும், அன்மொழித் (தொகை) – அன்மொழித் தொகையும், என – என்று, அத் தொகை – முன்னே சொல்லப்பட்ட தொகைநிலைத் தொடர்மொர்ழிகள், ஆறு ஆகும் – அறுவகைப்படும். (எ—று)

(பொ—ரை.) வேற்றுமைத் தொகையும், வினைத்தொகையும், பண்புத்தொகையும், உவமைத் தொகையும், உம்மைத் தொகையும், அன்மொழித் தொகையும் என மேற்கூறிய தொகைநிலைக் தொடர் சொற்கள் அறுவகைப்படும்.

## கா. நமச்சிவாய முதலியார்

வேற்றுமைத் (தொகை) – வேற்றுமைத் தொகையும், வினைத் (தொகை) – வினைத்தொகையும், பண்புத் (தொகை) – பண்புத் தொகையும், உவமைத் (தொகை) உவமத்தொகையும், உம்மைத் (தொகை) – உம்மைத் தொகையும், அன்மொழித் (தொகை) – அன்மொழித் தொகையும், என – என்று, அத்தொகை – முன்னே சொல்லப்பட்ட தொகை நிலைத் தொடர்மொழிகள், ஆறு ஆகும் – ஆறுவகைப்படும்.

(11)

**362. இரண்டு [1]முதலா ம்இடையா றுருபும்**
**வெளிப்பட லில்லது வேற்றுமைத் தொகையே.**

இரண்டு முதலாம் இடை ஆறு உருபும்
வெளிப்பட ல் இல்லது வேற்றுமைத் தொகையே.

iraṇtu mutal ā itai āūu urupu um
veḻippatal illatu vēūūumaittokai ē

பாடவேறுபாடு:–

1.முதலாவிடை

## இலாசரகு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Casual ellipsis

A casual ellipsis is that which drops the signs of the six intervening cases, viz, those from the 2nd (to the 7th).

## ஒப்புமைப் பகுதி

அவற்றுள்
வேற்றுமைத் தொகையே வேற்றுமை யியல

(தொல். சொல்.: 413)

உருபு ............ விரியின் அடைவே
உருவு .............

(நேமி.: 86 : 1–2)

அவற்றுள்
வேற்றுமைத் தொகையே வேற்றுமை யியல

(இ.வி.: 336)

தொகுபெயர் வேற்றுமைத் தொடர் பெயரன்ன
இயல்திரிபு அழிவாக்கம் இயைந்தாம் தொகையே

(தொ.வி.: 91)

இரண்டு முதலா மிடையா றுருபும்
வெளிப்ட லில்லது வேற்றுமைத் தொகையே

(மு.வீ.: 738)

வேற்றுமையின் தொகை உருபின் பொருட் காட்டும்

(தொ.வி.: 66:1)

## மயிலை நாதர்

எ–ன், நிறுத்த முறையானே வேற்றுமைத் தொகையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.:– ஐ முதலாகக் கண் ஈறாக நின்ற ஆறுருபும் இடையே தோன்றாது நிற்பது வேற்றுமைத் தொகையாவது, எ–று.

வ–று.:–

நிலங்கடந்தான், பொற்குடம், கருப்புவேலி, வரைவீழருவி, சாத்தன்கை, குன்றக்கூகை யென இடையே தொக்கவாறு காண்க.

இடையிலே தொகுமென்றதென்னை? கடந்தானிலம், இருந்தான்குன்றத்து, "தண்வரல் வாடையும் பிரிந்திசினோர்க் கழலே" (குறுந்.35), "புள்ளினிர் மன்ற வெற்றாக் குறுதலின்" (மலைபடு.66) என்பன, நிலத்தை, குன்றத்தின்கண், அழலான், எற்றாக்குதலினாலென்று வேற்றுமையுருபுகள் ஈற்றினும் தொகுமாலோ வெனின், அவை ஒருபெயரனையவாய் உருபு முதலாயின ஏலாமையின், தொகைவிதியாற் றொக்கனவாகா; செய்யுள் விகார வகையால் தொகுக்கப்பட்டனவென்க.

*இனி இவை விரியுமாறு:* நிலத்தைக்கடந்தான், பொன்னானாய குடம், கரும்பிற்கு வேலி, வரையின்வீழருவி, சாத்தனதுகை, குன்றத்துக்கட்கூகை யென விரியும்.[1]

## சங்கர நமச்சிவாயர்

எ—னின், நிறுத்தமுறையானே வேற்றுமைத்தொகை ஆமாறு உணர்—ற்று.

இ—ள்.: எழுவாய்க்கும் விளிக்கும் இடையே நின்ற இரண்டாவது முதலிய ஆறு வேற்றுமையுருபும் தொக்க தொடர்ச் சொறகள் வேற்றுமைத்தொகைகளாம், எ—று.

வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண் பெயரொடு பெயரும் வினையும் கூடிய கூட்டத்தை வேற்றுமைத்தொகை என்றது அன்று என்பார் ஆறு உருபும் வெளிப்படலில்லது என்றார். ஏனைத் தொகைகளும் அன்ன.

வ—று.:—

நிலம் கடந்தான், தலை வணங்கினான், சாத்தன் மகன், ஊர் நீங்கினான், சாத்தன் கை, "குன்றக்கூகை", யானைக்கோட்டு நுனி குறைத்தான் என ஆறு உருபும் இடையே தொக்கவாறு காண்க.இடையே தொக்கதனைத் தொகைநிலைத் தொடர் என்றமை யானே கடந்தான் நிலம், இருந்தான் குன்றத்து என இறுதிக்கண் தொக்குப் பிளவுபட்டு நின்றன, தொகைநிலைத் தொடர் ஆகாவோ எனின்:— நிலம் கடந்தான், குன்றத்திருந் தான் என்பனவற்றை ஒரோவழி மாறிக் கூறுதலின் பிளவுபட்டு நின்றன அன்றி அவையும் இடைக்கண் தொக்க தொகை நிலைத் தொடரேயாம் என்க.

---

பாடவேறுபாடு.:—

1."ஐயுங் கண்ணு மல்லாப் பொருள்வயின், மெய்யுருபு தொகாஅ விறுதியான" என்பது தொல்காப்பியம். இந்தவிதி கொண்டு இறுதி வேற்றுமையுருபு தொகாதென்றறிக.

இனி ஆறுருபும் என்னும் முற்றும்மையை எச்சவும்மை யாக்கிப் பொற்குடம் என ஒரோவழி உருபும் பொருளும் உடன் தொக்கதூஉம் வேற்றுமைத்தொகை எனக் கொள்க. அது விரியுழிப் பொன்னால்செய்த குடம் என விரியும். பிறவும் அன்ன.

## கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், நிறுத்திய முறையே வேற்றுமைத் தொகைநிலைத் தொடர் மொழியாமாறு கூறுகின்றது.

இ-ள்.: இரண்டு முதலாக – இரண்டாம் வேற்றுமை ஐயுருபு முதலாக, இடையாறுருபும் – இடையிலுள்ள கண்ணுருபு ஈறாக நின்ற ஆறுருபும், வெளிப்பட லில்லது-இரண்டு சொற்கு நடுவே தோன் றாமை நிற்பது, வேற்றுமைத் தொகையே- வேற்றுமைத் தொகை நிலைத் தொடர்மொழிகளாம், எ–று.

உ–ம்.:–

நிலம் கடந்தான், மரம் தறித்தான் எனவும்; பொற்குடம், மட்குடம் எனவும்; கருப்புவேலி, வயிற்றுச்சோறு எனவும்; வரை வீழருவி, கருவூர்க்கிழக்கு எனவும்; சாத்தன்கை, புலவர்–பாட்டு எனவும்; குன்றக்கூகை, பனங்கிளி எனவும் இடையே உருபுகள் தொக்கவாறு காண்க.

இடையிலே தொகும் எனின் என்னை? கடந்தானிலம்; இருந்தான் குன்றத்து என ஈற்றினும் உருபு தொகுமாலோ எனின் அவை ஒரு பெயர் போலவும் ஒரு வினை போலவும் ஆகாமையின் விகாரத்தாற் றொகுக்கப்பட்டன என்க.

"ஐயுங் கண்ணு மல்லாப் பொருள்வயின்
மெய்யுருபு தொகாஅ விறுதியான"

(தொல்.சொல்.101)

## விசாகப் பெருமாளையர்

இது, நிறுத்த முறையினாலே வேற்றுமைத் தொகையாமா றுணர்த்துகின்றது.

இ–ள்.: இடை–எழுவாய்க்கும் விளிக்கு மிடையே நிற்கிற, இரண்டு– இரண்டாவது, முதலாம்–முதலாயிருக்கின்ற, ஆறுருபும்–ஆறு வேற்றுமை யுருபுகளும், வெளிப்படலில்லது–தொக்க தொடர்மொழிகள், வேற்றுமைத் தொகை–வேற்றுமைத்தொகைகளாம், எ–று.

வ–று.:

ஐ–நிலங்கடந்தான்–இரண்டாம் வேற்றுமைத்தொகை

ஆல்–தலைவணங்கினான்–மூன்றாம் வேற்றுமைத்தொகை

கு–சாத்தன்மைந்தன்–நாலாம் வேற்றுமைத்தொகை

இன்–ஊர்நீங்கினான்–ஐந்தாம் வேற்றுமைத்தொகை

அது–சாத்தன்கை–ஆறாம் வேற்றுமைத்தொகை

கண்–குன்றக்கூகை–ஏழாம் வேற்றுமைத்தொகை

யானைக்கோட்டு நுனிக்குறைந்தான், இது பன்மொழித்தொடர்.

எனவே, கடந்தானிலம், இருந்தான் குன்றத்து, என விறுதியிலே தொகின் நிலங்கடந்தான், குன்றத்திருந்தான், எனக் கூட்டப்படுதலால் இடையிலே தொக்கவையேயாம். ஆறுருபும் என்கிற உம்மையை எச்சவும்மையாக்கி, பொன்னாற்செய்யப்பட்ட குடம், பொற்குடம் என்பதுபோல உருபுடனே முடிக்குஞ்சொல் தொக்கவையும் தொகைநிலைத்தொடராமெனக் கொள்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

வேற்றுமைத்தொகையாவது யாது?

இரண்டு முதலா மிடையா றுருபும்

வெளிப்பட லில்லது வேற்றுமைத் தொகையே.

(இரண்டு முதல் ஆம் இடை ஆறு உருபும்

வெளிப்படல் இல்லது வேற்றுமைத் தொகையே.)

இ–ள்.: இரண்டாவது முதலிய ஆறு வேற்றுமை யுருபுகளும் இடையே வெளிப்படுதல் இல்லாத தொடர்மொழி வேற்றுமைத்தொகையாம், எ–று.

(வரலாறு)

நிலங்கடந்தான், குழைக்காது– இரண்டாம்வேற்றுமைத்தொகை.

தலைவணங்கினான், பொற்குடம் – மூன்றாம்வேற்றுமைத்தொகை.

சாத்தன்மைந்தன், கருப்புவேலி – நான்காம்வேற்றுமைத்தொகை.

ஊர்நீங்கினான், வரைபாய்தல் – ஐந்தாம்வேற்றுமைத்தொகை.

சாத்தன்கை, கொற்றனுணர்வு – ஆறாம்வேற்றுமைத்தொகை.;

குன்றக்கூகை, மாரிமா – ஏழாம்வேற்றுமைத்தொகை.

இவை எவ்வாறு விரிக்கப்படும்?

நிலத்தைக்கடந்தான் குழையையுடையகாது, தலையால்

வணங்கினான் பொன்னாலாயகுடம், சாத்தனுக்குமைந்தன் கரும்புக்குவேலி, ஊரினீங்கினான் வரையிற்பாய்தல், சாத்தனதுகை கொற்றனதுணர்வு, குன்றத்துக்கட்கூகை மாரிக்கணுளதாம் மா என முறையே விரிக்கப்படும்.

இடையே தொக்கதனைத் தொகைநிலைத்தொட ரென்றமையானே, கடந்தானிலம் இருந்தான் குன்றத்து என இறுதிக்கட்டொக்கு நிற்பனவு முளவாதலின் அவை தொகைநிலைத்தொடராகாவோ?

நிலங்கடந்தான் குன்றத்திருந்தான் என்பன ஒரோவழி இங்ஙனம் மாறிக் கூறப்படுமாயினும் அவையும் இடைக்கட்டொக்க தொகைநிலைத் தொடரேயாமென்க. ஐயுங் கண்ணுமே யன்றி ஏனையுருபுகள் இறுதிக்கட் டொகுமாறில்லை யென்பது முணர்க.

வேற்றுமையுருபுகள் இடையிலே தொகுமென்றாராயினும் அவை விரிந்துநிற்குமிடத்து எப்பொருள் படுமோ அப்பொருள்படுமிடத்தே தொக்குநிற்கப்பெறும்; அப்பொருள்படாவிடத்தே தொக்குநிற்கப்பெறாவாம்.

வ–று.:–

சாத்தனையடித்தான் என ஐயுருபு விரிந்து நிற்குமிடத்துச் செய்ப்படுபொருள் படுதல்போலச், சாத்தனடித்தான் என ஐயுருபு தொக்குநிற்குமிடத்து அப்பொருள்படாமையால், இங்கே ஐயுருபு தொக்குநிற்கப் பெறாதென்றறிக.

*சாத்தனைக்கொன்றான் மகளைக்கொடுத்தான் அவனைத்தந்தான்* என்பன எவ்வாறு தொகும்?

சாத்தற்கொன்றான் மகட்கொடுத்தான் அவற்றந்தான் எனத் தொகும். முடிக்கும் வினைச்சொல்லாகிய வருமொழி முதலிலே வல்லினநிற்பின் இவைபோல்வன தொகும். பிறவெழுத்து வரின் றொகாவெனக் கொள்க.

சாத்தனொடு வந்தான் என ஒடுவுருபு விரிந்து நிற்குமிடத்து உடனிகழ்ச்சிப்பொருள் படுதல்போலச், சாத்தன்வந்தான் எனத் தொக்கு நிற்குமிடத்து அப்பொருள்படாமையால், இங்கே ஒடுவுருபு தொக்குநிற்கப் பெறாதென்றறிக.

தாயொடுமூவர் என்பது தாய் மூவர் என ஒரோவழி ஒடுவுருபுந் தொகும்.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** நிறுத்த முறையே வேற்றுமைத்தொகை யாமாறுணர்த்திற்று.

**இ–ள்.: இடை**–எழுவாய்க்கும் விளிக்கும் இடையிலே நின்ற, **இரண்டு முதலாவாறுருபும்** – ஐ ஆல் கு இன் அது கண் என்னும் ஆறு உருபுகளும்,

வெளிப்பட வில்லது வேற்றுமைத் தொகை – மறைந்து நிற்குந்தொடர்ச் சொற்கள் வேற்றுமைத் தொகை நிலைத் தொடர்ச் சொற்களாம், எ–று.

வ–று.:–

நிலங்கடந்தான்–ஐ, தலைவணங்கினான்–ஆல், சாத்தன்மகன்–கு, ஊர்நீங்கினான்–இன், சாத்தன்கை–அது, மலைமுழை–கண், என ஆறு உருபும் இடையிலே தொக்கு நின்றவாறு காண்க. இவை இருமொழித் தொகைநிலைத் தொடர். யானைக்கோட்டு நுனிக்குறைத்தான் என்றாற் போல்வன பன்மொழித்தொகை நிலைத்தொடர், இடையே தொக்கதைத் தொகை நிலைத்தொடரென்றதினாலே, கடந்தானிலம், இருந்தான்குன்றத்து என இறுதியிலே தொக்குப் பிளவுபட்டு நின்றவை தொகை நிலைத் தொடராகாவோ எனின், அவை மாறிக் கூறுதலாற் பிளவுபட்டு நின்றனவன்றி, இடையே தொக்க தொகைநிலைத் தொடரே யாமென்க.

இனி 'ஆறுருபு' மென்னும் முற்றும்மையை எச்சவும்மை யாக்கிப், பொற்குடம் என ஒரோவிடத்து உருபும் பொருளும் உடன்றொக்கதும் வேற்றுமைத்தொகை யெனக் கொள்க. அது விரியுங்கால், பொன்னாற் செய்தகுடம் என விரியும், இனி, ஆசிரியர் தொல்காப்பியனார்.

"ஐயுங் கண்ணு மல்லாப் பொருள்வயின்
மெய்யுருபு தொகாஅ விறுதி யான"

எனக் கூறுதலால், ஐயுருபுங் கண்ணுருபுமல்லாத நான்குருபுங் இடையிலன்றி இறுதியிலே தொகாவென்றும், அவ்விரண் டுருபும் இடையிலும் இறுதியிலும்–நிலங்கடந்தான், கடந்தானிலம்; குன்றத்திருந்தான், இருந்தான்குன்றத்து, எனத் தொகுமெனவும், அந்த ஆறுருபும், சாத்தனையடைந்தான், சாத்தனொடு வந்தான், சாத்தனுக்கு நல்கினான், சாத்தனி னீங்கினான், தருமனுக்கு வீமன்தம்பி, சாத்தன்கணின்றான் என விரிந்து நின்றன. தொகுமாயின், சாத்தனடைந்தான், வந்தான், நல்கினான், நீங்கினான், நின்றான், தருமன் வீமன்தம்பி என எழுவாயும் பயனிலையுமாகப் பொருள் வேறுபடுதலால், இடையிலே தொகுமென்றாராயினும் அந்தந்தப் பொருள்களைத் தருதற்குரிய இடங்களில் அல்லது தொகாவெனவும் கொள்க. பிறவுமன்ன.

## கா. கோபாலாசாரியர்
## தி.கோ. ரங்காசாரியர்

**உரை :–** **இடை** – (எழுவாய்க்கும் விளிக்கும்) நடுவில் நின்ற, **இரண்டும் முதல் ஆ ம் ஆறு உருபும்** – இரண்டாவது முதலிய ஆறுவேற்றுமை யுருபுகளும், **வெளிப்படல் இல்லது** – வெளிப்படாமல் மறைந்து நிற்குந் தொடர்மொழிகள், **வேற்றுமைத்தொகை**– வேற்றுமைத் தொகைகளாம்.

| | | | |
|---|---|---|---|
| உ–ம் :– | நிலங்கடந்தான் | – ஐ | – இரண்டாம் வேற்றுமைத்தொகை. |
| | தலைவணங்கினான் | – ஆல் | – மூன்றாம் ” ” |
| | இராமன் மைந்தன் | – கு | – நான்காம் ” ” |
| | ஊர் நீங்கினான் | – இன் | – ஐந்தாம் ” ” |
| | இராமன் கை | – அது | – ஆறாம் ” ” |
| | குன்றக்கூகை | – கண் | – ஏழாம் ” ” |

கடற்கறைப் பொழிலடைந்தான் – பன்மொழித்தொடர்.

குறிப்பு :–

'ஆறுருபும்' என்ற முற்றும்மையை எச்சவும்மையாக்கி, 'கைக்களிறு', 'பொற்குடம்' என உருபும் பொருளும் உடன்தொக்கனவும் வேற்றுமைத் தொகை எனக்கொள்க; அவை –'கையையுடைய களிறு', 'பொன்னாற் செய்தகுடம்' என விரியும்.

இனி, ஆசிரியர் தொல்காப்பியனார் "ஐயுங்கண்ணுமல்லாப் பொருள்வயின் – மெய்யுருபுதொகா இறுதியான" எனக் கூறலால், ஐயுருபுங் கண்ணுருபுமல்லாத நான்குருபும் இடையிலன்றி இறுதியிலே தொகா எனவும், அந்த ஐயுருபுங் கண்ணுருபும் 'கடந்தான் நிலம்', 'இருந்தான் குன்றத்து' என இறுதியிலுந் தொகுமெனவுங் கொள்க. வேற்றுமையுருபுகள் இடையில் தொகுமென்றாராயினும் அவை விரிந்து நிற்குமிடத்து எப்பொருள் பாடுமோ அப்பொருள் படுமிடத்தே தொக்கு நிற்கப்பெறும்; அப்பொருள் படாவிடத்தே தொக்குநிற்கப் பெறாவாம்.

| | | |
|---|---|---|
| உம் :– | இராமனை அடித்தான்<br>இராமனொடு வந்தான்<br>என | ஐயுருபும் ஒடுவுருபும் விரிந்து நிற்குமிடத்துச் செய்யப்படுபொருளும் உடனிகழ்ச்சிப் பொருளும் படுதல்போல. |
| | இராமனடித்தான்<br>இராமன் வந்தான்<br>என | அவ்வுருபுகள் தொக்கு நிற்குமிடத்து அப்பொருள் படாததனால் இப்படிப் பட்ட விடங்களில் உருபுதொக்கு நிற்கப் பெறாதென அறிக. |

## ஆறுமுக நாவலர்

**இ-ள்.: இடை இரண்டு முதல் ஆம் ஆறு உருபும் -எழுவாய்க்கும்** விளிக்குமிடையே நின்ற இரண்டாவது முதலிய ஆறு வேற்றுமை யுருபுகளும், **வெளிப்படல் இல்லது வேற்றுமைத் தொகை - தொக்க தொடர்மொழிகள்** வேற்றுமைத் தொகைகளாம், எ-று.

வ-று.:

*நிலங்கடந்தான்*............இரண்டாம் வேற்றுமைத்தொகை.

தலைவணங்கினான்..........மூன்றாம் வேற்றுமைத்தொகை.

சாத்தன்மைந்தன்..................நாலாம் வேற்றுமைத்தொகை.

ஊர்நீங்கினான்................ஐந்தாம் வேற்றுமைத்தொகை.

சாத்தன்கை..............ஆறாம் வேற்றுமைத்தொகை.

குன்றக்கூகை..............ஏழாம் வேற்றுமைத்தொகை.

*யானைக்கோட்டு நுனிகுறைத்தான்.* இது பன்மொழித்தொடர்.

இனி ஆறுருபும் என்னு முற்றும்மையை எச்சவும்மை யாக்கிக் கைக்களிறு, பொற்குடம் என ஒரோவிடத்து உருபும் பொருளும் உடன்றொக்கனவும் வேற்றுமைத்தொகை யெனக் கொள்க. அவை, விரியுமிடத்துக், கையையுடைய களிறு, பொன்னாற் செய்த குடம் என, விரியும்.

இனி ஆசிரியர் தொல்காப்பியனார்:

"ஐயுங் கண்ணு மல்லாப் பொருள்வயின்
மெய்யுருபு தொகா விறுதி யான"

எனக் கூறுதலால், ஐயுருபுங் கண்ணுருபுமல்லாத நான்குருபும், இடையிலன்றி ,இறுதியிலே தொகாவெனவும், அவ்விரண்டுருபும், நிலங்கடந்தான், கடந்தானிலம்; குன்றத்திருந்தான், இருந்தான் குன்றத்து என இடையிலும் இறுதியிலுந் தொகுமெனவுங் கொள்க.

வேற்றுமையுருபுகள் இடையிலே தொகுமென்றாராயினும், அவை விரிந்து நிற்குமிடத்து எப்பொருள்படுமோ அப்பொருள் படுமிடத்தே தொக்கு நிற்கப் பெறும்; அப்பொருள் படாவிடத்தே தொக்கு நிற்கப் பெறாவாம்.

வ-று.:-

சாத்தனை யடித்தான் என ஐயுருபு விரிந்து நிற்குமிடத்துச் செயப்படுபொருள் படுதல்போலச் சாத்தனடித்தான் என ஐயுருபு தொக்கு நிற்குமிடத்து அப்பொருள் படாமையால், இங்கே ஐயுருபு தொக்கு நிற்கப் பெறாதென்றறிக.

சாத்தனொடு வந்தான் என ஒடுவுருபு விரிந்து நிற்குமிடத்து உடனிகழ்ச்சிப்பொருள் படுதல்போலச், சாத்தன் வந்தான் எனத் தொக்கு நிற்குமிடத்து அப்பொருள் படாமையால், இங்கே ஒடுவுருபு தொக்கு நிற்கப்பெறாதென்றறிக.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள்.:– இடை இரண்டு முதல் ஆம் ஆறு உருபும்** – எழுவாய்க்கும் விளிக்குமிடையே நின்ற இரண்டாவது முதலிய ஆறுவேற்றுமையுருபுகளும், – **வெளிப்படல் இல்லது வேற்றுமைத் தொகை** – தொக்க தொடர்மொழிகள் வேற்றுமைத் தொகைகளாம். எ– று.

இரண்டு முதலாம் ஆறுருபும் எனவே முதலாவதும் எட்டாவதுமாகிய இருவகை வேற்றுமையு மொழிக்கப்பட்டுக் குறித்த ஆறு வேற்றுமைகளுந் தெரியப்படுதலின், இடையாறுருபும் வெளிப்படலில்லதென்றல் அநாவசிக மாதலின்; இரண்டு முதலா ஆறுருபும் இடை வெளிப் படலில்லது வேற்றுமைத் தொகையென்று அந்வயஞ்செய்து பொருளுரைப்பது நன்று. 'பெயரொடு பெயரும்' என்னும் பொதுச்சூத்திரத்தில் 'அவற்றினுருபிடை யொழிய' என்றதினாற் பெறப்பட்ட இடையைப் பின்னுங் கூறவேண்டா வெனின் தொகைநிலைத் தொடர்மொழி யிலக்கணங் கூறிய இடத்தில் அது பொதுவகையாற் பெறப்பட்டது. அறுவகைத் தொகையும் வகுத்துக் கூறப்படும்போது முதலாவதாகக் கூறப்படும் வேற்றுமைத் தொகையில் இடையென்பதனை எடுத்தோதினார். அதுவும் ஏனையவைந்தும் மறைதலிடை யிலென்று ஞாபகங்கூறி வலியுறுத்தற்பொருட்டென்க.

(வரலாறு)

| | | |
|---|---|---|
| நிலங்கடந்தான் | ..... | இரண்டாம் வேற்றுமைத்தொகை |
| தலை வணங்கினான் | ..... | மூன்றாம் வேற்றுமைத்தொகை |
| சாத்தன்மைந்தன் | ..... | நாலாம் வேற்றுமைத்தொகை |
| ஊர்நீங்கினான் | ..... | ஐந்தாம் வேற்றுமைத்தொகை |
| சாந்தன்கை | ..... | ஆறாம் வேற்றுமைத்தொகை |
| குன்றக்கூகை | ..... | ஏழாம் வேற்றுமைத்தொகை |

யானைக்கோட்டு நுனி குறைத்தான் .... இது பன்மொழித் தொடர்.

இனி ஆறுருபும் என்னு முற்றும்மையை எச்சவும்மையாக்கிக், கைக்களிறு, பொற்குடம் என ஒரோவிடத்து உருபும் பொருளும் உடன்றொக்கனவும் வேற்றுமைத் தொகையெனக் கொள்க. அவை விரியுமிடத்துக், கையையுடைய களிறு, பொன்னாற் செய்த குடம் என, விரியும்.

இனி ஆசிரியர் தொல்காப்பியனார் : ''ஐயுங் கண்ணு மல்லாப் பொருள்வயின் – மெய்யுருபு தொகா விறுதி யான'' எனக் கூறுதலால், ஐயுருபுங் கண்ணுருபு மல்லாத நான்குருபும் இடையிலன்றி இறுதியிலே தொகாவெனவும், அவ்விரண் டுருபும், நிலங்கடந்தான், கடந்தானிலம்; குன்றத்திருந்தான், இருந்தான்குன்றத்துஎன இடையிலும் இறுதியிலுந் தொகுமெனவுங் கொள்க.

வேற்றுமையுருபுகள் இடையிலே தொகுமென்றாராயினும், அவை விரிந்து நிற்குமிடத்து எப்பொருள்படுமோ அப்பொருள் படுமிடத்தே தொக்கு நிற்கப் பெறும்; அப்பொருள்படாத விடத்தே தொக்கு நிற்கப் பெறாவென்றுணர்க.

வ–று. சாத்தனையடித்தான் என ஐயுருபு விரிந்து நிற்குமிடத்துச் செயப்படுபொருள் படுதல்போலச், சாத்தனடித்தான் என ஐயுருபு தொக்குநிற்குமிடத்து அப் பொருள்படாமையால், இவ்விடத்தில் ஐயுருபு தொக்குநிற்கப் பெறாதென்றறிக.

சாத்தனொடு வந்தான் என ஒருவுருபு விரிந்து நிற்குமிடத்து உடனிகழ்ச்சிப் பொருள்படுதல் போலச், சாத்தன் வந்தான் எனத் தொக்குநிற்குமிடத்து அப்பொருள்படாமையால், இவ்விடத்தில் ஒடுவுருபு தொக்குநிற்கப்பெறாதென்றறிக. ஏனையவு மிவ்வாறே காண்க.

வேற்றுமைத்தொகையை வடநூலார் தற்புருஷசமாசமென்பர்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– இடை– (எழுவாய்க்கும் விளிக்கும்) நடுவில் நின்ற, **இரண்டு முதல் ஆம் ஆறு உருபும்** – இரண்டாவது முதலிய ஆறு வேற்றுமை யுருபுகளும், **வெளிப்படல் இல்லது** – வெளிப்படாமல் மறைந்து நிற்கும் தொடர் மொழிகள், **வேற்றுமைத்தொகை**–வேற்றுமைத் தொகைகளாம்; எ–று.

உ–ம்.:–

நிலம் கடந்தான் (ஐ) இரண்டாம் வேற்றுமைத்தொகை.

தலைவணங்கினான் (ஆல்) மூன்றாம் வேற்றுமைத் தொகை.

சாத்தன் மைந்தான் (கு) நான்காம் வேற்றுமைத் தொகை.

ஊர் நீங்கினான் (இன்) ஐந்தாம் வேற்றுமைத் தொகை.

சாத்தன் கை (அது) ஆறாம் வேற்றுமைத் தொகை.

குன்றக் குகை (கண்) ஏழாம் வேற்றுமைத் தொகை.யானைக் கோட்டு நுனி குறைத்தான்–பன்மொழித் தொடர்.

இனி, 'ஆறு உருபும்' என்ற முற்றும்மையை எச்சவும்மை யாக்கி, கைக்களிறு, பொற்குடம் என உருபும் பொருளும் உடன்தொக்கனவும் வேற்றுமைத்தொகை யெனக் கொள்க; அவை–கையையுடைய களிறு, பொன்னாற் செய்த குடம் என விரியும்.

இனி, ஆசிரியர் தொல்காப்பியனார்,

"ஐயும் கண்ணு மல்லாப் பொருள்வயின்
மெய்யுருபு தொகா இறுதி யான"

எனக் கூறுதலால், ஐயுருபும் கண்ணுருபு மல்லாத நான்கு உருபும்–இடையிலன்றி இறுதியிலே தொகாவெனவும், அந்த ஐயுருபும் கண்ணுருபும்–கடந்தான் நிலம், இருந்தான் குன்றத்து என இறுதியிலும் தொகு மெனவும் கொள்க.

வேற்றுமையுருபுகள் இடையிலே தொகுமென்றா ராயினும், அவை விரிந்து நிற்குமிடத்து எப்பொருள்படுமோ அப்பொருள் படுமிடத்தே தொக்கு நிற்கும்; அப்பொருள் படாவிடத்தே தொக்கு நில்லாவாம்.

உ–ம்.: சாத்தனை அடித்தான், சாத்தனோடு வந்தான் என ஐயுருபும் ஒடுஉருபும் விரிந்து நிற்குமிடத்துச் செயப்படு பொருளும் உடனிகழ்ச்சிப் பொருளும் படுதல் போல, சாத்தன் அடித்தான், சாத்தன் வந்தான் என அவ்வுருபுகள் தொக்கு நிற்குமிடத்து அப்பொருள்படாததனால் இப்படிப்பட்ட இடங்களில் உருபு தொக்கு நில்லாதென அறிக.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.: இடை – எழுவாய்க்கும் விளிக்கு மிடையே நின்ற, இரண்டு முதல் ஆம் – இரண்டாவது முதலிய, ஆறு உருபும்–ஆறு வேற்றுமையுருபுகளும், வெளிப்படல் இல்லது – வெளிப்படாமல் தொக்க தொடர் மொழிகள், வேற்றுமைத் தொகை – வேற்றுமைத்தொகைகளாம். எ–று.

(உ–ம்.) நிலங்கடந்தான்........... (ஐ) இரண்டாம் வேற்றுமைத்தொகை.

தலைவணங்கினான் ................(ஆல்) மூன்றாம் வேற்றுமைத்தொகை.

சாத்தன்மைந்தன்...................(கு) நான்காம் வேற்றுமைத்தொகை.

ஊர்நீங்கினான் ...................(இன்) ஐந்தாம் வேற்றுமைத்தொகை.

சாத்தன்கை........................ (அது) ஆறாம் வேற்றுமைத்தொகை.

மலைக்குகை.................. (கண்) ஏழாம் வேற்றுமைத்தொகை.

யானைக் கோட்டுநுனி குறைத்தான்..............இது பன்மொழித்தொடர்.

இனி ஆறுருபும் என்னும் முற்றும்மையை எச்சவும்மையாக்கிக் கைக்களிறு பொற்குடம் என ஒரோவிடத்து உருபும் பொருளும் உடன்றொக்கனவும் வேற்றுமைத்தொகையெனக் கொள்க. அவை, விரியுமிடத்துக், கையையுடைய களிறு, பொன்னாற் செய்த குடம் என விரியும்.

இனி ஆசிரிப்பா தொல்காப்பியனார் "ஐயுங் கண்ணு மல்லாப் பொருள்வயின் – மெய்யுருபு தொகா விறுதி யான" எனக் கூறுதலால், ஐயுருபுங் கண்ணுருபுமல்லாத நான்குருபும், இடையிலன்றி இறுதியிலே தொகாவெனவும், அவ்விரண் டுருபும், நிலங்கடந்தான் – கடந்தானிலம்; குன்றத்திருந்தான், இருந்தான்குன்றத்து என இடையிலும் இறுதியிலுந் தொகுமெனவுங் கொள்க. ஏழனுருபின் எச்சப்பெயர் முதற்கண் வாரதென்பது மேலே (சூ. 398) பெறப்பட்டதாதலால், பெயர்கொண்டு முடியும் ஏழனுருபு இறுதியில் தொகுமாறில்லை யென்பதறிக.

வேற்றுமையுருபுகள் இடையிலே தொகுமென்றாராயினும், அவை விரிந்து நிற்குமிடத்து எப்பொருள்படுமோ அப்பொருள் படுமிடத்தே தொக்கு நிற்கப் பெறும்; அப்பொருள் படாவிடத்தே தொக்கு நிற்கப்பெறாவாம்.

(உ–ம்.) சாத்தனை யடித்தான் – என ஐயுருபு விரிந்து நிற்கு மிடத்துச் செயப்படு பொருள் படுதல்போலச், சாத்தனடித்தான் என ஐயுருபு தொக்கு நிற்குமிடத்து அப்பொருள்படாமையால், இங்கே ஐயுருபு தொக்கு நிற்கப்பெறா தென்றறிக.

சாத்தனொடு வந்தான் – என ஒடுவுருபு விரிந்து நிற்குமிடத்து உடனிகழ்ச்சிப்பொருள் படுதல்போலச், சாத்தன் வந்தான் எனத்தொக்கு நிற்குமிடத்து அப்பொருள் படாமையால், இங்கே ஒடுவுருவு தொக்குநிற்கப்பெறா தென்றறிக.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) இடை – (எழுவாய்க்கும் விளிக்கும்) இடையே நிற்கிற, இரண்டு முதலாம் – இரண்டாவது முதலாயிருக்கின்ற, ஆறு உருபும் – ஆறுவேற்றுமையுருபுகளும், வெளிப்படல் இல்லது– தொக்க தொடர் மொழிகள், வேற்றுமைத் தொகை – வேற்றுமைத்தொகைகளாம். (எ–று.)

(பொ–ரை.) (எழுவாய்க்கும் விளிக்கும்) இடை நின்ற இரண்டாவது முதலிய ஆறு வேற்றுமை உருபுகளும் தொக்க தொடர் சொற்கள் வேற்றுமைத் தொகைகளாம்.

(உ–ம்.)

நிலம் கடிந்தான் 2–ம் வேற்றுமைத் தொகை.

தலை வணங்கினான் 3–ம் வேற்றுமைத் தொகை.

சாத்தக் மைந்தன் 4–ம் வேற்றுமைத் தொகை.

ஊர் நீங்கினான் 5–ம் வேற்றுமைத் தொகை.

சாத்தன் கை 6–ம் வேற்றுமைத் தொகை.

குன்றக் கூகை 7–ம் வேற்றுமைத் தொகை.

இரு மொழித் தொடர்.

யானைக்கோட்டு நுனிகுறைத்தான் பன்மொழித்தொடர். இடையில் தொகும் எனவே, கடந்தான்நிலம், இருந்தான் குன்றத்து என இறுதியிலே தொகின், நிலங் கடந்தான், குன்றத் திருந்தா னெனக் கூட்டப்படுதலால், இடையிலே தொக்கைவையேயாம்.

ஆறுருபும் என்கிற முற்றும்மையை எச்சவும்மையாக்கி, கைக்களிறு, பொற்குடம், என்பன போல உருபுடனே முடிக்குஞ் சொல் தொக்கவையும் தொகைநிலைத் தொடராம் எனக் கொள்க. இவை கையையுடைய களிறு, பொன்னுற் செய்த குடம் என விரியும்.

இனி, ஆசிரியர் தொல்காப்பியனார், "ஐயுங் கண்ணுமல்லாப் பொருள்வயின், மெய்யுருபு இறுதியான" எனக் கூறுதலால், ஐயுருபுங் கண்ணுரு மல்லாத நான்கு உருபும் இடையிலன்றி இறுதியிலே தொகா எனவும், அந்த ஐயுருபும் கண்ணுருபும் கடந்தான் நிலம், இருந்தான் குன்றத்து என இறுதியிலும் தொகு மெனவும் கொள்ளுதலும் ஒன்று.

வேற்றுமை யுருபுகள் இடையில் தொக்கு நிற்கப் பெறும் என்றராயினும், அவை விரிந்து நிற்குமிடத்து எப் பொருள்படுமோ அப் பொருள் படுமிடத்தே தொக்கு நிற்கும்; அப் பொருள் படா விடத்தே தொக்கு நில்லாவாம்.

(உ–ம்,) கொற்றனைக் கண்டான். கொற்றனோடு போனான் என ஐயுருபும் ஒடு உருயும் விரிந்து நிற்குமிடத்துச் செயப்படுபொருளும் உடனிகழ்ச்சிப் பொருளுமபடுதல் போல, கொற்றன் கண்டான், கொற்றன் போனான் என அவ்வுருபுகள்

தொக்கு நிற்குமிடத்து அப் பொருள் படாததனால் இப்படிப்பட்ட இடங்களில் உருபு தொக்கு நில்லாதென்க. மரத்தை வளர்த்தான் என்ற இடத்தே தொக்கு நிற்கும் என்க.

## கா. நமச்சிவாய முதலியார்

**இடை** – (எழுவாய்க்கும் விளிக்கும்) இடையே நிற்கின்ற, **இரண்டு முதல் ஆம்** – இரண்டாவது முதலாயிருக்கின்ற, **ஆறு உருபும்** – ஆறுவேற்றுமை யுருபுகளும், **வெளிப்படல் இல்லது** – வெளிப்படாமல் தொக்க தொடர்மொழிகள், **வேற்றுமைத் தொகை** – வேற்றுமைத் தொகைகளாம்.

**உதாரணம்**

| | | |
|---|---|---|
| நிலங் கடந்தான் | – 2–ஆம் வேற்றுமைத்தொகை | |
| தலை வணங்கினான் | – 3–ஆம் வேற்றுமைத்தொகை | |
| சாத்தன் மைந்தன் | – 4–ஆம் வேற்றுமைத்தொகை | இருமொழித் |
| ஊர் நீங்கினான் | – 5–ஆம் வேற்றுமைத்தொகை | தொடர். |
| சாத்தன் கை | – 6–ஆம் வேற்றுமைத்தொகை | |
| குன்றக் கூகை | – 7–ஆம் வேற்றுமைத்தொகை | |

யானைக்கோட்டு நுனி குறைத்தான் – பன்மொழித் தொடர்.

எனவே, கடந்தான் நிலம், இருந்தான் குன்றத்து என இறுதியிலே தொகினும், நிலங்கடந்தான், குன்றத்திருந்தான் எனக் கூட்டப்படுதலால் இடையிலே தொக்கவையேயாம். மற்ற வேற்றுமைகள் இறுதியில் தொக்கு வாரா.

'ஆறுருபும்' என்னும் முற்றும்மையை எச்சவும்மையாக்கி, கைக்களிறு, பொற்குடம் என்பனபோல உருபுடனே முடிக்குஞ் சொல் தொக்கவையும் தொகைநிலைத் தொடராம் எனக் கொள்க. இவை, கையையுடைய களிறு, பொன்னாற்செய்த குடம் என விரியும். இவை உருபும் பயனும் உடன் தொக்க தொகை எனப்படும்.

## மோசசு பொன்னையா

எழுவாய் வேற்றுமைக்கும் விளி வேற்றுமைக்கும் இடைப்பட்ட இரண்டாவது முதலிய ஆறு வேற்றுமை உருபுகளும் வெளிப்படாமல் மறைந்து நிற்க அமையும் தொடர்மொழிகள் வேற்றுமைத் தொகைகளாம் எ–று.

எ–டு.

நிலங்கடந்தான் வென்றான் (ஐ) – இரண்டாம் வேற்றுமைத் தொகை

தலைவணங்கினான் செயல் (ஆல்) – மூன்றாம் வேற்றுமைத் தொகை

தாலிப்பொன் இது (கு) – நான்காம் வேற்றுமைத் தொகை

ஊர்நீங்கினான் வந்தான் (இன்) – ஐந்தாம் வேற்றுமைத் தொகை

யானைக்கோடு நன்று (அது) – ஆறாம் வேற்றுமைத் தொகை

குன்றக்கூகை இது (கண்) – ஏழாம் வேற்றுமைத் தொகை

ஈண்டு உருபு என்றது பொருள் விரித்தற்காம் சொல்லையாதலின், குன்றத்துக்கண் வாழாநின்ற கூகை இது. என இவ்வாறு வேற்றுமை உருபே யன்றிப் பிற சொற்களைப் பெய்து விரித்தலையும் கொள்க.

இவ்வாசிரியர் ஒருமொழிப்போல நடப்பன என்றதனாலும் ஆசிரியர் தொல்காப்பியர்.

**எல்லாத் தொகையு மொருசொன் னடைய,**

என விரித்துள்ளமையாலும்,

**பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்**
**வினைநிலை யுரைத்தல் வினாவிற் கேற்றல்**
**பண்புகொள வருதல் பெயர்கொள வருதலென்**
**றன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே,**

என்ற நூற்பாவினை யடுத்து,

**பெயரினாகிய தொகையுமா ருளவே**
**யவ்வு முரிய வப்பா லான,**

என இறந்தது தழீஇய எச்ச உம்மை புணர்த்தி நூற்பாவமைத்து, இவ்வாறு பெயரென நடக்கும் தொகையும் எழுவாய் வேற்றுமையாய்ப் பயனிலைகோடற்கு உரியது எனக் கூறியுள்ளமையாலும்,

**பண்புதொக வரூஉங் கிளவி யானு**
**மும்மை தொக்க பெயர்வயி னானும்**
**வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்,**

என இவ்வாறு தொகையை அசிரியர் பெயர் என ஓதியுள்ளமையாலும், இவ்வாறு வரும் தொகைமொழிகள் அனைத்தும் பெயர்நிலைப்பட்டுப் பெயரெனவே எழுவாய் வேற்றுமைப் பொருளில் நடக்கும் தன்மை எனக்கொள்க. எனவே தெய்வச்சிலையார், நிலங்கடந்தான், வாள்வெட்டினான், கொலையுடம்பட்டான், வரைபாய்ந்தான், குன்றத்திருந்தான் என இரண்டு பெயரும் ஒட்டி ஒரு

சொல்லாகிவரும்'5 என்றதோடு, 'எழுவாய்ப்பொருளில்வரும்' என்றதையும் கூட்டியுரைத்துள்ளமையே ஏற்ற விளக்கமாயிற்று என்க. கள்ளுண்டல், வாள்வெட்டு, கொலையுடம்பாடு, வரைபாய்தல், மாடத்திருப்பு என இவ்வாறு பெயரும் பெயரும் தொக்கு ஒரு மொழிநிலை யெய்துதலையுங் காண்க. தொல்காப்பியர்,

**வேற்றுமைத் தொகையே வேற்றுமை யியல**

எனக் கூறுவதால், வேற்றுமைக்கண் நிலத்தைக் கடந்தான் என்பது, கடந்தான் நிலத்தை யெனவும், குன்றத்தின்கண் இருந்தான் என்பது, இருந்தான் குன்றத்து எனவும் மொழி மாறி நிற்பதும் இயல்பே யாதலின்,2 மலையதிடை, மலையதகம் என்பன இடைமலை, அகமலை என இவ்வாறு தொகைப்பட்டு ஒட்டி ஒரு சொல்லாய் விட்டிசைத்தலின்றி அவ்வவ்வேற்றுமைப் பொருட்பட நடப்பின், அவற்றையுங் கொள்க

(12)

## 363. காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை.

**காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை.**

kālam karanṭa peyaressam viṉaiṭṭokai

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Verbal Ellipsis

A verbal Ellipsis is that in which a Relative participles is employed without its temporal (and other Verbal) inflections.

## ஒப்புமைப் பகுதி

**வினையின் தொகுதி காலத் தியலும்**

(தொல். சொல்.: 415)

**...................... ஒரு காலந்**
**தோன்றின் வினைத்தொகையாம்...........**

(நேமி.: 86 : 2–3)

**வினையின் றொகுதி காலத் தியலும்**

(இ.வி.: 338)

காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை

(மு.வீ.: 739)

தூற்று வினைத்தொகை காலத்து இயலும்..........

(சுவாமி.: 66:3)

## மயிலை நாதர்

எ – ன், வினைத் தொகையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ– ள்.: காலங்கள் தோன்றாது தன்னெச்சமான பெயர்கொண்டு நிற்கும் பெயரெச்சம் வினைத்தொகையாம், எ–று.

வ–று.:–

பொருகளிறு, பொருவேல், பொருகளம், பொருபகை, பொருபொழுது, பொருபோரென வரும்.

இவற்றுள், காலமாவது முக்காலத்தையும் தோற்றுவிக்கும் இடை நிலைகள்; அவை ஆகுபெயராய் நின்றன. இவை விரிவுழி பொருதகளிறு, பொராநின்றகளிறு, பொருங் களிறென விரியும் ; பிறவுமன்ன.

## சங்கர நமச்சிவாயர்

எ – ளின், வினைத்தொகையாமாறு உணர்–ற்று.

இ–ள்.:– காலம்பற்றிப் புடைபெயர் வினையுருபாகிய தம் இறுதிகள் தொக்கு நிற்பச் செய்வதாதி அறுபொருட் பெயராகிய தம்மெச்சங் கொண்ட பெயரெச்சங்கள் வினைத்தொகைகளாம், எ–று.

முதனிலை வினையுருபு தொகாது நிற்ப, புடைபெயர்ச்சி வினையுருபு தொக்கனவற்றை வினைத்தொகை எனப்படும் என்பார் காலங்கரந்த என ஆகுபெயரால் கூறினார். புடை பெயர்ச்சி வினைகளை முதனிலை ஒழிந்த இறுதிகள் காட்டி நிற்றலின் அவ்வினைகட்கு அவை உருபாயின.

வ–று.:–

நெருநல் அடுகளிறு, இன்று அடுகளிறு; நாளை அடுகளிறு, வேல், களம், தொழில், பொழுது, கந்து எனவரும். இவை விரியுழி நெருநல் அட்டகளிறு, இன்று அடாநின்றகளிறு, நாளை அடுங்களிறு என விரியும். இவை முறையே இறந்த கால வினைத்தொகை, நிகழ்கால வினைத்தொகை, எதிர்கால வினைத்தொகை எனப்படும். இஃது ஒவ்வொரு காலத்தையே பற்றாது முக்காலமும்பற்றி நெருநலும் அட்டகளிறு, இன்றும் அடாநின்ற களிறு, நாளையும் அடுங்களிறு என விரியவரின்

முக்கால வினைத் தொகை எனப்படும். இங்ஙனம் காலவிகற்பம்பற்றிப் புடை பெயர்வினை கருதாது அரிவாள், ஆவுரிஞ்சுதறி என்றாற்போல அடுகளிறு என்பது இத்தொழிற்கு உரியது இஃது என்னும் பொருள்பட வருமாயின், வினைத்தொகைக் குறிப்பு எனப்படும் என்க. இவ்வாறே ஏனை வினைத்தொகைகளை எல்லாம் உய்த்துணர்ந்துகொள்க. இதற்கு வருமொழி பெயராதலின் இஃது தொகைநிலையாயேதொடரும் இரண்டிறந்த மொழிகளில் என்க.

அட்டது களிறு, அடாநின்றது களிறு, அடுவது களிறு என முற்றுக்கள் இறுதிதொகுதலின் அடுகளிறு என வினைத் தொகையாயிற்று எனின்:- அடுகளிறு இது, அடுகளிறு வந்தது எனப் பின்னும் ஓர் பெயர் வினைகளை ஏற்றலின் அவையன்று எனவும் அடு என்னும் முதனிலை வினையாகிய காரணத்தின்கண் முக்கால வினையாகிய காரியங்கள் தொக்கு நிற்றலின் அடுகளிறு என வினைத் தொகையாயிற்று எனின் காரணத்தின்கண் காரியம் தொக்கு நிற்றற்குக் களிறு என்னும் முடிக்குஞ் சொல் வேண்டாமையின் அஃது ஒருமொழி இலக்கணம் அன்றி இங்ஙனம் அதிகரித்த தொடர்மொழி இலக்கணம் அன்மையின் அஃது அன்று எனவும் விலக்கிப் பெயரெச்சத்து இறுதி தொக்கது வினைத்தொகை என்றார்.

## கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், வினைத் தொகைநிலைத் தொடர்மொழியாமாறு கூறுகின்றது.

இ-ள்.:- காலங் கரந்த பெயரெச்சம் - முக்காலமும் தோன்றாது தன்னெச்சமான பெயர் கொண்டு நிற்கும் பெயரெச்சம், **வினைத்தொகை** - வினைத் தொகைநிலைத் தொடர் மொழியாம், எ-று.

உ-ம்.:-

பொருகளிறு, பொருவேல், பொருகளம், பொருபடை, பொருபொழுது, பொருபோர் என வரும்.

இவை விரிவுழி பொருதகளம், பொராநின்றகளம், பொருங் களம் என விரியும். இவ்வகையே அரிவாள், கொல்யானை, இறைகூடை, பற்றிரும்பு, பிடிவாள், தாழ்குழல் எனவும் வரும்; காண்க.

## விசாகப்பெருமாளையர்

இது, வினைத்தொகையாமாறு உணர்த்துகின்றது;

இ-ள்.:- காலம் - காலம் பற்றிப் புடைபெயர்கிற வினையுருபுகள், கரந்த

– தொக்க, பெயரெச்சம் – பெயரெச்சவினைகள், வினைத்தொகை – வினைத்தொகைகளாம், எ–று.

(காலம் ஆகுபெயர் காலம்பற்றிப் புடைபெயர், வினையுருபுகள் தொகுமெனவே முதனிலைமாத்திரந் தொகாதிருக்கு மென்பது பெற்றாம்.)

நேற்றுக்கொல்களிறு, முன்விடுகணை, இறந்தகால வினைத்தொகை, இன்றுகொல்களிறு, இப்போதுவிடுகணை, நிகழ்காலவினைத் தொகை, நாளைக்கொல்களிறு, பின்விடுகணை, எதிர்காலவினைத்தொகை.

இவை முறையே கொன்ற, கொல்கிற, கொல்லும், என விரியும், இது முக்காலமும் பற்றிவரின் முக்காலவினைத்தொகை யெனப்படும், வருவழி, நடந்திடுகுதிரை, எனச் சில வினைத்தொகை முதனிலை திரிந்தும் வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

வினைத்தொகை யிதுவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை.

(காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை.)

இ–ள்.: காலங்காட்டும் இடைநிலையும் ஈறும் குறைந்து வினைமுதன்மாத்திரம் நின்று தொடர்ந்த பெயரெச்சத்தொடர் வினைத்தொகையாம், எ–று.

வினைத்தொகைக்கும் பெயரெச்சத்திற்கும் தம்முள் வேற்றுமை யாது?

காலமும் வினையுந் தோன்றிப் பால் தோன்றாது பெயர்கொள்ளுஞ்சொல் பெயரெச்சம். வினைச்சொற்கும் வினைப்பெயர்க்கும் முதனிலையாய் உண் தின் செல் என வினைமாத்திரமுணர்த்தி முக்காலத்திற்கும் பொதுமையுடைய வாய்ப் பெயர்கொள்ளுஞ் சொல் வினைத்தொகையாம். இதுவே தம்முள் வேற்றுமையாம்.

அற்றேல் வினைத்தொகையைப் பெயரெச்சமெனல் கூடாதோ?

வினைத்தொகை விரிக்கப்படுமிடத்துப் பெயரெச்சப் பொருளவாய் வருவனவே யன்றி அவைதாம் பெயரெச்சமாகாமையின் அவற்றைப் பெயரெச்சம் எனல் கூடாது. அதுபற்றயே "காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை" யெனப்பட்டதாமென்க.

காலமென்றது ஆகுபெயர். இடைநிலை முதலியன தொகுமெனவே, முதனிலைமாத்திரந் தொகாதிருக்குமென்பது பெற்றாம்.

வ–று.:–

ஆடரங்கு, செய்குன்று, புணர்பொழுது, அரிவாள், கொல்யானை, செல்செலவு என வரும்.

இவை நேற்று ஆடரங்கு இன்று ஆடரங்கு நாளை ஆடரங்கு என முக்காலத்தின் கண்ணுஞ் செல்லும் பொதுமையுடையன. இவை தொகைக்கணன்றிப் பிரித்தவழித் தனித்துநின்று காலமுணர்த்தாவாம்.

இவை, ஆடிய, ஆடுகின்ற, ஆடும் எனவும், செய்த, செய்கின்ற, செய்யும் எனவும், பொருள் விரிக்கப்படும்.

வருபுனல், தருசுடர், நடந்திடுகுதிரை என வினைப்பகுதி விகாரப்பட்டும் வினைத்தொகை வரும்.

## முகவை இராமானுச கவிராயர்

இது, வினைத்தொகை யாமாறுணர்த்திற்று.

**இ—ள்.:-** காலம்பற்றிப் புடைபெயரும் வினையுருபாகிய தம் இறுதிகள் தொக்கு நிற்கச் செய்வதாதி அறுபொருட் பெயராகிய தம்மெச்சங்களைக் கொண்டு முடிந்த பெயரெச்சங்கள் வினைத்தொகைகளாம், எ—று.

காலங்காட்டும் வினையிறுதிகளைக் காலமென்றது ஆகுபெயர், முதனிலை தொகாது நிற்கப் புடை பெயர்ச்சி வினையிறுதிகள் தொக்குப் பெயரோடு முடிந்தனவற்றை வினைத்தொகையென்று சொல்ல வந்தவர், 'காலங்கரந்த பெயரெச்ச'மென்றார். (புடைபெயர்ச்சி – வினை முதலின் அசைவு)

"வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலை காலமொடு தோன்றிப்
பொருட்புடை பெயர்ச்சி புலப்படுப் பதுவே"

என்னுமிச் சூத்திரத்தாலு, (புடைபெயர்ச்சி வினைகளை முதனிலை யொழிந்த இறுதிகள் காட்டி நிற்றலால், அவ்வினைகளுக்கு அவை உருபுகளாயின.

வ—று.:-

நெருநலடுகளிறு, இன்றுஅடுகளிறு – நாளை அடுகளிறு (செய்பவன்) அடுவேல் (கருவி) அடுகளம் (நிலம்) அடுதொழில் (செயல்) அடுபொழுது – (காலம்) அடுகந்து – (செய்பொருள்) எனவரும். இவை விரியுங்கால், நெருநல் அட்டகளிறு இன்று அடுகின்றகளிறு, நாளை அடுங்களிறு என விரியும். இவை முறையே இறந்தகால வினைத்தொகையும் நிகழ்கால வினைத்தொகையும் எதிர்கால வினைத்தொகையும் எனப்படும். இது ஒவ்வொரு காலத்தைப் பற்றியும் முக்காலமும் பற்றியும் வரும். அவை வருமாறு:- அடைகடல், தோய்தயிர், விரிமலர், குவிபூ, செய்நன்றி என்பன அடைந்தகடல், தோய்ந்ததயிர், விரிந்தமலர், குவிந்தபூ, செய்தநன்றி என ஒருகாலத்தையே

யடக்கி நிற்றலால் இவைபோல்வன இறந்தகால வினைத்தொகை யெனப்படும். ஓடுநீர், பெய்மழை, ஒழுகு நீரரல் பார்க்குங் குருகுமுண்டு, ஆடுபாம்பெனப் புடையகன்ற வல்குலாள் என்பன. ஓடாநின்றநீர், பெய்யாநின்றமழை, ஒழுகாநின்றநீர், ஆடாநின்ற பாம்பு எனவருமொரு காலத்தையே தம் முளடக்கி நிற்றலால் இவைபோல்வன நிகழ்கால வினைத்தொகை யெனப்படும். உண்பண்டம், தின்பண்டம், கொள்பொருள், அழிபொருள் என்பன உண்ணும்பண்டம், தின்னும்பண்டம், கொள்ளும்பொருள், அழியும்பொருள் என வருதலால் இவைபோல்வன எதிர்கால வினைத்தொகை. உழுபடை, இறைகூடை, மிதிமரம், கொல்புலி, அரிவாள் என்பன பண்டும் உழுதபடை, இன்றும் உழாநின்றபடை, நாளையும் உழும்படை என வருதலால் இவைபோல்வன முக்கால வினைத்தொகை யெனப்படும். இவ்வாறே ஒழிந்தனவற்றையும் ஆராய்ந் தமைத்துக் கொள்க. இதற்கு வருமொழி பெயராதலால் இத்தொகை நிலையாகவே தொடர்ந்து வருமிரண்டிறந்த பன்மொழித் தொடர் இலவென்க.

அட்டதுகளிறு, அடாநின்ற களிறு, அடுவதுகளிறு எனவரும் வினைமுற்றுக்கள் இறுதி தொகுதலால் அடுகளிறு என வினைத்தொகையாயிற் றெனின், அடுகளிறு இது, அடுகளிறு வந்தது எனப் பின்னுமோர் பெயர்வினைகளைக் கொள்ளு தலால் அவை அன்றெனவும், அடுவென்னும் முதனிலை வினையாகிய காரணத்தின்கண் முக்கால வினையாகிய காரியங்கள் தொக்கு நிற்றலால், அடுகளிறு என வினைத்தொகையாயிற் றெனின் காரணத்திற் காரியந் தொக்கு நிற்பதற்குக் களிறு என்னும் முடிக்குஞ்சொல் வேண்டா மையால் அது ஒரு மொழியிலக்கணமே யன்றி இங்கே யெடுத்துக் கொண்ட தொடர்மொழி யிலக்கணமன்று; ஆதலால், அதுவும் அன்றென விலக்கிப் பெயரெச்சத்திறுதி தொக்கதே வினைத் தொகையென்றார். 'வினையின் றொகுதி காலத் தியலும்' எனப் பெயரெச்சத்து ஈறு தொக்கு மூன்று காலத்தும் நிகழ்வது வினைத்தொகை யென்று ஆசிரியர் தொல்காப்பியனாரு மிவ்வாறு கூறுதல் காண்க.

## கா. கோபாலாசாரியர்
## தி.கோ. ரங்காசாரியர்

**உரை** :– **காலம்**– காலத்தைக் காட்டும் வினையுருபாகிய இடைநிலையும் விகுதியும் முதலியன, **கரந்த** – மறைந்துநின்ற, **பெயரெச்சம்** –பெயரெச்சச் சொற்கள், **வினைத்தொகை**– வினைத்தொகைகளாம்.

குறிப்பு :-

காலங் காட்டுவனவற்றைக் 'காலம்' என்றது கருவியாகு பெயர், இதனால், பெபரெச்சவினையின் உருபாகிய விகுதியும் இடைநிலையும் முதலியன தொக்குநிற்கப் பகுதி மாத்திரையாய் நின்று முக்காலத்துக்கும் பொதுவாய்ப் பெயரெச்சப் பொருளை உணர்த்திப் பெயர்கொண்டு முடிவது *வினைத்தொகை* என்றதாயிற்று.

**உ-ம் :-** தோய்தயிர், பெய்மழை, அழிபொருள், உழுபடை.

இவை முன்னும் பின்னும் வருகின்ற சொற்களின் குறிப்பால் 'நேற்றுத் தோய்ந்த தயிர்'; 'இன்று பெய்கிற மழை'; 'நாளை அழியும் பொருள்'; 'நேற்று உழுத'; 'இன்று உழுகின்ற', 'நாளை உழும்' படை என ஒரு காலம் பற்றியும், முக்காலம்பற்றியும் விரியும்.

'வருவழி', 'தருபுனல்', 'அலமருகுதிரை', 'நடந்திடுபிள்ளை' எனச் சில வினைத்தொகை பகுதி விகாரப்பட்டும் வரும். கா, மோ, சா முதலிய சில பகுதிகள் வினைத்தொகையாய் வாரா.

## ஆறுமுக நாவலர்

**இ-ள்.:** காலம் கரந்த பெயரெச்சம் - காலம் பற்றிப் புடை பெயரும் வினையுருபாகிய தம்மிறுதிகள் தொக்க பெயரெச்சவினைகள், **வினைத்தொகை** - வினைத்தொகைகளாம், எ-று.

காலமென்றது ஆகுபெயர். காலம்பற்றிப் புடைபெயர் வினை யுருபுகள் தொகுமெனவே, முதனிலை மாத்திரந் தொகாதிருக்கு மென்பது பெற்றாம்.

வ-று.:

நேற்றுக் கொல்களிறு, முன் விடு கணை - இறந்தகால வினைத் தொகை.

இன்று கொல்களிறு, இப்பொழுது விடுகணை - நிகழ்கால வினைத்தொகை.

நாளைக் கொல்களிறு, பின் விடு கணை - எதிர்கால வினைத்தொகை.

இவை விரியுமிடத்துக், கொன்ற, கொல்கின்ற, கொல்லும் எனவும், விட்ட, விடுகின்ற, விடும் எனவும், விரியுமெனக் கொள்க.

கொல்களிறு, விடுகணை என்றாற்போல்வன, முக்காலமும் பற்றிவரின், முக்கால வினைத்தொகை எனப்படும்.

வருபுனல், தருசுடர், நடந்திடுகுதிரை என வினைப்பகுதி விகாரப்பட்டும் வினைத்தொகை வரும்.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். காலம் கரந்த பெயரெச்சம்** – காலம் பற்றிப் புடைபெயரும் வினையுருபாகிய தம்மிறுதிகள் தொக்க பெயரெச்சவினைகள், – **வினைத்தொகை** – வினைத்தொகைகளாம். எ – று.

காலமென்றது ஆகுபெயர். காலம் பற்றிப் புடைபெயர் வினையுருபுகள் தொகுமெனவே, முதனிலை மாத்திரந் தொகாதிருக்குமென்பது பெற்றாம்.

(வரலாறு)

| | |
|---|---|
| நேற்றுக் கொல் களிறு<br>முன் விடு கணை | இறந்தகால வினைத்தொகை |
| இன்று கொல் களிறு<br>இப்பொழுது விடு கணை | நிகழ்கால வினைத்தொகை |
| நாளைக் கொல் களிறு<br>பின் விடு கணை | எதிர்கால வினைத்தொகை |

இவை, விரியுமிடத்துக், கொன்ற கொல்கின்ற, கொல்லும். எனவும். விட்ட, விடுகின்ற, விடும். எனவும். முறையே விரியுமெனக் கொள்க.

உழுபடை, இறைகூடை, மிதிமரம், அரிவாள் என்பன முக்கால வினைத்தொகை.

கொல் களிறு, விடு கணை என்றாற்போல்வனவும் முக்காலமும் பற்றிவரின், முக்கால வினைத்தொகை எனப்படும்.

வருபுனல், தருசுடர், நடந்திடுகுதிரை என வினைப்பகுதி விகாரப்பட்டும் வினைத்தொகை வரும்.

வினைத்தொகைக்கு நிலைமொழிவினையும் வருமொழி பெயருமாதலால், இவ்வினைத்தொகையாகவே அடுத்து இரண்டிறந்த பன்மொழித்தொடர் வருதலில்லையென்றுணர்க.

சிலபெயரெச்சவினைகளின் பகுதிமாத்திரம் அப்பெயரெச்ச வினைகள் கொண்டு முடியும் பெயர்களோடு மருவி யொருசொன்னீர்மைப்பட்டு வருவன வினைத்தொகையென்றறிக. கொல்களிறு, அடுபுலி, பாய்மா என்பனபோலொரு சொன்னீர்மைப்பட்டன வினைத்தொகை யாமன்றி, நடகளிறு, போகுதிரை என ஒரு சொன்னீர்மைப் படாதன வினைத்தொகையாக வரமாட்டாவென்றறிக.

(சூத்திரம்) "வினையின்றொகுதி காலத்தியலும்" எனப்

பொதுப்பெயரெச்சத்து ஈறுதொக்கு மூன்று காலத்தும்
நிகழ்வது வினைத்தொகை யென்று, ஆசிரியர்
தொல்காப்பியனாரு மிவ்வாறு கூறுதல் காண்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– காலம் – காலங்காட்டும் வினையுருபாகிய இடைநிலையும் விகுதியும் முதலியன, கரந்த – மறைந்துநின்ற, பெயரெச்சம் – பெயரெச்சங்கள், *வினைத்தொகை – வினைத் தொகைகளாம்;* எ–று.

எனவே, பெயரெச்சவினையின் உருபாகிய விகுதியும் இடைநிலையும் முதலியன தொக்கு நிற்கப் பகுதி மாத்திரமாய் நின்று முக்காலத்துக்கும் பொதுவாய்ப் பெயரெச்சப்பொருளை உணர்த்திப் பெயர்கொண்டு முடிவது வினைத்தொகை யென்றபடி.

காலங் காட்டுவனவற்றை 'காலம்' என்றது, காரியவாகுபெயர்.

உ–ம்.:–

தோய்தயிர், பெய்ம்மழை, அழிபொருள், உழுபடை.

இவை – முன்னும் பின்னும் வருகின்ற சொற்களின் குறிப்பால், நேற்றுத் தோய்ந்த தயிர், இன்று பெய்கிற மழை, நாளை அழியும் பொருள், முக்காலத்தும் உழுத உழுகிற உழும் படை என ஒரு காலம் பற்றியும் முக்காலம் பற்றியும் விரியும்.

வருவழி, தருபொருள், அலமருநெஞ்சம் எனச் சில வினைத்தொகை பகுதி விகாரப்பட்டும் வரும். சில பகுதிகள், வினைத்தொகையாக வாரா.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– காலம் – காலம் பற்றிப் புடைபெயரும் வினையுருபாகிய தம் மிறுதிகள், கரந்த – தொக்க, பெயரெச்சம் – பெயரெச்சவினைகள், வினைத்தொகை – வினைத்தொகைகளாம். எ–று.

காலங்காட்டும் வினையிறுதிகளைக் காலமென்றது ஆகுபெயர். காலம் பற்றிப் புடைபெயர் வினையுருபுகள் தொகுமெனவே, முதனிலைமாத்திரந் தொகாதிருக்குமென்பது பெற்றாம். புடைபெயர்தல் – அசைதல்.

(உ–ம்.) (நேற்றுக்) *கொல் களிறு*

(முன்) *விடு கணை* இறந்தகால வினைத்தொகை

(இன்று) கொல் களிறு

(இப்பொழுது) விடு கணை நிகழ்கால வினைத்தொகை

(நாளைக்)கொல் களிறு

(பின்) விடு கணை எதிர்கால வினைத்தொகை

இவை விரியுமிடத்துக் கொன்ற கொல்கின்ற கொல்லும் எனவும், விட்ட விடுகின்ற விடும் எனவும் விரியுமெனக் கொள்க.

கொல்களிறு விடுகணை என்றாற்போல்வன, முக்காலமும் பற்றிவரின், முக்காலவினைத்தொகை எனப்படும். இங்ஙனமன்றி 'அரிவாள்' 'ஆவுரிஞ்சுதறி' என்றாற்போலக் 'கொல்களிறு' 'விடுகணை' என்பன இத்தொழிற்குரியது இது என்னும் பொருள் பட வருமாயின் வினைத்தொகைக் குறிப்பெனப்படும்.

வருபுனல், தருசுடர், நடந்திடுகுதிரை என வினைப்பகுதி விகாரப்பட்டும் வினைத்தொகை வரும்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) காலம் கரந்த – காலம்பற்றிப் புடை பெயர்கிற வினையுருபுகள் தொக்க, பெயரெச்சம் – பெயரெச்ச வினைகள், வினைத்தொகை – வினைத் தொகைகளாம். (எ–று)

(பொ–ரை.) காலம் பற்றிப் புடை பெயர்ச்சி வினையுருபாகிய தம்மிறுதிகள் தொக்கு நிற்பச், செய்வதாதி அறுபொருட் பெயராகிய தம் எச்சங்கொண்ட பெயரெச்ங்கள் வினைத் தொகைகள் ஆம்.

எனவே, பெயரெச்ச வினையின் உருபாகிய விகுதியும் இடை நிலையும் முதலியன தொக்குநிற்கப் பகுதி மாத்திரமாய் நின்று முக்காலத்துக்கும் பொதுவாய்ப் பெயரெச்சப் பொருளை யுணர்த்திப் பெயர்கொண்டு முடிவது வினைத்தொகை யென்றபடி காலம் – ஆகு பெயர்; அது புடையெர்ச்சி வினையுருபுகள்மேல் நிற்றலான் (காரியவாகு பெயர்). புடை பெயர்ச்சி வினையுருபுகள் – முதனிலை யொழிந்தனவற்றை. காலம்பற்றிப் புடைபெயர் வினையுருபுகள் தொகுமெனவே முதனிலை மாத்திரம் தொகாதிருக்கு மென்பது பெற்றாம்.

(உ–ம்.)

நேற்றுக் கொல்களிறு

முன் விடுகணை இறந்தகால வினைத்தொகை.

இன்று கொல்களிறு

இப்போது விடுகணை நிகழ்கால வினைத்தொகை

நாளைக் கொல்களிறு

பின் விடுகணை எதிர்கால வினைத்தொகை.

இவை முறையே கொன்ற, கொல்கின்ற, கொல்லும் எனவும்,விட்ட, விடுகின்ற, விடும் எனவும் விரியும். இவை முக்காலம் பற்றி வரின் முக்கால் வினைத்தொகை எனப்படும்.

வருவழி, தருபுனல், நடந்திடு குதிரை எனச் சில வினைத் தொகை முதனிலை திரிந்தும் வரும்; சில பகுதிகள் வினைத்தொகை யாக வாரா.

## கா. நமச்சிவாய முதலியார்

காலம் கரந்த – வினை யுருபுகள் தொக்க, பெயரெச்சம் – பெயரெச்ச வினைகள், வினைத்தொகை – வினைத்தொகைகளாம்.

காலம் – ஆகுபெயர்.

உதாரணம்

நேற்றுக் கொல்களிறு – இறந்தகால வினைத்தொகை
இன்று கொல்களிறு – நிகழ்கால வினைத்தொகை
நாளைக் கொல்களிறு – எதிர்கால வினைத்தொகை.

இவை முறையே கொன்ற, கொல்கின்ற, கொல்லும் எனவும், வினை முக்காலமும் பற்றிவரின் முக்கால வினைத்தொகை எனப்படும்.

வருவழி, தருபுனல், நடந்திடுகுதிரை எனச் சில வினைத்தொகை முதனிலை திரிந்தும் வரும்.

## மோசசு பொன்னையா

காலம் உணர்த்தும் புடைபெயர்ச்சி வினையுருபுகளாகிய தத்தம் இறுதிகள் தொக்கு நிற்பப் பெயரைக் கொண்டு முடிந்து நிற்கும் பெயரெச்சத் தொடரே வினைத் தொகையாம் எ–று.

காலம் என்றது புடைபெயர்ச்சி வினையுருபுகளையும், பெயரெச்சம் என்றது பெயரெச்சத் தொடரையும் எனக் கொள்க. இவை ஆகு பெயர்கள்.

தொல்காப்பியர்

**வினையின் றொகுதி காலத் தியலும்,**

என விளக்கந்தந்தார். இதன் கண் வரும் வினையின் தொகுதி என்றதற்கு, 'வினைச்சொல் தொகுங்கால்' என இளம்பூரணரும், 'வினைத்தொகை' எனச் சேனாவரையரும், 'வினைச் சொல்லினது ஈறாய்த் தொக்கு நிற்கும் எழுத்துக்கள்' என நச்சினார்க்கினியரும் பொருள் கண்டனர். அவ்வாறே காலத்தியலும் என்றதற்கு முறையே மூவரும் 'காலந் தோன்றத் தொகும்' எனவும், 'காலத்தின் கண் நிகழும்' எனவும், கலத்தின் கண்ணே தொக்குநிற்கும்' எனவும் பொருள் கூறினார்.

தெய்வச்சிலையார், 'வினையின் தொகுதி காலச்சொல்லோடே நடக்கும்' எனப் பொருளெழுதி, 'வினைச்சொல்லாவது தொழிலுங் காலமும் பாலும் உணர்த்தலின், பாலுணர்த்துஞ் சொல் முற்றுச் சொல்லாகிநின்று தொகை நிலையாகாமை யானும், பால் காட்டாத வினையெச்சம், பெயரெச்சம் என்னும் இரண்டினுள்ளும் வினையெச்சம் முற்று வினைச்சொல்லோடல்லது முடியாமை யானும், ஈண்டுத் தொகுவதும் விரிவதும் பெயரெச்சம் என்று கொள்க. அது தொகுங் காலத்துக் காலப் பொருளை யுணர்த்துஞ் சொல்லே தொகுவதும் விரிவதும் என்று கொள்க. தொழிலும் பொருளும் விட்டிசைத்து நில்லாது ஒற்றுமைப்பட்டதனை வினைத்தொகை யென்றார். கொல்லும்யானை, கொன்றயானை, உண்ணுநீர், உண்டநீர், அரியும் வாள், அரிந்தவாள், செல்லும்இடம், சென்ற இடம், உண்ணும்பொழுது உண்டபொழுது, கொல்லுங்கொலை, கொன்ற கொலை என்பன கொல்யானை உண்ணீர், அரிவாள், செல்லிடம், உண்பொழுது, கொல்கொலை எனத்தொகும்' என விளக்கம் எழுதியுள்ளார். தெய்வச்சிலையார்இவ்வாறு எதிர்வு, இறப்பு என்னும் இரண்டு காலப் பெயரெச்சங்களின் காலப்பொருளையுணர்த்தும் சொல்லே தொகுவதும், விரிவதும் என்றாராக, இளம்பூரணர், 'கொல்யானை என்பது கொன்ற யானை... கொல்லா நின்ற யானை... கொல்லும் யானை என மூன்று காலத்திற்கும் அதுவே வாய்பாடு' என்றார். நச்சினார்க்கினியரும் இளம்பூரணர் கருத்தினரே. இவ்வாசிரியர் கருத்தும் அதுவேயாகும் என்பது காலங் கரந்த பெயரெச்சம் என்றதனாற் போதரும்.

தொல்காப்பியர், வழக்கிடத்து மருவி நடக்கும் இயல்புடையனவும், பிரிவில் ஒட்டாக வழங்கி வருவனவுமான சிலவற்றை,

**உயிரும் புள்ளியும் இறுதியாகிக்**

**குறிப்பினும் பண்பினும் இசையினுந் தோன்றி**

நெறிப்பட வாராக் குறைச் சொற் கிளவியும்
உயர்திணை அஃறிணை ஆயிரு மருங்கின்
ஐம்பாலறியும் பண்புதொகு மொழியும்
செய்யும் செய்த வென்னுங் கிளவியும்
மெய்யொருங் கியலும் தொழில்தொகு மொழியும்
தம்மியல் கிளப்பின் தம்முன் தாம்வரூஉம்
எண்ணின் தொகுதி உளப்படப் பிறவும்
அன்னவை யெல்லாம் மருவின் பாத்திய
புணரியல் நிலையிடை உணரத் தோன்றா,

என எடுத்துக் கூறியுள்ளார். அவற்றுள் பண்புத்தொகை வினைத்தொகை, உம்மைத்தொகை ஆயனவும் இடம்பெற்றுள்ளன. அதனால், வினைத்தொகை கால முணர்த்துங்கால், பெயரெச்சப் பொருளதாய்ச் செய்யும், செய்த என்னும் ஈரெச்சப் பொருளையும் உணர்த்தும் என்பதும், அது கால முணர்த்துவதும் நிலப்பெயர் முதலிய பெயர்களோடு தொக்க வழி, தொகையாற்றலால் உண்டாகும் ஒன்றேயாகும் என்பதும் போதரும். 'வினையின் றொகுதி காலத்தியலும்2 மெய்யொருங்கியலும் தொழில் தொகு மொழி' என்ற தொல்காப்பியர் கருத்தும் அதுவேயாகும். சேனாவரையர் வினைத்தொகைக்கு முதனிலையாக வரும் வினை, தொழிற்பெயராம் என்றும், தொகையாற்றலாற் காலம் பெற்றவழியே பெயரெச்சப்பொருள் பெறுகிறதென்றுங் கருதுகிறார்.

இஃது இவ்வாறாக, உள்ளது கரந்து தொகைப்பட்டு நிற்பதை எடுத்துரைப்பது போல் இவ்வாசிரியர், 'காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை' என்றார். பெயரெச்சம் எங்ஙனம் வினைத்தொகையாகும்? பெயரெச்சத் தொடராயின் அத்தனைத் தொகை எனல் எங்ஙனம் பொருந்தும்? நச்சினார்க்கினியர், 'இவ்வாசிரியர் (தொல்காப்பியர்) புணர்க்கப்படா வென்ற இச்சொற்களையும், வடநூற்கண் முடித்த அனகன், அனபாயன், அகளங்கன் முதலிய வடசொற்களையும் பின்னுள்ளோர் முடத்தல் முதனூலோடு மாறுகொளக் கூறலாம்' என உரைத்ததை ஏற்று நிற்பதே ஈண்டு அமையும் என்க.

(13)

**364.** **பண்பை விளக்கு மொழிதொக் கனவும்**
**ஒருபொருட் கிருபெயர் வந்தவுங் குணத்தொகை.**

பண்பை விளக்கு மொழி தொக்கனவும்
ஒரு பொருட்கு இரு பெயர் வந்தவும் குணத்தொகை.

paṇpu ai viḻakkum moḻi tokkaṉa um
oru poruḷ ku iru peyar vanta um kuṇattokai

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Adjectival Ellipsis

An 'Adjectival Ellipsis' is that in which words descriptive of quality are understood, as well as that in which two Nouns come together signifying the same thing.

## ஒப்புமைப் பகுதி

வண்ணத்தின் வடிவின் அளவின் சுவையினென்று
அன்ன பிறவும் அதன் குணம் நுதலி
இன்னது இதுவென வரூஉம் இயற்கை
என்ன கிளவியும் பண்பின் தொகையே

(தொல். சொல்.: 416)

.............. பண்புமிரு பேரொட்டுந்
தோன்றுமேற் பண்புத் தொகை

(நேமி.: 86 : 3–4)

வண்ணத்தின் வடிவி னளவிற் சுவையினென்
றன்ன பிறவு மதன்குண நுதலி
யின்ன திதுவென வரூஉ மியற்கை
யென்ன கிளவியும் பண்பின் றொகையே

(இ.வி.: 339)

வண்ணஞ் சுவையே வடிவே யளவே
என்பவும் பிறவு மிதன்குண நுதலி
வரூஉ மியற்கை பண்பின் றொகையே

(மு.வீ.: 740)

.............. ஐந்தாம் பண்புத்
தொகை இன்னது இதுவென விசேடம் ஒன்றிற் காட்டும்

(சுவாமி.: 66:3)

எ – ன், பண்புத்தொகையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: பொருளின்கட் கிடந்த குணத்தைக் காட்டுவதற்கு ஆண்டு வருமொழி தொக்கனவும், ஒருபொருட்கு உரிய இருபெயர் ஒருங்கு வந்தவும் பண்புத்தொகையாம், எ–று.

வருமொழி, ஐகார முதலியன.

வ–று.:–

கருஞ்சாத்தன், தண்ணீர், நறுமலர், தீம்பால், குறுங்கொற்றன் ; வட்டக்கடல், உள்பொருள், இல்குணம் எனவும், "கேழற்பன்றி" (புறநா. 152), "வேழக்கரும்பு", அளகைநகர், ஆனித்திங்கள், "அகர முதல்" (குறள். 1), "சகரக்கிளவி" (தொல். மொழி. 29) எனவும் வரும். இவை விரிவுழி, கருங்சாத்தனென்பது, கரியசாத்தனென இருதிணை யைம்பாற்கும் பொதுவாகிய பெயரெச்சக் குறிப்பு வாய் பாட்டான் விரியும். இவ்வாறன்றிக் கரியதெனின், அஃறிணை யொருமைக்கே யுரிய முற்றாய்த் தொகாநிலையா மென்க. இனி, பண்பாவது, பொருட்குணமாதலின், அப்பொருட்கு உரிமை தோன்றக் கருமையையுடைய சாத்த னென்பாருமுளர். அவையும் அறிந்துகொள்க. இனி, ஏனையவற்றை விரிக்கு மிடத்து, தண்ணிய நீர், நறியமலர், தீவியபால், குறியகொற்றன்; வட்டமாயகடல், உள்ள பொருள், இல்லாக் குணம் எனவும், கேழலான பன்றி, வேழமான கரும்பு, அளகையானநகர், ஆனியான திங்கள், அகரமான முதல், சகரமான கிளவி எனவும் விரியும். கேழற்பன்றி முதலானவும் சாதி தொக்க பண்புடைமை யின், ஈண்டு வேண்டினாரென்க. ஒத்த பண்புபற்றி ஒற்றுமை குறித்து வரும் கைத் தாமரை, கண்வேல், புருவச்சிலை என்றித் தொடக்கத்தனவும் ஈண்டே கொள்க.

பண்புக்குத் தொக்கு நின்றது கருமை யென்ற ஐகாரம். இனி, தொல்காப்பியனார்க்குக் கரியனென்ற அன்னீறு தொக்கு நிற்பதென்றறிக.

## சங்கர நமச்சிவாயர்

எ – னின், பண்புத்தொகையாமாறு உணர்–ற்று.

இ–ள்.: குணப்பெயரோடு குணிப்பெயர் புணருங்கால் அக்குணியோடு குணத்துக்கு உண்டாகிய ஒற்றுமை நயத்தை விளக்குதற்கு ஆண்டுவரும் ஆகிய என்னும் மொழியாகிய பண்பு உருபு தொக்குநிற்பனவும், அப்பண்புருபு

தொக்குநிற்பப் பொதுப்பெயரும் சிறப்புப் பெயருமாய் ஒரு பொருட்கு இப்பெயர் வந்தனவுமாகிய இவ்விரண்டும் பண்புத்தொகைகளாம், எ–று.

குணத்தொகை என்றமையான் ஒரு பொருட்கு இருபெயர் வந்தனவற்றின்கண்ணும் பண்புருபு தொகும் என்பது பெற்றாம்.

வ–று.:–

செந்தாமரை, கருங்குவளை, வட்டக்கல், சதுரப் பலகை, ஒருபொருள், இருபொருள், தீங்கனி, துவர்க்காய் எனவும்; ஆயன்சாத்தன் [1]"வேழக் கரும்பு" [2]"அகரமுதல" [3]"சகரக் கிளவி" எனவும்; செந்நிறக் குவளை, [4]"கரும்புருவச் சிலை" எனவும் வரும். இவை விரியுழிச் செம்மையாகிய தாமரை, ஆயனாகிய சாத்தன், செம்மையாகிய நிறமாகிய குவளை என விரியும். இவ் ஆகிய என்னும் உருபின்கண் ஆக்கவினை இன்மையின் இலக்கணையால் செய்த என்னும் வாய்பாட்டின் பாற் படுவதோர் வினையிடைச்சொல். ஆயன் என்னும் பொதுப்பெயர் சாத்தன் என்னும் சிறப்புப்பெயரை விசேடித்தும் வேழம் என்னும் சிறப்புப்பெயர் கரும்பு என்னும் பொதுப் பெயரை விசேடித்தும் வந்தன. பிறவும் அன்ன.

முற்று எச்சமாகிய காலத்து முற்றுப்பொருளை ஒழித்து எச்சப்பொருளை உணர்த்தி நின்றாற்போல, ஆயன் வேழம் என்றற்றொடக்கத்து நிலைமொழிகள் பண்பிச் சொல்லாயினும் அப்பண்பிகளை ஒழித்துப் பொதுப்பண்பினை யும் சிறப்புப்பண்பினையும் உணர்த்தி வருமொழிக்கு அடையாய் நிற்றலின் அவையும் பண்புத்தொகையாயின.

ஆகிய என்பது அன்று; பண்பை விளக்கும்மொழி என்பது மைவிகுதி என்றால் என்னையெனின்:– ஒரு மொழிக்கு உறுப்பாகிய விகுதியை மொழியென்றல் கூடாமையானும், வட்டம் சதுரம் முதலிய பண்பிற்கு அவ்விகுதியின்மையானும், வட்டக்கல் என்புழி மகர ஈறு கெட்டுப் புணர்ந்தாற்போல மையீறு கெட்டுப் புணர்ந்தது என்பது 'ஈறு போதல்' (136) என்னும் சூத்திரத்தால் பெறுதலானும் அஃது அன்றென்க.

செய்யதாமரை என்னும் எச்ச இறுதி தொக்கது இத்தொகை என்பாரும், செய்யது தாமரை என்னும் முற்று இறுதி தொக்கது இத்தொகை என்பாரும் உளர். இவையும் மொழி அன்மையானும், வட்டக்கல் முதலிய பண்புத்தொகைக்கு அவ்வெச்ச இறுதி விரித்தல் கூடாமையானும், அவ்வெச்ச இறுதி தொக்கதேல் அதனை வினைத்தொகைக் குறிப்பு என்றல் கூடுமன்றிப் பண்புத்தொகை என்றல் கூடாமையானும், முற்று இறுதி தொக்கதேல் பண்புத்தொகை என்றல்

கூடாமையேயன்றிச் செந்தாமரை விரிந்தது என மேல் பெயர் வினை ஏற்றல் கூடாமையானும் அது பொருந்தாது என்க.

இனிக் குணியோடு குணத்துக்கு உண்டாகிய ஒற்றுமை நயம் கருதாது ஒருபொருளைக் குணகுணியாகப் பிரித்து அவ்வேற்றுமைநயம் கருதிச் செம்மையையுடைய தாமரை என விரிக்கின் இரண்டாம் வேற்றுமையுருபும் பொருளும் உடன் தொக்க தொகையாம் என்க. பிறவும் அன்ன.

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், முறையே பண்புத் தொகைநிலைத் தொடர்மொழி ஆமாறு கூறுகின்றது.

இது, நிறுத்தமுறையே வேற்றுமைத்தொகையாமாறுணர்த்திற்று.

இ—ள்.:– இடை – எழுவாய்க்கும் விளிக்கும் இடையிலே நின்ற, இரண்டு முதலாவாறுருபும் – ஐ ஆல் கு இன் அது கண் என்னும் ஆறுஉருபுகளும், வெளிப்படலில்லது வேற்றுமைத்தொகை – மறைந்து நிற்குந் தொடர்ச் சொற்கள் வேற்றுமைத் தொகை நிலைத் தொடர்ச் சொற்களாம், எ—று.

வ—று.:–

நிலங்கடந்தான் – ஐ, தலைவணங்கினான் – ஆல், சாத்தன்மகன் – கு, ஊர்நீங்கினான் – இன், சாத்தன்கை – அது, மலை முழை – கண், என ஆறு உருபும் இடையிலே தொக்குநின்றவாறு காண்க. இவை இருமொழித்தொகை நிலைத் தொடர். யானைக்கோட்டு நுனிக்குறைத்தான் என்றாற் போலவன பன்மொழித்தொகை நிலைத்தொடர், இடையே தொக்கதைத் தொகை நிலைத் தொடரென்றதினாலே கடந்தானிலம் இருந்தான்குன்றத்து என இறுதியிலே தொக்குப் பிளவுபட்டு நின்றவை தொகை நிலைத்தொட ராகாவோ எனின், அவைமாறிக் கூறுதலாற் பிளவுபட்டு நின்றனவன்றி இடையே தொக்க தொகை நிலைத் தொடரேயாமென்க.

இனி ஆறுருபுமென்னும் முற்றும்மையை எச்சவும்மையாக்கிப் பொற்குடம் என ஒரோவிடத்து உருபும் பொருளும் உடன்றொக்கதும் வேற்றுமைத் தொகையெனக் கொள்க. அது விரியுங்கால் பொன்னாற் செய்தகுடம் எனவிரியும், இனி ஆசிரியர் தொல்காப்பியனார், ஐயுங்கண்ணுமல்லாப்பொரு வயின் மெய்யுருபு தொகாவிறுதியான எனக் கூறுதலால், ஐயுருபுங் கண்ணுருபுமல்லாத நான்குருபும் இடையிலன்றி இறுதியிலே தொகாவென்றும், இவ்விரண்டுருபும் இடையிலும்

இறுதியிலும் – நிலங்கடந்தான் – கடந்தானிலம்; குன்றத்திருந்தான் – இருந்தான்குன்றத்து, எனத்தொகு மெனவும், அந்த ஆறுருபும், சாத்தனை யடைந்தான் – சாத்தனொடுவந்தான் – சாத்தனுக்கு நல்கினான் – சாத்தனினீங்கினான் – தருமனுக்கு வீமன் தம்பி – சாத்தன்கணின்றான் என விரிந்துநின்றன.

## விசாகப் பெருமாளையர்

இது, பண்புத் தொகையாமாறு உணர்த்துகின்றது,

**இ–ள்.:– பண்பை** – குணத்தோடு குணிக்கு உண்டாகிய ஒற்றுமை நயத்தை, **விளக்கும்** – விளக்குகிற, **மொழி** – ஆகியவென்னும் பண்புருபு, **தொக்கனவும்** – தொக்குநின்றவையும், **ஒரு பொருட்கு** – ஒரு பொருளுக்கு, **இருபெயர்** – பொதுப்பெயரும் சிறப்புப் பெயருமாகிய விருபெயர்கள், **வந்தவும்** – வந்தவையும், **குணத்தொகை** – பண்புத்தொகைகளாம், எ–று.

(குணத்தொகை யென்றதனால் ஒருபொருளுக்கு வருகிற அவ்விரண்டுபெயர்க்கும் நடுவில் ஆகிய வென்கிற பண்புருபு தொக்கு வருமென்பது பெறப்பட்டது, பண்பெனப் பொதுப்படச் சொன்னதனால் வண்ணம் வடிவு அளவு சுவை முதலாயினவை யெல்லாங் கொள்க)

வ–று.:–

செந்தாமரை, கருங்குவளை; வண்ணப்பண்புத்தொகை; வட்டக்கல், சதுரப்பலகை – வடிவுப்பண்புத்தொகை; ஒரு பொருள், முக்குணம் – அளவுப் பண்புத்தொகை; துவர்க்காய், இன்சொல் – சுவைப்பண்புத் தொகை; சாரைப்பாம்பு, ஆயன் சாத்தன் – இருபெயரொட்டுப் பண்புத் தொகை; செந்நிறக் குவளை – இது பன்மொழித்தொடர்,

இவை, செம்மையாகிய தாமரை, சாரையாகிய பாம்பு, செம்மையாகிய நிறமாகிய குவளை, என விரியும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

பண்புத்தொகை யிலக்கணம் கூறுஞ் சூத்திரம் யாது?

பண்பை விளக்கு மொழிதொக் கனவும்

ஒருபொருட் கிருபெயர் வந்தவும் குணத்தொகை. கசு

(பண்பை விளக்கும் மொழி தொக்கனவும்

ஒருபொருட்கு இருபெயர் வந்தவும் குணத்தொகை.)

**இ–ள்.:** பண்பை விளக்குஞ் சொல் தொக்குநின்ற தொடர்களும்

ஒருபொருளுக்குப் பொதுப்பெயருஞ் சிறப்புப் பெயருமாகிய இருபெயர்கள் வந்தவையும் பண்புத்தொகைகளாம்.

பண்பை விளக்குஞ்சொல் தொகுதலாவது யாது?

பண்பை விளக்குஞ் சொல் தொகுதலாவது கருமை செம்மை முதலியனவற்றிற்கெல்லாம் முதனிலையாய்ச், சொல்லாய் நிரம்பாது கரு செவ்வென நிற்பதாம்.

பண்பெனப் பொதுப்படச் சொன்னதனால், வண்ணம், வடிவு. அளவு, *சுவை முதலாயினவை யெல்லாங்கொள்க.*

(வரலாறு)

செந்தாமரை, கருங்குதிரை – வண்ணப்பண்புத்தொகை.

வட்டக்கல் சதுரப்பலகை – வடிவுப்பண்புத்தொகை.

ஒருபொருள், முக்குணம் – அளவுப்பண்புத்தொகை.

துவர்க்காய், இன்சொல் – சுவைப்பண்புத்தொகை.

ஆயன்சாத்தன், சாரைப்பாம்பு – இருபெயரொட்டுப் பண்புத்தொகை.

> *செவ்விதாகிய தாமரை,* கரிதாகிய குதிரை, வட்டவடிவினதாகிய கல், சதுரவடிவினதாகிய பலகை, ஒருமையினதாகிய பொருள், துவர்ப்பினதாகிய காய், ஆயனாகிய சாத்தன் என விவை பொருள் விரிக்கப்படும். இவ்வாறன்றிச் செம்மையாகிய தாமரை, கருமையாகிய குதிரை என விரிப்பின் செம்மை என்பது ஒருதாமரையும் கருமை என்பது ஒரு குதிரையு மாதல் வேண்டும். அங்ஙனமாகாமையின் செவ்விதாகிய குதிரையெனவே பொருள் விரிக்கப்படுதல் வேண்டுதமென்க.

## முகவை இராமானுச கவிராயர்

இது, பண்புத்தொகை யாமாறுணர்த்திற்று.

இ–ள்.: பண்பும் – குணத்தொடு குணிக்கு உண்டாகிய ஒருமைப்பாட்டை விளக்க வரும் ஆகிய வென்னும் பண்புருபு தொக்கு நிற்பனவும், ஒருபொருட் கிருபெயர் வந்தவும் – (அந்தப் பண்புருபு தொக்கு நிற்கப் பொதுப்பெயருஞ் சிறப்புப் பெயருமாய்) ஒரு பொருளுக்கு இருபெயர் வந்தனவும், குணத்தொகை – பண்புத்தொகைகளாம், எ–று.

வ–று.:–

> செந்தாமரை – கருங்குவளை என்றாற் போல்வன வண்ணப் பண்புத்தொகை, வட்டக்கல்–சதுரப்பலகை என்றாற் போல்வன, வடிவு – பண்புத்தொகை, ஒருபொருள்,

இருபொருள் – என்றாற் போல்வன, அளவுப் பண்புத்தொகை – தீங்கனி துவர்க்காய் என்றாற் போல்வன, சுவைப் பண்புத்தொகை –நல்வினை – தீவினை – தண்ணீர் – வெந்நீர் – நுண்ணுணர்வு – அருவினை – என்றாற் போல்வன அந்த நான்கினுளடங்காப்பல்வகை பண்புத்தொகை, இவையனைத் தும் பண்புத்தொகைகளாம். ஆயன் சாத்தன்–ஆடித்திங்கள், சாரைப்பாம்பு, அகரமுதல், சகரக்கிளவி, பெயர்ச்சொல், வினைச்சொல் என்றாற் போல்வன ஒரு பொருளுக்கு இருபெயர் வந்த இருபெயரொட்டுப் பண்புத்தொகைகளாம். இவையெல்லா மிருமொழித்தொடர். செந்நிறக்குவளை, சிறுபசுந்தூவி கருநெடுங்கண், ஒருபெருஞ்செல்வம், கரும்புருவச்சிலை என்றாற் போல்வன பன்மொழித்தொடர், இவைவிரியுங்கால் செம்மையாகிய தாமரை, கருமையாகிய குவளை எனவும் ஆயனாகியசாத்தன், ஆடியாகிய திங்கள், அகரமாகிய முதல், பெயராகியசொல் எனவும் செம்மையாகிய நிறமாகிய குவளை சிறுமையாகிய பசுமையாகிய தூவி எனவும் விரியும். ஒழிந்தனவற்றைபுமிவ்வாறு விரித்துக்கொள்க.

இனியிந்து ஆகிய என்னும் உருபின் கண் – ஆக்கவினையில்லாததினாலே – இலக்கணவகைபாற் செய்தவென்னும் பெயரெச்சவாய்பாட்டின் பாற்படுவந்தார் வினைவிடைச்சொல், முற்றுவினை எச்சவினையாகிய காலத்து முற்றுப்பொருளை யொழித் பொருளை புணர்த்தி நின்றாந்தற்போல – ஆயன் ஆடியென்றாற்போலும் நிலைமொழிகள் பண்பிச் சொல்லாயினும் – அத்தன்மையினீங்கிச் – காத்தன் – திங்கள் – என்றாற்போலும் – வருமொழிகளை விசேடித்துப் – பொதுப்பண்பையுஞ்சிறப்புப் பண்பையுமுணர்த்தி அடையாய்நிற்றலால் இவையும் பண்புத் தொகையாயினவெனவும் இன்னுமிவை – காரைகடிந்தது – பாம்பு கடிந்தது – ஆயன்வந்தான் – சாத்தன்வந்தான் – எனத்தனித்துநின்றும் அப்பொருள்களையுணர்த்துமெனவும் – பாம்பாகியசாரை – சாத்தனாகிய ஆயன் என – வருமொழி நிலை மொழிகளைவிசேடித்தும் நிற்குமெனவும் கொள்க இனியிவ்விருபெயரொட்டும்– வடிவும் – அளவு மல்லாதபண்புத் தொகைகள் – குணமுடிகுணியுமாய்த் தொடர்த்துநின்றுழி – அக்குணங்குணியின் கண் முழுமையு மாயகாலத்துக் கருங்கொழிவெண்கோழி என்பன – கருமையாகிய கோழி – வெண்மையாகிய கோழி எனவிரித்து பண்புத்தொகையா மெனவும் – குணியின்கண் அக்குணம் எத்தேசமாயாகா லத்துக் – கருமையுடைய கோழி – வெண்மையுடைய கோழி யெனவிரித்து இரண்டாம் வேற்றுமையுருபும் பொருளு முடன்

தொக்க வேற்றுமைத் தொகையாமெனவுங்கொள்க – இன்னும் – வண்ணம் – வடிவு – அளவு – சுவை – என்பனபற்றி வருத்தொகைச் சொல் நான்கினுள் – வடிவொழிந்தன – ஐம்பாலறியும் பண்புத்தொகையெனவும் – மற்றையது ஐம்பா லறியாப் பண்புத் தொகை யெனவும் படும் திவையெல்லாந் தொல்காப்பியக்கடலுட் காண்க–இனி இச்சூத்திரத்திற்கு இந்த உரைகாரர் – பொருணோக்கம்பற்றாது சொன்னோக்கம் பற்றியே உரையெழுதினுங் குணியோடு ஒன்றுபட்டு நிற்பதல்லது வேறுபட்டு நில்லாமைபின் – செம்மையாகிய தாமரையெனக் குணம் வேறு குணி வேறாகப்பிள வுபடப் பொருள் கூறுவது கூடாதென்று கருதி – ஆசிரியர் தொல்காப்பியனார். (சூ) வண்ணத்திண் வடிவினளவிற் சுவையினென் – றன்னபிறவு மதன்குணநுதலி – யின்னதிதுவெனவருஉமியற்கை – யென்னகிளவியும் பண்பின்றொகையே, எனச்சூத்திஞ்செய்தார் – இதன் பொருளாவது – இப்பல வேறுவகைப்பட்ட பண்புகளில் அந்தந்தக் குணங்களைக் குறித்து இன்னகுணத்தையுடையது இதுவென வருமெவ்வகைப்பட்ட சொறகளும் இவைபோலவன பிறவும் பண்புத்தொகைச் சொற்களாமென்பது ஆதலால், செந்தாமைரை என்புழிச் – செய்யது – இன்னது, தாமரை – இது, என்பதாயிற்று, ஆகவே – செய்யதாகியதாமரையென்பதே – செந்தாமரை எனப்பாலகாட்டும் விருதிகுன்றி முன்னின்ற மெய்திரிந்து முடிந்ததென்பது பெருத்த முடைத்தாயிற் றெங்க – ஆண்டு – ஆகியவென்பது – தொகைப்பொருளை விரித்தற்குப்பெய்துரைத்த பெய்துரை – என்பதை – செந்தாமரை – செய்யதென்னுத் தாமரை எனப்பிறசொல்லால் விரித்தலாலுணர்க, வடகாலாரும்விரியாத் தொகைகளைப் பிறசொல்லால் விரிக்கப் படுமென்பர் – அற்றாயின் வட்டப்பலகை – சதுரக்கல் – என்பன – பாக்கால்களைக் காட்டினவெனின் – இங்ஙனம் வடிவுப்பண்பு பற்றிவருவனவற்றை ஐம்பாலறியாப் பண்புத்தொகை யென்றாயினும் வட்டம் – சதுரம் என்பனவும் பலகை – கல – என்பனவும் – பால்பகாஅஃறிணையாதலால் இவைபொல்வன வற்றை யெல்லாந் தெர்குத்துப் – பால்பகாவஃறிணைப் பெயர்கன்மாற பொதுமைய வாக்கூறினாதலால் அஃறிணை யிருபாற்கும் பொதுமை வாய்நின்று பொருணொக்கத்தாற் பால்காட்டி நிற்குமென்க – வட்டமாகியது பலகை – வட்டமாகியன பலகைகள் எனவிரிப்பினும் அமையும் பிறவுமன்ன – தொக்கனவும் வந்தவுங் குணத் தொகையென முடிக்க.

## கா. கோபாலாசாரியர்
## தி.கோ. ரங்காசாரியர்

**உரை :–** **பண்பை விளக்கும்** – பண்போடு பண்பிக்கு உள்ள ஒருமை பாட்டை விளக்குதற்கு வருகின்ற, **மொழி**– 'ஆகிய' என்னும் பண்புருபு, **தொக்கனவும்** – மறைந்து நிற்பவையும், **ஒரு பொருட்கு இருபெயர் வந்தவும்** – (அப்பண்புருபு தொக்கு நிற்க) ஒருபொருளுக்கு (ப்பொதுப்பெயரும் சிறப்புப் பெயருமாகி) இருபெயர்கள் வந்தவையும், **குணத்தொகை** – பண்புத் தொகைகளாம்.

குறிப்பு :–

பண்பு – குணம்; அதனை யுடையது பண்பி, பண்பி – குணி. பண்பு எனப் பொதுப்படச் சொன்னதனால் – வண்ணம், வடிவு, அளவு, சுவை முதலியன எல்லாங் கொள்க, (வண்ணம்–நிறம். வடிவு – உருவம். அளவு–எண் முதலியன. சுவை–உருசி) ஒரு பொருட்கு இருபெயர் வந்தது – இருபெயரொட்டுப் பண்புத்தொகை எனப்படும்.

உதாரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| செந்தாமரை | – | ஆகிய | – வண்ணப் | பண்புத்தொ | தாகை |
| சதுரப்பலவை | – | ” | – வடிவு | ” | ” |
| ஏழுலகம் | – | ” | – அளவு | ” | ” |
| உவர்க்கடல் | – | ” | – சுவை | ” | ” |
| மதுரைநகர் | – | ” | – இருபெயரொட்டு | | ” |
| சிறுகருங்குயில் | – | ” | – பன்மொழித்தொடர் | | |

இவை முறையே 'செம்மையாகிய தாமரை', 'சதுரமாகிய பலகை' 'ஏழாகிய உலகம்', 'உவர்ப்பாகிய கடல்', 'மதுரையாகிய நகர்', 'சிறுமையாகிய கருமையாகிய குயில்' என விரியும்.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: பண்பை விளக்கும் மொழி தொக்கனவும்** – பண்போடு பண்பிக்கு உளதாகிய ஒற்றுமை நயத்தை விளக்குதற்கு வரும் ஆகியவென்னும் பண்புருபு தொக்குநின்றவையும், **ஒரு பொருட்கு இருபெயர் வந்தவும்** – ஒருபொருளுக்குப் பொதுப்பெயருஞ் சிறப்புப்பெயருமாகிய இருபெயர்கள் வந்தவையும், **குணத்தொகை** – பண்புத்தொகைகளாம், எ–று.

குணத்தொகை யென்றதனால், ஒருபொருளுக்கு வரும் அவ்விருபெயர் நடுவினும், ஆகிய வென்னும் பண்புருபு தொக்குவருமென்பது பெறப்பட்டது.

பண்பெனப் பொதுப்படச் சொன்னதனால், வண்ணம், வடிவு, அளவு, சுவை முதலாயினவை யெல்லாங் கொள்க.

வ—று.:—

செந்தாமரை, கருங்குதிரை – வண்ணப் பண்புத் தொகை.

வட்டக்கல், சதுரப்பலகை – வடிவுப் பண்புத்தொகை.

ஒரு பொருள், முக்குணம் – அளவுப் பண்புத் தொகை.

## வ. குமாரசாமிப் புலவர்

இ—ள்.:— பண்பை விளக்கும் மொழி தொக்கனவும், – பண்போடு பண்பிற்கு உளதாகிய ஒற்றுமை நயத்தை விளக்குதற்கு வரும் ஆகியவென்னும் பண்புருபு தொக்குநின்றவையும், – ஒரு பொருட்டு இருபெயர் வந்தவும் – ஒரு பொருளுக்குப் பொதுப்பெயருஞ் சிறப்புப் பெயருமாகிய இரு பெயர்கள் வந்தவையும், – குணத்தொகை – பண்புத் தொகைகளாம். எ – று.

குணத்தொகையென்றதனால், ஒரு பொருளுக்கு வரும் அவ்விரு பெயர் நடுவில் ஆகியவென்னும் பண்புருபு தொக்குவருமென்பது பெறப்பட்டது.

பண்பெனப் பொதுப்படச் சொன்னதனால், வண்ணம், வடிவு, அளவு, சுவை முதலாயினவையெல்லாங் கொள்க.

(வரலாறு)

| | |
|---|---|
| செந்தாமரை<br>கருங் குதிரை | வண்ணப் பண்புத் தொகை |
| வட்டக்கல்<br>சதுரப் பலகை | வடிவுப் பண்புத் தொகை |
| ஒரு பொருள்<br>முக்குணம் | அளவுப் பண்புத் தொகை |
| துவர்க் காய்<br>இன் சொல் | சுவைப் பண்புத் தொகை |
| ஆயன் சாத்தன்<br>சாரைப் பாம்பு | இருபெயரொட்டுப் பண்புத் தொகை |
| செந்நிறக் குவளை<br>கரும்புருவச்சிலை | பன்மொழித் தொடர் |

இவை, விரியுமிடத்துச் செம்மையாகிய தாமரை, வட்டமாகிய கல், ஒன்றாகிய பொருள், துவர்ப்பாகிய காய், ஆயனாகிய சாத்தன், செம்மையாகிய நிறமாகிய குவளை என விரியும்.

(சூத்திரம்) வண்ணத்தின் வடிவினளவிற் சுவையினென்,

றன்ன பிறவு மதன்குண நுதலி, யின்ன திதுவென வருஉ மியற்கை, யென்ன கிளவியும் பண்பின் றொகையே, எனச் சூத்திரஞ்செய்தார். இதன் பொருளாவது. இப்பல்வேறுவகைப்பட்ட பண்புகளில் அந்தந்தக் குணங்களைக் குறித்து இன்ன குணத்தையுடையது இதுவெனவரு மெவ்வகைப்பட்ட சொற்களும் இவை போல்வன பிறவும் பண்புத்தொகைச் சொற்களாமென்பது. பண்புத்தொகையை வடநூலார் கர்மதாரயசமாசமென்பர்.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

**இ – ள்.: பண்பை விளக்கும்** – பண்போடு பண்பிக்கு உள்ள ஒற்றுமையை விளக்குதற்கு வருகிற, **மொழி** – ('ஆகிய' என்னும்) பண்புருபு, **தொக்கனவும்** – மறைந்து நிற்பவையும், **ஒரு பொருட்கு இருபெயர் வந்தவும்** – (அப்பண்புருபு தொக்குநிற்க) ஒரு பொருளுக்கு (ச் சிறப்புப் பெயரும் பொதுப்பெயருமான) இருபெயர்கள் வந்தவையும், **குணத்தொகை** – பண்புத் தொகைகளாம்; எ–று. பண்பு – குணம்; அதனை யுடையது, பண்பி (குணி).

'பண்பு' எனப் பொதுப்படச் சொன்னதனால் வண்ணம், வடிவு, அளவு, சுவை முதலியன எல்லாம் கொள்க. (வண்ணம் – நிறம். வடிவு – உருவம். அளவு – எண் முதலியன. சுவை – உருசி) ஒரு பொருட்கு இருபெயர் வந்தது, **'இருபெயரொட்டுப் பண்புத்தொகை'**யெனப்படும்; இதில் சிறப்புப்பெயர் முன்னும், பொதுப்பெயர் பின்னும் நிற்கும்.

**உ– ம்.:–**

செந்தாமரை, கருங்குதிரை – வண்ணப் பண்புத்தொகை

வட்டக்கல், சதுரப்பலகை – வடிவுப் பண்புத்தொகை.

ஒருபொருள், முக்குணம் – அளவுப் பண்புத்தொகை.

துவர்க்காய், இன்சொல் – சுவைப் பண்புத் தொகை.

ஆயன்சாத்தன், சாரைப்பாம்பு – இருபெயரொட்டுப் பண்புத்தொகை.

செந்நிறக்குவளை, கரும்புருவச்சிலை – பண்மொழித்தொடர்.

இவை, செம்மையாகிய தாமரை, வட்டமாகிய கல், ஒன்றாகிய பொருள், துவர்ப்பாகிய காய், ஆயனாகிய சாத்தன், செம்மையாகிய நிறமாகிய குவளை என விரியும். செம்மையாகிய தாமரை யென்ற வாய்பாட்டால் விரிக்கப் பட்டாலும், செந்நிறமுள்ளதாகிய தாமரையென்றே கருத்து.

செம்மையையுடைய தாமரையென வேற்றுமைப் பொருள்பட விரித்தல், பொருளுக்கு ஒக்குமாயினும், சொல் லியல்புக்கு ஒவ்வாது.

## பவானந்தம் பிள்ளை

இ—ள்.:— பண்பை விளக்கும் மொழி – பண்போடு பண்பிக்கு உளதாகிய ஒற்றுமை நயத்தை விளக்குதற்குவரும் ஆகியவென்னும் பண்புருபு, தொக்கனவும் – தொக்குநின்றவையும், ஒருபொருட்கு – ஒரு பொருளுக்கு, இருபெயர் – பொதுப்பெயருஞ் சிறப்புப் பெயருமாகிய இருபெயர்கள், வந்தவும் – வந்தவையும், குணத்தொகை – பண்புத் தொகைகளாம். எ—று.

குணத்தொகையென்றதனால், ஒருபொருளுக்கு வரும் அவ்விரு பெயர் நடுவினும், ஆகியவென்னும் பண்புருபு தொக்குவருமென்பது பெறப்பட்டது.

பண்பெனப் பொதுப்படச்சொன்னதனால், வண்ணம், வடிவு, அளவு, சுவை முதலாயினவை யெல்லாங் கொள்க. ஒரு பொருட்கு இரு பெயர் வந்தது இருபெயரொட்டுப் பண்புத்தொகை எனப்படும்.

(உ–ம்.) செந்தாமரை

கருங்குதிரை வண்ணப் பண்புத் தொகை.

வட்டக் கல்

சதுரப் பலகை வடிவுப் பண்புத் தொகை

ஒரு பொருள்

முக் குணம் அளவுப் பண்புத் தொகை

துவர்க் காய்

இன் சொல் சுவைப் பண்புத் தொகை.

ஆயன் சாத்தன்

சாரைப் பாம்பு இருபெய ரொட்டுப் பண்புத் தொகை

செந்நிறக் குவளை

கரும்புருவச் சிலை பன்மொழித் தொகை

இவை விரியுமிடத்துச், செம்மையாகிய தாமரை, வட்டமாகிய கல், ஒன்றாகிய பொருள், துவர்ப்பாகிய காய், ஆயனாகிய சாத்தன், செம்மையாகிய நிறமாகிய குவளை என விரியும். பிறவு மன்ன.

தண்ணீர், வெந்நீர், நல்வினை, தீவினை, நுண்ணுணர்வு

எனறாற் போல்வன மேற்கூறிய பண்புவகைகளுள் அடங்கா வேறு பல்வகைப் பண்புத்தொகைகளாம்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) பண்பை – (பண்பொடு பண்பிக்குண்டான வொற்றுமை) நயத்தை, விளக்கும் – விளக்குகிற, மொழி – ஆகிய என்னும் பண்புருபு, தொக்கனவும் – தொக்கு நின்றவையும், ஒரு பொருட்கு – ஒரு பொருளுக்கு, இருபெயர் – (பொதுப்பெயரும் சிறப்புப்பெயருமாகிய) இரு பெயர்கள், வந்தவும்– வந்தவையும், குணத்தொகை– பண்புத் தொகைகளாம். (எ–று)

(பொ–ரை.)

குணப் பெயரோடு குணிப்பெயர் புணருங்கால் அக் குணியோடு குணத்துக்கு உண்டாகிய ஒற்றுமைநயத்தை விளக்குதற்கு ஆண்டுவரும் ஆகிய என்னும் மொழியாகிய பண்புருபு தொக்குநிற்பனவும், அப் பண்புருபு தொக்கு நிற்பப் பொதுப் பெயருஞ் சிறப்புப்பெயருமாய் ஒருபொருட்கு இருபெயர் வந்தனவும் ஆகிய இவ்விரண்டும் பண்புத் தொகைகளாம்.

குணத்தொகை என்றதனால் ஒருபொருளுக்கு வருகிற அவ்விரண்டு பெயர்க்கும் நடுவில் ஆகிய என்கிறபண்புருபு தொக்குவரு மென்பது பெறப்பட்டது. பண்பெனப் பொதுப்படச் சொன்னதனால் வண்ணம், வடிவு, அளவு, சுவை முதலாயினவை எல்லாம் கொள்க.

(உ–ம்)

செந்தாமரை

கருங்குவளை வண்ணப்பண்புத் தொகை.

வட்டக்கல்

சதுரப்பலகை. வடிவுப்பண்புத் தொகை.

ஒருபொருள்

முக்குணம். அளவுப்பண்புத் தொகை.

துவர்க்காய்

இன்சொல் சுவைப்பண்புத் தொகை.

சாரைப்பாம்பு

ஆயன் சாத்தன் இருபெயரொட்டுப் பண்புத் தொகை.

செந்நிறக்குவளை பன்மொழித் தொடர்.

இவை செம்மையாகிய தாமரை, சாரையாகிய பாம்பு, செம்மை யாகிய நிறமாகிய குவளை எனவிரியும். ஒரு பொருட்கிருபெயர் வந்தது இருபெயரொட்டுப் பண்புத் தொகை யெனப்படும்; இதில் சிறப்புப்பெயர் முன்னும் பொதுப்பெயர் பின்னும் நிற்கும். ஒற்றுமை நயம் என்றது ஒரு பொருளாதலை.

## கா. நமச்சிவாய முதலியார்

பண்பை – (பண்போடு பண்பிக்கு உண்டாகிய ஒற்றுமை) நயத்தை, விளக்கும் – விளக்குகின்ற, மொழி – (ஆகிய என்னும்) பண்புருபு, தொக்கனவும் – தொக்கு நின்றவையும், ஒருபொருட்கு – ஒரு பொருளுக்கு, இருபெயர் – (பொதுப்பெயருஞ் சிறப்புப் பெயருமாகிய) இருபெயர்கள், **வந்தவும்** – வந்தவையும், **குணத்தொகை** – பண்புத் தொகைகளாம்.

குணத்தொகை என்றதனால், ஒரு பொருளுக்கு வருகிற அவ்விரண்டு பெயர்க்கும் நடுவில் ஆகிய என்னும் பண்புருபு தொக்கு வரும் என்பது பெறப்பட்டது.

பண்பு எனப் பொதுப்படச் சொன்னதனால், வண்ணம், வடிவு, அளவு, சுவை முதலாயினவை யெல்லாங் கொள்க.

உதாரணம்

| | |
|---|---|
| செந்தாமரை<br>கருங் குவளை | வண்ணப் பண்புத்தொகை. |
| வட்டக் கல்<br>சதுரப் பலகை | வடிவுப் பண்புத்தொகை |
| ஒரு பொருள்<br>முக்குணம் | அளவுப் பண்புத்தொகை |
| துவர்க் காய்<br>இன்சொல் | சுவைப் பண்புத்தொகை |
| சாரைப் பாம்பு<br>ஆயன் சாத்தன் | இருபெயரொட்டுப் பண்புத்தொகை |
| செந்நிறக்குவளை<br>கரும்புருவச் சிலை | பன்மொழித் தொடர் |

இவை, செம்மையாகிய தாமரை, வட்டமாகிய கல், ஒன்றாகிய பொருள், துவர்ப்பாகிய காய், சாரையாகிய பாம்பு, செம்மையாகிய நிறமாகிய குவளை என விரியும்.

## மோசகு பொன்னையா

பண்புப் பெயர்கள் உயர்திணை அஃறிணை என்னும் இரு திணைகளின் ஐம்பாலறியும் பண்பை விளக்கும் சொல்லுறுப்புக்கள் இல்லையாக அவ்வத்திணைப் பெயரோடு ஒட்டி ஒரு சொல்லாய்த் தொகைப்பட்டு இன்னதிதுவென ஒன்றையொன்று விசேடித்து இயற்சொல்லென நின்ற விடத்தும், ஒரே பொருளைக் குறிக்கச் சிறப்பும் பொதுவு மாய இரு பெயர்கள் ஒட்டி ஒரு சொல்லாய்த் தொகைப்பட்டு அவ்வாறு நின்றவிடத்தும் அவை பண்புத் தொகை யெனப்படும். எ–று.

பண்புப் பெயரென்பது பண்படிக் கொள்பெயர்களையும் ஆக்கப் பெயர்களையும் எனக்கொள்க தொல்காப்பியர்,

> **உயர்திணை அஃறிணை ஆயிரு மருங்கின்**
> **ஐம்பா லறியும் பண்புதொகு மொழி**
> **.............................., மருவின் பாத்திய**
> **புணரியல் நிலையிடை உணரத் தோன்றா,**

எனவும்,

> **வண்ணத்தின் வடிவி னளவிற் சுவையினென்**
> **றன்ன பிறவு மதன்குண நுதலி**
> **யின்ன திதுவென வரூஉ மியற்கை**
> ***யென்ன கிளவியும் பண்பின் றொகையே,***

எனவும் கூறியுள்ள பண்புத்தொகை விளக்க நூற்பாக்களின் வழிநின்று இவ்வாறு தெளிவுரை கூறப்பட்டது. பண்பை விளக்கும் மொழி என்றது இன்னதிது வெனக் குணம் குணிக்காம் பண்பை விளக்கும் மொழி எனக் கொள்க. தொகை, ஒட்டி ஒரு சொல்லாய் நிற்பதாகலின், அஃது இயற்கைச் சொல்லே போல் நடக்கும் என்பது இவ்வாசிரியருக்கும் உடன்பாடேயாதலின் 'பிரியாத்தொகையும் பிறசொல்லான் விரிக்கப்படும்' என்பார் கொள்கையை உடன்பட்டு, அவ்வாறு விரிப்பார்க்குக் கருவி கூறுவாராய் இவ்வாறு கூறினார். தெல்காப்பியர், 'என்ன கிளவியும்' என்றதனால் உரையாசிரியர் இலேசாற் கொண்ட இருபெயரொட்டை, இவ்வாசிரியர் விதியுளமைத்தார். வண்ணம், வடிவு, அளவு ஆகியவை பற்றி அமையும் பண்புத் தொகை மொழிகள் பெருவழக்கின எனக்கொள்க.

எ–டு

> **சிறுபாணன் இருதிணைப் பெயர்கள் ஐம்பாலறி**
> **சிறுபாடினி யும் பண்பை விளக்கும் சொல்லு**
> **சிறுபாணர். றுப்புக்கள் இல்லையாகவும் ஒட்டி**
> **சிறுகுதிரை ஒரு சொல்லாய்த் தொகைப்பட்**
> **சிறுகுதிரைகள் டுப் பண்புத் தொகைகளாயின**
> **(இவ்வாறே வண்ணம் முதலிய நான்குக்கும் கொள்க)**

சாரைப்பாம்பு சிறப்பும் பொதுவுமாய் இருபெயர்
ஆயன்சாத்தன் கள் ஒட்டி ஒரு சொல்லாய்த்
அகரமுதல் தொகைப்பட்டுப் பண்புத் தொகை
சதுரக்கிளவி களாயின
ஆனித்திங்கள்

பண்பை விளக்கும் மொழி என்று இவ்வாசிரியர் 'ஆகிய' என்னுஞ் சொல்லையே குறிப்பிட்டார் என்னும் ஒரு கொள்கை நிலவுகிறது. சங்கரநமச்சிவாயர், செந்தாமரை ஆயன் சாத்தான், செங்குவளை என்பன விரிவுழி செம்மையாகிய தாமரை, ஆயனாகிய சாத்தன், செம்மையாகிய நிறமாகிய குவளை என விரியும், இவ்வாகிய என்னும் உருபின்கண் ஆக்கவினையின்மையின், இலக்கணையாற் செய்த வென்னும் வரப்பாட்டின்பாற் படுவதொரு இடைச்சொல், என விளக்கம் கூறினார். மேலும் மயிலைநாதர், 'பொருளின்கட் கிடந்த குணத்தைக் காட்டுதற்கு ஆண்டு வருமொழி, ஐகார முதலியன' எனவும், 'கருஞ்சாத்த னென்பது, கரிய சாத்தனென இருதிணை யைம் பாற்கும் பொதுவாகிய பெயரெச்சக்குறிப்பு வாய்பாட்டான் விரியும்' எனவும், 'பண்புக்குத் தொக்கு நின்றது கருமை என்ற ஐகாரம்' எனவும் கூறியுள்ளவற்றையும், தொல்காப்பிய உரையாசிரியர்களான இளம்பூரணர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் என்பார் கருங்குதிரை என்பதற்கு விரி, கரியது குதிரை என்பதே எனக் கூறியுள்ளதையும் கண்டு, அவற்றிற்கு மறுப்புங் கூறியுள்ளார். இன்னும் அவர். 'பவணந்தியார் மொழி தொக்கன பண்புத்தொகை என்றதால் செந்தாமரை என்பதில் மை விகுதி தொக்கது, வட்டக்கல் என்பதில் ஒன்றும் தொக்கதில்லை என்று கூறுதலோ, அன்றிக் கருஞ்சாத்தன் என்பதில் கரிய என்னும் எச்ச இறுதியும், கரியது என்னும் முற்றின் இறுதியும் தொக்கது என்று கூறுதலோ பொருந்தாது' எனவும் 'கரிய குதிரை எனக் கருங்குதிரை என்னும் தொகை விரிக்கப்பெறுமெனின், அதனை வினைத் தொகைக் குறிப்பெனவே பொருந்துமே யன்றிப் பண்புத் தொகை எனல் பொருந்தாது' எனவும், 'கரியது குதிரை என அது விரிக்கப்படுமெனின், கருங்குதிரை என்ற தொகை மொழி வந்தது என வினையேற்றல் கூடாது' என்பதுபடக்கூறியும், மயிலைநாதர், 'இனி, பண்பாவது பொருட்குணமாதலின் அப்பொருட்கு உரிமை தோன்றக் கருமையுடைய சாத்தனென் பாருமுளர்' எனக் கூறியுள்ளதை, 'செம்மையையுடைய தாமரையென விரிக்கின் இரண்டாம் வேற்றுமையுருபும்

பொருளும் உடன்றொக்கத் தொகை யாமென்க' எனக் கூறியும் மறுத்துள்ளார்.

'கரியது என்னும் பண்புப் பெயர் ஒருகூறு நிற்ப, ஒரு கூறு தொக்கமையிற் பண்புத் தொகையாயிற்று, என இளம்பூரணரும், 'கரியன், கரியள், கரியர், கரியது, கரியன என்னும் பண்புணர்த்தும் ஈறுகளே தொக்கு நிற்பன என்றுணர்க' என நச்சினார்க்கினியரும், கரியது குதிரை, வட்டம்பலகை, நெடியது கோல், திவ்விது கரும்பு என்பன கருங்குதிரை, வட்டப் பலகை, நெடுங்கோல், தீங்கரும்பு எனத் தொகும், எனத் தெய்வச்சிலையாரும் கொண்டனர்.

சேனாவரையார் (தொல்காப்பிய நூற்பா உரையில் 'இயற்கை' என்றது, தொக்குழிப் பண்புடையதனைக் குறித்தல் அத்தொகைச் சொல்லதியல் பென்ப தல்லது காரணங்கூறப்படா தென்றவாறு' எனவும், 'தொகைக்கண் ணல்லது பண்புத் தொகையின் தனிநிலை (முதற்பகுதி) வினைத்தொகையில் உண், தின் என நிற்பதேபோல் பண்புத்தொகையில் கரு, செவ், எனப் பண்பு மாத்திரம் உணர்த்தி நிற்பதாம்' எனவும் கூறினார். மேலுமவர், 'தொகைப் பொருளுணர்த்துவதற்குப் பிற சொற்கொணர்ந்து விரித்ததல்லது, தன் சொல்லான் விரியாமையின் அவை விரி எனப்படா வென்க' எனவும், 'பிறசொற்கொணர்ந்து விரிக்குங்கால், கரியகுதிரை, கரிதாகிய குதிரை, கரியது குதிரை, என அத்தொகைப் பொருணர்த்துவன வெல்லாவற்றானும் விரிக்கப்படும், எனவும் கூறுகின்றார்.

முகவை இராமானுசக்கவிராயர், 'செந்தாமரை என்புழிச் செம்மைக் குணம் தாமரையென்னும் குணியோடு ஒன்றுபட்டு நிற்பதல்லது வேறுபட்டு நில்லாமையின், செம்மையாகிய தாமரையெனக் குணம் வேறு, குணி வேறாகப் பிளவுபடப் பொருள் கூறுவது கூடாதென்று கருதி, ஆசிரியர் தொல்காப்பியனார்.

**வண்ணத்தின் வடிவி னளவிற் சுவையினென்**

**றன்ன பிறவு மதன்குண நுதலி**

**இன்ன திதுவென வரூஉ மியற்கை**

**என்ன கிளவியும் பண்பின் றொகையே,**

எனச் சூத்திரஞ் செய்தார்,' எனக்கூறுவது சேனாவரையர் கருத்தை அரண் செய்வதோடு உண்மை நிலையாகவும் அமைந்தது.

இவ்வாசிரியர் பண்புத் தொகையாகிய கிளவிக்கு இலக்கணம்

கூறாது. அது விரியுமாற்றைக் கூறுவதுபோல் இந்நூற்பாவை அமைத்துள்ளார். ஆதலின், அதன்பொருளை இன்ன திதுவெனும் பொருணிலைக்கேற்ப விரிப்பதற்கு இன்றியமையாத சொல்லைப் பண்பை விளக்கும் மொழி என்றார் என்பதே போதரும்.

முகவை இராமாநுசக்கவிராயர் தம் உரையில் 'வடிவொழிந்தன ஐம்பாலறியும் பண்புத் தொகை' எனவும், மற்றையது 'ஐம்பாலறியாப் பண்புத்தொகை' எனவும் படும் எனப் பகுத்து, "வடிவுப் பண்பு பற்றி வருவனவற்றை ஐம்பாலறியாப் பண்புத் தொகை என்றாராயினும், வட்டம் சதுரம் என்பனவும், பலகை கல் என்பனவும் பால்பகா அஃறிணை யாதலால், அவைபோல்வனவற்றை யெல்லாந் தொகுத்துப் 'பால்பகா வஃறிணைப் பெயர்கள் பாற்பொதுமைய' எனக் கூறினாராதலால், அஃறிணை இருபாற்கும் பொதுமையவாய் நின்று பொருணோக்கத்தாற் பால்காட்டி நிற்குமென்க' எனக் கூறியுள்ளார். அதை மனத்துட்கொண்டு பண்புத்தொகைகளை விரிப்பின் ஐம்பாலறியும் பண்புத்தொகைகளுக்கு ஐம்பாலறி கிளவிகளான அன், அள், அர், து, அ என்பனவே பண்பை விளக்கும் மொழிகள்1 எனவும், வடிவுப் பண்புத் தொகைகள் இருபெயரொட்டே போல் பண்பை விளக்கும் மொழி இல்லாமலே பொருள்விளக்கஞ் செய்கின்றன2 எனவும் கொள்ளலாம். பவணந்தியார் ஒரு பொருட்கிரு பெயர் வந்த குணத்தொகைக்குப் பண்பை விளக்கும் மொழியைக் கூறாது விடுத்தது அதனாலேயே என்பதும் போதரும் என்க.

(14)

## 365. உவம வுருபில துவமத் தொகையே.

உவம உருபு இலது உவமத் தொகையே.

uvama urupu ilaṭu uvamaṭṭokai ē

### இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Comparative Ellipsis**

A comparative Ellipsis omits the Signs of comparison.

## ஒப்புமைப் பகுதி

உவமத் தொகையே உவம இயல

(தொல். சொல்.: 414)

............ விரியின் அடைவே
............. உவமை............. தொகையாம்

(நேமி.: 86: 1–2)

உவமத் தொகையே உவம வியல

(இ.வி.:337)

உவம வுருபில துவமைத் தொகையே

(மு.வீ.: 741)

........... உவமையேல்
உருப்பண்பு ஆதிதொக்கு விரிக்கும்.........

(சுவாமி.: 66:1)

## மயிலை நாதர்

எ – ன், உவமத் தொகையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: பண்பு, பயன், வினை, மெய் என்பனபற்றிவரும் உவம வுருபு தோன்றாதது உவமத்தொகையாம், எ–று.

வ–று.:–

பான்மொழி, மாரிவண்கை, புலிப்பாய்த்துள், துடியிடை என வரும். இவை விரிவுழி, பால்போலுமொழி, மாரிபோலும் வண்கை, புலிபோலும் பாய்த்துள், துடிபோலுமிடை யெனவிரியும்; இவ்வாறன்றி, பாலைப்போலுமொழி பான்மொழி [1]யெனின், [1]உருபுத்தொகையாகக் கொள்க; அஃதென்னையோ வெனின், ஈண்டு உவமையான பாலோடு பொருளான மொழியைப் புணர்த்தலே கருத்தாகலின், பாலைப்போலு மொழியென்றவழிப் பால் கருமமாக அவ்வுருபிற்குப் போலு மென்பது பயனிலையாக அது மொழியென்னும் பெயர்கொள்ள உவமையோடு பொருட்குப் புணர்ச்சியின்றா மாகலினென்க. பிறவுமன்ன.

---

பாடவேறுபாடு.:–

1. யென உருபுத் தொகையாகக் கொள்ளற்க.

## சங்கர நமச்சிவாயர்

எ–னின், உவமத்தொகையாமாறு உணர்–ற்று.

இ–ள்.: வினை, பயன், மெய் உரு என்பனபற்றி வரும் உவமவுருபுகள் தொக்க தொடர்ச்சொற்கள் உவமத்தொகைகளாம், எ–று.

வ–று.:–

புலிக்கொற்றன், மழைக்கை, துடிஇடை, பொற்சுணங்கு எனவும்; குருவி கூப்பிட்டான், சக்கரம் சுற்றிவந்தான் எனவும்; மரகதக் கிளிமொழி, இருள்மழைக்கை எனவும் வரும். இவை விரியுழிப் புலியைப் போலும் கொற்றன், குருவியைப் போலும் கூப்பிட்டான், மரகதத்தைப் போலும் கிளியைப் போலும் மொழி என விரியும். இறுதிக்கண் காட்டிய இரண்டிறந்த் தொடர் உவமைக்கு உவமையன்று, முன்னது உரு உவமையும் பின்னது பயனுவமையுமாதலின் என்க. இவை இரண்டாம் வேற்றுமையுருபும் பொருளும் உடன் தொக்க தொகை யன்றோ? உவமத்தொகை என்றது என்னையெனின் :– செயப்படுபொருள் கருதிக் கூறியவழி இரண்டாம் வேற்றுமை உருபும் பொருளும் உடன்தொக்க தொகையாகவும், உவமைப்பொருள் கருதிக் கூறியவழி அதனையே உவமத் தொகையாகவும் கொள்ளப்படும் என்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், முறையே உவமைத் தொகைநிலைத் தொடர்மொழி ஆமாறு கூறுகின்றது.

இ–ள்.;– உவம வுருபிலது – பண்பு பயன் வினை என்பன பற்றி வரும் உவமவுருபு தோன்றாதது. உவமத் தொகையே – உவமத் தொகை நிலைத் தொடர்மொழிகளாம், எ–று.

உ–ம்.:–

பான்மொழி, குவளைக்கண், துடியிடை எனவும் மாரிவண்கை எனவும், சீயகங்கன் ( நன்.பாயிரம்), புலிசாத்தன் எனவும் பொற்றாமரை, குமிண்மூக்கு, கார்குழல் எனவும் வரும். இவை விரிவுழி பால் போலும் மொழி, குவளை போலும் கண் என விரியும். பாலைப் போலும் மொழி என உருபுத் தொகையாய்க் கொள்ளற்க.

## விசாகப் பெருமாளையர்

இது, உவமைத்தொகையாமாறு உணர்த்துகின்றது,

**இ – ள்.:** **உவமவுருபு** – வினை பயன் மெய்யுருபு என்பவற்றைப் பற்றி வருகிற உவமவுருபுகள், **இலது** – தொக்க தொடர்மொழிகள், **உவமைத்தொகை** – உவமைத்தொகைகளாம், எ–று.

வ–று.:–

புலிக்கொற்றன், குருவி கூப்பிட்டான்– வினை யுமவத்தொகை. மழைக்கை, கற்பக வள்ளல் – பயனுவமத்தொகை. துடியிடை, குரும்பைமுலை – மெய்யுமவத்தொகை. பொற்சுணங்கு, பவளவாய் – உருபுமவத்தொகை. மரகதக்கிளி மொழி, இது பன்மொழி தொடர்.

இவை புலிபோலுங் கொற்றன், மரகதம் போலுங் கிளிபோலு மொழி என விரியும். செயப்படுபொருள் குறித்தால் புலியைப் போலுமென ஐயுருபுந் தோன்றும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

உவமத்தொகை யிலக்கணங் கூறுஞ் சூத்திரம் யாது?

உவம வுருபில துவமத் தொகையே.

(உவம உருபு இலது உவமத்தொகையே.)

**இ–ள்.:** வினை பயன் மெய் உரு என்பவற்றைப்பற்றி வரும் உவமவுருபுகள் தொக்க தொடர்மொழிகள் உவமத்தொகைகளாம்.

(வரலாறு)

புலிக்கொற்றன், குருவிகூப்பிட்டான் – வினையுவமத்தொகை.

மழைக்கை, கற்பகவள்ளல் – பயனுவமத்தொகை.

துடியிடை, குவளைக்கண் – மெய்யுவமத்தொகை.

பொற்சுணங்கு, பவளவாய் – உருவுவமத்தொகை.

இவை, விரியுமிடத்துப், புலிபோலுங்கொற்றன், மழைபோலுங்கை, துடிபோலுமிடை, பொன்போலுஞ்சுணங்கு என விரியும். செயப்படுபொருள் குறித்தவிடத்துப், புலியைப்போலுங் கொற்றன் என ஐயுருபும் உடன் விரியும்.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** உவமைத்தொகை யாமாறுணர்த்திற்று.

**இ–ன்.:** (வினையும் பயனும் மெய்யும் உருவும் பற்றி வரும்) உவமையுருபுகள் தொக்க தொடர்ச்சொற்கள் உவமைத்தொகைகளாம், எ– று.

வ–று.:–

புலிபாய்த்துள், புலிக்கொற்றன், குருவிகூப்பிட்டான், சக்கரஞ் சுற்றி வந்தான், என்றாற் போல்வன வினையுவமைத் தொகை. *மழைக்கை, கிளிமொழி, குயின்மொழி, மழலையாழ் என்றாற்* போல்வன பயனுவமைத்தொகை. துடியிடை, பணியரவல்குல், கரிக்கைக்கவான், 'களிறுங்கந்துங் கூம்புங்கலனும்' என்றாற் போல்வன, மெய்யுவமைத்தொகை. (மெய் – என்பது பண்பி) பவளவாய், பொற்சுணங்கு, தரளநகை, வேய்த்தோள் என்றாற் போல்வன, உருவுமைத்தொகை. (உரு என்பது பண்பு,) மரகதத்கிளிமொழி, இருண்மழைக்கை என்றாற் போல்வன, பன்மொழித்தொடர். *இவை விரியுங்கால்* முறையே, புலிப்பாயத்துளன்ன பாய்த்துள் (பாய்த்துள் – பாய்ச்சல்,) புலபோற் பாயுங் கொற்றன், குருவிபோற் *கூப்பிட்டான்*, இருள்போலும் மழைபோலுங் கை என விரியும். ஒழிந்தனவற்றையு மிவ்வாறு விரித்துக் கொள்க.

*பண்பியும் பண்பும்* தொழிலும் பயனுமாகிய இந்நான்கினுள்ளே பண்பியொடு பண்பியும் பண்பொடு பண்பும், தொழிலொடு தொழிலும், *பயனொடு பயனும்* ஒப்புமை தோன்றப் பொருளொடு பொருள் புணர்த்துச் சொல்லுதல் உவமையணி யாதலால், மழைக்கை யென்பது மழை *போலுங்* கையென விரிந்துழிப் பண்பியொடு பண்பியொப்புமை தோன்றாததினாலே மெய்புவமை யன்றெனவும், மழையினது *பண்பொடு கையினது* பண்புமொப்புமை தோன்றாதினாலே உருவுவமை யன்றெனவும், மழையினது தொழிலுங் கையினது தொழிலுஞ் சிறிதொத்துப் *பெரும்பாலு* மொவ்வாததினாலே தொழிலுவமை யன்றெனவும், அவ்விரண்டின் தொழிலால் வரும் பயனொடு பயனொத்திருத்தலால் *பயனுவமையாயிற்* றெனவுங் காண்க. மழையினது தொழிலால் வரும் பயனாவது,

"வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற்பாற்றுயாய்"

*என்றவாறே* யுலகமின்புற்று வாழ்தலாம். அதுபோலவே கைக்குந் தனது கொடைத் தொழிலால் உலகமின்புற்று வாழ்ந்திருப்பச் *செயல் பயனாயிற்று*. ஆதலால் மழைக்கை பயனுவமையா யிற்றெனக் காண்க. கிளிமொழி முதலிய பயனுவமைகளையுமிவ்வாறே *யுய்த்துணர்ந்து* கொள்க. இருள்போலு மழைபோலுங் கை யெனவிரிந்த பன்மொழித் தொடரில் முன்னையது உருவுவமையும் *பின்னையது* பயனுவமையுமாதலா லுவமைக்குவமை யன்றென வுணர்க. புலிப்பாய்துளை யொத்த பாய்த்துள்–புலியைப் போற் *பாயுங் கொற்றன் என* விரிதலாலிவை யிரண்டாம் வேற்றுமையுருபும்

பொருளுமுடன்றொக்க வேற்றுமைத் தொகையன்றோ இவற்றை யுவமைத்தொகை யென்றதென்னெனின், செயப்படு பொருள் குறித்துக் கூறியவழியத் தொகையாகவும் உவமைப்பொருள் கூறியவழி இத் தொகையாகவும் கொள்ளப் படுமென்க. அன்றியும், புலியன்ன, பாய்த்துள், 'மழையன்ன வண்கை' 'பொன்மானுமேனி என வேற்றுமை யோடியை பில்லா வுருபுகள் தொக்கவிடத்து உவமத் தொகையாவதல்லது வேற்றுமைத் தொகையாகா வென்க . இனி இக்கருத்தே பற்றி ஆசிரியர் தொல்காப்பியனார், "உவமைத் தொகையே யுவம வியல" எனக் கூறியதூஉமெனக் காண்க.

## கா. கோபாலாசாரியர்
## தி.கோ. ரங்காசாரியர்

**உரை :–** **உவமஉருபு** – (வினைப் பயன் மெய் உரு என்பவற்றைப் பற்றி வருகிற 'போல' முதலிய) உவம உருபுகள், **இலது** – மறைந்து நின்ற தொடர்மொழிகள், **உவமத்தொகை** – உவமத்தொகைகளாம்.

குறிப்பு :–

வினை–தொழில், பயன்–பிரயோசனம். மெய் – வடிவம். உரு– நிறம். உபமேயத்துக்கும் உபமானத்துக்கும் இருக்கின்ற ஒப்புமையை விளக்குகின்ற 'போல' முதலிய உருபுகள் இடையிலே தொக்கு நிற்க உபமானச் சொல்லும் உபமேயச் சொல்லும் தொடர்வது உவமத்தொகை என்றதாயிற்று.

**உதாரணம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| குருவி கூப்பிட்டான் | – | போல | – வினையுவமத்தொகை | | |
| கற்பக வள்ளல் | – | " | – பயன் | " | " |
| துடியிடை | – | " | – மெய் | " | " |
| பவளவாய் | – | " | – உரு | " | " |
| கற்பகக் கமலக்கை | – | " | பன்மொழித்தொடர். | | |

இவை முறையே 'குருவிபோலக் கூப்பிட்டான்', 'கற்பகம் போலும் வள்ளல்', 'துடிபோலுமிடை', 'பவளம்போலும் வாய்', 'கற்பகம்போலும் கமலம் போலும் கை' என விரியும்.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.:–** **உவம உருபு இலது** – வினை பயன் மெய் உரு என்பவற்றைப் பற்றிவரும் உவமவுருபுகள் தொக்க தொடர்மொழிகள், **உவமத்தொகை** – உவமத்தொகைகளாம், எ–று.

வ–று.:

புலிக் கொற்றன், குருவி கூப்பிட்டான் – வினையுவமத் தொகை.

மழைக்கை, கற்பக வள்ளல் – பயனுவமத் தொகை.

துடியிடை, குரும்பைமுலை – மெய்யுவமத் தொகை

பொற் சுணங்கு, பவளவாய் – உருவுவமத் தொகை.

மரகதக் கிளிமொழி, இருண் மழைக் கை – பன்மொழித் தொடர்.

இவை விரியுமிடத்துப் புலி போலுங் கொற்றன், மழை போலுங் கை, துடி போலுமிடை, பொன் போலுஞ் சுணங்கு, மரகதம் போலுங் கிளிபோலு மொழி என விரியும். செயப்படுபொருள் குறித்த விடத்துப், புலியைப் போலுங் கொற்றன் என ஐயுருபும் உடன் விரியும்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். உவம உருபு இலது – வினை பயன் மெய் உரு என்பவற்றைப் பற்றி வரும் உவமவுருபுகள் தொக்க தொடர் மொழிகள், – உவமத்தொகை – உவமத்தொகைகளாம். எ – று.

(வரலாறு)

| | |
|---|---|
| புலிக் கொற்றன்<br>குருவி கூப்பிட்டன் | வினையுவமத் தொகை |
| மழைக்கை<br>கற்பக வள்ளல் | பயனுவமத் தொகை |
| துடியிடை<br>குரும்பை முலை | மெய்யுவமத்தொகை. (மெய்–வடிவம்) |
| பொற் சுணங்கு<br>பவள வாய் | உருவுவமத் தொகை. (உரு – நிறம்) |
| மரகதக் கிளிமொழி<br>இருகண் மழைக்கை | பன்மொழித் தொடர் |

இவை, விரியுமிடத்துப், புலிபோலுங்கொற்றன், மழைபோலுங்கை, துடிபோலுமிடை, பொன்போலுஞ்சுணங்கு, மரகதம்போலுங் கிளிபோலு மொழி என விரியும் செயப்படுபொருள் குறித்தவிடத்தும், புலியைப் போலுங் கொற்றன் என ஐயுருபும் உடன் விரியும்.

## வை. மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்:– உவம உருபு – (வினை பயன் மெய் உரு என்பவற்றைப் பற்றி வருகிற) 'போல' முதலிய உவமவுருபுகள், இலது – மறைந்து நின்ற தொடர்மொழிகள், உவமத்தொகை – உவமத்தொகைகளாம்; எ–று.

(வினை – தொழில், பயன் – பிரயோசனம். மெய் – வடிவம். உரு – நிறம்.)

எனவே, உபமேயத்துக்கும் உபமானத்துக்கும் இருக்கின்ற ஒப்புமையை விளக்குகின்ற 'போல' முதலிய உருபுகள் இடையிலே தொக்குநிற்க உபமானச்சொல்லும் உபமேயச்சொல்லும் தொடர்வது, உவமத்தொகையாம்.

உ–ம்.:

புலிக்கொற்றன், குருவிகூப்பிட்டான் – வினையுவமைத்தொகை.

மழைக்கை, கற்பகவள்ளல் – பயனுவமைத் தொகை.

துடியிடை, வேய்த்தோள் – மெய்யுவமைத்தொகை.

கார்கூந்தல், பவளவாய் – உருவுவமைத்தொகை.

மரகதக்கிளிமொழி, இருள்மழைக்கை – பன்மொழித்தொடர்.

இவை – புலிபோலும் கொற்றன், மழைபோலும்கை, துடிபோலும் இடை, கார்போலும் கூந்தல், மரகதம் போலும் கிளி போலும் மொழி என விரியும்.

(துடி–உடுக்கை. வேய் – மூங்கில், மரகதம் – பச்சையிரத்தினம்.)

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.: உவம உருபு – (வினை பயன் மெய் உரு என்பவற்றைப் பற்றிவரும்) உவமவுருபுகள், இலது – தொக்க தொடர்மொழிகள், உவமத்தொகை – உவமைத் தொகைகளாம். எ–று.

வினை = தொழில். மெய் = பண்பி = பண்பையுடையது. உரு–பண்பு.

(உ–ம்.) புலிக் கொற்றன்

குருவி கூப்பிட்டான் வினையுவமத்தொகை.

மழைக் கை

கற்பக வள்ளல் பயனுவமத்தொகை.

துடி யிடை

குரும்பைத் தலை மெய்யுவமத்தொகை.

பொற் சுணங்கு

பவள வாய் உருவுவமத்தொகை.

மரகதக் கிளிமொழி

இருண் மழைக் கை பன்மொழித்தொடர்.

இவை விரியுமிடத்துப், புலிபோலுங கொற்றன், மழைபோலுங்கை, துடிபோலுமிடை, பொன்போலுஞ் சுணங்கு, மரகதம்போலுங் கிளிபோலு மொழி என விரியும், செயப்படுபொருள் குறித்தவிடத்துப், புலியைப்போலுங் கொற்றன் என ஐயுருபும் உடன் விரியும். பிறவும் அன்ன.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) உவம உருபு – (வினை, பயன், மெய், உரு, என்பவற்றைப் பற்றி வருகிற) உவமவுருபுகள், இலது– தொக்க தொடர் மொழிகள், உவமத் தொகை – உவமைத் தொகைகளாம். (எ–று)

(பொ–ரை.) (வினை, பயன், மெய், உரு என்பன பற்றிவரும் உவமவுருபுகள் தொக்க தொடர்சொற்கள் உவமைத்தொகை களாம்.

எனவே உவமேயத்துக்கும் உவமானத்துக்கும் ஒப்புமையை விளக்குகின்ற 'போல' முதலியவுருபுகள் இடையிலே தொக்கு நிற்க உவமானச் சொல்லும் உவமேயச் சொல்லும் தொடர்வது உவமத்தொகைகளாம்.

(உ – ம்.)

புலிக் கொற்றன்

குருவி கூப்பிட்டான் வினைவமத் தொகை.

மழைக் கை

கற்பக வள்ளல் பயனுவமர் தொகை.

துடி யிடை

உரற்கால் யானை மெய்ப்புவமத்தொகை.

பொற் சுணங்கு

பவளவாய் உருவுமத் தொகை. (உரு – நிறம்.)

மரகதக்கிறிமொழி

இருள்மழைக்கை பன் மொழித் தொடர்.

இவை புலபோலுங் கொற்றன், மழைபோலுங் கை, துடி போலு மிடை, பென்போலுஞ் சுணங்கு, மரகதம் போலுங் கிளி போலுமொழி எனவிரியும். செயப்படுபொருள் கறித்தால் புலி யைப் போலுமென ஐ உருபுந் தோன்றுஃம.

உவமை யுருபுகளாவன, போல, புரைய, ஒப்ப, உறழ, மான, கடுப்ப, இயைய, ஏய்பப, நேர, நிகர, அன்ன, இன்ன என்பவும், பிறவும், உவம வுருபுகளாம்.

எண்ணல் உடுத்தல் முகத்த னீட்டல்எனு நான்களவையுள் உம்மில தத்தொகை.

## கா. நமச்சிவாய முதலியார்

**உவம உருபு** – (வினை பயன் மெய்உரு என்பவற்றைப் பற்றி வருகிற) உவம உருபுகள், **இலது** – தொக்க தொடர் மொழிகள், **உவமத் தொகை** – உவமத்தொகைகளாம்.

**உதாரணம்**

| | |
|---|---|
| புலிக் கொற்றன்<br>குருவி கூப்பிட்டான் | வினையுவமத் தொகை |
| மழைக் கை<br>கற்பக வள்ளல் | பயனுவமத் தொகை |
| துடி யிடை<br>உரற்கால் யானை | மெய்யுவமத் தொகை |
| பொற் சுணங்கு<br>பவள வாய் | உருவுவமத் தொகை |
| மரகதக் கிளிமொழி<br>இருள் மழைக்கை | பன்மொழித் தொடர் |

இவை, புலிபோலுங் கொற்றன், மழைபோலுங்கை, துடிபோலும் இடை, பொன்போலுஞ் சுணங்கு, மரகதம் போலங் கிளிபோலு மொழி என விரியும். செயப்படுபொருள் குறித்தால் புலியைப் போலுமென ஐயுருபுந் தோன்றும்.

## மோசசு பொன்னையா

வினை, பயன், மெய் (வடிவம்), உரு (நிறம்) என்பன பற்றி வரும் உவம உருபுகள்3 தொக்கு, ஒட்டி ஒரு சொல்லாய்த் தொகைப்பட்டு வருவது உவமத்தொகையாம்; போல முதலியனவும் அவை போல்வன பிறவும் உவம உருபுகளாம், எ—று.

இடைச்சொல்லும் மொழியே இவை சேர்ந்த சிறியன் சிறியள், சிறியர், சிறிது, சிறிய என்பன கொள் பெயர்களேயன்றி முற்றுக்களில்லை இவற்றைச் சங்கர நமச்சிவாயர் முற்றென்றது பொருந்தாது. வட்டப்பலகைக்கு விரி வட்டப்பலகை எனவே தெய்வச்சிலையார் எழுதியுள்ளதைத் தொல். சொல். 410 உரையிற் காண்க

எ—டு

தொகை விரி

புலிப்பாய்த்துள் (அன்ன) – வினை புலிப்பாய்த்துளன்ன பாய்த்துள்

*மழைவண்கை* ( " ) – பயன் – மழை யன்ன வண்கை

துடியிடை ( " ) – மெய் :– துடி நிகர் இடை

பவளவாய் ( " ) – உரு பவளம்போல் வாய்

தொல்காப்பியர்

உவமத் தொகையே யுவம வியல,

என்றார். அதனால், *விரியின்*,

வினைபயன் மெய்யுரு வென்றே நான்கே

வகைபெற வந்த உவமத் தோற்றம்,

என்ற நூற்பாவின் பொருளுக்கேற்ப *உவமப்* பொருள் பெற்று விளங்குவதே உவமத்தொகை என்றார் அவர் என்பது போதரும். இவ்வாசிரியரும் உவமப் பொருள் தரும் தொடர்களில் உவம உருபு இல்லையாயினும், அவை உவமப்பொருளில் வரின், அவற்றை உவமத்தொகைகள் எனக் *கொள்க என்பாராய்* இவ்வாறு நூற்பா செய்தார். எனவே, வினை, பயன், மெய் உரு என்னும் அடிப்படையிலமைந்த உவமப்பொருளைத் *தன்* ஆற்றலால் தரவல்லது எதுவோ, அதுவே உவமத்தொகையிற் கரந்து நிற்பதாம் என்பதும், உவமத்தின் உபமப் பொருளை உணர்த்தவல்லன உவம உருபுகளே ஆதலின், உவமத் தொகைகளிற் கந்துநிற்பன உவம உருபுகளேயாம் என்பதும் போதரும்.

*தொல்காப்பியர்*. உவமவியலில் நால்வகை உவமங்களுக்கும் உரிய உருபுகள் இவையிவை எனக் கூறியுள்ளார். இவ்வாசிரியர் கூறியுள்ள பன்னிரு *உவம* உருபுகளுள் இயைய, இன்ன என்னும் இரண்டும் நீங்கலாக ஏனைப்பத்தும் தொல்காப்பியர்

கூறும் உவம உருபுகளுள் அடங்கியுள்ளன. அவையும், அவர் 'அன்ன பிறவும்' என்றதனால் கொள்ளப்படுபவையாகலாம். 'பல்குறிப்பின' எனவும், தத்தம் மரபின் தோன்றுமன் பொருளே' எனவும் அவர் கூறியுள்ளதால், இடைச்சொற்களான இவை உருபுகளாக அமைந்து தத்தம் மரபின் குறிப்புவழி உவமப் பொருளைத்தந்து நிற்பனவாதலால், இவற்றைக் குறிப்பு வினையெச்சமென்றோ குறிப்புப் பெயரெச்சமென்றோ வகைப்படுத்துவது பொருந்தாது. தொல்காப்பியர், இவ்வுருபுகளை 'ஒப்பில் வழியாற் பொருள் செய்குந3' எனக் குறிப்பிடுவதாலும் அஃது உறுதிப்படும்.

இவ்வுருபுகளின் ஆற்றலுக்குட்பட்ட பொருளைப் பிறசொற்கொணர்ந்து விவரிக்கப்புகுவார், இரண்டாம் வேற்றுமையுருபையும் உடன் விரித்து இடர்ப்படுவர். செயப்படுபொருள் கருதிக் கூறியவிடத்து உவமத் தொகையாகா தன்றே, அவ்வழி, புலிக்கொற்றன் என்பதைப் புலியைப்போல் பாயும் கொற்றன் எனவிரித்து வேற்றுமைத் தொகைப் பொருள் காண்டல் பொருந்மேயன்றி, உவமத் தொகையை அவ்வாறு விரித்தல் பொருந்தாமை அறிக, புறநானூற்றில்,

என்போற் பெருவிறுப் புறுக நின்னை
யின்ன துற்ற வறனில் கூற்றே,

எனவும்,

நம்ம னோரு மற்றினைய ராயி
னெம்ம னோரிவட் பிறவலர் மாதோ,

எனவும், போல என்பதும், அன்னோர் என்பதும் முறையே குறிப்பு வினையெச்சமாகவும், இடைச்சொல் முன்னிலையாகப் பிறந்த குறிப்புப் பெயராகவும் அமைந்து என்னைப்போல, நும்மை எம்மை யன்னோர் என இரண்டாவது விரித்தற் கேற்புடையனவாக வழங்கும் வழக்குக் கண்டு, உவம உருபுகளான போல, அன்ன என்பவற்றிற்கு அவற்றிற்கும் வேறுபாடு கண்டுகொள்க.

இவ்வாசிரியர், 'உவம உருபிலது உவமத்தொகையே' என்றதனால் உவமப்பொருளில் உவமையும், உவமிக்கப்படும் பொருளும் மாறி நின்று முகத்தாமரை, கைமாரி என வருவனவற்றையும் உவமத் தொகையே என்க.

**366.** **போலப் புரைய வொப்ப வுறழ**
**மானக் கடுப்ப வியைய வேய்ப்ப**
**நேர நிகர வன்ன வின்ன**
**என்பவும் பிறவு முவமத் துருபே.**

போலப் புரைய ஒப்ப உறழ
மானக் கடுப்ப இயைய ஏய்ப்ப
நேர நிகர *அன்ன இன்ன*
என்பவும் பிறவும் உவமத்து உருபே

*pōla puraiya oppa uūaḷa*
māṉa katuppa iyaiya ēyppa
nēra nikara aṉṉa iṉṉa
eṉpa um piūa um *uvamattu urupu* ē

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Particles of Comparison

The following are the principal participles of comparison; pôla, puraiya, oppa, urala, mana, kadupa, iyaiya, êyppa, nêra, nikara, anna and inna.

## ஒப்புமைப் பகுதி

அவைதாம்
அன்ன ஏய்ப்ப உறழ ஒப்ப
என்ன மான என்றவை எனாஅ
ஒன்ற ஒடுங்க ஒட்ட ஆங்க
என்ற வியப்ப என்றவை எனாஅ
எள்ள விழைய விறப்ப நிகர்ப்ப
கள்ள கடுப்ப ஆங்கவை எனாஅ
காய்ப்ப மதிப்ப தகைய மருள
மாற்ற மறுப்ப ஆங்கவை எனாஅ
புல்ல பொருவ பொற்ப போல
வெல்ல வீழ ஆங்கவை எனாஅ

நாட நளிய நடுங்க நந்த
ஓட புரைய என்றவை எனாஅ
ஆறாறு அவையும் அன்ன பிறவும்
கூறுங் காலைப் பல் குறிப்பினவே

(தொல். பொருள்.: )

## மயிலை நாதர்

எ–ன், மேல் உவமவுருபென்றார், அவை இவையென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.:– இச்சொன்ன பன்னிரண்டும் இவைபோல்வன பிறவும் உவமவுருபுகளாம், எ–று.

வ–று.:–

"வேந்தன், மனம்போல வந்த மகன்" (பு.வெ. 2:5), "உயிர்புரை யூகியோ டெண்ணி", "என்னொப்பா ரிவ்வுலகி லில்" "பகலுரு வுறழ நிலவுக்கான்று" (அகநா. 122), "வரைபுகுபுள்ளினமான" "அவிரறல் கடுக்கு மம்மென் கூந்தல்", "காரியையுங் காவலன்றன் கை", "செம்பவழ மேய்ப்பத் திகழ்ந்திலங்கும்", "பொன்னேர்மேனி" (குறுந். 119), "நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்" (நாலடி. 64), "அரிமா னிடித்தன்ன வஞ்சிலை" (கலி. 15), "இன்னவிறலு முளகொல்" (புறநா. 19) எனவரும்.

பிறவென்றதனால் வேறு வருவனவுங் கொள்க.

## சங்கர நமச்சிவாயர்

எ–னின், உவம உருபு இயற்சொல் மாத்திரையாய் நில்லாது திரிசொல்லால் பலவாதலின் அவை இவை என உணர்–ற்று.

இ–ள்.: போல என்பது முதலிய செய்வெனெச்சம் பத்தும், அன்ன இன்ன என்னும் பெயரெச்சக் குறிப்பு இரண்டும், இவை போல்வன பிறவும் உவம உருபுகளாம், எ–று.

இன்ன என்பது அருகியன்றி வாராமையின் பிற்கூறினார்.

பிற என்றமையானே போலப் புரைய என்றற் றொடக்கத்து வினையடியாகப்

பாடவேறுபாடு.:–

1. ரிவ்வுலகில்

பிறத்தற்குரிய ஏனை வினையெச்ச விகற்பங்களும் பெயரெச்ச விகற்பங்களும் பொருவ ஏற்ப அனைய என்றற் றொடக்கத்தனவும் கொள்க.

வ–று.:–

குருவிபோலக் கூப்பிட்டான், குருவி புரையக் கூப்பிட்டான், புலியன்ன கொற்றன் எனப் பெயரொடு வினை புணருங்கால் வினையெச்ச உருபுகளனைத்தினையும் பெயரொடு பெயர் புணருங்கால் பெயரெச்ச உருபுகள் அனைத்தினையும் விரித்துக்கொள்க.

பெயரொடு பெயர் புணரினும் புலியைப்போலப் பாயும் சாத்தன், மழையைப்போலக் கொடுக்கும்கை, துடியைப்போலச் சுருங்கிய இடை, பொன்னைப்போல விளங்கிய சுணங்கு என வினை யெச்சவுருபு விரிந்தல்லது நால்வகை உவமையும் விளங்கா மையின் அவ்வுருபை முன்னரெடுத்து விதந்தார் என்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், மேல் உவம உருபென்றார்; அவை இவையெனக் கூறுகின்றது.

இ–ள்.: போல – "வேந்தன் மனம்போல வந்த மகன்" (பு – வெ. 26), புரைய – "உயிர்புரை யூகியோ டெண்ணி", ஒப்ப – "என்னொப்ப வுளரரியர் உலகில்", உறழ – "கனவுறழ் நிலவுக்கான்று", மான – "புள்ளிமான செடியர்", கடுப்ப – "அறல்கடுக்குங் கூந்தல்", இயைய – "காரியையுங் காவலன் கை", ஏய்ப்ப – "செம்பவள மேய்ப்பத் திகழு மதரம்", நேர – "பொன்னேர்மேனிப் புரவலனே", நிகர – "கார்நிகர் வண்கை", அன்ன – "அரிமா விடித்தன்ன வோசை", இன்ன – "வெஞ்சிலையின்ன விறலுமிழ்தோள்" என்பவும், பிறவும் – இச்சொன்ன பன்னிரண்டும் இவை போல்வன பிறவும், உவமத்துருபே – உவம உருபுகளாம், எ–று.

## விசாகப் பெருமாளையர்

இது, உவமவுருபின் றிரிசொற்களை யுணர்த்துகின்றது.

இ–ள்.: போலப் புரைய..... நிகர – இப் போல முதலாகிய செய வெனெச்சம் பத்தும், அன்னவின்னவென்பவும் – அன்ன இன்ன என்கிற பெயரெச்சக் குறிப்பிரண்டும், பிறவும் – இவை போல்வன பிறவும், உவமத்துருபு –உவமவுருபுகளாம், எ–று.

(பிறவென்றதனால், போல முதலானவைகளின் முதனிலையிற் பிறக்கின்ற மற்றை வினையெச்சங்களும், வினைமுற்றுகளும் பெயரெச்சங்களும் பொருவ, ஏற்ப, அனைய முதலானவையுங் கொள்க.)

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

உவமவுருபுகள் இவையெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

போலப் புரைய வொப்ப வுறழ

மானக் கடுப்ப வியைய வேய்ப்ப

நேர நிகர வன்ன வின்ன

என்பவும் பிறவு முவமத் துருபே.

(போலப் புரைய ஒப்ப உறழ மானக் கடுப்ப இயைய ஏய்ப்ப

நேர நிகர அன்ன இன்ன

என்பவும் பிறவும் உவமத்துருபே.)

இ–ள்.:– இப்போல முதலாகிய செயவெனெச்சம் பத்தும் அன்ன இன்ன என்னும் பெயரெச்சக் குறிப்பிரண்டும் இவை போல்வன பிறவும் உவமை யுருபுகளாம். எ–று.

பிறவென்றதனால், போல், புரை, பொருவ, ஏற்ப, அனைய, இகல, எதிர, சிவண, மலைய முதலானவையுங் கொள்க.

## முகவை இராமானுச கவிராயர்

இது, உவமையுருபு இயற்சொல் மாத்திரையாய் நில்லாமல், திரிசொல்லாற் பலவாமாதலால் அவையிவை யென வுணர்த்திற்று.

இ–ள்.: போல வென்பது முதலிய செயவென்னும் வாய்பாட்டு வினையெச்சம் பத்தும், அன்ன இன்ன என்னும் பெயரெச்சக் குறிப்பிரண்டும் இவை போல்வன பிறவும் உவம உருபுகளாம், எ–று.

'பிற'வென்றமையால் போல், புரை, என்னும் தொடக்கத்து வினையடியாற் பிறத்தற்கு உரிய மற்ற வினையெச்ச விகற்பங்களும் பெயரெச்ச விகற்பங்களும், பொருவ ஏற்ப அனைய இகல எதிர சிவண மலைய துணை தூக்கு கேழ் அற்று செத்து என்னுந் தொடக்கத்தனவுங் கொள்க.

வ–று.:–

குருவிபோலக் கூப்பிட்டான், குருவிபுரையக் கூப்பிட்டான், புலியன்னகொற்றன், எனப் பெயரொடு வினை புணருங்கால் வினையெச்சவுருபுகள்அனைத்தினையும், பெயரொடு பெயர் புணருங்கால் பெயரெச்ச உருபுகள் அனைத்தினையும் விரித்துக்கொள்க. பெயரொடு பெயர் புணருங்காலத்தும், புலியைப் போலுப் பாயுஞ் சாத்தன் மழையைப்போல அளிக்குங்கை, துடியைப் போலச் சுருங்கிய இடை,

பொன்னைப் போல விளங்கிய சுணங்கு என வினையெச்ச வுருபு விரிந்தல்லது நால்வகை யுவமையும் விளங்காமையால், 'போலப் புரைய' எனஅந்த வினையெச்ச வுருபுகளை முன்னரெடுத்துக் கூறினார்.

## கா. கோபாலாசாரியர்

## தி.கோ. ரங்காசாரியர்

உரை :– போல, * * * * * நிகர – 'போல' முதலிய வினையெச்சம் பத்தும், **'அன்ன' 'இன்ன' என்பவும்** – இப்பெயரெச்சம் இரண்டும், பிறவும் – இவை போல்வன பிறவும், **உவமத்து உருபு** – உவமவுருபுகளாம்.

குறிப்பு :–

'பிற' என்றதனால் – 'போல்' 'புரை' முதலிய வினையடிகளும், அவ்வினையாற் பிறத்தற்குரிய மற்றை வினையெச்சங்களும், வினைமுற்றுக்களும், பெயரெச்சங்களும், 'பொருவ', 'ஏற்ப', 'அனைய', 'இகல', 'எதிர', 'சிவண', 'மலைய' முதலியவுங் கொள்க. இனி உற்ற, ஆங்கு, சீர் முதலியவும் உவமவுருபென்ப. இவற்றுள் 'சீர்' என்பது உவமவுருபாக வருதலை நாலடியாரில் "பொற்கலத்தூட்டி" என்ற செய்யுளில் "ஆச்சீர்" என்ற விடத்துக்காண்க. இதனை, இலக்கணவிளக்க முடையார் உதாரணமாகக் காட்டி யுள்ளமையு மறிக.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.: போல... நிகர – இப் போல முதலாகிய செயவெனெச்சம் பத்தும். அன்ன இன்ன என்பவும் – அன்ன இன்ன என்னும் பெயரெச்சக் குறிப்பிரண்டும், பிறவும் – இவை போல்வன பிறவும், **உவமத்துருபு** – உவமவுருபுகளாம். எ–று.

'பிற'வென்றதனால், போல் புரை என்றற் றொடக்கத்து வினையடியாற் பிறத்தற்குரிய மற்றை வினையெச்ச விகற்பங்களும், பெயரெச்ச விகற்பங்களும், பொருவ, ஏற்ப, அனைய, இகல, எதிர, சிவண, மலைய முதலானவையுங் கொள்க.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். போல...... நிகர – இப்போல முதலாகிய செயவெனெச்சம் பத்தும், – அன்ன இன்ன என்பவும் – அன்ன இன்ன என்னும் பெயரெச்சக் குறிப்பிரண்டும்,– பிறவும் – இவைபோல்வன பிறவும், – **உவமத்துருபு** – உவமவுருபுகளாம். எ– று.

பிறவொன்றதனால், போல், புரை என்றற்றொடக்கத்து வினையடியாற்பிறத்தற்குரிய மற்றை வினையெச்ச விகற்பங்களும், பெயரெச்ச விகற்பங்களும், பொருவ, ஏற்ப, அனைய, இகல, எதிர, சிவண, மலைய முதலானவையுங் கொள்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: போல ......நிகர –'போல' முதலிய வினையெச்சம் பத்தும், அன்ன இன்ன என்பவும் – இப்பெயரெச்சம் இரண்டும், பிறவும் – இவை போல்வன பிறவும், உவமத்து உருபு – உவமவுருபுகளாம், எ–று.

'பிற' என்றதனால், போல், புரை முதலிய வினையடிகளும், அவ்வடியாற் பிறத்தற்கு உரிய மற்றை வினையெச்சங்களும், வினைமுற்றுக்களும், பெயரெச்சங்களும், பொருவ, ஏற்ப, அனைய, இகல, எதிர, சிவண, மலைய முதலியவையுங் கொள்க.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.: போல்.............நிகர – இப்போல முதலாகிய செயவென் வினையெச்சம் பத்தும், அன்ன இன்ன என்பவும் – அன்ன இன்ன என்னும் பெயரெச்சக்குறிப் பிரண்டும், பிறவும் – இவை போல்வன பிறவும், உவமத்துருபு – உவமவுருபுகளாம். எ–று.

'பிற' வென்றதனால், போல், புரை என்றற்றொடக்கத்து வினையடியாற் பிறத்தற்குரிய மற்றை வினையெச்ச விகற்பங்களம், பெயரெச்ச விகற்பங்களும், பொருவ. ஏற்ப, அனைய, இகல, எதிர, சிவண, மலைய முதலானையும் கொள்க.

## கா. நமச்சிவாய முதலியார்

போல.... நிகர – போல முதலாகிய இச்செயவெனெச்சம் பத்தும், அன்ன இன்ன என்பவும் – அன்ன இன்ன என்னும் பெயரெச்சக் குறிப்பு இரண்டும். பிறவும் – இவை போல்வன பிறவும், உவமத்துருபு – உவம உருபுகளாம்.

பிற என்றதனால், போல முதலானவைகளின் முதனிலையிற் பிறக்கின்ற மற்றை வினையெச்சங்களும், வினைமுற்றுக்களும், பெயரெச்சங்களும், பொருவ, ஏற்ப, அனைய, இகல, எதிர, சிவண, மலைய முதலானவையுங் கொள்க.

**367. எண்ண லெடுத்தன் முகத்த னீட்டல்**
**எனுநான் களவையு ளும்மில தத்தொகை.**

எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல்
எனும் நான்கு அளவையுள் உம் இலது அத்தொகையே

eṇṇal eṭuttal mukattal nīttal
eṉum nāṉku aḻavai uḻ um ilaṭu a ṭokai

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Cumulative Ellipsis

The Cumulative Ellipsis supresses (the Conjuntive particle) um in compounds denoting any of the four kinds of measurement, viz, the numeral, the weighing, the measuring (proper) and the lineal.

## ஒப்புமைப் பகுதி

இருபெயர் பல்பெய ரளவின் பெயரே
எண்ணியற் பெயரே நிறைப்பெயர்க் கிளவி
எண்ணின் பெயரோடு அவ்வறு கிளவியும்
கண்ணிய நிலைத்தே உம்மைத் தொகையே
(தொல். சொல்.: 417)

............ விரியின் அடைவே
............. உம்மைத் தொகையாம்..........
(நேமி.: 86: 1–2)

இருபெயர் பலபெய ரளவின் பெயரே
யெண்ணியற் பெயரே நிறைப்பெயர்க் கிளவி
யெண்ணின் பெயரோ டவ்வறு கிளவியுங்
கண்ணிய நிலைத்தே யும்மைத் தொகையே
(இ.வி.: 340)

எண்ண லெடுத்த னீட்டன் முகத்தல்
அளவையு ளும்மில தத்தொகை யாகும்
(மு.வீ.: 742)

**............ உம்மைத் தொகையின்**

**கூற்று இரண்டு முதற் பலபேரிடத்து உம்மை தொகுத்துக்**

**குறிக்குநால்வகை யளவைப் பொருள் விரித்துக் காட்டும்**

(சுவாமி.: 66:1–2)

## மயிலை நாதர்

எ–ன், உம்மைத்தொகையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: எண்ணியும் எடுத்தும் முகந்தும் நீட்டியும் அளக்கப்படும் நால்வகை அளவையின்கண்ணும் உம்மை தொக்கு நிற்பது, உம்மைத் தொகையாவது, எ–று.

வ–று.:–

உவாப்பதினான்கு, கபிலபரணர், கல்லாடமாமூலர், பதினொன்று, பதினைந்து, ஆயிரத்தொருநுற்றைம்பத் தொன்று எனவும், கழஞ்சேகால், கழஞ்சரையே யரைமாவரைக் காணி முந்திரிகை எனவும், நாழியாழாக்கு, கலனேமுக்குறுணி நானாழியாழாக்கே முச்செவிடு எனவும், சாணரை எனவும் வரும். இவை விரியுங்கால் உவாவும் பதினான்கும், கபிலனும் பரணனும், கல்லாடனும் மாமூலனுமென விரியும். பிறவுமன்ன.

உவாவையும் பதினான்கையுமென விரியுமேல் ஆண்டு வேற்றுமைத் தொகையாம் பிறவெனின், [1]வேங்கைமல ரென்னும் வேற்றுமைத்தொகை வேங்கையது மலரெனவிரியும்; உம்மை வேறில்லை, உவாவும் பதினான்கு மென்புழி உம்மை ஒருதலையாகவே வேண்டலின், சிறப்பினால் உம்மைத் தொகையாகவே படுமென்பது.

## சங்கர நமச்சிவாயர்

எ–னின், உம்மைத்தொகையாமாறு உணர்–ற்று.

இ–ள்.:– எண்ணலளவை, எடுத்தலளவை, முகத்தலளவை, நீட்டலளவை என்னும் நால்வகை அளவைகளான் பொருள்களை அளக்குங்கால் தொடரும் அவ்வளவைப் பெயர்களுள் உம்மையாகிய உருபு தொக்கு நிற்பன உம்மைத்தொகைகளாம், எ–று.

---

பாடவேறுபாடு.:–

1.வேங்கைமலரென்பது வேற்றுமைத்தொகைக்கு வேங்கையது

எண்ணலளவையான் அளத்தலேயன்றி அவ்வளவையை எடுத்தல் முதலிய கருவியின்பாற்படுத்து அளத்தலின் அளவை நான்கு என்றதன்றி எண்ணலளவையே அளவையாதலின் அது முற்கூறப்பட்டது.

வ—று.:—

கபிலபரணர், இராப்பகல், புலவிற்கெண்டை, அறுபத்துமூவர், ஆயிரத்தைஞ்ஞூற்று ஐம்பத்தொன்றேகாலே அரைக்கால் அரைமாகாணி முந்திரி எனவும்; கழஞ்சேகால், கழஞ்சரையே அரைமா அரைக்காணி முந்திரி எனவும்; நாழியாழாக்கு, கலனே முக்குறுணி நாழியாழாக்கே முச்செவிடு எனவும்; சாணரை, சாணரையே அரைக்கால் எனவும் வரும். இவை விரியுழிக் கபிலனும் பரணனும், இராவும் பகலும், புலியும் வில்லும் கெண்டையும், அறுபதின்மரும் மூவரும் என விரியும். பிறவும் அன்ன.

இவற்றுள் அறுபது என்பது எண்ணலளவையாய்த் தொடராது எண்ணுறழ்ச்சியாய்த் தொடர்ந்தமையின் உம்மைத்தொகை அன்று பண்புத்தொகையாம் என்க.

கபிலபரணர் என்பது எண்ணுப் பெயராகியது என்னை யெனின்:— கபிலபரணர் இருவரும் வந்தார் எனத் தொகை பெறுதலின் என்க. இவைபோல்வன பிறவும் அன்ன.

கபிலபரணர்ப் பரவினான் என வருவழிக் கபிலனையும் பரணனையும் பரவினான் என வேற்றுமையுருபும் உடன் விரியுமாலோ எனின்:— பரவினான் என்னும் வருமொழி நோக்கி வேற்றுமைத் தொகையாகவும். கபிலபரணர் என்னும் நிலை மொழி இரண்டனையும் நோக்கி உம்மைத்தொகையாகவும் கொள்ளப்படும் என்க.

இம்வும்மை இடையினும் இறுதியினும் ஒருங்கு தொகும் என்பார் அதிகரித்த முறையானே இடைக்கண் தொகும் வேற்றுமைத்தொகை முதலிய நான்கிற்கும், இடையேதொகும் என்ற பொதுவிதி மாற்றி இறுதிக்கண் தொகும் எனக் கூறும் அன்மொழித்தொகைக்கும் இடையே இத்தொகையை வைத்தார் என்க. எண்ணிடைச்சொற்கள் உம்மையேயன்றிப் பிறவும் உளவேனும் அஃது இயற்சொல் ஆதலின் உம்மைத் தொகை எனப்பட்டது.

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், முறையே உம்மைத் தொகைநிலைத் தொடர்மொழி ஆமாறு கூறுகின்றது.

இ–ள்.: **எண்ணல்** – எண்ணி அளக்கப்படும் அளவின்கண்ணும், **எடுத்தல்** – எடுத்து அளக்கப்படும் அளவின்கண்ணும், **முகத்தல்** – முகந்து அளக்கப்படும் அளவின்கண்ணும், **நீட்டல்** – நீட்டி அளக்கப்படும் அளவின் கண்ணும், **எனுநான்களவையில்** – என்று சொல்லப்பட்ட நால்வகை அளவின்கண்ணும், **உம்மில தத்தொகையே** – வரும் உம்மை தொக்கு நிற்பது உம்மைத் தொகைநிலைத் தொடர்மொழியாம், எ–று.

உ–ம்.:–

உவப்பதினான்கு, கபிலபரணர், கல்லாட மாமூலர், சேர சோழ பாண்டியர், பதினொன்று, பதினைவர், ஆயிரத்தொரு நூற்றம்பத்தொன்றரையரைக்கால் எனவும்; கழஞ்சேகால், கழஞ்சரையே யரைமாவரைக்காணி முந்திரிகை எனவும்; நாழியாழாக்கு, ஆயிரத்து முந்நூற்று முப்பது முக்கலனே முக்குறுணி முந்நாழியுழக் காழாக்கு முச்செவிடு எனவும், சாணரை எனவும் வரும். இவை விரிவுழி உவாவும் பதினான்கும், கபிலரும் பரணரும், கல்லாடரும் மாமூலரும் என விரியும். பிறவுமன்ன.

## விசாகப் பெருமாளையர்

இது, உம்மைத் தொகையாமாறு உணர்த்துகின்றது,

இ–ள்.:– **எண்ணல்** – எண்ணலளவையும், எடுத்தல்–எடுத்தலளவையும், **முகத்தல்** – முகத்தலளவையும், **நீட்டல்**–நீட்டலளவையும், **எனும்** – என்கிற, **நான்களவையுள்**–நான்களவைப் பெயர்களுள், **உம்மிலது** – உம்மையாகிய உருபு தொக்கு நிற்பவை, **அத்தொகை** – அவ் வும்மைத்தொகைகளாம், எ–று.

வ–று.:–

ஒன்றேகால், கபிலபரணர்– எண்ணலும்மைத்தொகை.
கழஞ்சேகால், தொடியேகஃசு–எடுத்தலும்மைத்தொகை.
கலனே தூணி, நாழியாழாக்கு–முகத்தலும்மைத்தொகை.
சாணங்குலம், சாணரை– நீட்டலும்மைத்தொகை.
சேரசோழபாண்டியர், இது பன்மொழித் தொடர்.

இவை ஒன்றுங்காலும், கழஞ்சுங்காலும், கலனுந்தூணியும், சாணுமங்குலமும், சேரனுஞ் சோழனும் பாண்டியனும் என விரியும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

உம்மைத்தொகை யிலக்கணக்கணங் கூறுஞ் சூத்திரம் யாது?

எண்ண லெடுத்தன் முகத்த னீட்டல்

எனுநான் களவைபு ளும்மில தத்தொகை.

(எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல்

எனும் நான்கு அளவையுள் உம் இலது அத்தொகை.)

இ—ள்.:— எண்ணலளவை எடுத்தலளவை முகத்தலளவை நீட்டலளவை யென்னும் நால்வகை யளவைகளாற் பொருள்களை அளக்குமிடத்துத் தொடரும் அவ்வளவைப்பெயர்களுள் உம் என்னும் இடைச்சொல் தொக்குநிற்பவை அவ்வும்மைத் தொகைச் சொற்களாம், எ—று.

(வரலாறு)

ஒன்றேகால், கபிலபரணர் – எண்ணலும்மைத்தொகை.

கழஞ்சேகால், தொடியேகஃகஃசு – எடுத்தலும்மைத்தொகை.

கலனே தூணி, நாழியாழாக்கு – முகத்தலும்மைத்தொகை.

சாணங்குலம், சாணரை – நீட்டலும்மைத்தொகை

சேரசோழபாண்டியர், புலிவிற்கெண்டை – பன்மொழித்தொடர்.

இவை, விரியுமிடத்து, ஒன்றுங் காலும், கபிலனும் பரணனும், கழஞ்சுங் காலும், தொடியுங் கஃகஃசும், கலனுந் தூணியும், நாழியும் ஆழாக்கும், சாணு மங்குலமும், சாணும் அரையும், சேரனுஞ் சோழனும் பாண்டியனும், புலியும் வில்லும் கெண்டையும் என விரியும்.

கபிலபரணர்ப் பரவினான் என வரும்வழிக், கபிலனையும் பரணனையும் பரவினான் என வேற்றுமை யுருபும் உடன்விரியு மன்றோ எனின், பரவினாரென்னும் வருமொழிநோக்கி வேற்றுமைத் தொகையாகவும், கபிலபரணரென்னு நிலைமொழி யிரண்டையுநோக்கி உம்மைத்தொகையாகவும் கொள்ளப்படு மென்க.

வேற்றுமைத்தொகை முதலாயின இரண்டிறந்த பலசொல்லாற் றொகுதல் சிறுபான்மை எனவும், உம்மைத்தொகை இரு சொல்லாலும் பலசொல்லாலும் தொகுமெனவுங்கொள்க.

## முகவை இராமானுச கவிராயர்

இது, உம்மைத்தொகை யாமாறுணர்த்திற்று.

இ—ள்.:— எண்ணலளவை எடுத்தலளவை முகத்தலளவை நீட்டலளவை என்னும் நால்வகை யளவைகளாற் பொருள்களை யளக்குங்கால், தொடர்பட்டு நிற்கும் அவ்வளவைப் பெயர்களுள், **உம்மிலதத்தொகை** – உம் என்னும் உருபுதொக்குநிற்பன அந்த உம்மைத்தொகைகளாம், எ—று.

வ–று.:–

கபிலபாணர், இராப்பகல், புலிவிற்கெண்டை, அறுபத்துமூவர், ஆயிரத்தை ஞ்ஞூற்றைம்பத்தொன்றே காலேயரைக் காலரை மாசாணி முந்திரிகை எனவும், கழஞ்சேகால் கழஞ்சரையே யரைமா வரைக்காணி முந்திரிகை எனவும், நாழியாழாக்கு கலனே முக்குறுணி நாழியாழாக்கே முச்சிவிடு எனவும், சாணரை சாணரையே யரைக்கால் எனவும் வரும். இவைவிரியுங்கால் கபிலனும் பாணனும் இரவும்பகலும் புலியும் வில்லுங் கெண்டையும், அறு பதின்மரும் மூவரும், ஆயிரமும் ஐஞ்ஞூறும்ஐம்பதும் ஒன்றும் காலும் அரைக்காலும் அரைமாகாணியும் முந்திரிகையும் என விரியும். பிறவுமன்ன.

கபிலபாணர் – என்பது இரண்டீறும் விகாரப்பட்டு நிற்றலிற் கபிலனும்பாணனுமென விரித்ததென்னெனின், அது '**உயர்திணை யும்மைத்தொகை**' யென்னுஞ் சூத்திரத்தால் மேற் பெறப்படுமென்க. கபிலபாணர்ப் பரவினான் எனவரு வழிக், கபிலனையும் பாணனையும் பரவினான் என வேற்றுமையுருபுடன் விரிதலினும்மைத் தொகை யென்ற தென்னெனின், பரவினானென்னும் வருமொழி நோக்கி வேற்றுமைத்தொகையாகவும் கபிலபாணரென்னும் – நிலைமொழி நோக்கியும்மைத் தொகையாகவும் கொள்ளப்படு மென்க. இந்த உம்மை இடையிலும் இறுதியிலுந் தொகுமென்று சொல்ல வந்தவர் இடையிலே தொகுமென்ற வேற்றுமை வினை பண்புஉவமை யென்ற நான்கு தொகைக்கும் இறுதியிலே தொகு மெனக் கூறும் அன்மொழித் தொகைக்கும் நடுவே இத்தொகையை வைத்தாரெனக் காண்க. இவ்வாறு வைத்தெண்ணப்படும் எண்ணிடைச்சொற்கள் பலவுமுளவாக இதனை யும்மைத்தொகை யென்றதென்னெனின் இது இயற்சொல்லாதலால் அத் தலைமைப் பற்றிக், கமுகந்தோட்ட மென்றாற் போல உம்மைத்தொகை யெனப் பெயர்தந்த தென்க. எடுத்தல்முதலிய அளவைகளிருப்ப எண்ணலளவையை முன் வைத்த தென்னெனின், தானொன்றெனத் தனித்தும் எல்லா வெழுத்தினுங் கலந்தும் நிற்றலால் அத்தலைமைப் பற்றி அகரம் எழுத்துகட் கெல்லா முன் வைக்கப்பட்டது போல் எண்ணலளவை எனத் தனித்தும் எடுத்தல் முதலிய மூன்றினும் ஒரு துலாம், ஒருகலம், ஒருசாண் எனக் கலந்தும் நிற்றலால் முன் வைக்கப்பட்டதென்க. இனி ஆசிரியர் தொல்காப்பியனார்,

**"இருபெயர் பலபெய ரளவின் பெயரே**
**யெண்ணியற் பெயரே நிறைப்பெயர்க் கிளவி**

யெண்ணின் பெயரோ டவ்வறு கிளவியுங்
கண்ணிய நிலைத்தே யும்மைத் தொகையே"

என அறுவகையாற் கூறலின், இவர் 'நால்வகை யளவையுளும் மில தத்தொகை' யென்றல் மாறுகொளக் கூறலன்றோ எனின் அவர் எண்ணலளவையை இருபெயர் பலபெயர் எண்ணியற்பெயர் எண்ணின்பெயர் என நான்காகவகுத்தும், முகத்தலளவை, நீட்டலளவை என்னு மிரண்டையும் அளவின் பெயரெனத் தொகுத்துங் கூறலால் அன்றென்க.

## கா. கோபாலாசாரியர்

## தி.கோ. ரங்காசாரியர்

உரை :– எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல் எனும் நான்கு அளவையுள் – எண்ணலளவை எடுத்தலளவை முகத்தலளவை நீட்டலளவை என்கிற நால்வகை அளவைகளாற் பொருள்களை அளக்குமிடத்துத் தொடருகின்ற அவ்வளவைப் பெயர்களுள், உம் இலது – உம்மையாகிய உருபு தொக்கு நிற்பவை, அத்தொகை – அவ்வும்மைத் தொகைகளாம்.

உதாரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| இராப்பகல் | – | உம் | – எண்ணல் உம்மைத்தொகை | |
| கழஞ்சேகால் | – | ,, | – எடுத்தல் ,, ,, | |
| கலனே குறுணி | – | ,, | – முகத்தல் ,, ,, | |
| சணங்குலம் | – | ,, | – நீட்டல் ,, ,, | |
| சேரசோழபாண்டியர் | – | ,, | பன்மொழித்தொடர். | |

குறிப்பு :–

இவை முறையே இரவும் பகலும், கழஞ்சுங் காலும், கலனுங் குறுணியும், சாணும் அங்குலமும், சேரனும் சோழனும் பாண்டியனும் என விரியும். வினைத்தொகையும் பண்புத் தொகையும் விரிந்தால் தெரிநிலைப் பெயரெச்சத் தொகா நிலைத் தொடரும், உவமத்தொகை விரிந்தால் சிலவிடத்து வினையெச்சத் தொகாநிலைத் தொடரும் சில விடத்துப் பெயரெச்சத் தொகாநிலைத் தொடரும், உம்மைத்தொகை விரிந்தால் இடைச்சொற் றொகாநிலைத் தொடரும் ஆம் என்றறிக.

இத்தொகையில் உம்மை இடையில் மாத்திரமேயன்றி இறுதியிலுந் தொக்குநிற்பதனால், இதனை இடையில் தொகுமென்னும் வேற்றுமைத் தொகை முதலிய நான்கிற்கும், இறுதியில் தொகுமென்னும் அன்மொழித் தொகைக்கும் நடுவிலே வைத்தார் என்றறிக.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.:– எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல் எனும் நான்கு அளவையுள்**– எண்ணலளவை எடுத்தலளவை முகத்தலளவை நீட்டலளவை யென்னும் நால்வகை யளவைகளாற் பொருள்களை அளக்குமிடத்துத் தொடரும் அவ்வளவைப் பெயர்களுள், **உம் இலது அத்தொகை** – உம்மையாகிய உருபு தொக்கு நிற்பவை அவ் வும்மைத் தொகைகளாம், எ–று.

வ–று.:–

ஒன்றே கால், கபிலபரணர்– எண்ணலும்மைத் தொகை.

கழஞ்சே கால், தொடியே கஃகு – எடுத்தலும்மைத் தொகை.

கலனே தூணி, நாழி யாழக்கு – முகத்தலும்மைத்தொகை.

சாணங்குலம், சாணரை – நீட்டலும்மைத்தொகை.

சேரசோழபாண்டியர், புலி விற் கெண்டை – பன்மொழித்தொகை.

இவை, விரியுமிடத்து, ஒன்றுங்காலும், கழஞ்சுங்காலும், கலனுந்தூணியும், சாணுமங்குலமும், சேரனுஞ் சோழனும் பாண்டியனும் என விரியும்,

கபிலபரணர்ப் பரவினான் என வரும்வழிக், கபிலனையும் பரணனையும் பரவினான் என வேற்றுமையுருபும் உடன் விரியுமன்றோ? எனின், பரவினானென்னும் வருமொழி நோக்கி வேற்றுமைத் தொகையாகவும், கபிலபரணனென்னும் நிலைமொழி யிரண்டையும் நோக்கி உம்மைத்தொகையாகவுங் கொள்ளப்படுமென்க.

## வ. குமாரசாமிப் புலவர்

**இ–ள். எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல் எனும் நான்கு அளவையுள்** – எண்ணலளவை எடுத்தலளவை முகத்தலளவை நீட்டலளவை யென்னும் நால்வகையளவைகளாற் பொருள்களை அளக்குமிடத்துத் தொடரும் அவ்வளவைப் பெயர்களுள், – **உம் இலது அத்தொகை** – உம்மையாகிய உருபு தொக்கு நிற்பவை அவ்வும்மைத்தொகைகளாம். எ–று.

(வரலாறு)

| | |
|---|---|
| ஒன்றே கால்<br>கபில பரணர் | எண்ணலும்மைத்தொகை |
| கழங்சே கால்<br>தொடியே கஃகு | எடுத்தலும்மைத்தொகை |
| கலனே தூணி | |

| | |
|---|---|
| நாழி யாழக்கு | முகத்தலும்மைத்தொகை |
| சாணங்குலம்<br>சாணரை | நீட்டலும்மைத்தொகை |
| சேரசோழ பாண்டியர்<br>புலி–விற் கெண்டை | பன்மொழித் தொடர் |

இவை, விரியுமிடத்து, ஒன்றுங்காலும், கழஞ்சுங்காலும், கலனுந்தூணியும், சாணுமங்குலமும், சேரனுஞ் சோழனும் பாண்டியனும் என விரியும். மற்றைய உதாரணங்களையும் விரித்துக் காண்க.

கபிலபரணர்ப் பரவினான் என வரும்வழிக் கபிலனையும் பரணனையும் பரவினான் என வேற்றுமையுருபும் உடன் விரியு மன்றோ எனின், பரவினானென்னும் வருமொழி நோக்கி வேற்றுமைத்தொகையாகவும், கபிலபரணரென்னு நிலைமொழி யிரண்டையு நோக்கி உம்மைத்தொகையாகவுங் கொள்ளப்படு மென்க.

இனி ஆசிரியர் தொல்காப்பியனார் (சூத்) இருபெயர்பல பெயரளவின் பெயரே, யெண்ணியற்பெயரே நிறைப்பெயர்க் கிளவி, யெண்ணின் பெயரோடவ்வறுகிளவியுங், கண்ணிய நிலைத்தே யும்மைத் தொகையே, என அறுவகையாற் கூறலின், இவர் நால்வகையளவையுளும் மிலதத் தொகையென்றல் மாறு கொளக்கூறலன்றோ எனின், அவர், எண்ணலளவையை, இருபெயர், பலபெயர், எண்ணியற்பெயர், எண்ணின் பெயர், என நான்காக வகுத்தும், முகத்தலளவை, நீட்டலளவை என்னுமிரண்டையும், அளவின் பெயரெனத் தொகுத்துங் கூறலால் அன்றென்க. வடநூலார் உம்மைத் தொகையைத் துவந்துவசமாசமென்பர். "உவமைத்தொகையேயுவமவியல" என்பது தொல்காப்பியம்.

## வை. மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல் எனும் நான்கு அளவையுள் – எண்ணலளவை எடுத்தலளவை முகத்தலளவை நீட்டலளவை என்கிற நால்வகை அளவைகளாற் பொருள்களை அளக்குமிடத்துத் தொடர்கிற அவ்வளவைப் பெயர்களுள், உம் இலது – 'உம்' என்னும் இடைச்சொல் தொக்கு நிற்பவை, அத்தொகை – அவ் வும்மைத்தொகைகளாம்; எ–று.

உ – ம்.:–

ஒன்றேகால், கபிலபரணர் – எண்ண லும்மைத்தொகை.

கழஞ்சேகால், தொடியேகஃசு – எடுத்த லும்மைத்தொகை.

கலனேகுறுணி, நாழியாழாக்கு – முகத்த லும்மைத்தொகை.

சாணங்குலம், சாணரை– நீட்ட லும்மைத்தொகை.

சேரசோழபாண்டியர், புலிவிற்கெண்டை – பன்மொழித்தொடர்.

இவை – ஒன்றும் காலும், கழஞ்சும் காலும், கலனும் குறுணியும், சாணும் அங்குலமும், சேரனும் சோழனும் பாண்டியனும் என விரியும். (கழஞ்சு, தொடி, கஃசு – சில எடையளவுகள்.)

இத்தொகையில் உம்மை இடையில் மாத்திரமே யன்றி இறுதியிலும் தொக்கு நிற்பதனால், இதனை, இடையில் தொகுமென்னும் வேற்றுமைத் தொகை முதலிய நான்கிற்கும், இறுதியில் தொகுமென்னும் அன்மொழித்தொகைக்கும் நடுவிலே வைத்தாரென்று அறிக.

வினைத்தொகையும் பண்புத்தொகையும் விரிந்தால் தெரிநிலைப் பெயரெச்சத் தொகாநிலைத்தொடரும், உவமைத்தொகை விரிந்தால் சிலவிடத்து வினையெச்சத் தொகாநிலைத்தொடரும், சிலவிடத்துப் பெயரெச்சத்தொகா நிலைத் தொடரும், உம்மைத்தொகை விரிந்தால் இடைச்சொல் தொகாநிலைத் தொடருமா மெனக் காண்க.

## பவானந்தம் பிள்ளை

**இ–ள்.:–** எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல் எனும் நான்கு அளவையுள் – எண்ணலளவை எடுத்தலளவை நீடடலளவை யென்னும் நால்வகையளவைகளாற் பொருள்களை அளக்குமிடத்துத் தொடரும் அவ்வளவைப் பெயர்களுள், உம் இலது–உம்மையாகிய உருபு தொக்கு நிற்பவை, அத்தொகை–அவ்வும்மைத்தொகைகளாம். எ–று.

(உ–ம்.) ஒன்றே கால்

கபில பரணர் எண்ணலும்மைத்தொகை.

கழஞ்சே கால்

தொடியே கஃசு எடுத்தலும்மைத்தொகை.

கலனே தூணி

நாழி யாழாக்கு முகத்தலும்மைத்தொகை.

சாணங்குலம்

சாணரை நீட்டலும்மைத்தொகை

சேரசோழபாண்டியர்

புலி விற் கெண்டை பன்மொழித்தொகை.

இவை விரியுமிடத்து, ஒன்றுங்காலும், கழஞ்சுங்காலும், கலனுந்தூணியும், சாணுமங்குலமும், சேரனுஞ் சோழனும் பாண்டியனும் என விரியும். பிறவும் அன்ன.

கபிலபரணர்ப் பரவினான் என வரும்வழிக், கபிலனையும் பரணனையும் பரவினான் என வேற்றுமையுருபும் உடன் விரியுமன்றோ எனின், பாவினானென்னும் வருமொழி நோக்கி வேற்றுமைத்தொகையாகவும், கபிலபரணரென்னு நிலைமொழியிரண்டையு நோக்கி உம்மைத்தொகையாகவுங் கொள்ளப்படுமென்க.

இந்த உம்மை இடையிலும் இறுதியிலும் தொகுமென்று சொல்ல வந்தவர், இடையிலே தொகுவனவாகிய வேற்றுமை வினை பண்பு உவமை என்னும் நான்கு தொகைக்கும், இறுதியிலே தொகுவதென இனிக் கூறப்படும் அன்மொழித்தொகைக்கும் நடுவே, இத்தொகையை வைத்தார் என வறிக.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) எண்ணல் –எண்ணலளவையும், எடுத்தல் – எடுத்தலவையும், முகத்தல் – முகத்தலளவையும், நீட்டல் – நீட்டலளவையும், எனும் நான்கு அளவையுள் – என்கிற நான்கு அளவைப் பெயர்களுள், உம் இலது – உம்மை யாகிய உருபு தொக்கு நிற்பவை, அத் தொகை – அவ்வும்மைத் தொகைகளாம். (எ–று.)

(பொ–ரை.) எண்ணலளவை, எடுத்தலளவை, முகத்தலளவை நீட்டலளவை என்னும் நால்வகை யளவைகளால் பொருள்களை யளக்குங்கால் தொடருமவ்வளவைப் பெயர்களுள் உம்மையாகிய உருபு தொக்கு நிற்பன உம்மைத் தொகைகளாம்.

(உ–ம்.)

ஒன்றே கால்

கபில பரணர் எண்ணலும்மைத்தொகை.

கழஞ்சே கால்

தொடியே கஃசு எடுத்தலும்மைத் தொகை.

கலனே தூணி

நாழி யாழாக்கு முகத்தலும்மைத்தொகை.

சாணங்குலம்

சாணரை நீட்டலும்மைத் தொகை.

சேரசோழபாண்டியர்– பன்மொழித் தொடர்.

இவை ஒன்றுங்காலும், கழஞ்சுங்காலும், கலனுந்தூணியும், காணுமங்குலமும், சேரனும் பாண்டியனும் எனவிரியும் மற்றைவைகளுமிப்படியே.

நிலைமொழியின் இறுதியிலும் வருமொழியின் இறுதியிலும் உம் என்னும் இடைச்சொல் தொக்கு நிற்பது உம்மைத்தொகையாம்.

(வினைத்தொகையும், பண்புத்தொகையும் விரிந்தால் தெரிநிலைப் பெயரெச்சத்தொடரும், உவமைத்தொகை விரிந்தால் சிலவிடத்து வினையெச்சத்தொகா நிலைத் தொடரும் சிலவிடத்துப்பெயரெச்சத் தொகாநிலைத் தொடரும், உம்மைத்தொகை விரிந்தால் இடைச் சொல் தொகாநிலைத் தொடருமா மெனக்காண்க. ஆகிய என்னும் பண்புருகின்கண் ஆக்க வினை இல்லாததினாலே இலக்கணை வகையால் செய்த வென்னும் பெயரெச்ச வாய்பாட்டின் பாற்படுவதோர் வினையிடைச் சொல் என்பர்கவிராயர்.)

## கா. நமச்சிவாய முதலியார்

**எண்ணல்** - எண்ணலளவையும், எடுத்தல் - எடுத்தலளவையும், முகத்தல் - முகத்தலளவையும், நீட்டல் - நீட்டலளவையும், எனும் நான்கு அளவையுள் - என்னும் நான்கு அளவைப் பெயர்களுள், உம் இலது - உம்மையாகிய உருபுதொக்கு நிற்பவை, அத்தொகை - அவ்வும்மைத் தொகைகளாம்.

உதாரணம்

ஒன்றே கால்
கபில பரணர் எண்ணல் உம்மைத் தொகை.

கழஞ்சே கால்
தொடியே கஃசு எடுத்தல் உம்மைத் தொகை.

கலனே தூணி
நாழி யாழாக்கு முகத்தல் உம்மைத் தொகை.

சாண் அங்குலம்
சாண் அரை நீட்டல் உம்மைத் தொகை.

சேர சோழ பாண்டியர்
வில் புலி கெண்டை — பன்மொழித்தொடர் உம்மைத்தொகை

இவை, ஒன்றும்காலும், கழஞ்சும்காலும், கலனும் தூணியும், சாணும் அங்குலமும், சேரனும் சோழனும் பாண்டியனும் என உம்மை விரியும்.

## மோசகு பொன்னையா

எண்ணலளவை, எடுத்தலளவை, முகத்தலளவை, நீட்டலளவை என்னும் நால்வகை அளவைகளால் பொருள்களைக் குறிப்பிடுங்கால், உம் உருபு தொக்கு வருவது உம்மைத் தொகையாம் எ–று.

எ–டு.

1. இரண்டரை, கபிலபரணர் எண்ணலளவை இரண்டும் அரையும், கபிலரும் பரணரும்
2. கழஞ்சரை, தொடியரை எடுத்தலளவை கழஞ்சும் அரையும், தொடியும் அரையும்
3. தூணிப்பதக்கு, நாழிஆழாக்கு முகத்தலளவை தூணியும் பதக்கும், நாழியும் ஆழாக்கும்
4. சாணங்குலம் சாணரை நீட்டலளவை சாணும் அங்குலமும், சாணும் அரையும்

தொல்காப்பியர்,

**இருபெயர் பல்பெய ரளவில் பெயரே**
**யெண்ணியற் பெயரே நிறைப்பெயர்க் கிளவி**
**யெண்ணின் பெயரோ டவ்வறு கிளவியும்**
**கண்ணிய நிலைத்தே யும்மைத் தொகையே,**

என உம்மைத்தொகை பற்றிக் கூறினார். தொல்காப்பியர், எண்ணலவையை இருபெயர், பல்பெயர், எண்ணியற் பெயர், எண்ணின் பெயர் என நான்காக வகுத்தும் முகத்தலளவை நீட்டலளவை என்னும் இரண்டையும் அளவின் பெயரெனத் தொகுத்தும் கூறலான் அறு கிளவி என்றார். இடையிலே தொகும் என்ற வேற்றுமை, வினை, பண்பு, உவமை என்ற நான்கு தொகைகட்கும், இறுதியில் தொகுமெனக் கூறிய அன்மொழித் தொகைக்கும் நடுவில் உம்மைத் தொகையை வைத்ததால் இடையிலும், இறுதியிலும் உம்மை தொகுமென்று கொள்க. எண்ணிடைச் சொற்கள் பலவற்றுள்ளும் உம்மின் சிறப்பு நோக்கி இத்தொகை உம்மைத்தொகையெனப்பட்டது. எண்ணல், எல்லா அளவைகளுக்கும் இன்றியமையாச் சிறப்புடையது ஆதலின், இந்நூற்பாவில் முதலிடம் பெற்றதென்க.

தொல்காப்பியர் பல்பெயர் உம்மைத்தொகை என ஒன்றைத் தனியே கொண்டதால், இரு சொற்கள் ஒட்டி ஒருசொற்போல் நடக்கும் ஏனைத் தொகைகள் போலாது, புலிவிற்கெண்டை எனவும், ஆயிரத்தைந் நூற்றிருபத்தேழு எனவும், அரைமாஅரைக்காணி எனவும் பிறவாறும் பல சொற்கள் ஒட்டி ஒரு சொல்லாய் நடத்தலையும் அமைத்துக்கொள்க.

(17)

## 368. ஐந்தொகை மொழிமேற் பிறதொக லன்மொழி.

ஐந்தொகை மொழி மேல் பிற தொகல் அன்மொழி.

aim ṭokal moḷi mēl piūa ṭokal aṉmoḷi

### இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Metonymical ellipsis**

Metonymical Ellipsis are the afore said five compounds (themselves), but with the addition of other Ellipses occurring at the end of each.

### ஒப்புமைப் பகுதி

பண்புதொக வரூஉங் கிளவி யானும்
உம்மை தொக்க பெயர்வயி னானும்
வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்
ஈற்றுநின் றியலும் அன்மொழித் தொகையே

(தொல்.சொல்.: 418)

ஏனைத் தொகைச்சொற்கள் ஐந்தின் இறுதிக்கண்
ஆன பெயர்தோன்றின் அன்மொழியாம்......

(நேமி.: 87:1–2)

வேற்றுமை முதலிய வைந்தொகை மொழியினு
மீற்றுநின் றியலு மன்மொழித் தொகையே

(இ.வி.: 341)

ஐந்தொகை மொழிமேற் பிறதொக லன்மொழி

(மு.வீ.:743)

**சாற்றுஅன்மொழி ஐந்தொகை ஈற்றுஅங்ஙன் வேறுஒருபேர் தனைக் காட்டுந்.................**

(சுவாமி.: 66:4)

## மயிலை நாதர்

எ –ன், அன்மொழித்தொகையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: வேற்றுமை முதலான ஐவகை யுருபுகளும் தொக்குநின்ற மொழிகளின் மேலே அவற்றின் பொருள்களைத் தழுவிய வேற்றுப்பொருள்களும் அவற்றின் சொற்களும் தொகுவது அன்மொழித் தொகையாவது, எ– று.

வ–று.:–

பூங்குழல், பொற்றொடி, கவியிலக்கணம், பொற்றாலி, கிள்ளிகுடி, கீழ்வயிற்றுக்கழலை எனவும், தாழ்குழல், கருங் குழல், துடியிடை, தகரஞாழல் எனவும் காண்க. இவை விரிவுழி, பூவையுடைய குழலையுடையாள், பொன்னானாய தொடியினை யுடையாள், கவிக்கு இலக்கணம் சொன்ன நூல், பொன்னினாய தாலியினை யுடையாள், கிள்ளியது குடிமக்களிருக்குமூர், கீழ்வயிற்றின்கண் எழுந்த கழலையைப் போல்வான் எனவும், தாழ்ந்த குழலினையுடையாள், கரிய குழலினையுடையாள், துடியன்ன இடையினையுடையாள், தகரமும் ஞாலுமும் உறுப்பாகவுடைய சாந்து எனவும் விரியும்.[1]

## சங்கர நமச்சிவாயர்

எ–னின், அன்மொழித்தொகையாமாறு உணர்–ற்று.

இ–ள்.: வேற்றுமைத்தொகை முதலிய ஐவகைத் தொகை நிலைத்தொடர்மொழிகட்கும் புறத்து அவையல்லாத பிறமொழிகளாகிய உருபுகள் தொகுதல் அன்மொழித்தொகையாம், எ–று.

---

பாடவேறுபாடு.:–

1. ஆதலால் இரண்டு சொற்புணராது ஒருமொழிப் பெயராகிக் கமலம் கரும்பு என வந்தவை ஆகுபெயரும் முற்றுவமையுமாகு மல்லாது அன்மொழித் தொகையாகா வென்றறிக.

மேல் என்றமையான் 'அவற்றினுருபு இடைஒழிய' (361) என்ற பொதுவிதியை விலக்கினார் என்பது பெற்றாம்.

வ—று.:-

பூங்குழல், பொற்றொடி, கவியிலக்கணம், பொற்றாலி, கிள்ளிகுடி, கீழ்வயிற்றுக் கழலை எனவும்; தாழ்குழல், கருங்குழல், துடியிடை, தகரஞாழல் எனவும்; தகரஞாழன் முலை எனவும் வரும்.

இவை விரியுழிப் பூவையுடைய குழலினை உடையாள், பொன்னாலாகிய தொடியினையுடையாள், கவிக்கு இலக்கணம் சொன்ன நூல், பொன்னினாகிய தாலியினை உடையாள், கிள்ளியது குடியிருக்கும் ஊர், கீழ்வயிற்றின்கண் எழுந்த கழலை போல்வான் எனவும்; தாழ்ந்த குழலினை உடையாள், கருமையாகிய குழலினை உடையாள், துடியன்ன இடையினை உடையாள், தகரமும் ஞாழலும் விராய்ச் சமைந்த சாந்தை அணிந்த முலையினை உடையாள் எனவும் விரியும்.

இனி, இரண்டிறந்த மொழிகளில் அறுவகைத்தொகையும் விரவித் தொகுமாறு:- திகழ்செவ்வான் மதித் திருமுகப் பூங்குழல் என வரும். இவை விரியுழித் திகழ்ந்த செம்மையாகிய வானத்தின்கண் மதிபோலும் திருமுகத்தினையும் பூவையுடைய குழலினையும் உடையாள் என விரியும்.

## கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், முறையே அன்மொழித் தொகைநிலைத் தொடர்மொழி ஆமாறு கூறுகின்றது.

**இ—ள்.:- ஐந்தொகை மொழிமேல்** - வேற்றுமைத்தொகை முதலான ஐவகைத் தொகைத் தொடர்மொழிகளின்மேல், **பிற தொகல்** - அவற்றின் பொருள்களைக் கருதிய வேற்றுமைப் பொருள்களும் தொகுவது, **அன்மொழி** - அன்மொழித் தொகைநிலைத் தொடர்மொழியாம், எ—று.

உ—ம்.:-

பூங்குழல், பொற்றொடி, கவியிலக்கணம், பொற்றாலி, கிள்ளிகுடி, கீழ்வயிற்றுக்கழலை எனவும் தாழ்குழல், கருங்குழல், துடியிடை, தகல்ஞாழல் எனவும் காண்க. இவை விரிவுழி பூவையுடைய குழலினையுடையாள், பொன்னினாய தொடியினை யுடையாள் எனவும் கொள்க.

## விசாகப் பெருமாளையர்

இது, அன்மொழித் தொகையாமாறு உணர்த்துகின்றது,

இ-ள்.:- ஐந்தொகை மொழிமேல் - வேற்றுமைத்தொகை முதலிய வைவகைத் தொகைநிலைத் தொடர்மொழிகளுக்கும் புறத்து, பிற - அவையல்லாத பிற மொழிகளாகிய வுருபுகள், தொகல் - தொக்கு வருவன, அன்மொழி-அன்மொழித்தொகைகளாம், எ-று.

வ-று.:-

பூங்குழல், பொற்றொடி, கவியிலக்கணம், பொற்றாலி, கிள்ளிகுடி, கீழ்வயிற்றுக்கழலை - இவை யிரண்டாம் வேற்றுமைத்தொகை முதலாகிய ஆறு வேற்றுமைத் தொகைகளின் புறத்தும் பிறந்த அன்மொழித்தொகைகள்.

இவைமுறையே, பூவையுடைய குழலினையுடையாள், பொன்னாலாகிய தொடியினையுடையாள், கவிக்கிலக்கணஞ் சொல்லப் பட்ட நூல், பொன்னினாகிய தாலியினை யுடையாள், கிள்ளியினது குடியிருக்குமூர், கீழ்வயிற்றின்கணெழுந்த கழலைபோல்வான் என விரியும்.

தாழ்குழல் - வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. கருங்குழல் - பண்புத்தொகைப் புறத்துப் பிறந்தவன் மொழித்தொகை. துடியிடை - உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த வன்மொழித்தொகை. உயிர்மெய் - உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த வன்மொழித்தொகை. தகரஞாழன்முலை-இது பன்மொழித்தொடர்.

இவை முறையே, தாழ்ந்த குழலினையுடையாள், கருமையாகிய குழலினை யுடையாள், துடிபோலு மிடையையுடையாள் - உயிரு மெய்யுமாகிய விரண்டுங் கூடிப் பிறந்த வெழுத்து, தகரமு ஞாழலும் விராய்ச் சமைந்த சாந்தை யணிந்த முலைகளை யுடையாள் என விரியும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

அன்மொழித்தொகை யிதுவெனக்கூறுஞ் சூத்திரம் யாது?

ஐந்தொகை மொழிமேற் பிறதொக லன்மொழி.

(ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி)

இ–ள்.:– வேற்றுமைத்தொகை முதலிய ஐவகைத் தொகைநிலைத் தொடர்மொழிகளுக்கும் புறத்தே அவையல்லாத பிறமொழிகள் தொகுதல் அன்மொழித்தொகையாம், எ–று.

(1) பூங்குழல் என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. இது பூவையுடைய குழலினையுடையாள் என விரியும்.

பொற்றொடி என்பது மூன்றாம் வேற்மைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது பொன்னாலாகிய தொடியினையுடையாள் என விரியும்.

கவியிலக்கணம் என்பது நான்காம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது கவிக்கிலக்கணஞ் சொல்லப்பட்ட நூல் என விரியும்.

பொற்றாலி என்பது ஐந்தாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது பொன்னினாகிய தாலியினையுடையாள் என விரியும்.

கிள்ளிகுடி என்பது ஆறாம்வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது கிள்ளியினது குடியிருக்குமூர் என விரியும்.

கீழ்வயிற்றுக் கழலை என்பது ஏழாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது கீழ்வயிற்றின்கண் எழுந்த கழலை போல்வான் என விரியும்.

(2) தாழ்குழல் என்பது வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது தாழ்ந்த குழலினையுடையாள் என விரியும்.

(3) கருங்குழல் என்பது உவமத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை இது துடிபோலுமிடையினையுடையாள் என விரியும்.

(5) தகரஞாழல் என்பது உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது தகரமு ஞாழலுங் கலந்துண்டாகிய சாந்து என விரியும்.

தகரஞாழன்முலை என்பது பன்மொழித்தொடர். இது தகரமு ஞாழலுங் கூடியுண்டாகிய சாந்தை யணிந்த முலையினை யுடையாள் என விரியும்.

இனிப் பன்மொழித் தொடரில் அறுவகைத் தொகைகளுங் கலந்து தொகுமாறு:- திகழ்செவ்வான் மதித் திருமுகப் பூங்குழல் என வரும். இவை, விரியுமிடத்துத், திகழ்ந்த செவ்விதாகிய வானத்தின்கண் மதிபோலுந் திருமுகத் தினையும் பூவையணிந்த குழலினையுமுடையாள் என விரியும்.

இதுகாறுங் கூறிய அறுவகைத் தொடர்ச்சொற்களும் ஒருசொன்னடையவா பலசொன்னடையவா?

ஒருசொல் தனித்துநின்று தன்னை முடிக்குஞ் சொற்களோடு முடியுமாறுபோல இரண்டும் பலவுமாகிய சொற்கள் அறுவகைப்பட்ட தொகை முறையாற் கூடி நின்று தம்மை முடிக்குஞ் சொற்களோடு முடிதலின் அவ்வறுவகைத் தொகைநிலைத் தொடர்ச்சொற்களும் ஒருசொன்னடையவாம்.

உ-ம்.:-

*நிலங்கடந்தான் தந்தான், சேர சோழ பாண்டியர் வந்தார், பொற்றொடி சென்றாள் என வரும்.*

அன்மொழித்தொகை இயல்பு யாது?

மற்ற ஐவகைத் தொகைச் சொற்களும் தம் பொருளை விடாது நின்றுணர்த்த அன்மொழித்தொகைச்சொன் மாத்திரம் தம் பொருளை யுணர்த்தாது தமக்குச் சம்பந்தமான மற்றொருபொருளை யுணர்த்தும். தம் பொருளை யுணர்த்தாது தமக்குச் சம்பந்தமான பொருளை யுணர்த்துஞ் சொற்கள், தனிமொழியேயாக இரண்டும் பலவுமாகிய தொகைமொழியேயாக அவையெல்லாம் ஆகுபெயராம். ஆதலின் அன்மொழித்தொகைச் சொல்லெல்லாம் என்னதொகை என்றவழி அன்மொழித்தொகை யெனவும், என்னபெயர் என்றவழி ஆகுபெயரெனவும் கூறப்படும்.

## முகவை இராமானுச கவிராயர்

இது, 'அவற்றி னுருபிடை யொழிய' வென்ற பொதுவிதியை விலக்கி அன்மொழித்தொகையாமா றுணர்த்திற்று.

இ-ள்.:- ஐந்தொகை மொழிமேல் - வேற்றுமைத்தொகை முதலிய ஐவகைத் தொகைநிலைத்தொடர் மொழிகளுக்கும் புறத்து, பிறதொகலன் மொழி- அவையல்லாத பிறமொழிகளாகிய வுருபுகள் தொக்கு நிற்றல் அன்மொழித்தொகையாம், எ- று.

'ஐந்தொகை மொழிமே' லென்றதினால், இடையே

தொகுமென எய்தியதை விலக்கலாயிற்று.

**வ–று.:–** பூங்குழல், பொற்றொடி, கவியிலக்கணம், பொற்றாலி, கிள்ளிகுடி, கீழ்வயிற்றுக்கழலை எனவிவை இரண்டாவது முதலாகிய அறுவகை வேற்றுமைத்தொகைப் புறத்து வந்த அன்மொழித்தொகை. தாழ்குழல் – வினைத் தொகைப்புறத்து வந்த அன்மொழி, கருங்குழல் – பண்புத்தொகைப் புறத்து வந்த அன்மொழி, துடியிடை – உவமைத் தொகைப்புறத்து வந்த அன்மொழி, தகரஞாழன் உம்மைத்தொகைப் புறத்து வந்த அன்மொழி, இவையெல்லாம் இருமொழித்தொடர். தகரஞாழன்முலை பன்மொழித்தொடர். இவை விரியுங்கால் பூவையுடைய குழலினை யுடையாள், பொன்னாற் செய்த தொடியினை யுடையாள், கவிக்கு இலக்கணஞ் சொன்ன நூல், பொன்னினாகிய தாலியை யுடையாள், கிள்ளியது குடியிருக்குமூர், கீழ்வயிற்றின் கண்ணெழுந்த கழலை போல்வான், எனவும், தாழ்ந்த குழலினை யுடையாள், கருமையாகிய குழலினையுடையாள், துடிபோன்ற இடையினை யுடையாள், தகரமும் ஞாழலும் விரவிச் சமைந்த சாந்து, தகரமும்ஞாழலும் விரவிச் சமைந்த சாந்தை யணிந்த முலையினை யுடையாள் எனவும் விரியும். தகரம், ஞாழல் என்பன வாசனைத்திரவியம்.

இனிப் பன்மொழித்தொடரில் அறுவகைத் தொகைகளும் விரவித் தொகுமாறு:– 'திகழ்செவ் வான்மதித் திருமுகப் பூங்குழல்' என வரும். இவை விரியுங்கால், திகழ்ந்த செம்மையாகிய வானத்தின்கண் மதிபோலுந் திருமுகத்தினையும் பூவையணிந்த குழலினையுமுடையாள், எனவிரியும், இதனுள், திகழ்ந்த என வினைத்தொகையும், செம்மையாகிய எனப் பண்புத்தொகையும், வானத்தின்கண் என வேற்றுமைத்தொகையும், மதிபோலும் என உவமைத்தொகையும், முகத்தினையும் என உம்மைத்தொகையும், பூங்குழலினையுடையாள் என அன்மொழியும் விரிந்தவாறு காண்க. இனி,

"எல்லாத் தொகையு மொருசொன் னடைய" வெனக் கூறுதலால், இத் தொகைச்சொற்கள் விரவி வழக்கிடத்துஞ் செய்யுளிடத்து மொருசொன்னடையவாய் நின்று பயனிலை கொள்ளுதலும், மொழிந்தபொருளோ டொன்ற

மொழியாததனையு முட்டின்றிமுடித்த லென்பதனாற் கொள்க. அவை வருமாறு 'கற்கனைக் குவளை யிதழ் நறிது', 'துடியிடை நெடுங்கட் டுணைமுலைப் பொற்றொடி வந்தாள்' என வரும் பிறவுமன்ன. ஆசிரியர் தொல்காப்பியனார்,

"பண்பு தொகவரு உங் கிளவி யானு
மும்மை தொக்க பெயர்வயி னானும்
வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்
மீற்றுநின் றியலு மன்மொழித் தொகையே"

என இம் முத்தொகை யீற்று நின்றிய லுமன்மொழி யெனக் கூறினார், இவரைந்தொகை மொழிமேலன்மொழி தொகுமெனக் கூறியது மலைவாமெனின், அவர் எதிரதுதழீஇ யெண்ணி நின்ற எச்சவும்மைகளால் உவமைத்தொகை வினைத்தொகையீற்றினு நின் றியலுமன் மொழி யெனத்தழீஇயினார். அவையக் காலத்தரியன் போலுமென்க.

"வேற்றுமை முதலிய வைத் தொகை மொழியினு
மீற்றுநின் றியலு மன் மொழித் தொகையே"

எனப் பிறர் கூறுதலுங் காண்க. இனி அன்மொழித்தொகை யென்பதற்குப்பொருள், குறிக்கப்படுபொருளுக்கு அல்லாத மொழி யன்மொழி எனவும் அப்பொருள் தொக்கு நிற்றலி றொகை எனவுந் கொண்டு, குறிக்கப்படு பொருளுக்கு அல்லாத மொழியில் அப்பொருள் தொக்கு நிற்பதென்பதே சிறந்துகாட்டிற்றுப்போலும். என்னையெனின், அஃறிணை, அன்மையாயதிணை, அல்வழி அல்லாதவழி என்றாற்போல, அன்மொழி யென்றவிடத்தும் எதிர்மறுத்தே நின்று பிறிது பொருளுணர்த்த வேண்டுமாதலினென்க. இனிப் பயனிலைக்கு அல்லாத மொழி யன்மொழி யெனவும், அப் பயனிலைக்குரிய பொருள் அதனிற்றொக்கு நிற்றலிற் றொகை யெனவுங் கொண்டன் மொழித்தொகை யெனப்பட்ட தெனினும் அமையும்.

## கா. கோபாலாசாரியர்
## தி.கோ. ரங்காசாரியர்

**உரை :-** **ஐந்தொகைமொழிமேல்** - (வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை என்னும்) ஐவகைத் தொகைநிலைத் தொடர்மொழிகளுக்கும் புறத்தில், **பிறதொகல்** - அவையல்லாத (பிறமொழிகளாகிய) உருபுகள்

தொக்குவருவன, அன்மொழி – அன்மொழித் தொகைகளாம். (அல்லாதமொழி தொக்குநிற்பது அன்மொழித்தொகை).

உதாரணம்

1. பூங்குழல் – இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை : (பூவையுடைய குழலாள்)

பெற்றொடி – மூன்றாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை : (பொன்னாலாகிய தொடியுடையாள்.)

கவியிலக்கணம் – நான்காம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை: (கவிக்கிலக்கணஞ்சொல்லு நூல்.)

பொற்றாலி – ஐந்த¯ம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை : (பொன்னினாகிய தாலியுடையாள்.)

கிள்ளிகுடி – ஆறாம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை : (கிள்ளியினது குடி"ருக்கும் ஊர்.)

கீழ்வயிற்றுக்கழலை – ஏழாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை : (கீழ்வயிற்றின்கண் எழுந்த கட்டிபோல்வான்.)

2. தாழ்குழல் – வினைத் தொகை யன்மொழி : (தாழ்ந்த குழலையுடையாள்.)

3. ஆண்டகை – பண்புத்தொகையன் மொழி : (ஆண்மை யாகிய தகைமையுடையான்.)

4. துடியிடை – உவமத்தொகை யன்மொழி : (துடிபோலும் இடையையுடையாள்.)

5. உயிர்மெய் – உம்மைத் தொகை யன்மொழி : (உயிரும் மெய்யுங் கூடிப்பிறந்த எழுத்து.)

6. தகரஞாழல்மார்பு – பன்மொழித்தொடர் : (தகரமும் ஞாழ லும்

கூடி யுண்டாகிய சாந்தையணிந்த மார்புடையான்.)

குறிப்பு :– இனி, பன்மொழித் தொடரில் அறுவகைத் தொகைகளும் கலந்து தொகுமாறு :– ''திகழ்செவ்வான் மதித்திருமுகப் பூங்குழல்'' எனவரும் ; இது – திகழ்ந்த செம்மையாகிய வானத்தின்கண் எழுந்த மதி போலும் திருமுகத்தினையும் பூவையணிந்த குழலினையுமுடையாள் என விரியும்.(கஅ)

## ஆறுமுக நாவலர்

இ–ள்.:– ஐந்தொகை மொழிமேல் – வேற்றுமைத் தொகை முதலிய ஐவகைத் தொகைநிலைத் தொடர்மொழிகளுக்கும் புறத்தே, பிற தொகல்– அவையல்லாத பிற மொழிகளாகிய உருபுகள் தொக்கு வருவன, அன்மொழி – அன்மொழித்தொகைகளாம், எ–று.

வ–று.:–

(1) 'பூங்குழல்' என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது பூவையுடைய குழலினையுடையாள் என விரியும்.

'பொற்றொடி' என்பது, மூன்றாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது பொன்னாலாகிய தொடியினை யுடையாள் என விரியும்.

'கவியிலக்கணம்' என்பது, நான்காம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. அது கவிக்கிலக்கணஞ் சொல்லப்பட்ட நூல் என விரியும்.

'பொற்றாலி' என்பது, ஐந்தாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது பொன்னினாகிய தாலியினை யுடையாள் என விரியும். 'கிள்ளிகுடி' என்பது, ஆறாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. இது கிள்ளியினது குடியிருக்குமூர் என விரியும்.

'கீழ்வயிற்றுக் கழலை' என்பது, ஏழாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது கீழ்வயிற்றின்கண் எழுந்த கழலை போல்வான் என விரியும்.

(2) 'தாழ்குழல்' என்பது, வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது தாழ்ந்த குழலினையுடையாள் என விரியும்.

(3) 'கருங்குழல்' என்பது, பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. இது கருமையாகிய குழலினை யுடையாள் என விரியும்.

(4) 'துடியிடை' என்பது, உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது துடிபோலுமிடையினை யுடையாள் என விரியும்.

(5) 'தகரஞாழல்' என்பது உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது தகரமு ஞாழலுங் கலந்துண்டாகிய சாந்து என விரியும்.

'தகரஞாழன்முலை' என்பது பன்மொழித்தொடர். இது தகரமு ஞாழலுங் கூடியுண்டாகிய சாந்தை யணிந்த முலையினை யுடையாள் என விரியும்.

இனிப் பன்மொழித்தொடரில் அறுவகைத் தொகைகளுங் கலந்து தொகுமாறு :– 'திகழ் செவ்வான் மதித் திருமுகப் பூங்குழல்' என வரும். இவை விரியுமிடத்துத், திகழ்ந்த செம்மையாகிய வானத்தின்கண் மதி போலுந் திருமுகத்தினையும் பூவை யணிந்த குழலினையு முடையாள் என விரியும்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். **ஐந்தொகை மொழிமேல்** – வேற்றுமைத்தொகை முதலிய ஐவகைத் தொகைநிலைத் தொடர்மொழிகளுக்கும் புறத்தே – **பிறதொகல்** – அவையல்லாத பிறமொழிகளாகிய உருபுகள் தொக்குவருவன, – **அன்மொழி** – அன்மொழித் தொகைகளாம். எ – று.

(வரலாறு)

(1) பூங்குழல் என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது பூவையுடைய குழலினையுடையாள் என விரியும்.

பொற்றொடி என்பது மூன்றாம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. இது பொன்னாலாகிய தொடியினையுடையாள் என விரியும்.

கலியிலக்கணம் என்பது நான்காம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது கலிக்கிலக்கணஞ் சொல்லப்பட்ட நூல் என விரியும்.

பொற்றாலி என்பது ஐந்தாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. இது பொன்னினாகிய தாலியினையுடையாள் என விரியும்.

கிள்ளிகுடி என்பது ஆறாம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. இது கிள்ளியினது குடியிருக்குமூர் என விரியும்.

கீழ்வயிற்றுக் கழலை என்பது ஏழாம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. இது கீழ்வயிற்றின்கண் எழுந்த கழலைபோல்வான் என விரியும்.

(2) தாழ்குழல் என்பது வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. இது தாழ்ந்த குழலினையுடையாள் என விரியும்.

(3) கருங்குழல் என்பது பண்புத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது கருமையாகிய குழலினையுடையாள் என விரியும்.

(4) துடியிடை என்பது உவமத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. இது துடிபோலுமிடையினையுடையாள் என விரியும்.

(5) தகரஞாழல் என்பது உம்மைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. இது தகரமுஞாழலுங் கலந்துண்டாகிய சாந்து என விரியும்.

தகரஞாழன்முலை என்பது பன்மொழித்தொடர். இது தகரமுஞாழலுங் கூடியுண்டாகிய சாந்தையணிந்த முலையினையுடையாள் என விரியும்.

இனிப் பன்மொழித் தொடரில் அறுவகைத்தொகைகளுங் கலந்து தொகுமாறு : – திகழ்செவ்வான் மதித் திருமுகப் பூங்குழல் என வரும். இவை, விரியுமிடத்துத், திகழ்ந்த செம்மையாகிய வானத்தின்கண்மதி போலுந் திருமுகத்தினையும் பூவையணிந்த குழலினையுமுடையாள் என விரியும்.

வடநூலார் அன்மொழித் தொகையை வெகுவிரீஹிசமாசமென்பர். ("சேஷோவெகுவிரீஹி:" என்பது அன்மொழித் தொகையையுணர்த்திய வியாகரணசூத்திரம்). ஆசிரியர் தொல்காப்பியனார். (சூத்) பண்பு தொகவருஉங்கிளவியானு. மும்மை தொக்க

பெயர்வயினானும், வேற்றுமை தொக்க பெயர்வயினானு, மீற்றுநின்றியலுமன்மொழித் தொகையே என இம்முத்தொகையீற்று நின்றியலுமன் மொழியெனக் கூறினார். இவரைந்தொகை மொழிமேலன்மொழி தொகுமெனக் கூறியது மலைவாமெனின், அவர், எதிரது தழீஇயெண்ணிநின்ற எச்சவும்மைகளால் உவமத்தொகை வினைத்தொகை யீற்றினுநின்றியலு மன்மொழியெனத் தழீஇயினார் அவையக்காலத்தரியன போலுமென்க. (சூத்) வேற்றுமை முதலியவைந்தொகை மொழியினு மீற்று நின்றியலு மன்மொழித்தொகையே, எனப் பிறர் கூறுதலுங் காண்க.

## வை. மு. சடகோபராமாநுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: ஐந்தொகை மொழிமேல் – (வேற்றுமைத்தொகை முதலிய) ஐவகைத் தொகைநிலைத் தொடர்மொழிகளுக்கும் புறத்தில், பிறதொகல் – அவையல்லாத (பிறமொழிகளாகிய) உருபுகள் தொக்கு வருபவை, அன்மொழி – அன்மொழித் தொகைகளாம், எ–று. (ஐந்து தொகைகளுக்கும் உரியன) அல்லாத மொழி தொக்கு நிற்பது, அன்மொழித்தொகை.

உ–ம்.: –

(1) 'பூங்குழல்'–இரண்டாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; பூவையுடைய குழலை யுடையாள் என விரியும்.

பொற்றொடி – மூன்றாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; பொன்னாலாகிய தொடியை யுடையாள் என விரியும்.

அணியிலக்கணம் –நான்காம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; அணிக்கு இலக்கணஞ் சொன்ன நூல் என விரியும்.

பொற்றாலி–ஐந்தாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை; பொன்னினாலாகிய தாலியை யுடையாள் என விரியும்.

சேரன்குடி – ஆறாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; சேரனது குடிமக்க ளிருக்கும் ஊர் என விரியும்.

கீழ்வயிற்றுக்கழலை—ஏழாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; கீழ்வயிற்றின்கண் எழுந்த கட்டி போல்வான் என விரியும்.

(2) தாழ்குழல் – வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; தாழ்ந்த குழலையுடையாள் என விரியும்.

(3) ஆண்டகை–பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; ஆண்மையாகிய தகுதியை (குணத்தை) யுடையான் என விரியும்.

(4) துடியிடை—உவமத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை; துடிபோலும் இடையை யுடையாள் என விரியும்.

(5) உயிர்மெய் —உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; உயிரும் மெய்யும் கூடிப்பிறந்த எழுத்து என விரியும்.

தகரஞாழல்மார்பு—பன்மொழித்தொடர்; தகரமும் ஞாழலும் கூடி உண்டாகிய சாந்தை அணிந்த மார்பை யுடையான் என விரியும். (தகரம் – ஒரு வகை வாசனைப்பொருள். ஞாழல் – குங்குமப்பூ.)

இனி, பன்மொழித்தொடரில் அறுவகைத்தொகைகளும் கலந்து தொகுமாறு, 'திகழ்செவ்வான் மதித் திருமுகப் பூங்குழல்' என வரும். இது, திகழ்கிற செம்மையாகிய வானத்தின்கண் எழுந்த *மதிபோலும் திருமுகத்தினை*யும் பூவையணிந்த குழலினையு முடையாள் என விரியும்.

## பவானந்தம் பிள்ளை

இ—ள்.: ஐந்தொகை மொழிமேல் – வேற்றுமைத் தொகை முதலிய ஐவகைத் தொகைநிலைத் தொடர்மொழிகளுக்கும், புறத்தே, பிற தொகல் – *அவைபல்லாத பிற* மொழிகளாகிய உருபுகள் தொக்குவருவன, அன்மொழி – அன்மொழித்தொகைகளாம். எ—று.

உ—ம்.:—

(1) பூங்குழல் – என்பது இரண்டாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. இது பூவையுடைய குழலினை யுடையாள் என விரியும்.

பொற்றொடி – என்பது மூன்றும் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது பொன்னாலாகிய

தொடியினையுடையாள் என விரியும்.

கலியிலக்கணம் – என்பது நான்காம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது கவிக்கிலக்கணஞ் சொல்லப்பட்ட நூல் என விரியும்.

பொற்றாலி – என்பது ஐந்தாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது பொன்னினாகிய தாலியினையுடையாள் என விரியும்.

கிள்ளிகுடி – என்பது ஆறாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. இது கிள்ளியினது குடியிருக்குமூர் என விரியும்.

கீழ்வயிற்றுக் கழவல – என்பது வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது கீழ்வயிற்றின்கண் எழுந்த கழலைபோல்வான் என விரியும்.

(2) தாழ்குழல் – என்பது வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. இது தாழ்ந்த குழலினையுடையாள் என விரியும்.

(3) கருங்குழல் – என்பது பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது கருமையாகிய குழலினையுடையாள் என விரியும்.

(4) துடியிடை – என்பது உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது துடிபோலு மிடையினையுடையாள் என விரியும்.

(5) தகரஞாழல் – என்பது உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது தகரமுஞாழலுங் கலந்துண்டாகிய சாந்து என விரியும்.

தகரஞாழன் மார்பு என்பது பன்மொழித்தொடர். இது தகரமுஞாழலுங் கூடியுண்டாகிய சாந்தையணிந்த மார்பினையுடையாள் என விரியும்.

இனிப் பன்மொழித்தொடரில் அறுவகைத் தொகைகளுங் கலந்து தொகுமாறு: – திகழ் செவ்வான் மதித் திருமுகப் பூங்குழல் எனவரும். இவை விரியுமிடத்துத் திகழ்ந்த செம்மையாகிய வானத்தின் கண் மதிபோலுந் திருமுகத்தினையும் பூவையணிந்த குழலினையு முடையாள் எனவிரியும்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ-ள்.) ஐந்தொகை மொழிமேல் – (வேற்றுமைத் தொகை முதலிய) ஐவகைத் தொகைநிலைத் தொடர் மொழிகளுக்கும் புறத்தே, பிற – (அவையல்லாத) பிற மொழிகளாகிய உருபுகள், தொகல் – தொக்கு வருவன, அன்மொழி – அன்மொழித் தொகைகளாம். (எ–று.)

(பொ–ரை.) வேற்றுமைத்தொகை முதலிய ஐவகைத்தொகை நிலைத்தொடர் மொழிகளுக்கும் புறத்து அவையல்லாத பிறமொழிகளாகிய உருபுகள் தொகுதல் அன்மொழித் தொகையாம்.

அன்மொழித் தொகை என்பதற்குப் பொருள் குறிக்கப்படு பொருளுக்கு அல்லாத மொழி அன்மொழி எனவும், அப்பொருள் தொக்கு நிற்றலிற் றொகை யெனவும் கொண்டு, குறிக்கப் படு பொருளுக்கு அல்லாத மொழியில் அப்பொருள் தொக்குநிற்பது என்பதாம்.

*(உ–ம்.)*

பூங்குழல் – 2ம் வேற்றுமைத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை; = பூவையுடைய குழலினை யுடையாள்.

பொற்றொடீ – 3ம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை; = பொன்னாலாகிய தொடியினை யுடையாள்.

கவியிலக்கணம் – 4ம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை; = கவிக்கு இலக்கணஞ் சொல்லப்பட்ட நூல்.

பொற்றாலி – 5ம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்து அன்மொழித் தொகை; = பொன்னினாகிய தாலியினை யுடையாள்.

கிள்ளி குடி –6ம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை; = கிள்ளியினது குடியிருக்குமூர்.

கீழ்வயிற்றுக் கழலை – 7ம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை; = கீழ்வயிற்றின் கண் எழுந்த கழலை போல்வான். (கழலை–கட்டி.)

2. தாழ் குழல் – வினைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை;= தாழ்ந்த குழலினையுடையாள்.

3. கருங் குழல் – பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த

அன்மொழித் தொகை;= கருமையாகிய குழலினையுடையாள்.

4. துடி யிடை – உவமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன் மொழித்தொகை; = துடிபோலு மிடையை யுடையாள்.

5. உயிர் மெய் – உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன் மொழித் தொகை; = உயிரும் மெய்யும் ஆகிய இரண்டும் கூடிப் பிறந்த எழுத்து.

தகர ஞாழன் மார்பு– பன்மொழித் தொடர்; = தகரமும் ஞாழலும் கூடி யுண்டாகிய சாந்தையணிந்த மார்பினை யுடையாள்.

இனி, பன்மொழித் தொடரில் அறுவகைத் தொகைகளும் கலந்து தொகுமாறு:–

'திகழ் செவ்வான் மதித் திருமுகப் பூங்குழல்' என வரும்; இது திகிழ்கிற செம்மையாகிய வானத்தின்கண் எழுந்த மதிபோலும் திருமுகத்தினையும் பூவையணிந்த குழலினையு முடையாள் என விரியும்.

## கா. நமச்சிவாய முதலியார்

ஐந்தொகை மொழிமேல் – (வேற்றுமைத் தொகை முதலிய) ஐவகைத் தொகைநிலைத் தொடர்மொழிகளுக்குப் புறத்தே, பிற – (அவையல்லாத) பிறமொழிகள், தொகல் – தொக்கு வருதல், அன்மொழி – அன்மொழித் தொகையாம்.

உதாரணம்

1. பூங்குழல் வந்தாள் – 2ஆம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை;

– பூவையுடைய குழலினையுடையாள் வந்தாள் என விரியும்.

(இவ்வாறே மற்ற வேற்றுமைத் தொகைகளி னின்றும் அன்மொழித் தொகை பிறக்கும்.)

2. தாழ்குழல் வந்தாள் – வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை;

– தாழ்ந்த குழலினையுடையாள் வந்தாள் என விரியும்.

3. கருங்குழல் வந்தாள் – பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை;

– கருமையாகிய குழலினையுடையாள் வந்தாள் என விரியும்.

4. துடியிடை வந்தாள் – உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை;

– துடிபோலும் இடையினையுடையாள் வந்தாள் என விரியும்.

5. உயிர்மெய் – உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை;

– உயிரும் மெய்யும் ஆகிய இரண்டுங் கூடிப் பிறந்த எழுத்து என விரியும்.

தகரஞாழல்மார்பு – பன்மொழித் தொடர் அன்மொழித் தொகை;

– தகரமும் ஞாழலும் கூடி யுண்டாகிய சாந்தை யணிந்த மார்பினையுடையாள் என விரியும்.

(தகரம் – வாசனைத் திரவியம்; ஞாழல் – குங்குமம்)

## மோசசு பொன்னையா

வேற்றுமைத்தொகை முதலிய ஐந்து தொகைநிலைத் தொடர் மொழிகட்கும் புறத்தே, அவையல்லாத பிறமொழியாகிய உருபு தொகுதல் அன்மொழித்தொகையாம் எ–று.
மேல் என்றது உருபிடையொழிய1 என்ற பொது விதியை விலக்கிச் சிறப்புவிதி வகுத்தவாறாம் என்க.

எ–டு

| | அன்மொழித் தொகை | | விரி |
|---|---|---|---|
| 1. | வேற்றுமைத்தொகை நிலைக்களத்துப்பிறந்தது | பொற்றொடி | பொன்னற்செய்த தொடியணிந்தவள் |
| 2. | வினைத்தொகை நிலைக்களத்துப்பிறந்தது | தாழ்குழல் | தாழ்ந்த/தாழும் குழலையுடையாள் |
| 3. | பண்புத்தொகை நிலைக்களத்துப் பிறந்தது | வெள்ளாடை | வெளிது ஆடையணிந்த விதவை |
| 4. | உவமத்தொகை நிலைகளத்துப் பிறந்தது | வேய்தோள் | வேய்அன்னன தோளுடையாள் |

5.உம்மைந்தொகை தகரஞாழல் தகரம் ஞுழலும் கலந்தரைத்த நிலைக்களத்துப்பிறந்தது சாந்து பூசியவன்/வள்

தொல்காப்பியர்,

**பண்புதொக வரூஉங் கிளவி யானு**
**மும்மை தொக்க பெயர்வயி னானும்**
**வேற்றுமை தொக்க பெயர்வயி னானு**
**மீற்றுநின் றியலு மன்மொழித் தொகையே,**

என்றவிடத்து, பண்புச்சொல் தொகும் சொல்லினும், உம்மைதொக்க பெயர்க்கண்ணும் வேற்றுமைதொக்க பெயர்க்கண்ணும் இறுதிச்சொற்கண் நின்று நடக்கும் அன்மொழித்தொகை எனக் கூறியுள்ளதால், அவை தொக்கபின் அவை அவை அவ்வத் தொகையாகுமெனலே பொருந்துமன்றி, அவையே அன்மொழித் தொகையாயின எனல் பொருந்தாதாகலின், அவ்வப் பொருள் தொகுவதன் முன் அவ்வத்தொகைக்கு நிலைக்களமாக நின்ற அவ்வச் சொற்றொடர் பற்றி அன்மொழித்தொகை அமையும் என அவர் கருதினார் என்பது போதரும்.நேமிநாத ஆசிரியர்

ஏனைத் தொகைச்சொற்கள் ஐந்தின் இறதிக்கண்
ஆன பெயர்தோன்றின் அன்மொழியாம்,

என்றதும், இவ்வாசிரியர் ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி என்றதும்,

**வேற்றுமை முதலிய வைந்தொகை மொழியினும்**
**ஈற்றுநின் றியலு மன்னமொழித் தொகையே**

என இலக்கண விளக்கம் கூறுவதும், தொல்காப்பியர் கருத்தோடு முரணுதலறிக. இனி பண்புத்தொகையும், வினைத்தொகையும் பிரியாத் தொகைகள் என்பதும், அவற்றின் முதனிலைகள் முறையே கரு(கர்+உ), செவ் எனப் பண்புமாத்திரமுணர்த்தி நிற்பனவும், செல், கொல் என வினை மாத்திர முணர்த்தி நிற்பனவுமான உரிச் சொற்கள் என்பதும், அவை விகுதி முதலிய பெற்றவிடத்தே கரிது, செய்து; கருத்தான் சேந்தான் எனவும்; சொல்லல், கொல்லல்; சொன்னான், கொன்றான் எனவும் இவ்வாறு பெயரும் வினையுமாமாறு போலப் பண்புத்தொகையும், வினைத் தொகையும் அவ்வவற்றின் முதனிலைகளாம் உரிச்

சொற்களோடு ஆண்டு வந்து கூடும் பெயர்ச் சொற்களின் ஆற்றலால் பெயர்ச்சொற்களாக அமையும் தொகைகளாதலின், அவற்றைப் பிரிக்கின் அவ்வத்தொகைப் பொருளாகிய 'இன்ன திது வென்னும் இயல்பும்', 'காலம் இயலும்' நிலையும் கெடும் என்பதும் கோடுமென்போர், இவ்வாசிரியர் இவ்வாறு நூற்பா செய்வதைக் கடிவர். 'பிரியாத் தொகையைப் பிறசொல்லாற் பிரித்துக் காட்டுக' வென்னும் இலக்கண மரபு பற்றிப் பிறசொற் பெய்து அவற்றைப் பிரித்துக் காட்டுவதல்லது, பிற காரணத்தாலன்று எனக்கொள்க. இவ்வாறு பிரிக்கப்படாதனவாக வரும் தொகை மொழிகளும் எழுவாயாக நின்று பயனிலைகொள்ளும் என்பதையே தொல்காப்பியர்,

1. சொல். பொதுவியல் 47; 2. 'பண்புத் தொகைப் பொருட்படத் தொக்கவழி அஃதன்மொழித் தொகை யாகாமையிற் பண்புத் தொகையிற் பிறந்த அன்மொழித் தொகை யென்னாது பண்புத் தொகைக்கு நிலைக்களமாகிய சொல்லிற் பிறந்த தொகையென்பது விளக்கிய, தொல்லாசிரியரெல்லாம் பண்புத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித் தொகையென வழங்கியவாறு'–தொல் சூத்திர விருத்தி பக். 64.

பெயரி னாகிய தொகையுமா ருளவே
அவ்வு முரிய அப்பா லான,

என உரிமைசெய்தார் எனக் கொள்க. நேமிநாதமுடையார்,

உருபுவமை உம்மை விரியின் அடைவே
உருபுவமை உம்மைத் தொகையா–மொருகாலந்
தோன்றின் வினைத்தொகையாம் பண்புமிரு
பெயரொட்டுந்
தோன்றுமேற் பண்புத் தொகை,

எனத் தொல்காப்பியர் கருத்தைத் தொகுத்துத் தந்தார். இவ்வாசிரியரும், 'அல்வழி வேற்றுமைப் பொருளில் பொருந்துழி. எனப் புணர்ச்சியை விளக்குங்காற் கூறியும், ஈண்டு, 'வேற்றுமை முதலிய பொருளின்' எனவும், 'ஒரு மொழிபோல் நடப்பன' எனவும் தொகைகளின் பொதுவிலக்கணம் முணர்த்தினார் ஆதலினாலும்,

ஆறுருபும்,
வெளிப்படலில்லது வேற்றுமைத் தொகையே,
காலங்கரந்த பெயரெச்சம் வினைத்தொகை,

**பண்பை விளக்குமொழி தொக்கன.... குணத்தொகை,**
**உவமஉருபிலது உவமத்தொகையே,**
**உம்மிலதது (உம்மை)த் தொகை,**
**ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி**

என இவ்வாறு சிறப்பு நூற்பாக்களில் கூறுவதால், இவற்றை நின்று கெட்ட அழிவுபட் டபாவமாகக் கொள்ளாது உள்ளதன் பாவமாகக் கொண்டு இவ்வாறு கூறினார் எனக் கொள்வதும் ஒன்று.

தொல்காப்பியர் வேற்றுமை, பண்பு, உம்மை என்ற மூன்றன் நிலைக்களத்து அன்மொழித்தொகை பிறக்கும் என்றனராக இளம்பூரணரும், சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் அன்மொழித்தொகை பற்றிக் கூறிய நூற்பாவில் அம்மூன்றையும் முறைபிறழ வைத்த இலேசான் ஏனை இரண்டன் நிலைக்களத்து

அன்மொழித்தொகைகளையும் அமைத்தனர். தெய்வச் சிலையார் 'துடியிடை எனவும், தாழ்குழல் எனவும் உவமத்தொகைப் புறத்தும், வினைத்தொகைப் புறத்தும் அன்மொழித்தொகை வருமாலெனின், துடி என்பதூஉம், தாழ் என்பதூஉம் இடை, குழல் என்பவற்றிற்கு அடையாகி வரினல்லது, அவற்றையுடையாட்குப் பெயராகுங்கால் இறுதி நின்ற பெயர்ப் பொருண்மை வந்து ஏனைய வாராமையின், ஆகுபெயரெனினல்லது அன்மொழித்தொகை யாகாதெனக் கொள்க. அதனானே யன்றே இருபெயரெட்டும்1 என ஆகுபெயர்க்கண் எடுத்தோதுவாராறுனர் என உணர்க' எனக் கூறியுள்ளார்.

தாழ்குழல், வேய்தோள் என்பவற்றை அன்மொழித் தொகைகள் என்பார் கூற்றின் வன்மை மென்மைகள் ஆயுந்தன்மைய வாயின. இவை தாழ்ந்த/தாழும் குழல் வேயன்னதோள் என முறையே வினைத்தொகைப் பொருளுக்கும், உவமத்தொகைப் பொருள்கு மேற்ப விரிக்கப்படின் தாழ், வேய் என்னும் அடைமொழிகளின் மரவழிப்பட்ட பொருள்நிலை ஆற்றலால் குழல், தோள் என்பன பெண்ணின் குழலையும், பெண்ணின் தோளையுமே தோற்றுவிக்கும் தகுதி பெற்று விளங்குவதால், ஆண்டு இல்லாத எப்பொருள், எந்தச் சொல்லால் இயலுகின்றது என ஒருகடா எழுகின்றது. எனவே, இவற்றை இருபெயரொட்டாகுபெயர் எனலே பொருந்துமல்லது,

அன்மொழித்தொகை எனல் பொருந்தாது எனக்கொள்க. இனி, வெள்ளாடை என்பதும் இவ்வாறு அடையும் பெயருமாக வருதலின், அதனையும் இருபெயரொட்டெனல் பொருந்தாதோ எனின், அதன் பண்புத்தொகைப் பொருள் வெளிது ஆடை என விரிக்கப்படுமாதலின், அடைபெற்ற பெயராகிய ஆடை என்பது விதவை என்ற பொருளைத் தரும் தகுதியைப் பெறாததால், ஆண்டு இல்லாது வேறாய ஒரு சொல்லின்கண் பொருள் அமைகின்றது ஆதலின், அஃது அன்மொழித்தொகை யாயிற்று. அவ்வாறே, பொற்றொடி, தகரஞாழல் என்பனவும், ஆண்டு இல்லாது வேறாய அணிந்தவள்.

பூசியவன்/வள் என்னுஞ் சொற்களின்கண் பொருள் அமைந்து அன்மொழித் தொகைகளாயின. இதனாலே, இருபெயரொட்டு, ஒட்டப்பட்ட பெயரொடு ஒற்றுமைப்பட்டும், அன்மொழித் தொகை அப்பொருளின் வேறுபட்டும் இயலும் என்க. சிவஞானமுனிவர், 'ஆகுபெயர் ஒன்றன் பெயரான் அதனோடியைபு பற்றிய பிறிதொன்றனை யுணர்த்தி ஒருமொழிக் கண்ணதாம்; அன்மொழித்தொகை இயைபு வேண்டாது இருமொழியுந் தொக்க தொகையாற்றலாற் பிறிது பொருளுணர்த்தி இருமொழிக்கண்ணதாம். இவை தம்முள் வேற்றுமையென்க' எனக் கூறியுள்ளமையையுங் காண்க.

(18)

## 369. முன்மொழி பின்மொழி பன்மொழி புறமொழி எனுநான் கிடத்துஞ் சிறக்குந் தொகைப்பொருள்.

முன்மொழி பின்மொழி பன்மொழி புறமொழி
எனு நான் கிடத்தும் சிறக்கும் தொகைப்பொருள்.

mun moḷi pin moḷi pal moḷi puṟa moḷi
enum nānku iṭattu um siṟakkum tokai poruḷ

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Signification of compound**

The signification of each compound is indicated by the first or second word, or by both the words (in the compound), or else by the other words (suppressed at the end).

## ஒப்புமைப் பகுதி

அவைதாம்
முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலும்
இருமொழி மேலும் ஒருங்குட னிலையலும்
அம்மொழி நிலையாது அன்மொழி நிலையலும்
அந்நான் கென்ப பொருள்நிலை மரபே.

(தொல்.சொல்.:419)

முன்மொழியும் பின்மொழியு மூண்ட விருமொழியும்
அன்மொழியும் என்றிவற்றில் ஆம்பொருள்கள்-
முன்மொழிதான்
காலம் இடத்தாற் கருத்தொடுஞ் சேர்த்தறிதல்
மேலையோர் கண்ட விதி

(நேமி.: 88)

முன்மொழி பின்மொழி பன்மொழி புறமொழி
யெனுநான் கிடத்துஞ் சிறக்குந் தொகைப்பொருள்

(இ.வி.:342)

முன்மொழி பின்மொழி இருமொழி பிறமொழி
நிலைபெற லத்தொகை மரபுநான் காகும்

(மு.வீ.:744)

தக்கிய முன்மொழி பின்மொழி இருமொழி அன்மொழியாய்ச்
சாற்றல் தொகை நிலையாம்..........

(சுவாமி.: 67:2)

## மயிலை நாதர்

எ-ன், தொகைச்சொற்பொருள் நிற்குமிடம் உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்.: தொகைச் சொற்களில் முதலில் நிற்கு மொழியிடத்துத்தான் பின்மொழிக்கட்டான் அனைத்து மொழிக் கண்ணுந்தான் அனைத்து மொழிக்கும் புறத்துத்தான் சிறந்து நிற்கும், தொகைச்சொற் பொருள்கள், எ—று.

ஈண்டு இடம் என்றதனாற் காலமுன்கொள்ளாது இடமுன் கொள்க.

வ—று.:—

காலவாய், அடைகடலென்பன வாயையுடையகால், கடலினது அடையென முன்மொழிப்பொருள் குறித்தன. வேங்கைப்பூ, கருங்குதிரை என்பன பின்மொழிப்பொருள் கருதின. இவை ஈரிடத்திற்கும் [1]அவிநயத்திற் காட்டினவை.

இனி, இளம்பூரணவாசிரியர் வேங்கைப்பூவென்பதனை முன்னிடத்திற்கும், அலைகடலென்பதனைப் பின்னிடத்திற்கும் காட்டுவர்; இருவர் மதமுமறிந்து கொள்க. இராப்பகல், தாய்தந்தை, அந்தணரரசர் வணிகர்வினைஞரென்பன அனைத்து மொழிப்பொருளும் கருத வந்தன. பொற்றொடி, துடியிடை, தருகரபி, பெய்ம்முகில் என்பன அவற்றையுடை யாரையும் ஒப்பாரையும் குறித்தமையின், புறமொழிமேல் நின்றன. பிறவுமன்ன.

## சங்கர நமச்சிவாயர்

எ—னின், தொகைநிலைத் தொடர்ச்சொற்கள் ஒன்றுபடத் தொடர்ந்தனவேனும் அப்பொருளும் ஒன்றுபடத் தொடராது பிளவுபட்டு ஓரிடத்துச் சிறந்தும் ஓரிடத்துச் சிறவாதும் நிற்கும் என்பது, உணர்—ற்று.

இ—ள்.:— தொகைநிலைத் தொடர்மொழிகளில் முன்மொழிக் கண்ணேனும், பின்மொழிக்கண்ணேனும், அனைத்து மொழிக் கண்ணுமேனும், அனைத்துமொழிக்கும் புறமொழிக்கண்ணேனும் சிறந்து நிற்கும் தொகைநிலைத் தொடர்ப் பொருள், எ —று.

இவ்விடங்களில் சிறக்கும் எனவே ஏனை இடங்களில் சிறவாது நிற்கும் என்பது பெற்றாம்.

தன்னியல்பு இறவாமல் பன்மொழி என்றார்.

வ — று.:—

குடம் வனைந்தான், குழிசி வனைந்தான், வேங்கைப்பூ, சண்பகப்பூ, முள்மரம், முள்ளின்மரம், விரிபூ, குவிபூ,

---

பாடவேறுபாடு.:—

1. அவிநயனார்

செந்தாமரை, வெண்டாமரை, வேற்கண், கயற்கண் என்பனவற்றுள் குடம் முதலிய முன்மொழிகள் இனம்விலக்கி நிற்றலின் அம்முன்மொழிக்கண் பொருள் சிறந்தும், வனைந்தான் முதலிய பின்மொழிக்கண் சிறப்பின்றியும் நின்றன. நிலம் உழுதான், கண்ணிமை, நீர்க்குவளை, முட்டாட்டாமரை, சுடு தீ, செஞ்ஞாயிறு, தாய்தலை அன்பன் என்பனவற்றுள் நிலம் முதலிய முன்மொழிகள் இனமும் இனத்தை விலக்குதலும் இன்றி வாராநின்றமையின் அம் முன்மொழிக்கண் பொருட்சிறப்பு இன்றியும் உழுதான் முதலிய பின்மொழிக்கண் பொருள் சிறந்தும் நின்றன. உழுதான் என்ற துணையானே நிலத்தை என்பது தாமே போதருமாதலின், பின்மொழிக்கண் பொருள் சிறந்தனவாயின. ஏனையவும் அன்ன. கபிலபரணர், புலவிற்கெண்டை என்றற்றொடக்கத்து உம்மைத்தொகைகள் அனைத்து மொழிக்கண்ணும் பொருள் சிறந்தன. பூங்குழல், தாழ்குழல் என்றற்றொடக்கத்து அன்மொழித்தொகைகள் அனைத்து மொழிக்கண்ணும் பொருட்சிறப்பின்றி அனைத்து மொழிக்கும் புறமொழிக்கண் பொருள் சிறந்து நின்றன.

தொகைநிலைத் தொடர்கள் உருபு தொகுதலின் சொல்லால் பிளவுபடாதும் பொருளால் பிளவுபட்டும் இவ்வாறு வரும் எனவே, தொகாநிலைத் தொடர்கள் உருபு தொகாமையின் இவ்விரு திறத்தானும் பிளவுபட்டுப் புறமொழி ஒழிந்த மூன்று இடத்தும் இவ்வாறு பொருள் சிறந்து நிற்கும் என்பது தாமே போதரும் என்க. அவையும் இவ்வாறே காண்க.

அங்ஙனமாயின் தொகைநிலை தொகாநிலை இரண்டற்கும் இறுதிக்கண் இவ்விலக்கணம் கூறாது ஈண்டுக்கூறியது என்னை எனின் :– புறமொழிக்கண் பொருள் சிறத்தல் தொகாநிலைத் தொடர்க்கு இன்மையின் என்க.

இனி, முன்மொழி பின்மொழிகளுள் பொருள் சிறந்தன வற்றிற்கு ஒருவர்க்கு ஒருவர் மலைந்து பொருள் கூறுவாரும் உளர். அம்மலைவு அவர்காட்டும் உதாரணங்களுள் காண்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், தொகைச்சொற் பொருண்மைக்கு இடம் கூறுகின்றது.

**இ–ள்.: முன்மொழி** – தொகைச் சொற் பொருள் முதனிற்கும் மொழியிடத்துத்தான், **பின்மொழி** – பின்மொழியிடத்துத்தான், **பன்மொழி** – அனைத்து மொழியிடத்துத்தான், **புறமொழி** – அனைத்து மொழிக்கும் புறத்துத்தான், **எனுநான்கிடத்தும்** – என்று சொல்லப்படும் இந்நான்கிடத்தில் ஓரிடத்தில், **சிறக்குந் தொகைப்பொருள்** – சிறந்து நிற்கும் தொகைச்சொற் பொருள், எ–று.

உ-ம்.:-

கால்வாய், அடைகடல் என்பன வாயையுடைய கால் கடலினது அடை என முதன்மொழிப் பொருள் சிறந்தன. வேங்கைப்பூ, கருங்குதிரை எனப் பின்மொழிப் பொருள் சிறந்தன. தந்தைதாய், இராப்பகல், இவை இரு மொழியுஞ் சிறந்தன. பொற்றொடி, துடியிடை, மொழிமறை என்பன. அவற்றை யுரையாரையும் ஒப்பாரையும் குறித்தமையிற் புறமொழி சிறந்தன. பிறவுமன்ன.

## விசாகப் பெருமாளையர்

இது, தொகைநிலைத் தொடர்மொழிப் பொருள்கள் ஓரிடத்துச் சிறந்தும் ஓரிடத்துச் சிறவாதும் நிற்குமென்பது உணர்த்துகின்றது.

இ-ள்.: முன்மொழி - முன்சொல்லும், பின்மொழி–பின்சொல்லும், பன்மொழி - பலசொற்களும், புறமொழி - புறத்து வருகிற சொல்லும், எனுநான்கிடத்தும் - என்கிற நான் கிடத்திலொன்றிலே, தொகைப்பொருள்– தொகைநிலைத் தொடர்ப் பொருள், சிறக்கும்–சிறந்துநிற்கும், எ-று.

வ-று.:-

குடம்வனைந்தான், வேங்கைப்பூ, செந்தாமரை, இவற்றுள் குடமுதலிய முன்மொழிகள் இனம் விலக்கி நிற்கையால் அவைகளிற் பொருள் சிறந்தன. நிலமுழுதான், கண்ணிமை, செஞ்ஞாயிறு, இவற்றுள், நிலமுதலாகிய முன்மொழிகள் இனம் விலக்குதலின்றி நிற்கையால் உழுதான் முதலாகிய பின்மொழிகளிற் பொருள் சிறந்தன. கபில பரணர், சேரசோழபாண்டியர், புலவிற்கெண்டை, என உம்மைத் தொகைகளில் எல்லா மொழிகளிலும் பொருள் சிறந்தன. பூங்குழல், கருங்குழல், இவை முதலாகிய அன்மொழித் தொகைகளில் உடையாள் என்பது முதலாகிய புறமொழிகளிற் பொருள் சிறந்து நின்றன.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

மேற்கூறிய அறுவகைத் தொகைக்கண்ணும் பொருள் மேற்பட்டுத் தோன்றுமிடங் கூறுஞ் சூத்திரம் யாது?

முன்மொழி பின்மொழி பன்பொழி புறமொழி
எனுநான் கிடத்துஞ் சிறக்குந் தொகைப்பொருள்.
(முன்மொழி பின்மொழி பன்மொழி புறமொழி
எனும் நான்கு இடத்தும் சிறக்கும் தொகைப்பொருள்)

இ–ள்.: முன்மொழியும் பின்மொழியும் அனைத்துமொழியும் அனைத்துமொழிக்கும் புறத்து வருமொழியும் என்று சொல்லப்படும் இந்நான்கிடங்களுள் ஒன்றிலே தொகைநிலைத் தொடர்ப்பொருள் சிறந்து நிற்கும், எ–று.

(வரலாறு)

(1) குடம் வனைந்தான், குழிசி வனைந்தான், வேங்கைப் பூ, சண்பகப்பூ, விரிபூ, குவிபூ, செந்தாமரை, வெண்டாமரை, வேற்கண், கயற்கண் என்பவைகளிலே குடமுதலிய முன்மொழிகள் இனம் விலக்கி நிற்றலால், அம்முன்மொழி களிற் பொருள் சிறந்தன.

(2) நிலமுழுதான், கண்ணிமை, நீர்க்குவளை, சுடுதீ, செஞ்ஞாயிறு என்பவைகளிலே, நிலமுதலிய முன்மொழிகள் இனமும் இனத்தை விலக்குதலுமின்றி நிற்றலால், உழுதான் முதலிய பின்மொழிகளிற் பொருள் சிறந்தன.

(3) கபிலபரணர், சேர சோழ பாண்டியர், புலிவிற்கெண்டை என்றற்றொடக்கத்தும்மைத் தொகைகளிலே, அனைத்துமொழிகளிலும் பொருள்சிறந்தன.

(4) பூங்குழல், உயிர்மெய் என்றற்றொடக்கத் தன்மொழித்தொகைகளிலே, சொல்லுவோனுடைய கருத்து இவ்விருமொழிப் பொருண்மேலதாகாது இவ்விருமொழியு மல்லாத உடையான் முதலிய புறமொழிப்பொருண் மேலதாதலால், அப்புறமொழிகளிற் பொருள் சிறந்தன.

## முகவை இராமானுச கவிராயர்

இது, தொகைநிலைத் தொடர்ச் சொற்களுக்கு வேண்டுவதோர் புறனடையுணர்த்திற்று.

இ–ள்.:– தொகைநிலைத் தொடர்மொழிகளிலே, முன்மொழியும் பின்மொழியும் முன்பின் இருமொழியும் அவ்விருமொழியுமல்லாத புறமொழியும் என்று சொல்லப்படு மிந்த நான்கிடத்துந் தொகைநிலைத்தொடர்ப்பொருள் சிறந்துநிற்கும், எ–று.

இரண்டிறந்த பன்மொழித்தொடரையுந் தழுவுதற்கு, இருமொழி யென்னாது பன்மொழி யென்றார். வரையறுத்துக் கூறாது நான்கிடத்தும் பொருள்சிறக்கு மென்றாராயினும், உம்மைத் தொகை பன்மொழிக்கண்ணும் பொருள்சிறந்து நிற்குமெனவும், அன்மொழித்தொகை,முன்பின் இருமொழிக் கண்ணு மின்றி அவற்றின் புறமொழிக்கண்ணே பொருள் சிறந்து நிற்குமெனவும், ஒழிந்த நான்குதொகைகளும்

முன்மொழிக்கண்ணாயினும் பின்மொழிக் கண்ணாயினும் பொருள்சிறந்து நிற்குமெனவுங் கொள்க.

வ-று.:-

குடம் வனைந்தான், வேங்கைப்பூ, முண்மரம் எனவும், விரிபூ எனவும், செந்தாமரை எனவும், வேற்கண் எனவும், வருமிவற்றுள் குடமுதலிய முன்மொழிகள், சட்டி முதலிய இனங்களை விலக்கி நிற்றலால் முன்மொழியிற் பொருள் சிறந்தன. நிலமுழுதான், கண்ணிமை என்றாற் போல்வன பின்மொழியிற் பொருள் சிறந்தன. உழுதான், இமை என்ற மாத்திரமே நிலத்தை என்பதுங் கண்ணென்பதுங் தாமேவந்து இயைதலினென்க. கபிலபாணர், புலிவிற்கெண்டை என்னுந் தொடக்கத்து உம்மைத் தொகைகள் எல்லாமொழியிலும் பொருள் சிறந்து நின்றன. பூங்குழல், தாழ்குழல் என்னுந் தொடக்கத்து அன்மொழித் தொகைகள் இந்த இருமொழிக் கண்ணும் பொருள் சிறவாது, உடையாள் எனத் தொக்குநின்ற அவற்றின் புறமொழிக்கண்ணே பொருள் சிறந்து நின்றன, பிறவுமன்ன. இனி ஆசிரியர் தொல்காப்பியனாரும்,

"முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலும்
மிருமொழி மேலு மொருங்குட னிலையலு
மம்மொழி நிலையா தன்மொழி நிலையலு
மந்நான் கென்ப பொருணிலை மரபே"

எனக் கூறுதலுங் காண்க.

## கா. கோபாலாசாரியர்
## தி.கோ. ரங்காசாரியர்

உரை :- முன்மொழி - முன்நின்ற மொழியும், பின்மொழி - பின் நிற்கும் மொழியும், பல்மொழி - எல்லாமொழிகளும், புறம் மொழி - இவற்றின் புறத்தில் வரும் மொழியும், எனும் நான்கு இடத்தும் - என்கிற நான் கிடங்களுள் ஒன்றிலே, தொகை பொருள் சிறக்கும் - தொகைநிலைத்தொடர்மொழிகள் பொருள் சிறந்து நிற்கும்.

குறிப்பு :-

சிறந்துநிற்றலாவது - வினையோடு இயைவதில் மேற்பட்டுத் தோன்றுதல். 'நான்கிடத்தும் பொருள் சிறக்கும்' எனப் பொதுப்படக் கூறினாராயினும் உம்மைத்தொகை பல மொழியிலும், அன்மொழித் தொகை புறமொழியிலும், மற்றை நான்கு தொகையும் முன்மொழியிலாயினும் பின்மொழியிலாயினும் பொருள் சிறக்குமெனக் கொள்க.

உதாரணம்

| | |
|---|---|
| 1. குடம் வனைந்தான், வேங்கைப்பூ, செந்தாமரை, முண்மரம், வேற்கண் | என்பவற்றில் 'குடம்' முதலிய முன்மொழிகள் 'பானை' முதலிய தம் இனத்தைவிலக்கி நிற்றலால், முன்மொழியிற்பொருள் சிறந்தன. |
| 2. நிலம் உழுதான், கண்ணிமை, சுடுதீ, செஞ்ஞாயிறு | என்பவற்றில் 'உழுதான்' முதலிய பின்மொழிகளைக் கூறியதனாலேயே 'நிலம்' முதலிய முன்மொழிகள் தாமே வந்தியை தலாற்பின் மொழியிற்பொருள்சிறந்தன. |
| 3. கபிலபரணர், பாக்குவெற்றிலை, சேர சோழ பாண்டியர் | இவை முதலிய உம்மைத் தொகைகளில் எல்லா மொழிகளிலும் பொருள் சிறந்தன. |
| 4. பூங்குழல், உயிர்மெய் முதலிய | இவை முதலிய அன்மொழித் தொகைகளில், சொல்லுவோனது கருத்து இவ்விருமொழிப்பொருளின் மேலும் ஆகாமல் 'உடையாள்' புறமொழிப்பொருளின் மேலதாதலால், அவற்றிற் பொருள் சிறந்தன. |

## ஆறுமுக நாவலர்

இ–ள்.:– முன்மொழி – முன்மொழியும், பின்மொழி – பின் மொழியும், பன்மொழி – அனைத்து மொழியும், பிறமொழி – அனைத்து மொழிக்கும் புறத்து வருமொழியும், எனும் நான்கு இடத்தும் – என்று சொல்லப்படும் இந் நான்கிடங்களுள் ஒன்றிலே, தொகைப் பொருள் சிறக்கும் – தொகைநிலைத்தொடர்ப் பொருள் சிறந்து நிற்கும், எ–று.

வ–று.:–

(1) குடம் வனைந்தான், குழிசி வனைந்தான், வேங்கைப்பூ, சண்பகப்பூ, விரிபூ, குவிபூ, செந்தாமரை, வெண்டாமரை, வேற்கண், கயற்கண் என்பவைகளிலே, குடமுதலிய முன்மொழிகள் இனம்விலக்கி நிற்றலால், அம் முன்மொழிகளிற் பொருள் சிறந்தன.

(2) நிலமுழுதான், கண்ணிமை, நீர்க்குவளை, சுடுதீ, செஞ்ஞாயிறு என்பவைகளிலே, நிலமுதலிய முன்மொழிகள் இனமும் இனத்தை விலக்குதலுமின்றி நிற்றலால், உழுதான் முதலிய பின்மொழிகளிற் பொருள் சிறந்தன.

(3) கபிலபரணர், சேரசோழபாண்டியர், புலிவிற்கெண்டை என்றற்றொடக்கத்து உம்மைத்தொகைகளிலே, அனைத்து மொழிகளிலும் பொருள் சிறந்தன.

(4) பூங்குழல், உயிர்மெய் என்றற் றொடக்கத்து அன்மொழித் தொகைகளிலே, சொல்லுவோனுடைய கருத்து இவ்விரு மொழிப் பொருண்மேலதாகாது இவ்விருமொழியு மல்லாத உடையாண் முதலிய புறமொழிப்பொருண்மேல தாதலால், அப் புறமொழிகளிற் பொருள் சிறந்தன.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். முன்மொழி – முன்மொழியும், – பின்மொழி – பின்மொழியும், – பன்மொழி – அனைத்து மொழியும், – புறமொழி – அனைத்து மொழிக்கும் புறத்து வருமொழியும், – எனும் நான்கு இடத்தும் – என்று சொல்லப்படும் இந்நான்கிடங்களுள் ஒன்றிலே, – தொகைப்பொருள் சிறக்கும் – தொகைநிலைத் தொடர்ப்பொருள் சிறந்து நிற்கும். எ–று.

(வரலாறு)

(1) குடம் வனைந்தான், குழிசி வனைந்தான், வேங்கைப்பூ, சண்பகப்பூ, விரிபூ, குவிபூ, செந்தாமரை, வெண்டாமரை, வேற்கண், கயற்கண் என்பவைகளிலே, குடமுதலிய முன்மொழிகள் இனம் விலக்கிநிற்றலால், அம்முன்மொழிகளிற் பொருள் சிறந்தன. (பூர்வபதப்பிரதானமாய் வந்தன).

(2) நிலமுழுதான், கண்ணிமை, நீர்க்குவளை, சுடுதீ, செஞ்ஞாயிறு என்பவைகளிலே, நிலமுதலிய முன்மொழிகள் இனமும் இனத்தை விலக்குதலுமின்றி நிற்றலால், உழுதான் முதலிய பின்மொழிகளிற் பொருள் சிறந்தன. (உத்தரபதப்பிரதானமாய் வந்தன).

(3) கபிலபரணர், சேரசோழபாண்டியர், புலிவிற்கெண்டை என்றற்றொடக்கத்து உம்மைத் தொகைகளிலே, அனைத்து மொழிகளிலும் பொருள் சிறந்தன. (சர்வபதப்பிரதானமாய் வந்தன).

(4) பூங்குழல், உயிர்மெய் என்றற்றொடக்கத்து அன்மொழித் தொகைகளிலே, சொல்லுவோனுடைய கருத்து இவ்விருமொழிப் பொருண் மேலதாகாது இவ்விருமொழியு மல்லாத உடையாண் முதலிய புறமொழிப் பொருண்மேலதாதலால், அப்புறமொழிகளிற் பொருள் சிறந்தன. (அந்நியபதார்த்தப் பிரதானமாய் வந்தன).

"தற்புருடன்றுவிகுக்கர்தாரயன்றாமுதன்மை. பிற்பதமாமெழுவாயா மொரூஉத்தொகை பெண்ணணங்கே, முற்பதமவ்வியயீபாவமொப்பு முறைபிறழுஞ், சொற்பதந் தொக்கவையெல்லா முதன்மை துவந்தனுக்கே" என்னும் பிரயோக விவேகநூற் கருத்தையு முணர்க.

## வை. மு. சடகோபாலராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:- முன் மொழி – முன்னின்ற மொழியும், பின்மொழி – பின் நிற்கும் மொழியும், பல் மொழி – எல்லாமொழிகளும், புறம் மொழி – (இம்மொழிகளல்லாமல்) இவற்றின் புறத்தில் வரும் மொழியும், எனும் – என்கிற, நான்கு இடத்தும் – நான்கு இடங்களுள் ஒன்றிலே, தொகை பொருள் சிறக்கும் – தொகைநிலைத் தொடர்மொழிகள் பொருள் சிறந்து நிற்கும்; எ –று.

பொதுப்பட நான்கிடத்தும் பொருள்சிறக்கு மென்றாராயினும், உம்மைத்தொகை பலமொழிகளிலும், அன்மொழித்தொகை புறமொழியிலும், மற்றை நான்கு தொகையும் இடத்துக்கு ஏற்றபடி முன்மொழியிலாயினும் பின் மொழியிலாயினும் பொருள் சிறக்கு மெனக் கொள்க.

உ–ம்.:-

குடம் வனைந்தான், விரி பூ: செந்தாமரை, வேற்கண் என்பவற்றில் குடம் முதலிய முன்மொழிகள் பானை முதலிய தம்இனத்தை விலக்கி நிற்றலால், முன்மொழியிற் பொருள் சிறந்தன. நிலம் உழுதான், சுடு தீ, செஞ்ஞாயிறு, புலிபாய்ந்தான் என்பவற்றில் உழுதான் முதலிய பின்மொழி களைக் கூறிய மாத்திரத்தில் நிலம் முதலிய முன்மொழிகள் தாமே வந்து இயைதலால் பின்மொழியிற் பொருள் சிறந்தன.

இராப்பகல், சேரசோழபாண்டியர் இவை முதலிய உம்மைத் தொகைகளில், எல்லா மொழிகளிலும் பொருள் சிறந்தன.

பூங்குழல், உயிர்மெய் இவை முதலிய அன்மொழித் தொகைகளில் சொல்லுவோனது கருத்து இவ்விருமொழிப் பொருளின் மேலுமாகாமல் உடையாள் முதலிய புறமொழிப் பொருளின் மேல தாதலால் அவற்றிற் பொருள் சிறந்தன.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:- முன்மொழி – முன்மொழியும், பின்மொழி – பின்மொழியும், பன்மொழி – அனைத்துமொழியும், புறமொழி – அனைத்து மொழிக்கும் புறத்து வருமொழியும், எனும் நான்கு இடத்தும் – என்று சொல்லப்படும் இந் நான்கிடங்களுள் ஒன்றிலே, தொகைப் பொருள் சிறக்கும் – தொகைநிலைத் தொடர்ப்பொருள் சிறந்து நிற்கும். எ–று.

வரையறுத்துக் கூறாது பொதுப்பட நான்கிடத்தும் பொருள் சிறக்கும் என்றாராயினும், உம்மைத்தொகை பன்மொழிக் கண்ணும், அன் மொழித்தொகை புறமொழிக்கண்ணும், ஒழிந்த நான்கு தொகைகளும் இடத்துக்கு ஏற்றபடி

முன்மொழியிலாயினும் பின்மொழியிலாயினும் பொருள் சிறந்து நிற்குமெனக் கொள்க.

உ–ம். ;–

(1) குடம் வனைந்தான், குழிசி வனைந்தான், வேங்கைப்பூ, சண்பகப்பூ, விரிபூ, குவிபூ, செந்தாமரை, வெண்டாமரை, வேற்கண், கயற்கண் – என்பவைகளிலே, குடமுதலிய முன்மொழிகள் இனம் விலக்கி நிற்றலல், அம் முன்மொழிகளிற் பொருள் சிறந்தன.

(2) நிலமுழுதான், கண்ணிமை, நீர்க்குவளை, சுடுதீ, செஞ்ஞாயிறு என்பவைகளிலே, நில முதலிய முன்மொழிகள் இனமும் இனத்தை விலக்குதலுமின்றி நிற்றலால், உழுதான் முதலிய பின்மொழிகளிற் பொருள் சிறந்தன.

(3) கபிலபரணர், சேரசோழபாண்டியர், புலிவிற்கொண்டை – என்றற்றெடக்கத் தும்மைத்தொகைகளிலே, அவனத்துமொழிகளிலும் பொருள் சிந்தனை.

(4) பூங்குழல், உயிர்மெய் – என்றற்றொடக்கத் தன்மொழித்தொகைகளிலே, சொல்லுவோனுடைய கருத்து இவ்விருமொழிப் பொருண் மேல்தாகாது இவ்விருமொழியு மல்லாத உடையாண் முதலிய புறமொழிப் பொருண்மேலதாதலால், அப் புறமொழிகளிற் பொருள் சிந்தனை.

## கா. நமச்சிவாய முதலியார்

முன் மொழி – முன் சொல்லும், பின் மொழி – பின் சொல்லும், பன்மொழி – பல சொற்களும், புறமொழி – புறத்து வருகிற சொல்லும், என்னும் நான்கிடத்தும் – என்னும் நான்கிடத்துள் ஒன்றில், தொகைப் பொருள் – தொகைநிலைத் தொடர்ப்பொருள், சிறக்கும் – சிறந்து நிற்கும்.

உதாரணம்

| | |
|---|---|
| குடம் வனைந்தான்<br>செந்தாமரை | குடம் முதலிய முன்மொழிகள் இனம் விலக்கி நிற்கையால், அவைகளிற் பொருள் சிறந்தது. |
| நிலம் உழுதான்<br>கண் இமை | நிலம் முதலாகிய முன் மொழிகள் இனம் விலக்குதலின்றி நிற்கையால், உழுதான் முதலாகிய பின்மொழிகளிற் பொருள் சிறந்தன. |
| கபில பரணர் | எல்லா மொழிகளிலும் பொருள் |

| | |
|---|---|
| சேர சோழ பாண்டியர் | சிறந்தன. |
| பூங்குழல்<br>கருங்குழல் | அன்மொழித் தொகைகளில், உடையவள் என்பது முதலாகிய புறமொழிகளிற் பொருள் சிறந்தன. |

## மோசகசு பொன்னையா

முன்னர் நிற்கும் மொழி, பின்னர் நிற்கும் மொழி, அனைத்து மொழிகள், உள்ளன அல்லாத புறமொழி என்னும் நான்கு இடங்களுள், ஒன்றிலே தொகைப்பொருள் சிறந்துநிற்கும் எ–று.

பொதுப்பட நான்கிடத்தும் சிறக்கும் தொகைப்பொருள் என்றதனால், வேற்றுமை, வினை, பண்பு, உவமைத் தொகைகளில் இடத்திற்கேற்ப முன்மொழியிலோ, பின் மொழியிலோ பொருள் சிறந்து நிற்கும் எனவும், உம்மைத் தொகையில் அனைத்து மொழிகளிலும் பொருள் சிறந்துநிற்கும் எனவும், அன்மொழித் தொகையில் அல்லாத புறமொழியில் பொருள் சிறந்துநிற்கும் எனவும் கொள்க. அதனாலே, சொல்லாற் பிளவுபட்டு ஒருமொழி போல் நடவாதனவாகிய தொகாநிலைத் தொடர்களுக்கும், புறமொழியாம் இடம் ஒன்றையும் நீக்கி ஏனை மூவிடங்களையும் ஏற்ற பெற்றி அமைத்துப் பொருள் உணர்ந்து கொள்க. முன் காலமுன்.

1. தொல் சூத் விருத்தி, பக். 65; 2. நன். 269, 290 உரை பார்க்க.

எ–டு.

1. குடம் வனைந்தான் – வேற்றுமைத்தொகை
விரி பூ – வினைத்தொகை
செந்தாமரை – பண்புத்தொகை
வேற்கண் – உவமத்தொகை
–முன்மொழிகள் இனம்விலக்கிப் பொருள் சிறந்தன

2. நிலம் உழுதான் – வேற்றுமைத்தொகை
சுடு தீ – வினைத்தொகை
செஞ்ஞாயிறு – பண்புத்தொாகை
புலிப்பாய்த்துள் – உவமத்தொகை
–முன்மொழிகள் தம் இனம் விலக்காது நிற்க, பின்மொழிகள் பொருள் சிறந்தன

2. இராப்பகல்; சேரசோழபாண்டியர்;

இவ்வும்மைத் தொகைகளில் அனைத்து மொழிகளிலும் தொகைப்பொருள் சிறந்தது

4. பொற்றொடி தாழ்குழல் வெள்ளாடை

இவ்வன்மொழித் தொகைகளில் சொல்வோனின் கருத்துப்பொருள் இத்தொடர்களில் உள்ள மொழிகளிற் சிறவாமல், புறமொழிகளிற் சிறந்தது.

தொல்காப்பியர்,

அவைதாம்
முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலு
மிருமொழி மேலு மொருங்குட னிலையலு
மம்மொழி நிலையா தன்மொழி நிலையலு
மந்நான் கென்ப பொருணிலை மரபே,

என உரைத்தார். அதன் உரையில் சேனாவரையர், 'வேற்றுமைத்தொகை முதனான்கு தொகையும் முன்மொழிப் பொருள; வேற்றுமைத் தொகையும் பண்புத் தொகையுஞ் சிறுபான்மை பின்மொழிப் பொருளவுமாம்; உம்மைத்தொகை இருமொழிப் பொருட்டு' எனக் கூறினார். அவர் முன், பின் என்பவற்றை இட முன், பின்னாகக் கொண்டார் என்பது அவர் காட்டியுள்ள எடுத்துக்காட்டுக்களாற் போதரும். நச்சினார்க்கினியர் கருத்தும் அதுவேயாகும். இளம்பூரணர், 'அவற்றுள், முன்மொழிப் பொருளுணர நின்றது வேங்கைப்பூ என்பது முன்மொழி பின்மொழி யாதல், இடமும் காலமும் என இருவகையால் உணரப்படும். அவற்றுள் இடத்தான் முன்மொழிப் பொருளாயிற்று; காலவரை நோக்கிப் பின்மொழிப் பொருளாம்1 எனக் கூறலின் அவரினும் வேறுபட்ட கருத்தினர் என்பது தெளிவாகின்றது. மயிலைநாதர், 'கால்வாய், அடைகடலென்ப வாயையுடைய கால், கடலினது அடையென முன்மொழிப் பொருள் குறித்தன. வேங்கைப்பூ, கருங்குதிரை என்பன பின்மொழிப் பொருள் கருதின' எனக்கூறி, இவை ஈரிடத்திற்கும் அவினயத்திற் காட்டினவை எனக் கூறிவைத்திருப்பதை நோக்கின், அவர் சேனாவரையரினும் மாறுபட்ட கருத்தினர் என்பது தெளிவாவதோடு, அவினயம் மேற்கொண்ட மரபும் அஃதாகும் என்பதும் போதரும்.

370. **வல்லொற்று வரினே யிடத்தொகை யாகும்**
**மெல்லொற்று வரினே பெயர்த்தொகை யாகும்.**

வல்லொற்று வரினே இடத்தொகை ஆகும்
மெல்லொற்று வரினே பெயர்த்தொகை ஆகும்.

val oṟṟu variṉ ē iṭattokai ākum
mel oṟṟu variṉ ē peyarttokai ākum

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Ellipsis of place and name**

The insertion of a surd (in a compound) indicates an ellipsis of 'place', while the insertion of a 'nasal' indicates that of 'name.

## ஒப்புமைப் பகுதி

வல்லொற்று வரினே யிடத்தொகை யாகும்
மெல்லொற்று வரினே பெயர்த்தொகை யாகும்

(மு.வீ.:746)

## மயிலை நாதர்

எ–ன், அத்தொகைக்கு [1]ஏற்பதோர் விதியுணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: வல்லொற்று இடையே வந்துழிப் பெயரோடு இடம் தொக்கதாம்; மெல்லொற்று இடையே வந்துழிப் பெயரோடு பெயர்தொக்கதாம், எ–று.

வ–று.:–

வடுகக்கண்ணனென்றால், வடுகநாட்டிற் பிறந்த கண்ணனென்றும், வடுகங்கண்ணனென்றால் வடுகற்கு மகனாகிய கண்ணனென்றுமாம். இஃது எழுத்துமுடிபேனும் தொகையதிகாரப் பட்டமையான் ஈண்டு வைத்தாரென்க.

---

பாடவேறுபாடு.:–

1. ஒப்பதோர்

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், அத்தொகைநிலைத் தொடர்மொழிக்கு ஏற்பதோர் இயல்பு கூறுகின்றது.

இ–ள்.: வல்லொற்று வரினே – தொகைச் சொற்களுள் வல்லொற்று வந்தால். இடத்தொகை யாகும் – பெயரொடு இடம் தொக்க தொகைநிலைத் தொடர்மொழியாம்; மெல்லொற்று வரினே – அத் தொகைச் சொற்களின் மெல்லொற்று இடையே வந்தால், பெயர்த்தொகையாகும் – பெயரொடு பெயர் தொக்க தொகைநிலைத் தொடர்மொழியாம், எ–று.

உ–ம்.:–

'வடுகக்கண்ணணன்' என இடையே வல்லொற்று வந்தால்; வடுகநாட்டில் பிறந்த கண்ணன் என்றும், 'வடுகங்கண்ணன்' என இடையே மெல்லொற்று வந்தால்; வடுகற்கு மகனாகிய கண்ணன் என்றும் பொருளாம்.

சோனகக்கொற்றன், சோனகங்கொற்றன்; யாவுகச் சாத்தன், யாவுகஞ்சாத்தன்; கொங்கணத்தேவன், கொங்கணந்தேவன்; ஈழப் பூதன், ஈழம்பூதன் என இடந்தொக்கதும், பெயர் தொக்கதுமாய்க் கொள்க. இவற்றை உருபும் பொருளும் உடன்றொக்க தொகை எனக் காண்க.

இவை எழுத்து முடிபேனும் தொகை அதிகாரப்பட்டமையால் ஈண்டே வைத்தார் என்க.

## விசாகப் பெருமாளையர்

இது, இடத்தொகையோ பெயர்த்தொகையோ வென ஐயப்படத் தக்கவைகளிற் சிலவற்றைத் துணிதற்கு ஆவதோர் குறியுணர்த்துகின்றது.

இ–ள்.:– வல்லொற்று – வல்லொற்றானது, வரின் – இடையே வந்தால், இடத்தொகை யாகும் – இடத்தின்கண்ணே தொக்க தொகையாகும், மெல்லொற்று – மெல்லொற்றானது, வரின் – இடையே வந்தால், பெயர்த்தொகை யாகும் – பெயரின்கண்ணே தொக்க தொகையாகும், எ–று.

வ–று.:–

வடுகக்கண்ணன், வடுகங்கண்ணன், துளுவச்சாத்தன், துளுவஞ்சாத்தன் என வரும். இவைமுறையே வடுகநாட்டிற் பிறந்த கண்ணன் வடுகனாகியகண்ணன் என விரியும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

இடத்தொகை பெயர்த்தொகைகளுக்குக் குறியீடு கூறுஞ் சூத்திரம் யாது.

வல்லொற்று வரினே யிடத்தொகை யாகும்
மெல்லொற்று வரினே பெயர்த்தொகை யாகும்.
(வல்லொற்று வரினே இடத்தொகை ஆகும்
மெல்லொற்று வரினே பெயர்த்தொகை ஆகும்.)

இ–ள்.:– வல்லொற்றானது இடையே வந்தால் இடத்தின்கண்ணே தொக்க தொகையாகும். மெல்லொற்றானது இடையே வந்தாற் பெயரின்கண்ணே தொக்க தொகையாகும்.

வ–று.:–

(1) வடுகக்கண்ணன்; இது வடுகநாட்டிற்பிறந்த கண்ணன் என விரியும். வடுகங்கண்ணன் இது வடுகனாகிய கண்ணன் என்றாயினும், வடுகனுக்கு மகனாகிய கண்ணன் என்றாயினும் விரியும்.

(2) துளுவச்சாத்தன்; இது துளுவநாட்டிற் பிறந்த சாத்தன் என விரியும். துளுவஞ்சாத்தன் இது துளுவனாகிய சாத்தன் என்றாயினும், துளுவனுக்கு மகனாகிய சாத்தன் என்றாயினும் விரியும்.

வடுகக்கண்ணனென்னும் இடத்தொகை "மவ்வீறொற்றழிந்து" என்னுஞ் சூத்திரவிதியாலும் "இயல்பினும் விதியினும்" என்னுஞ் சூத்திரவிதியாலும் புணர்ந்தது. வடுகங்கண்ணனென்னும் பெயர்த்தொகை "சில விகாரமா முயர்திணை" என்னும் விதியாற் புணர்ந்தது.

வல்லொற்றுவரின் மெல்லொற்றுவரின் என்றதனால், வல்லின முதன்மொழி வந்து புணர்ந்து இடத்தொகையும் பெயர்த் தொகையுமாய் ஐயுறநிற்கும்போது இக்குறியினாலே துணியப்படுமென்பதும், வடுகநாதன், வடுகவணிகன், வடுகவரசன் எனவரிற் சொல்லுவான் குறிப்பாலன்றி இவ்வாறு. துணியப்படாவென்பதுந் தாமே போதருமென்க.

## முகவை இராமானுச கவிராயர்

**இது,** ஐயமகற்றுதற்காவதோர் குறியுணர்த்திற்று.

**இ–ள்.:** வல்லொற்று • இடையிலே வரின் ஏழாம் வேற்றுமைத் தொகையாகும், மெல்லொற்று இடையிலே வரின் இருபெயரொட்டுப் பண்புத்தொகையாகும், எ–று.

வ—று.:–

வடுகக்கண்ணன், வடுகங்கண்ணன், கன்னடக்கொற்றன், கன்னடங்கொற்றன்; என வரும். இவை விரியுங்கால்; வல்லொற்றிற்கு– வடுக நாட்டிற் பிறந்த கண்ணனெனவும், மெல்லொற்றிற்கு–வடுகனாகிய கண்ணனெனவும் விரியும், வடுகனென்பது தந்தை பெயராய் மெல்லொற்று வரின், வடுகற்கு மகனாகிய கண்ணனெனவும் விரியும், பிறவுமன்ன. 'சில விகாரமா முயர்திணை' யென்றதினாலே, ஈறுகெட்டு வல்லொற்று மெல்லொற்று மிக்கு வேற்றுமைத்தொகையோ, பண்புத்தொகையோ வென்று ஐயபட நின்றபோது, இந்தக் குறியினாலே துணியப்படு மென்பதாயிற்று. இனி வடுகநாகன், வடுகவணிகன், வடுகவரசன், என வரின், சொல்லுவான் குறிப்பாலன்றி இவ்வாறு துணியப்படா தென்பது தானே வந்தியையு மென்க. வரின் அது இடத்தொகை; அது பெயர்த்தொகை – என முடிக்க.

## கா. கோபாலாசாரியர்
## தி.கோ. ரங்காசாரியர்

உரை :– வல் ஒற்றுவரின் – வல்லெழுத்து (நிலைமொழி வருமொழி களின்இடையே) வந்தால், இடத்தொகை ஆகும் – இடப்பொருளில் தொக்க ஏழாம்வேற்றுமைத்தொகையாம்; மெல்லொற்றுவரின் –மெல்லெழுத்து (இடையில்)வந்தால், பெயர் தொகை ஆகும் – பெயர்கள் தொக்க இருபெயரொட்டுப் பண்புத்தொகையாம்.

உதாரணம்

| | |
|---|---|
| 1. வடுகக் கண்ணன்<br>துளுவச் சாத்தன் | இவை வல்லொற்றுவந்த தொகையாதலின், வடுக நாட்டிற் பிறந்த கண்ணன், துளுவத்திற் பிறந்த சாத்தன் என விரியும். |
| 2. வடுகங் கண்ணன்<br>துளுவஞ் சாத்தன் | இவை மெல்லொற்றுவந்த தொகையாதலின், வடுகனாகிய கண்ணன், துளுவனாகிய சாத்தன் என விரியும். |

(இனி, சிறுபான்மை மெல்லொற்று வந்தபோது வடுகனுக்குப் பிறந்த கண்ணன் என விரிதலுமாம்.)

குறிப்பு :–

இத்தொடரில் வருமொழி முதல் வல்லொற்றாயவிடத்து, "சில விகாரமா முயர்திணை" என்றதனால் ஈறுகெட்டு வல்லொற்றும் இனமெல்லொற்றும் மிக்கு, வேற்றுமைத்தொகையோ? பண்புத் தொகையோ? என்று ஐயுற்று நின்றபொழுது இந்தக் குறிப்பால் துணியப்படுமென்ற தாயிற்று. 'வடுகநாதன்', 'வடுகவணிகன்', 'வடுகவரசன்' எனப் பிறவெழுத்துக்கள் வந்து புணருமிடத்து உரைப்போர் குறிப்பாலன்றி இவ்வாறு துணியப்படாவென்பது தானே வந்து இயையுமென்க.

## ஆறுமுக நாவலர்

**இ–ள்.: வல்லொற்று வரின் இடத்தொகை ஆகும்** – வல்லொற்றானது இடையே வந்தால் இடத்தின்கண்ணே தொக்க தொகையாகும், **மெல்லொற்று வரின் பெயர்த்தொகை ஆகும்** – மெல்லொற்றானது இடையே வந்தாற் பெயரின்கண்ணே தொக்க தொகையாகும், எ–று.

வ–று.:–

(1) **'வடுகக்கண்ணன்'**, இது வடுகநாட்டிற் பிறந்த கண்ணன் என விரியும். **'வடுகங்கண்ணன்'**, இது வடுகனாகிய கண்ணன் என்றாயினும், வடுகனுக்கு மகனாகிய கண்ணன் என்றாயினும் விரியும்.

(2) **'துளுவச்சாத்தன்'**, இது துளுவநாட்டிற் பிறந்தசாத்தன் என விரியும். **'துளுவஞ்சாத்தன்'**, இது துளுவனாகிய சாத்தன் என்றாயினும், துளுவனுக்கு மகனாகிய சாத்தன் என்றாயினும் விரியும்.

வடுகக்கண்ணனென்னும் இடத்தொகை, "**மவ்வீறொற்றழிந்து**" என்னுஞ் சூத்திர விதியாலும் "**இயல்பினும் விதியினும்**" என்னுஞ் சூத்திர விதியாலும் புணர்ந்தது. வடுகங்கண்ணனென்னும் பெயர்த்தொகை "சில விகாரமா **முயர்திணை**" என்னும் விதியாற் புணர்ந்தது.

'வல்லொற்று வரின்', 'மெல்லொற்று வரின்' என்றதனால் வல்லின முதன்மொழி வந்து புணர்ந்து இடத்தொகையும் பெயர்த்தொகையுமாய் ஐயுற நிற்கும்போது இக்குறியினாலே துணியப்படுமென்பதும்; வடுகநாதன், வடுகவணிகன், வடுகவரசன் எனவரிற் சொல்லுவான் குறிப்பாலன்றி இவ்வாறு துணியப்படாவென்பதுந் தாமே போதருமென்க.

## வி. குமாரசாமிப் புலவர்

இ–ள். வல்லொற்று வரின் இடத்தொகை ஆகும் – வல்லொற்றானது இடையே வந்தால் இடத்தின் கண்ணேதொக்க தொகையாகும், – மெல்லொற்று வரின் பெயர்த்தொகை ஆகும் – மெல்லொற்றானது இடையே வந்தாற் பெயரின் கண்ணே தொக்கதொகையாகும். எ–று.

வ–று.;–

(1) வடுகக்கண்ணன் இது வடுகநாட்டிற்பிறந்த கண்ணன் என விரியும். வடுகங்கண்ணன் இது வடுகனாகிய கண்ணன் என்றாயினும், வடுகனுக்கு மகனாகிய கண்ணன் என்றாயினும் விரியும்.

(2) துளுவச்சாத்தன் இது துளவநாட்டிற் பிறந்த சாத்தன் என விரியும், துளுவஞ்சாத்தன் இது துளுவனாகிய சாத்தன் என்றாயினும், துளுவனுக்கு மகனாகிய சாத்தன் என்றாயினும், விரியும்.

வடுகக் கண்ணனென்னும் இடத்தொகை 'மவ்வீறொற்றழிந்து' என்னுஞ்சூத்திரவிதியாலும் 'இயல்பினும் விதியினும்' என்னுஞ் சூத்திரவிதியாலும் புணர்ந்தது. வடுகங்கண்ணனென்னும் பெயர்த்தொகை 'சிலவிகாரமாமுயர்திணை' என்னும் விதியாற் புணர்ந்தது.

வல்லொற்றுவரின் மெல்லொற்றுவரின் என்றதனால், வல்லினமுதன் மொழிவந்து புணர்ந்து இடத்தொகையும் பெயர்த்தொகையுமாய் ஐயுறநிற்கும்போது இக்குறியினாலே துணியப்படுமென்பதும், வடுகநாகன், வடுகவணிகன், வடுகவரசன் எனவரிற் சொல்லுவான் குறிப்பாலன்றி இவ்வாறு துணியப்படாவென்பதுந் தாமே போதருமென்க.

## வை.மு. சடகோபராமானுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: வல் ஒற்று வரின் – வல்லெழுத்து (நிலைமொழி வருமொழிகளின் இடையே) வந்தால், இடத்தொகை ஆகும்–இடப்பொருளில் தொக்க ஏழாம் வேற்றுமைத் தொகையாம்; மெல்ஒற்று வரின் – மெல்லெழுத்து (இடையில்) வந்தால், பெயர்த்தொகை ஆகும் – பெயர்கள் தொக்க இருபெயரொட்டுப் பண்புத் தொகையாம்; எ–று.

உ–ம்.: (1) வடுகக்கண்ணன், துளுவச்சாத்தன், கன்னடக்கொற்றன் என இவை – வல்லொற்று வந்த தொகையாதலால் வடுகநாட்டிற் பிறந்த கண்ணன், துளுவநாட்டிற்சாத்தன், கன்னடத்திற் கொற்றன் என விரியும்.

உ–ம்.:–

வடுகங்கண்ணன், துளுவஞ்சாத்தன், கன்னடங் கொற்றன் என இவை மெல்லொற்று வந்த தொகையாதலால், வடுகனாகிய கண்ணன், துளுவனாகிய சாத்தன், கன்னடனாகிய கொற்றன் என விரியும். இனி, சிறுபான்மை மெல்லொற்று வந்தபோது, வடுகனுக்கு மகனாகிய கண்ணன் என இவ்வாறும் விரியும் என்று அறிக.

வல்லொற்று முதல்மொழி வந்து புணர்ந்தபொழுது, "சிலவிகாரமா முயர்திணை" என்றதனால் ஈறுகெட்டு அவ் வல்லொற்றும் அதற்கு இனமான மெல்லொற்றும் மிகப்பெற்று, வேற்றுமைத்தொகையோ பண்புத்தொகையே என ஐயப்பட நின்றபோது, இக்குறியினால் துணியப்படு மென்றதாயிற்று. வடுகநாகன், வடுகவணிகன், வடுகவரசன் எனப் பிற முதல்மொழிகள் வந்து புணர்ந்தால், சொல்லுவான் குறிப்பாலன்றி இவ்வாறு துணியப்படாவென்க.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– வல்லொற்று வரின் – வல்லொற்றானது இடையே வந்தால், இடத்தொகை ஆகும் – இடத்தின் கண்ணே தொக்க தொகையாகும்: மெல்லொற்று வரின் – மெல்லொற்றானது இடையே வந்தால், பெயர்த்தொகை ஆகும் – பெயரின்கண்ணே தொக்க தொகை யாகும். எ–று.

உ–ம்.

(1) வடுகக்கண்ணன் – இது வடுகநாட்டிற் பிறந்த கண்ணன் என விரியும். வடுகங்கண்ணன் – இது வடுகனாகிய கண்ணன் என விரியும். வடுகன் என்பது தந்தை பெயராயின் வடுகனுக்கு மகனாகிய கண்ணன் என்றும் விரியும்.

(2) துளுவச்சாத்தன் – இது துளுநாட்டிற் பிறந்த சாத்தன் என விரியும். துளுவஞ்சாத்தன் – இது துளுவனாகிய சாத்தன் என விரியும். துளுவன் என்பது தந்தை பெயராயின் துளுவனுக்கு மகனாகிய சாத்தன் என்றும் விரியும்.

வடுக்கண்ணனென்னும் இடத்தொகை "மவ்வீ றொற்றழிந்து" (சூ–219) என்னுஞ் சூத்திரவிதியாலும் "இயல்பினும் விதியினும்" (சூ–165) என்னுஞ் சூத்திரவிதியாலும் புணர்ந்தது. வடுகங்கண்ண னென்னும் பெயர்த்தொகை "சிலவிகாரமா முயர்திணை" (சூ–159) என்னும் விதியாற் புணர்ந்தது.

வல்லொற்று வரின் மெல்லொற்று வரின் என்றதனால், வல்லின முதன்மொழி வந்து புணர்ந்து இடத்தொகையும் பெயர்த்தொகையுமாய் ஐயுறநிற்கும்போது இக் குறியினாலே துணியப்படுமென்பதும், வடுகநாகன் வடுகவணிகன் வடுகவரசன் எனவரிற் சொல்லுவான் குறிப்பாலன்றி இவ்வாறு துணியப்படாவென்பதுந்தாமே பெறப்படும்.

## கா. நமச்சிவாய முதலியார்

**வல்லொற்று** – வல்லொற்றானது, **வரின்** – (இடையே) வந்தால், **இடத்தொகை ஆகும்** – இடத்தின் கண்ணே தொக்க தொகை ஆகும்; **மெல்லொற்று** – மெல்லொற்றானது, **வரின்** – (இடையே) வந்தால், **பெயர்த்தொகை ஆகும்** – பெயரின் கண்ணே தொக்க தொகையாகும்.

உதாரணம்

| | | |
|---|---|---|
| வடுகக் கண்ணன் | : | வடுகநாட்டிற் பிறந்த கண்ணன்; |
| வடுகங் கண்ணன் | : | வடுகனாகிய கண்ணன், (அல்லது) வடுகனுக்கு மகனாகிய கண்ணன்; |
| துளுவச் சாத்தன் | : | துளுவநாட்டிற் பிறந்த சாத்தன்; |
| துளுவஞ் சாத்தன் | : | துளுவனாகிய சாத்தன், (அல்லது) துளுவனுக்கு மகனாகிய சாத்தன் என விரியும். |

159–ஆம் சூத்திரத்தில், *'சில விகாரமாம் உயர்திணை'* என்றதனால், வல்லின முதன்மொழி வந்து புணரும்போது ஈறுகெட்டு வல்லொற்றானது *மெல்லொற்றாவது மிகுந்து* வந்தவிடத்து, வேற்றுமைத் தொகையோ பண்புத்தொகையோ எனச் சந்தேகம் தோன்றும்பொழுது, மேலே கூறியபடி வல்லொற்று மிகின் வேற்றுமைத் தொகையென்றும், மெல்லொற்று மிகின் பண்புத்தொகை யென்றும் துணிய வேண்டும். மெல்லின இடையின முதன்மொழிகளாவது உயிர் முதன்மொழியாவது வரின் உரைப்போன் குறிப்பாலன்றித் துணியப்படா.

வடுகநாதன், வடுகவணிகன், வடுகவரசன்.

## மோசசு பொன்னையா

நிலை வரு மொழிகளிடையே வல்லொற்று வந்தால், இடப்பொருளில் தொக்க ஏழாம் வேற்றுமைத் தொகையாம்; நிலைவரு மொழிகளிடையே மெல்லெழுத்து வந்தால் பெயர்கள் தொக்க இருபெயரெட்டுப் பண்புத் தொகையாம் எ–று.

எ–டு.

1. வடுகக் கண்ணன்

(வடுக நாட்டிற்பிறந்த கண்ணன்) வல்லொற்றுவர இடத்தொகையாயின

துளுவச் சாத்தன்

(துளுவ நாட்டிற் பிறந்த சாத்தன்)

2. வடுங்கண்ணன்

(வடுகனான கண்ணன்)

துளுவஞ் சாத்தன்

(துளுவனான சாத்தன்) மெல்லொற்று வர பெயர்த் தொகையாயின

'சிலவிகாரமாம் உயர்திணை' எனப்பட்டவற்றுள் இவை முறையே மகர ஈற்றின் முன் வலியாகவும், னகர ஈற்று உயர்திணைப் பெயரின் முன் வலியாகவும் புணர்ச்சி விதி ஏற்றுப் புணர்ந்து முடிந்தனவாக, அவற்றை இந்நின்ற குறியினாலே முறையே வேற்றுமைத் தொகை எனவும், பண்புத்தொகை எனவும் அமைக்க, என்பாராய் இவ்வாறு ஆணைதந்தார் என்க. வல்லெழுத்தல்லாத பிற வருமொழி முதற்கண்வரின், வடுகநாதன், துளுவவணிகன், கன்னடவரசன் என இவ்வாறு சொல்லுவான் குறிப்பானன்றிப் பிறவாறு உணரப்படாது என்பதையும் ஈண்டே அறிக.

(20)

## 371. உயர்திணை யும்மைத் தொகைபல ரீறே.

**உயர்திணை உம்மைத் தொகை பலர் ஈறே.**

uyartiṇai ummaittokai palar īṟu ē

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Exception to the cumulative Ellipses**

Cumulative Ellipses involving (singular) personal add a plural termination to the last noun.

## ஒப்புமைப் பகுதி

உயர்திணை மருங்கின் உம்மைத் தொகையே
பலர்சொல் நடைத்தென மொழிமனார் புலவர்

(தொல்.சொல்.:421)

உயர்திணை மருங்கி லும்மைத் தொகையே
பலர்சொன் னடைத்தென மொழிமனார் புலவர்

(இ.வி.:343)

உயர்திணை யும்மைத் தொகைபல ரீறே

(மு.வீ.:747)

## மயிலை நாதர்

இதுவுமது.

இ–ள்.: உயர்திணையிடத்து வந்த உம்மைத்தொகை பல்லோரைக் காட்டும் ரகரவொற்றாய் நிற்கும், எ–று.

வ–று.: கபிலபரணர்வந்தா [1]ரெனவும், சாத்தன் கொற்றன் வந்தாரெனவும் வரும். இவை விரியின், கபிலனும் பரணனும் வந்தார், சாத்தனும் கொற்றனும் வந்தாரென்று ஆம். [2]என்னை?

"உயர்திணை மருங்கி னும்மைத் தொகையே
பலர்சொன் னடைத்தென மொழிமனார் புலவர்"

(*எச்ச.* 25)

என்றார் தொல்காப்பியனார்.

## சங்கர நமச்சிவாயர்

எ–னின்,உம்மைத்தொகைக்காவதோர் விதி உணர்–ற்று.

---

பாடவேறுபாடு.:–

1. ரெனவரும்,

2.என்னை "உயர்திணை"

இ–ள்.:– உயர்திணை ஒருமைப்பாலின்கண் வரும் உம்மைத்தொகைகள் ரவ்வீறும்கள்ளீறும் ஆகிய பலரீற்றனவேயாம் எ–று.

பலரீறே என்றமையான் ஒருமைப்பால் என்பது பெற்றாம்.

வ–று.:–

கபிலபரணர்,கல்லாட மாமூலர்,சேர சோழ பாண்டியர்,தேவன் தேவிகள்,பார்ப்பான் பார்ப்பனிகள்,வில்லி வாளிகள் என வரும்.

இவ்வொருமைகள் இத்துணையர் என்னும் பொருள்பட நிற்றலின் பலரீற்ற ஆயின.

னகர ஈறு இடையே கெடுதல், 'சில விகாரமாம் உயர்திணை' என்பதனாலும், இறுதிக்கண் கெடுதல் இதனுட் , 'பலரீறே' என்பதனாலும் கொள்க.

பலரீறே என்னும் தேற்றத்தான் அஃறிணையொருமை உம்மைத்தொகைகளும் பொதுவொருமை உம்மைத் தொகைகளும் தத்தம் பலரீற்றனவேயாம்.கன்னும் நியதி அல்ல என்றாராயிற்று.அவை வருமாறு.:– உண்மை யின்மைகள், உண்மையின்மை, நன்மைதீமைகள், நன்மைதீமை ,இராப்பகல்கள், இராப்பகல்; நிலம்நீர்தீக்காற்று ஆகாயங்கள்,நிலம்நீர்தீக்காற்று ஆகாயம், தந்தை தாயர் ,தந்தை தாய்கள்,தந்தைதாய்,சாத்தன் சாத்தியர், சாத்தன் சாத்திகள், சாத்தன் சாத்தி எனவும் பன்மையீற்றானும் இயல்பாய ஒருமையீற்றானும் வந்தன.

இயல்பாகிய ஒருமூயீற்றான் வந்தனவேல் உம்மைத் தொகையன்றிக் கபிலன் பரணன் இருவரும் வந்தார் என்றாற்போலச் செவ்வெண்ணாம் பிறவெனின்; பலமொழிகளையும் திரட்டி ஒருபிண்டமாகக் கூறியவழி உம்மைத்தொகையாகவும் பிளவுபடக் கூறியவழிச் செவ்வெண் ணாகவும் கொள்ளப்படும் என்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், உயர்திணையிடத்து வந்த உம்மைத்தொகைக்கு ஏற்பதோர் இயல்பு கூறிற்று.

இ–ள்.:– உயர்திணை யும்மைத் தொகை – உயர்திணைப் பெயரிடத்து வந்த உம்மைத்தொகைநிலைத் தொடர்மொழி, பல ரீறே–பலரைக் காட்டும் ரகரவொற்றாக நிற்கும், எ–று.

உ–ம்: –

சேரசோழபாண்டியர், கபிலபரணர், சந்திரசூரியர் என வரும்.

"உயர்திணை மருங்கி னும்மைத் தொகையே
பலர்சொன் னடைத்தென மொழிமனார் புலவர்"

(தொல். சொல். 421.)

## விசாகப் பெருமாளையர்

இது, உம்மைத்தொகைக்கு ஆவதோர் விதியுணர்த்துகின்றது.

இ—ள்.: உயர்திணை – உயர்திணை யொருமையில் வருகிற, உம்மைத் தொகை – உம்மைத்தொகைகளானவை, பலரீறே – ரவ் வொற்றுங் கள்ளுமாகிய பலர்பால் விகுதியை யுடையனவேயாம், எ—று.

வ—று.:—

சேர சோழ பாண்டியர், தேவன் றேவிகள், என வரும் பலரீறே என்கிற தேற்றத்தால் அஃறிணை யொருமையிலும் பொதுத் திணை யொருமையிலும் வருகிற உம்மைத்தொகைகள் பன்மைவிகுதி பெற்றே வரல் வேண்டுமென்கிற நியதியில்லை யென்பதாயிற்று. அவை வருமாறு: நன்மை தீமை, நன்மை தீமைகள் எனவும் தந்தை தாய், தந்தை; தாய்கள், தந்தை தாயர் எனவும் வரும். சேரன் சோழன் பாண்டியன், எனப் பிளவுபட்டு வந்தாற் செவ்வெண்ணா மெனக் கொள்க.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

உம்மைத்தொகைக்கண் உயர்திணை இவ்வீற்றான் முடிதல்வேண்டுமெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

உயர்திணை யும்மைத் தொகைபல ரீறே.
(உயர்திணை யும்மைத்தொகை பலர் ஈறே.)

இ—ள்.: உயர்திணையொருமையில் வரும் உம்மைத்தொகைகளானவை ரவ்வொற்றுங் கள்ளுமாகிய பலர்பால் விகுதியையுடையனவேயாம். எ—று.

வ—று.:—

கபிலபரணர், கல்லாடமாமூலர், சேரசோழபாண்டியர், தேவன்றேவிகள் எனவரும். னகரவீறு இடையே கெடுதல் "சில விகாரமா முயர்திணை" என்பதனாலும், இறுதிக்கட்கெடுதல் இதுனுட் "பலரீறே" என்பதனாலுங் கொள்க.

இச்சூத்திரக்கருத்து யாது?

கபிலபரணர் வந்தார்; கபிலன் பாணன் என்னும் உம்மைத் தொகை சந்தியால் கபிலபரணன் என நின்று பன்மை வினைகொண்டு முடியவேண்டு தலின் ஆண்டுநின்ற ஒருமையீறு பன்மையோடு முடிதல் வழுவென்று கருதி னகர வீறு ரகர வீறாய் நிற்குமென வழுவமைத்தபடியாம்.

பலரீறே என்னுந் தேற்றத்தால், அஃறிணை யொருமையில் வரும் உம்மைத்தொகைகளும் பொதுத்திணை யொருமையில் வரும் உம்மைத்தொகைகளுந் தத்தம் பன்மையீறாகவே வரல் வேண்டு மென்னும் நியதியின்றி, உண்மையின்மைகள், உண்மையின்மை, இராப்பகல்கள், இராப்பகல் எனவும், தந்தைதாயார், தந்தைதாய்கள், தந்தைதாய்; சாத்தன் சாத்தியர், சாத்தன் சாத்திகள், சாத்தன்சாத்தி எனவும், பன்மை யீற்றாலும் இயல்பாய் ஒருமையீற்றாலும் வருமென்பதாயிற்று.

## முகவை இராமானுச கவிராயர்

இது, உம்மைத்தொகைக்குப் புறனடை யுணர்த்திற்று.

இ–ள்.: உயர்திணை யொருமைப்பாலிலே வரும் உம்மைத்தொகைகள், (ரவ்வீறுங் கள்ளீறுமாகிய) பலர் ஈற்றை யுடையனவே யாம், எ–று.

வ–று.:–

கபிலபரணர், கல்லாடமாமூலர், சேர சோழபாண்டியர், தேவன்றேவிகள் என வரும். இனி அருத்தாபத்தியால், அஃறிணையொருமை யும்மைத்தொகைகளும் பொதுப் பெயரொருமை யும்மைத்தொகைகளும் பன்மையீறாகவே வரவேண்டுமென்னும் நியதியின்றி, உண்மையின்மைகள், உண்மையின்மை, நன்மைதீமைகள், நன்மைதீமை எனவும்; தந்தைதாயர், தந்தைதாய் , சாத்தன் சாத்திகள், சாத்தன் சாத்தி எனவும் பன்மையீற்றாலும் ஒருமையீற்றாலும் வருமென்பதாயிற்று. பலமொழிகளையுந் திரட்டி யொருபிண்டமாகக் கூறியபோது உம்மைத்தொகையாகவும், கபிலன் பரணனிருவரும் வந்தாரெனப் பிளவுபடக் கூறியபோது பெயர்ச்செவ்வெண்ணாகவுங் கொள்ளப்படுமெனக் காண்க. இனி ஆசிரியர் தொல்காப்பியனாரும்,

"உயர்திணை மருங்கினும்மைத் தொகையே
பலர் சொன்னடைத்தெனமொழிமனார்புலவர்"

என இவ்வாறு கூறுதலுங் காண்க.

## கா. கோபாலாசாரியர்

## தி.கோ. ரங்காசாரியர்

**உரை** :– **உயர்திணை உம்மைத் தொகை** – உயர்திணை யொருமையில் வருகிற உம்மைத் தொகைகள், **பலர் ஈறே** – (ரகரமெய்யும் 'கள்' விகுதியுமாகிய) பலர்பால் விகுதியை ஈற்றிலுடையனவேயாம்.

உ—ம் :—

கபிலபரணர், சந்திரசூரியர், சேரசோழபாண்டியர், தேவன் தேவிகள்.

குறிப்பு :—

'பலரீறே' என்ற தேற்றேகாரத்தால் அஃறிணையொருமையும்மைத் தொகைகளும் பண்மையீறாகவே வரவேண்டுமென்னும் நியதியின்றி 'நன்மை தீமைகள்' 'நன்மைதீமை', 'தந்தை தாயர்' 'தந்தைதாய்' எனப் பன்மையீற்றாலும் ஒருமையீற்றாலும் வருமென்றதாயிற்று. பலமொழிகளையும் திரட்டி ஒரு பிண்டமாகக் கூறியபோது பெயர்ச்செவ்வெண்ணாகவும் கொள்ளப்படுமென்பது காண்க.

## ஆறுமுக நாவலர்

இ—ள்.:— உயர்திணை உம்மைத்தொகை — உயர்திணை யொருமையில் வரும் உம்மைத்தொகைகளானவை, பலர் ஈறே — ரவ்வொற்றுங் கள்ளுமாகிய பலர்பால் விகுதியை யுடையன வேயாம், எ—று.

வ—று.:—

கபிலபரணர், கல்லாடமாமூலர், சேரசோழபாண்டியர், தேவன் றேவிகள் எனவரும். னகரவீறு இடையே கெடுதல் "சில விகாரமா முயர்திணை" என்பதனாலும், இறுதிக்கட் கெடுதல் இதனுட் "பல ரீறே" என்பதனாலுங் கொள்க.

'பலரீறே' என்னுந் தேற்றத்தால், அஃறிணை யொருமையில் வரும் உம்மைத்தொகைகளும் பொதுத்திணை யொருமையில் வரும் உம்மைத்தொகைகளுந் தத்தம் பன்மையீறாகவே வரல் வேண்டுமென்னும் நியதியின்றி, உண்மையின்மைகள், உண்மையின்மை, இராப்பகல்கள், இராப்பகல் எனவும்; தந்தைதாயர், தந்தைதாய்கள், தந்தைதாய், சாத்தன் சாத்தியர், சாத்தன் சாத்திகள், சாத்தன்சாத்தி எனவும்; பன்மையீற்றாலும் இயல்பாகிய ஒருமையீற்றாலும் வருமென்பதாயிற்று. இயல்பாகிய ஒருமையீற்றால் வந்தனவாயின், உம்மைத் தொகையாகாது, கபிலன் பரணனிருவரும் வந்தாரென்றாற் போலச் செவ்வெண்ணாமன்றோ வெனின், பலமொழிகளையுந் திரட்டி ஒருபிண்டமாகக் கூறியபோது உம்மைத்தொகையாகவும், பிளவுபடக் கூறியபோது செவ்வெண்ணாகவுங் கொள்ளப்படுமென்க.

## வ. குமாரசாமிப் புலவர்

இ—ள்.:— உயர்திணை உம்மைத்தொகை — உயர்திணை

யொருமையில்வரும் உம்மைத்தொகைகளானவை, – பலர் ஈறே – ரவ்வொற்றுங் கள்ளுமாகிய பலர் பால்விகுதியையுடையனவேயாம். எ– று.

வ–று.:–

கபிலபரணர், கல்லாடமாமூலர், சேரசோழபாண்டியர், தேவன் றேவிகள் எனவரும். னகரவீறு இடையே கெடுதல் 'சிலவிகாரமாமுயர்திணை' என்பதனாலும் இறுதிக்கட்கெடுதல் இதனுட் 'பலரீறே' என்பதனாலுங்கொள்க.

பலரீறே என்னுந் தேற்றத்தால், அஃறிணையொருமையில் வரும் உம்மைத் தொகைகளும் பொதுத்திணையொருமையில் வரும் உம்மைத்தொகைகளுந் தத்தம் பன்மையீறாகவே வரல்வேண்டுமென்னும் நியதியின்றி, உண்மையின்மைகள், உண்மையின்மை, இராப்பகல்கள், இராப்பகல் எனவும். தந்தைதாயர், தந்தைதாய்கள், தந்தைதாய்; சாத்தன்சாத்தியர், சாத்தன்சாத்திகள், சாத்தன்சாத்தி எனவும். பன்மையீற்றாலும் இயல்பாய ஒருமையீற்றாலும் வருமென்பதாயிற்று. இயல்பாகிய ஒருமையீற்றால் வந்தனவாயின், உம்மைத்தொகையாகாது, கபிலன் பரணனிருவரும் வந்தாரென்றாற் போலச் செவ்வெண்ணா மன்றோவெனின், பலமொழிகளையுந் திரட்டி ஒரு பிண்டமாகக் கூறிய போது உம்மைத் தொகையாகவும், பிளவுபடக்கூறிய போது செவ்வெண்ணாகவுங் கொள்ளப்படு மென்க.

## வை.மு. சடகோபராமாநுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: **உயர்திணை உம்மைத்தொகை** – உயர்திணை யொருமையில் வருகிற உம்மைத்தொகைகள், **பலர் ஈறே** – (ரகரமெய்யும் 'கள்' என்பதுமாகிய) பலர்பால் விகுதிகளை ஈற்றிலுடையனவேயாம்; எ–று.

உ – ம்.:–

கபிலபரணர், நபுலவிபுலர், சேரசோழபாண்டியர், தேவன் தேவிகள்.

'பலரீறே' என்ற தேற்றேகாரத்தால், அஃறிணை யொருமையிலும் பொதுத்திணை யொருமையிலும் வருகிற உம்மைத்தொகைகள் தம்தம் பன்மையீறாகவே வரவேண்டு மென்கிற நியதி யில்லாமல், உண்மையின்மைகள், உண்மை யின்மை; இராப்பகல்கள், இராப்பகல் எனவும்; தந்தைதாயர், தந்தைதாய், சாத்தன் சாத்தியர், சாத்தன்சாத்திகள்,

சாத்தன்சாத்தி எனவும் பன்மையீற்றாலும், ஒருமையீற்றாலும் வரு மென்ற தாயிற்று.

## பவானந்தம் பிள்ளை

இ—ள்.: உயர்திணை உம்மைத்தொகை – உயர்திணையொருமையில் வரும் உம்மைத்தொகைகளானவை, பலர் ஈறே – (ரகரவொற்றுங் கள்ளுமாகிய) பலர்பால் விகுதியையுடையனவே யாம். எ—று.

உ—ம்.:—

கபிலரணர், கல்லாடமாமூலர், சேரசோழபாண்டியர், தேவன்றேவிகள். (னகரவீறு இடையே கெடுதல் "சில விகாரமா முயர்திணை" (சூ—159) என்பதனாலும், இறுதிக்கட்கெடுதல் இதனுட் 'பல ரீறே' என்பதனாலுங் கொள்க.)

'உயர்திணை யும்மைத் தொகை பலரீறே' எனவே, அருத்தாபத்தியால் அஃறிணை யொருமையில் வரும் உம்மைத்தொகைகளும் பொதுத்திணை யொருமையில் வரும் உம்மைத்தொகைகளுந்தத்தம் பன்மையீறாகவே வரல்வேண்டு மென்னும் நியதியின்றி, உண்மை யின்மைகள், உண்மையின்மை; இராப்பகல்கள், இராப்பகல் – எனவும்; தந்தைதாயர், தந்தைதாய்கள், தந்தைதாய்; சாத்தன் சாத்தியர், சாத்தன் சாத்திகள், சாத்தன் சாத்தி – எனவும் பன்மையீற்றாலும் இயல்பாய ஒருமையீற்றாலும் வருமென்பதாயிற்று. இயல்பாகிய ஒருமை;யறறான் வந்தனவேல் கபிலன் பரணனிருவரும் வந்தாரென்றாற்போலச் செவ்வெண்ணாமன்றோவெனின், பலமொழிகளையுந் திரட்டி ஒரு பிண்டமாகக் கூறியபோது உம்மைத் தொகையாகவும் பிளவுபடக் கூறியபோது பெயர்ச்செவ்வெண்ணாகவுங் கொள்ளப்படு மென்பதறிக.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ—ள்.) உயர்திணை – உயர்திணை யொருமையில் வருகிற, உம்மைத் தொகை – உம்மைத் தொகைகளானவை, பலர் ஈறே – (ரவ்வொற்றும் கள்ளுமாகிய) பலர் பால் விகுதியை யுடையனவேயாம். (எ—று)

(பொ—ரை.) உயர்திணை ஒருமைப் பாலின்கண் வரும் உம்மைத் தொகைகள் ரவ்வீறும் கள்ளீறும் ஆகிய பல ரீற்றனவேயாம்.

(உ—ம்.) சோர சோழ பாண்டியர்.

கபில பரணர்.

தேவன் தேவிகள்.

பலரீறே என்கிற தேற்றத்தால் அஃறிணை யொருமையிலும் பொதுத்திணை யொருமையிலும் வருகிற உம்மைத் தொகைகள் பன்மை விகுதி பெற்றே வரல் வேண்டுமென்கிற நியதியில்லை என்பதாயிற்று.

(உ–ம்.) நன்மை தீமை.

தந்தை தாய். பன்மை விகுதியின்றி வந்தன.

நன்மை தீமைகள்.

தந்தை தாய்கள்.

தந்தை தாயர். பன்மை விகுதி பெற்று வந்தன.

சேரன் சோழன் பாண்டியன் எனப் பிளவுபட்டு வந்தாற் செவ்வெண்ணாம் எனக் கொள்க.

உம்மைத் தொகைக்கும் செவ்வெண்ணுக்கும் வேறுபாடு:–

பல பொருள்களையுந் திரட்டி பிண்டமாகக் கூறினால் அது உம்மைத் தொகையெனவும், சேரன் சோழன் பாண்டியன், எனப் பிளவுபட்டு நிற்கக் கூறினால் அதுத செவ்வெண்ணா மெனவும் கொள்க.

(உ–ம்.) இராப் பகல், பாவ புண்ணியம், உண்மை யின்மை. ஆடு மாடு, தாய் தந்தை எனப் பிண்டமாக் கூறிய உம்மைத் தொகை.

(உ–ம்.) சேரன் சோழன் பாண்டியன், கபிலன் பரணன், நபுலன் விபுலன் எனப் பிறவுபட்டு நிற்கக் கூறிய செவ்வெண்.

## கா. நமச்சிவாய முதலியார்

**உயர்திணை** – உயர்திணையில் வருகின்ற, **உம்மைத் தொகை** – உம்மைத் தொகைகளானவை, பலர் ஈறே – (ரவ்வொற்றும் கள் ஈறுமாகிய) பலர்பால் விகுதியை யுடையனவேயாம்.

உதாரணம்

சேர சோழ பாண்டியர்; கபில பரணர்; தேவன் தேவிகள்.

'பலரீறே' என்னும் தேற்றத்தால், அஃறிணையிலும் பொதுத் திணையிலும் வரும் உம்மைத் தொகைகள் பன்மை விகுதி பெற்றே வரல்வேண்டும் என்னும் நியதியில்லை யென்பதாயிற்று.

நன்மை தீமை – நன்மை தீமைகள்.

தந்தை தாய் – தந்தை தாய்கள், தந்தை தாயர்.

இயல்பாகிய ஒருமையீற்றால் வந்தனவாயின் உம்மைத் தொகையாகாமல், கபிலன் பரணன் இருவரும் வந்தார்

என்றாற்போலச் செவ்வெண்ணாம் அன்றோவெனின், பல மொழிகளையும் ஒன்றாகத் திரட்டி ஒரு பிண்டமாக்கிக் கூறியபோது உம்மைத் தொகையாகவும், சேரன் சோழன் பாண்டியன் எனப் பிளவுபடக் கூறியபோது செவ்வெண்ணா கவும் கொள்க.

## மோசகு பொன்னையா

உயர்திணை உம்மைத்தொகைகள் ரவ்வொற்றுங் கள்ளீறுமாகிய பலர்ப்பால் ஈற்றனவேயாம் எ—று.

எ—டு.:-

கபிலபரணர்; சேரசோழபாண்டியர்; தேவன்தேவிகள்.

முன்னர், ஒருமொழிபோனடப்பன என்றதால் இவ்விதப்பு வேண்டப்பட்டது. பலரீறே என்ற தேற்றத்தால், அஃறிணை, பொதுத்திணைகளில் இவ்வாறு உம்மைத்தொகைப்படுவன தத்தம் பன்மை ஈற்றவாக வேண்டுமென்னும் நியதி இல்லை எனக் கொள்க. தொல்காப்பியர்,

உயர்திணை மருங்கி னும்மைத் தொகையே
பலர்சொன் னடைத்தென மொழிமனார் புலவர்,;5

என்றார்.

(21)

## 372. தொக்குழி மயங்குந விரண்டு முதலேழ் எல்லைப் பொருளின் மயங்கு மென்ப.

தொக்கு உழி மயங்குந இரண்டு முதல் ஏழ்
எல்லைப் பொருளின் மயங்கும் என்ப.

ṭokkuḷi mayaṅkuna iraṇṭu muṭal ēḷ
ellai poruḻiṉ mayaṅkum eṉpa

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

### Expansion of ambiguous elliptical compounds

(The learned) say that there may be from two to seven different significations implied in elliptical compounds of an ambiguous nature.

## ஒப்புமைப் பகுதி

பிறிதுபிறி தேற்றலும் உருபுதொக வருதலும்
நெறிபட வழங்கிய வரிமருங் கென்ப

(தொல்.சொல்.:104)

தொக்குழி மயங்குந விரண்டு முதலே
ழெல்லைப் பொருளின் மயங்கு மென்ப.

(இ.வி.: 344)

ஒருரு பேனைய வுருபொடு சிவணலும்
தொக்குநின் றொழுகலும் வழுவா காவே.

(மு.வீ.: 542)

## மயிலைநாதர்

எ–ன், தொகைச் சொற்பொருள் மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: சொற்கள் தொக்கு நின்றவிடத்து, மயங்கும் இயல்பினையுடைய சொற்கள் (வேற்றுமை முதலாக அன்மொழி யீறாகச் சொன்ன ஆறுவகைப் பொருட்சொற்களும்), இரண்டு முதலாக ஏழீறாக நின்ற [1]பொருண்மேல் மயங்குமென்று சொல்லுவர் புலவர், எ–று.

'தொக்குழிமயங்குந' எனவே தொகாவிடத்து மயங்காவெனவும், 'மயங்குந மயங்கும்' எனவே மயங்கும் இயல்பில்லன மயங்காவெனவும் கொள்க.

வ–று.:–

தெய்வ வணக்கம், தற்சேர்ந்தார் (நாலடி. 93, 170) எனவும் பொற்குடம், திரையனூர் எனவும், நாகர் பலி, போர்நேர்ந்தார் எனவும் வையைவடக்கு, நோய்நீங்கினான், எனவும் யானைக்கூடம், கடற்றிரை எனவும் ஊர்ப்புக்கான், ஊர்மனை எனவும், அலர்முல்லை, தாழ்குழல் எனவும் கோண்டுலாம், முந்நான்கு எனவும், தளிரடி, தளவநகை எனவும் பதினைந்து, தகரஞாழல் எனவும் வரும். இவை இரண்டு தொடர்ச்சிப் பொருள் மயங்கிய ஒரு தொடர்த்தொகைமொழி; இவை தெய்வத்தை வணங்கும் வணக்கம், தெய்வத்துக்கு வணக்கம்; தன்னைச் சேர்ந்தார், தன்பாற் சேர்ந்தார் எனவும் பொன்னாற்

பாட வேறுபாடு.:–

1.பொருளால்

செய்தகுடம், பொன்னினாயகுடம் ; திரையனாற் செய்யப் பட்டவூர், திரையனதூர் எனவும் நாகார்க்குப்பலி, நாகரதுபலி; போர்க்கு நேர்ந்தார், போரை நேர்ந்தார் எனவும். வையையின் வடக்கு, வையைக்கு வடக்கு; நோயினீங்கினான், நோயை நீங்கினான் எனவும்; யானையது கூடம், யானைக்குக் கூடம்; கடலிதுதிரை, கடலின்கட்டிரை எனவும் ஊரின்கட்புக்கான், ஊரைப்புக்கான்; ஊரிகண்மனை, ஊரினுடையமனை எனவும் வேற்றுமையுருபுகள் முறையே மயங்கினவாறு.

இனி அலர்ந்தமுல்லை, அலரையுடைய முல்லை; தாழ்ந்தகுழல், தாழ்ந்த குழலினை யுடையாளென வினையுருபு மயங்கியவாறு.

கோணாகிய துலாம், கோணையுடைய துலாம்; மூன்றாகிய நான்கு, மூன்றனாற் பெருக்கப்பட்ட நான்கு எனவும் தளிரன்ன அடி, தளிரை யொக்குமடி; தளவமன்னநகை,[1] தளவத்தை யொக்கு நகை எனவும் பத்துமைந்தும், பத்தின் மேலைந்து ; தகரமுஞாழலும், தகரமு ஞாழுலுமுடைய சாந்து எனவும்[2] வரும்.

நெறிசெய்தான், பொற்றொடி, கடிப்பகை, வரையிழிந்தான், சான்றோரிலக்கணம், ஊர்க்குளம் எனவும் ஒலிவளை, ஆனேறு, துடியிடை, ஏழேகால் எனவும் வரும் இவை மூன்றுதொடர்ச்சிப்பொருள் மயங்கிய ஒரு தொடர்த்தொகை மொழி; இவை நெறியைச்செய்தான், நெறியினாற்செய்தான், நெறியினிற்செய்தான், பொன்னா னாய தொடி, பொன்னினாய தொடி, பொன்னிற் செய்த தொடியையுடையாள்; கடிக்குப்பகை, கடியினதுபகை, கடியாகிய பகை; வரையினிழிந்தான், வரையை யிழிந்தான், வரைக்க ணிழிந்தான்; சான்றோரதிலக்கணம்;[3] சான்றோராற் செய்யப்பட்ட இலக்கணம், சான்றோர்க் கிலக்கணம், ஊரின்கட் குளம், ஊரினது குளம், ஊர்க்குக்குளம் [4]எனவும், ஒலிக்கும்வளை, ஒலியையுடையவளை, ஒலிக்கும் வளையையுடையாள்;[5] ஆனாகிய ஏறு, ஆனின்கணேறு, ஆனேறனையான்;[6] துடியன்ன இடை துடியையொக்குமிடை,

---

பாடவேறுபாடு:-

1. தளவை யெள்ளுநகை
2. அன்மொழித்தொகை வந்தவாறு, இரண்டு பொருண்மயக்கம் முற்றும்
3. சான்றோர் செய்த இலக்கணம்
4. எனவும் வேற்றுமைத்தொகை விரிந்தன.
5. எ– ம் வினைத்தொகை விரிந்தன.
6. எனவும் பண்புத்தொகைவிரிந்தன.

துடியன்ன இடையினையுடையாள்; [1] ஏழும்காலும், ஏழின்மேற் கால், ஏழேகால் நிலமானவூர் எனவும்[2] வரும்.

சொல்லிலக்கணம், பொன்மணி எனவரும் இவை நான்குதொடர்ச்சிப் பொருள்மயங்கின ஒரு தொடர்த்தொகை மொழி; இவை சொற்கிலக்கணம், சொல்லது இலக்கணம், சொல்லும் இலக்கணமும், சொல்லிலக்கணஞ் சொன்னநூல் எனவும் பொன்னானாயமணி, பொன்னினாயமணி, பொன்னின்கண்மணி, பொன்னுமணியும் எனவும்[3] வரும்.

கருப்புவேலி, இயலிசை எனவரும் இவை ஐந்துதொடர்ச்சிப் பொருண் மயங்கின ஒருதொடர்த் தொகைமொழி; இவை கரும்பாற்செய்தவேலி, கரும்புக்குவேல், கரும்பினிற் செய்தவேலி, கரும்பினதுவேலி, கரும்பின்கண்வேலி எனவும் இயலையுடையவிசை, [4]இயலினிசை, இயற்கணிசை, இயலாகியஇசை, இயலுமிசையும் எனவும் வரும்.[5]

நூலுரை, உரைவிரி எனும் இவை, ஆறு தொடர்ச்சிப்பொருள் மயங்கிய ஒருதொடர்த் தொகைமொழி. இவை நூலையொக்குமுரை, நூற்குரை, [6]நூலதுரை, நூற்கணுரை, நூலன்னஉரை, நூலுமுரையும் எனவும் உரையைவிரி, உரைக்குவிரி, உரையதுவிரி, உரைக்கண்விரி, உரைக்கும் விரி, உரைவிரியுடையது எனவும் வரும்.[7]

கருத்துப்பொருள், சொற்பொருள் என வரும் இவை ஏழு தொடர்ச்சிப் பொருள் மயங்கிய ஒருதொடர்த் தொகைமொழி; இவை கருத்தையுடைய பொருள், கருத்தினாலறியும்பொருள், கருத்திற்குப்பொருள், கருத்தினறியும் பொருள், கருத்தினது பொருள், கருத்தின்கட்பொருள், கருத்தும் பொருளும் எனவும், சொல்லான் அறியப்படும்பொருள், சொற்குப்பொருள், சொல்லின் அறியப்படும் பொருள், சொல்லதுபொருள், சொல்லின்கட்பொருள், சொல்லாகிய பொருள், சொல்லும்

பாட வேறுபாடு.:–

1.எனவும் உவமத்தொகை விரிந்தன

2.உம்மைத்தொகை விரிந்தன. மூன்று பொருண் முற்றும்

3.விரிந்துவரும். நான்குபொருண்முற்றும்

4.இயலுமிசை. இயலுவதைச் செய்யுமிசை

5.ஐந்துபொருண் முற்றும்

6.நூலினுரை

7.ஆறு பொருண்முற்றும்

பொருளும் எனவும் வரும். பிறவுமன்ன. "வாளைமீ னுள்ள றலைப்படல்" (திரி.8) என்பது இரண்டு தொடர்ச்சிப்பொருண் மயங்கிய பலதொடர்த் தொகைமொழி; இது வாளைமீனை உள்ளல் தலைப்படல், வாளைமீன் உள்ளலைத் தலைப்படலென வரும்.

"புலி கொல்யானை" என்பது மூன்று தொடர்ச்சிப்பொருள் மயங்கிய பலதொடர்த்தொகைமொழி; இது புலியைக் கொன்ற யானை, புலியாற் கொல்லப்பட்ட யானை, புலயினிற் கொல்லப்பட்ட யானை என வரும்.

"குரங்கெறிவிளங்காய்" (தொல். பாயிரம், மேற்) என்பது நான்கு தொடர்ச்சிப் பொருள்மயங்கிய பலதொடர்த் தொகைமொழி; இது குரங்கை யெறிந்த விளங்காய், குரங்கால் எறியப்பட்ட விளங்காய், குரங்கிற்கு [15]எறிந்த விளங்காய், குரங்கினெறியப்பட்ட விளங்கா யெனவரும். இவ்வாறு பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

## சங்கர நமச்சிவாயர்

எ-னின், தொகைநிலைத் தொடர்சொற்கள் உருபு தொக்கு நின்றமையின் சில பொருளான் மயங்குமாறு உணர்-ற்று.

இ-ள்.:- வேற்றுமையுருபு முதலிய உருபுகள் தொக்கு நின்றவழிப் பொருள்களான் மயங்கும் இயல்பினவாகிய தொடர்ச் சொற்கள் இரண்டு முதல் ஏழீறாகிய பொருள்களான் மயங்கும் என்று சொல்லுவர் புலவர், எ-று.

'தொக்குழி' எனவே தொகாவிடத்து மயங்கா என்பதூஉம், 'மயங்குவன மயங்கும்' எனவே மயங்கும் இயல்பில்லன மயங்கா என்பதூஉம், பொருள் எனப் பொதுப்படக் கூறினமையின் தொகைநிலைப் பொருளானும் தொகாநிலைப் பொருளானும் தொகைநிலைத்தொடர்சொல் மயங்கும் என்பதூஉம் பெற்றாம்.

வ-று.:-

தெய்வ வணக்கம், தாழ்குழல் என்பன தெய்வத்தை வணங்கும் வணக்கம், தெய்வத்துக்கு வணக்கம், தாழ்ந்த குழல், தாழ்ந்த குழலினை உடையாள் என இருபொருளான் மயங்கிய ஒரு தொடர்த்தொகைச்சொல்.

தற்சேர்ந்தார், கடிப்பகை என்பன, தன்னைச் சேர்ந்தார், தன்னொடு சேர்ந்தார், தன்கண் சேர்ந்தார், கடிக்குப் பகை,

---

பாடவேறுபாடு.:-

1. எறியப்பட்ட விளங்காய்.

கடியினது பகை, கடியாகிய பகை என மூன்று பொருளான் மயங்கிய ஒரு தொடர்த் தொகைச்சொல்.

**சொல்லிலக்கணம்** என்பது, சொல்லினது இலக்கணம், சொற்கு இலக்கணம், சொல்லின்கண் இலக்கணம், சொல்லிலக்கணம் சொன்ன நூல் என நான்கு பொருளான் மயங்கிய ஒரு தொடர்த் தொகைச்சொல்.

**பொன்மணி** என்பது, பொன்னினாகிய மணி, பொன்னாகிய மணி, பொன்னின்கண் மணி, பொன்னொடு சேர்ந்தமணி, பொன்னும் மணியும் என ஐந்து பொருளான் மயங்கிய ஒரு தொடர்த்தொகைச்சொல்.

**மரவேலி** என்பது, மரத்தைக்காக்கும் வேலி, மரத்துக்கு வேலி, மரத்தினது வேலி, மரத்தின் புறத்துவேலி, மரத்தானாகியவேலி, மரமாகியவேலி என ஆறு பொருளான் மயங்கிய ஒரு தொடர்த்தொகைச்சொல்.

**சொற்பொருள்** என்பது, சொல்லான் அறியப்படும்பொருள், சொல்லினது பொருள், சொற்குப் பொருள், சொல்லின்கண் பொருள், சொல்லும் பொருளும், சொல்லாகிய பொருள், சொல்லானது பொருள் என ஏழுபொருளான் மயங்கிய ஒரு தொடர்த் தொகைச்சொல். சொல்லானது பொருள் என்றது, தொகை நிலைப் பொருளாகிய எழுவாய். சொல்லான் அறியப்படும் பொருள், சொல்லின் அறியப்படும் பொருள் என மூன்றாவதானோடு ஐந்தாவதும் விரிப்பாரும் உளர். அவை இரண்டற்கும் ஏதுப்பொருள் ஒன்றேயாதலின், அது வேற்றுப்பொருளான் மயங்கியது அன்று என்க.

**"வாளைமீன் உள்ளல் தலைப்படல்"**

என்பது, வாளைமீனை உள்ளல் தலைப்படல், வாளைமீன் உள்ளலைத் தலைப்படல் என இரண்டாவதும் எழுவாயுமாகிய இரு பொருளான் மயங்கிய பலதொடர்த்தொகைச்சொல்.

புலிகொல் யானை, குரங்கெறி விளங்காய் என்பன புலியைக் கொன்ற யானை, புலியானது கொன்ற யானை, புலியால் கொல்லப்பட்ட யானை, குரங்கை எறிந்த விளங்காய், குரங்கானது எறிந்த விளங்காய், குரங்கால் எறியப்பட்ட விளங்காய் என இரண்டாவதும் எழுவாயும் மூன்றாவதும் ஆகிய மூன்று பொருளான் மயங்கிய பலதொடர்த் தொகைச்சொல். பிறவும் அன்ன.

இவ்வாறு செம்பொருள் கொள்ளாது வலிந்து பொருள் கொள்ளப் புகின் ஏழெல்லை என்னும் வரையறையின் நில்லாது பலவாமாதலின் அது தொன்னெறியன்று என்பார் 'என்ப' என்றார்.

இனி, அலர் முல்லை என்னும் வினைத்தொகை முதலியன மயங்காதனவாம். அலரையுடைய முல்லை என மயங்குமாலோ எனின்:– அலர் என்பது வினைத்தொகைக்கண் வினையாயும் வேற்றுமைத் தொகைக்கண் பெயராயும் சொல் வேறுபட்டமையின் அது பொருளான் மயங்கியது அன்று என்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், தொகைநிலைத் தொடர்மொழிப் பொருள் மயங்குமாறு கூறுகின்றது.

இ–ள்.: தொக்குழி – சொற்கள் தொகைநிலையாகத் தொக்கு நின்றவிடத்து, மயங்குந – அவற்றுள் மயங்கும் இயல்பினையுடைய சொற்கள், இரண்டு முதலேழ் எல்லைப் பொருளின் – இரண்டு தொடர்ச்சிப் பொருள் முதலாக ஏழு தொடர்ச்சிப் பொருள் ஈறாக, மயங்கு மென்ப – மயங்குமென்று சொல்லுவர் புலவர், எ–று.

உ–ம்.:–

இரண்டு தொடர்ச்சிப் பொருள் மயங்கிய ஒரு தொடர்த் தொகைமொழி வருமாறு. 'தெய்வவணக்கம்' தெய்வத்தை வணக்கம், தெய்வத்துக்கு வணக்கம்; 'தற்சேர்ந்தார்'; தன்னைச் சேர்ந்தார், தன்கட் சேர்ந்தார்; 'பொற்குடம்'. பொன்னாலாய குடம்; பொன்னினாய குடம். 'திரையனூர்'. திரையனால் இயற்றப்பட்ட ஊர், திரையனது ஊர்; தேவர் பலி தேவர்க்குப் பலி, தேவரது பலி; 'போர் நேர்ந்தான்' போருக்கு நேர்ந்தான், போர்க்கண் நேர்ந்தான்; 'வையை வடக்கு' வையையின் வடக்கு, வையைக்கு வடக்கு; 'நோய்நீங்கினார்', நோயின் நீங்கினார் நோயை நீங்கினார்; 'யானைக்கூடம்' யானையது கூடம்; யானைக்குக் கூடம்; 'கடற்றிரை' கடலது திரை, கடலின்கண் திரை; 'ஊர்ப்புக்கான்' ஊரின் புக்கான், ஊரைப்புக்கான்; 'ஊர்மனை' ஊரது மனை, ஊரின்கண் மனை; 'அலர்முல்லை' அலர்ந்த முல்லை, அலரையுடைய முல்லை; 'தாழ்குழல்' தாழ்ந்த குழல், தாழ்ந்த குழலினையுடையாள்; 'கோண்டுலாம்' கோணாகியதுலாம், கோணலையுடைய துலாம்; 'முந்நான்கு' மூன்றாகிய நான்கு, மூன்றாற் பெருக்கப்பட்ட நான்கு; 'தளிரடி' தளிரன்ன அடி, தளிரையொத்த அடி; 'பதினைந்து' பத்தும் ஐந்தும், பத்தின் மேல் ஐந்து; 'தகரஞாழல்' தகரமும் ஞாழலும், தகரமும் ஞாழலுமுடைய சாந்து என வரும்.

மூன்று தொடர்ச்சிப் பொருள் மயங்கிய ஒரு தொகைநிலைத் தொடர்மொழி வருமாறு:– 'முறை செய்தான்' முறையைச்

செய்தான், முறையினாற் செய்தான், முறையிற் செய்தான்; 'பொற்றொடி' பொன்னாலாய தொடி, பொன்னினாய தொடி, பொன்னினாய தொடியினையுடையாள்; 'கடிப்பகை' கடிக்குப் பகை, கடியினது பகை, கடியாகிய பகை; 'வரையிழிந்தான்' வரையின் இழிந்தான், வரையை இழிந்தான், வரையின்கண் இழிந்தான்; 'சான்றோரிலக்கணம்' சான்றோரது இலக்கணம், சான்றோர்க்கு இலக்கணம், சான்றோராற் செய்த இலக்கணம்; 'ஊர்க்குளம்' ஊரின்கண் குளம், ஊர்க்குக் குளம், ஊரினது குளம்; 'ஒலி வளை' ஒலிக்கும் வளை, ஒலியையுடைய வளை, ஒலிக்கும் வளையையுடையாள்; 'ஆனேறு' ஆனாகிய ஏறு, ஆனின்கண் ஏறு, ஆனேறு அனையான்; 'துடியிடை' துடியன்ன இடை, துடியை ஒக்கும் இடை, துடியன்ன இடையையுடையாள்; 'ஏழேகால்' ஏழும் காலும், ஏழின்மேற் கால், ஏழேகால் நிலமான ஊர் என வரும்.

நாலு தொடர்ச்சிப் பொருண்மையாகிய ஒரு தொகை நிலைத் தொடர்மொழி வருமாறு:– 'சொல்லிலக்கணம்' சொல்லது இலக்கணம் சொற்கண் இலக்கணம், சொற்கு இலக்கணம், சொல்லிலக்கணம் சொன்ன நூல்; 'பொன்மணி' பொன்னாலாய மணி, பொன்னினாய மணி, பொன்னின்கண் மணி, பொன்னும் மணியும் என வரும்.

ஐந்து தொடர்ச்சிப் பொருள் மயங்கிய ஒரு தொகை நிலைத் தொடர்மொழி வருமாறு:– 'கருப்பு வேலி' கரும்புக்கு வேலி, கரும்பினது வேலி, கரும்பின் ...வேலி கரும்பாற் செய்த வேலி,....; 'இயலிசை' இயலையுடைய இசை, இயற்கண் இசை, இயலும் இசையும், இயலும் இசை, இயலாகிய இசை என வரும்.

ஆறு தொடர்ச்சிப் பொருள் மயங்கிய ஒரு தொகை நிலைத் தொடர்மொழி வருமாறு:– 'நூலுரை' நூலினது உரை; நூற்கண் உரை, நூலையொக்கும் உரை, நூலன்ன உரை, நூலும் உரையும் ...; 'உரைவிதி' உரையது விதி, உரைக்கு விதி, உரைக்கண் விதி, உரையை விதி, உரைவிதியுடைய நூல்,.... என வரும்.

ஏழு தொடர்ச்சிப் பொருள் மயங்கிய ஒரு தொகைத் தொடர் மொழி வருமாறு: 'கருத்துப்பொருள்' கருத்தையுடைய பொருள், கருத்தினாலறியும் பொருள், கருத்தினறியும் பொருள், கருத்திற்குப் பொருள், கருத்தினது பொருள், கருத்தின்கண் பொருள், கருத்தும் பொருளும்; 'சொற்பொருள்' சொல்லாலறியப்படும் பொருள், சொல்லானறியப்படும் பொருள், சொற்குப் பொருள், சொல்லது பொருள், சொல்லின்கண் பொருள், சொல்லும் பொருளும், சொல்லாகிய பொருள் என வரும்.

இரண்டு தொடர்ச்சிப் பொருள் மயங்கிப் பல தொகைநிலைத் தொடர்மொழி வருமாறு:- 'வாளை மீன் கெண்டைத் தலைப்படல்' வாளை மீனைக் கெண்டை தலைப்படல், வாளை மீன் கெண்டையைத் தலைப்படல் என வரும்.

மூன்று தொடர்ச்சிப் பொருள் மயங்கிய பல தொகைநிலைத் தொடர்மொழி வருமாறு:- 'புலிகொல் யானை' புலியைக் கொன்ற யானை, புலியாற் கொல்லப்பட்ட யானை, புலியினிற் கொல்லப்பட்ட யானை என வரும்.

நான்கு தொடர்ச்சிப் பொருள் மயங்கிய பல தொகை நிலைத் தொடர்மொழி வருமாறு:- 'குரங்கெறிவிளங்காய்' குரங்கால் எறியப்பட்ட விளங்காய், குரங்கின் எறியப்பட்ட விளங்காய், குரங்கிற்கு எறிந்த விளங்காய், குரங்கை எறிந்த விளங்காய் என வரும். இவ்வாறு பிறவும் வந்தவழிக் கண்டு கொள்க.

## விசாகப் பெருமாளையர்

இது, தொகைநிலைத் தொடர்மொழிகள் உருபு தொக்கு நிற்கையாற் சில பொருள்களாலே மயங்குமாறு உணர்த்துகின்றது.

இ-ள்.:- தொக்குழி - வேற்றுமையுருபு முதலாகிய வுருபுகள் தொக்குநின்றவழி, மயங்குந - பொருள்களினாலே மயங்குந் தன்மையனவாகிய தொடர்மொழிகள், இரண்டு முதல் - இரண்டு முதலும், ஏழெல்லை - ஏழீறுமாகிய, பொருளின் - பொருள்களால், மயங்கும் - மயங்கும், என்ப - என்று சொல்லுவர் புலவர், எ-று.

வ-று.:-

'தெய்வவணக்கம்' என்பது, தெய்வத்தை வணங்குகிற வணக்கம், தெய்வத்துக்கு வணக்கம், என விருபொருள் களினாலே மயங்கியது.

'தற்சேர்ந்தார்' என்பது, தன்னைச் சேர்ந்தார், தன்னொடு சேர்ந்தார், தன்கட் சேர்ந்தார் என மூன்று பொருள்களினாலே மயங்கியது.

'சொல்லிலக்கணம்' என்பது, சொல்லினதிலக்கணம், சொற்கிலக்கணம், சொல்லின்கணிலக்கணம், சொல்லின திலக்கணம் சொன்ன நூல் என நான்கு பொருள்களினாலே மயங்கியது.

'பொன்மணி' என்பது, பொன்னாலாகிய மணி, பொன்னாகிய மணி, பொன்னின்கண் மணி, பொன்னொடு சேர்ந்தமணி, பொன்னுமணியும், எனவைந்து பொருள்களினாலே மயங்கியது.

'மரவேலி' என்பது, மரத்தைக் காக்கிற வேலி, மரத்துக்கு வேலி, மரத்தினது வேலி, மரத்தின் புறத்து வேலி, மரத்தாலாகிய வேலி, மரமாகிய வேலி எனவாறு பொருள்களினாலே மயங்கியது.

'சொற்பொருள்' என்பது, சொல்லாலறியப்படுகிற பொருள் சொல்லினதுபொருள், சொல்லுக்குப்பொருள், சொல்லின்கட் பொருள், சொல்லும்பொருளும், சொல்லாகிய பொருள், சொல்லானதுபொருள், எனவேழு பொருள்களினாலே மயங்கியது.

'புலிகொல்யானை' என்பது, பன்மொழித்தொடர் இது. புலியைக்கொன்ற யானை, புலியானது கொன்ற யானை, புலியினாலே கொல்லப்பட்ட யானை, என மூன்று பொருள்களினாலே மயங்கியது.

மற்றவையு மிப்படியே, இனி வலிந்துபொருள் கொள்ளின் ஏழெல்லை கடந்தும் வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

மேற்கூறிய தொடர்மொழிகள் ஒருபொருளவாய் நிற்றலேயன் றிப் பலபொருளவாயும் நிற்குமெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

தொக்குழி மயங்குந விரண்டு முதலேழ்

எல்லைப் பொருளின் மயங்கு மென்ப.

(தொக்குழி மயங்குந இரண்டு முதல் ஏழ் எல்லைப் பொருளின் மயங்கும் என்ப.)

இ–ள்.: வேற்றுமையுருபு முதலாகிய உருபுகள் தொக்குநின்றவழிப் பொருள்களினாலே மயங்குந் தன்மையனவாகிய தொடர்மொழிகள் இரண்டுமுதல் ஏழீறாகிய பொருள்களால் மயங்கும் என்று சொல்லுவர் புலவர், எ–று.

(வரலாறு)

(1) தெய்வவணக்கம் என்பது, தெய்வத்தை வணங்கும் வணக்கம், தெய்வத்துக்கு வணக்கம் என இருபொருள்களி னாலே மயங்கியது.

(2) தற்சேர்ந்தார் என்பது, தன்னைச்சேர்ந்தார், தன்னொடு சேர்ந்தார், தன்கட்சேர்ந்தார் என மூன்று பொருள்களினாலே மயங்கியது.

(3) சொல்லிலக்கணம் என்பது, சொல்லின திலக்கணம், சொற்கிலக்கணம், சொல்லின்கணிலக்கணம், சொல்லின

திலக்கணஞ் சொன்னநூல் என நான்கு பொருள்களினாலே மயங்கியது.

(4) பொன்மணி என்பது, பொன்னாலாகிய மணி, பொன்னாகிய மணி, பொன்னின்கண் மணி, பொன்னொடு சேர்ந்த மணி. பொன்னுமணியும் என ஐந்துபொருள்களி னாலே மயங்கியது.

(5) மரவேலி என்பது, மரத்தைக்காக்கும் வேலி, மரத்திற்கு வேலி, மரத்தினது வேலி, மரத்தின் புறத்து வேலி. மரத்தாலாகிய வேலி, மரமாகிய வேலி என ஆறுபொருள்களி னாலே மயங்கியது.

(6) சொற்பொருள் என்பது, சொல்லாலறியப்படும் பொருள், சொல்லினது பொருள், சொற்குப்பொருள், சொல்லின்கட் பொருள், சொல்லும் பொருளும், சொல்லாகிய பொருள், சொல்லானது பொருள் என ஏழு பொருள்களினாலே மயங்கியது. சொல்லானது பொருளென்றது தொகாநிலைப் பொருளாகிய எழுவாய்த் தொடர்.

(7) புலி கொல் யானை என்னும் பன்மொழித்தொடர், புலியைக் கொன்ற யானை, புலியானது கொன்ற யானை, புலியினாலே கொல்லப்பட்ட யானை என மூன்று பொருள்களினாலே மயங்கியது.

இவ்வாறு செம்பொருள்கொள்ளாது வலிந்து பொருள் கொள்ளப்புகின், ஏழெல்லையென்னும் வரையறையினில்லாது பலவாமாதலின், அது தொன்னெறியன் றென்பது விளங்குதற்கு 'என்ப' என்றார்.

## முகவை இராமானுச கவிராயர்

இது, தொகைநிலைத் தொடர்ச்சொற்கள் இரண்டு முதலிய பொருள்களில் மயங்கி வருமென்கின்றது.

இ-ள்.:- தொக்குழி- வேற்றுமையுருபு முதலியன தொக்கு நின்றவிடத்து, மயங்குந - பொருள்களால் மயங்குதற்கு உரியனவாகிய தொடர்ச்சொற்கள், இரண்டு முதலே ழெல்லைப் பொருளில் - இரண்டு முதல் ஏழீறாகிய வரையறையுடைய பொருள்களாலே, மயங்குமென்ப - மயங்குமென்று சொல்லுவர் புலவர், எ-று.

(மயங்குதல் - இணங்குதல்,) 'பொருளெனப்' பொதுப்படச் சொன்னதினாலே, தொகைநிலைப் பொருளாலுந் தொகாநிலைப் பொருளாலு மயங்குமெனக் கொள்க.

வ-று.:-

'தெய்வவணக்கம்' என்பது, தெய்வத்தை வணங்கும் வணக்கம், தெய்வத்துக்கு வணக்கம் எனவும் 'தாழ்குழல்' என்பது தாழ்ந்தகுழல், தாழ்ந்த குழலினையுடையாள் எனவும் வரும். இவை யிருபொருளால் மயங்கின. 'தற்சேர்ந்தார்' என்பது, தன்னைச் சேர்ந்தார், தன்னொடுசேர்ந்தார், தன்கட்சேர்ந்தார் எனவும் 'கடிப்பகை' என்பது கடிக்குப்பகை, கடியினதுபகை, கடியாகியபகை எனவும் வரும். இவை மூன்று பொருளாய் மயங்கின. 'சொல்லிலக்கணம்' என்பது சொல்லினதிலக்கணம், சொற்கிலக்கணம், சொல்லின் கண்ணிலக்கணம், சொல்லிலக்கணஞ் சொன்னநூல் என இது நான்குபொருளால் மயங்கிற்று. 'பொன்மணி' என்பது பொன்னாலாகியமணி, பொன்னாகியமணி, பொன்னின்கண் மணி, பொன்னொடுசேர்ந்தமணி, பொன்னுமணியும் என ஐந்து பொருள்களினாலே மயங்கியது.

(5) 'மரவேலி' என்பது, மரத்தைக் காக்கும் வேலி, மரத்திற்கு வேலி, மரத்தினது வேலி, மரத்தின் புறத்துவேலி, மரத்தாலாகிய வேலி, மரமாகிய வேலி என ஆறுபொருள்களினாலே மயங்கியது.

(6) 'சொற்பொருள்' என்பது, சொல்லாலறியப்படும் பொருள், சொல்லினது பொருள், சொற்குப் பொருள், சொல்லின்கட் பொருள், சொல்லும் பொருளும், சொல்லாகிய பொருள், சொல்லானது பொருள் என ஏழுபொருள்களினாலே மயங்கியது. சொல்லானது பொருளென்றது தொகாநிலைப் பொருளாகிய எழுவாய்த்தொடர்.

(7) 'புலி கொல் யானை' யென்னும் பன்மொழித்தொடர், புலியைக் கொன்ற யானை, புலியானது கொன்றயானை, புலியினாலே கொல்லப்பட்ட யானை என மூன்று பொருள்களினாலே மயங்கியது.

இவ்வாறு செம்பொருள் கொள்ளாது வலிந்து பொருள் கொள்ளப்புகின் ஏழெல்லையென்னும் வரையறையினில்லாது பலவா மாதலின், அது தொன்னெறியன்றென்பது விளக்குதற்கு, 'என்ப' என்றார்.

## கா. கோபாலாசாரியர்

## தி.கோ. ரங்காசாரியர்

**உரை :–** **தொக்குழி** – (வேற்றுமை யுருபு முதலியன) தொக்குநின்ற விடத்து, **மயங்குந** – (பொருள்களால்) மயங்குதற்கு உரிய தொடர்மொழிகள், **இரண்டு முதல் ஏழ்எல்லை பொருளின்** – இரண்டு முதல் ஏழுவரையில் உள்ள பொருள்களால், **மயங்கும்** –, **என்ப** – என்று சொல்லுவர் (புலவர்).

குறிப்பு :- தொகைநிலைத் தொடர்மொழிகளை விரித்துப் பொருள் கொள்ளுங்கால் ஒரு பொருளேயன்றி இரண்டு முதல் ஏழளவான பொருள் கொள்ளக் கிடக்கும் என்றபடி. (மயங்குதல் - கலத்தல்). தொக்குழி - 'தொக்க உழி' என்பதன் விகாரம். 'பொருள்' எனப் பொதுப்படச் சொன்னதனால் - பெரும்பாலும் தொகைநிலைப் பொருளாலும், சிறுபான்மை தொகாநிலைப் பொருளாலும் மயங்கும்.

உதாரணம் :

| | | |
|---|---|---|
| இரண்டு பொருள் | : | தெய்வ வணக்கம் - தெய்வத்தை வணங்கும் வணக்கம், தெய்வத்துக்கு வணக்கம். |
| மூன்று பொருள் | : | தற்சேர்ந்தான் - தன்னைச் சேர்ந்தான், தன்னோடு சேர்ந்தான், தன்கட் சேர்ந்தான். |
| நான்கு பொருள் | : | சொல்லிணக்கம் - சொல்லுக் கிலக்கணம், சொல்லின திலக்கணம், சொல்லின்கண் இலக்கணம், சொல்லிலக்கணஞ் சொல்லுநூல். |
| ஐந்து பொருள் | : | பொன்மணி - பொன்னாலாகியமணி, பொன் னோடு சேர்ந்த மணி, பொன்னின்கணுள்ள மணி, பொன்னாகிய மணி, பொன்னும் மணியும். |
| ஆறு பொருள் | : | மரவேலி - மரத்தைக் காக்கும் வேலி, மரத்தாலாகிய வேலி, மரத்திற்கு வேலி, மரத்தினது வேலி, மரத்தின் புறத்து வேலி, மரமாகிய வேலி. |
| ஏழு பொருள் | : | சொற்பொருள் - சொல்லாலறியப்படும் பொருள், சொற்குப் பொருள், சொல்லினது பொருள், சொல்லின்கண் பொருள், சொல்லாகிய பொருள், சொல்லும் பொருளும், சொல்லானது பொருள். |
| பன்மொழித் தொடர் | : | குரங்கெறி விளங்காய் - குரங்கால் எறியப்பட்ட விளங்காய், குரங்கின் எறியப்பட்ட விளங்காய், குரங்கிற்கு எறிந்த விளங்காய், குரங்கை எறிந்த விளங்காய். |

'என்ப' எனப் புலவர் மேலேற்றிக் கூறியதால் தொகைநிலைத் தொடர்கள் ஏழின் மிக்க பொருள்பட வரினும் அவ்வாறே கொள்ளுதல் மரபன்றென்க. இப்பொருண் மயக்கத்திற்கும் கீழ்ப்பெயரியலில் "யாதனுருபில்" என்னுஞ் சூத்திரக்குறிப்பிற் கூறிய பொருண் மயக்கத்திற்கும் வேறுபாடு என்னையெனின், அது வாக்கியங்களில் தனிமொழியிடத்து உருபு விரிந்து நின்றவழி அதனோடு வேறோருருபு தன் பொருளைவிடாமல் மயங்குவது என்பதும், இது, உருபு

மறைந்து நிற்கும் வேற்றுமைத் தொகைகள் பல வேற்றுமைத் தொகையாகக் கொள்ளக்கிடக்கு மென்பதுமாம்.

## ஆறுமுக நாவலர்

இ–ள்.: **தொக்க உழி** – (வேற்றுமையுருபு முதலியன) தொக்குநின்ற இடத்து, **மயங்குந** – (பொருள்களால்) மயங்குதற்கு உரிய தொடர்மொழிகள், **இரண்டுமுதல் ஏழ் எல்லை பொருளின்** – இரண்டு முதல் ஏழு வரையில் உள்ள பொருள்களால், **மயங்கும்**–, **என்ப** – என்று சொல்வர் புலவர்; எ–று.

இது, பொருள்மயக்க மெனப்படும்.

தொகைநிலைத் தொடர்மொழிகள் விரித்துப் பொருள் கொள்ளப்படுமிடத்து ஒருபொருள் கொள்ளப்படுவதுமன்றி இரண்டுபொருள் முதல் ஏழு பொருள் வரையில் பலபொருள்களும் கொள்ளப்படு மென்றபடி (மயங்குதல்– இணங்குதல்.) தொக்குழி – 'தொக்க உழி' என்பதன் விகாரம்.

'பொருள்' எனப் பொதுபடச் சொன்னதனால், பெரும்பாலும் தொகை நிலைப்பொருளாலும், சிறுபான்மை தொகாநிலைப் பொருளாலும் மயங்கும்.

உ–ம்.: **தெய்வவணக்கம்** – தெய்வத்தை வணங்கும் வணக்கம், தெய்வத்துக்கு வணக்கம் என இரண்டு பொருள்களால் மயங்கியது.

**தற்சேர்ந்தார்** – தன்னைச் சேர்ந்தார், தன்னொடு சேர்ந்தார், தன்கண் சேர்ந்தார் என மூன்று பொருள்களால் மயங்கியது.

**சொல்லிலக்கணம்** – சொல்லுக்கு இலக்கணம், சொல்லினது இலக்கணம், சொல்லின்கண் உள்ள இலக்கணம், சொல்லிலக்கணம் சொன்ன நூல் என நான்கு பொருள்களால் மயங்கியது.

**பொன்மணி** – பொன்னையுடைய மணி, பொன்னாலாகிய மணி, பொன்னோடு சேர்ந்த மணி, பொன்னின்கண் உள்ள மணி, பொன்னும் மணியும் என ஐந்து பொருள்களால் மயங்கியது.

**மரவேலி** – மரத்தைக்காக்கும் வேலி, மரத்தாலாகிய வேலி, மரத்திற்கு வேலி, மரத்தினது வேலி, மரத்தின் புறத்து வேலி, மரமாகிய வேலி என ஆறுபொருள்களால் மயங்கியது.

**சொற்பொருள்** – சொல்லாலறியப்படும் பொருள், சொற்குப் பொருள், சொல்லினது பொருள், சொல்லின்கண் பொருள், சொல்லாகிய பொருள், சொல்லும் பொருளும், சொல்லானது பொருள் என ஏழுபொருள்களால் மயங்கியது. ( சொல்லானது

பொருளென்றது, தொகாநிலைப் பொருளான ஏழுவாய்த்தொடர்).

புலி கொல் யானை என்னும் பன்மொழித்தொடர் புலியைக் கொன்றயானை, புலியானது கொன்ற யானை, புலியினாற் கொல்லப்பட்ட யானை என மூன்று பொருள்களால் மயங்கியது.

இவ்வாறு எளிதிற் பொருள்கொள்ளாமல், வலிதிற் பொருள்கொள்ளப் புகுந்தால் ஏழெல்லையென்னும் வரம்பில் நில்லாமல் பலவாமாதலின்; அது மரபன்று என்பார், 'என்ப' எனப் புலவர்மேல் ஏற்றிக் கூறினார்.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.: தொக்குழி – (வேற்றுமை யுருபுமுதலாகிய உருபுகள்) தொக்கு நின்றவழி, மயங்குந – (பொருள்களினாலே) மயங்குந்தன்மையனவாகிய தொடர்மொழிகள், இரண்டு முதல் ஏழ் எல்லைப்பொருளின் இரண்டு முதல் ஏழிறாகிய பொருள்களால், மயங்கும் என்ப – மயங்கும் என்று சொல்லுவர் புலவர். எ–று.

தொகைநிலைத் தொடர்மொழிகள் விரித்துப் பொருள் கொள்ளப்படுமிடத்து ஒரு பொருளேயன்றி, இரண்டு முதல் ஏழிறாகப் பல பொருளும் கொள்ளப்படும் என்பது கருத்து.

மயங்குதல் – இணங்குதல்.

உ–ம். (1) தெய்வவணக்கம் – என்பது தெய்வத்தை வணங்கும் வணக்கம் தெய்வத்துக்கு வணக்கம் என இரண்டு பொருள்களினாலே மயங்கியது.

(2) தற்சேர்ந்தார் – என்பது, தன்னைச் சேர்ந்தார், தன்னொடு சேர்ந்தார், தன்கட் சேர்ந்தார் என மூன்று பொருள்களினாலே மயங்கியது.

(3) சொல்லிலக்கணம் – என்பது, சொல்லின திலக்கணம், சொற்கிலக்கணம், சொல்லின்கணிலக்கணம், சொல்லினதிலக்கணஞ் சொன்ன நூல் என நான்கு பொருள்களினாலே மயங்கியது.

(4) பொன்மணி – என்பது 1பொன்னலாகிய மணி, 2பொன்னாகிய மணி, பொன்னின்கண் மணி, பொன்னொடு சேர்ந்த மணி, பொன்னுமணியும் என ஐந்துபொருள்களினாலே மயங்கியது.

(5) மரவேலி – என்பது மரத்தைக் காக்கும் வேலி, 2மரத்திற்கு வேலி, 3மரத்தினது வேலி, மரத்தின் புறத்து வேலி, 5மரத்தாலாகிய வேலி, மரமாகிய வேலி என ஆறுபொருள்களினாலே மயங்கியது.

(6) சொற்பொருள் – என்பது, சொல்லாறியப்படும் பொருள், சொல்லினது பொருள், சொற்குப் பொருள், 4சொல்லின்கட் பொருள், சொல்லும் பொருளும், 6சொல்லாகிய பொருள், சொல்லானது பொருள் என ஏழு பொருள்களினாலே மயங்கியது. (சொல்லானது பொருளென்றது தொகாநிலைப் பொருளாகிய எழுவாய்த்தொடர்.)

(7) புலி கொல் யாவன – என்னும் பன்மொழித்தொடர், புலியைக் கொன்ற புலியானது கொன்ற யானை, புலியினாலே கொல்லப்பட்ட யானை என மூன்று பொருள்களினாலே மயங்கியது.

இவ்வாறு செம்பொருள் கொள்ளாது வலிந்து பொருள்கொள்ளப்புகின் ஏழெல்லையென்னும் வரையறை யினில்லாது பலவாமாதலின், அது மரபன்றென்பது விளக்குதற்கு, 'என்ப' எனப் புலவர்மேல் ஏற்றிக் கூறினார்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். தொக்குழி மயங்குந – வேற்றுமையுருபு முதலாகிய உருபுகள் தொக்குநின்றவழிப் பொருள்களினாலே மயங்குந் தன்மையனவாகிய தொடர்மொழிகள், – இரண்டு முதல் ஏழு எல்லைப்பொருளின் மயங்கும் என்ப – இரண்டு முதல் ஏழீறாகிய பொருள்களால் மயங்கும் என்று சொல்லுவர்புலவர். எ–று.

(வரலாறு)

(1) தெய்வவணக்கம் என்பது, தெய்வத்தை வணங்கும் வணக்கம், தெய்வத்துக்கு வணக்கம் என இருபொருள்களினாலே மயங்கியது.

(2) தற்சேர்ந்தார் என்பது, தன்னைச் சேர்ந்தார், தன்னொடு சேர்ந்தார், தன்கட் சேர்ந்தார் என மூன்று பொருள்களினாலே மயங்கியது.

(3) சொல்லிலக்கணம் என்பது சொல்லினதிலக்கணம், சொற்கிலக்கணம், சொல்லின்கணிலக்கணம், சொல்லின திலக்கணஞ் சொன்ன நூல் என நான்கு பொருள்களினாலே மயங்கியது.

(4) பொன்மணி என்பது, பொன்னாலாகியமணி, பொன்னாகிய மணி, பொன்னின் கண்மணி, பொன்னொடு சேர்ந்தமணி, பொன்னுமணியும் என ஐந்து பொருள்களினாலே மயங்கியது.

(5) மரவேலி என்பது, மரத்தைக் காக்கும் வேலி, மரத்திற்கு வேலி, மரத்தினது வேலி, மரத்தின் புறத்துவேலி, மரத்தாலாகிய வேலி, மரமாகிய வேலி என ஆறுபொருள்களினாலே மயங்கியது.

(6) சொற்பொருள் என்பது, சொல்லாலறியப்படும் பொருள், சொல்லினதுபொருள், சொற்குப்பொருள், சொல்லின்கட் பொருள், சொல்லும்பொருள், சொல்லாகியபொருள், சொல்லானது பொருள் என ஏழு பொருள்களினாலே மயங்கியது. சொல்லானது பொருளென்றது தொகாநிலைப் பொருளாகிய எழுவாய்த் தொடர்.

(7) புலி கொல் யானை என்னும் பன்மொழித் தொடர், புலியைக் கொன்ற யானை, புலியானது கொன்ற யானை, புலியினாலே கொல்லப்பட்ட யானை என மூன்று பொருள்களினாலே மயங்கியது.இவ்வாறு செம்பொருள் கொள்ளாது வலிந்து பொருள் கொள்ளப்புகின், ஏழைல்லையென்னும் வரையறையினில்லாது பலவாமாதலின், அது தொன்னெறியன்றென்பது விளக்குதற்கு, என்ப என்றார்.

## வை. மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: தொக்க உழி – (வேற்றுமையுருபு முதலியன) தொக்குநின்ற இடத்து, மயங்குந – (பொருள்களால்) மயங்குதற்கு உரிய தொடர்மொழிகள், இரண்டுமுதல் ஏழ் எல்லை பொருளின் – இரண்டு முதல் ஏழு வரையில் உள்ள பொருள்களால், மயங்கும்–, என்ப – என்று சொல்வர் புலவர்; எ–று.

இது, பொருள்மயக்க மெனப்படும்.

தொகைநிலைத் தொடர்மொழிகள் விரித்துப் பொருள் கொள்ளப்படுமிடத்து ஒருபொருள் கொள்ளப்படுவதுமன்றி இரண்டுபொருள் முதல் ஏழு பொருள் வரையில் பலபொருள்களும் கொள்ளப்படு மென்றபடி (மயங்குதல்– இணங்குதல்.) தொக்குழி – 'தொக்க உழி' என்பதன் விகாரம்.

'பொருள்' எனப் பொதுபடச் சொன்னதனால், பெரும்பாலும் தொகை நிலைப்பொருளாலும், சிறுபான்மை தொகாநிலைப் பொருளாலும் மயங்கும்.

உ–ம்.: தெய்வவணக்கம் – தெய்வத்தை வணங்கும் வணக்கம், தெய்வத்துக்கு வணக்கம் என இரண்டு பொருள்களால் மயங்கியது.

தற்சேர்ந்தார் – தன்னைச் சேர்ந்தார், தன்னொடு சேர்ந்தார், தன்கண் சேர்ந்தார் என மூன்று பொருள்களால் மயங்கியது.

சொல்லிலக்கணம் – சொல்லுக்கு இலக்கணம், சொல்லினது இலக்கணம், சொல்லின்கண் உள்ள இலக்கணம், சொல்லிலக்கணம் சொன்ன நூல் என நான்கு பொருள்களால் மயங்கியது.

பொன்மணி – பொன்னையுடைய மணி, பொன்னாலாகிய மணி, பொன்னோடு சேர்ந்த மணி, பொன்னின்கண் உள்ள மணி, பொன்னும் மணியும் என ஐந்து பொருள்களால் மயங்கியது.

மரவேலி – மரத்தைக்காக்கும் வேலி, மரத்தாலாகிய வேலி, மரத்திற்கு வேலி, மரத்தினது வேலி, மரத்தின் புறத்து வேலி, மரமாகிய வேலி என ஆறுபொருள்களால் மயங்கியது.

சொற்பொருள் – சொல்லாலறியப்படும் பொருள், சொற்குப் பொருள், சொல்லினது பொருள், சொல்லின்கண் பொருள், சொல்லாகிய பொருள், சொல்லும் பொருளும், சொல்லானது பொருள் என ஏழுபொருள்களால் மயங்கியது. ( சொல்லானது பொருளென்றது, தொகாநிலைப் பொருளான எழுவாய்த்தொடர்).

புலி கொல் யானை என்னும் பன்மொழித்தொடர் புலியைக் கொன்றயானை, புலியானது கொன்ற யானை, புலியினாற் கொல்லப்பட்ட யானை என மூன்று பொருள்களால் மயங்கியது.

இவ்வாறு எளிதிற் பொருள்கொள்ளாமல், வலிதிற் பொருள்கொள்ளப் புகுந்தால் ஏழெல்லையென்னும் வரம்பில் நில்லாமல் பலவாமாதலின்; அது மரபன்று என்பார், 'என்ப' எனப் புலவர்மேல் ஏற்றிக் கூறினார்.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.: தொக்குழி – (வேற்றுமை யுருபுமுதலாகிய உருபுகள்) தொக்கு நின்றவழி, மயங்குந – (பொருள்களினாலே) மயங்குந்தன்மையனவாகிய தொடர்மொழிகள், இரண்டு முதல் ஏழ் எல்லைப்பொருளின் இரண்டு முதல் ஏழிறாகிய பொருள்களால், மயங்கும் என்ப – மயங்கும் என்று சொல்லுவர் புலவர். எ–று.

தொகைநிலைத் தொடர்மொழிகள் விரித்துப் பொருள் கொள்ளப்படுமிடத்து ஒரு பொருளேயன்றி, இரண்டு முதல் ஏழிறாகப் பல பொருளும் கொள்ளப்படும் என்பது கருத்து.

மயங்குதல் – இணங்குதல்.

உ–ம்.

(1) தெய்வவணக்கம் – என்பது தெய்வத்தை வணங்கும் வணக்கம் தெய்வத்துக்கு வணக்கம் என இரண்டு பொருள்களினாலே மயங்கியது.

(2) தற்சேர்ந்தார் – என்பது, தன்னைச் சேர்ந்தார்,

தன்னொடு சேர்ந்தார், தன்கட் சேர்ந்தார் என மூன்று பொருள்களினாலே மயங்கியது.

(3) *சொல்லிலக்கணம்* – என்பது, சொல்லின திலக்கணம், சொற்கிலக்கணம், சொல்லின்கணிலக்கணம், சொல்லினதிலக்கணஞ் சொன்ன நூல் என நான்கு பொருள்களினாலே மயங்கியது.

(4) பொன்மணி – என்பது பொன்னலாகிய மணி, பொன்னாகிய மணி, பொன்னின்கண் மணி, பொன்னொடு சேர்ந்த மணி, பொன்னுமணியும் என ஐந்துபொருள் களினாலே மயங்கியது.

(5) மரவேலி – என்பது மரத்தைக் காக்கும் வேலி, மரத்திற்கு வேலி, மரத்தினது வேலி, மரத்தின் புறத்து வேலி, 5மரத்தாலாகிய வேலி, 6மரமாகிய வேலி என ஆறுபொருள்களினாலே மயங்கியது.

(6) சொற்பொருள் – என்பது, சொல்லாறியப்படும் பொருள், சொல்லினது பொருள், சொற்குப் பொருள், சொல்லின்கட் பொருள், சொல்லும் பொருளும், சொல்லாகிய பொருள், சொல்லானது பொருள் என ஏழு பொருள்களினாலே மயங்கியது. (சொல்லானது பொருளென்றது தொகாநிலைப் பொருளாகிய எழுவாய்த்தொடர்.)

(7) புலி கொல் யாவன – என்னும் பன்மொழித்தொடர், புலியைக் கொன்ற புலியானது கொன்ற யானை, புலியினாலே கொல்லப்பட்ட யானை என மூன்று பொருள்களினாலே மயங்கியது.

இவ்வாறு செம்பொருள் கொள்ளாது வலிந்து பொருள்கொள்ளப்புகின் ஏழெல்லையென்னும் வரையறை யினில்லாது பலவாமாதலின், அது மரபன்றென்பது விளக்குதற்கு, 'என்ப' எனப் புலவர்மேல் ஏற்றிக் கூறினார்.

## கா. நமச்சிவாய முதலியார்

தொக்குழி – (வேற்றுமை யுருபு முதலாகிய வுருபுகள்) தொக்கு நின்றவழி, மயங்குந – (பொருள்களினாலே) மயங்குந் தன்மையனவாகிய தொடர் மொழிகள், இரண்டு முதல் ஏழ் எல்லை – இரண்டு முதல் ஏழ் ஈறாகிய வரையறையுடைய, பொருளின் – பொருள்களால், மயங்கும் – சேரும், என்ப – எனச் சொல்லுவர் புலவர்.

**உதாரணம்**

தெய்வ வணக்கம் – 1. தெய்வத்தை வணங்கும் வணக்கம்
2. தெய்வத்துக்கு வணக்கம்

என இரண்டு பொருள்களினால் மயங்கியது.

தற் சேர்ந்தார் – 1. தன்னைச் சேர்ந்தார்
2. தன்னோடு சேர்ந்தார்
3. தன்கட் சேர்ந்தார்
என மூன்று பொருள்களினால் மயங்கியது.

சொல் இலக்கணம் – 1. சொற்கு இலக்கணம்
2. சொல்லினது இலக்கணம்
3. சொல்லின்கண் இலக்கணம்
4. சொல்லினது இலக்கணஞ் சொன்ன (நூல்
என நான்கு பொருள்களினால் மயங்கியது.

பொன் மணி – 1. பொன்னாலாகிய மணி
2. பொன்னொடு சேர்ந்த மணி
3. பொன்னினாகிய மணி
4. பொன்னின்கண் மணி
5. பொன்னும் மணியும்
என ஐந்து பொருள்களினால் மயங்கியது.

மர வேலி – 1. மரத்தைக் காக்கின்ற வேலி
2. மரத்தாலாகிய வேலி
3. மரத்துக்கு வேலி
4. மரத்தின் புறத்து வேலி
5. மரத்தினது வேலி
6. மரமாகிய வேலி
என ஆறு பொருள்களினால் மயங்கியது.

சொற் பொருள் – 1. சொல்லால் அறியப்படும் பொருள்
2. சொல்லுக்குப் பொருள்
3. சொல்லினது பொருள்
4. சொல்லின்கட் பொருள்
5. சொல்லும் பொருளும்
6. சொல்லாகிய பொருள்
7. சொல்லானது பொருள்
என ஏழு பொருள்களினால் மயங்கியது.

புலிகொல் யானை – பன்மொழித் தொடர்
1. புலியைக் கொன்ற யானை
2. புலியானது கொன்ற யானை
3. புலியினால் கொல்லப்பட்ட யானை
என மூன்று பொருள்களினால் மயங்கியது.

வலிந்து பொருள் கொள்ளின், ஏழெல்லை கடந்தும் வரும்.

## மோசசு பொன்னையா

பொருள் மயங்குதற்குரிய தொடர்மொழிகள் தொகைப்பட்டு நிற்குங்கால், இரண்டு முதல், ஏழு ஈறாக உள்ள பொருள்களால் மயங்கும் எனப்புலவர் கூறுவர் எ—று.

மயங்குதல்—இணங்குதல். மயங்குந பொருளின் மயங்கும் எனப் பொதுப்படக் கூறினமையின், சிறுபான்மை தொகாநிலைப் பொருளாலும் மயங்கும் என்பதும், மயங்குதற்குரியன அல்லாதன மயங்கா என்பதும் பெற்றாம். தொக்குழி, எச்சந்திரிந்த விகாரப்புணர்ச்சி.

எ—டு

தொகைமொழி பொருள் மயக்கவரையறை

1. தெய்வ வணக்கம் தெய்வத்தை வணங்கும் வணக்கம், தெய்வத்துக்கு வணக்கம், இரண்டு

2. தற்சேர்ந்தார் தன்னைச் சேர்ந்தார், மூன்று

தன்னோடு சேர்ந்தார்,

தன்கட் சேர்ந்தார் —

3. சொல்லிலக்கணம் சொல்லினது இலக்கணம் நான்கு

சொற்கு இலக்கணம்,

சொல்லின்கண் இலக்கணம்,

சொல்லினது இலக்கணஞ் சொன்ன நூல்—

4. பொன்மணி பொன்னலான மணி, ஐந்து

பொன்னான மணி,

பொன்னின்கண் மணி

பொன்னோடு சேர்ந்தமணி,

பொன்னும் மணியும்—

5. மரவேலி மரத்தைக் காக்கும் வேலி, ஆறு

மரத்தாலான வேலி,

மரத்திற்கு வேலி,

மரத்தினது வேலி

மரத்தின் புறத்தே வேலி,

மரமாய வேலி —

6. சொற்பொருள் சொல்லாலறியப்படும் பொருள் ஏழு

சொல்லினது பொருள்,சொற்குப் பொருள்,

சொல்லின்கட் பொருள், சொல்லும் பொருளும்,

சொல்லான பொருள்–

இவற்றுள் 'சொல்லான பொருள்' என்பது தொகாநிலைப் பொருளில் வந்த எழுவாய்த் தொடர். இனி, வாளைமினுள்ளல் தலைப்படல் (வாளைமீனையுள்ளல் தலைப்படல், வாளைமீனையுள்ளலைத் தலைப்படல்), புலிகொல் யானை (புலியானது கொன்ற யானை, புலியைக் கொன்ற யானை, புலியாற் கொல்லப்பட்ட யானை), என இவ்வாறு பொருளால் மயங்கி வரும் பன்மொழித் தொடர்களையும் பொருளின் என்றதனாற் கொள்க. இவ்வாறு ஏழு எல்லையாகப் பொருள் மயக்கங் கொள்வதல்லது பிற மரபல்ல என்பாராய் என்ப என்றார்.

(22)

## 373. முற்றீ ரெச்ச மெழுவாய் விளிப்பொருள் ஆறுரு பிடையுரி யடுக்கிவை தொகாநிலை.

**முற்று ஈர் எச்சம் எழுவாய் விளிப்பொருள்**
**ஆறு உருபு இடை உரி அடுக்கு இவை தொகாநிலை.**

muṟṟu īr essam eḷuvāy viḻi poruḷ
āṟu urupu itai uri atukku ivai ṭokānilai

## இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

**Un-elliptical compounds**

Un-elliptical compounds are those in which the first word is a finite verb, or a relative or Verbal participle; (a Noun in the) nominative of vocative case; an inflected noun with the case-ending expressed; a particle or qualifying word; or those which are repetitions of the same word.

## ஒப்புமைப் பகுதி

**முற்றீ ரெச்ச மெழுவாய் விளியே**

யாறுரு பிடையுரி யடுக்கிவை தொகாநிலை

(இ.வி.:345)

## மயிலை நாதர்

எ–ன், தொகாநிலைத் தொடர்மொழி இவையென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: வினைமுற்று, வினைக்குறிப்பு முற்று, பெயரெச்சம், வினையெச்சம், எழுவாய்வேற்றுமை, விளிவேற்றுமைகள் தம்பொருளான பெயர் வினைகளோடு புணரும் புணர்ச்சியும், ஆறுருபும், இடைச்சொல்லும், உரிச்சொல்லும் புணரும் புணர்ச்சியும் இரண்டு முதலான அடுக்குமொழிகளும் தொகாநிலைத்தொடர் மொழிகளாம், எ–று.

வ–று.:–

உண்டான் சாத்தன், குழையன்கொற்றன், உண்டசாத்தன், உழுது வந்தான், சாத்தன் உண்டான், சாத்தாகொள், சாத்தனை, சாத்தனால், சாத்தற்கு, சாத்தனின், சாத்தனது, சாத்தன் கண், "அதுகொ றோழி காமநோயே" (குறுந். 5), "நனிபே தையே நயனில் கூற்றம்" (புறநா.227), பாம்புபாம்பு என முறையே காண்க."காலங்கரந்த பெயரெச்சம் வினைத்தொகை" என்றமையால், காலந்தோன்றும் பெயரெச்சம் தொகாநிலையா மென்க.

## சங்கர நமச்சிவாயர்

எ–னின், நால்வகைச் சொற்கும் ஆவதோர் விதி உணர்–ற்று.

இ–ள்.: முற்றும் பெபரெச்சமும் வினைபெச்சமும் எழுவாயும் விளியுமாகிய ஐவகைப் பொருளின்கண் பெயர்வினைகள் புணரும்புணர்ச்சியும், வேற்றுமைப்பொருளின்கண் அவற்றின் உருபாகிய இரண்டாவது முதலிய ஆறும் இடையே விரிந்து நிற்பப் பெயர்வினைகள் புணரும் புணர்ச்சியும், ஏனை இடைச்சொல் புணர்ச்சியும், உரிச்சொல் புணர்ச்சியும், ஒருசொல்லடுக்கி வரும் புணர்ச்சியும் ஆகிய ஒன்பதும் தொகாநிலைத் தொடராம், எ–று.

தொகாநிலை என்றமையால் காலம் கரவாத பெயரெச்சம் ஈண்டுக் கொள்க.

வ–று.:

உண்டான் சாத்தன், குழையன் கொற்றன், உண்ட சாத்தன், நல்ல சாத்தன், உண்டு வந்தான், உழுதன்றி உண்ணான், சாத்தன் வந்தான், கொற்றா கொள், குடத்தை வனைந்தான், வாளால் எறிந்தான், இரப்போர்க்கு ஈந்தான், மலையின்

இழிந்தான், சாத்தனது கை, மணியின்கண் ஒளி, "அதுகொல் தோழி காமநோயே", "நனிபேதையே நயனில் கூற்றம்" பாம்பு பாம்பு என முறையே காண்க.

வேற்றுமைத்தொகையும் வினைத்தொகையும் விரிந்தவழி வேற்றுமைத் தொகாநிலையும் பெயரெச்சத் தொகா நிலையுமாம் என்றார்; ஏனை நான்குதொகையும் விரிந்தவழித் தொகாநிலை ஒன்பதனுள் எவையாம் பிறவெனின்;– பண்புத்தொகையும், உவமைத்தொகையும், உம்மைத் தொகையும் விரிந்தவழி இடைச்சொற் புணர்ச்சியும், அன்மொழித்தொகை விரிந்தவழி வேற்றுமைத் தொகா நிலைமுதல் ஏற்பனவுமாம் என்க.

## கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், தொகாநிலைத் தொடர்மொழி இவையெனக் கூறுகின்றது.

இ–ள்.: முற்று – தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு வினைமுற்றும் பெயரொடும் வினையொடும் புணரும் புணர்ச்சியும், ஈரெச்சம் – தெரிநிலைவினைப் பெயரெச்சமும் குறிப்புவினைப் பெயரெச்சமும் தெரிநிலை வினையெச்சமும் குறிப்பு வினையெச்சமும் பெயரொடும் வினையொடும் புணரும் புணர்ச்சியும், எழுவாய் – எழுவாய் வேற்றுமை தன் பயனிலையொடு புணரும் புணர்ச்சியும், விளிப்பொருள் – விளி வேற்றுமை தம் பொருளோடு புணரும் புணர்ச்சியும், ஆறுருபு – இரண்டாம் வேற்றுமை ஐயருபு முதல் ஆறுருபும் தத்தம் பெயரொடும் புணரும் புணர்ச்சியும், இடையுரி – இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயரொடும் வினையொடும் புணரும் புணர்ச்சியும், அடுக்கு– விரைவாதியின் வரும் இரண்டு முதலான அடுக்குப் புணரும் புணர்ச்சியும், இவை தொகாநிலை – இப்பதினேழு புணர்ச்சியும் தொகாநிலைத் தொடர் மொழியாம், எ–று.

உ–ம்.:

உண்டான் சாத்தன், குழையன் கொற்றன், உண்ட சாத்தன், பெரிய சாத்தன், உழுது வந்தான், அவனன்றி உண்ணான், சாத்தன் உண்டான், சாத்தாவா, சாத்தனைச் சேர், சாத்தனால் வந்தான், சாத்தற்குப் பூசை, சாத்தனின் நீங்கினான், சாத்தனது பாடல், சாத்தன்கண் வந்தான், அதுகொல் தோழி, நனி பேதை, பாம்பு பாம்பு என முறையே காண்க.

"காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை"(நன்.363) என்றமையால் காலந் தோன்றும் பெயரெச்சம் தொகாநிலையாம் என்க.

## விசாகப் பெருமாளையர்

இது, நால்வகைச் சொற்களுக்கும், ஆவதோர் விதியுணர்த்துகின்றது.

இ—ள்.: முற்று – வினைமுற்றும், ஈரெச்சம் – பெயரெச்சம் வினையெச்சமும், எழுவாய் – எழுவாயும், விளி – விளியும் ஆகிய, பொருள் – ஐவகைப் பொருள்களிலே பெயர்வினைகள் புணருகிற புணர்ச்சியும், ஆறுருபு – வேற்றுமைப் பொருள்களில் அவற்றினுருபுகளாகிய இரண்டாவது முதலாகிய ஆறுருபுகளும் விரிந்துநிற்கப் பெயர் வினைகள், புணருகிற –புணர்ச்சியும், இடை–இடை சொற்புணர்ச்சியும், உரி–உரிச்சொற் புணர்ச்சியும், அடுக்கு– அடுக்குப் புணர்ச்சியுமாகிய, இவை – இவ்வொன்பதும், தொகாநிலை– தொகாநிலைத் தொடர்மொழிகளாம், எ—று.

வ—று.:

உண்டான் சாத்தன், கரியன் சாத்தன், உண்டசாத்தன், கரியசாத்தன், உண்டுவந்தான், இன்றிவந்தான், சாத்தன்வந்தான், கொற்றாகொள், குடத்தை வனைந்தான், வாளால் வெட்டினான், இரப்போர்க்கீந்தான், மலை யினிழிந்தான், சாத்தனதுகை, மணியின்கணொளி, மற்றொன்று நனிபேதையே, பாம்பு பாம்பு என வரும்.

## ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

தொகாநிலைத்தொடர்மொழி இவையெனக்

கூறுஞ் சூத்திரம் யாது?

முற்றீ ரெச்ச மெழுவாய் விளிப்பொருள்

ஆறுரு பிடையுரி யடுக்கிவை தொகாநிலை.

(முற்று ஈரெச்சம் எழுவாய் விளிப்பொருள்

ஆறு உருபு இடை உரி அடுக்கு இவை தொகாநிலை.)

இ—ள்.: வினைமுற்றும் பெயரெச்சமும் வினையெச்சமும் எழுவாயும் விளியுமாகிய ஐவகைப் பொருள்களிலே பெயர் வினைகள் புணரும் புணர்ச்சியும் வேற்றுமைப்பொருள்களில் அவற்றினுருபுகளாகிய இரண்டாவது முதலிய ஆறுருபுகளும் இடையே விரிந்து நிற்கப் பெயர்வினைகள் புணரும் புணர்ச்சியும் இடைச்சொற்புணர்ச்சியும் உரிச்சொற்புணர்ச்சியும் ஒருசொல்லடுக்கி வரும் புணர்ச்சியுமாகிய இவ்வொன்பதுந் தொகாநிலைத் தொடர்மொழிகளாம், எ—று.

(வரலாறு)

(1) உண்டான் சாத்தன் – வினைமுற்றுத்தொடர்.

குழையன் கொற்றன்

(2) உண்ட சாத்தன் – பெயரெச்சத்தொடர்.

கரிய சாத்தன் ,,

(3) உண்டு வந்தான் – வினையெச்சத்தொடர்.

உழுதன்றி யுண்ணான் – ,,

(4) சாத்தன் வந்தான்.........................எழுவாய்த்தொடர்.

(5) சாத்தா வா.............................விளித்தொடர்.

(6) குடத்தை வனைந்தான். – வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்.

வாளால் வெட்டினான்.

இரப்போர்க் கீந்தான்.

மலையினிழிந்தான்.

சாத்தனது கை.

மணியின்கணொளி.

(7) மற்றொன்று............................இடைச்சொற்றொடர்.

(8) நனிபேதையே.......................உரிச்சொற்றொடர்.

(9) பாம்பு பாம்பு............................அடுக்குத்தொடர்.

வேற்றுமைத்தொகை விரிந்தவிடத்து வேற்றுமைத்தொகாநிலைத் தொடராம். வேற்றுமையுருபும் பொருளும் உடன்றொக்க தொகை விரிந்தவிடத்து, முன்னது வேற்றுமைத் தொகா நிலைத்தொடரும், பின்னது பெயரெச்சத் தொகாநிலைத் தொடருமாம். (கைக்களிறு–கையையுடைய களிறு என விரியும். கையையுடைய என்பது வேற்றுமைத் தொகா நிலை. உடையகளிறு பெயரெச்சத் தொகாநிலைத்தொடர்.) வினைத்தொகை விரிந்தவிடத்துப் பெயரெச்சத் தொகாநிலைத் தொடராம். பண்புத்தொகையும் உம்மைத்தொகையும் விரிந்த விடத்து, இடைச்சொற்றொடராம். உவமத்தொகை விரிந்தவிடத்து, முன்னது இடைச்சொற்றொடரும், பின்னது இடைச்சொல்லடியாகப் பிறந்த பெயரெச்ச வினையெச்சத் தொடருமாம். அன்மொழித்தொகை விரிந்தவிடத்து வேற்றுமைத் தொகாநிலைத் தொடர் முதலேற்பனவாம்.

## முகவை இராமானுச கவிராயர்

இது, நால்வகைச் சொற்குமாவ தோரிலக்கணமுணர்த்திற்று.

இ–ள்.: முற்றீரெச்ச மெழுவாய் விளிப்பொருள் – முற்றுவினைகளும் பெயரெச்ச வினையெச்ச வினைகளும், எழுவாயும் விளியுமாகிய ஐவகைப்

பொருளிலே பெயர் வினைகள் புணரும் புணர்ச்சியும், ஆறுருபு – வேற்றுமைப் பொருளிலே அவற்றினுருபுகளாகிய இரண்டாவது முதலிய ஆறு உருபுகளும் இடையிலே விரிந்து நிற்கப் பெயர் வினைகள் புணரும் புணர்ச்சியும், இடையுரி அடுக்கு – இடைச்சொற் புணர்ச்சியும், உரிச்சொற்புணர்ச்சியும் ஒருசொல் அடுக்கி வரும் புணர்ச்சியும், இவை – தொகாநிலை–ஆகிய இவை ஒன்பதுந் தொகாநிலைத் தொடராம், எ–று.

வ–று.:–

உண்டான்சாத்தன், குழையன்கொற்றன் – (முற்று), உண்டசாத்தன், நல்லசாத்தன் – (பெயரெச்சம்); உண்டு வந்தான், உழுதன்றியுண்ணான் – (வினையெச்சம்); சாத்தன் வந்தான்–(எழுவாய்); கொற்றாகொள் – (விளி); குடத்தை வனைந்தான், வாளாலெறிந்தான், இரப்போர்க்கு ஈந்தான், மலையின்இழிந்தான், சாத்தனதுகை, மணியின்கண் ஒளி – (ஆறுருபு); அதுகொல் (இடை). நனிபேதை – (உரி); பாம்புபாம்பு – (அடுக்கு) என முறையே காண்க. வேற்றுமைத்தொகை விரிந்தபோது வேற்றுமைத் தொகாநிலையாம், வினைத்தொகை விரிந்தபோது, பெயரெச்சத் தொகா நிலையாம். பண்புத்தொகையும், உவமைத்தொகையும் உம்மைத்தொகையும் விரிந்த போது இடைச்சொற் புணர்ச்சியாம். அன்மொழித் தொகை விரிந்தபோது, வேற்றுமைத் தொகாநிலை முதல் ஏற்பனவுமாமென்க.

## கா. கோபாலாசாரியர்
## தி.கோ. ரங்காசாரியர்

உரை :– முற்று – வினைமுற்றும், ஈர் எச்சம் – பெயரெச்சமும் வினையெச்சமும், எழுவாய் – எழுவாயும், விளி – விளியும் ஆகிய, பொருள் – ஐவகைப் பொருளில் (பெயர்வினைகள் புணரும் புணர்ச்சியும்), ஆறு உருபு – (வேற்றுமைப் பொருளில் அவற்றின் உருபுகளாகிய இரண்டாவது முதலிய) ஆறு உருபுகளும் (இடையில் விரிந்து நிற்கப் பெயர் வினைகள் புணரும் புணர்ச்சியும்), இடை – இடைச்சொற் புணர்ச்சியும், உரி – உரிச்சொல் புணர்ச்சியும், அடுக்கு – ஒரு சொல் அடுக்கி வரும் புணர்ச்சியும், இவை – (ஆகிய) இவ்வொன்பதும், தொகாநிலை – தொகாநிலைத் தொடர்மொழிகளாம்.

குறிப்பு :– தொகாநிலைத் தொடர் என்பது – நிலைமொழி வருமொழிகளின் இடையில் வேற்றுமையுருபு முதலியன மறைந்து நில்லாமலும், ஒரு மொழித் தன்மைப் படாமலுஞ் சொற்கள் தொடர்வது.

உதாரணம் :

1. உண்டான் இராமன் – தெரிநிலை வினைமுற்றுத் தொடர்
பெரியன் இராமன் – குறிப்பு

2. உண்ட மனிதன் – தெரிநிலை
பெரிய மனிதன் – குறிப்பு பெயரெச்சத் தொடர்

3. உண்டு வந்தான் – தெரிநிலை
மெல்லச் சென்றான் – குறிப்பு வினையெச்சத்தொடர்

4. இராமன் வந்தான் – எழுவாய்த்தொடர்
5. இராமா வா – விளித்தொடர்
6. (a) குடத்தை வனைந்தான். (b) வாளால் வெட்டினான்
(c) இரப்போர்க் கீந்தான் (d) மலையின் இழிந்தான்
(e) இராமனது கை (f) மணியின்கண் ஒளி. வேற்றுமைத் தொகா நிலைத்தொடர்

7. மற்றொன்று – இடைச்சொற்றொடர்
8. நனிபேதை – உரிச்சொற்றொடர்
9. பாம்பு பாம்பு – அடுக்குத்தொடர்

## ஆறுமுக நாவலர்

இ–ள்.: முற்று ஈரெச்சம் எழுவாய் விளிப்பொருள் – வினைமுற்றும் பெயரெச்சமும் வினையெச்சமும் எழுவாயும் விளியுமாகிய ஐவகைப்பொருள்களிலே பெயர் வினைகள் புணரும் புணர்ச்சியும், ஆறு உருபு – வேற்றுமைப்பொருள்களில் அவற்றினுருபுகளாகிய இரண்டாவது முதலிய ஆறுருபுகளும் இடையே விரிந்து நிற்கப் பெயர்வினைகள் புணரும் புணர்ச்சியும், இடை உரி– இடைச்சொற் புணர்ச்சியும் உரிச்சொற்புணர்ச்சியும், அடுக்கு – ஒருசொல்லடுக்கி வரும் புணர்ச்சியுமாகிய, இவை தொகாநிலை – இவ்வொன்பதுங் தொகாநிலைத் தொடர்மொழிகளாம், எ–று.

வ–று.:–

(1) உண்டான் சாத்தன், குழையன் கொற்றன் – வினைமுற்றுத்தொடர்.

(2) உண்ட சாத்தன், கரிய சாத்தன்– பெயரெச்சத்தொடர்

(3) உண்டு வந்தான், உழுதன்றி யுண்ணான் – வினையெச்சத் தொடர்.

(4) சாத்தன் வந்தான் – எழுவாய்த்தொடர்.

(5) சாத்தா வா – விளித்தொடர்.

(6) குடத்தைவனைந்தான்,வாளால் வெட்டினான், இரப்போர்க்கீந்தான், மலையினிழிந்தான், சாத்தனதுகை, மலையின்கணொளி – வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்.

(7) மற்றொன்று – இடைச்சொற்றொடர்

(8) நனிபேதை– உரிச்சொற்றொடர்

(9) பாம்பு பாம்பு – அடுக்குத்தொடர்.

வேற்றுமைத்தொகை விரிந்தவிடத்து வேற்றுமைத் தொகாநிலைத் தொடராம். வேற்றுமையுருபும் பொருளும் உடன்றொக்கதொகை விரிந்தவிடத்து, முன்னது வேற்றுமைத் தொகாநிலைத் தொடரும், பின்னது பெயரெச்சத் தொகா நிலைத் தொடருமாம். வினைத்தொகை விரிந்தவிடத்துப் பெயரெச்சத் தொகாநிலைத் தொடராம். பண்புத்தொகையும், உம்மைத்தொகையும் விரிந்தவிடத்து இடைச்சொற்றொடராம். உவமத்தொகை விரிந்த விடத்து முன்னது இடைச்சொற் றொடரும், பின்னது இடைச்சொல்லடியாகப் பிறந்த பெயரெச்ச வினையெச்சத் தொடருமாம். அன்மொழித்தொகை விரிந்தவிடத்து, வேற்றுமைத்தொகாநிலைத் தொடர்முதல் ஏற்பனவாம்.

## வ. குமாரசாமிப் புலவர்

இ-ள். முற்று ஈரெச்சம் எழுவாய் விளிப்பொருள் - வினைமுற்றும் பெயரெச்சமும் வினையெச்சமும் எழுவாயும் விளியுமாகிய ஐவகைப் பொருள்களிலே பெயர்வினைகள் புணரும் புணர்ச்சியும், **ஆறு உருபு** - வேற்றுமைப் பொருள்களில் அவற்றினுருபுகளாகிய இரண்டாவது முதலிய ஆறுருபுகளும் இடையே விரிந்து நிற்கப் பெயர்வினைகள் புணரும் புணர்ச்சியும், - **இடை உரி** - இடைச் சொற்புணர்ச்சியும் உரிச்சொற்புணர்ச்சியும், - **அடுக்கு** - ஒருசொல்லடுக்கிவரும் புணர்ச்சியுமாகிய, - **இவை தொகாநிலை** - இவ்வொன்பதுந் தொகாநிலைத் தொடர்மொழிகளாம், எ-று.

(வரலாறு)

| | | |
|---|---|---|
| (1) | உண்டான்சாத்தன்<br>குழையன்கொற்றன் | வினைமுற்றுத்தொடர் |
| (2) | உண்டசாத்தன்<br>கரியசாத்தன் | பெயரெச்சத்தொடர் |
| (3) | உண்டுவந்தான்<br>உழுதன்றியுண்ணான் | வினையெச்சத் தொடர் |
| (4) | சாத்தன்வந்தான்..... | எழுவாய்த்தொடர் |
| (5) | சாத்தா வா ........ | விளித்தொடர் |
| (6) | குடத்தை வனைந்தான்<br>வாளால் வெட்டினான்<br>இரப்போர்க்கீந்தான்<br>மலையினிழிந்தான்<br>சாத்தனதுகை<br>மலையின்கணொளி | வேற்றுமைத்தொகாநிலைத் தொடர் |

(7) மற்றொன்று ............ இடைச்சொற்றொடர்

(8) நனிபேதையே ............ உரிச்சொற்றொடர்

(9) பாம்புபாம்பு ........ அடுக்குத்தொடர்

வேற்றுமைத்தொகை விரிந்தவிடத்து வேற்றுமைத்தொகாநிலைத் தொடராம். வேற்றுமையுருபும் பொருளும் உடன்றொக்க தொகைவிரிந்த விடத்து, முன்னது வேற்றுமைத் தொகாநிலைத் தொடரும், பின்னது பெயரெச்சத் தொகாநிலைத் தொடருமாம். வினைத்தொகை விரிந்த விடத்துப் பெயரெச்சத் தொகாநிலைத்தொடராம். பண்புத் தொகையும் உம்மைத் தொகையும் விரிந்தவிடத்து இடைச்சொற்றொடராம், பின்னது இடைச்சொல்லடியாகப் பிறந்த பெயரெச்ச வினையெச்சத் தொடருமாம். அன்மொழித் தொகை விரிந்தவிடத்து வேற்றுமைத் தொகாநிலைத்தொடர் முதலாக ஏற்பனவாம்.

## வை.மு. சடகோபராமாநுசாசாரியார்
## சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: முற்று – வினைமுற்றும், ஈர் எச்சம் – பெயரெச்சமும் வினையெச்சமும், எழுவாய் – எழுவாயும், விளி – விளியும் ஆகிய, பொருள் – ஐவகைப்பொருளில் (பெயர் வினைகள் புணரும் புணர்ச்சியும்) ஆறு உருபு – (வேற்றுமைப் பொருளில் அவற்றின் உருபுகளாகிய இரண்டாவது முதலிய) ஆறு உருபுகளும் (இடையில் விரிந்து நிற்கப் பெயர் வினைகள் புணரும் புணர்ச்சியும்), இடை – இடைச்சொற் புணர்ச்சியும், உரி – உரிச்சொற் புணர்ச்சியும், அடுக்கு – ஒருசொல் அடுக்கிவரும் புணர்ச்சியும், இவை – ஆகிய இவ்வொன்பதும், தொகாநிலை – தொகாநிலைத் தொடர்மொழிகளாம், எ–று.

தொகாநிலைத் தொடர்மொழிகளாவன – நிலைமொழி வருமொழிகளின் இடையில் வேற்றுமையுருபு முதலியன தொக்கு நில்லாமலும், ஒருமொழித் தன்மைப்படாமலும் சொற்கள் தொடர்வன.

உ–ம்.:

(1) உண்டான் சாத்தன் (தெரிநிலை) பெரியன் கொற்றன் (குறிப்பு) – வினைமுற்றுத்தொடர்.

(2) உண்டசாத்தன் (தெரிநிலைப்), கரிய சாத்தன் (குறிப்புப்) பெயரெச்சத்தொடர்.

(3) உண்டுவந்தான் (தெரிநிலை) விருந்தின்றி உண்ணான் (குறிப்பு) வினையெச்சத்தொடர்.

(4) சாத்தன் வந்தான் – எழுவாய்த்தொடர்.

(5) சாத்தா வா – விளித்தொடர்.

(6) குடத்தை வனைந்தான், வாளால் வெட்டினான், இரப்போர்க்கு ஈந்தான், மலையின் இழிந்தான், சாத்தனது கை, மணியின்கண் ஒளி – வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்.

(7) மற்று ஒன்று – இடைச்சொல்தொடர்.

(8) நனி பேதை – உரிச்சொல் தொடர்.

(9) பாம்பு பாம்பு – அடுக்குத் தொடர்.

இவையெல்லாம் நிலைமொழிநோக்கி புணர்க.

## பவானந்தம் பிள்ளை

இ–ள்.: முற்று – வினைமுற்றும், ஈரெச்சம் – பெயரெச்சமும் வினையெச்சமும், எழுவாய் – எழுவாயும், விளி – விளியுமாகிய, பொருள் – ஐவகைப் பொருள்களிலே (பெயர் வினைகள் புணரும் புணர்ச்சியும்), ஆறு உருபு – (வேற்றுமைப் பொருள்களில் அவற்றினுருபுகளாகிய இரண்டாவது முதலிய) ஆறுருபுகளும் (இடையே விரிந்து நிற்கப்பெயர்வினைகள் புணரும் புணர்ச்சியும்), இடை–இடைச்சொற்புணர்ச்சியும், உரி–உரிச்சொற்புணர்ச்சியும், அடுக்கு – ஒரு சொல்லடுக்கி வரும் புணர்ச்சியுமாகிய, இவை – இவ்வொன்பதும், தொகாநிலை – தொகாநிலைத் தொடர்மொழிகளாம்.

உ–ம்.;–

(1) உண்டான் சாத்தன் (தெரிநிலை)
குழையன் கொற்றன் (குறிப்பு)
வினைமுற்றுத்தொடர்.

(2) உண்ட சாத்தன் (தெரிநிலை)
கரிய சாத்தன் (குறிப்பு) பெயரெச்சத் தொடர்.

(3) உண்டு வந்தான் (தெரிநிலை)
உழுதன்றி யுண்ணான் (குறிப்பு)
வினையெச்சத்தொடர்.

(4) சாத்தன் வந்தான் ........................................
எழுவாய்த்தொடர்.

(5) சாத்தா வா ........................................
விளித்தொடர்.

(6) குடத்தை வனைந்தான்
வாளால் வெட்டினான்
இரப்போர்க்கீந்தான்

மலையினிழிந்தான் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்.

சாத்தனதுகை

மலையின்கணொளி

(7) மற்றொன்று,அதுகொல் .......இடைச்சொற்றொடர்.

(8) நனிபேதை...........உரிச்சொற்றொடர்.

(9) பாம்பு பாம்பு .............அடுக்குத்தொடர்.

'முன்னும் பின்னும் வந்தொன்றுவ திடைச்சொல்' ஆதலால் இடைச்சொற்றொடரில் அவ்விருவகைக்கும் உதாரணம் காட்டப்பட்டது.

வேற்றுமைத்தொகை விரிந்தவிடத்து வேற்றுமைத்தொகா நிலைத் தொடராம். வேற்றுமையுருபும் பொருளும் உடன்றொக்க தொகை விரிந்தவிடத்து, முன்னது வேற்றுமைத் தொகாநிலைத்தொடரும், பின்னது பெயரெச்சத் தொகாநிலைத்தொடருமாம். வினைத்தொகை விரிந்த விடத்துப் பெயரெச்சத் தொகாநிலைத்தொடராம். பண்புத்தொகையும் உவமைத்தொகையும் உம்மைத்தொகையும் விரிந்தவிடத்து இடைச்சொற்றொடராம், பின்னது இடைச்சொல்லடியாகப் பிறந்த பெயரெச்ச வினையெச்சத் தொடருமாமென்பாரு முண்டு. அன்மொழித்தொகை விரிந்தவிடத்து வேற்றுமைத் தொகாநிலைத்தொடர் முதல் ஏற்பனவாம்.

## கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) முற்று – வினைமுற்றும், ஈர் எச்சம் – பெயரெச்சமும் வினையெச்சமும், எழுவாள் – எழுவாயும், விளி – விளியுமாகிய, பொருள் – ஐவகைப் பொருள்களிலே (பெயர்வினைகள் புணருகிற புணர்ச்சியும்), ஆறு உருபு – (வேற்றுமைப் பொருள்களில் அவற்றின் உருபுகளாகிய) இரண்டாவது முதலாகிய ஆறு உருபுகளும் விரிந்து நிற்கப் பெயர்வினைககள் புணருகிற புணர்ச்சியும், ஓிடை – இடைச்சொற் புணர்ச்சியும், உரி – உரிச்சொற் புணர்ச்சியும், அடுக்கு – அடுக்குப் புணர்ச்சியுமாகிய, இவை – இவ்வொன்பதும், தொகாநிலை – தொகாநிலைத் தொடர்மொழிகளாம். (எ–று)

(பொ–ரை.) முற்றும், பெயரெச்சமும், வினையெச்சமும், எழுவாயும், விளியும் ஆகிய ஐவகைப் பொருளின்கண், பெயர்வினைகள் புணரும் புணர்ச்சியும்; வேற்றுமைப் பொருளின்கண் அவற்றின் உருபாகிய இரண்டாவது முதலிய ஆறும் இடையே விரிந்து நிற்ப பெயர் வினைகள் புணரும் புணர்ச்சியும், ஏனை இடைச் சொற்புணர்ச்சியும், உரிச்சொற் புணர்ச்சியும், ஒருசொல் அடுக்கிவரும் புணர்ச்சியும் ஆகிய ஒன்பதும் தொகாநிலைத் தொடராம்.

(உ-ம்.)

உண்டான் சாத்தன்(தெரி)
கரியன் கொற்றன் (குறி) வினைமுற்றுத் தொடர்.
உண்ட சாத்தன் (தெரி)
கரிய கொற்றன் (குறி) பெயரெச்சத் தொடர்.
உண்டு வந்தான் (தெரி)
இன்றி வந்தான் (குறி) வினையெச்சத் தொடர்.

சாத்தன் வந்தான்
தம்பி போனான் எழுவாய்த் தொடர்.

சாத்தா வா
கொற்றா கொடு விளித் தொடர்.

குடத்தை வனைந்தான்
வாளால் வெட்டினான்
இரப்போர்க் கீந்தான் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்.
மலையினிழிந்தான்
சாத்தனது கை
மணியின் கண் ஒளி

மற்றொன்று
கொன்னே கழிந்தது இடைச்சொற் றொடர்.

நனி பேதை
கடிக் கமலம் உரிச்சொற் றொடர்.

பாம்பு பாம்பு
நெருப்பு நெருப்பு அடுக்குத் தொடர்.

(திணை பால்களின் பரபு வழுவமைதி.)

## கா. நமச்சிவாய முதலியார்

முற்று – வினைமுற்றும், ஈரெச்சம் – பெயரெச்சமும் வினையெச்சமும், எழுவாய் – எழுவாயும், விளி – விளியும் ஆகிய, பொருள் ஐவகைப் பொருள்களில் (பெயர் வினைகள் புணரும் புணர்ச்சியும்), ஆறு உருபு – (வேற்றுமைப் பொருள்களில் அவற்றின் உருபுகளாகிய) இரண்டாவது முதலாகிய ஆறுருபுகளும் விரிந்து நிற்கப் பெயர் வினைகள் புணரும் புணர்ச்சியும், இடை – இடைச்சொற் புணர்ச்சியும், உரி – உரிச்சொற் புணர்ச்சியும், அடுக்கு – அடுக்குப்

புணர்ச்சியுமாகிய, **இவை** – இவ்வொன்பதும், **தொகாநிலை** – தொகாநிலைத் தொடர்மொழிகளாம்.

**உதாரணம்**

| | | |
|---|---|---|
| 1. | உண்டான் சாத்தன் (தெரி)<br>கரியன் கொற்றன் (குறி) | வினைமுற்றுத் தொடர் |
| 2. | உண்ட சாத்தன் (தெரி)<br>கரிய கொற்றன் (குறி) | பெயரெச்சத் தொடர் |
| 3. | உண்டு வந்தான் (தெரி)<br>இன்றி வந்தான்(குறி) | வினையெச்சத் தொடர் |
| 4. | சாத்தன் வந்தான் | – எழுவாய்த் தொடர் |
| 5. | சாத்தா வா | – விளித்தொடர் |
| 6. | குடத்தை வனைந்தான்<br>வாளால் வெட்டினான்<br>இரப்போர்க்கு ஈந்தான்<br>மலையின் இழிந்தான்<br>சாத்தனது கை<br>மணியின்கண் ஒளி | வேற்றுமைத் தொகா நிலைத்தொடர் |
| 7. | மற்றொன்று | – இடைச்சொற்றொடர் |
| 8. | நனி பேதை | – உரிச்சொற்றொடர் |
| 9. | பாம்பு பாம்பு | – அடுக்குத் தொடர் |

வேற்றுமைத் தொகை விரிந்தபோது, வேற்றுமைத் தொகா நிலையாம். வினைத்தொகை விரிந்தபோது பெயரெச்சத் தொடராம். பண்புத் தொகையும் உவமத் தொகையும் உம்மைத் தொகையும் விரிந்தபோது இடைச்சொற்றொடராம். அன்மொழித் தொகை விரிந்தபோது வேற்றுமைத் தொகாநிலை முதலாக ஏற்பன பலவாம்.

## மோசசு பொன்னையா

தொழில், குறிப்பு வினைமுற்றுக்களும்; பெயர், வினை எச்சங்களும்; எழுவாயும், விளியும் ஆகிய பொருட்களில்

பெயர் வினைகள் புணரும் புணர்ச்சியும்; வேற்றுமைப் பொருளில் அவற்றின் உருபுகளாகிய இரண்டாவது முதலிய ஆறும் இடையே விரிந்து நிற்கப் பெயர் வினைகள் புணரும் புணர்ச்சியும்; இடைச்சொற் புணர்ச்சியும்; உரிச்சொற் புணர்ச்சியும்; ஒருசொல் அடுக்கி வரும் புணர்ச்சியும் ஆகிய இவை தொகாநிலைத் தொடர்மொழிகளாம் எ–று.

நிலை, வரு மொழிகளிடை வேற்றுமை உருபுகள் முதலியன வெளிப்பட்டுநின்று ஒருமொழித் தன்மைப்படாமல் தொடரின், அவை தொகாநிலைத் தொடர்மொழி எனப்படும் என்க.

எ—டு

1 உண்டான் சாத்தன்
குழையன் கொற்ற வினைமுற்றுத் தொடர்கள்

2 உண்ட சாத்தன்
கரிய சாத்தன் பெயரெச்சத் தொடர்கள்

3 உண்டு வந்தான்
விருந்தின்றி உண்டான் வினையெச்சத் தொடர்கள்

4 சாத்தன் வந்தான் எழுவாய்த் தொடர்

5 சாத்தா வா விளித்தொடர்

6 குடத்தை வனைந்தான்
வாளால் வெட்டினான்
இரவலர்க்கு ஈந்தான்
மலையின் இழிந்தான்
சாத்தனது கை
மணியில் ஒலி வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்கள்

7 மற்றொன்று இடைச்சொற்றொடர்

8 மாக்கடல் உரிச்சொற்றொடர்

9 பாம்புபாம்பு அடுக்குத்தொடர்

தொகைநிலைத் தொடர்மொழிகள் பொருளுற விரிக்கப்படின், தொகாநிலைத் தொடர்மொழிகளாம். அக்காலை, வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்கள் அவ்வவ்வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்களாம்; உருபும் பயனும் உடன்தொக்கத் தொகைகள் வேற்றுமை, பெயரெச்சத் தொகாநிலைத் தொடர்களாக முறையே முன்னும் பின்னுமாக அமையும். வினைத் தொகை பெயரெச்சத் தொகாநிலைத் தொடராகும். பண்பு, உம்மைத் தொகைகள் உவமத்தொகை, இடைச் சொற்றொடராகவும், இடைச்சொல்லடியாகப் பிறந்த பெயர் அல்லது வினையெச்சத் தொடராகவும் முறையே முன்னும் பின்னும் அமையும். அன்மொழித்தொகை வேற்றுமைத் தொகாநிலை தொடர் முதல் ஏற்பன எவையுமாக அமையும் எனக் கொள்க.

தொல்காப்பியர்,

**இசைப்படு பொருளே நான்குவரம் பாகும்,**

எனவும்,

**விரைசொல் லடுக்கே மூன்றுவரம் பாகும்,**

எனவும் கூறியுள்ளவற்றையும்;

நேமிநாதமுடையார்,

**இசைநிறை நான்கு வரம்பாம் விரைசொல்**
**வசையிலா மூன்று வரம்பா—மசைநிலை**
**ஆய்ந்த வொருசொல் லடுக்கிரண்டாந் தாம்பிரியா**
**ஏந்திரட்டைச் சொற்கள் இரட்டு,**

எனக் கூறியுள்ளவற்றையும் அடுக்குத்தொடரின் இலக்கணமாகக் கொள்க.

**(23)**

நன்னூல் உரைவளம்

பொதுவியல் - 1 முற்றிற்று

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

### அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| தமிழர் பண்பாட்டுச் சொற்கோவை-ஒப்பனையியல் | 250.00 |
| தமிழிலக்கியக் குறியீடுகள் அகராதி | 225.00 |
| அரங்கேற்றுகாதை ஆராய்ச்சி | 140.00 |
| பழந்தமிழ் அமைப்பியல் மற்றும் குறியியல் ஆய்வுகள் | 45.00 |
| Essays and Tributes on Tirukkural (1886-1986) | 100.00 |
| இந்தியச் சூழலில் மொழிஇழப்பு ஒரு சமுதாய மொழியியல் பார்வை | 60.00 |
| நீறணி பவளக் குன்றம் | 35.00 |
| உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பெரியார் | 35.00 |
| கலீலியோ முதல் கலாம் வரை | 35.00 |
| குலோத்துங்கன் கவிதைகள் ஒரு கோபுர தீபம் | 60.00 |
| தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள் | 30.00 |
| நாமக்கல் கவிஞரின் தமிழ்ப்பணி | 30.00 |
| ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம் | 30.00 |
| சிறுபஞ்சமூலம்- ஒரு சமூகவியல் பார்வை | 30.00 |
| சங்கத் தமிழ் பகுதி 1 | 100.00 |
| சங்கத் தமிழ் பகுதி 2 | 100.00 |
| சங்கத் தமிழ் பகுதி 3 | 115.00 |
| சங்கத் தமிழ் பகுதி 4 | 130.00 |
| சங்கத் தமிழ் பகுதி 5 | 110.00 |
| ம.பொ.சி.யின் வாழ்க்கை வரலாற்று இலக்கியங்கள் | 60.00 |
| தொல்காப்பியம், சங்க இலக்கியம் பதிப்பும் பதிப்பாளரும் | 160.00 |
| இந்தி நாடகப்பனுவல் (ஆடிமாதத்தில் ஒரு நாள்) | 50.00 |
| திராவிட இயக்கத்தில் அன்னை மணியம்மையின் பங்கு | 40.00 |
| பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம் | 70.00 |
| காரைக்கால் அம்மையார் பாடல்கள் ஓர் ஆய்வு | 40.00 |
| Freudism in the Novels of James Joyce and T.Jankiraman: A comparative study | 125.00 |
| இலக்கணத்தொகை யாப்பு பாட்டியல் | 290.00 |
| தென்கிழக்கு ஆசியா நாடுகளில் தமிழ்ப்பண்பாடு | 310.00 |
| பதிற்றுப்பத்து மூலமும் ஆராய்ச்சிப்புத்துரையும் | 170.00 |
| தமிழ் மொழிபெயர்ப்பு முன்னோடிகள் | 185.00 |
| மனிதப் புனிதர் கக்கன் | 110.00 |
| மொழிபெயர்ப்பு:ஒரு கவின்கலை | 75.00 |
| மூவர்தமிழ் மூன்று பார்வைகள் | 50.00 |
| காமன்வெல்த் நாடுகளின் கவிதைகள் | 100.00 |
| அறிஞர்கள் பார்வையில் பேரறிஞர் அண்ணா | 145.00 |
| அறிஞர் அண்ணா-மொபசான் சிறுகதைகள்-ஒப்பாய்வு | 160.00 |
| இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள் | 55.00 |
| கடலடியில் தமிழர் நாகரிகம் | 55.00 |
| கடற்பொறியியற் கலைச்சொற்கள் (குறுங்கலைக்களஞ்சியம்) | 150.00 |
| சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள் | 55.00 |
| சங்க அகப்பாடல்கள் தோழி கூற்று | 170.00 |

**701 நன்னூல் உரைவளம் – 13 (பொதுவியல்) 140.00**